உ

சுப்பிரமணியர் துணை.

ஜீவரக்ஷாமிர்தம்.

ஸ்ரீகண்டமகாமுனிவர் அருளிச்செய்ததில்

ஸ்லோகரூபமாகச்செய்தருளிய இச்சாஸ்திரத்தை

சிதம்பரம் - தவளவீதி

முத்தையநாவலர் புத்திரராகிய

ஆயுர்வேதபாஸ்கர

சுப்பிரமணியபண்டிதர்

தமிழில்மொழிபெயர்த்து வசனகாவியமாகச்செய்து,

பதிப்பிக்கப்பிரதிகளைக்கொண்டு,

ஷை பண்டிதர்புத்திரர்

முத்தையப்பிள்ளை

கொன்னூர்

மாணிக்கமுதலியார்

விருப்பத்தின்படி,

சென்னை:

மநோன்மணிவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பித்தனர்.

விகிர்தி௵ - வைகாசி௴ - ல் நிகழ்கின்ற

ஜயந்தி கார்த்திகையில்.

இரண்டாம் பதிப்பு.

REGISTERED COPYRIGHT.

சுப்பிரமணியர்துணை.

வி ள ம் ப ர ம்.

இதனடியிற்கண்ட புத்தகங்கள் வேண்டியவர்கள் சென்னபட்டணம் பெத்துநாயக்கன்பேட்டை, நாராயணமுதலிதெரு கீழண்டைவாடை-௮௨-வது கதவு நெம்பருடைய வீட்டிலிருக்கும் ம-ா-ா-ஸ்ரீ, சி-த-முத்தையப்பிள்ளையவர்களிடத்திலும், ஷை பேட்டை சுப்பிரமணியமுதலிதெரு கிழண்டைவாடை - ௨௮ - வது கதவு நெம்பருடைய வீட்டில் தாபித்திருக்கும் மநோன்மணிவிலாச அச்சுக்கூடத்தலைவர் ம - ா - ா - ஸ்ரீ, கொ - மாணிக்கமுதலியார் அவர்களிடத்திலும் விலைக்கு வாங்கிக்கொள்ளலாம்.

	கிரையம்.			தபாற்கூலி.		
ஜீவரக்ஷாமிர்தம் - - -	௪	0	0	- 0	௯	0
பதார்த்தகுணசிந்தாமணிமூலமும்உரையும்	௧	௮	0	- 0	௨	0
தேரையர் செய்தருளிய தைலவருக்கச் சுருக்கம் மூலமும் உரையும்	0	௧௨	0	- 0	௨	0
மூத்திரப்பரீக்ஷைக்காக ஷை யார் செய்தருளிய நிறக்குறி நெய்க்குறி சாத்திரம்	0	௪	0	- 0	௧	0

பத்து புத்தகங்கள் மொத்தமாய் வாங்குமவர்கட்கு ஒருபுத்தகம் அதிகம் கொடுக்கப்படும்.

SECOND EDITION.

உ

இஃது,

ம-௱-௱-ஸ்ரீ, கா-பச்சையப்பமுதலியாரவர்கள்

கல்விச்சாலையில் தமிழ்த்தலைமைப்புலமைநடாத்திய

வித்துவான்-காஞ்சீபுரம்

சபாபதிமுதலியார் இயற்றியது.

சிறப்புப்பாயிரம்.

நேரிசை ஆசிரியப்பா.

கங்கையுந்திங்களுங் கடுக்கையுமரவுந் - - *
தங்கியேவாழ்சடைத் தயாபரனெம்மிறை - - *
உலகத்துயிரெலா முறுவிதிவிலக்குகள் - - *
நலத்துடனோர்ந்து நடைபிறழாவகை - - - *
அருள்செயும்வேத மவைநான்குடனே - - *
மருவுபவேதமு மயக்கறவுணர்ந்தோன் - - *
சிவத்தையுணருந் திறத்துவழாது - - - *
தவத்தின்மேம்படு தகைசாலந்தணன் - - - *
ஸ்ரீகண்டனென்னத் திருத்தகுநாம - - - *
மேகொண்டமாமுனி யெவரினும்பெரியோன் - - *
யாதொருபிணியு மின்றெனிலுயிர்கள் - - *
மாதவமியற்றி வாழ்தருமென்னத் - - - *
தன்னுளத்தெண்ணித் தகுபேரருளால் - - *
மன்னுமவ்வுயிர்கள் வருநோய்நோய்முதல் - - *
பழுதறவுணர்வதே பயனுக்கொண்டு - - *
தழுவியவுபவே தந்தனிலொன்றும் - - - *
ஆயுள்வேத மாவதுதன்னில் - - - - *
ஏயும்ரோக நிதானமியல்வுறப் - - - - *
பெருகுதோஷாதி பேதமுடனே - - - *
மருவியேயுடலில் வளர்சுரரோகம் - - - *
பிணிப்புறுமிரத்த பித்தரோகம் - - - *
தணிப்பரிதாய தாகரோகம் - - - - *
அஸ்மரிரோகம் ஆநாகரோகம் - - - *
விஸ்போடரோக மிளிர்வாதரோகம் - - - *
மதிமாழ்குறவரு மகாவாதரோகம் - - - *
அதிதூலரோக மடுத்திடுகின்றவுன் - - - *
மாதங்கர்ண ரோகம்விரண - - - - *
பேதம்விஷாதி கிடாதிபேதமென் - - - *

சிறப்புப்பாயிரம்.

திவ்வகைரோக மியம்புமுறைமை
ஒவ்வொருபடல மாவுறவகுத்து
ஜீவரக்ஷாமிர்த மெனப்பெயர்செப்பி
மேவுமொருநூல் விரித்தனனதுதான்
இலகுறுங்குடத்தி லிட்டவிளக்கென
நிலவியிருக்கு நிலைமையகற்றி
காருகபத்திய மாதியாக்கமுறுந்
சீருறுமுத்தீ செம்மையிலோம்பி
அத்தனடேசற் காராதனைபல
நித்தமுமியற்று நியமம்பூண்டோ
அந்தணர்வாழு மணிகிளர்தில்லையுள்
முந்துவேளாண்குல முயன்றமாதவத்தினல்
வந்துமன்ற மருவுகோவிலில்
சந்ததம்பொலிவுறச் சார்தலமிசை
தகுதியிற்பதித்த முத்தையபூபதியார்
மகனெனவந்த வீராசயசிங்கன்
முருகவேள்பதமலர் முன்னிறுத்துதிக்கும்
திருகிலாவன்பன் சிவாசாரதுல்லியன்
செந்தமிழ்க்கவிஞன் தேசாயர்முதலா
வந்தசித்த மகாபுருடருக்குள்
ஒருவனெனத்தகு மொப்பிலாப்புலமையன்
கருமிடற்றண்ணல் கழலடிமறவான்
முக்கண்கொண்டோய் முழுதுமுணர்ந்து
தக்கவுடதந் தந்துநோய்தணிக்கும்
கடவுளருபாசனை முதலாக்கமுறும்
அடைவுளயாவு மமைந்தவறிஞன்
கூறுபதார்த்த குணசிந்தாமணி
வீறுடனச்சில் விரவப்பதித்தோன்
வையகமாந்தர் வைத்தியநூற்கள்
செய்யுளாயிருத்தலிற் சேர்பிணிவகையும்
அப்பிணிதீர்த்தற் கடுத்தமருந்துந்
தப்பறவுணருந் தகுதியின்றி
பாகடமெனவெறும் பாடல்கூறும்
பேய்களைப்பெரிய பிடகரென்னக்
கருதியங்கவர் கைமருந்தருந்திப்
பெருகுறும்பிணியாற பேதுறனோக்கி
உள்ளத்திரக்க முறநனிகொண்டு
கள்ளமிலன்பாற் காதன்மீதூரச்
சார்தருசிகிச்சா சாரங்கண்டெடும்

ஏர்தருசாரீர மென்னவிசைக்கும் - - - *
சாத்திரந்தன்னைத் தமிழ்வாக்கியமா - - - *
நேத்திரமீதென நிலவவியற்றி - - - *
நுண்ணியநீர்க்குறி நூலுரையுடனே - - - *
வண்ணமார்தைல வருக்கச்சுருக்கமும் - - *
அச்சிற்பதிப்பா னமைந்துளவள்ளல் - - - *
பொச்சமில்சிவனடி யாரைப்போற்றும் - - *
ஆயுள்வேத பாஸ்கரனுமென - - - - *
மாயிரும்புவியோர் மதிக்கநின்ற- - - - *
சுப்பிரமணிய பண்டிதச்சுகுணமால் - - - *
இப்படிதன்னி லியங்குஞ்சிற்சிலர் - - - *
சேர்தருரோக நிதானநுண்ணிதின் - - - *
ஓர்தரலின்றி யுரைத்திடுமருந்துகள் - - - *
பேதியாமலையின் பெரும்பாறையினைத் - - - *
தொக்கமட்கட்டியா லுடைப்பான்றொடங்கல் - *
ஒக்குமென்றனு வளவுந்தேரார் - - - - *
மாத்திரைமுதலா மருந்துகள்கொடுத்துச் - - -*
சாத்திரந்தன்னைத் தாம்பொய்யாக்கி - - - *
மருத்துவரெனப்பெயர் மருவித்திரியுநர் - - *
கருத்துத்தெளிந்து களிப்புறும்வண்ணம் - - *
முந்தைநூற்பெயரோ முறைமையினமைத்து - - *
வந்தபடல வரிசையுங்கண்டு - - - - *
செந்தமிழ்வாக்கிய மாகத்திரட்டித் - - - *
தந்திடவதனைச் சான்றோர்புகழ்தர - - - *
வேதியர்குலத்து மேதகும்வல்லத் - - - *
தாதிநாத ரருளாலுதித்தோன் - - - *
திருவிரிஞ்சையினுந் திருவல்லத்தும் - - - *
மருவியஅன்ன சத்திரம்வகுத்துந் - - - *
கந்தணர்முதலோர்க் கறுசுவையுண்டி - - - *
சந்ததமூட்டித் தருபொருளளிப்பதே - - *
பெருவாழ்வென்னப் பெட்புறும்வள்ளல் - - *
ஒருவாவாயுள் வேதமுமுணர்ந்தோன் - - *
இனிதன்வேலூர்வா ழிராமசேஷப் - - - *
புனிதப்பெயருள புண்ணியனுயரிய - - *
குன்றிலிட்ட குலவிளக்காமெனப் - - - *
புலனுறப் பதித்துப் புகழால் - - - *
இலகுறுதிசையெலா மினிதளந்தனனே. - - *

சிறப்புப்பாயிரம் - முற்றியது.

శ్రీగురుభ్యోనమః.

గుర్రంవెంకన్నశాస్త్రికృతోయంశ్లోకః

జీవరక్షామృతంశాస్త్రం సుబ్రహ్మణ్యభిషగ్వరః । చక్రేద్రావిడమర్థజ్ఞ శ్చికీర్షుర్లోకమతుయం॥

ఆదివంశోద్భవశ్రీ కాంచీ
విశ్వనాథగురు ప్రణీతావిమౌశ్లోకౌ.

ఆయుర్వేదపయోనిధిఃప్రమథితః శ్రీబాహటాద్యైర్బుధైః । శ్రీకంఠేనబుధోత్తమేనజనితంయజ్జీవరక్షామృతం । దూరంమందధియాంబుధైకసులభంతద్ద్రావిడైర్భాషితై । స్సుబ్రహ్మణ్యభిషగ్వరస్సమతనోత్స్వేయంసమస్తైర్జనైః॥

పచ్చపాయిస్కూలుసంస్కృతాంధ్రోపాధ్యాయులగు
కాట్రంబాకవైద్యము కేశవాచార్యులవారిచేఁ
జేయఁబడినశ్లోకము.

రోగఘ్నాత్యుచితౌషధాప్తివిరహోద్బాహన్తమర్త్యా ఇమే
జీర్యన్తిప్రథమేవయస్యపిముధేత్యాలోచ్యధన్వన్తరిః
సుబ్రహ్మణ్యమహావిపశ్చిదధునాభూత్వాభువిఖ్యాతనో
ద్దివ్యంద్రావిడభాషయాలలితయాశ్రీజీవరక్షామృతమ్॥

கனம்பொருந்திய கௌரன்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்டயூநிவர்
சிடியென்னுஞ் சகலசாஸ்திரசாலைத் தமிழ்த்தலைமைப்புலமை
நடாத்தும் இயற்றமிழாசிரியராகிய
திருத்தணிகை

விசாகப்பெருமாளையர் இயற்றியது.

எண்சீர்விருத்தம்.

தேங்குபுகழ்ச்சிதம்பரச்சுப்பிரமணியபண்டிதவேள் - - *
செய்தளித்தஜீவரக்ஷாமிருதமெனுஞ்சீர்நூலை - - *
ஓங்குதிரிகாலத்தினிகழ்செய்கையனைத்தையுமே - - - *
யுணர்த்துதலாற்றெய்வமென்கோவொன்றினையொன்றாக்கருதுங்*
தீங்குநெறிவிலக்குதலாற்குருவென்கோநோயினத்தின் - - *
றிறம்பலவுந்தெரித்தலினாற்றந்தையென்கோவன்னோய்கள் - *
நீங்குமருந்துதவுதலாற்றாயென்கோமருத்துவர்த - - *
நேத்திரமென்கோவுளத்தினினைக்குங்கான்மன்னோ. - *

இதுவும், வித்துவான்-காஞ்சீபுரம்

சபாபதிமுதலியார் இயற்றியது.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வண்டுளபமாலையணிமாலவன்வளர்தலால்மதுகயிடவரைமுதலினோர் - *
வருத்திடவருந்திமந்தரகிரிகலக்கலான்மறுகியேயோலமிட்டாங் - *
குண்டுவகைகொளவேண்டிவரும்பர்மனமஞ்சியோட வெவ்விடமுனல்கி
ஓதமுதுதந்தவப்பாலாழிபோல்கிலாதுற்றசூராதியான - - *
மிண்டுபுரியவுணரைக்காய்ந்தசெவ்வெற்குகன்மேவுநற்பான்மையுளதாய் *
விளங்கியகுலம்புரிவலம்புரியிலங்கவேமிளிர்சிதம்பரவாழ்க்கையுட் *
கொண்டுமகிழ்கின்றசுப்பிரமணியபண்டிதக்குறைவில்பாலாழிதானுங்*
கோலமேமிகுஜீவரக்ஷாமிர்தம்முலகுகொளவினிதுதந்ததன்றே. - *

வித்வான் - காஞ்சீபுரம்.

சபாபதிமுதலியார் - மாணாக்கரில் ஒருவராகிய
புரசை - அஷ்டாவதானம்

சபாபதிமுதலியார் இயற்றியது.

நிலமண்டில ஆசிரியப்பா.

பூமிசைப்புத்தேள் புனைந்தவுலகுயிர் - - *
காமுறுமனைத்துங் கரிசறநுகர்திறன் - - - *
யாக்கையையாப்புடைத் தாப்பெற்றவர்க்கலா - - *
லூக்கரிதெனநனி யுள்ளமெய்ச்சுருதியாற் - - *

குரவனுலனுபவக் கொட்பினுற்றேற்றுபு
விரவருமறையின் வியன்கிளைபோன்மெனும்
உபவேதங்களி லொன்றாய்நிலைத்துள
தபுதலிலாயுள்வே தந்தனில்விரித்து
றுவல்பலநோய்வகை நோய்முதலவற்றின்
றவவலன்கடத்தத் தகும்பரிகாரம்
இவையெலாங்கைத்தலத் திருத்தியமுத்தென
நவையறத்தெருட்டி நளிகடற்புவிக்கட்
டேவரக்ஷாமிர்த மதனிலுஞ்சிரிய
ஜீவரக்ஷாமிர்த மெனும்பெயர்செறித்து
யளப்பரும்வேதா கமப்பொருளனைத்துங்
கிளப்பருந்தன்னுளங் கெழுமநிறைத்துளோன்
தவக்கருவூலந் தன்னிகர்பேரருட்
சிவத்தினையுள்ளுணர் தேர்ச்சிப்பெட்டகம்
சிகண்டமாதவத் திருமுனியளித்தநூல்
ஆகண்டலன்பதிக் கண்மியநவநிதி
நாமநீர்ப்புவியுளோர் நணுகுறச்செய்மைத்
தாமெனுந்தகையே யனையதாயாரியந்
தன்னிலிருத்தலா லன்னமுதுமொழி
வல்லுநர்சில்லோர் வல்லார்பல்லோர்
ஆதலிலெவரும் அந்நூற்பெரும்பயன்
மேதகக்கூட்டுணூஉ வியந்தனர்நிலைபெற
விதிவிலக்கறியும் வியன்பயிர்விளைவுறூஉம்
பதிநிகர்திருக்குறள் பகருமருந்தியல்
தொகையேயிதன்முன் சொலுமவ்வியலுளை
வகையேயிஃதென வளத்தவிரியெனா
செற்றமின்மருத்துநூல் தெளிபுலவோரென
மற்றையோருந்தா மகிழ்தலைசிறப்ப
செறுநரித்தன்மைய ரெனத்தேர்விரகிலார்க்
குறுபலனெவன்கொலோ வொன்னலரின்னோர்
எனவறிவுறின்மற் றிடன்முதலைந்தும்
இனிதமைந்தெண்ணுவோ ரெளிதில்வென்றடுவ
தொவ்வுமிக்கருவி யுரைதருசார்பென்
றெவ்வகையோரு மிசைத்தனர்நயப்ப
நாவலூர்நம்பி நவில்தொண்டத்தொகை
மேவுமுன்மொழிதிரு வாரூர்விடங்கர்
தில்லைவாழந்தண ரெனவெடுத்தோதுகென்
றெல்லையிலருளு முயர்பரம்பரையாம்
வாய்மையோர்குழுவொடு மனனுந்தில்லை
மேயசிதம்பர மிகுந்தலவரிசை
பத்தியிற்பதித்த முத்தையஞானியார்
என்னும்பயோததி யீன்றகற்பகம்

தன்னுணர்வனைத்துந் தருமப்பைங்கொடி
பாகமடுத்த பவளத்திருவரை
வாகுறத்தந்த வடிவேற்கராம்புய
அரதனகிரியின் அடிவாரத்தின்
விரதங்குலவ விளங்குமேன்மையோன்
நதிமாமரபென நாடுந்தாமரை
சதுருறமணஞ்செயத் தந்தார்ஜீவம்
மெய்யறிஞர்களெனு மெல்லிதழ்பொதுளிய
செய்யமலர்க்குத் திருந்தகுந்தண்ணளி
தேரையர்முதலாச் செப்பவரும்பெரி
யோரையடுத்துளோ ருறுபொருள்யாவையப்
பெரும்பொருண்முழுதுமப் பெற்றியோர்சொற்ற
அரும்பெறநூல்களி லையந்திரிபற
நோக்கியவநுபவ நுண்மையெலாங்கொண்
டேக்கியவரவ ருவப்பவுணர்த்துவோன்
ஆர்த்தபுகழக்கதி ராயுள்வேத
பாற்கரன்சிவநெறிப் பண்மாண்கேள்வித்
தொண்டற்கினிய சுப்பிரமணிய
பண்டிதக்குரிசில் பைந்தமிழ்மொழியில்
வாக்கியவுருவின் வழங்குறக்கண்டு
பாக்கியப்பயனிது பதித்திடலென்றுனும்
இறைவன்வேலூர் வாழிராமசேஷப்
பொறைகூரந்தணப் புனிதனுதவியா
யெழுதாவெழுத்தி லிசைவுறப்பதித்துப்
பழுதாகாமைப் பன்னாடெங்கணும்
தன்னிசையுடனத் தகுமுயர்வேதியன்
இன்னிசையும்பதித் தினிதளித்தனனே.

இஃது

திருவண்ணாமலை வீரபத்திரையர்

இயற்றியது.

எண்சீர்விருத்தம்.

சீர்கொண்டபாற்கடலைக்கடைந்தமிர்தமளித்தே
தேவரிறப்பகற்றியவச்சிதரனேபோல
ஏர்கொண்டதன்னறிவாம்பொன்மலையைநிறுத்தி
யிதந்தருநல்லாயுண்மறையெனுங்கடலைக்கடைந்தே
பேர்கொண்டஜீவரக்ஷாமிர்தமுதவியகிலப்
பிணியனைத்தும்பறந்தோடப்பெரும்புகழ்கைக்கொண்டான்
பார்கொண்டசிதம்பரச்சுப்பிரமணியனெனுமோர்
பண்டிதற்கென்னைகைமாறுபரிந்தியற்றுமுலகே.

இ ஃ து,

ம-ள-ள-ஸ்ரீ, பச்சையப்பமுதலியாரவர்கள் கல்விச்சாலையில்

தமிழ்த்தலைமைப்புலமைநடாத்தும் - வித்வான்

சுப்பராயபிள்ளை.

இயற்றியது.

பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரியச்சந்தவிருத்தம்.

அம்புலிகொன்றைகரந்தையுமணிசடையண்ணறனடிமலரை - *
அநவரதமுநினைமுத்தையஞானிபரகமகிழ்புத்திரனிவ் - *
வம்புவிமாக்கயிலாயத்திருநகரதில்வருகுணநிதியென் - - *
றனைவருநிதமுரைசுப்பிரமணியநலருமைப்பண்டிதவேள் - *
இம்பர்சுகித்திடவாயுருவேதமெனுங்கடலினையுட்கொண் - *
டியலமைசீவரக்ஷாமிர்தமுதவுறுமிதுநனிமுன்னுணரா - *
வெம்புபுபெருமுனிகுறுமுனியாகியேவெற்பிலுயிர்த்திலனாய் - *
மேவியருந்தவனாயினனெனுமிதின்வேறினிமொழிவதெனே. - *

இ ஃ து,

இந்நூலாசிரியர்மாணாக்கரிலொருவராகிய

ஆ - செ - வேங்கடாசலமுதலியார்.

பாடியது.

கட்டளைக்கலித்துறை.

தேவர்பொன்னாட்டினுநாகர்தந்நாட்டினுந்தெள்ளமிர்தம் - - *
ஓவறவைத்தருண்மாலேகங்காகுலமோங்கநல்லோர் - - - *
யாவரும்வாழ்த்துசுப்பிரமணியக்குருவென்னவந்து - - - *
ஜீவரக்ஷாமிர்தமிந்நாட்டுவைத்தனன்சீர்பெறவே. - - - *

இதுவும்,

அம்மாணாக்கரிலொருவராகிய

ச - வை-அண்ணாசாமிமுதலியார்பாடியது.

எழுசீர்விருத்தம்.

பொன்னாருஞ்சிதம்பரச்சுப்பிரமணியதேசிகனைப்புலவோரியாரும் - *
மன்னானஜீவரக்ஷாமிர்தஞ்செய்தானென்றேமகிழ்வாரியாமோ - - *
அந்நாளில்வடமொழியிற்செய்தசீகண்டமுனியன்னோனாகி - - - *
இந்நாளிற்றென்மொழியிலுஞ்செய்தானெனத்துணிவாயியம்புவோமே, *

சாற்றுக்கவிகள்முற்றுப்பெற்றன.

சுப்பிரமணியர் துணை.



இங்ஙனம்

கையொப்பம்வைத்தவர்களின் பெயர்கள்.

ஊர். பெயர்கள்.	புத்தகம்.
க-ரங்கநாதசாஸ்திரியார்	க
சி-சச்சிதாநந்தசாஸ்திரியார்	க
கு-வெங்கன்னசாஸ்திரியார்	க
நெ-விசுவநாதகுருக்கள்	க
பா-வை-நைநாகுருக்கள்	உ
சி-ராமய்யர்	ச
ச-வெங்கடராயர்	க
தி-சாமிஅய்யர்	க
சி-ரங்காசாரியார்	க
சி-ஸ்ரீபதிராயர்	க
ஆ-சேஷாசாஸ்தியார்	க
கு-திருவேங்கிடஆசாரியார்	க
R. P. CAMPBELL Esq.	1
A. SMITH Esq.	1
ஜெ-லட்சுமணசெட்டியார்	ரு
சை-ஜெயராமசெட்டியார்	க
சை-விஜயராகவலுசெட்டியார்	க
கோ-வி-அய்யாசாமிமுதலியார்	க
ப-வாசுதேவமுதலியார்	க
பு-மாணிக்கமுதலியார்	க
பு-சுந்தரமுலியார்	௲

ஊர். பெயர்கள்.	புத்தகம்.
பு-கந்தசாமிமுதலியார்	உ
பு-வேலுமுதலியார்	க
தொ-வெங்கடநாராயணபிள்ளை	க
பி-நரசிங்கபிள்ளை	க
பா-வெங்கடகிஷ்ணபிள்ளை	க
தி-முத்துவெங்கடாசலபிள்ளை	ச
சே-கோபாலசாமிமுதலியார்	க
மு-நம்மாழ்வார்செட்டியார்	உ
போ-ரங்கய்யசெட்டியார்	க
மா-ஜெகநாதநாயக்கர்	க
ரா-திருமலைநாயக்கர்	க
கா-பழனியாண்டிபிள்ளை	க
வை-வீராசாமிமுதலியார்	க
மு-சின்னய்யாபண்டிதர்	க
கா-வே-அருணாசலபண்டிதர்	க
வை-பி-முனிசாமிசெட்டியார்	க
டி-முத்துசாமிநாயக்கர்	க
ரா-வீராசாமிடிரஸ்ஸர்	க
பு-ர-நாராயணசாமிமுதலியார்	க
கோ-வீராசாமிசெட்டியார்	ச

ஊர். பெயர்கள்.	புத்தகம்	ஊர். பெயர்கள்.	புத்தகம்.
மூ-சின்னசாமிபிள்ளை - -	உ	யா-யெ-லாஸர் - - - -	க
பு-திருவேங்கிடமுதலியார் -	க	கா-குன்னப்பமூர்த்தி - -	க
பு-முருகரத்தினபிள்ளை - -	க	சி-வை-தாமோதரபிள்ளை - -	க
ராஜரத்தினமுதலியார் - -	க	குமாரசாமிமுதலியார் - - -	க
சா-சபாபதிமுதலியார் - -	க	தி-அண்ணாமலைமுதலியார்- -	க
தா-முனியப்பிள்ளை - - -	க	திரு-சாரங்கபாணிநாயக்கர் -	க
ந-ரங்கசாமிசெட்டியார் - -	க	ந-ரங்கசாமிநாயக்கர் - - -	க
கோ-முத்துசாமிசெட்டியார் -	க	டிரஸ்ஸர்-குப்புசாமி - - -	க
பு-கனகசபாபதிமுதலியார் - -	உ	வே-முனிசாமிமுதலியார் - -	க
பா-மாசிலாமணிமுதலியார் -	க	திரு-எல்லப்பிள்ளை - - -	க
தி-சீனிவாசபிள்ளை - - -	க	கா-செங்கல்வராயநாயக்கர் - -	க
தொ-கந்தசாமிமுதலியார் -	க	இ-வெங்கிடாசலமுதலியார் -	க
அ-கனகராயமுதலியார் - -	க	நாகை-முகம்மதுபுலவர் - -	ரு
கோ-வி-சுப்பராயமுதலியார் -	க	சுந்தரசெட்டியார் - -	க
ம-சண்முகவேலுமுதலியார் -	க	ஆசெ-வெங்கடாசலமுதலியார்	உ
ஆ-தொளசிங்கமுதலியார் - -	க	வி-வெங்கடாசலபிள்ளை - -	உ
சி-கிருஷ்ணசாமிமுதலியார் -	க	தா-க-கோபாலுபிள்ளை - -	க
தி-கந்தசாமிமுதலியார் - -	க	பு-குமாரசாமிமுதலியார் - -	க
திரு-சுப்பராயபிள்ளை - - -	க	ந-சிவபாதநாயக்கர் - - -	க
ப-அருணகிரிபிள்ளை - - -	க	ஐயாசாமி - - - - -	க
பா-ராமய்யபிள்ளை - - -	க	பாக்ஷியாசாஹிப் - - - -	க
ப-பாலசுந்தரமுதலியார் - -	உ	தா-ராமசாமிபிள்ளை - - -	க
பு-அருச்சுனமுதலியார் - -	க	கூ-விருத்தாசலமுதலியார் -	க
கு-வேதாசலமுதலியார் - -	க	கறுத்தநயினாமுகம்மதுமஸ்தான்	க
ச-வை-அண்ணுசாமிமுதலியார்	க	சுப்பராயநாயக்கர் - - -	க
பு-முருகேசமுதலியார் - -	க	வா-லோகய்யநாயக்கர் - -	க
சி-பொன்னுசாமிபிள்ளை - -	க	ச-ரங்கநாயகலு - -	க
சே-ராஜகோபாலமுதலியார் -	க	சி-பாவாடைசெட்டியார் - -	க
சே-வீராசாமிமுதலியார் - -	க	பெ-ஆறுமுகமுதலியார் - -	க
த-கண்ணுசாமிவைத்தியர் - -	க	சி-பி-நாராயணசாமிநாயக்கர் -	க
பெ-பார்த்தசாரதிநாயக்கர் - -	க	மா-குமாரசாமிஆதி - - -	க
உப-சை-மரியதாசபிள்ளை - -	க	பா-சபாபதிகிராமணி - - -	க

உ

சுப்பிரமணியர்துணை.

முதற்பதிப்பின்

முகவுரை.

சச்சிதானந்தசொரூபராகிய சகலபுவன கர்த்தாவானவர், தம்மால் சிருட்டிக்கப்பட்ட ஆன்மகோடிகளிடத்துவைத்த பெருங்கருணையால், அருளிச்செய்த உபவேதம்நான்கினுக்குள் ஒன்றாகி, ஏது,லிங்கம்,சிகிச்சை என்னும் முப்பொருளையும் விவரிக்கின்ற ஆயுள்வேதத்தை, பார்வதி தேவியாருக்கு அநுக்கிரகஞ்செய்தருளினார். அந்தப்பார்வதிதேவியார் நந்திதேவருக்கு அருளிச்செய்ய, அவர் தேவருக்கும் முனிவர்கட்கும் சித்துப்புருஷர்கட்கும் உபதேசித்தருளினார்.

இதற்குமேற்கோள் தேரையர்காப்பியம்.

“அகரவக்கரமென வனைத்துமாய்நிறைந்த வமலன்வகுத்த வகில பேதத்து ளஃறிணை தவிர வுயர்திணைப்பகுதியு ளறிவுறுமாக்கட்கே யாயுள் வேதத்தை யறைந்தனனஃதே தரும்பிணிக்குழாத்தா லமைந்தவாக் கையமொன் றகங்கனிந்தாங்கே”. “அவ்வழிதோன்று மத்தியாயத்தை யந் தரிநந்திக் களிடத்திடவன்றோ னண்டர்பண்டிதனுக்கருளினன்” என்னும் சூத்திரங்களாலும், சிந்தாமணி என்னும் வடமொழிநூலாலுமுணர்க.

அவ்வாறு உபதேசம் பெற்றவர்களையும், அவரவர் குமார சீட வருக்கங்களையும், அவர்களால் வடமொழி தென்மொழி இரண்டிலுஞ் செய்யப்பட்ட நூல்களையும், தனித்தனியே விவரித்துச் சொல்லப்புகின் மிகவும் பெருகும்; ஆதலால் இந்நூலின்பொருட்டு வேண்டியவைகளை மாத்திரம் சுருக்கமாக எடுத்துக்கூறுகின்றோம்.

வடமொழிவைத்திய ஆசிரியராவார்.

தன்வந்தரிபகவான், அசுவனிதேவர், இந்திரன், அகத்தியர், புலத்தியர், சனகர், அக்கினிவேசர், பேளர், சௌமியர், மாண்டுகர்ணர், பராசர், ஆரீதர், ஆத்திரேயர், கௌதமர், காசிபர், கார்க்கியர், பாரத்துவாசர், சுசுருதர், மனு, சுவாயம்புவமனு, யாக்கியவற்கர், விசுவாமித்திரர், அத்திரி, காத்தியாயனர், வசிட்டர், வியாசர், பார்க்கவர், கண்ணுவர், போதாயனர், தக்ஷர், சங்கர், கபிலர், ஆபஸ்தம்பர், போஜர், கரநாதர், சுகர், வாமதேவர், சாதாதபர், ஆங்கீரசர், சம்வர்த்தர், விஷ்ணு, கோநலர், சுமந்து, சூரியர், அருணர், தக்ஷப்பிரசாபதி, நாராயணர், அரிச்சந்திரர், பத்திரவர்மர், சௌனகர், யோகானந்தர், நவநாதர், ஆதிநாதர், வியாக்கிரபாதர், சரகர், ஸ்ரீகண்டர், பாகடாசாரியர், சாரபாணி முதலியவர்களாம்.

தென்மொழிவைத்திய ஆசிரியராவார்.

அகத்தியர், புலத்தியர், திருமூலர், தருமசௌமியர், தேரையர், சாலாங்கிநாதர், போகர், கொங்கணர், சட்டைமுனிவர், ராமதேவர், மச்சமுனிவர், கமலமுனிவர், ரோமரிஷி, கருவூரர், கோரக்கர், இடைக்காடர், சுந்தரானந்தர், பாம்பாட்டிச்சித்தர், அகப்பேய்ச்சித்தர், ஏற்றச்சித்தர் முதலியவர்களாம்.

இவ்விருவகை ஆசிரியர்களில் வடமொழி தென்மொழி இரண்டிலும் நூல்செய்தவர்.

அகத்தியர், தருமசௌமியர், தேரையர் ஆகிய இவர்களாம்.

மேற்கூறியவர்களாலியற்றப்பட்ட வடமொழி நூல்களாவன.

ஆயுள்வேதம், உமாகலாஞானம், நந்தீயம், ஆயுள்வேதோபதேசம், அசுவனீசம்மிதை, ஐந்திரம், வைத்தியசூடாமணி, வைத்தியசிந்தாமணி, வைத்தியசாரம், வைத்தியாமிர்தம், வைத்தியசாரசங்கிரகம், வைத்தியரசாயனம், வைத்தியமுத்தாவலி, நிதானயோகரத்தினவலி, யோகரத்தினவலி, நிதானமுத்தாவலி, திரவியரத்தினவலி, ஆரோக்கியசிந்தாமணி, திரிலோக்கியசிந்தாமணி, சுரசிந்தாமணி, சூத்திரஸ்தானம், சங்கல்பனஸ்தானம், உத்தரஸ்தானம், சங்கியாநிதானம், ஆடகாங்கநிதானம், சரகம், ஜீவரக்ஷாமிர்தம், குமாரதந்திரம், சொஸ்த்தாரிஷ்டம், யோகானந்தம், சசியானந்தம், காசியபம், சித்திசாரம், மதனகாமரத்தினகரம், ரத்தினப்பிரதீபிகை, யோகரத்தினசமுச்சயம், ரசரத்தினசமுச்சயம், ரசரத்தினசங்கியை, ரசநிகண்டு ரசரத்தினகரம், ரசகௌமதி, ரசசாரசங்கிரகம், ரசார்ணவம், ரசவைசேஷிதம், ரசப்பிரதீபிகை, ரசமூலிகம், ரசசூத்திரம், ரசபேஷசகல்பம், ரசப்பிரதிவிஷம், விஷப்பிரதிவிஷம், கல்பபேஷசம், கல்பபூஷணம், அக்கிரசங்கிரகணீயம், நித்தியநாதியம், கோவிந்தபட்டீயம், பாகடாசாரீயம், நவபாஷாணசித்திகை, சித்தநாகார்ச்சுனம், குசுமாரம், சல்லியதந்திரம், தொட்டியம், சாரீரம், திரவியநிச்சயசாரசங்கிரகம், சிகிச்சாசாரசங்கிரகம், கந்தவாகம், அனங்கரங்கம், அஷ்டகர்மாதிகாரம், ஞானபாஸ்கரம், ரோகநாடகம், காலஞானம், அபிதானரத்தினமாலை, மந்திரவம், சதசுலோகி, பப்பதேவியம், சதசுலோகிவிசாரதம், பாகடசூத்திரம், மதனதியோகம், தீர்க்கஜீவந்தி, கல்பகத்தரு, சோதனநிகண்டு, ஆரீதமுனி அகராதிநிகண்டு, சட்ரசநிகண்டு, தன்வந்தரிநிகண்டு, சாரசங்கிரகநிகண்டு, பிரசினோத்திரம், புனப்பிரசினம், பத்தியாபத்தியம், நாடிசக்கரம், நாடிதந்திராந்திரம், சாமுத்திரிகம், அங்காதிபாதம், சூபசாஸ்திரம், உற்பலபரிமளம், சிவதத்துவரத்தினகரம், பசவராஜீயம், தேவபாகம், சித்தபாகம், வீமபாகம், நளபாகம், விருக்ஷாயுள்வேதம், விஷகல்பசார

சங்கிரகம், காமேந்திரமணிதருப்பணம், கருடகல்பம், பிராணுபிர்ததாரம், ரதிரகசியபரீக்ஷை, கொக்கோகசாஸ்திரசிகிச்சை, மேரிகர்ணவிசிராந்த சரகம், சுசுருகம், மந்திரசாஸ்திரம், யந்திரசாஸ்திரம், லளிதம், அஷ்டாங்க இருதயதந்திரம், பரஇதசங்கியை, சாருசரியம், விருக்ஷபீசம், கஜசாஸ்திரம், அசுவசாஸ்திரம், கோசிகிச்சை, மேஷசிகிச்சை முதலியவைகளாம்.

தென்மொழி நூல்களாவன.

அகத்தியர்பெருந்திரட்டு, ஆயுள்வேதபாஷியம், விரிநூன்மூவகைக் காண்டம், வைத்தியசிந்தாமணி, மணிநாலாயிரம், காவியம், சிவஜாலம், சத்திஜாலம், சண்முகஜாலம், வைத்தியக்கண்ணாடி, வைத்தியரத்நாகரம், வைத்தியஆயிரத்தைந்நூறு, வைத்திய அறுநூறு, கருமவிபாகம், கரிசல், சிந்தூரமுந்நூறு, பஸ்மமுறை இருநூறு, தண்டகம், பக்ஷணி, நாடிநூல் : திருமூலர் திருமந்திரம் : சௌமியசாகரம், ஆயுதவருக்கநூல் : தேரையர்காப்பியம், சிகாமணிவெண்பா, அஷ்டசாரநிகண்டு, சேகரப்பா, தருநாடம், யமக அந்தாதி, மகாகுணபாடம், மிகாவண்ணம், நாண்மாலை, யமகவெண்பா, எதுகைப்பா, பெருங்கரிசல், மருத்துப்பாரதம், தினக்கிரமாலங்காரம், நீர்நிறக்குறி, நீர்நெய்க்குறி, தைலவருக்கச்சுருக்கம், பிரதானகுணமூலித்தரு, வைத்தியப்பள்ளுநாடகம், சிகிச்சைக்கிரமம், நோய்மருந்தளவை : காலாங்கிநாதர்பெருந்திரட்டு, குறுந்திரட்டு : போகர் ஏழாயிரக்காண்டம், கல்ப எழுநூறு, உபரசநிகண்டு, சிகிச்சைவெண்பா : கொங்கணர்திரிகாண்டம் : சட்டைமுனிவர்திரிகாண்டம், சரக்குவைப்பு, நவரத்தினவைப்பு : ராமதேவர்பெருநூல் : மச்சமுனிவர் எண்ணூறு, திராவக எண்ணூறு : கமலமுனிவர்வைத்தியமுந்நூறு : ரோமரிஷி ஐந்நூற்றின்சூத்திரம் : கருவூரார் திரட்டு, சந்தநாடகம் : கோரக்கர்வைத்தியாங்கம் : கல்பநிதானம் : சுந்தரானந்தர்வைத்தியத்திரட்டு: இடைக்காடர்சாரீரம் : அகப்பேய்ச்சித்தர்வகாரசூத்திரம், பாம்பாட்டிச்சித்தர்கருஞானம், சித்தராரூடம் : ஏற்றச்சித்தர் ஆரூதாரச்சூத்திரம், பரிபாஷைநிகண்டு ஆதியநூல்களாம்.

இவைகளைக்குறித்துத் தொகைநூல்களில் அகத்தியர் செய்தருளிய வாதசாஸ்திரம் ஒருலக்ஷம், வைத்தியசாஸ்திரம் இரண்டுலக்ஷம்; மற்றைய சித்துப்புருஷர்கள் வைத்தியத்துடன் பலவிஷயங்களையும் சேர்த்துச் சொல்லியசாஸ்திரம் ஒருலக்ஷம் : ஆக தமிழ்ச் சாஸ்திரங்கள் ௪ - லக்ஷம் என்றும், சமஸ்கிருதவைத்திய சாஸ்திர கிரந்தங்கள்யாவும் ௮ - லக்ஷங்களாகஇருந்தவைகளை, சிலபெரியோர்கள் ௪-லக்ஷங்கிரந்தங்களாகச்சுருக்கி, அவைகளை, மாக்கள், தாவரம், மிருகம், வைத்தியாங்கம்முதலியபன்முறை என்னும் நாற்பாலுக்கும் ௪ - பிரிவாகவகுத்திருக்கின்றனர் என்றும் சொல்லப்பட்டிருக்கின்றன.

மேற்கூறிய தமிழ்ச்சாஸ்திரங்களன்றி, சமஸ்கிருத சாஸ்திரங்களின் நான்கு பிரிவிற்கும் விவரம்.

சாரீரநிதானம், சாமுத்திரிகம், தேகபேதம், அஷ்டபரீக்ஷை நாடிலக்ஷணம். தோஷபேதம், சப்ததாதுக்களின்பேதம், அரிஷ்டாரிஷ்டம் முதலியவைகளைக்குறித்து ௨௰௩-ம், வாதாதிரோகம், தொந்தரோகம், சத்தியோரோகம், கிரகரோகம், விரணரோகம், கிருத்திரமவிஷரோகம், தாவரவிஷரோகம், சர்ப்ப விஷரோகம், கீடவிஷ ரோகம் முதலியவைகளைக்குறித்து ௩௰௩-ம், இவற்றின் சிகிச்சைகளைக்குறித்து ௯௰௩-ம், கிலவருக்கம், நீர்வருக்கம், விருக்ஷவருக்கம், செடிவருக்கம், கொடிவருக்கம், புல் நெற்பயிர் முதலிய வருக்கங்களுக்கு உண்டாகின்றரோகங்களைக்குறித்து ௨௰௩-ம், இவற்றின் சிகிச்சைகளைக்குறித்து ௭௰௩-ம் கஜவருக்கம், அசுவவருக்கம், இடபவருக்கம், மேடவருக்கம் முதலியவருக்கங்களுக்கு உண்டாகின்றரோகங்களைக்குறித்து ௩௰௩-ம், இவற்றின்சிகிச்சைகளைக்குறித்து ௫௰௩-ம், வைத்தியாங்கம்,பாகசாலை, பாசனம், கலுவம் முதலியதுணைக்கருவி,கைபாகம்,செய்பாகம்,தீக்ஷைபாகம், சகுனருடநூலலக்ஷணம், தீக்ஷாவிதி, பூசாவிதி, மந்திரம், யந்திரம், அஷ்டகருமம் அஞ்சனம், மறைப்பு, கரு, ஜாலம், கல்பம், காயசித்தி, யோகம், ஞானம் வாதம், குளிகை முதலியவைகளைக்குறித்து ௱௨௰௩-ம், ஆக ௬-லக்ஷம் கிரந்தமாம்.

இவற்றுள், மனிதர்களின் ரோகநிதானங்களைக் கூறிய ௩௰௩ கிரந்தங்களைமாத்திரம் எடுத்து, சுருக்கிப் பதினாயிரம் கிரந்தமாக, சரகமுனிவர், தமதுபெயரால், சரகம் என்னும் ஒருசாஸ்திரம் செய்தருளினர். அதுவோ மிகவும் விரிவாக இருப்பதைநோக்கி, ஸ்ரீகண்டமகாமுனிவர் அதைச்சுருக்கி ஏழாயிரம்சுலோகபூர்வமாக ஒரு நூல்செய்து, அதற்கு "ஜீவரக்ஷாமிர்தம்" எனப் பெயரிட்டருளினர். அந்நூல், வடமொழிப் பயிற்சியிற் சிறந்தவர்கட்கன்றி, மற்றையோர்க்குப் பயன்படாதிருப்பது பற்றி, இத்தமிழ்த்தேசத்தில் யாவரும்உணரும்பொருட்டு, சிலசாஸ்திரிகளுதவியைக்கொண்டு, அந்த வடமொழி நூலைத்தமிழில் மொழிபெயர்த்து வசனகாவியமாக்கி, அதிற்சொல்லப்படும் பிணிகளின்பெயர்களுக்குச் சத்தார்த்தங்களும் எழுதி, வழக்க மொழிகளையுங்கலந்து, சந்தியும் பிரித்து, அகத்தியர்முதலிய சித்துப்புருஷர்கள் தமிழ்ச்செய்யுளாகச் செய்திருக்கிற ரோக நிதானங்களில் சிலவிசேஷமானவைகளையும் வசனமாக்கி அவசியகம் சேர்க்கத்தக்க இடங்களில் மதாந்தரம் எனப்பெயரிட்டுச் சேர்த்து, அந்தந்த ரோகவருக்கங்களின்முடிவில் அவைகளுக்கேற்ற சிலசிகிச்சைகளையும் எடுத்துக்கூறி, முதனூலார் வகுத்தமுறைமைப்படி, தோஷாதிபேதபடலமுதல் கீடாதிபேதபடலம் ஈருகப் பதினைந்து படலங்களும்

பெயரும் அமைத்து அடியேன் இயற்றும்படி, சருவஜீவதயாபர மூர்த்தியாய் சமஸ்த்ததேவர்களும் நவகோடிசித்துப்புருடர்களும் சதாகாலமும் வணங்கத்தக்கவராய் பிறவிப்பிணிமுதலியபிணிகளையெல்லாம் நீக்குகின்ற மகாபண்டிதராகிய பழனிமலைக்கடவுள் கிருபைசெய்தருளினர்.

இவ்வாறியற்றிய இந்த "ஜீவரக்ஷாமிர்தம்" என்கிறசகலரோகநிதான சாஸ்திரத்தின் முதலில்வைத்திருக்கிற தோஷாதி பேதபடலமானது, சகல சாஸ்திரங்களையும் அறிவிப்பதற்கு அக்ஷராப்பியாசம் ஆதிகாரணமாயிருப்பதுபோல்,சாரீரம்,ரோகநிதானம், சிகிச்சை என்னும் மூன்று சாஸ்திரங்களின் உண்மைகளையும், இன்னும் சிலசாஸ்திரங்களின் கருத்துப்பொருள்களையும் அறிவிப்பதற்கு ஆதிகாரணமாயிருக்கின்றது. எவ்வாறென்னில், வாதம், பித்தம், சிலேஷ்மம் என்னும் மூன்று தோஷங்களையும், அவற்றின் சொரூபம், ஸ்தானம், சுபாவம், தொழில், பேதம் இவைகளையும், தேகம், காலம், சந்நிபாதம் இதுகளின் விகற்பங்களையும்,சப்ததாதுக்கள்,மலம்,மூத்திரம் இவற்றின்விருத்திக்ஷீணங்களையும், சாடராக்கினி, பலம், எண்குறி, ரோகாரம்பம், சிகிச்சைத்துணிபு இவைகளையும் தனித்தனியே விவரித்துக்கூறுதலால் என்றறிக.

உ-வது படலத்தில், வாதசுரரோகம் ஆதியாய் மதாந்தரதிரிகாலசுரரோகம்அந்தமாயுள்ள சுரரோகபேதங்களெல்லாம் அடங்கியிருக்கின்றன.

இந்தச் சுரரோகங்கள், மற்றையரோகங்களுக்கெல்லாம் பிறப்பிடமும் தலைமையும் கொடிதுமாயிருக்குந்தன்மைப்பற்றியே, சமஸ்தரோகங்களுக்கும் முதன்மையாக வைத்திருப்பதுந்தவிர, இவற்றின் ஆயுள்நிர்மாணங்களைக்குறித்து, சுரநூல், நாண்மாலை, எனச்சிலசாஸ்திரங்கள் பிறந்திருக்கின்றன. இதில் அடங்கிய சுரரோகத்தொகை, மதாந்தரம் உட்பட, கூாயஉ; இவற்றுால் கிளைத்தரோகம் உாறுக.

ங-வது படலத்தில், ரத்தபித்தரோகம் ஆதி சாத்தியாசாத்தியமார்புரோகம்அந்தமாயுள்ளரோகம்ருஅ; இவற்றுால்கிளைத்தரோகம் உாசுய.

ச-வது படலத்தில், தாகரோகம்முதல் விஸ்பஷ்டம்பா சீரணரோகம் ஈருயுள்ளரோகம் அஎ; இவற்றுால் கிளைத்தரோகம் ராகங.

ரு-வது படலத்தில், மூத்திராகாதரோகம்முதல் வலிகுன்மரோகம் ஈருயுள்ளரோகம் ாகச; இவற்றுால்கிளைத்தரோகம் ாருஅ.

சு-வது படலத்தில், ஆநாகரோகம் முதல் ஓட்டுரோகம் ஈருயுள்ளரோகம் ாகய; இவற்றுால்கிளைத்தரோகம் ாயசு.

௭-வது படலத்தில், விஸ்போடரோகம் முதல் சாமானியகிருமி ரோகம் ஈறாயுள்ளரோகம் ௪௮ ; இவற்றால்கிளைத்தரோகம் ௱௨.

௮-வது படலத்தில், வாதரோகபேதமுதல் பேய்வாதரோகம் ஈறாயுள்ளரோகம் ௮௧ ; இவற்றால்கிளைத்தரோகம் ௯௫.

௯-வது படலத்தில், மகாவாதபேதமுதல்சாத்தியாசாத்திய விஷபாக ரோகம் ஈறாயுள்ளரோகம் ௫௪௪ ; இவற்றால்கிளைத்தரோகம் ௱௩௮.

௰-வது படலத்தில், அதிதூலரோகமுதல் அசாத்திய பூதநிதானம் ஈறாயுள்ளரோகம் ௱௯௩ ; இவற்றால்கிளைத்தரோகம் ௱௯௨.

௰௧-வது படலத்தில், உன்மாதமுதல்கடைவிழியில் ௰௧-வது பிரிவாகிய கண்ணோய் ஈறாயுள்ளரோகம் ௨௱௫ ; இவற்றால் கிளைத்தரோகம் ௱௪.

௰௨-வது படலத்தில், கர்ணரோகமுதல் அசாத்தியகபாலரோகம் ஈறாயுள்ளரோகம் ௱௫ ; இவற்றால் கிளைத்தரோகம் ௯௰.

௰௩-வது படலத்தில், விரணபேதரோகம்முதல் சந்நிபாதயோனி ரோகம் ஈறாயுள்ளரோகம் ௩௨௧ ; இவற்றால்கிளைத்தரோகம் ௪௮.

௰௪-வது படலத்தில், விஷபேதமுதல் ஆரூடநிதானம் ஈறாயுள்ள ரோகம் ௩௮௮ ; இவற்றால்கிளைத்தரோகம் ௱௪௰.

௰௫-வது படலத்தில், கீடாதிபேதம் முதல் எலிவிஷபேதரோகம் ஈறாயுள்ளரோகம் ௯௩ ; இவற்றால்கிளைத்தரோகம் ௫௮.

இவற்றுள், முதற்படலம் ஒழிந்த மற்றைய ௰௪-படலங்களில் அடங்கிய ௪௪௪௮-ரோகங்களும், ௩-அங்கங்களைப்பற்றிப்பிறக்கின்றன.

அதன்விவரம் :— சுரரோகமுதல் முயல்வலி ரோகம் ஈறாகிய ௩௧௨௩-ம் அதோங்கத்தைப்பற்றிப் பிறக்கின்றரோகங்களாம். நேத்திர ரோகம்முதல் அசாத்தியகபாலரோகம் ஈறாகிய ௨௯௬-ம் ஊர்த்து வாங்கத்தைப்பற்றிப் பிறக்கின்றரோகங்களாம். விரணபேதரோகமுதல் தழுதாழைரோகம் ஈறாகிய ௲௨௯-ம் உபயாங்கங்களைப்பற்றிப் பிறக்கின்ற ரோகங்களாம்.

இவ்வகைரோகங்களைக்கூறிய இந்த "ஜீவரக்ஷாமிர்தம்" என்கிற சாஸ்திரத்தினுடைய முக்கிய பிரயோசனம் யாதெனில், தர்மார்த்தகாம மோக்ஷங்களால் உண்டாகிறபேரின்பத்தை ஜீவன் அடைவதற்குப்பெரிய சாதனமாயிருக்கிற தேகத்தை ரக்ஷிக்கத்தக்கதென்பதாம்.

இந்தரோகநிதானம் எவ்வாறு ரக்ஷிக்கும் என்னில், பிணிகள்வருவ தற்குமுன்னம் அதில்நின்றும் தப்பித்துக்கொள்ளும் உபாயந்தெரியும்படி

ரோகபூர்வரூபங்களை முதலிற்றானேகூறுவதும், அவைகள் வந்தபின்பு இதுகளுக்குச் சிகிச்சை வேண்டும்வேண்டுவதில்லை யென்னுந் துணிபைத் தருவதுந்தவிர, ஒரு அரசனானவன், ௩௨-வகை ஆயுதங்களையுடைய நால்வகைச் சேனாசமுத்திரங்களைக்கொண்டு, காலமறிந்து சத்துருக்களை வென்று உயிர்களை ரக்ஷிப்பதுபோல, ௩௨-வகைச் சிகிச்சைகள் என்கிற ஆயுதங்களையுடைய ஔஷதி என்கிற நாலுவகைச் சேனைகளைக்கொண்டு காலமறிந்து வியாதிகளென்கிற பகைவர்களைவென்று தேகத்தை ரக்ஷிக்கின்றதென்றுணர்க.

அப்படியிருக்க, இந்நூலுக்கு"ஜீவரக்ஷாமிர்தம்"எனப்பெயர்கூறியதென்னையெனில், ரோகமானது சடமாகிய தேகத்தைப்பற்றியதாயிருந்தாலும்,அந்தத்தேகத்தினுடன்சேர்ந்து தேகியெனப்பெயர்பெற்றுஅபின்னமாயிருந்து ரோகத்தினால் உண்டாகின்ற துன்பத்தையும் ரோகம் நீங்கியபோது உண்டாகின்ற இன்பத்தையும் அநுபவிப்பது ஜீவனாதலால், "ஜீவரக்ஷாமிர்தம்" என முதனூலாசிரியரே பெயர்கூறினர்.

உதாரணம்.

தருமம், பொருள்,காமம், வீடென நான்கும் உருவத்தாலாய பயன் என்றும், உணர்வாவதெல்லாம் உடம்பின்பயனே என்றும், உடம்பாரழியிலுயிராரறிவார், திடம்படமெய்ஞ்ஞானஞ்சேரவுமாட்டார் என்றும், அனந்தஞ்சாஸ்திரங்கள் முறையிடுகின்றன வென்றுணர்க.

இன்னும் இந்நூலால் யாவரும் வியப்புடன் அடையத்தக்கபெரும் பயன் ஒன்றுளது. அதாவது:— தேவவுபாசனை, சித்தசுத்தி, ஜீவகாருண்ணியம், நல்லொழுக்கம் முதலிய சத்குணங்களையுடையவராகி, கைபார்த்தற்குரிய, நெடுநாடி, லகுநாடி, குறுநாடி, தசநாடிஸ்தானம், அஷ்டபரீக்ஷை முதலிய பற்பலசாஸ்திரங்களில் மிகுந்தபழக்கமுள்ளவராய், தேகம், தேசம், காலம், ஜாடராக்கினி, உண்டி, பலம், வயது, நித்திரை முதலிய பேதங்களை ஆராய்ந்து, விதிப்படி ரோகியின்கரங்களைப்பற்றி, வாதாதிநாடிகளின்,தன்னிலை, பிறநிலை,தொந்தம், பிறழல் முதலியவைகளை முக்கண்கொண்டறிந்து அறிவைச்செலுத்தி ஒவ்வொருரோகங்களையும் அருமையாக நிதானஞ்செய்கின்ற பரம்பரைவைத்தியர்களைப் பார்க்கிலும் இந்த ஜீவரக்ஷாமிர்தமானது, சூரியன் உதயமாகி சகல காக்ஷிப்பொருள்களையும் ஐயந்திரிபறத் தெரிவிப்பதுபோல், தன்னை விரும்பியபெயர்கட்கெல்லாம் எவ்வளவு ரோகநிதானஞ் செய்யவேண்டுமோ அவ்வளவு ரோகநிதானங்களையும் அவ்வவற்றிற்குரிய சிகிச்சைகளையும் மிக எளிதாகத் தெரிவிக்கும் என்பதுதான்.

ஆதலால், இதனை ஆதியோடந்தமாக ஆராய்ச்சிசெய்யும் புத்திமான்களியாவரும், தங்கள்தங்கள் ஆன்மாவுக்குத் துணையாயிருக்குமென்று இதயசம்மதமாக மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்வார்கள்.

இந்தச்சாஸ்திரத்தில் சொல்லிய ரோகங்களை யெல்லாம் நிவிர்த்திசெய்யத்தக்க, தேவசிகிச்சை ௧, ராக்ஷசசிகிச்சை ௧, மானிடசிகிச்சை ௩௰ ஆகிய முப்பத்திரண்டு வகைச்சிகிச்சைக்குள் அடங்கிய பலவித அவுஷதங்களையும் விரிவாகக்கூறுகின்ற சிகிச்சாசாரசங்கிரகம் என்னும் சாஸ்திரம் இனித் தனியே பதிப்பிக்கப்படும்.

மேற்கூறிய ரோகங்களுக்குரிய சிகிச்சைகளை, அந்தந்த ரோகங்களின்முடிவில் தனித்தனியே காண்பித்திருந்தால் மிகுந்தபிரயோசனமாயிருக்குமேயென்னில், மேற்படிசாஸ்திரத்தில், ஒவ்வொருரோகங்களைக் குறித்தும் சொல்லியிருக்கிற அவுஷதங்கள் விஸ்தாரமாயிருப்பதனால், அவைகளை ஈண்டெழுதப்புகின் இச்சாஸ்திரமும் பெரிதாகும் என்பதுபற்றி அதனைத் தனியேபதிப்பிக்க நியமிக்கப்பட்டது.

ஆகையால், இந்தச் சாஸ்திரத்தையும் இனியுடனேபதிப்பிக்கப்படுகிற அந்தச்சாஸ்திரத்தையும் விவேகசாலிகள் முறையாகவாசித்துத் தங்கள்புத்தியில் அவகாகப்படுத்திக்கொண்டு கிரமப்படி சிகிச்சைசெய்யில், இம்மை மறுமைக்குரிய பயன்களை இனிதிலடைந்து வாழ்வார்கள்.

முதற்பதிப்பின் முகவுரை முற்றியது.

வேலுமயிலுந்துணை.

இரண்டாம்பதிப்பின்

முகவுரை.

அகிலலோகத்தில்வா ழாத்மகோடிகளிடத் தரும்பிணிச்சிக்குமா றருட்சிவங்கருணையா லருளியவேத நான்கிலொன்று மாயுள்வேதத் துட்கிடைப்பொருளைச் சீவரட்சாமிர்த மெனும்பெயர்நிரீஇ சிகண்டமாமுனி செப்பும்பனுவலை வடநூல்வழியாய்த் தென்மொழியதனிற் சிதம்பரமாயுள் வேதபாஸ்கரனெனும் சுப்பிரமணிய பண்டிதவேட்செய் தெழுத்தா வெழுத்தி லிலகுறப்பதித்தமுன் பதிப்பிற்கிணங்கவும் முன்பதிப்பதனிற் பின்பதிப்பாமென் றுரைத்தசிற்சில ரோகநிதானமும் சேர்த்தவை வெளிப்படுத் திடுதல்வேண்டுமென் றெம்மனோர் விரும்ப, அவ்வாறே இரண்டாம் பதிப்புப் பதிப்பித்து வெளியிடலாயிற்று.

சி - த - மு - பி.

விளம்பரம்.

இந்த ஜீவரக்ஷாமிர்தம் என்னும் சாஸ்திரத்திற்கூறிய சுரபேத ரோகம் ஆதி கீடாதிபேதரோகம் ஈறாகியசகலரோகங்களுக்கும் கஷாயம், சுரசம், கல்கம், சூரணம், வடகம், கிருதம், லேகியம், தைலமுதலிய கூட- வகை அவுஷதங்களையும் சிகிச்சையின் ஆரம்பக்கிரமங்களையும் விவரமாகச் சொல்லுகின்ற சிகிச்சாசாரசங்கிரகம் என்னும் சாஸ்திரமும், வைத்திய அகராதியும், தெலுங்குஜீவரக்ஷாமிர்தமும் இப்போது அச்சிற்பதிப்பித்து வருகின்றன.

இனி - உடனேபதிப்பிக்கப்படும் புத்தகங்கள்.

- சாரீரம் - - - - - - *
- தினக்கிரமாலங்காரம் - - - - - *
- சுத்திக்கிரமாலங்காரம் - - - - *
- நாடிக்கொத்து - - - - - *
- தேரையர்மோனையமகவெண்பாமூலமும்உரையும். *
- விஷப்பிரதி விஷம் என்னும் சாஸ்திரங்களாம் *

சிவமயம்.

கடவுள்வணக்கம்.

விநாயகர் துதி.

நேரிசை-வெண்பா.

உலகமதிற் * கோடதக மோங்குயிர்கட் கெல்லாம்
இலகக்காப் பாகுமுறை யேபோற் - றிலக
அருஞ்ஜீவ ரக்ஷாமிர் தக்காப்பா மின்பந்
தருஞ்சீர்விநாயகன்பொற் றாள். (௧)

சுப்பிரமணியர் துதி.

கட்டளைக்கலித்துறை.

விரைத்தா ரணிந்திடு நல்லாயுள் வேதியர் வெற்றியுறத்
திரைத்தா மணிமுதன் மூன்றுந்தம் பால்வைக்குந் திண்மையைப்போல்
உரைத்தாரும் வாழ்த்துமிந் நான்முற்றச் செவ்வே ளுபயசெந்தா
மரைத்தாளை வேலை மயிலைநம் முள்ளத்தில் வைத்தனமே. (௨)

பரமசிவவணக்கம்.

பூபதிமாத்திரைக்கும், பரமசிவத்துக்கும், சிலேடை.

அறுசீர்க்கழிநெடிலடிவிருத்தம்.

சுருதியைவெண்பொடிமணிகம் படிகமடனீலகண்டஞ்சுசிபொன்வில்லம்
பொருதனிவீரங்கனனற் பரைபுரம்பெற் றழலாடி யுரக்கால் வீட்டிப்
பொருதுசன்மப் பிணிதீர்க்கும் பூபதிமாத்திரைபோன்றிப்புடவியெங்கும்
கருதரியசுகமளிக்கும் பசுபதிதாட் டுணைமலரைக்கருத்துள்வைப்பாம். (௩)

இதன்பொருள்.

மாத்திரையைக்குறிக்கும்போது.—சுருதி-ஆயுள்வேதத்தினுல்சொல்லப் படுகின்ற, ஐவெண்பொடி - வெண்மைநிறமுள்ள ஐந்துவகைப்பஸ்பங்கள், மணி-இரத்தினங்கள், கம்-வெள்ளைப்பாஷாணம், படிகம்-படிகாரம், மடல்-மடல்துத்தம், நீலகண்டம்-துருசு, சுசி-பாதரசம், பொன்-அரிதாரம், வில்-

* கோடதகம் - சுக்கு.

மனோசிலை, அம்-நவாச்சாரம், வீரம்-சவ்வீரம், கனல்-ஜாதிலிங்கம், நற்பரை நல்லநெல்லிக்காய்க்கந்தகம், புரம் - இரசகர்ப்பூரம், என்னுமிவைகளைப் பெற்று, சேர்த்து அரைத்து, அழலாடி - குப்பியில்வைத்து எரிக்கப்பட்டு, உரக்கால்வீட்டி-பலம்பொருந்தியவாதரோகத்தைநீக்கி, பொருதுசன்மப் பிணிதீர்க்கும் - சரீரத்தில் பொருந்திவருத்துகின்ற மற்றரோகங்களையும் தீர்த்து (உயிர்களுக்குச்) சுகத்தைக் கொடுக்கும்படியான, பூபதி மாத்திரைபோன்று - பூபதிமாத்திரையையொத்து, இப்புடவியெங்கும்-திரிலோகங்களிலுமிராநின்ற, (உயிர்களுக்கெல்லாம்) கருதரிய - (இத்தன்மையதெனமனதினாலும்) நினைத்தற்கரிய, சுகமளிக்கும் - சுகத்தைத்தரும்படியான, பசுபதி-பரமசிவத்தினுடைய, தாட்டுணைமலரை-இரண்டுதிருவடித்தாமரைமலரையும், கருத்துள்வைப்பாம்-எம்முடைய இருதயத்தில் வைத்துத் தியானஞ்செய்வாம் என்க.

பூரமெனற்பாலது, விகாரவகையால் - புரமெனக்குறுகிநின்றது-ஐவகைப்பொடியாவன——காந்தம் - இரும்பு - நாகம் - தங்கம் - செம்பு-இவைகளின் பஸ்மம்.—— அறுவகைமணியாவன, பவளம் - முத்து-புஷ்பராகம் - பச்சை - வயிரம் - மாணிக்கம்.

பரமசிவத்தைக்குறிக்கும்போது—சுருதி-வேதத்திற் சொல்லப்படுகிற, ஐ - அழகிய, வெண்பொடி - விபூதியும், மணி - உருத்திராக்ஷமும், கம்-பிரமகபாலமும், படிகம்-படிகமாலையும், அடனீலகண்டம் - வலியகாளகண்டமும், சுசி-பரிசுத்தமும், பொன்வில்-பொன்மலையாகியவில்லும், அம்-கங்கையும்-பொரு-பொருதுகின்ற, தனி-ஒப்பற்ற, வீரம்-பராக்கிரமமும், கனல்-தீயும், நற்பரை-நல்லபராசத்தியையும், புரம்பெற்று-தமதுதிருமேனியிற்கொண்டருளி, அழலாடி - அக்கினியில் நடனஞ்செய்து, உரக்கால் வீட்டி - பலம்பொருந்திய எமனைக்கொன்று, இப்புடவியெங்கும் - திரிலோகங்களிலுமிராநின்ற உயிர்களுடைய, பொருது-வருத்துகின்ற, சன்மப்பிணிதீர்க்கும்-பிறவிப்பிணியைத்தீர்த்து-கருதரிய, மனதினாலும்நினைத்தற்கரிய, சுகமளிக்கும்-சுகாநுபவத்தை அருளுகின்ற, பசுபதி - பரமசிவமெனப்பொருள்கொள்க. பூபதிமாத்திரையானது, உடற்பிணிகளை நீக்கிச் சுகமளிப்பதுபோல், பிறவிப்பிணியைநீக்கி உயிர்களுக்குச்சுகாநுபவத்தை அருளிச்செய்கின்ற பரமசிவத்தைத் தியானஞ்செய்வாமென்பதுகருத்து.

இவ்வுலகத்தில் அவுஷதங்களுக்குள் சிறந்ததாதலின் பூபதிமாத்திரையைப்பரமசிவத்துக்கு ஒப்பாகக்கூறினர். (அணியுமமுதுமென்னாவியுமாயவன்றில்லைச்சிந்தாமணி) என்னுந்திருக்கோவையாலுமுணர்க. மனதினாலும் நினைத்தற்கரியதெனவே வாக்கினாலுஞ் சொல்லுதற்கரியதெனக் கொள்க. மனமென ஒரு சொல்வருவித்துரைக்கப்பட்டது. ஈண்டு உயிர்

என்றது - மக்களுயிரை——படிகமணியை ஜெபமாலையாகக் கொள்வது ஒருமூர்த்தம், நிருமலன் என்னும் கருத்தைப்பற்றி-சுசி பெற்றென்றார்.

பார்வதிதேவியார்துதி.

கலிவிருத்தம்.

பிணியெழுமூவகைமேகப்பிணிதனைக் கொண்டார்க்கெல்லாந்
தணியமிர்தக்கொடியி னதுதாட்டுணையா குதல்போலத்
துனியினத்தைத்தனித்தனியே சொற்றிடுமிந் நூற்கெழிலார்
பனிமலையின்முளைத்ததொரு பசுங்கொடிதாட் டுணையாமால். (௪)

திரிமூர்த்திகள் துதி.

அறுசீர்க்கழிநெடிலடிவிருத்தம்.

பத்தொடொருபான்மூன்றிற்பெருகுசுரமாதிய நோய்ப்பரப்பையெல்லாங்
கொத்தொடெடுத்துரைக்குமிந்த நூற்புகலத்தத்தநடை கூடிக்கையில்
ஒத்தொருநாடியிற்சுழலும் வாதபித்தவையம்போ லொன்றிற்றோன்றி
முத்தொழிலைப்புரியுமொரு மூவரிருபதமலரை முடிமேற்கொள்வாம். (௫)

தன்வந்தரியார் துதி.

அறுசீர்க்கழிநெடிலடிவிருத்தம்.

தொந்தவல்வினையூக்கத்தாற் றொடர்தனு வெனும்புலத்தில்
மந்தமாம்வித்தாற்றோன்றி வளர்பிணிக் காட்டுக்கெல்லாஞ்
செந்தழற்போலெழுந்து தேவபண்டிதராய் முன்னம்
வந்தகிலங்காக்குந்தன் வந்திரிபாதம் போற்றி. (௬)

சித்துப்புருஷர் துதி.

கலிவிருத்தம்.

தீர்த்திடு மருந்துக டிகழ்தர வுன்னிய
தார்த்தநன் முப்பூ தனைச்சேர்த்தல் போலச்
சீர்த்திகொள் பதினெண் சித்தர்தா ளென்னுட்
சேர்த்தன னிந்நூற் றிகழ்தரற் பொருட்டே. (௭)

ஸ்ரீகண்டமுனிவர் துதி.

அறுசீர்க்கழிநெடிலடி விருத்தம்.

கரிக்குநிமி ர்ம்போய்க் கட்கொலி [illegible]
விரிக்குமனை விருவொழிய வாரி [illegible]
அருக்கவனுஞ் சீகண்ட னடிபரவி [illegible]
பரிக்குலமில் யாருமுனா [illegible] (௧)

குருதோத்திரம்.

எண்சீர்க்கழிநெடிலடி விருத்தம்.

உண்மையெனு மொருமொழியா [illegible]
 கொத்திடச்சா தனமெனும் [illegible]
இன்மையுறு மடியர்பவப் பிணி [illegible]
 இகழ்குமன பன்றுநினைப் [illegible]
நன்மையுண ரறிவு [illegible]
 நோக்கரிய நோக்கை [illegible]
தன்மையுறை மகிழ்வு [illegible]
 சபாபதிப்பேர் கொளுமெங்கள் [illegible] (௨)

அவையடக்கம்.

எழுசீர்க்கழிநெடிலடி விருத்தம்.

படிதனிற் சரக மாதிமு தனிநூல் பகர்பெரு [illegible]
அடியனிங் குரைக்கும் புன்சொலா [illegible]
வடிகொளிந் கவைச்சா [illegible]
இடிகளைக் கலிங்கக் கனியையுஞ் [illegible]

கடவுள் வணக்கம்

முற்றியது.

உ

சிவசுப்பிரமணியர் துணை.

ஜீவரக்ஷாமிர்தம்.

முதலாவது

* தோஷாதிபேதபடலம்.

வாதரூபலக்ஷணம்.

வாதமானது-வெப்பம்-இலேசத்துவம்-குளிர்ச்சி-சுறசுறப்பு-அணுத்துவம்-ஆகிய இவைகளை ரூபமாகப்பெற்றிருக்கின்றது.

பித்தரூபலக்ஷணம்.

பித்தமானது-பளபளப்பு-அதிஉஷ்ணம்-இலேசத்துவம்-பேதி-சலத்தைத்தருதல்-ஆகிய இவைகளை ரூபமாகப்பெற்றிருக்கின்றது.

சிலேஷ்மரூபலக்ஷணம்.

சிலேஷ்மமானது-வழுவழுப்பு-சீதளம்-கனத்தல்-மந்தத்துவம்-நாறுதல்-மினுமினுப்பு-ஸ்திரம்-ஆகிய இவைகளை ரூபமாகப்பெற்றிருக்கின்றது.

வாதஸ்தானநிதானம்.

வாதமானது-செவி-நாபியின்கீழ்-இடுப்பு-தொடை-எலும்பு-சருமம் ஆகிய இவ்விடங்களிற் சஞ்சரித்துக்கொண்டு விசேஷமாக நாபியின் கீழ் ஸ்தானத்திலேயே இருக்கும்.

பித்தஸ்தானநிதானம்.

பித்தமானது-உந்தி-கண்-ஆமம்-ரசதாது- உதிரம்-வியர்வை-சருமம் ருசியையுணர்த்தநாவிலூறுகின்றசலம்,ஆகிய இவ்விடங்களிற் சஞ்சரித்துக் கொண்டு விசேஷமாக உந்திஸ்தானத்திலேயே இருக்கும்.

---

* தோஷம்-என்பது-வாதம்-பித்தம்-சிலேஷ்மம்-என்னும் - இவைகளுக்குரிய ஒருபொதுப்பெயராகும்.

சிலேஷ்மஸ்தானநிதானம்.

சிலேஷ்மமானது - மார்பு-சிரசு-நாசி-நா-கண்டம்-புத்தி-கணுக்கள்-உரோமம்-ஆமம்-ரசதாது-மேதோதாது ஆகிய இவ்விடங்களிற் சஞ்சரித்துக்கொண்டு விசேஷமாக மார்புஸ்தானத்திலேயே இருக்கும்.

மதாந்தரம்.

வாதத்துக்குப் பாதமுதல் நாபிவரைக்கும் இடமென்றும், பித்தத்துக்கு நாபிமுதல் கண்டம்வரைக்கு மிடமென்றும், சிலேஷ்மத்துக்குக் கண்டமுதல் சிரசுவரைக்கும் இடமென்றும், சிலநூலிற் சொல்லப்படுகின்றது. அன்றியும் மலத்தைப்பற்றியது வாதமென்றும், மூத்திரத்தைப்பற்றியது பித்தமென்றும், விந்துவைப்பற்றியது சிலேஷ்மமென்றும், சிலநூலிற் சொல்லப்படுகின்றது.

மதாந்தரமுற்றியது.

வாதசுபாவகுணமாவது.

வாதம்-பித்தம்-சிலேஷ்மம் - ரசாதிசப்ததாதுக்கள் - மலமூத்திராதிகள் - என்பவைகளைத் தனக்குக்காரணமாகப் பெற்றிருக்கின்றதேகத்தை மனோச்சாகம்-உசுவாசநிசுவாசங்கள் * பதினாலுவேகப்பிரவர்த்திகள் சப்ததாதுக்களின்சுபாவங்கள்-நேத்திராதி இந்திரியங்களின்சுபாவங்கள்-ஆகிய இவைகளைக்கொண்டு போஷித்துத் தான்விகாரமில்லாதிருப்பதாம்.

பித்தசுபாவகுணமாவது.

சீரணம்-உஷ்ணம்-பார்வை-பசி-தாகம்-சுவை-காந்தி-புத்தி-ஞாபகம்-சவுரியம்-மிருது முதலியகுணங்களைக்கொண்டு தேகத்தைப் போஷித்துத் தான்விகாரமில்லாதிருப்பதாம்.

சிலேஷ்மசுபாவகுணமாவது.

மழமழப்பு - அசையாமை - கீல்களுக்குறுதி- முதலியகுணங்களைக் கொண்டு தேகத்தைப்போஷித்துத் தான்விகாரமில்லாதிருப்பதாம்.

வாதத்தின்தொழிலாவது.

சரீரத்தில்கருநிறம்-செந்நிறம்- சஞ்சரிப்பு - பிகுத்தல் - முடக்குதல் நோவு நித்திரையின்மை இளைப்பு-ரோகம்-குத்தல்-குடைச்சல் - துவைத்தல்போலும் பிடித்தல்போலுமிருக்குதல் - திமிர்முறுக்குதல் - குன்றல், புரளல்-சந்தோஷம்-தாகம்-நடுக்கல்-தழுத்தல் குழிவிழுதல் - களைத்தல்-அவயவபின்னம் - திருகிக்கொள்ளல் - அசைதல் - மரம்போற்கிடத்தல்-துவர்ப்பாகவாய்நீரூறல் - என்னுமிக்குணங்களை யுண்டாக்குதலாம்.

---

* பதினாலு வேகங்களாவன அபானவாய்வு-தும்மல்-மலம்-மூத்திரம் - கொட்டாவி-பசி-தாகம்-இருமல்-நித்திரை-கண்ணீர்-சுக்கிலம்-சுவாசம் - வாந்தி - இளைப்பு-என்பவைகளாம்.

பித்தத்தின்தொழிலாவது.

சரீரத்தில் மஞ்சள்நிறம்-வெப்பம்-தாகம்-ரோகமில்லாது போலிருத்தல் சிரணவேளையிற்காங்கைசெய்தல்-வியர்வை-எப்போதும் வியர்வைகசிதல்-ஞாபகம்-கோபம்-அசைவின்மை-மூர்ச்சை - அவமதிப்பு - புளிப்பாகவும் கசப்பாகவும் காரமாகவும் - வாய்நீரூறல் - என்னும் இக்குணங்களையுண்டாக்குதலாம்.

சிலேஷ்மத்தின்தொழிலாவது.

சரீரத்தில் சுவேதநிறம் - வழுவழுப்பு - பாரிப்பு - தினவு-சீதளம்-மரியாதை-கீல்களசையாமை-கர்வம்-மந்தகுணம்-மினுமினுப்பு - விரைவில் சிரணித்தல்- அதித்திரை-உப்பாகவும்தித்திப்பாகவும்வாய்நீரூறல்-என்னும் இக்குணங்களை யுண்டாக்குதலாம். இது வெகுநாள் நீடித்து உபத்திரவம் பண்ணத்தக்க தென்றறிக.

வாயுவின்பேதம்.

தேகத்தில்வாயுவானது-பிராணன்-உதானன் - வியானன்-சமானன்-அபானன்-என ஐந்துபிரிவாயிருக்கின்றது.

க-வது பிராணவாயு.

சிரமே இடமாக இருந்துகொண்டுமார்பிலும்கண்டத்திலும்சஞ்சரிப்பதுமன்றி-இருதயம்-பஞ்சேந்திரியம்-சித்தம்-புத்தி-என்னும்-இவைகளைத் தன்வசப்படுத்திப் பின்னும் உமிழ்தல் - இருமல் - ஏப்பம்-உசுவாசம்-நிசுவாசம் அருந்தும் அசனத்தை யுட்செலுத்தல் என்னும் இச்செய்கைகளையுண்டாக்கும். இது உசுவாசநிசுவாசரூபமாகவிருக்குங் காரணத்தால் பிராணவாயுவெனப்பேர்பெற்றது. பிராணம்-என்பது சுவாசரூபம்.

உ-வது உதானவாயு.

மார்பே இடமாக இருந்துகொண்டு-நாசி-கண்டம்-தொப்புள் - என்னும் இம்மூன்றிடங்களிலும் சஞ்சரித்துப் பேச்சுண்டாகுதற்கு முதற்காரணமாயிருப்பதுமன்றிச் சரீரத்துக்கு-வன்னம்-ஒளி- நினைப்பு-என்னும் இக்குணங்களையும் உண்டாக்கும்.இது ஊர்த்துவமாக ஒலியையெழுப்புங் காரணத்தால்-உதானவாயுவெனப்பேர்பெற்றது. உது-என்பது மேல்.

ங-வது வியானவாயு.

இருதயமே இடமாக இருந்துகொண்டுபாதாதிகேசபரியந்தஞ்சஞ்சரிப்பதுமன்றி நடத்தல்-குனிதல்-நிமிர்தல் இமைத்தல்-விழித்தல் - என்னும் இச்செய்கைகளை உண்டாக்கும்.இதுதேகமுழுதிலும் வியாபிக்குங்காரணத்தால்-வியானவாயுவெனப்பேர்பெற்றது. வியானம்-என்பது பரவுதல்.

௪-வது சமானவாயு.

சரீரத்துக்குநடுவான பக்குவாசயஸ்தானமே இடமாக இருந்துகொண்டு வயிறுமுற்றிலும் சஞ்சரிப்பதுமன்றி உண்ணும் உணவுகளை உள்ளிழுத்துக்கொண்டு அவைகளைச் சீரணிப்பித்துச் சாரம்வேறு திப்பி வேறாகப்பிரித்து அவைகளை மலமூத்திரமாகச்செய்யும். இதுதேகத்துக்கு நடுவான சமாக்கினி சமீபத்திலிருக்கும் காரணத்தால்-சமானவாயுவெனப் பேர்பெற்றது. சமம்-என்பது நடு.

௫-வது அபானவாயு.

குதஸ்தானமே இடமாக இருந்துகொண்டு*பிருஷ்டத்திலும் ஆண்குறியிலும்-அடிவயிற்றிலும்-அடித்தொடையிலும் - சஞ்சரிப்பது மன்றிச் சுக்கிலம்-சுரோணிதம்-மலம்-மூத்திரம்-கருப்பம்-என்னும் இவைமுதலியவைகளைவெளிப்படுத்தும். இது குதஸ்தானத்தைப் பற்றியிருக்கும் காரணத்தால் அபானவாயு வெனப்பேர்பெற்றது. அபானம்-என்பது கீழ்.

மதாந்தரம்.

இந்தப்பஞ்சவாயுக்களு மல்லாமல் - வாயிலிருந்து வாந்திபண்ணச் செய்வது நாகனென்றும், நேத்திரத்திலிருந்து விழிக்கச்செய்வது கூர்மனென்றும், மூக்கிலிருந்து குருகுருத்துத் தும்மச்செய்வது கிரதரனென்றும், கொட்டாவி கொள்ளச்செய்வது தேவதத்தனென்றும், வீங்கச் செய்வது தனஞ்செயனென்றும், சிலநூலிற்சொல்லப்படுகின்றது.

மதாந்தரமுற்றியது.

பித்தபேதம்.

தேகத்தில்பித்தமானது-அனலம்-இரஞ்சகம்-சாதகம் - ஆலோசகம்-பிராசகம்-என-ஐந்துபிரிவாயிருக்கின்றது.

௧-வது அனலபித்தம்.

‡ ஆமாசயஸ்தானத்துக்கும் † பக்குவாசயஸ்தானத்துக்கும்-மத்தியில் இருந்துகொண்டு பஞ்சபூதங்களுக்கும் பிரதானமாகித்தனது அக்கினிரூப குணேதயத்தைக்கொண்டு சலரூபவஸ்துக்களை வறளப்பண்ணி உண்பதைச் சீரணிக்கச்செய்யும்-இது அக்கினித் தொழிலைச்செய்யுங் காரணத்தால்-அனலபித்தமெனப்பேர்பெற்றது. அனலம்-என்பது அக்கினி.

---

* பிருஷ்டமென்பது இடுப்பின் பூட்டு. ‡ ஆமாசயம் - என்பது சிதக்கஸ்தானம். † பக்குவாசயம் - என்பது காபிஸ்தானம்.

அப்படி சீரணிக்கச்செய்தபின்பு மலம் வேறும் சலம் வேறுமாகப் பிரித்துவிட்டு-முன்னிருந்தஸ்தானத்திலேயே இருந்துகொண்டு மற்றநான்குவகைப்பித்தத்துக்கும் பலத்தைக்கொடுத்துக்காப்பதா லந்தப்பித்தத்துக்குப்பாசகமென்றும் ஒருபேருண்டு. பாசகம்-என்பது அன்பு.

உ-வது ரஞ்சகபித்தம்.

ஆமாசயஸ்தானத்தில் - வாசம்பண்ணிக்கொண்டு ரசதாதுவைப்போஷிக்கும் - இது ரசதாதுவைப்போஷிக்குங்காரணத்தால் - ரஞ்சகபித்தமெனப்பேர்பெற்றது. ரஞ்சகம்-என்பது போஷித்தல்.

ங-வது சாதகபித்தம்.

இதயஸ்தானத்தில் வாசம்பண்ணிக்கொண்டு அறிவு - புத்தி - அபிமானம்-முதலானதுகளைக்கொண்டு இஷ்டமான பிரயோஜனங்களைச் சாதிக்கும். இது இஷ்டத்தைநிறைவேற்றுங் காரணத்தால் - சாதகபித்தமெனப்பேர்பெற்றது. சாதகம்-என்பது துணைக்காரணம்.

ச-வது ஆலோசகபித்தம்

கண்களில் வாசம்பண்ணிக்கொண்டு எல்லாப்பொருள்களையும் நன்ருகத்தெரியப்படுத்தும்-இது. நேத்திரங்களைக்கொண்டு ரூபங்களைத்தெரிவிக்குங்காரணத்தால்-ஆலோசகபித்தமெனப்பேர்பெற்றது. ஆலோசகம்-என்பது அறிவிப்பு.

ரு-வது பிராசகபித்தம்.

சருமத்தில்வாசம்பண்ணிக்கொண்டு அந்தச்சருமத்தின் ஒளிகெடாமல் காந்தியையுண்டாக்கும். இதுசருமத்தைப் பிரகாசிப்பிக்குங் காரணத்தால் பிராசகபித்தமெனப்பேர்பெற்றது. பிராசகம்-என்பது காந்தி.

சிலேஷ்மபேதம்.

சிலேஷ்மமானது - அவலம்பகம்-கிலேதகம்-போதகம்-தருப்பகம்-சந்திகம்-என ஐந்துபிரிவாகி இதயஸ்தானத்திலிருக்கின்றது.

க-வது அவலம்பகசிலேஷ்மம்.

இதயஸ்தானத்திலேயே வாசம்பண்ணிக்கொண்டு தனதுசுபாவபராக்கிரமத்தைக்கொண்டு* திரிகஸ்தானத்துக்கும்-அன்னசாரத்தைக்கொண்டு இதயஸ்தானத்துக்கும் சலத்தொழிலைக்கொண்டு மற்றநான்கு சிலேஷ்மங்

* திரிகஸ்தானமானது - முதுகின்கீழ் நடுத்தண்டெலும்பின் மூட்டும்,இரண்டு தொடைகளினெலும்பின் மூட்டுஞ் சேர்ந்திருக்கும் இடமாம்.

களுக்கும்-ஆதாரமாயிருக்கும் - இதுதிரிகஸ்தானத்துக்கு ஆதாரமாயிருக்குங்காரணத்தால்-அவலம்பகசிலேஷ்மமெனப்பேர்பெற்றது. சலத்தொழிலைக்கொண்டென்று சொன்னமையால் இது ஒவ்வொரு வேளை யிளகியும் கீல்களைவிட்டுநீங்கியும் - பின்புகூடியும் இருக்கும் - இப்படி யிருந்தாலும் நிகழ்ச்சிருபமாகவே யிருக்கும் - இந்தத்தொழிலைக்கொண்டு மற்ற நான்கு சிலேஷ்மங்களுக்கும் ஆதாரமா யிருக்கும்.

அவலம்பகம் - என்பதுபற்றுதல்.

உ-வது கிலேதகசிலேஷ்மம்.

ஆமாசயஸ்தானத்திலேயே வாசம்பண்ணிக்கொண்டு உண்ணப்பட்ட அன்னபலாதிகளைமிருதுவாக்கும். இது உண்ட அன்னத்தை ஈரப்படுத்தி மிருதுவாக்குங்காரணத்தினல் - கிலேதகசிலேஷ்மமெனப் பேர்பெற்றது.

கிலேதகம்-என்பது ஈரம்.

௩-வது போதகசிலேஷ்மம்.

நாவில் வாசம்பண்ணிக்கொண்டு உண்ணுகின்ற அறுசுவைகளையும் தெரிவிக்கும். இதுநாவிலிருந்து சுவையைத்தெரிவிக்குங் காரணத்தால்-போதகசிலேஷ்மமெனப்பேர்பெற்றது. போதகம்-என்பது உணர்த்தல்.

௪-வது தருப்பகசிலேஷ்மம்.

சிரசில்வாசம்பண்ணிக்கொண்டு இரண்டுகண்களுக்குங்குளிர்ச்சியைத் தரும் - இதுநேத்திரத்திற்குக் குளிர்ச்சியைத்தருங் காரணத்தால் - தருப்பகசிலேஷ்மமெனப்பேர்பெற்றது. தருப்பகம்-என்பது சுகம்.

ரு-வது சந்திகசிலேஷ்மம்.

கீல்களில் வாசம் பண்ணிக்கொண்டு சுபாவமாகச் சகலகீல்களையும் தளரச்செய்துகொண்டிருக்கும்-இதுசகலகீல்களையுந் தளரச்செய்யுங்காரணத்தால் சந்திகசிலேஷ்மமெனப்பேர்பெற்றது. சந்திகம்-என்பது கீல்.

இப்படி ஐந்துவகையான வாத பித்த சிலேஷ்மங்கள் கூட்டமாகத் தேகத்தில் நிறைந்திருந்தாலும் தோஷரகிதமாகவேயிருக்கும்-ஆகையால் அவைகள்நிற்கும் ஸ்தானங்களையும், அவைகள்செய்யுங் கிரிகைகளையும்-தனித்தனியே அதிநுட்பத்துடன் அறிகின்றவர்களேபண்டிதர்கள். இவை நிற்க-முற்கூறிய வாதபித்த சிலேஷ்மங்களில்-வாதமானது-அதிபராக்கிரமத்தையுடைத்தாய்ப் பித்தத்தையும் - சிலேஷ்மத்தையும் - அதிகரிக்கச் செய்து அவ்விரண்டினாலு முண்டாகின்ற சகல ரோகத்துக்குந் தானே

கர்த்தாவாகி அந்த ரோகங்களைப்பார்க்கிலுங் கோரமான அனந்தநோய்க் கூட்டங்களை விரைவில் உண்டாக்கச்செய்து அவைகளுக்கும் தான் அரசனாக இருக்குதலால் அந்தவாதத்துக்கு அரசன் என்றொரு பேருண்டு.

வாததேகிலக்ஷணம்.

வாததேகிக்குப் பித்தமும் கபமும் குறைந்து வாதம் அதிகமாயிருப்பதுமன்றி மெலிந்து உயர்ந்ததேகமும்-பருத்த அடித்தொடையும்-நடக்கால் கீல்கள்நெட்டையிடுதலும்-தடித்த இமைகளுடன் வட்டமாக விகாரித்துச் சாக்கண்போன்று சுறசுறப்பாகிக் கொஞ்சம் வெண்மைகலந்தகண்களும் குளிர்ந்தபார்வையும் கொஞ்சம்கருமைவெண்மை கலந்தொளிருஞ் சரீரநிறமும் - அவ்வாறுகறுத்து முளைபிளந்த தலைமயிரும் - தெளிவான வார்த்தையும் - சிலவேளை மனச்சஞ்சலத்துடன் பட்டும் படாமையுமான தடுமாற்றவார்த்தையும் - தித்திப்பு புளிப்பு உப்பு சூடு முதலிய வஸ்துக்களிற் சொற்ப இச்சையும்-சீதளவஸ்துவில் விரோதமும்-விசேஷ வுண்டியும்-விசேஷவுண்டியென்னினும் அற்ப பலனும்-மாதர்களிடத்தில் அற்ப இச்சையும்-வீரியவிர்த்திகுறைவும்-சந்தான விர்த்தியும் - தயிரியம் புத்தி அறிவு இவை நிலையின்மையும்-கேளிவிலாசம்சங்கீதம் ஆசியம் அங்கமர்த்தனம் வேட்டையாடலாகிய இவைகளில் இச்சையும்-அயோக்கிதை மாச்சரியம் லோபம் பொன்வஸ்துக்களை அபகரிக்கும்நினைப்பு முதலியகுணங்களும்-கீர்த்தியின்மையும்-அரைக்கண்மூடிய கொஞ்சநித்திரையும் - அந்த நித்திரையில் ஆகாயம் மலை வனம் இவைகளில் தான்நடப்பதாகக் காணுகின்றகனவும் - கவித்துவஞ் செய்கின்ற தன்மையும் உண்டாயிருக்கும். அன்றியும் - நாய்,நரி, ஒட்டை, எலி, பருந்து, காகம், கோட்டான், என்னும் இவைகளுக்கும் மேற்கூறிய குணங்கள் உண்டாயிருக்கும்.

பித்ததேகிலக்ஷணம்.

பித்ததேகிக்குப் பித்தம் அதிகமாயிருப்பதுமன்றி-அஸ்திகளிலும் கீல்களிலும்மாமிசங்குறைந்து-எப்போதும்-வெப்பம்-வியர்வை அற்பதுர்க்கந்தம்-சருமஞ்சுருங்கித்திரைதல் முதலானவை பொருந்திய மேனியும்-மஞ்சள் சிவப்பு கலந்தொளிரும்நிறமும்-முகம் உள்ளங்கை உள்ளங்கால் சிவப்பும்-சிறுத்துமஞ்சள்வன்னம்பெற்று அதிசஞ்சரிப்பும் மெல்லிய இமைகளுமுடையவாய் வெயில் கோபம் பசி மதுபானம் இவைகளால் அதிவிரைவிற் சிவக்கின்றகண்களும்-சிரத்திற்கொஞ்சம் மஞ்சள்வன்ன ரோமமும் தேகத்தில் சொற்பரோமமும்-நரையும் - முகப்பருவுடன் கறுத்த மச்சங்களும்-தித்திப்பு துவர்ப்பு கசப்பு சீதளம் என்னுமிவைகளுள்ள பதார்த்

தத்திலிஷ்டமும் அற்பவுண்டியும் பசி தாகம் கோபம் உஷ்ணம் கிலேசம் ஆகிய இவைகளைச் சகிக்காததன்மையும்-சுகந்தமாலை பூச்சுமுதலிய அலங்காரத்திலும் பனியிலும் விருப்பமும் - அற்பசுக்கிலமும் - அற்பகாமமும் மாதரிடத்தில் அற்பவிருப்பமும்-வீரம் பகைஞர்க்கு அஞ்சாமை துணிவு அதிமானம் வல்லமை தெளிந்தபுத்தி மிகுவார்த்தை ஆசாரம் நற்செய்கை அடுத்தவரிடத்தில் அன்பு என்னுமிக்குணங்களும்-நித்திரையில் புட்பம் நிறைந்த கோங்குமரம் சரக்கொன்றைமரம் முருக்குமரம் மின்னல் சூரியன் வாயு கொள்ளி நாலுபுறத்திலும் பற்றியெரிகின்ற வெளிச்சம் என்னும் இவைகளைக்காணுகின்ற சொற்பனமும்-நல்லபோகமும் - வித்துவக் கவித்திறமும் உண்டாயிருக்கும், இவன்முக்காற்பலமும் அறுபத்தாறு வயதுமுடையவனாக இருப்பான். இதன்றியும், புலி-கரடி-குரங்கு-பூனை பாம்பு - யக்ஷர்கள் என்பவைகளுக்கும் - முற்கூறிய தேகாதிகுணங்கள் உண்டாயிருக்கும்.அன்றியும், அக்கினியாலுற்பத்தியாகின்றசெந்துக்களுக்கெல்லாம் பித்ததேகமென்றே சொல்லுகிறார்கள்.

சிலேஷ்மதேகிலக்ஷணம்.

சிலேஷ்மதேகிக்குக் கபம் அதிகமா யிருப்பதுமன்றி - நீக்கமற நரம்புகளையும் அஸ்திகளையும் கீல்களையும் தசைகள் நிறைந்துமறைக்க மேடுபள்ளமில்லாமல் மிருதுவுடனழகியதேகமும்-பரந்தநெற்றியும் - அகன்று உயர்ந்தமார்பும்-முழங்காலளவும் நீண்டகையும்-குறைவில்லாத அவயவங்களும்-அகன்று நீண்டு கடைசிவந்து கருவிழி வெள்விழி ஒளிவாய்த்தெளிவாய்த்தூரப்பார்வை தோற்றுவதாய்ச் சுற்றிலுங்கறுத்துநெருங்கிய இமைமயிருடன் எண்ணெய் தடவினதுபோல மினுமினுத்து அழகிய கண்களும்,மஞ்சட்சோளம் அறுகுமுளை பாணத்தொளி கத்தியொளி கோரோசனை தாமரைப்பூ பொன் என்னும் இவையொத்த சரீரநிறமும்-சிலேஷ்மப்பசையால் மிகவுங்கறுத்து நெருங்கி முளைத்தரோமமும் மதத்த யானை நடையும்-மேகம் கடல் சிங்கம் மத்தளம் என்பவைகளின் ஒலிபோன்ற கண்டத்தொனியும் - கசப்பு துவர்ப்பு காரம் உஷ்ணம் இன்னும் அதிகாங்கையான பதார்த்தங்கள் கூடிய அற்பவுண்டியும்-அற்பவுண்டி யென்னினும் அதிகபலனும்-பசி தாகம் துக்கம் கிலேசம் உஷ்ணம் ஆகியஇவைகட்குப்பின்வாங்காத தன்மையும் - ரசதாது சுக்கிலதாது சந்தானம் பரிசனம் நடை புத்தி ஆகிய இவைகளின் பெருக்கமும் - வாலிபத்திலும் அதிக அழையின்மையுடன் கோபம் கடுஞ்சொல் சஞ்சலபுத்தி தீர்க்கவயிரம்- அதிவிஷயம்-அதிதாகம்-என்னும் இவையின்மையும்-சத்துவகுணம் ஞாபகசத்திமேலானபுத்தி முன்யோசனை பெரியோர்க்கன்புசெய்யும்பத்தி வணக்கம் நீங்காச்சிநேகம் நம்பிக்கை சத்தியம் பிரதிக்கினை பொறுமை

நாணம் பொறுத்தவுத்தரம் தருமத்திலிச்சை நன்றிமறவாமை ஈகை ஒரு வேளை மிகுந்தாஈகை பிறர்நன்குமதித்தல் நற்செய்கை என்னும் இக்குணங் களும்-சுகநித்திரையும் - அந்தநித்திரையில் பக்ஷிகளுள்ள தாமரைக்குளம் சீதளமேகம் என்னும் இவைகளைக்காணுகின்றகனவும்-கவித்துவஞ் செய் கின்றதன்மையுடன் மிகுந்தசெல்வமும் உண்டாயிருக்கும். இதன்றியும் பிரமன் உருத்திரன் இந்திரன் வருணன் என்னும் இவர்களுக்கும் சிங்கம் யானை குதிரை எருது பசு கருடன் அன்னம் என்னும் இவைகளுக்கும் முற்கூறியவிழிகளும் குணங்களும்.தேகமும் - உண்டாயிருக்கும். இச்சி லேஷ்மமென்பதைச் சந்திரசொரூப மென்றே சொல்லுகிறார்கள். மேற் கூறியவாததேகி-பித்ததேகி சிலேஷ்மதேகி-என்னும் இம்மூன்று தேகி கட்கும் பொதுவாகச் சுத்ததேகிகளென்றுபெயர். அம்மூன்றின் தொந் தத்தையுடைய தேகிகட்குத் தொந்ததேகிகளென்று பெயர். இந்தத் தொந்ததேகிகட்குமேற்கூறிய குணங்களெல்லாம் மாறுபட்டிருக்கும்.

வாதகோபகாலம்.

கசப்பு துவர்ப்பு காரம் காங்கை உள்ளவஸ்துகளை அருந்துங்காலம் அகாலபோசனகாலம் அற்பபோசனகாலம் நித்திரைபங்ககாலம் யோகாப் பியாசகாலம் உரத்துப்பேசுங்காலம் வாந்தியாவது போதியாவது அதி கரிக்குங்காலம் பயகாலம் துக்ககாலம் சிந்திக்குங்காலம் அதிசையோக காலம் ஆவணி புரட்டாசிமாதகாலம் மாலைக்காலம் விடியுங்காலம் புசித்த தற்காலம்-ஆகியஇக்காலங்களில் மனிதர்களுக்கு வாதம் அதிகரிக்கும்.

பித்தகோபகாலம்.

உப்பு புளி காரம் அதிதீக்ஷணம் உஷ்ணம் உள்ள இவ்வஸ்துவையும் தாகமீறும் வஸ்துவையும் மிதமின்றி அநுசரிக்குங்காலம் - கோபகாலம் சீரணகாலம்-மத்தியானகாலம்-நடுநிசிகாலம்-ஐப்பசிகார்த்திகைமாதகாலம் என்னும் இக்காலங்களில் மனிதர்களுக்குப் பித்தம் அதிகரிக்கும்.

சிலேஷ்மகோபகாலம்.

தித்திப்பு புளிப்பு உப்பு குழகுழப்பு மந்தம் சலம்வடிதல் சீதளம் உள்ளவஸ்துகளையும் - கெடுதியான பதார்த்தங்களையும் அருந்துங்காலம் சீதளவஸ்திராதிகளைப்புனையுங்காலம்-பகலில்நித்திரையும் இரவில் அநித் திரையுங்கொள்ளுங்காலம்-அசீரணகாலம்-பேதி வாந்தி ஆகியகாலம்-சுக காலம்-தகாதநடக்கைகள் நடக்குங்காலம் இவைகளைமிகவும் அநுசரிக்குங் காலம் சித்திரை வைகாசிமாதகாலம் உதயமுதல்பத்துநாழிகை அளவான

காலம்- அஸ்தமனமுதல் பத்துநாழிகையளவானகாலம் - புசித்ததற்காலம் ஆகிய இக்காலங்களில் மனிதர்களுக்குச்சிலேஷ்மம் அதிகரிக்கும்.

சந்நிபாதலக்ஷணம்.

புளிப்பு கசப்பு தித்திப்புஎன்னும் சுவையுள்ளவஸ்துக்களைமிதமின்றிப் புசிப்பதனால்-வாதமும் பித்தமும் சிலேஷ்மமும் தனித்தனியே அதிகரிக்கும்; அப்படி அதிகரித்த மூன்றுதோஷங்களும் ஒன்றாகக்கூடி மிகவுமதிகரிப்பதே சந்நிபாதமாம் - இதனைத் திரிதோஷம் எனவும் முத்தோஷம் எனவும் ஆயுள்வேதியர் கூறுவர்.

சந்நிபாதகோபகாலம்.

நாட்சென்ற புராதன அன்னம்-மிகவுங்கெடுதியன்னம் - கொழியலரிசியன்னம் - கெடுதலானமத்தியபானம் - புதுமது-கலங்கியசலம் - வதங்கிய பதார்த்தம்-வேகாப் பதார்த்தம்-புளிப்பிலைக்கறி-அதிபுளிப்பு - முள்ளங்கிக் கிழங்கு-கடுகுபச்சடி-பிண்ணாக்கு-மண்-துர்க்கந்தமாமிசம்-அழுகியுலர்ந்த மாமிசம்-ரோகங்கொண்டமிருகாதிமாமிசம்-ஏட்டுத்தயிர் - ஆகிய இவைகளைப்புசிக்குங் காலம் *சங்கீரணபோசனம் - அசீரணபோசனம் விஷமபோசனம்-ஆறியபோசனம்-அகாலபோசனம்தேசாசாரபோசனந்தவிர்ந்த நூதனபோசனம்-ஆகிய இந்தப்போசனகாலம்-கீழ்த்திசைக்காற்று-பிசாசம் பில்லிசூனியம்-இடுமருந்து-விஷம்-மலைவாசம்- இவைமுதலானவை யணுகியகாலம்நவக்கிரகங்களின்வேதைஜன்மநட்சத்திரபீடை தொடருங்காலம் துரோகம்-கொலை-மகாபாதகம்-கெடுதிச்சிந்தை - இன்னும் நானாவிதமான கருமம்-என்னும் இவைகள் அநுசரிக்குங்காலம் - ஆகிய இக்காலங்களில் மனிதர்களுக்குச் சந்நிபாதம் அதிகரிக்கும்.—இவைநிற்க மாதர்கட்கு வயிற்றில்மரித்த பிண்டத்தைக் கைதேறாத மருத்துவச்சி கண்டித்து வெளிப்படுத்தலாலும்-பிரசவிக்குங்காலத்தில் தகுந்த ஔஷதங் கொடாமையினாலும் சந்நிபாதம் அதிகரிக்கும். அதிகரித்த திரிதோஷமானது அநந்தரோகத்தையுண்டாக்கும். அதன்விவரம் - வாதாதிமுத்தோஷங்கள் தங்கள்தங்கள் அதிகரிப்பினாலே எந்தெந்தரோகத்துக்கு எதுவெது கர்த்தாவோ அதுவதுகளையநுசரித்து அந்தந்தரோகங்களையெல்லாம் அளவுபடுத்துதற்குக் கூடாமையான கணக்கில் உண்டாக்கிவிடு மென்றறிக.

வாதவிருத்திலக்ஷணம்.

வாதமானது சுபாவத்திற்கு அதிகரித்தால் தேகம் இளைத்தலோடு தேசுகெட்டுக்கறுக்குதல்-விடவிடென்றுநடுக்குதல்-ஓய்ச்சல் - பலவீனம் அதிவெப்பம் வயிறுப்பிசம் மலபந்தம் - பஞ்சேந்திரியங்களுக்குந்துர்ப்ப

* சங்கீரணம்-என்பது கலப்பு.

லம்-நித்திரைபிடியாதிருத்தல் - ஒருவேளைபிதற்றல்-பிரமை - அதபிரியம் சகலபொருள்களிலும் அதிவிருப்பம்-என்னும் இக்குணங்கள்உண்டாகும்.

பித்தவிருத்திலக்ஷணம்.

பித்தம் அதிகரித்தால்-மலம்-சிறுநீர்-கண்கள்-சருமம்-இவைகள்-மஞ்சளாகுவதன்றியும் - அதிகபசி - தேகவெரிச்சல் - தாகம் உண்டாதல்போவிருத்தல்-சொற்பநித்திரை-என்னுமிக்குணங்கள் உண்டாகும்.

சிலேஷ்மவிருத்திலக்ஷணம்.

சிலேஷ்மம் அதிகரித்தால் - அக்கினிமந்தம் - வாய்நீரூறல் - தாமசம் வெண்மைநிறத்துடன் தேகபாரிப்பு-சில்லிடல்-ஒருவேளைசரீரமாதியந்தமும் கட்டுவிட்டுப்போவதுபோலிருக்குதல்-இரைப்பு-உப்பீசம் - இருமல் மிகுந்தநித்திரைஎன்னும் இக்குணங்கள் உண்டாகும்.

வாதசீரணலக்ஷணம்.

வாதங்குறைந்தால் - சரீரமிகவும் இளைத்தலோடு ஈனத்தொனியும் அதிக மறதியுமுண்டாகும். அன்றியும்மேற்கூறிய சிலேஷ்மவிருத்தியின் துர்க்குணங்களும் இதில் உண்டாகும்.

பித்தசீரணலக்ஷணம்.

பித்தங்குறைந்தால் - மந்தாக்கினியும் - சைத்தியமும் உண்டாகும். அன்றியும் சுபாவசிலேஷ்மவிருத்திக்கும் நாசம் உண்டாகும்.

சிலேஷ்மசீரணலக்ஷணம்.

சிலேஷ்மங்குறைந்தால்-பிரமையுண்டாவதன்றியும்-சிலேஷ்மஸ்தானங்களின்கோழைகுறைந்தும்-மார்பைப்பற்றியிருக்குஞ்சிலேஷ்மங்கரைந்தும் ரோமக்கால்களில்நின்றும்வியர்வைபெருகும். அன்றியும்சந்திகசிலேஷ்மம் முழுமையும் விலகிவிடும் இதனால் தேகத்தின் கீல்களெல்லாம் நன்றாக வெளியில் தோற்றமுண்டாகும்.

தாதுவின்பேதம்.

தேகத்தில் தாதுவானது,ரசதாது-ரத்ததாது-மாமிசதாது - மேதோதாது-அஸ்திதாது-மச்சாதாது-சுக்கிலதாது என ஏழுபிரிவாக இருக்கின்றது. இவைஅன்றியும்சருமத்தையும் தாது என்றுசிலர்சொல்லுகிறார்கள்.

சப்ததாதுக்களின்சுபாவசெய்கை.

சப்ததாதுக்களானவை-சரீரத்தைத்தாங்கிச் சோர்வில்லாமல்காப்பாற்றிப் புஷ்டியாக்கிப் பூரிக்கப்பண்ணி மினுமினுப்பும் காந்தியும் உண்டாகச் செய்வதுமன்றி,உயிராகிய அரசனை வாழப்பண்ணியும் கருப்பவுற்பத்திக்குக்காரணமாயும் இருக்கின்றனவாம்.

மலசுபாவசெய்கை.

மலமானது, சரீரத்தைத்தாங்கிநிலேக்கப்பண்ணும்.

மூத்திரசுபாவசெய்கை.

மூத்திரமானது, தேகத்தில் உப்பை உண்டாக்கும்

வியர்வையின்சுபாவசெய்கை.

வியர்வையானது-தேகத்தில் மெருகையுண்டாக்கும். ஆயினும் சப்த தாதுக்கள் - மலம்-மூத்திரம்-வியர்வை என்னும் இவைகள் தோஷ ரகித மாக இருப்பதே சுபாவமென்றறிக.

விருத்தி ரசதாதுவின்லக்ஷணம்.

ரசதாது அதிகரித்தால், சிலேஷ்மவிருத்தியினல் உண்டாகிற துர்க் குணம் எவ்வளவோ அவ்வளவும் உண்டாகும்.

விருத்தி ரத்ததாதுவின்லக்ஷணம்.

ரத்ததாது அதிகரித்தால்-பிலீகரோகமும் - விசர்ப்பியும் வித்திரிதிக் கட்டியும்-குஷ்டமும்-சிவந்தரத்தத்தடிப்பும்-ரத்தவாதமும் - ரத்தபித்த மும்-குன்மமும்-உதிரவிருத்திரோகமும் - காமாலேயும் - பெருவியாதியும் அக்கினிமந்தமும்-உன்மாதமும்-சருமச்சிவப்பும்-ரத்தமூத்திரமும் - ரத்த நேத்திரமும் உண்டாகும்.

விருத்திமாமிசதாதுவின்லக்ஷணம்.

மாமிசதாது அதிகரித்தால்-கண்டமாலேயும் - ஆச்சரியமானகிரந்தியும் உண்டாம். அன்றியும். கன்னம்-தொடை-வயிறு-ஆண்குறி இவைகளில் கண்டுகண்டாகக் கட்டிக்கொள்ளுதலோடு கண்டத்தின் சதை மிகவும் பருக்கும்.

விருத்திமேதோதாதுவின்லக்ஷணம்.

மேதோதாது அதிகரித்தால் - முற்கூறிய மாமிசதாது விருத்தியினல் பிறக்கப்பட்ட குணங்களெல்லாம் இதில் பிறப்பதன்றியும் - ஆயாசமும்- கொஞ்சம் வேலேசெய்யினும் பெருமூச்சும் - தனத்திலும் வயிற்றிலும் தொடையிலும் தொங்கும்படியாகிய சதையும் உண்டாகும். துக்கும்.

விருத்தி அஸ்திதாதுவின்லக்ஷணம்.

அஸ்திதாது அதிகரித்தால்-அஸ்திகளும்-தந்தங்களும் அதிகப்படும்.

விருத்திமச்சாதாதுவின்லக்ஷணம்.

மச்சாதாது அதிகரித்தால்-கண்கனப்பு-தேகம்பாரிப்பு-கைகால்களின் விரல் கணுக்கள் இவைகளில் வீக்கமும்-மூத்திரகிருச்சரமும் உண்டாகும்.

விருத்திசுக்கிலதாதுவின்லக்ஷணம்.

சுக்கிலதாது அதிகரித்தால் - மாதர்களிடத்தில் அதிகவிருப்பமும்-சுக்கிலாஸ்மரி ரோகமும் உண்டாகும்.

விருத்திமலலக்ஷணம்.

மலமானது அதிகரித்தால் வயிற்றில் இரைச்சலுடன் உப்புசமும் கனத்தலும்-வேதனையும் உண்டாகும்.

விருத்திமூத்திரலக்ஷணம்.

மூத்திரமானது அதிகரித்தால் - அடிவயிற்றில் குத்தலுண்டாகும் கொஞ்சமூத்திரம் வெளிப்பட்டால்-மறுபடியும் வருவதுபோலவே இருக்கும். மறுபடிவெளிப்பட்டாலும் முன்போலவே இருக்கும்.

விருத்திவியர்வைலக்ஷணம்.

வியர்வையானது அதிகரித்தால்-அதிவியர்வும் - தேகத்தில் மிகுந்த துர்க்கந்தமும்-தினவும் உண்டாகும்.

விருத்திநேத்திரமலலக்ஷணம்.

நேத்திரமலம் அதிகரித்தால்-அதிகபீளை சாரலுடன் கண்கனத்தல் நீர்க்கம்மல்-இமை ஒட்டிக்கொள்ளல் முதலிய குணங்களும் உண்டாகும். இப்படியே மற்ற இந்திரியமலங்களின் விருத்தியையுங்காண்க.

சீரணரசதாதுவின்லக்ஷணம்.

ரசதாது குறைந்தால்-தேகத்தில் சருமஞ்சுறசுறப்பும் - வாடலும்-உலரலும்-ஆயாசமும்-வார்த்தைகேட்க அசங்கியமும் உண்டாகும்.

சீரணரத்ததாதுவின்லக்ஷணம்.

ரத்ததாதுகுறைந்தால்-புளிப்புவஸ்துக்களில் - சீதளவஸ்துக்களில் விருப்பமும்-நரம்புகள் தளரலும்-சரீரநிறக்குறையும் உண்டாகும்.

சீரணமாமிசதாதுவின்லக்ஷணம்.

மாமிசதாது குறைந்தால்-கண்கள் வாடலோடுசுருக்கமும் - கன்னமும் தொடைச்சதையும் வற்றுதலும்-கீல்கள்நோகுதலும் உண்டாகும்.

சீரணமேதோதாதுவின்லக்ஷணம்.

மேதோதாது குறைந்தால் - இடுப்புப்பக்கங்களுக்குப் பலனில்லாமையும்-தேகமிளைத்தலும் பிலீகஸ்தான விருத்தியும் உண்டாகும்.

சீரணாஸ்திதாதுவின்லக்ஷணம்.

அஸ்திதாது குறைந்தால்-அஸ்திசந்துக்களில் நோவும்-தந்தங்களிலும் மயிர்களிலும் நகங்களிலும் வெடிப்பும் உண்டாகும்.

சீரணமச்சாதாதுவின்லக்ஷணம்.

மச்சாதாது குறைந்தால்-எலும்புகளில் துவாரம் விழுதலும் - பிரமையும்-கண்ணில் இருட்கம்மலும் உண்டாகும்.

சீரணசுக்கிலதாதுவின்லக்ஷணம்.

சுக்கிலதாது குறைந்தால் - சுக்கிலம்வற்றுதலுடன் - வெகுநேரம் பொறுத்து ஒருதுளிவிழுதலும்-விதையில்நோவும் - ஆண்குறியில் புகை பட்டவஸ்துபோலக் கறுத்தலும் உண்டாகும் இப்படியே மாதர்கட்கும் நாதமானது சீரணித்தால்-ஷை குணங்கள் பிறக்குமென்றறிக.

சீரணமலலக்ஷணம்.

மலங்குறைந்தால் - வயிற்றில் சத்திப்புடன் ஒரு வாயுவுண்டாகிக் குடலைமுறுக்கிப் பிடிப்பதுமன்றி - மார்பிலும் - விலாப்பக்கங்களிலும் நோவுண்டாக்கிச்சஞ்சரித்துமேல் எழும்பி உபத்திரவத்தைவிளைக்கும்.

சீரணமூத்திரலக்ஷணம்.

மூத்திரங்குறைந்தால்-முன்வன்னம்பேதித்துச் சிவப்பாகிக் கொஞ்சங் கொஞ்சமாகப் பிரயாசையோடு நீரிறங்கும்.

சீரணவியர்வைலக்ஷணம்.

வியர்வைகுறைந்தால் - மயிர்களுதிர்தலும் - சிலமயிர்கள் முறைத்தலும்-சருமங்களெல்லாம் கீற்றுக்கீற்றாக வெடித்தலும் உண்டாகும்.

சீரணநேத்திரமலலக்ஷணம்.

நேத்திரமலங்குறைந்தால்-கண்களில் சுபாவபீளைவிளைவின்மையும்-அதுவுண்டாகுமிடத்தில்வறளலும்நோவும் உண்டாகும்-ஒருவேளை அற்பபீளைவந்தாலும்வரும் - இப்படியே மற்ற மூக்கு வாய் செவி முதலியவைகளின் மலக்குறைவினால் வருங்குணங்களையும் அறிக.

உதராக்கினிபேதம்.

உதராக்கினியானது நான்குவகைப்படும். அவையாவன, முற்கூறிய சமானவாயு எதாஸ்தானத்திலிருந்தால் சமாக்கினி, அது இடந்தப்பி நின்றால் விஷமாக்கினி, அதனைப்பித்தஞ்சூழ்ந்தால் தீக்ஷணாக்கினி, அதனைக் கபஞ்சேர்ந்தால் மந்தாக்கினி எனவும் பெயர்களாம்.

க-வது சமாக்கினியானது.

ஒருவன் திர்த்தியாகப் புசிக்காநின்ற அன்னபானாதிகளை யெல்லாம் முறைமைப்படி கால அளவைக்கு மாறுபடாமல் நன்றாகத்தகிக்கும்.

உ-வது விஷமாக்கினியானது.

புசிக்கப்பட்டவைகளை உடனேதகிக்காமல் வெகுநேரம் பொறுத்துத்தகிக்கும். அப்படி தகிக்கப்பட்டாலும்-அவைகள்விஷமசீரணமேயாம்.

ங-வது தீக்ஷ்ணாக்கினியானது.

வெந்தும் வேகாத அன்னபானாதிகள் முதலான கெட்டவஸ்துக்களைப்புசித்தாலும்-அவைகளை ரசத்தோடுங்கூடவே தகிக்கும்.

ச-வது மந்தாக்கினியானது.

இஷ்டமாகப்புசித்த பாகமான அன்னபானாதிகளை உடனே தகிக்காமல் வாயுவால் வயிற்றிரைச்சல்-குடலிரைச்சல்-வயிறுப்பிசம்-தேகங்கனத்தல்-என்னும் இவைகளையுண்டாக்கி வெகுநேரத்தின்பின்பு தகிக்கும்.

தேகபலபேதம்.

தேகபலமானது மூவகைப்படும். அவையாவன, சகசபலம் -காலபலம்-யுத்திகிருதபலம் என்பவைகளாம்.

க-வது சகசபலன்.

விஷயாதிகளினால் அடிபடாத யவ்வனபருவமுள்ள தாய்தந்தைக்குப் பிறந்தவர்க்குச் சுபாவமாக இருப்பதாம்.

உ-வது காலபலன்.

பிண்டந்தரித்தகாலபலத்தினாலும் பருவகாலத்தினாலும் வருவதாம். யவ்வனகாலத்தில் விந்துதரித்துப் பிறந்தவர்கட்கு இருப்பது காலபலமென்றுஞ் சிலர்சொல்லுகிறார்கள்.

ங-வது யுத்திகிருதபலன்.

சிலம்பமுதலிய பழக்கத்தினாலும்-நன்றாகப்புசித்தலினாலும் - தாதுவிருத்திக்குரிய அவுஷதங்களை அநுசரிப்பதனாலும் வருவதாம்.

வாதரோகிலக்ஷணம்.

வாதரோகிக்குச் சரீரமானது கரியநிறமாயும்-கையால்தொடில் சில இடத்தில்குளிர்ச்சியாயும்-உஷ்ணத்தோடு துடிப்பாயும்-பேசில் சமதொனியாயும்-கண்களிற் கருமையோடு சலம்பாய்வதாயும் - மலமானது கருமையோடு பந்தமாயிறங்குவதாயும்-சிறுநீர் வெண்மையாய்த் தெளிந்திறங்குவதாயும்-நாவானது கருமையோடு முள்ளுகளையொத்துக்கொஞ்சம் வெடித்திருப்பதாயுமிருக்கும். அன்றியும், கையில்வாதநாடியானது சிறுபிள்ளைத்தொட்டிலாட்டம்போல் வளைந்தசைவதாய் தவளை ஓணான் பாம்புஅட்டை குருவி இவை முதலியசெந்துகளின் நடையைப்போல நடக்கும்.

பித்தரோகிலக்ஷணம்.

பித்தரோகிக்குச் சரீரமானது மஞ்சள்நிறமாயும் - கையால்தொடில் அதிஉஷ்ணமாயும்-விழிமஞ்சளாயும்-அல்லது சிவப்பாயும் - மலமானது சிவந்துமஞ்சளித்திறங்குவதாயும்-சிறுநீரானது-உஷ்ணத்தோடு செம்மை பசுமையாயிறங்குவதாயும்-நாவானது ரத்தவன்னம் மஞ்சள்வன்னம் பெற்றிருப்பதாயும்-பேசில் உரத்ததொனியாயுமிருக்கும். அன்றியும், கையில் பித்தநாடியானது அன்னம்-மயில்-தாரா-மாடப்புறா - ஊர்க்குருவி இவை முதலிய செந்துகளின் நடையைப்போல நடப்பதன்றியும் - ஓங்கிக் கருடனைப்போலும்-வண்டைப்போலுமெழும்பி விசையாகநடக்கும்.

சிலேஷ்மரோகிலக்ஷணம்.

சிலேஷ்மரோகிக்குச் சரீரமானது வெள்ளைநிறமாயும் - கையால் தொடில் மிகுந்தகுளிர்ச்சியாயும்-கண்கள்வெளுப்போடுபீளைசாருவதாயும் மலமானதுவெளுத்துச் சிதறலாகக் கொஞ்சஞ்சீதங் கலந்திறங்குவதாயும்-சிறுநீரானதுசேறுபோற் குழம்பிவெளுத்து நுரையோடிறங்குவதாயும்-நாவானது வெண்மையோடு சலம்பொருந்தியதாயும்-பேசில் ஈனத்தொனியாயும் இருக்கும். கையில் சிலேஷ்மநாடியானது கோழி-ஊர்க்குருவி-கொசு-சிலந்திப்பூச்சி இவைமுதலிய செந்துகளின் நடையைப்போலத் தோற்றியுந் தோற்றாமலும் நடக்கும். அன்றியும், அதிசையோகத்தில் முந்தினவன் நாடிபோலும்-கொக்கினுநக்கம்போலு மெல்லநடக்கும்.

தொந்தரோகிலக்ஷணம்.

தொந்தரோகிக்குச்சரீரமானது பலவன்னமாயும்-கையால்தொடில் குளிர்ச்சியாயும்-உஷ்ணமாயும்-இவ்விரண்டுமில்லாததாயும்-கண்கள் மலம் மூத்திரம்-நா இவைகள் நானாவிதவன்னமாயும்-பேசில் நானாவித தொனியாயும் இருக்கும். அன்றியும், கையில்நாடியானது முற்கூறியசெந்துகளின் நடைகளையெல்லாம் ஒத்துத்தொந்திப்பாகநடக்கும். இவ்விதப் பரீக்ஷைகளினாலும்-தேசகால அக்கினிபேதங்களினாலும்-மேற்கூறிய ரோகங்களை நிதானித்துவைத்தியஞ்செய்யவேண்டும். இதனைத்தானபரீக்ஷையெனவும், அஷ்டபரீக்ஷை யெனவுங் கூறுவர்.

மதாந்தரமுற்றியது.

முதலாவதுதோஷாதிபேதபடலம்

முற்றியது.

உ

சிவசுப்பிரமணியர் துணை.

ஜீவரக்ஷாமிர்தம்.

இரண்டாவது

சுரரோகபடலம்.

சுரபேதம்.

சுரரோகமானது, சகலரோகங்களுக்குந்தலைமையாயுங்கொடிதாயும் இருக்கின்றது. அது, வாதசுரம்-பித்தசுரம்-சிலேஷ்மசுரம் - வாதபித்த சுரம்-வாதசிலேஷ்மசுரம்-சிலேஷ்மபித்தசுரம் - சந்நிபாதசுரம் - ஆகந்துக சுரம்-என எண்வகைப்படும். இவற்றுள் ஆகந்துகமானது-அபிகாதசுரம் சாபசுரம் - அபிசாரசுரம்-அபிஷங்கசுரம்-என நான்குவகைப்படும். இவற்றுள் அபிஷங்கமானது, பூதாவேசசுரம் - அவுஷதகந்தசுரம்- விஷசுரம்-கோபசுரம் - பயசுரம் - துக்கசுரம் - காமசுரம் - என ஏழுவகைப்படும். இதுவும் அன்றி வாதாதிதோஷபலாபலங்களினாலும்-ஆறுருதுகாலபேத பலாபலங்களினாலும்-சந்நிபாதங்களினாலும்-சந்ததாதியென்னும்சுரம்பிறக்கும். அது, சந்ததசுரம்-சததசுரம்-அந்நியேத்துகசுரம் - துவியாகிகசுரம் திரியாகிகசுரம்-சாதுர்த்திகசுரம்- என ஆறுவகைப்படும். ஆக இந்த இருபத்துமூன்று சுரங்களும், சாரீரசுரம் - மானவலிகசுரம் - சௌமியசுரம்-தீக்ஷணசுரம்-உட்சுரம்,புறச்சுரம்-பிராகிருதசுரம்-வைகிருதசுரம்-சாத்தியசுரம்-அசாத்தியசுரம்-சாமசுரம் - நிராமசுரம் - என்னும் இப்பன்னிரண்டு சுரங்களோடும் தனித்தனியே சேர்ந்து இருநூற்றெழுபத்தாறு சுரங்களாகின்றன. அதன்விவரம், சாரீரசுரம்முதலாகிய இந்தப் பன்னிரண்டு சுரங்களுடன் மேற்கூறிய வாதசுரம் ஆதியாகிய இருபத்துமூன்று சுரங்களும் தனித்தனியேசேரும்போது, வாதசாரீரசுரம் வாதமானவலிகசுரம் வாதசௌமியசுரம்-வாததீக்ஷணசுரம்-வாத உட்சுரம்-வாதபுறச்சுரம்-வாதபிராகிருதசுரம்-வாதவைகிருதசுரம் - வாதசாத்தியசுரம் - வாதஅசாத்தியசுரம் - வாதசாமசுரம் - வாதநிராமசுரம் எனப் பெயர்பெறும். இவ்வாறே மற்றையசுரங்களுக்கும் பெயருரைத்துக்கொள்க. இந்தச்சுரங்கள் தனித்தனியாக இருக்கும்போது அவ்வவற்றிற்கிருக்கும் குணங்கள் ஷைசுரங்கள் இரண்டிரண்டாகத் தொந்திக்குங் காலத்தினுந் தொந்தப்பட்டிருக்குமென்றறிக.

சுரப்பிறப்பின்லக்ஷணம்.

அறுசுவை வஸ்துபேதங்களாலும்-தகாதநடக்கைகளாலும்-வாதம்-பித்தம்-சிலேஷ்மம் - என்னும் - மூன்றுதோஷங்களும் ஒன்ருகச்சேர்ந்தாவது-இரண்டிரண்டாகத்தொந்தித்தாவது-தனித்தனியே ஆவது அதிக்கிரமித்து ஆமாசயஸ்தானத்தைப்பற்றி அங்கு மிருதுகடினரூபமாக இருக்கின்ற ஆமம் என்கிற சீதக்கட்டாகிய சிலேஷ்ம அடையைத் தங்கள் தங்கள் வன்மைக்குத் தகுந்தபடி இளக்கி உப்பப்பண்ணிப் பின்பு சீரணம் ஆகாத அன்னரசத்தை அநுசரித்து நாடோறும் அன்னரசத்தைச் செலுத்துகின்ற நரம்புகளின் துவாரங்களையும் ரோமத்துவாரங்களையும் மறைத்துப் பிறகு பக்குவாசயஸ்தானத்திற்சேர்ந்து அங்கு இயல்பாகச் சொலிக்கின்ற சாடராக்கினியை மேலில் விசிறும்படி எழுப்பி அதினுடன் கலந்துகொண்டு சரீரம்முழுதும் வியாபித்துச்சுரமாகும் இதுவேசுரப் பிறப்பாம்.

இதில்ஜடாக்கினியானதுவெளிப்படுதலால்ஆகாரஞ்செல்லாமலும் நரம்பின்துவாரங்கள் ரோமத்துவாரங்கள் அடைபடுதலால் சுரம் உண்டாகும்போது வியர்வைகாணுமலும் இருக்கும். அந்த ஆமத்தில் பித்தகப தோஷம் அணுகுமாயின்வியர்வையும் உண்டாகும். ஆகையால் இவ்வாறு பிறக்கின்றசகலசுரரோகங்களிலும் பிரகோபித்ததோஷங்களைச்சமப்படுத்தவும் உப்பியசிலேஷ்ம அடையை யதாப்பிரகாரம் சுருக்கவும் வெளியில் விசிறிய அக்கினியைப்பக்குவாசயத்தில் அடக்கவுமே ஆயுள்வேதத்தில் முதலில் லங்கனம்,சுரசம்,கஷாயம்,வேது முதலிய சிகிச்சைகளும்,அரும் பத்தியங்களும் விதிக்கப்பட்டிருக்கின்றன. இப்படியிருக்கச் சிலர் ரத்தக் கொதிப்பையே சுரத்திற்குக் காரணமாகச் சொல்லுகிருர்கள்.

சுரபூருவரூபம்.

சுரமானது, ஆலசியம் - எந்தப்பதார்த்தங்களிலும் நிராசை-தேக பாரிப்பு - நாவிற்சலம்வறளல் - சரீரத்தைத்துவைத்ததுபோலிருத்தல்-அரோசகம்-கொட்டாவி - கண்ணிற்சலக்கோவை - உண்ணும்வஸ்துகள் சீரணியாமை-பலக்குறைவு-அதிநித்திரை - ரோமச்சிலிர்ப்பு-திமிர்முறுக்குதல்-அடித்தொடைச்சதையும் முழங்கால் கண்டச்சதையும் நோதல்-இளைப்பு-வார்த்தையில் அசங்கிதம்-புளிப்பு உப்பு காரங்களிலிச்சை-தித்திப்புவஸ்துகளில்விரோதம் - அருகிருப்பவரிடத்துவெறுப்பு - மனைவியரிடத்தும் புத்திரரிடத்தும் விரோதம்-கீதவாத்தியநாதத்தில் அக்கினியில் குளிர்ச்சியில் காற்றில் சலத்தில் நிழலில் உஷ்ணஸ்தானத்தில் காரணமில்லாமலே விருப்பும் வெறுப்பும் உண்டாகுதல் என்னுமிக்குணங்களைத் தனக்குப்பழையரூபமாகப் பெற்றிருக்கின்றது. இவற்றுள் சிற்சிலகுணங்கள் பிறந்தாலும் சுரம் உண்டாகும் ஆகையால் இப்பூர்வரூபத்தை நிதா

ணித்தபண்டிதர்கள் சுரம்வருவதற்குமுன்னே அதை வரவொட்டாத உபாயத்தைச்செய்வதுமன்றி இதுபோலவே எந்தரோகங்களுக்குப்பூர்வரூபம் சொல்லியிருக்கிறதோ அந்தரோகங்களுக்குமவ்வாறே செய்யக்கடவர்கள்.

க-வது வாதசுரம்.

உற்பத்தியாகும்போது சிலுசிலுப்புகண்டு மறைந்து சுரம்விட்டது போலிருந்து சற்றுநேரம்பொறுத்து மறுபடி உண்டாகி அதிகரித்துச் சொற்பமாகும் - அதன்பின்பு அலையடிப்பதுபோல உபுக்கல்உபுக்கலாக உண்டாகும் - அப்போது உடம்பெங்கும் வேதனையுடன் எரிச்சல்-ஒருவேளை குளிர்ச்சி-ஒருவேளை உள்ளங்கையிலும் உள்ளங்காலிலும் எரிச்சல் ஒருவேளை அவைகளில்குளிர்ச்சி ஒருவேளை அவயவங்களில் அதிவேதனை ஒருவேளையில்லாமை-ஒருவேளை கால்களில்திமிர்-ஒருவேளை சர்வாங்கமுமரத்தல்-ஒருவேளை தொடைச்சதைகனத்தலுடன்நோவு-ஒருவேளைசுருங்கினதுபோலிருக்குதல்-ஒருவேளை கீல்களெல்லாமுறிந்துபோவதுபோலே தோற்றல் - ஒருவேளை இடுப்புநோவுடன் முதுகெலும்பை நொறுங்க அடிப்பதுபோலிருத்தல்-ஒருவேளை வயிற்றைமிகுதியுமிழுத்துக்கொண்டு உப்பிசமாகவிருத்தல்-ஒருவேளை பக்க எலும்புமுதல் சகல எலும்புகளும் நொறுங்கிப்போவதுபோலிருத்தல் - ஒருவேளைமார்பில் பாரம்வைத்தாற்போலிருத்தல்-ஒருவேளை மார்பிலும் பிடரியிலும் அக்குளிலும் அங்குசத்தாற் குத்துவதுபோல்குத்தல் - ஒருவேளைதோள்களில் நோவு-ஒருவேளை எந்தவஸ்துவையாகிலு மெல்லுதற்குத் தாளசதி-கொட்டாவி-காதிரைச்சலிரண்டு நெறிகளிலுங்தெறித்தல் - உச்சித்தலையில் வேதனை - அரோசகம் வாய்துவர்த்தல் மலமூத்திரந் தாராளமின்றிக் கொஞ்சங் கொஞ்சமாகவெளிப்படுதல்-முகம் கண் நகம் சருமம் மலம் மூத்திரம் என்னும் இவைகள் உஷ்ணமாய் வறண்டு கருமைகலந்தசிவப்பாயிருக்குதல்-கோட்டுவாய்ச்சலம்வடிதல் எந்தவஸ்துகளிலும் இச்சைநீங்கல்-எந்தப்பதார்த்தங்களை வாயில்வைத்தாலும் அருசி-புசித்த அன்னம் சீரணியாதிருத்தல்-வியர்வைகாணாமை-நித்திரைபிடியாமை - தொண்டையும் உதடும் வறளல்-வறட்டிருமல்-வெள்ளோக்காளம்-தாகம்வேண்டிவறட்டல் - மனோதுக்கம் ரோமச்சிலிர்ப்பு-நடுக்கல்- தந்தங்களெல்லாம் புளிப்பைத் தின்றதுபோல் கூசுதல்-ஒருவேளை தூக்கிப்போடுவதுபோல் சரீரத்தைக்குலுக்கல்-தும்மலில்லாமை-எழுந்தால் சுற்றுவதுபோலிருத்தல்-பித்தனைப்போல்பிதற்றல் வெய்யிலிலிருப்பதற்கேநினைப்பு- தேகங்குன்றுதல் - என்னும் இக்குணங்களையுண்டாக்கும். அன்றியும், உதடுகறுத்தல்-கண்களிலும் புருவத்திலும் நோவு-தேகம்பாரித்தல்-மலபந்தம்-என்னுமிக்குணங்களையும் உண்டாக்குமென்பாருமுளர். இதற்குத்தருணசுரம் வரையிலும் சுத்த லங்கனத்தி

னுலும்,வாதாரிகஷாயத்தினுலும்,தேகத்திற்குத்தகுந்தபடிஉபாயஞ்செய்து அந்த ஒன்பதுநாளுஞ் சென்றபின்பு, சுரசம் மாத்திரை ஆதியான சிகிச்சையைச்செய்யவேண்டும்.

உ-வது பித்தசுரம்.

கேசாதிபாதம்வரைக்கும் குபீரென்று உண்டாகும். அப்போது பிதற்றலுடன் அபத்தவார்த்தை-வாயானது காரமாயிருத்தல் - நாவிலும் நாசியிலும் வெடித்துப்புண்காணல்-சீதளவஸ்துவில்விருப்பம்-தலைசுற்றல் மூர்ச்சை-கர்வம்-எந்தவஸ்துகளிலும் இச்சையில்லாமை-அற்பபேதி-கசப்புத்தண்ணீராகவாந்தி-உமிழ்நீரில் கொஞ்சம் ரத்தம்வீழல்-புளியேப்பம்-தேகத்தில் சிவந்தபடை - முகம் கண் சருமம் நகம் மலம் மூத்திரம் என்னும் இவைகள் மஞ்சளைப்போலும் பச்சிலைரசத்தைப்போலும் தோற்றல் வியர்வைபெருகல்-சுவாசத்தில் துர்க்கந்தம்வீசல் - அதிகதாகம் என்னும் இக்குணங்களையுண்டாக்கும். அன்றியும், தேகத்தில்வேதனை தலைநோவு-கண்ணுேவு-நடுக்கல்-நித்திரைபங்கம்-துர்ப்பலம் - விக்கல்-ஏப்பம் என்னு மிக்குணங்களையும் உண்டாக்குமென்பாருமுளர். இதற்குத் தாரகலங்கனமும்,சுகுமாரகஷாயமுதலிய சிகிச்சைகளும் ஆம்.

௩-வது சிலேஷ்மசுரம்.

ஆலசியம்-அற்பமலசலஞ்சாரல்-மிகுந்த அரோசகம்-நரம்புகளெல்லாம்விகுத்தல்-வாயில்இனித்தசலமூறல்-மார்புவிகுத்தலுடன் துடித்தல் சுவாசத்தோடிரைப்பு- நாசியடைப்பு-வாந்தி - இருமல் - சரீரமெல்லாம் விகுத்தல்-முகம் கண் சருமம் நகம் மலம்மூத்திரம் இவைகள் வெளுத்தல் சர்வாங்கத்திலும் நோவின்றிச் சிறிதும்பெரிதுமாய்க் கண்டுகண்டாகத் தடிப்பெழும்பல்-தேகம்சுற்றிவருதல்போலிருத்தல்-சோம்பல் - உடம்பிற் கொஞ்சம்வீக்கம் என்னும் இக்குணங்களை உண்டாக்கும். அன்றியும் சர்வாங்கசீதளம்-தலையிலும் எல்லாக்கீல்களிலும் நோவு-குளிர்-மந்தாக்கினி-மலபந்தம்- சிரோபாரம்-கண்டத்துள்நோவு-நெஞ்சிற்கோழை - மரத்தல் தினறல்-விக்கல்-தயக்கம்-தாகம்-நமைச்சல்-ஏப்பம்-நித்திரைபங்கம் - நாக்கும்மூக்கும் வெளுத்தல் என்னு மிக்குணங்களையும் உண்டாக்குமென் பாருமுளர். இதனை லகுலங்கனம் ஆதியான சிகிச்சைகளால் வசப்படுத்தவும்.

இம்மூன்றும் ஒவ்வொருதோஷங்களாற் பிறந்தசுரங்களாம்.

ச-வது வாதபித்தசுரம்.

தலைநோவு-மூர்ச்சை- வாந்தி-எரிச்சல்-சோர்ந்துவிழல்-தொண்டை வறளல்-வாயுலரல்-எந்தப்பதார்த்தத்திலும் இச்சையில்லாமை-கீல்களில் நோவு-அசதியானநித்திரை - தாகம்-பிரமை-ரோமச்சிலிர்ப்பு-கொட்டாவி

பிதற்றல்-என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.—அன்றியும், சர்வாங்க வேதனை, நடுக்கல், தேககுன்றல், தயக்கமொடு அறிவுகெடுதல், சீதளம், அதிநித்திரை,ஏப்பம்,வாய்கைத்தல்,மலம்வெளுத்தல், வியர்வை,ஆயாசம், மந்தாக்கினி,மலபந்தம், கண்ணிற் சலம்வடிதல்,நாவிலும், முகத்திலு முள் ளுப்போலிருத்தல், தொடைச்சதையிலும் முழங்காற்சதையிலும் நோவு, என்னும் இக்குணங்களையும் உண்டாக்குமென்பாருமுளர், இதில் இரண்டு தோஷம் சேர்ந்தமையால் இதற்குச் சுத்தலங்கனம் நீங்கலாக வாதாரி பித்தாரி அவுஷதங்களும், மேற்சொல்லியவாதசுர பித்தசுர சிகிச்சைகளும் ஆம். இவ்வண்ணமாகவே இரண்டிரண்டு தோஷங்களாவது, மூன்று தோஷங்களாவது, சேர்ந்த சுரங்களுக்கெல்லாம் அந்தந்தத் தோஷாரி வஸ்துகளும் அவ்விதச்சிகிச்சைகளும் ஆம்.

ரு-வது வாதசிலேஷ்மசுரம்.

முகம்வற்றல்-அரோசகம்-கீல்களிலும் தலையிலும்நோவு - நாசியில் பீநசம்போல்சலம்பெருகல்-இருமல்-இரைப்பு-மலபந்தம்-சயித்தியம்-கண் களிலிருண் மூடல்-பிரமை - உடம்புதிருப்புகிறதுபோலசைதல் - என்னும் இக்குணங்களை யுண்டாக்கும். அன்றியும், சர்வாங்கவேதனை - நடுக்கல் ரோமச்சிலிர்ப்பு-நாவெளுப்பு-தாகம்-மந்தாக்கினி-நெற்றி-புருவம்-கழுத்து காது என்னும் இவைகளில்நோவு-பிதற்றல்-அழுதல் - பிரலாபம் - நித்தி ரைபங்கம் - வாயில்நித்திப்போடுவாந்தி - வியர்வை - சுவாசம் - என்னும் இக்குணங்களையும் உண்டாக்குமென்பாருமுளர்.

சு-வது சிலேஷ்மபித்தசுரம்.

சைத்தியம்-தேகமானது தம்பம்போலமரத்தல் - சரீர அவஸ்தை-ஆயாசம் - வியர்வை - எரிச்சல் - தாகம் - இருமல்-சிலேஷ்ம பித்தகுணம் சோர்ந்துவிழல்-சோம்பல்-வாயில் கசப்பைத் தேய்த்ததுபோலிருக்குதல் என்னும் இக்குணங்களையுண்டாக்கும்-அன்றியும், ரோமச்சிலிர்ப்பு - மார் பிலும்-பிடரியிலும்நோவு-நாவில்முள்ளுப்போலிருத்தல் - பிதற்றல்- கண் ணிற் சலம்வடிதல்-தலைநோவு-அதிநித்திரை - அல்லது நித்திரைபங்கம் ஏப்பம்-எரிச்சல்-வாந்தி-மூர்ச்சை-இரைப்பு - சரீரம்நருக்கித்துவைத்தது போலிருத்தல்-என்னும் இக்குணங்களையும் உண்டாக்குமென்பாருமுளர். இம்மூன்றும், இரண்டு தோஷங்களாற்பிறந்த தொந்தசுரங்களாம்.

எ-வது சந்நிபாதசுரம்.

வாதாதிதொந்தங்களின் சேர்க்கையால்தோன்றி - அடிக்கடி தேக எரிச்சல்-அதுபோலவே சயித்தியம்-பகலில்நித்திரை-இரவில் நித்திரை யின்மை - ஒருவேளை இரவிலும்பகலிலும் நித்திரை - அல்லது இன்மை

அடிக்கடிவியர்வை - ஒருவேளையின்மை - பாடல் ஆடல் ஆசியம் நகைப்பு முதலியவிகாரச்சேட்டை-கண்கள்நீர்க்கம்மலோடு கலங்கிச் சிவந்துசொருகுதல்-கண்களின் இமையொட்டிக்கொள்ளல் - விலாப்பக்கங்களிலும் சிரசிலும் அடித்தொடைகளிலும் கீல்களிலும் எலும்புகளிலும் நோவு-பிதற்றல்-காதிலிரைச்சலுடன்நோவு-கண்டத்தில் முட்சொருகுதல் போலிருத்தல்-நாவுதுவளலின்றிச் சுட்டதுபோலிருத்தல் - தேகங்கனத்தல் எல்லாக்கணுக்களிலும்துர்ப்பலம் - உமிழ் நீரானதுசிவந்து நுரைத்திருத்தலோடு கசப்பு-தலைநடுக்கலுடன் அதிகநோவு-தேகமுற்றிலும் கரியநிறம்-அல்லது சிவந்தநிறமானதடிப்பு-மார்புநோவு-மலபந்தம்-அல்லதுகொஞ்சங்கொஞ்சமாக மலம்வெளிப்படுதல்-முகத்தில் பளபளப்பு-ஈனத்தொனி- பிரமித்தல் துர்ப்பலம் - என்னும் இக்குணங்களையுண்டாக்கும். இந்தக்குணங்களையுடைய தோஷமானது சிற்சில நாள்பொறுத்துச் சாத்தியப்படும். ஒருவேளை இதுவே அசதியாகியசோம்பலையுண்டாக்கிக் கண்டத்தில்குறுகுறுவென்னு மொருசத்தத்தையெழுப்பி முகவொளியைக்கெடுத்து மரணத்தைக்கொடுப்பதால்இதனை அபிநியாசசந்நிபாதம் என்றுஞ்சொல்லப்படும். அன்றியும், வியாபிக்குஞ்சுபாவமும் சூக்ஷுமரூபமும் உள்ளபித்தமானது, சிலேஷ்மத்தால்மறிபட்டவாயு கலைக்க, உள்ளிருந்து எழும்பிவெளிப்படுதலால் சந்நிபாதசுரத்தில் கண்கள் மஞ்சள்நிறமாயிருக்கும். தோஷம் ஸ்திரமாயிருக்கையில் முற்கூறியபித்தத்தின்சொரூபம் நஷ்டமானால், அவயவங்களில் சகலதுர்க்குணங்களையும் உண்டாக்கிய இச்சந்நிபாதசுரம் அசாத்தியமென்னப்படும்; முற்கூறியதோஷமும் அக்கினிநஷ்டமுந் தவிரமற்றத்துர்க்குணங்களையுண்டாக்கியசந்நிபாதசுரம் கஷ்டசாத்தியமென்னப்படும் : ஒருவேளை இதுசாத்தியமானால் அங்கவுறுப்புகளைக் கெடுத்தாலுங்கெடுக்கும். அன்றியும், சர்வாங்கமுந்நருக்கித்துவைத்ததுபோலிருத்தல்-உள்ளங்கை-உள்ளங்கால்வியர்வை-நெஞ்சுலரல்-தலைநோவோடுசுழற்றல்-விக்கல் - ஏப்பம்-வாந்தி-கொட்டாவி-வயிறுப்பிசம்-பேதி-சுவாசம்- மூர்ச்சை என்னும் இக்குணங்களையும் உண்டாக்குமென்பாருமுளர்.

சந்நிபாதசுரபேதம்.

முற்கூறியசந்நிபாதசுரம்ஒன்றுதானே,வாதபித்த சிலேஷ்மங்களின் மிகுதலினாலும் குறைவினாலும், பதின்மூன்றுவகையாகப்பிறக்கும். அவையாவன, வாதமும் பித்தமும் அதிகரித்தலினாலும் சிலேஷ்மம் குறைதலினாலும் பிறப்பது கண்டகுப்சசந்நிபாதசுரம் - வாதமும் சிலேஷ்மமும் அதிகரித்தலினாலும் பித்தம்குறைதலினாலும் பிறப்பது சந்திகசந்நிபாதசுரம் - சிலேஷ்மமும்பித்தமும் அதிகரித்தலினாலும் வாதங் குறைதலினாலும் பிறப்பதுதாந்திரிகசந்நி பாதசுரம் - இம்மூன்றும் ஒருவகை.

வாதம் அதிகரித்தலினாலும்பித்தமும் சிலேஷ்மமுங்குறைதலினாலும்பிறப்பது புக்னநேத்திர சந்நிபாதசுரம்-பித்தம் அதிகரித்தலினாலும் வாதமும் சிலேஷ்மமும் குறைதலினாலும்பிறப்பது ருத்தாகசந்நிபாதசுரம்-சிலேஷ்மம் அதிகரித்தலினாலும் வாதமும்பித்தமும் குறைதலினாலும் பிறப்பது ஜிம்மகசந்நிபாதசுரம் - இம்மூன்றும் ஒருவகை. வாதம் அதிகரித்தலினாலும் பித்தம்கொஞ்சங் குறைதலினாலும் சிலேஷ்மம்மிகுதியாகக் குறைதலினாலும் பிறப்பது "பிரலாபசந்நிபாதசுரம் - வாதம் அதிகரித்தலினாலும் சிலேஷ்மம் கொஞ்சங்குறைதலினாலும் பித்தம் மிகுதியாகக்குறைதலினாலும்பிறப்பது அந்தகசந்நிபாதசுரம்-பித்தம் அதிகரித்தலினாலும் வாதம் சற்றுக் குறைதலினாலும் சிலேஷ்மம் மிகுதியாகக்குறைதலினாலும் பிறப்பது ரக்திஷ்டீவிசந்நிபாதசுரம்-இம்மூன்றும் ஒருவகை. பித்தம் அதிகரித்தலினாலும் வாதம் அதிகமாகக்குறைதலினாலும் சிலேஷ்மம் சற்றுக்குறைதலினாலும் பிறப்பது சித்தவிப்பிரம சந்நிபாதசுரம்-சிலேஷ்மம அதிகரித்தலினாலும் வாதம் அதிகமாகக்குறைதலினாலும் பித்தம் சற்றுக்குறைதலினாலும் பிறப்பது சீதாங்கசந்நிபாதசுரம்-சிலேஷ்மம் அதிகரித்தலினாலும் பித்தம் அதிகமாகக்குறைதலினாலும் வாதம்சற்றுக்குறைதலினாலும் பிறப்பது கர்ணிகசந்நிபாதசுரம்-இம்மூன்றும் ஒருவகை. வாதமும் பித்தமும் சிலேஷ்மமும் சமமாக அதிகரித்தலினால் பிறப்பது அபிநியாசசந்நிபாதசுரம்-இப்பதின்மூன்று சந்நிபாதசுரங்களும் முறையே வருமாறுகாண்க.

௧-வது கண்டகுப்சசந்நிபாதசுரம்.

கண்டத்தைக்குறுக்கிப் பிடிப்பதுபோலிருத்தல் வாயில்வந்த பிரகாரம் பிதற்றல்-தாகம்-வாயுவதிகரித்தல் - பிரமை - தேகம் அதிகாங்கையோடுகனத்தல்-அலறி அலறி எழுந்தோடிவீழ்தல் - நடுக்கல் - மூர்ச்சை இரைப்பு-தலைநோவு-காதில்நோவுடனிரைச்சல்-கண்டத்தில் முட்சொருகுதல்போலிருத்தல்-என்னு மிக்குணங்களையுண்டாக்கும் - இது கண்டத்தைக் குறுக்கிப்பிடிப்பதால் கண்டகுப்சசந்நிபாதசுரம் எனப்பேர்பெற்றது. குப்சம்என்பது-குறுகல். இதற்குச்சுவச்சந்தபைரவமுதலிய சிகிச்சைகளும் ஆம்.

௨-வது சந்திகசந்நிபாதசுரம்.

கீல்களெல்லாம்நோதல்-வாயில் நீங்காதகபம்-இருமல் - வயிற்றுவலி ஆயாசம்- அவயவங்களில் எரிச்சல்-தாகம் - கொஞ்சம்பிரமை-என்னுமிக்குணங்களையுண்டாக்கும். இதுகீல்கள்தோறும் அதிகநோவை யுண்டாக்குவதால் சந்திகசந்நிபாதசுரம் எனப்பேர்பெற்றது. இதற்கு மனோகரபைரவம் முதலியசிகிச்சைகளும் ஆம்.

௩-வது தாந்திரிகசந்நிபாதசுரம்.

அதிக அசத்தி-இருந்திருந்துபெருமூச்சு-சரீரமெரிச்சல்-பேதி-ஆயாசம்-கருணைக்கிழங்குமுதலிய காறலானவஸ்துக்களின் காறலைப்போலத் தொண்டைக்குள்காறல் - கொஞ்சங்காதுமந்திபம் - நாக்கு முள்ளுப்போலிருத்தலோடுகறுத்தல்-சரீரத்தில் அதிகாங்கை-அரோசகம்-பீநசம்போல மூக்கில் சலம்விழுதல் - கொஞ்சம்வயிற்றுநோவு - என்னு மிக்குணங்களையுண்டாக்கும் - இது அசத்தியைத்தருவதால் தாந்திரிக சந்நிபாதசுரம் எனப்பேர்பெற்றது. இதற்குப்பூதபைரவம் ஆதியசிகிச்சைகளும் ஆம்.

௪-வது புக்னநேத்திரசந்நிபாதசுரம்.

கண்கள் கம்மலோடுகலங்கிச்சிவந்து இடுக்கம்பிடித்திருத்தல்-இமைகள் அடிக்கடி ஒட்டிக்கொள்ளுதல் - தொடைச்சதையிலும் சிரசிலும் விலாப்பக்கத்திலும் எலும்புகளிலும் கீல்களிலும்நோவு-பிரமை-இரைப்பு பிதற்றல்-நடுக்கல்-நித்திரை-என்னும் இக்குணங்களை யுண்டாக்கும். இது கண்களை நெருக்குவதால் புக்னநேத்திர சந்நிபாதசுரம் எனப்பேர்பெற்றது. இதற்கு விதாரணபைரவம் ஆதிய சிகிச்சைகளும் ஆம்.

௫-வது ருத்தாகசந்நிபாதசுரம்.

அவயவங்களில்மிகுந்தநோவு-உடம்பெரிச்சல்-காங்கை - கழுத்துக்குள்நோவோடுதினவு-பிரமை-சோருதல்- பிரலாபப்பேச்சு - தாகம்-பலம் அதிகபேதி - அல்லது சொற்பபேதி - என்னும் இக்குணங்களையுண்டாக்கும். இது, சரீரமுழுவதிலும் நோவும் எரிச்சலும் உண்டாக்குவதால் ருத்தாகசந்நிபாதசுரம் எனப்பேர்பெற்றது. இதற்கு சங்கரபைரவமாத்திரை ஆதியசிகிச்சைகளும் ஆம்.

௬-வது ஜிம்மகசந்நிபாதசுரம்.

நாவுவிகுத்தலோடு முள்ளுமுள்ளா யிருத்தல்-இரைப்பு - இருமல் துர்ப்பலம்-மலசலவிபரீதம்-கழுத்துக்குளெதுவோசூசிநுழைந்தாற்போல்தோன்றி அதைத்துடைக்கவேண்டும் என்கிறநினைப்பு-காதுமந்திபம் - வாய்பேசக் கூடாமை - என்னும் இக்குணங்களையுண்டாக்கும் - இது நாவைப்பற்றியதால் ஜிம்மகசந்நிபாதசுரம் எனப்பேர்பெற்றது. இதற்குச் சித்தபைரவமாத்திரை ஆதியானசிகிச்சைகளும் ஆம்.

௭-வது பிரலாபசந்நிபாதசுரம்.

அதிகப்பிதற்றல்-உடம்பெரிச்சலுடன்மிகுவேதனை—மனோசிந்தனை முன்கால்வீங்கிநோதல்-நடுக்கல்-மாறுபாடானபுத்தி-என்னும் இக்குணங்களையுண்டாக்கும். இது நானாவிதமாகப் பிதற்றச்செய்தலால் பிரலாப சந்நிபாதசுரம் எனப்பேர்பெற்றது. இதற்குக் காருண்யபைரவமாத்திரை முதலியசிகிச்சைகளும் ஆம்.

அ-வது அந்தகசந்நிபாதசுரம்.

தாகம்-சோருதல்-தலைநோவு-விக்கல்-சரீரமுழுதும் உதறல் - எரிச்சல்-ஆயாசமயக்கம்-அக்கினிமந்தம் - இளைப்பு-உட்பிரசம்-என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.—இதுமுறைவைச் செய்வதால் அந்தக சந்நிபாதசுரம் எனப்பேர்பெற்றது. இதற்குவிஜயபைரவமாத்திரையும் ஆம்.

கூ-வது ரக்திஷ்டீவிசந்நிபாதசுரம்.

ரத்தம் ரத்தமாகக்கக்கல்-வாந்தி-தாகம்-பிரமை பேதி-அற்பசுவாசம் விக்கல்-மூர்ச்சைமயக்கம் - சரீரத்தில் அதிகாங்கையுடன்நோவு - அன்றியும் மேலெங்கும் கறுப்புக்கறுப்பாகத்தடித்தல்-ரத்தப்புடை- என்னும் இக்குணங்களையுண்டாக்கும் இதுரத்தக்கோளாறுகளைக்கக்கச்செய்யுங்காரணத்தால் ரக்திஷ்டீவிசந்நிபாதசுரம் எனப்பேர்பெற்றது. இதற்குச் சந்நிபாதபைரவமாத்திரை முதலிய சிகிச்சைகளைச்செய்யவேண்டும்.

௰-வது சித்தவிப்பிரமசந்நிபாதசுரம்.

பிரமை-சோருதல்-மதம் - உடம்பெரிச்சல் - பரியாசம்பண்ணுதல் பாடல்-ஆடல்-சரீரநோவு-சிரித்தல்-இல்லாதவைகளெல்லாம் உள்ளதுபோலிருத்தல் இரண்டுபக்க இடுப்பை அடிக்கடி பார்த்தல் - பயத்துடன் திரும்பித் திரும்பிப்பார்த்தல்-என்னும் இக்குணங்களையுண்டாக்கும். இது சித்தத்தை மயக்குவதால் சித்தவிப்பிரமசந்நிபாதசுரம் எனப்பேர்பெற்றது. இதற்கு மதனபைரவமாத்திரை ஆதியானசிகிச்சையைப்பிரயோகிக்கலாம்.

௰க-வது சீதாங்கசந்நிபாதசுரம்.

சரீரமுழுவதுமிருக்க சீதளத்தோடுநோவு-குரற்கம்மல் - அடிக்கடி ஒக்காளம்-பேதி-விக்கல்-இளைப்பு-பலவீனம் - என்னும் இக்குணங்களையுண்டாக்கும். இது சர்வாங்கத்திலும் சீதளத்தை உண்டாக்குந்தன்மையினால்-சீதாங்கசந்நிபாதசுரம் எனப்பேர்பெற்றது. இது ஆனந்தபைரவமாத்திரை முதலிய ஔஷதங்களால் வசப்படும்.

௰உ-வது கர்ணிகசந்நிபாதசுரம்.

காதின்மூலத்தில் வீக்கத்துடன் சத்தங்கேளாமை - வாய்திறக்கக் கூடாமல்-கண்டத்தைப்பிடித்துப்பிடித்தல்போலிருத்தல் - உடம்பெரிச்சலுடன் நடுக்கல்-தொண்டைநோவு-வயிறுகொதித்தல்-பேசுதல்-மார்பு இடித்தல்-இளைப்பு - இருமல் - என்னும் இக்குணங்களையுண்டாக்கும். இது காதைப்பற்றி வருங்காரணத்தால் கர்ணிக சந்நிபாதசுரம் எனப்பேர் பெற்றது. இது கல்யாணபைரவம்ஆதியானசிகிச்சையால் நீங்கும்.

௰௩-வது அபிநியாசசந்நிபாதசுரம்.

பசிநீங்குதல்-முகத்தில் பளபளப்பு - பேச்சில்லாமை - துர்ப்பலம் பஞ்சேந்திரியத்தன்மைகுறைவு-மயங்கியநித்திரை-அறிவின்மை-என்னும் இக்குணங்களை யுண்டாக்கும். இது தேகவியாபாரங்களை நீக்குதலால் அபிநியாசசந்நிபாதசுரம் எனப்பேர்பெற்றது. இதனைக் காபாலபைரவம் முதலியவற்றால் நிவிர்த்திக்கவேண்டும். மேற்கூறிய சந்நிபாதங்கள் மாதர்கட்குச் சூதககாலத்தில் கண்டால் சூதகசந்நியென்றும், கருப்ப காலத்தில் கண்டால் கருப்பசந்நியென்றும், பிரசவித்தபிறகுகண்டால் பிரசவ சந்நியென்றும், விரணத்திலுல்கண்டால் விரணசந்நியென்றும் பெயர்பெறும். அன்றியும்முகத்தில் விகாரம் உண்டானால், முகசந்நியென்றும், கைகால்களில் உதறல் உண்டானால் உதறுசந்நியென்றும், வாத பித்த சிலேஷ்மங்களின் சேஷ்டைகள் அதிகரித்தால் அவைகளின்பேர்கொண்ட சந்நிகளென்றும், அவைகளின்தொந்தகுணம் அதிகரித்தால் தொந்தசந்நியென்றும், திரிதோஷகுணம் அதிகரித்தால் திரிதோஷசந்நியென்றும், அலறி அலறியெழுந்தால் அலறுசந்நியென்றும் பலவாருகச் சொல்லுகிறார்கள்.

சந்நிபாதசுரசாத்தியாசாத்தியம்.

மூற்கூறியசந்நிபாதசுரம் பதின்மூன்றினுள், சந்திகம் தாந்திரிகம் இவ்விரண்டும் சுகசாத்தியம் - கண்டகுப்சம்கஷ்டசாத்தியம் - கர்ன்னிகம் ஜிம்மகம் இவ்விரண்டும் கஷ்டத்திலும் கஷ்டசாத்தியம்-சித்தவிப்பிரமம் சாத்தியாசாத்தியம்- ஆயினும் இந்த ஆறும் சாத்தியங்களாம். இவை தவிர்ந்த ருத்தாகம்-அந்தகம் - புக்னநேத்திரம் - ரக்திஷ்டீவி-பிரலாபம் சீதாங்கம்-அபிநியாசம் ஆகிய இவ்வேழும் அசாத்தியங்களாம். சிலநூலில் ருத்தாகம்-அந்தகம்-புக்னநேத்திரம்-கண்டகுப்சம்-ரக்திஷ்டீவி-சீதாங்கம் அபிநியாசம் ஆகிய இவ்வேழும் அசாத்தியமென்றும், சந்திகம்-தாந்திரிகம் பிரலாபம்-சித்தவிப்பிரமம்-ஜிம்மகம் கர்ன்னிகம் ஆகிய இவ்வாறும், சாத்தியமென்றும் சொல்லப்படுகின்றது.

சந்நிபாதசுரங்களின் ஆயுளாவன.

சந்திகத்துக்கு (நாள்-௭) அந்தகத்துக்கு (நாள்-௰) ருத்தாகத்துக்கு (நாள்-௨௰) சித்தவிப்பிரமத்துக்கு (நாள்-௰௮) சீதாங்கத்துக்கு(நாள்-௰௫) தாந்திரிகத்துக்கு (நாள்-௨௫) கண்டகுப்சத்துக்கு (நாள்-௰௩) கர்ன்னிகத்துக்கு (நாள்-௯௰)புக்னநேத்திரத்துக்கு(நாள்-௮)ரக்திஷ்டீவிக்கு (நாள்-௰) பிரலாபத்துக்கு (நாள்-௰௪) ஜிம்மகத்துக்கு (நாள்-௰௬) அபிநியாசத்துக்கு (நாள்-௰௫)என்றறிக. இவற்றுள், சிலசந்நிபாதசுரங்கள் உண்டானவுடனேயுங்கொல்லும். சிலநூலில் - ருத்தாகத்துக்கு-௰௨- நாளென்றும்,

சித்தவிப்பிரமத்துக்கு-உக-நாளென்றும், தாந்திரிகத்துக்கு-எ-நாள்-அல்லது-உ௫-நாளென்றும்சொல்லுகின்றது. இது தேசபேதப்பேதிப்பாம்.

மதாந்தரம்.

க-வது சந்திகசந்நிபாதசுரம்.

நெற்றியில்குத்தல் - வீக்கம் - வாதம் அதிகரித்தல் - மிகுவேதனை வியர்வை-துர்ப்பலம்-இரவில்நித்திரையின்மை-தேகம்பாரித்தலோடு சீதளம்-எரிச்சல் - ஆலசியம்-என்னும் இக்குணங்களையுண்டாக்கும். இது, சாத்தியம்.

உ-வது தாந்திரிகசந்நிபாதசுரம்.

தூக்கம்-சுரம்-கபம்-அதிகரித்தல்-தாகம்-நாவுதடித்தலுடன் மரத்து வறண்டுவிரிந்திருத்தல்-இளைப்பு-உடம்பில்கொஞ்சம்வீக்கத்துடன்நோவு ஒருவேளை அதிவேதனை-தினவு-பரிதாபம்-காதுநோவு-கண்டத்துள்தினவு உதடு உலரல்- தபித்தல் - கண்கள்கனத்து உப்பி இருப்பதுமன்றிச் சலம் பாய்தல்-என்னும் இக்குணங்களையுண்டாக்கும். இதுசாத்தியம்.

ங-வது சித்தவிப்பிரமசந்நிபாதசுரம்.

தேகம்பாரித்து நருக்கித் துவைத்ததுபோலிருத்தல் - பூரணமான சுரம்-பித்தனைப்போற்பார்க்குதல்- நகைத்தல்-பிதற்றல் - புருவமுறுக்கிக்கொள்ளல்-இளைப்பு-மேல்சுவாசம்- இடம்விட்டோடல் - பேதி-நானுவிதமானகுணத்தோடு நலிதல்-அற்பவாதம்-பித்தம் அதிகரித்தல் - என்னும் இக்குணங்களையுண்டாக்கும். இதுசாத்தியம்.

ச-வது கண்டகுப்சசந்நிபாதசுரம்.

சிரசிலும் மார்பிலும்நோவு-சோருதல்-சுரம் - காறியுமிழ்ந்தால் ரத்தம்வீழ்தல்-வாந்தி-இருமல்-விக்கல்-சரீரநோவு - தாள்பிடிப்பு - எரிச்சல் அதிவார்த்தை-தலைசுற்றல்-கழுத்துவளைதல்-ஒருவேளை சந்தோஷம்-பயம் என்னும் இக்குணங்களையுண்டாக்கும். இது கஷ்டசாத்தியம்.

௫-வது கர்ன்னிகசந்நிபாதசுரம்.

விடாத எரிச்சல்-காதுகேளாமை-உடம்பெல்லாம்நோவுடன் அசைதல்-கோட்டுவாய்-தலைநோவு-காதின்முன்பக்கத்தில் கட்டிகளெழும்புதல் அவ்விடத்தில் வீக்கம்-சத்தங்கேளாமை-பிரலாபம் நாவுவெடித்துக்கறுக்குதல்-அடிக்கடி தண்ணீர்வேண்டித்தபித்தல் - விக்கல் - என்னும் இக்குணங்களையுண்டாக்கும். இது கஷ்டசாத்தியம்.

சு-வது ஜிம்மகசந்நிபாதசுரம்.

கைகால் எரிச்சல்-உடம்பெல்லாம்நோவு-கண்கள் மூடிக்கொள்ளல் வாயில் நுரைநுரையாகவீழ்தல்-இருந்திருந்து பெருமூச்சு உண்டாகுதல் அந்தமூச்சில் அனல்வீசல்-கொஞ்சநேரம் ஊமைபோலிருக்குதல் - தேக

பாரிப்பு-சுரம்-விக்கல்-நாக்குக்கறுத்தலுடன் வெடித்தல்-தாகம்-என்னும் இக்குணங்களையுண்டாக்கும். இதுசாத்தியம்.

எ-வது ருத்தாகசந்நிபாதசுரம்.

இரைப்பு-இருமல்-உடம்புசுற்றல் - கழுத்துநரம்பு விருத்தலுடன் வேதனை-தாழ்வாய்க்கில்கள் பிடித்தலோடுநோவு-சர்வாங்கத்திலுங் குத்தலுடன்நடுக்கல்- கழுத்திலும்-நெற்றியிலும்வியர்வை-பிதற்றல் - தபித்தல் தயக்கம்-கண்டபேருடன் முறையிடல்-கிடைபொருந்தாமற்புரளல்-உதடு உலர்தல் என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.இது சாத்தியாசாத்தியம்.

அ-வது அந்தகசந்நிபாதசுரம்.

இருந்திருந்து தேகமறதி-நிமிஷத்துக்கொருதரம்தலைநடுக்கலும்கனமும் சுழலலுமுண்டாதல்- இருமல்-கைகாலசதி-பொய்ப்பிதற்றல்-பிரமை நாவறளல்-சுரம்-என்னும் இக்குணங்களையுண்டாக்கும்,இது அசாத்தியம்.

கூ-வது சீதாங்கசந்நிபாதசுரம்.

சரீரமெல்லாம் நருக்கித்துவைத்ததுபோலிருத்தல்-அதிக எரிச்சல் வாய்நீரூறல்-ஈனத்தொனி-இளைப்பு-வாந்தி - இருமல் - உள்ளோக்காளம் அசதி-அழுதல்-மூர்ச்சை-தேகம்பதைத்தல் - பிதற்றல் - புலம்பல்-அதிக வார்த்தை என்னும் இக்குணங்களையுண்டாக்கும். இது அசாத்தியம்.

ய-வது புக்னநேத்திரசந்நிபாதசுரம்.

அக்கினிபோற்சுரமதிகரித்தல்-புத்திதெளிவின்மை- இரைப்பு-கண் வளையமிட்டுச்சிமிட்டாதிருத்தல்-அன்றியும் பார்வைதோற்றுமை-சோருதல்-கூச்சல்-சர்வாங்கசீதளம்-பிரலாபம்-சரீரங்கனத்தலுடன் பதைத்தல் என்னும் இக்குணங்களையுண்டாக்கும். இது விரைவில்கொல்லும்.

யக-வது ரக்திஷ்டீவிசந்நிபாதசுரம்.

வாயில் உதிரம்வீழ்தல்-அதிகசுரம்-எரிச்சல்-சோருதல்-சூலை-வயிறுப்பிசம்-மிகுசுவாசம்-மறதி-உதடுவெடித்துக்கறுத்தல்-சரீரம்மஞ்சள்நிறமாகுதல்-தயக்கம்-நினைவழிந்துபுறண்டிக்கொள்ளல் - தலைசுழற்றல் காதுமத்திபம்-வாயுளறல்-என்னும் இக்குணங்களையுண்டாக்கும். இது அசாத்தியம்.

யஉ-வது பிரலாபசந்நிபாதசுரம்.

அதிககாங்கை-உடம்பெல்லாம் பச்சைப்புண்போல்நோதல் - ஒருவேளைநருக்கித்துவைத்ததுபோலிருத்தல்-கால்வீக்கம்-பலவேதனை-மனக்கெடுதி-மிகுந்தவார்த்தை-புலம்பல்-இருமல்-முகம்வாடல்-ரோமச்சிலிர்ப்பு அடிக்கடிவிக்கலோடுமூர்ச்சை-அலறியோடுதல்- தாபச்சுரம்-வாதம்-கபம் அதிகரித்தல்-என்னும் இக்குணங்களையுண்டாக்கும். இது சாத்தியம்.

௰௩-வது அபிந்நியாசசந்நிபாதசுரம்.

திரிதோஷமிகுதியினால் முகமானது மினுமினென்று எண்ணெய் தடவினதுபோலிருத்தல், உடம்பெல்லாம்நோவு, புத்தி தெளிவின்மை, இருமல், சுவாசம், அதிகவேதனை, மிகுதுக்கம், தேகம் அழலல், வியர்வை, நாவானது பலநிறமாக இருப்பதன்றியும் வறளல், சுரம் என்னும் இக்குணங்களையுண்டாக்கும். இதுகெடுதியைச்செய்யும்.

தாகாதிசந்நிபாதசுரோற்பத்தி.

முன்புசொல்லிய சந்நிபாதசுரங்களும் அல்லாமல், தாகபூர்வகசந்நிபாதசுரம், சீதபூர்வகசந்நிபாதசுரம் என இரண்டு உண்டென்றும் சில நூல்சொல்லுகின்றது. அதன்விவரம்:—பித்தமானது வாதசிலேஷ்மங்களைப்பார்க்கிலும் அதிகரித்து அவைகளுடன்கூடாமல் தனித்தேநிற்கும்; ஒருவேளை அப்படி இல்லாவிடில் சருமத்தைப்பற்றித் தன்குணங்களை எல்லாங்காட்டிக் காங்கையை உண்டாக்கும்: அப்போது, வாதசிலேஷ்மங்கள் கருப்பத்தில்தனித்தேநிற்கும்; ஒருவேளை அப்படி இல்லாவிடில் சீதளத்தையுண்டாக்கும். ஆகையால், முதல்முதல் எரிச்சலுடன் அதிககாங்கையானசுரம்பிறந்து உடனேசீதளம் உண்டாகும். இதுவே தாகபூர்வகசந்நிபாதசுரப்பிறப்பாம். இந்தப்பிரகாரமாகவே சருமத்தில் வாதசிலேஷ்மங்களும் கருப்பத்தில் பித்தமும்நிற்கும். அப்படி நின்றெழும்புங் காலத்தில், முதல்முதல் சீதளம் உண்டாகி, உடனே எரிச்சலுடன் அதிக காங்கையானசுரம் உண்டாகும். இதுவே சீதபூர்வகசந்நிபாதசுரப்பிறப்பாம்.

தாகபூர்வகசந்நிபாதசுரலக்ஷணம்.

தாகபூர்வக சந்நிபாதசுரத்தில், அசதியாகியசோம்பல், காறியுமிழ்தல், வாந்தி, ஆயாசம் என்னும் இக்குணங்கள் உண்டாகும். இந்தப்பிரகாரமே, சீதபூர்வகசந்நிபாதத்திற்கும் அறியவேண்டியது. இது, முதல்முதல் உண்டாகும்போது எரிச்சலைக்கொண்டுவருதலால், தாகபூர்வகசந்நிபாதசுரம் எனப்பேர்பெற்றது. தாகம் என்பது எரிச்சல். இது அசாத்தியம்.

அசாத்தியமானபோதிலும், இதற்குச் சிகிச்சாசாரம் என்னும் சாத்திரத்திற்சொல்லிய சிகிச்சையைமுறைப்படிசெய்தால், சாத்தியமானாலுமாகும்.

சீதபூர்வகசந்நிபாதசுரலக்ஷணம்.

சீதபூர்வகசந்நிபாதசுரத்தில், பித்தாதிக்கத்தினாலே கபங்கரைந்து நாசம் அடையும். இதனால், சிலேஷ்மகுணமாகியசீதளஞ் சாந்தமாகும். அது சாந்தமாகிறகாலத்தில், புளியேப்பம், மூர்ச்சை, மதம், தாகம் என்னும் இக்குணங்கள் உண்டாகும். இது, ஆரம்பத்தில் சீதளத்தைக்கொண்டுவருதலால், சீதபூர்வகசந்நிபாதசுரம் எனப்பேர்பெற்றது. இது சாத்தியம்.

இதற்குப் பூரணசந்திரோதயமாத்திரைகளும் உதவும்.

சுகசந்நிபாதசுரம்.

மந்தப்பட்டிருக்கையில் அப்பியங்கஞ்செய்து தயிருஞ்சாதமும்புசித்து சையோகம்பண்ணுவதால்பிறக்கும். இதனால், சர்வாங்கத்திலுமாவது கண்டஸ்தானத்திலாவது வியர்வை, கண்கள்சிவத்தல், சுரம், அன்னத்திவேஷம், தோஷமதிகரித்தல் என்னுமிக்குணங்களுண்டாம். இது, சையோகத்தால்வருதலால், சுகசந்நிபாதசுரம் எனப்பேர்பெற்றது.

இதற்கு லங்கனம் ஆதியான வைத்தியஞ்செய்யவேண்டும்.

சப்ததோஷபேதம்.

சுரம்பிறந்த ஒன்பதுநாள்வரைக்கும் தருணசுரமென்றுபேர். அந்தத்தருணசுரத்தில், பரிமளபோசனம், குளிர்ந்தசலம், புளிப்பு, கசப்பு, காரம், துவர்ப்பு, நெய், நல்லெண்ணெய், வெல்லம், சயித்தியபண்டம், தாம்பூலம், புதுவஸ்திரம், சிவந்தவஸ்திரம், சுகந்தபுஷ்பம், சந்தனம், பச்சைக்கருப்பூரம், கஸ்தூரிமுதலிய பரிமளதிரவியங்கள், காற்றுவீடு, பஞ்சணை, சந்திரன், சீதள உபசாரம், மாதர்களைவிருப்புடன்பார்த்தல், அவர்களால் பரிசிக்கப்படுதல், சையோகம், புத்தகம்வாசித்தல், யானை குதிரையேறுதல், அதிதூரநடை, கோபம், அழுகை, தேகம் அதிரல் என்பவைகள் அணுகில், வாதாதிகள் நாபியிற்பற்றி நாடியைக்குடிலப்படுத்தி, முகம் கண் நாசி நா என்னும் இவைகளைச்சுருக்கி வெறித்தபார்வையை உண்டாக்க தோஷம்பிரபலப்படும். அது எழுவிதப்படும். அவையாவன:—அபத்தியதோஷம் சங்கமதோஷம், விஷமதோஷம், விஷமசீததோஷம், ரக்தஜிம்மகதோஷம், பீதஜிம்மகதோஷம், கிருஷ்ணஜிம்மகதோஷமென்பவைகளாம்.

க-வது அபத்தியதோஷம்.

சோம்பல், மூர்ச்சை, பிரமை, தாகம், அதிகபிரலாபம், மார்புநோவு என்னும் இக்குணங்களையுண்டாக்கும். இது சுத்தலங்கனம் கருக்குக்கஷாயம்முதலிய சிகிச்சைக்கு வசப்படும்.

உ-வது சங்கமதோஷம்.

சையோகத்தினால்பிறந்து, சர்வாங்கநோவு, நடுக்கல், மார்பெரிச்சல், பொய்பேசல், அடிக்கடி எழுந்திருத்தல், பிரமை, உள்ளங்கை உள்ளங்கால் குளிர்ச்சி என்னும் இக்குணங்களையுண்டாக்கும். இதற்குச் சுகசந்நிபாதசுரச் சிகிச்சைகளையும் உபயோகிக்கலாம்.

ந-வது விஷமதோஷம்.

சுரம், எரிச்சல், அதிதாகம்; நாடிகுடிலத்தோடு தீவிரமாகநடக்குதல், வயிறெரிச்சல், வியர்வை, அழலை என்னும் இக்குணங்களையுண்டாக்கும். இது சப்தான்ந்தபைரவம், மாந்தக்கருக்குமுதலியவற்றால்நீங்கும்.

௪-வது விஷமசீததோஷம்.

ஒருதினத்திலேயே, இரண்டுதரம், மூன்றுதரம், அல்லதுநாலுதரம் குளிரோடுசுரத்தை யுண்டாக்குவதன்றியும், தாகம் புறண்டல், தலைநோவு, நாக்குத்தடித்து முட்போலிருத்தல், பிரலாபம், சித்தப்பிரமை, புரளல் என்னும் இக்குணங்களையுண்டாக்கும். இதற்குக் கோரோசன மாத்திரை முதலிய சிகிச்சைகள் நன்றாம்.

௫-வது பீதஜிம்மகதோஷம்.

நாக்கு மஞ்சள்நிறமாகவெடித்து ஈரமில்லாமல் முட்போலிருத்தல், சுரம், பிரமை, வியர்வை, மூர்ச்சை, தொண்டைக்கம்மல், வெருட்சி, நடுக்கல் என்னும் இக்குணங்களையுண்டாக்கும். இதற்குச்சித்தாக்கினிக் குமார மாத்திரை ஆதியான சிகிச்சைகளைச் செய்யவேண்டும்.

௬-வது ரக்தஜிம்மகதோஷம்.

நாக்குசிவந்து முட்போன்று கொஞ்சம் நீண்டிருக்குதல், சுரம், தாகம், எரிச்சல் என்னும் இக்குணங்களையுண்டாக்கும். இதற்கு உத்கமாக்கினிக் குமாரமாத்திரைகளும் உதவும்.

௭-வது கிஷ்ணஜிம்மகதோஷம்.

நாக்குக்கறுத்து வறண்டு முட்போலிருத்தல், அடிக்கடி எழுந்திருத்தல், சித்தப்பிரமை, வயிறுப்பிசம், தினவு, வியர்வை, தாகம், சோபம், அழலை, துடிப்பு, கை கால் அசதி, சரீரங்கறுத்தல் என்னும் இக்குணங்களையுண்டாக்கும். இது திவ்வியாக்கினிகுமாரமாத்திரையால சாத்தியமாம்.

இந்தத்தோஷம் ஈறாகச்சொல்லிய சப்ததோஷங்களும், ஏழுநாள் அல்லது பதினைந்துநாள்சென்றால், சாத்தியப்படும்.

மதாந்தரமுற்றியது.

ஆகந்துகசுரம்.

அபிகாதசுரத்துக்கும், அபிஷங்கசுரத்துக்கும், சாபச்சுரத்துக்கும், அபிசாரசுரத்துக்கும், ஆகந்துகமெனப்பெயராம். ஆகந்துகம் என்பது அருந்துகின்ற அறுசுவை வருக்கங்களின் காரணமில்லாமல்வருவதாம்.

௧-வது அபிகாதசுரம்.

குத்துக் காயம் முதலிய விரணங்களினாலும், அக்கினியிடத்திருந்து நடத்துந்தொழிலினாலும், அதிநடையினாலும், பயிரிடுதல்முதலிய உழைப்பினாலும்பிறக்கும். இதனால், முதல்முதல் உடம்பில்வாய்வானது நீக்கமற நிறைந்து அதிகரித்து ரத்தத்தைவேதனையுடன்கெடுத்து; வாயுலரல், தேகநிறக்கெடுதி, சர்வாங்கநோவு என்னுமிக்குணங்களையுண்டாக்கி மேலிடும்.

இது, அதிக உழைப்பினால்வருதலால், அபிகாதசுரமெனப் பேர்பெற்றது.
இதனைப் போசனோபசாரமுதலிய சாந்தச்சிகிச்சைகளால் நீக்கவும்.

உ-வது சாபச்சுரம்.

அதிகோரமாயும் சந்நிபாதகுணங்களாயும் பொறுக்கக் கூடாமையாயும் இருக்கும். இதனால்,மனது தபித்தல்,தேக எரிச்சல்,தாகம்,மூர்ச்சை, உடம்பெங்குங்கொப்புளம், பிரமை, அதிகசுரம் என்னும் இக்குணங்கள் உண்டாகி நாளுக்குநாள் அதிகரிக்கும். இது, பெரியோர்கள் சபித்தலினாலுண்டாதலால், சாபச்சுரமெனப் பேர்பெற்றது. இது யதீஸ்வர பூசை அன்னதானம் முதலிய நற்செய்கைகளினால் நிவிர்த்தியாம்.

௩-வது அபிசாரசுரம்.

அதர்வணவேத மாரணமந்திரங்களைக்கொண்டு ஒருவன்பெயரைச் சொல்லி ஓமஞ்செய்தலினாற்பிறந்து, ஆச்சரியமானகொப்புளங்கள், மனது தபித்தல், தாகம் என்னும் இக்குணங்களை யுண்டாக்குவதன்றியும், சாபச்சுரக்குணங்களையும் உண்டாக்கும் இது, ஓமாகுதிகளால்பிறப்பதால், அபிசாரசுரம் எனப்பேர்பெற்றது. இதுவும் சாபச்சுரமும்கொடிது.
இது மணிமந்திர அவுஷதாதிகளால் நீங்கும்.

௪-வது அபிஷங்கசுரம்.

பூதாவேசசுரம், அவுஷதகந்தசுரம், விஷசுரம், கோபச்சுரம், பயச்சுரம், துக்கச்சுரம், காமச்சுரம் ஆகிய இவ்வேழுக்கும், அபிஷங்கம் என்று பெயராம். அபிஷங்கம் என்பது சேர்க்கை.

க-வது பூதாவேசசுரம்.

காரணமின்றிகாரணமின்றிநகைப்பு,அழுதல், அதிகசுரம்,குமரகண்டவலியைப்போலிழுத்தல்,கண்ணையுருட்டிவிழித்தல்,சரீரங்கறுக்குதல்,பிரலாபம்,அதிதிண்டி, சகலவஸ்துக்களிலும்அபேக்ஷை,பாடல்,ஆடல்,உரோமச்சிலிர்ப்பு, நித்திரை என்னும் இக்குணங்களையுண்டாக்கும். அப்போது வாதமும் பித்தமும் சிலேஷ்மமும் அதிகரித்திருக்கும். அன்றியும், எரிச்சல், நளிர், தலைநோவு, கண்சிவத்தல், வாந்தி, விக்கல், சுவாசம்,பலவீனம், ஏப்பம், கொட்டாவி, சிரமை, மனோவேதனை, தொடை முழங்கால்பாதம் வரைக்கும் வியர்வை, ஒருவேளை சர்வாங்கசீதளம், ஈனத்தொனி, பேதி என்னும் இக்குணங்களையும் உண்டாக்கு மென்பாருமுளர். இதனைப்பைசாசசுரமெனச்சொல்வர். இது புகைமுதலியசிகிச்சைகளினால்விடும்.

உ-வது அவுஷதகந்தசுரம்.

ரசம்,கந்தகம்,பாஷாணம்,சேங்கொட்டை முதலியவைகளின்வேகத்தால்பிறந்து; மூர்ச்சை, தலைநோவு, தேகவீக்கம், தும்மல்,அதிகசுரம் என்னும் இக்குணங்களையுண்டாக்கும். அப்போது திரிதோஷங்களும் அதிகரித்திருக்கும். இதற்குவிஷப் பிரதிவிஷச்சிகிச்சைகள் பொருந்தும்.

௩-வது விஷசுரம்.

மூர்ச்சை, பேதி, முகம்கறுத்தல், எரிச்சல், மார்புநோவு, அதிகசுரம் என்னும் இக்குணங்களையுண்டாக்கும்; அப்போது, வாதமும், பித்தமும், கபமும் அதிகரித்திருக்கும். இதற்குமஹாவசந்தகுசுமாகரம்நன்றும்.

௪-வது கோபச்சுரம்.

தலைநோவு, அதிகசுரம், உடம்புபதைத்தல் என்னும் இக்குணங்களையுண்டாக்கும். அப்போது பித்தமே அதிகரித்திருக்கும். இதற்குக்கோபந்தணியச்செய்வதும் அன்றி பித்தாரி அவுஷதங்களும் உதவும்.

௫-வது பயச்சுரம்.

புலம்பல், நடுக்கல், சுரம், அடிக்கடிபயப்படல்என்னும், இக்குணங்களையுண்டாக்கும். அப்போது, வாதமாத்திரம் அதிகரித்திருக்கும். அன்றியும், அதிகவார்த்தை, வியர்வை, மிகு எரிச்சல், கண்கள்சிவத்தல், பலஹீனம், சிரசிலும் கண்ணிலும்நோவு, துர்ப்பாஷை, அசனத்திலிச்சை, நித்திரைப்பங்கம், தலைசுழலல், சுவாசம், சூலை, தேகம் நருக்கித்துவைத்ததுபோலிருத்தல், ரோமச்சிலிர்ப்பு, சயித்தியம், வாய்வினால் மார்பிலும் இடுப்பிலும் தடிப்பு, பற்கடித்தல் முதலியகுணங்களையும் உண்டாக்கும் என்பாருமுளர்.

௬-வது துக்கசுரம்.

வாயில்வந்தபிரகாரம் பிதற்றல், அதிகசுரம், அழுதல் என்னும் இக்குணங்களையுண்டாக்கும். அப்போதுவாதமாத்திரம் அதிகரித்திருக்கும்.

௭-வது காமச்சுரம்.

வெட்கம், நித்திரை, புத்தி, தயிரியம் ஆகிய இவைகளைக்கெடுத்து: மோகம், எரிச்சல், அருசி, அதிகசுரம் என்னும் இக்குணங்களையுண்டாக்கும். அப்போது, வாதமாத்திரம் அதிகரித்திருக்கும்; அன்றியும், ஆண்குறி, தொப்புளின்கீழ்ஸ்தானம், தனங்களின்கீழ்ஸ்தானம், புருவம், நெற்றி ஆகிய இவ்விடங்களில் எரிச்சல், சையோகத்திலிச்சை, நாட்டியஞ்செய்ய நினைவு, கெம்பீரம், சரீரபலம், அதிகதாகம், கண்சிவத்தல், அடிக்கடி அசனத்திலிச்சை, புன்சிரிப்பு, நித்திரைப்பங்கம் என்னுமிக்குணங்களையுமுண்டாக்குமென்பாருமுளர். இந்தக்காமச்சுரத்திற்கும், மேற்சொல்லிய பயச்சுரத்திற்கும், துக்கச்சுரத்திற்கும், வாதாரி அவுஷதங்களைக்கொண்டு வைத்தியஞ்செய்வதும் அன்றி, இதுகள் உற்பத்திக்குக் காரணமானதுகளையும் சாந்தப்படுத்தவேண்டும். இந்த ஏழுவகைச்சுரங்களும், சாரீரசுரம், மானஸிகசுரம் என்னும் இருவகைக்குள் அடங்கும்.

சந்ததாதிசுரபேதம்.

சந்ததாதிசுரமானது, திரிதோஷபலாபலங்களினாலும், ஆறுருதுகாலபேதபலாபலங்களினாலும் பிறக்கும். இது, சந்ததசுரம், சததசுரம்,

அந்நியேத்துகசுரம், துவியாகிகசுரம், திரியாகிகசுரம், சாதுர்த்திகசுரம், என ஆறுவிதப்படும்.

க-வது சந்ததசுரலக்ஷணம்.

தேகத்தில் அன்னரசத்தைத் தாங்கிக்கொண்டிருக்கும் நரம்புகள் அந்த ரசசேஷசமீபத்தில் வாயைத்திறந்திருப்பதால், முன்புபரிசுத்தப் படாமலொளித்திருக்கும் சுரமானது சர்வாங்கத்திலும் வியாபித்து உள்ளவேகாயும். இது, உள்ளில்மாறுது காய்வதால் சந்ததசுரமெனப் பேர்பெற்றது. அன்றியும், பகலும் இரவும் காய்வது சந்ததசுரமெனச்சிலர்சொல்வர்.

உ-வது சததசுரலக்ஷணம்.

முற்கூறிய சந்ததசுரந்தானே அபத்தியத்தினுல் விபரீதசுரமாம். அந்த விபரீதசுர ஆரம்பத்தில் விஷமகுணம்பிறந்தால் விஷமசுரமாம். அதுக்குத்தகுந்தவைத்தியம் பண்ணுவிடில், அது ரத்ததாதுவைப்பற்றிச் சததசுரமாகும். இது, அல்லும்பகலுமாறுமல் மேலெங்கும் காய்வதால், சததசுரமெனப் பேர்பெற்றது; அன்றியும், பகலிலொருதரமும் இரவிலொருதரமும் வருவது சததசுரமென்றும், இதனுல் அதிக கூச்சலுடன், தூர்ப்பாஷை, தலைதிருப்பல், அதிதிண்டி என்னுமிக்குணங்களுண்டென்றும் சிலர்சொல்வர்.

௩-வது அந்நியேத்துகசுரலக்ஷணம்.

முற்கூறிய சததசுரத்தில் அபத்தியம் உண்டாகில், அது மறுநாளும் அப்படியேகாயும்: அப்போது வாதம் அதிகரித்தலினுல், அந்தச்சுரமானது மாமிசதாதுவைப்பற்றிக்கொண்டு, இரண்டுநாள்விடாமல்காய்ந்து இரண்டுநாள் விட்டிருந்து, மறுபடியும் அப்படியேகாயும். இது, மறுநாளில் வருவதால் * அந்நியேத்துகசுரமென்றும், இரண்டாம்நாளில்வருவதால் துவியாகிகசுரமென்றும் பேர்பெற்றது. அன்றியும், ஒருதினத்துக்கு ஒருதரம்வருவது அந்நியேத்துகசுரமென்றும், இதனுல், மிகுசீதளம், தேக எரிச்சல், ஏப்பம் புருவவேதனை, கை கால் எரிச்சல், அநித்திரை, தூர்ப்பலம், நுரைத்தமலம், ஒருவேளை உள்ளங்கால் உள்ளங்கைகுளிர்ச்சி என்னும் இக்குணங்களுண்டென்றும் சிலர் சொல்வர்.

௪-வது திரியாகிகசுரலக்ஷணம்.

முற்கூறிய அந்நியேத்துகசுரத்தில் அபத்தியம் உண்டாகில், வாதம் அதிகரித்துச் சுரத்தோடுங்கூடி மேதோதாதுவைப்பற்றும்; அப்படிப்பற்றிய வாதத்தில் பித்தமுங்கூடினுல், அந்தச்சுரம்சிரசைப்பற்றும்; அந்தப் பித்தத்தில்சிலேஷ்மமுங்கூடினுல், அந்தச்சுரம்திரிகஸ்தானத்தைப்பற்றும்,

* அந்நியேத்துகம் என்பது மறுநாள்.

முன்வாதத்தில் சிலேஷ்மமுங்கூடினல், அந்தச்சுரம் பின்னிடுப்பைப் பற்றும். ப்பஇடிப்பற்றியசுரமானது,வாதாதிதொந்தங்களினல் முன்சொன்ன ஸ்தானங்களைவிட்டுத் திரும்பிவருவதற்கு ஒருநாளெல்லாஞ் செல்லும்; ஆகையால், சுரம்காய்ந்தநாளுக்கு மறுநாளில்லாமல், மூன்ருநாளில் வந்து வந்து போராடும். இதுமூன்ருநாளில் வருவதால் திரியாகிக சுரமெனப் பேர் பெற்றது. அன்றியும், இதனல், அதிகசீதளம், முகமும் தேகமு மதிரல், வருத்தம், சரீரசுட்கம், கண்ணில்நீர்பாய்தல், அக்கினிமந்தம், அரோசகம், கீல்கள்மரத்தல், அசீரணம், புழுக்கைபோல்மலம்வீழ்தல், அன்னத்திவேஷம் என்னும் இக்குணங்களுண்டாகு மென்பாருமுளர்.

அகிகம் என்பது நாள்.

ரு-வது சாதுர்த்திகசுரலக்ஷணம்.

முற்கூறிய திரியாகிகசுரத்தில் அபத்தியம் உண்டாகில், மேதோதாதுவைப்பற்றிநின்ற வாதமானது மச்சாதாதுவுக்கு இடமான அஸ்திதாதுவைப்பற்றும்; அப்படிப்பற்றிகொண்டசுரம்முன்போலவே சிரசைப் பற்றிய வாதத்தினின்றும் ஊர்த்துவாங்கத்தைக்கடந்து, அதோங்கத்தில் கணுக்கால்மட்டும் சிலேஷ்மத்தால் வியாபித்து மூன்றுநாள் விட்டிருந்து நாலாநாள் வந்துவந்து போராடும். இது, நாலாநாளில்வருவதால், சாதுர்த்திகசுரமெனப்பேர்பெற்றது. அன்றியும், இதனல் முதலில்,அதிககாங்கை, சீதளம், அதிகசோஷை,சரீரசுட்கல், தலைக்குத்தல், ஏப்பம், உள்ளங்கால் உள்ளங்கைக்குளிர்ச்சி, அக்கினிமந்தம், அரோசகம், அன்னத்திவேஷம், அசீரணம் என்னும் இக்குணங்களுண்டாகுமென்பாருமுளர். இது கஷ்டசாத்தியம். இப்படியிருக்க முன்புமேதோதாதுவைப்பற்றிநின்ற, வாய்வு மச்சாதாதுவைப்பற்றியபோதே சாதுர்த்திகசுரம் ஆகுமென்பாருமுளர்.

சு-வது சாதுர்த்திகவிபரீதசுரலக்ஷணம்.

முற்கூறிய அஸ்திதாதுவிலும் மச்சாதாதுவிலும் அந்தவாயுவு பிரவேசிக்க உண்டானசுரம் மூன்றுநாளாவது இரண்டுநாளாவதுகாயும்;அல்லது ஒருநாள் காய்ந்துநீங்கிவிட்டாலும்விடும். இது சாதுர்த்திகவிபரீதசுரமென்றும், பஞ்சாகிகசுரமென்றும் சொல்லப்படும். அன்றியும், எந்தச்சுரமாவது நாலாநாள் பகலிலில்லாதிருந்து இரவில்காணுமாகில், இதுவே சாதுர்த்திகசுரமென்றும், பஞ்சாகிகசுரமென்றும் : இதனல் வாதசிலேஷ்மத்துடன்மிகுகுளிர் ஐந்தாநாள்மாறிவருதல், ஆயாசம், கபாதிக்கம், அநித்திரை, சரீரசுட்கல், ஈனத்தொனி, நடுக்கல், கண்சிவத்தல், வேதனை, குத்தல், உள்ளெரிச்சல், தலைதிருப்பல், அக்கினிமந்தம், அன்னத்திவேஷம், அந்தர்த்தாகம், அசீரணம், வீக்கம்,சூலை என்னும் இக்குணங்களும உண்டாகுமென்றும் சிலர்சொல்வர். இதனைசீதசுரம், நளிர்ச்சுரம், குளிர்ச்சுரம், முறைக்காய்ச்சல் எனவும் வழங்குகிருர்கள். வாதசுரம் ஆதியாகச்

சந்ததாதிசுரம்௬ருகச்சொல்லிய(23)சுரங்களுமுற்றுப்பெற்றனவென்றறிக.

இந்தச்சந்ததாதி யென்னும் ஆறுவகைச்சுரங்களுக்கும், நிம்பசூரணோதகமும், பற்பாடகக்குவாதமும், தாளகேஸ்வரமாத்திரையும், ஆரநாளத்தயிலமுதலியசிகிச்சைகளும்உதவும். ஆனால்தேகத்தைநிதானிக்கவும்.

சாரீராதிசுரபேதம்.

சாரீரசுரம், மானஸிகசுரம், சௌமியசுரம், தீக்ஷணசுரம், உட்சுரம் வெளிச்சுரம், பிராகிருதசுரம், வைகிருதசுரம், சாத்தியசுரம், அசாத்திய சுரம், சாமச்சுரம், நிராமச்சுரம் எனப்பனிரண்டு விதப்படும்.

க-வது சாரீரசுரம்.

ஆரம்பத்தில் சரீரத்தில்தபித்தலை உண்டாக்கி, பிறகு சுரத்தினது குணத்தையெல்லாம் உண்டாக்கும். இது, ஆதியில் சரீரத்தைப்பற்றி வருங்காரணத்தால், சாரீரசுரமெனப் பேர்பெற்றது.

உ-வது மானஸிகசுரம்.

முதலில் மனத்தைத்தபிக்கப்பண்ணி, பிறகு சுரக்குணங்களை உண்டாக்கும். இது, மனதைப்பற்றியதால், மானஸிகசுரமெனப்பேர்பெற்றது.

௩-வது சௌமியசுரம்.

முதல் முதல் பித்தமும் சிலேஷ்மமும் தொந்தித்து, பின்பு வாத சிலேஷ்மத்தோடு கூடுவதால்பிறக்கும். இதனால் சீதளமீறிச்சரீமெல்லாம் எரிச்சல் எழும்பிப் பிறகுசுரக்குணமெல்லாம் உண்டாகும். இது,முதலில் சாந்தமாகப்பிறப்பதால், சௌமியசுரமெனப்பேர்பெற்றது. அன்றியும், வியர்வை, பலவீனம், வாந்தி, விக்கல், வீக்கம், இருமல், இளைப்பு, கபாதிக்கம், தலைசுழலல், மார்புநோவு, நாடியுள்ளடங்கல்,கண்சிவத்தல், நாக்கு சிவப்போடு முள்ளைப்போலிருத்தல், நித்திரைப்பங்கம் என்னும் இக்குணங்களு முண்டாகுமென்பாருமுளர்.

௪-வது தீக்ஷணசுரம்.

பித்தமானது, வாதகபங்களுடன் சேராமல், அவ்விரண்டைப்பார்க்கிலும் அதிகரித்துச்சருமத்தைப்பற்றி, அதிதீக்ஷமான வெப்பத்தையுண்டாக்க, கருப்பத்திலிருந்த வாதகபங்கள் நடுக்கலையும்சீதளத்தையும் உண்டாக்கப்பிறந்து; கோரமான சுரரூபங்களையெல்லாம் உண்டாக்கும். இது, முதலில் அதிக உக்கிரமாகவருதலால், தீக்ஷணசுரம் எனப்பேர்பெற்றது.

௫-வது உட்சுரம்.

சிலேஷ்மமும் பித்தமும் தொந்தித்துநிற்கையில் வாதமானதுவயிற்றுக்குள் அடங்குவதால்பிறக்கும். இதனால், வயிற்றில் அதிகசங்கடம், மலபந்தமுதலியவிகாரமுண்டாகிப் பிறகுசுரக்குணமெல்லாம் உண்டாகும்.

௬-வது வெளிச்சுரம்.

சப்ததாதுக்களைப்பற்றாமல் சருமத்தின்மேலேயே குபீலென்றுகண்டு பின்னுஞ்சிலநேரத்தில் தோஷமொன்றும் இல்லாமலேபோய்விடும். இது, சருமத்தைப்பற்றியதால், வெளிச்சுரம் எனப்பேர்பெற்றது.

எ-வது பிராகிருதசுரலக்ஷணம்.

வருஷருதுகாலமாகிய ஆவணி புரட்டாசிமாதத்தில், வாதம் அதிகரித்து வாதசுரம்போலவேகாணும். சரருதுகாலமாகிய ஐப்பசி கார்த்திகைமாதத்தில், பித்தம் அதிகரித்துப் பித்தசுரம்போலவே காணும். வசந்தருதுகாலமாகிய சித்திரை வைகாசிமாதத்தில், கபம் அதிகரித்துச்சிலேஷ்மசுரம்போலவேகாணும். இப்படிகண்டாலும், இவைகளைப் பிராகிருதசுரமென்றே நிதானிக்கவேண்டும். இம்மூன்றில், வாதசுரம் கஷ்டத்தின் மேல்சாத்தியம்.

அ-வது வைகிருதசுரலக்ஷணம்.

சிசிரருதுகாலமாகிய மாசி பங்குனிமாதத்தில், வாதம் அதிகரித்து வாதசுரம்போலவேகாணும். கிரீஷ்மருதுகாலமாகிய ஆனி ஆடிமாதத்தில் பித்தம் அதிகரித்துப் பித்தசுரம்போலவேகாணும். ஏமந்தருதுகாலமாகிய மார்கழி தைமாதத்தில், சிலேஷ்மம் அதிகரித்துச்சிலேஷ்ம சுரம்போலவே காணும். இப்படிகண்டாலும், இவைகளைவைகிருதசுரமென்றே நிதானிக்க வேண்டும். இந்தமூன்றுசுரமும் மிகவுங்கஷ்டசாத்தியம்.

௯-வது சாத்தியசுரலக்ஷணம்.

வருஷருதுகாலத்தில், வாதம் அதிகரித்து, சரருதுகாலத்தில் அதிகரித்த பித்தத்தோடும், கிரீஷ்மருதுகாலத்தில் அடங்கிய சிலேஷ்மத்தோடும் கூடி, சுரத்தையுண்டாக்கும். இப்படிவாதத்தாற்பிறந்த பிராகிருத சுரத்திற்கு, பித்தசிலேஷ்மங்கள் உபபலமாயிருக்கும். சரருதுகாலத்தில் அதிகரித்தபித்தமானது சுரத்தையுண்டாக்கும். அந்தப்பித்தத்தாற்பிறந்த பிராகிருதசுரத்திற்கு, வாதசிலேஷ்மங்கள் உபபலமாயிருக்கும். அந்தப்பிராகிருத வாதபித்தசுரங்களுடைய சுபாவகுணத்தினாலும், ருதுகாலபலங்களினாலும், அந்தச்சுரரோகிக்கு லங்கநத்தால்பயமில்லையென்றறிக. வசந்தகாலத்தில் அதிகரித்த சிலேஷ்மம் சுரத்தையுண்டாக்கும். அந்தச்சிலேஷ்மத்தாற்பிறந்த பிராகிருதசுரத்திற்குக் கிரீஷ்ம ருதுகாலத்தில் க்ஷீணமான வாதமும், அதின்சமீபத்தில் அடங்கியபித்தமும் உபபலமாயிருக்கும். இப்படியே வைகிருதசுரத்திற்கும் அறியவேண்டியது. ஆயினும், ருதுபேதங்களின் உபபலத்தினால்வாதபித்தசிலேஷ்மங்கள் அதிகரித்து, அவைகளின் சுரங்களைப்போலவே பலத்திருந்தாலும், அவைகளிற்பிறக்கும் குணங்களும், மிருதாகமும், மகாநித்திரையும், சந்நிபாதங்களின்குணங்களும் இல்லாதிருந்தால் சாத்தியம்.

௰-வது அசாத்தியசுரலக்ஷணம்.

சப்ததாதுவிலும்பிரவேசித்துநெடுநாளாகியும் நீங்காமல் பிரலாபம், பிரமை, சுவாசம் என்னும் இக்குணங்களை யுண்டாக்கியசுரமும்: கொஞ் சம்வீக்கம், இளைத்தல், மந்தாக்கினி, வாய்குளறல், மார்புநோவு, கண்சிவத் தல் இவைகளையுண்டாக்கியசுரமும்: காலைமாலையிலும்சுடுகையுடன்பொடி யிருமலை உண்டாக்கியசுரமும்: தேகபலத்தையும் மாமிசத்தையும் குறைத் துக் கோழைவிழும்படி இருமலையுண்டாக்கியசுரமும் அசாத்தியம்.

௰௧-வது சாமச்சுரம்.

சுரங்களுக்குக்காணவேண்டிய இரைப்பு, மூர்ச்சை, பிரமை, ஒக்கா ளம், தாகம், பேதி, கொட்டாவி, விக்கல், சரீரவேதனை, மலபந்தம் ஆகிய இப்பத்துரூபங்களையும் அதிகமாகப்பிறப்பித்து: பின்னும், இளைப்பின்மை, அடிக்கடிநீரிறங்கல், மலபந்தம் அல்லது அக்கினிமந்தம், அசீரணபேதி என்னும் இக்குணங்களையுண்டாக்கும். அன்றியும், அதிகசீதம் விழ்தல், வயிற்றுநோவு, துர்ப்பலம், நடுக்கல், தாகம், இளைப்பு, தலைதிருப்பல், கை கால்குளிர்ச்சி, இருமல், உப்பிசம், கபாதிக்கம், நித்திரைப்பங்கம், கண்களில் சலம்வடிதல் என்னும் இக்குணங்களையு முண்டாக்கு மென்பாருமுளர். இது, ஆமத்துடன்கூடுவதால், சாமச்சுரம் எனப்பேர்பெற்றது.

௰௨-வது நிராமச்சுரம்.

அதிகாங்கை, அடிக்கடிதாகம், பிரலாபம், பெருமூச்சு, பிரமை, மிகு பேதி, மனோவியாகுலம் என்னும் இக்குணங்களையுண்டாக்கும். இது: ஆமாசயக்கெடுதியால் அருந்தும் அசனம் சீரணியாமல்காணுவதால், நிரா மச்சுரம் எனப்பேர்பெற்றது. இது ஏழுலங்கனம்போட்டால்முன்புசொன்ன துர்க்குணங்கள்மாறிச் சீரணசத்தியுண்டாகிச் சாத்தியப்படும். அன்றியும், சுவாசம், இருமல், வாதகபங்கூடியசுரம், துர்ப்பலம், காந்தியீனம், சிரோ பாரம், தேகஞ்சுருங்கல், கண்டத்திலும் நெற்றியிலும்வியர்வை, கண்சிவத் தல், நாவறளல் என்னுமிக்குணங்களையும் உண்டாக்கு மென்பாருமுளர். இது, நித்தியமும், தயிர், அதிகபானம், விஷத்தையொத்தவஸ்துக்கள், தாவர விஷம், பாஷாணம், அபினி, கருப்பூரம், நாபி என்னும் இவைகளைப்புசித் தல், அகால அப்பியங்கம், சீதள்ஸ்நானம், போசனவிகற்பம், சதாசந்தன புஷ்பங்களைத்தரித்தல், நிதம் முக்காதம்நாற்காதநடக்குதல், கல்லடிபடுதல், பகற்காலம் மாலைக்காலம் விடியற்காலங்களில்புணர்ச்சி, நித்தியசையோகம், போசனாந்தத்தில்நித்திரை என்னும் இச்செய்கைகளினால் பிறக்கும்.

இந்தச்சாரீராதி பனிரெண்டுசுரங்களுக்கும், ஏலக்காய்த்தோல் கஷாய மும் பலாமடக்குத்தயிலமுதலிய சிகிச்சைகளும் உதவும்.

முச்சியமானசுரம்.

நெட்டுயிர்ப்பு, வியர்வை, பிதற்றல், வாந்தி, புரளல், நடுக்கல், பெருங் கூச்சல், தேகம்சில்லிட்டுநிறமாறுதல், சுரவேகத்தினுல்வருத்தம், ஞாபக மறதி, கோபப்பார்வை, ஆசனத்திலிரைச்சல், விரைவில் சலஞ்சலமாகப் பேதி என்னுமிக்குணங்களை யுண்டாக்கும். இது, வாதாதிதோஷமானது சப்ததாதுக்களையும் கலங்கப்பண்ண உண்டாகியசுரம்விடுகிறதருணத்தில் ஷை குணங்களெல்லாம் பிறப்பதால், முச்சியமானசுரம் எனப்பேர் பெற் றது. முச்சியமானம் என்பது விட்டுவருதலாம்.

விஷமசுரம்.

ரோகாதிகளின்விஷமத்தினுல்சுரமானதுநெடுநாளாகி, உள்ளுக்குள் ளேவிஷமித்தால், மும்மூன்று நாட்களுக்கொவ்வொரு தாதுக்களைப்பற்றி, ரசதாதுகதசுரம், ரக்ததாதுகதசுரம், மாமிசதாதுகதசுரம், மேதோதாது கதசுரம், அஸ்திதாதுகதசுரம், மச்சாதாதுகதசுரம், சுக்கிலதாது கதசுரம் என ஏழுபிரிவாகிப் பலத்துக்கொண்டு, வனத்திற்பெருந்தீ விழுந்து தகிப் பதுபோல் ரோகியைத்தகிக்கும். மேற்கூறியசுரமானது, ரசதாதுவைப் பற்றி ஏழுநாளைக்குமேல் ரத்ததாதுவிலும், இருபத்தொருநாளுக்குமேல் மாமிசதாதுவிலும், இரண்டுமாதத்துக்குமேல்மேதோதாதுவிலும், ஐந்து மாதத்துக்குமேல் அஸ்திதாதுவிலும், இரண்டுவருஷத்துக்குமேல் மச்சா தாதுவிலும், மூன்றுவருஷத்துக்குமேல் சுக்கிலதாதுவிலும் வியாபிக்கு மென்று சிலநூலிற்சொல்லப்படுகின்றன.

க-வது ரசதாதுகதசுரம்.

வாயிற்சலமூறல், அதயிரியம், உடம்பெல்லாம் நோவுடன்கனத்தல், பெருங்கொட்டாவி, அரோசகம், வாந்தி, முகவிகாரம், பலவீனம், ரோமச் சிலிர்ப்பு என்னும் இக்குணங்களையுண்டாக்கும். அன்றியும், அதிக எரிச் சல், மிகுதாகம், நித்திரைப்பங்கம், பிரமை, இரைப்பு, தலைவலி, சுவாசம், கபாதிக்கம், கண்டத்தில்வியர்வையுடன்சீதளம், நாடிவேகமாகநடக்குதல், ஈனத்தொனி, நாவுவறளலுடன் முட்போலிருத்தல் என்னும் இக்குணங் களையு முண்டாக்கு மென்பாருமுளர்.

உ-வது ரத்ததாதுகதசுரம்.

உமிழ்நீரில்ரத்தம்வீழ்தல், தாகம், உடம்பெங்குஞ் சிவந்ததடிப்பு, எரிச்சல், தேகம்சிவத்தல், பிரமை, மதம், பிரலாபம், இரண்டுநெறியும் இடித்தல், கீல்களெல்லாம்நோவுதல், வியர்வை, சரீரமெல்லாம்நோவுடன் கன்றுதல், மூர்ச்சை, நாக்குவழுவழுப்புடன் மஞ்சள்நிறமாயிருத்தல், நெஞ் சிற்கபாதிக்கம், நித்திரை, மலபந்தம் என்னுமிக்குணங்களை யுண்டாக்கும். அன்றியும், சீதளம், சோருதல், தலைபுரட்டல், துர்ப்பலம், அவயவங்கள்

சுருங்கல், நேத்திரங்களிற்சலம்வடிதல், மார்பெரிச்சல், தேகநருக்கித் துவைத்ததுபோலிருத்தல், உள்ளங்கை உள்ளங்காலெரிச்சல், பேதியுடன் சீதக்கழிச்சல், உடம்புகிறுகிறென்றுசுழலல், சிரோபாரம், ஆடல் என்னும் இக்குணங்களையு முண்டாக்குமென்பாருமுளர்.

ந-வது மாமிசதாதுகதசுரம்.

தாகம், இளைப்பு, உள்ளெரிச்சல், பிரமை, கண்ணில் இருள்கம்மலுடன் நீர்க்கம்மல், வாய்நாற்றம், அசதியால்கைகால்களைத் தூக்கிப்போடுதல், சரீரத்தில் எதுவோபூசினதுபோல்வறவறப்பாகவிருப்பதுமன்றி உலரல், பதைத்தல், நோதல், மினுமினுப்பு, வயிறுப்பிசத்துடன்நோவு, சுவாசம், வியர்வை, உதடு உலரல், ஆலாபித்தல், புளகித்தல், ரோமச்சிலிர்ப்பு, மனந்தடுமாறல் என்னும் இக்குணங்களையுண்டாக்கும். அன்றியும், சீதளம், வீக்கம், துர்ப்பலம், ஈனத்தொனி, ஏப்பம், வாந்தி, கொட்டாவி, விக்கல், வாதாதிக்கம், நாவுகசத்தல் என்னும் இக்குணங்களையு முண்டாக்குமென்பாருமுளர்.

ச-வது மேதோதாதுகதசுரம்.

மாமிசதாதுகதசுரகுணத்தையெல்லாமுண்டாக்கும். அன்றியும், பரிமளத்தி லசங்கிதம், சிரசில்மிகுகுத்தல், தலைபுரட்டல், நடுக்கல், கண்ணோவுடன்சலம்வடிதல், அக்கினிமந்தம், சலம்சாப்பிட்டால் சீரணமாகாமை, அன்னத்திவேஷம் என்னும்இக்குணங்களையுமுண்டாக்குமென்பாருமுளர்.

ரு-வது அஸ்திதாதுகதசுரம்.

ரத்தநரம்பு சன்னநரம்பு எலும்பு கீல் இவைகளில்நோவு, விக்கல், கள்ளச்சுரம், சரீரம்வெளுத்துப்பஞ்சைப்போல்மெலிவதுமன்றி எரிச்சல், ஒருவேளைசீதளம், அடிவயிறுநோவு, வேகமானபேதி என்னும் இக்குணங்களையுண்டாக்கும். அன்றியும், அவயவங்கள்சுருங்கல், துர்ப்பலம், சர்வாங்க வீக்கம், காந்தியீனம், எழுந்திருக்கப்பிரயாசை, தலைதிருப்பலுடன்நோவு, கண்களில் மஞ்சள்வன்னம், கைகால்நகங்களில் ரத்தம்வற்றியுப்பல், அக்கினிமந்தம், அன்னத்திவேஷம், அசீரணம், அரோசகம், ஏப்பம், வாந்தி, சுவாசம் என்னுமிக்குணங்களையு முண்டாக்குமென்பாருமுளர்.

சா-வது மச்சாதாதுகதசுரம்.

தோஷாதிக்கம், மேல்மூச்சு, கீழ்மூச்சு, கண்டத்தில் குறுகுறுவென்னுஞ்சத்தம், உள்ளில் எரிச்சல், வெளியிற்குளிர்ச்சி, விக்கல், இருமல், பிரமை, தேகஞ்சுட்கித்தலுடன்நோவு, பிராணவாயுவும் அபானவாயுவும் ஸ்தம்பித்தல் என்னும் இக்குணங்களையுண்டாக்கும். அன்றியும், துர்ப்பலம், தொடையின்கீழும் முழந்தாளின்கீழும்வேதனை, தலை முகம் கண் இவைகளில் நடுக்கல், காந்தியீனம், ஏப்பம், கசப்பானவாந்தி, அதிசாரம்,

ஈனத்தொனி, மூர்ச்சை, வயிறுப்பிசம், அக்கினிமந்தம், அன்னத்திவேஷம், அசீரணம், கொட்டாவி, மறதி என்னுமிக்குணங்களையுமுண்டாக்குமென்பாருமுளர்.

எ-வது சுக்கிலதாதுகதசுரம்.

கண்களிலிருள் கம்மல்: * மர்மஸ்தானமாகிய, புருவம், உச்சி, கண்டம், மார்பு, மார்புக்குங்கீழ், உந்தி, உதடு, பீசம், முழங்கால், கணுக்கால், இடுப்பு, காலின்பெருவிரல், சுட்டுவிரல், தோள், இப்பதினுன்குஸ்தானங்களிலும் நோதல்; ஆண்குறிசுருங்கல், இந்திரியச்சீரணம், அதிகநித்திரை, பிரலாபம், ஞாபகமறதி என்னும் இக்குணங்களையுண்டாக்கும். அன்றியும் அவயவங்கள்சுட்கித்தல், ஈனத்தொனி, தலைதிருப்பல், பல்நோவு, ஏப்பம், விக்கல், அசீரணம், அரோசகம், பேதி, இருமல், சுவாசம், பிரமை, சர்வாங்கவெளிறலுடன் வீக்கம், தடித்தல், வாந்தி, நடுக்கல், நித்திரைப்பங்கம், சோஷை, அன்னத்திவேஷம், அக்கினிமந்தம், வாய்தித்திப்பு, முகத்தில்வியர்வை, கால்கை குளிர்ச்சி என்னுமிக்குணங்களையுமுண்டாக்குமென்பாருமுளர். மேற்சொல்லிவந்த சப்ததாதுக்குள், ரசம், ரத்தம், மாமிசம், மேதை அஸ்திஎன்னும் இவைகளைப்பற்றியசுரமானது, ஒன்றுக்கொன்று கஷ்டசாத்தியமாக உயரும். ஒருவேளை கஷ்டசாத்தியத்திலும் கஷ்டசாத்தியமாகிறதுமுண்டு. இதல்லாமல், மச்சையையும் சுக்கிலத்தையும் பற்றிய சுரமானது தப்பாமற்கொல்லும்.

இவைநிற்க, சிந்தாமணி என்னும்சாஸ்திரத்தில், சருமதாதுகதசுரம் ஒன்று அதிகமாகச் சொல்லுகின்றது. அதனை இதன் அடியிற்காண்க.

சருமதாதுகதசுரம்.

சரீரத்தின்மேல் காய்தல், நாடிகுடிலப்பட்டு மந்தமாகநடத்தல், தலைநோவு, சலத்தில் விருப்புடன்தாகம், தேகம்வெளிறல், எரிச்சல், பிரமையாகப்பேசல், வாய்நீரூறல், மயக்கம் என்னும் இக்குணங்களையுண்டாக்கும். இதுதோலைப்பற்றிவருதலால் சருமதாதுகதசுரமெனப்பேர் பெற்றது.

மேற்சொல்லிவந்தரசதாதுமுதல்ஏழுதாதுவையும்பற்றிச்சரீரத்தை மிகவும் துர்ப்பலமாக்கிய சுரங்களுக்கெல்லாம் பலவிதச் சிகிச்சைகள் இருந்தபோதிலும், அசுவகந்திபலாலாக்ஷாதித் தைலமுதலிய அரக்குச் சேர்ந்த தைலச்சிகிச்சைகள் முக்கியமாம்.

இனி அசாத்தியசுரலக்ஷணம்.

மேற்கூறியவாதசுரம்ஆதியான சுரங்களையுடையரோகிகட்கு, தேக நடுக்கலுடன்நோவு, மேல்மூச்சு, மூர்ச்சை, சற்றுநேரத்துக் கொருக்கால் இளைப்பு, மார்புநோவு, கண்ணில்நோவுடன் குத்தல், முகம்குங்குமம்போற்

* மூன்று மூன்று முடிச்சுகளுள்ள நரம்புஸ்தானங்களை மர்மஸ்தானங்கள் என்றுகூறினும் அமையும்.

சிவத்தல், உசுவாசநிசுவாசம், கழுத்துகுறுகுதல் அல்லது நீளுதல்; இரவில் எரிச்சல், பகலில்குளிர்ச்சி, நாவுகறுத்தல் அல்லதுசிவத்தல், ஆசனம் வெளிப்படல், ஈனத்தொனி, சிலேஷ்மநாடி அதிகவேகமாக நடக்குதல் என்னும் இக்குணங்களிருந்தாலும்; சுவாசஞ்சில்லிடல், வாயினுல் குமீ ரொன்றுவருஞ் சுவாசமாத்திரம் சுடுதல், மார்பு உந்தி மூக்கு உள்ளங்கை உள்ளங்கால் ஆகிய இவ்வைந்து இடங்களில் மிகு குளிர்ச்சி, சிரசுமாத்திரம் அக்கினிபோற்சுடுதல் என்னும் இக்குணங்களிருந்தாலும்; வாதநாடி பித்தநாடியிற்சேர்ந்தும், பித்தநாடி சிலேஷ்மநாடியிற் சேர்ந்தும், சிலேஷ்மநாடிகண்டஸ்தானத்திற் சேர்ந்தும் குடிலமாகநடந்தாலும்; தேகமுழுதுங்குளிர்ச்சி, மேல்சுவாசம், இரண்டுதொடைக்கவட்டியிலும் வீக்கம், அசவுக்கியம் என்னும் இக்குணங்களிருந்தாலும்; விரோதமாகிய அபத்தியவஸ்துக்களில் அடிக்கடி மிகுந்தவிச்சையிருந்தாலும்; ராத்திரிகாலத்தில் சரீரமுழுதுமெரிச்சலும், பகற்காலத்திற்குளிர்ச்சியும், கண்டத்தில் சிலேஷ்மநிறைவுமுண்டாயிருந்தாலும்; மார்புநோவு, நாசி கை கால் ஆகிய இம்மூன்றிடங்களில் குளிர்ச்சி, தலைநோவு என்னும் இக்குணங்களிருந்தாலும்; சர்வாங்கநோவும், நடைதத்தளித்தலும், தேகநிறக்குறைவும், வாசனைபங்கமு முண்டா யிருந்தாலும்; தன்முகத்தைத்தன்கையினுலடிக்கடி தடவிப்பார்த்தல், முழங்காலிரண்டையுஞ் சேர்த்துச்சேர்த்துத்தட்டுதல், பாதமிரண்டையுந் தூக்கித்தூக்கிப் பூமியிலடிக்கடியடிக்குதல் என்னும் இக்குணங்களிருந்தாலும்; சுரமேலிடுதல், ரோமங்களெல்லாமுறைத்தல், சிறுநீர்குழம்பாயிறங்கல், அடிக்கடி அதிகநகைப்பு, இருந்திருந்துகூக்குரல்செய்தல், தன்படுக்கையைக் காலினுலடிக்கடிதட்டுதல், அபத்தியவஸ்துக்களைக் கொண்டுவரும்படி தொந்தரவுசெய்தல், வறட்டிருமல், நகங்களையும் மயிர்முனைகளையுந்துரும்புகளையும்பல்லினுல்கடித்தல், ஒருவோட்டின்மேல் மற்றொரு ஓட்டைவைத்து அடித்துக்கொண்டிருக்குதல், நிலத்தில் துரும்பைக்கொண்டெழுதுதல் என்னும் இக்குணங்க ளிருந்தாலும்; ரோகங்கள் சம்பவித்து உடனே அதிகதுர்ப்பலமாக்கிவிட்டாலும்; வைத்தியன் அவுஷதங்கொடுக்க எத்தனிக்கும்போது நினைத்த அவுஷதாதிகள் கிடைக்காவிட்டாலும்; இன்ன ரோகத்துக்கு இன்ன அவுஷதமென்று சொல்லிய சாஸ்திரவிதியாகவும் கைகண்டமுறையாகவுமிருக்கின்ற அவுஷதத்தை மனப்பூர்த்தியாகக்கொடுத்தும் பிடியாவிட்டாலும்; அவுஷதம் பண்ணும்போது அந்தஅவுஷதத்தின்நிறமும்பரிமளமும்கெடுதியானுலும்; தைலாதிகிருதங்கள்செய்யும்போது அவைகள் அதிகமாகச்சீறிக் கொதித்தாலும்; அப்பாத்திரம்வெடித்தாலும் அசாத்தியக்குறிகளென்றே நிதானிக்கவேண்டும். மேற்கண்டதுர்க்குணவிகாரமெல்லாம்நாளுக்குநாள் அதிகரித்து நற்குணங்களெல்லா மாறுபட்டிருக்கையில் அவைகட்கு வைத்தி

யஞ்செய்ய எண்ணங்கொள்ளும் பித்தனுக்கு வேறுவைத்தியன் உலகத்தில் இல்லவேயில்லை.

இளைப்பிருமலுடன்தேகமிகவும்சுட்கித்துவாத நாடிபலவீனப்பட்டு ஈனத்தொனியுண்டாகி வெகுநாளாகியும் அப்படியே யிருக்குமாயின், அதற்குவைத்தியம் பண்ணக்கூடாது. ஆயினும், காலவேற்றுமையினால் சாத்தியம்போலிருந்து அசாத்தியமாகிறதும், அசாத்தியம்போ லிருந்து சாத்தியமாகிறதும்உண்டென்பதினாலும்,எதுவரையிலும்கண்டத்தில்பிராணனும், தேகத்தில் இந்திரியவியாபாரங்களும் இருக்கின்றதுகளோ அதுவரையிலும் அவைகள்நீங்கியபின்பும் வைத்தியம்பண்ணச்சொல்லி முன்னோர்கள்வாக்கியங்களிருப்பதினாலும், அவைகளைநம்பி வைத்தியஞ் செய்யத்துணிந்த வைத்தியன், இது அசாத்தியமென்றுமுதலில் தெரியப்படுத்தி, பின்பு வைத்தியஞ்செய்யவேண்டும் என்பதுமத்திமபக்ஷமாம்.

முற்கூறிய அசாத்திய ரோகிகட்கு வைத்தியன்கைபார்த்துக் குணாகுணங்களையறியுங் காலத்தில், தான் அறிந்தவிதங்களை அந்தரோகிகளின் பந்துசனங்களுக்குஞ் சொல்லக்கூடாது. மிஞ்சிச்சொன்னால், அந்தரோகி திகிலடைவதுமன்றி அவனுக்குநடத்துகின்ற வுபசாரங்களு மட்டிடும். ஆகையால், அந்தவைத்தியத்தை ஒப்புக்கொள்ளவுங்கூடாது. ஒருவேளை துணிந்து ஒப்புக்கொண்டு மருந்துரைக்கவெத்தனித்தால், அந்த மருந்துகளின் வீரியங்களெல்லாம் அந்தரோகிகட்கு அக்காலத்தில் பிரத்தியக்ஷமான யமதூதர்களாலும் பசாசுகளாலும் கெடுமென்றறிக.

இனி சுரத்தின் தசாவஸ்தைநிதானம்.

௧-வது, கொஞ்சம் ஞாபகமிருக்குதல்; ௨-வது,முன்னிறந்தவர்களைக் கண்ணிற்கண்டு பேசுதல்போலிருத்தல்; ௩-வது, சித்தப்பிரமையாகுதல்; ௪-வது, மேல்மூச்சுவாங்குதல் ; ௫-வது, விழித்தவிழி விழித்ததுபோலிருக்குதல் ; ௬-வது, வேற்றுக்குரலுண்டாகுதல் ; ௭-வது, சரீரமுழுவது மரணஎரிச்சலெழும்புதல்; ௮-வது, தன்கையினால் முகத்தைத்தடவிக் கொள்ளுதல் ; ௯ வது, சரீரமுழுவதும் சிலேஷ்மவியர்வை காணுதல்; ௰-வது, தேகத்தைவிட்டு ஆவியானது நீங்குதலென்றறிக.

இப்பத்தவஸ்தைக்குள், மூன்றாவதவஸ்தைவரைக்கும் வைத்தியஞ் செய்யலாமென்பது தன்வந்தரியார் கருத்து. சிலநூலில் ஒன்பதாவதவஸ்தைவரைக்கும் வைத்தியஞ் செய்யலாமென்று சொல்லுகின்றது.

அசாத்தியசுரவிதி முற்றியது.

இனி சாத்தியசுரலக்ஷணம்.

முற்கூறிய சுரரோகிகட்குக் கண் பார்வை சரீரம் பஞ்சேந்திரியம் என்னும் இவைகள் சுபாவமாக இருந்தாலும், மனதுசாந்தத்துடன் இளைக்

காதிருந்தாலும், இரண்டு உள்ளங்கைகளும், இரண்டு உள்ளங்கால்களும் அதிகூடுபிறந்து கொஞ்சந்தாகம் உண்டாகி நாவில்துவளலோடு சலமிருந்தாலும், சரீரத்தில் வியர்வையில்லாமலே சுரங்கண்டு அந்தச்சுரம்விட்ட பின்பு இளைப்பும், உப்பிசமும், இருமலும் உண்டாகி அந்த இருமலினால் கண்டத்தில் கபங்கட்டிக்கோழைவெளிப்படாத சுகுணம் இருந்தாலும், ராக்காலத்தில் அயர்ந்தநித்திரையும், எழுந்திருந்தாலு முட்கார்ந்தாலும் சரீரங்கனத்தலின்றிச்சுலுவு உண்டாயிருந்தாலும், தேடியுங்கிடையாத மூலிகைமுதலிய அவுதஷங்கள் எளிதில்கிடைத்தாலும் சாத்தியமென்றறிக.

வைத்தியன் தைலகிருதங்கள் காய்ச்சும்போது அவைகளில் உண்டாகியகொதியானது சதங்கையோசையையொத்துக் கலகலத்து அமர்ந்த சத்தத்தோடு கொதித்தாலும், அவைகள் சுண்டிவரும்போது பரிமளம் உண்டாயிருந்தாலும் சுகசாத்தியக்குறிகளென்றே நிதானிக்கவேண்டும்.

சுரசாத்தியவிதி முற்றியது.

விட்டசுரலக்ஷணம்.

எந்தச்சுரரோகிக்காவனுலும்எப்பதார்த்தங்களிலும்வீண்அபேக்ஷை, சரீர எரிச்சல், களைத்தல், முகதுர்க்கந்தம், அங்கவேதனை, மனச்சஞ்சலம் இவைகளில்லாமல்; தேகத்தில்சுலுவு, பஞ்சேந்திரியசுபாவம், வியர்வை, தும்மல், பசியுடன் அன்னத்தில் மிகுந்த இச்சை, சிரசில்நமைச்சல் என்னும் இக்குணங்களிருக்குமாகில், சுரம் விட்டதென்றறியவும்.

இவைநிற்க, சிலஆயுள்வேதியர் சுரரோகத்தை அறுபத்து நான்கு விதமாகவும் சொல்வர். அவையாவன:—வாதசுரம், பித்தசுரம், சிலேஷ்மசுரம், வாதபித்தசுரம், வாதசிலேஷ்மசுரம், பித்தசிலேஷ்மசுரம், சந்நிபாதசுரம், பூதசுரம், கோபச்சுரம், அபிசாரசுரம், பயச்சுரம், பைசாசசுரம், காமச்சுரம், விஷமசுரம், ஆமச்சுரம் அல்லது சாமச்சுரம், நிராமச்சுரம், ரசதாதுகதசுரம், ரத்ததாதுகதசுரம், மாமிசதாதுகதசுரம், மேதோதாதுகதசுரம், அஸ்திதாதுகதசுரம், மச்சாதாதுகதசுரம், சுக்கிலதாதுகதசுரம், ஏகாகிகசுரம், துவியாகிகசுரம், திரியாகிகசுரம், சாதுர்த்திகசுரம், பஞ்சாகிகசுரம், தெய்வப்பிரகோபச்சுரம், காந்தர்வசுரம், தாந்திரிகசுரம், மூர்ச்சைச்சுரம், பிரலாபசுரம், சீதசுரம், வியர்வைச்சுரம், கிருமிச்சுரம், அரித்திராசுரம், உதயசுரம், மத்தியானசுரம், மாலைச்சுரம், நிசிசுரம், சோஷைச்சுரம், தாபச்சுரம், விரணச்சுரம், ஆதபச்சுரம், ஈனத்தொனிச்சுரம், அக்கினிமந்தச்சுரம், ஏப்பச்சுரம், வாந்திச்சுரம், கொட்டாவிச்சுரம், விக்கல்சுரம், அநித்திரைச்சுரம், காசசுரம், சுட்கசுரம், புராணசுரம், பக்ஷசுரம், மாதச்சுரம், வருஷசுரம், பிடகசுரம், போடகசுரம், கம்பச்சுரம்,

சோபைச்சுரம்,ஆநாகசுரம்,திரிகாலசுரமென்பவையாம்.இவற்றுள்,வாதசுர மாதியாகப் பஞ்சாகிகசுரமீறாகச்சொல்லிய(உஅ)சுரங்களும்முற்கூறியசுரத் தொகை(உஎசு)ல் அடங்கலால், இவைதவிர மற்றச்சுரங்களைக்கூறப்படும்.

உசு-வது தெய்வப்பிரகோபசுரம்.

தெய்வகுற்றத்தினால் பிறந்து, சயித்தியம், சிரோபாரம், வியர்வை, சர்வாங்கசீதளம்,ஏப்பம்,விக்கல்,தலைதிருப்பல்,சடத்துவம், சூலை என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.

கூ0-வது காந்தர்வசுரம்.

சர்வாங்கமும்சுருங்கல், பலவீனம், அற்பசூலை, கண்களில் மஞ்சள் நிறத்துடன்சலம்வடிதல்,பரியாசம் பண்ணல்,பாடல்,தலைவலி,சடத்துவம், சர்வ சந்திஸ்தானங்களும் அசையக் கூடாமை, எழுந்தாற் சுற்றுதல், ஆலசியம், மதிப்பிரமை, கோபம், பசியில்லாமை, பெருமூச்சு,சயித்தியம், அடிக்கடிமூர்ச்சை, சர்வாங்க வீக்கம், கனவில் விந்துநஷ்டம், ஏப்பம், விக்கல், அடிக்கடிநீரிறங்கல் என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.

கூக-வது தாந்திரிகசுரம்.

உடம்புசுழன்றுவருதலுடன், நோவு, பிரலாபம், பலவீனம், நெற்றி யிலுங்கழுத்திலும்வியர்வை, நாடிசூட்சுமம் அல்லது அதிகவேகம் என்னு மிக்குணங்களையுண்டாக்கும்.

கூஉ-வது மூர்ச்சைச்சுரம்.

மூர்ச்சை, பலவீனம், தலைபுரட்டல்,பேதி,பிரலாபம்,மிகுவார்த்தை, வாதாதிக்கம்,சோஷை, சூலை, ஒருவேளை பேசாமலிருத்தல், ஈனத்தொனி, வாயிற்கசப்பு,சுவாசம்,சீதளம்,கண்சிவந்து நீர்க்கம்மல்,கை கால் குளிர்ச்சி, ரத்தமூத்திரம் என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.

கூகூ-வது பிரலாபசுரம்.

பிரமை, சர்வாங்கம்வெளிறல், வாழைத்தண்டைப்போற் சீதளம், நகங்களில் உதிரமின்மை,நாக்குமஞ்சள்வன்னத்துடன்முட்போலிருத்தல், நெஞ்சு நோவு, நித்திரைப் பங்கம், கழுத்திலும் நெற்றியிலும் வியர்வை என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.

கூச-வது சீதசுரம்.

கபாதிக்கம், வியர்வை, பலவீனம், வாந்தி, விக்கல், வீக்கம்,இருமல், இரைப்பு, தலைசுழற்றல், மார்புநோவு, நாடியுள்ளடங்கல், கண்சிவத்தல், நாக்கு சிவப்போடு முட்போலிருத்தல், நித்திரைப்பங்கம் என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.

௬௫-வது வியர்வைச்சுரம்.

மிகுவியர்வை,கபாதிக்கம்,அதிவார்த்தை,துர்ப்பாஷை,தேகஞ்சுற்றல் போலிருத்தல், குன்றல், அற்பசுரம், தலைதிருப்பல், சுவாசம், மூர்ச்சை, சிரமை, பிரமை, நாவுமுட்போலிருத்தல், விகாரம், வேதனை, ஏப்பம், விக்கல்,வயிறுப்பல், தலையிலுங் காதிலும்நோவு, சோருதல், கை காலில் மஞ்சள்வன்னம், தலையில்சதாவேதனை,நாடியானது சூட்சுமத்திலும் வேகமானநடை, ஒருவேளை சபலநடை என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.

௬௬-வது கிருமிச்சுரம்.

வயிற்றில்மிகுசூலை, உப்பிசம், கனத்தல், ஏப்பம், வாந்தி, இரைப்பு, தேகபுழுக்கம்,சர்வாங்கசீதளம், விக்கல், தலைசுழற்றல்,மூர்ச்சை,சோஷை, துர்ப்பலம், வாயினாலும் அபானத்தினாலும் ௨௰, ௬௰, ௪௰, ௫௰, ௱, ௨௱, ௬௱, ௪௱, அல்லது ௫௱ பூச்சிகள்விழுதல், அக்கினிமந்தம், நித்திரைப்பங்கம், மனோதுக்கம் என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.

௬௭-வது அரித்திராசுரம்.

சர்வாங்கத்திலும் மஞ்சள்வன்னத்துடன்தடிப்பு,சயித்தியம்,சடத்துவம், முகத்தில் எண்ணெய்தடவினதுபோல பிசுபிசித்தல், நகங்களிலும் கண்களிலும்நோவு,கீல்களில்வீக்கம்,ஏப்பம், கொட்டாவி,விக்கல்,கைகால் குளிர்ச்சி,சிரோபாரம்,தலைதிருப்பல், நாவுகசத்தல், தாகம்,நெஞ்சுலர்தல், மார்பெரிச்சல், அக்கினிமந்தம், மலபந்தம்,பலவீனம்,அரோசகம், வாயில் நுரைவீழ்தல், அதிபேச்சு என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.

௬௮-வது உதயசுரம்.

உதயகாலத்திற்பிறந்து,தாகம்,தேகநருக்கித்துவைத்ததுபோல்நோவு கொட்டாவி, ஏப்பம், அக்கினிமந்தம், நாவுகசத்தல்,பிரலாபம்,மிகுபேச்சு, உள்ளங்கை உள்ளங்கால்சில்லிடல் என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.

௬௯-வது மத்தியானசுரம்.

மத்தியானகாலத்திற்பிறந்து, தாகம், சோருதல், நெஞ்சுலர்தல், நாவறளல், கண்டத்திலும் நெற்றியிலும்வியர்வை, உமிழ்நீர் சிவத்தலுடன் துர்க்கந்தம், மூர்ச்சை, விக்கல், அதிவருத்தம், தினவு, அதிகவார்த்தை, அதிமூத்திரம்,துர்ப்பலம்,ஏப்பம்,கொட்டாவி,தலையில்நோவுடன் நடுக்கல், அதிசீதளம் என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.

௭௰-வது மாலைச்சுரம்.

மாலைக்காலத்திற்பிறந்து, குளிர், சோபம், தாகம், பிரலாபம்,மலபந்தம், வயிறுப்பல், விக்கல், கொட்டாவி, தலைவலி, வாய்கசப்பு, வாந்தி என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.

சக-வது நிசிசுரம்.

பாதிராத்திரிகாலத்திற்பிறந்து, அதிககுளிர்ச்சி, வியர்வை, தாகம், தேகம்சுற்றல்போலிருத்தல், பிரலாபம், துர்ப்பலம், தலையிலும் காதிலும் இரைச்சல், நித்திரைபங்கம், மிகுதாகம், கைகால்குளிர்ச்சி, பேதி, அதிமூத்திரம் என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.

சஉ-வது சோஷைச்சுரம்.

சோஷை, தபித்தல், மூர்ச்சை, பிரலாபம், அதிவேதனை, கண்களிற்புகைகம்மலுடன் சலம்வடிதல், தேகஞ்சில்லிடல், வயிற்றிலுப்பலுடன் நோவு, சுட்கித்தல், அடிக்கடிமிகுமூத்திரம், ரோமச்சிலிர்ப்பு, அக்கினிமந்தம், சுவாசம், படுக்கைபொருந்தாமை, வாந்தி, வாயும் நாவும் உலர்ந்து சிவத்தல் என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.

சங-வது தாபச்சுரம்.

அதிக எரிச்சல்,மிகுசீதளம்,நீரருந்தினும் நாவுலரல்,மார்பெரிச்சல், நித்திரைப்பங்கம், பிரலாபம், பலவீனம், சுவாசம், சீதாதிக்கம், அக்கினிமந்தம், அதிவேதனை என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.

சச-வது விரணசுரம்.

ரணங்களினாற்பிறந்து, அதிசூலையுடன் சர்வாங்கநோவு, சயித்தியம், தலைவலி, சுவாசம், துர்ப்பலம், நித்திரைப்பங்கம்,பிரமை, சரீரமிளைத்தல், அரோசகம்,வாய்கசப்பு,நெற்றியும் காதும் வறட்டல், கண்ணோவு,நடுக்கல், கால் கை குளிர்ச்சி என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.

சரு-வது ஆதபச்சுரம்.

சித்திரை, வைகாசி, ஆனி,ஆடி ஆகிய இந்நான்குமாதங்களின்வெய்யிலில் உதயமுதலிரண்டுசாமம்வரைக்கும் நிற்காமல் வழிநடப்பதினால் பிறந்து: எரிச்சல், பிரலாபம், அதிகவேதனை,பல்நோவு,தாகம், சோருதல், தலைவலி,முகத்தில்குங்குமவன்னம்,வாயுலரல்,பேதி,தலைசுழலல்,அடிக்கடி நித்திரை, பிரமை, மார்படைப்பு, கால் கை நடுக்கல், கண்களில் சலம் வடிதல் என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.

சசு-வது ஈனத்தொனிச்சுரம்.

ஈனத்தொனி, சோருதல், பிரலாபம், வியர்வை, சர்வாங்கசீதளம், நருக்கித்துவைத்ததுபோலிருத்தல்,நடுக்கல், கருநிறம், சூலை, அதிகவுபாதி சடத்துவம்,நாவு முள்போலிருத்தல்,வாயில்கசப்பானநுரை,அறிவின்மை, நாடிசூட்சமத்திலும் வேகநடை என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.

சஎ-வது அக்னிமந்தச்சுரம்.

ஏழுநாள் பத்துநாள் பசி தாகமின்மை,துர்ப்பலம், தேகத்தில்நிறக்குறைவுடன் எரிச்சல், சுட்கல், மலபந்தம், சிலவேளைதாகம், தலைவலி,இருமல், இளைப்பு, அன்னத்துவேஷம், அரோசகம், ஏப்பம், வாந்தி, விக்கல்,

வாய்கசத்தல், இந்திரியநஷ்டம், முகம்வாடல், கை கால் நோவு என்னும் இக்குணங்களையுண்டாக்கும். அன்றியும், சிலநாளைக்குள் நானுவிதசுரம், விஷம சந்நிபாதம், மசூரிசம்பந்தமான வியாதி, பேதி, வாந்தி, அழுகை என்னும் இக்குணங்களையுமுண்டாக்கும்.

௪௮-வது ஏப்பசுரம்.

ஏப்பம், வாந்தி, மார்பெரிச்சல், தலைவலி, தாகம், நெஞ்சுலர்தல், தேகத்தைத்திருப்பல்போலிருத்தல், பிரமை, தலைநமைச்சலுடன்நடுக்கல், மந்தாக்கினி, மலபந்தம், தலைக்குத்தல், கண்களில்நோவுடன் நீர்வடிதல் என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.

௪௯-வது வாந்திச்சுரம்.

புளித்தரத்தவாந்தி, தபித்தல், மார்பில் தீப்பட்டதுபோலெரிச்சல், கண்டத்திலும் நெற்றியிலும்வியர்வை, பேதியிற் சீதம்வீழ்தல், சதா தாகம், துர்ப்பலம், கை கால் குளிர்ச்சி, உடம்பெல்லாந்துவைத்ததுபோலிருத்தல், நிறக்குறைவு, இந்திரியநஷ்டம் என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.

௫௰-வது கொட்டாவிச்சுரம்.

மிகுகொட்டாவி, விக்கல், சீதளம், வயிறுப்பல், அக்கினிமந்தம், சர்வாங்கத்திலும் சயித்தியவியர்வை, கசப்புப்புளிப்பானவாந்தி, தலையிலுங் காதிலும்நோவுடன் இரைச்சல், இருந்திருந்துதேகம்நடுக்கல், அதிதாகம், நித்திரைப்பங்கம், பல்நோவு, தேகந்தடித்தல், ஈனவார்த்தை, தலைசுழலல் நெஞ்சிற்கபாதிக்கம் என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.

௫௧-வது விக்கல்சுரம்.

அதிகவிக்கல், வாதமும் சிலேஷ்மமும் அதிகரித்தல், வியர்வை, மந்தாக்கினி, தாகம், மூர்ச்சை, வாந்தி, மேற்சுவாசம், துர்ப்பலம், பிரலாபம், பேதி, நித்திரைப்பங்கம், சிரோபாரம், மார்பெரிச்சல், கீல்களில் நோவு என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.

௫௨-வது அநித்திரைச்சுரம்.

நித்திரையின்மை, தேகவெரிச்சல், தாகம், மயக்கம், தலைதிருப்பல், நாவும்வாயுமுலரல், மேற்சுவாசம், சீதளம் அதிகரித்தல், மிகுகூச்சல், அடித்தொடைச் சதையும் முழங்காற் சதையும்நோவு, ஈனத் தொனியான வார்த்தை, சதா இருமல், மூர்ச்சை என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.

௫௩-வது காசசுரம்.

சதா இருமல், சிவந்தும் நுரைத்தும் வெளுத்தும் நானுவிதமாகிய கோழைவிழல், தாகம், மூர்ச்சை, வியர்வை, சிரமை, பிரமை, ஏப்பம், வாந்தி, தலைதிருப்பல், நடுக்கல், துர்ப்பலம், ஈனத்தொனி, தலையிலும் கண்ணிலும் எரிச்சல், வயிற்றுநோவு, பேதி, கொட்டாவி, விக்கல் என்னும் இக்குணங்களையுண்டாக்கும். காசம் என்பது இருமல்.

௫௪-வது சுட்கசுரம்.

தேகமுலரல், அதிகவெப்பம், எரிச்சல், சிரசிலும் கண்ணிலும்நோவு, சீதளம், வியர்வை, பிரலாபம், பல்நோவு, சவம்போற்கிடத்தல், சரீரம்நருக்கித் துவைத்ததுபோலிருத்தல், அக்கினிமந்தம், ரோமச்சிலிர்ப்பு, அநித்திரை, சோம்பல், துர்ப்பாஷை, கோபம் என்னு மிக்குணங்களை யுண்டாக்கும்.

௫௫-வது புராணசுரம்.

தேகஞ்சுட்கித்தல், துர்ப்பலம், இருமல், கபாதிக்கம், தலைதிருப்பல், சூலை, அக்கினிமந்தம், அன்னத்திவேஷம், அசீரணம், அரோசகம், விந்து நஷ்டம், சோஷை, சர்வாங்கவியர்வை, சிலேஷ்மமும் வாதமுங்குறைதல் என்னும் இக்குணங்களை யுண்டாக்கி நெடுநாளாகியும் நீங்காதிருக்கும். இதுவே பழஞ்சுரமாம். இது தைலங்களால் நீங்கும்.

௫௬-வது பக்ஷாந்திரசுரம்.

பக்ஷத்துக்கொருதரம்பிறந்து, சீதத்துடன்வெப்பம், தாகம்; புத்தியில் ஒன்றுந் தோன்றாமை, தலைநோவு, அசீரணம், அரோசகம், இருமல், காமாலை, துர்ப்பலம், சரீரம்வெளிறல், வீக்கம் அல்லதுசுட்கல், சத்துவக் குறைவு, மாறுவன்னம் என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.

௫௭-வது மாதச்சுரம்.

மாதத்துக்கொருதரம்பிறந்து; சுரக்குணங்களை யெல்லாம் ஒருங்கே உண்டாக்கும். இதுக்குப் பிறைக்காய்ச்சலென்றும் ஒருபேருண்டு.

௫௮-வது வருஷசுரம்.

வருஷத்துக்கொருதரம்பிறந்து சுரக்குணங்களை யுண்டாக்கும்.

௫௯-வது பிடகசுரம்

சர்வாங்கத்திலுங்கடுகைப்போற் சிறிதாகவும்பெரிதாகவும் கட்டிகள் எழும்புதல், எரிச்சல், தாகம், சோருதல், தலைதிருப்பல், வியர்வை, நாவு உலர்ந்துமுட்போலிருத்தல், பிரலாபம், நித்திரைப்பங்கம், அதிகவார்த்தை கண்களில்வேதனை, வாயால்நுரைவீழல், ஈனத்தொனி, சயித்தியம், நடுக்கல், தொடையிலும் முழங்காலிலும் நோவு, ஏப்பம், வாந்தி, விக்கல் என்னும் இக்குணங்களையுண்டாக்கும். பிடகம் என்பது கட்டி.

௬௰-வது போடகசுரம்.

பயறுபிரமாணமாகச் சரீரமுழுவதிலும் விஸ்போடகமெழும்பல், தாகம், பிரலாபம், அதிகவேதனை, தேகம் எரிச்சலுடன்பதறல், சிலவேளை மார்பெரிச்சல், பலவீனம், எழுந்திருக்கக்கூடாமை, படுக்கைபொருந் தாமை, வயிறுநோவு, பேதி, சுவாசம், நிறக்குறைவு, ஆசியம், பாடல், நித்திரைப்பங்கம், கண்சிவத்தல், நாடிசூக்ஷமமாக நடக்குதல் என்னும் இக்குணங்களையுண்டாக்கும். போடகம் என்பது சிறுகொப்புளம்.

௬௧-வது கம்பச்சுரம்.

நடுக்கல், சர்வாங்கசீதளம், வியர்வை, கொட்டாவி, தலைப்பாரம், அருசி, கண்ணிற் சலம்பெருகல், தாகம், சோருதல், தலைப்புரட்டல், சுவாசம், அதிகவேதனை, துர்ப்பலம், கூச்சல், வாயிலும் நாவிலுங் கொப்புளமெழும்புதல், நித்திரைப்பங்கம், பேதி, ஏப்பம், புளித்தவாந்தி, சடத்துவம், சீல்களில்நோவு, நாடி சூக்ஷுமமாகவும் வேகமாகவும் நடக்குதல் என்னும் இக்குணங்களையுண்டாக்கும். கம்பம் என்பது நடுக்கல்.

௬௨-வது சோபைச்சுரம்.

கீல்களில்வீக்கம், அதிகசீதளம், சூலை, தலையிலும், நெற்றியிலும் நோவு, காதிரைச்சல், துர்ப்பலம், வாந்தி, விக்கல், ரோமச்சிலிர்ப்பு, மூர்ச்சை, எரிச்சல், கால் கை கொதித்தல், மார்படைப்பு, கண்களில்நோவுடன் சலம் பெருகல், பெருமூச்சு, கொட்டாவி, தலைபுரட்டல், வயிற்றிலுப்பிசத்துடன் நோவு, நடுக்கல், அக்கினிமந்தம், மலபந்தம் என்னும் இக்குணங்களையுண்டாக்கும். சோபை என்பது வீக்கம்.

௬௩-வது ஆநாகசுரம்.

மலபந்தம், மலத்துவாரத்தில்சூலை, அக்கினிமந்தம், சீதளம், சிரோபாரம், நடுநெற்றியிலிரைச்சல், தாகம், நெஞ்சுவறளல், துர்ப்பலம், தேகம் கனத்துவெளிறல், கண்சிவத்தல், ரோமச்சிலிர்ப்பு, அடிக்கடிநீரிறங்கல், நாடி நிலையற்று அலைவுற்று சூக்ஷுமமாகவும் வேகமாகவும் நடக்குதல் என்னும் இக்குணங்களையுண்டாக்கும். ஆநாகம் என்பதுகட்டுதலாம்.

௬௪-வது திரிகாலசுரம்.

காலை, மத்தியானம், மாலை என்னும் இம்மூன்றுகாலங்களிலு மாருது பிறந்து, பிரலாபம், பற்கடித்தல், பாடல், விகாரகுணம், முகத்தில்குங்கும நிறம், பலவீனம், அற்பவெப்பம், உடம்புபதறல், கொஞ்சம்நித்திரை, தாகம், நாக்குமுள்ளுபோலிருத்தல், மூர்ச்சை, இளைப்பு, பிரமை, சுவாசம், வியர்வை, விக்கல், காதடைப்பு, அதிசாரம், காசம், ஓக்காளம், பேதி, கொட்டாவி என்னும் இக்குணங்களை யுண்டாக்கும். இதுவே சர்வகாலசுரமாம்.

ஆ௬௪ மதாந்தரசுரம் அறுபத்துநான்கு முற்றுப்பெற்றனவாம்., இவை நிற்க, வாதசுரம் (௨௰) என்றும், இவற்றுள் சாத்தியம் (௰௨) என்றும்; பித்தசுரம்(௨௪)என்றும், இவற்றுள்சாத்தியம்(௰)என்றும்; சிலேஷ்மசுரம் (௨௰) என்றும், இவற்றுள்சாத்தியம்(௰) என்றும்சிலநூல்சொல்லுகின்றது.

இரண்டாவது சுரரோகபடலம் முற்றியது.

உ

சுப்பிரமணியர் துணை

ஜீவரக்ஷாமிர்தம்.

மூன்றாவது

ரத்தபித்தரோகபடலம்.

ரத்தபித்தரோகலக்ஷணம்.

இது, ரத்தவிருத்தியினாலும், ரத்தக்கெடுதியினாலும், வாதாதிகளின் கூட்டத்தினாலும் வெளிப்பட்டு, அபாயத்தைத்தருகின்ற ரத்தத்துக்குத் துர்க்கந்தமின்றிச் சுபாவகந்தமாகவும், சுபாவவன்னமின்றிமாறுவன்னமாகவும் இருப்பதால், இதனை ரத்தபித்தரோகமென ஆயுள்வேதம் கூறுகின்றது. இந்தரோகம், ரத்தஸ்தானத்தி லிருந்தாவது † பிலீகஸ்தானத்தி லிருந்தாவது ⁕ யகிருதிஸ்தானத்தி லிருந்தாவது பிறக்குமென்றறிக.

ரத்தபித்தரோகபேதம்.

மேற்கூறிய ரத்தபித்தரோகமானது, வாதத்தினாலும், பித்தத்தினாலும், சிலேஷ்மத்தினாலும், வாதபித்தத்தினாலும், வாதசிலேஷ்மத்தினாலும், சிலேஷ்மபித்தத்தினாலும், சந்நிபாதத்தினாலும் ஏழுவிதப்படும். இப்படி உற்பத்தியாகிய ரத்தபித்தமானது, ஊர்த்துவமுகம், அதோமுகம், உபயமுகம் என்னும் மூன்றுவிதமுகமாக, மேல்நோக்கியும், கீழ்நோக்கியும், கூறிய இரண்டிடத்தைநோக்கியும், கண் காது நாசி வாய் ரோமம் சலத்துவாரம் மலத்துவாரம் என்னும் இவ்வேழுவாசல்வழியாக, வெளிப்படும்.

ரத்தபித்தரோகபூர்வரூபம்.

ரத்தபித்தரோகமானது, தலைப்பாரம், அரோசகம், சீதள புளிப்பு வஸ்துக்களிலிச்சை, புகைபட்டாற்போல் தேகங்கறுக்குதல், இருமல், இளைப்பு, ஈனத் தொனி, பிரமை என்னும் இக்குணங்களையும் : வாயில் சிவத்தலுடன், களிம்பு, கவிச்சு, புளிப்பு என்னும் இவ்வாசனைகளையும்;

† பிலீகஸ்தானம் என்பது இருதயத்துக்கு இடப்புறத்திலிருக்கும் மாமிச கண்டம்.

⁕ யகிருதிஸ்தானம் என்பது இருதயத்துக்கு வலப்புறத்திலிருக்கும் மாமிசகண்டம்.

கண்முதலிய இடங்களில், மஞ்சள், சிவப்பு, பச்சிலையின் ரசம், வெண்மை என்னு மிவ்வன்னங்களையும்: கறுப்பு,சிவப்பு,மஞ்சள்,முதலியவன்னங்களை இன்ன வன்னங்களென அறியக்கூடாத பார்வையையும்; நித்திரையில், மேற்கூறிய ரத்தநிறங்களைப்போலக் காணுகின்ற கனவுகளையும் தனக்குப் பழையரூபமாகப்பெற்றிருக்கிறது. இக்குணங்கள்யாருக்கேனும் இருந்தால், அவர்களுக்கு ரத்தபித்தரோகம் காணுமென்றே நிதானித்து, உடனே வைத்தியஞ் செய்யவேண்டும்.

ஊர்த்துவமுக ரத்தபித்தரோகம்.

கண், செவி, நாசி, வாய் என்னும் இந்நான்குவழிகளால் ரத்தத்தை வெளிப்படுத்தும். இது சாத்தியம்.

அதோமுக ரத்தபித்தரோகம்.

சலத்துவாரம், மலத்துவாரம்,ரோமத்துவாரம் என்னும் இம்மூன்று வழிகளால் ரத்தத்தைவெளிப்படுத்தும். இது கஷ்டசாத்தியம்.

உபயமுக ரத்தபித்தரோகம்.

முற்கூறிய ஊர்த்துவ முகத்திலும், அதோ முகத்திலும், ஒரே காலத்தில் ரத்தத்தை வெளிப்படுத்தும். இதுக்குத் தகுந்த அவுஷதம் எந்தக்கிரந்தங்களிலும் சொல்லாமையினால், இது அசாத்தியம்.

வாத ரத்தபித்தரோகம்.

நுரையுடன் காந்தியானரத்தத்தை வெளியாக்கும். இந்தரோகத்தில் அற்பவாதமும் அதிகபித்தமும் இருப்பதால், இது, அசாத்தியம்.

பித்த ரத்தபித்தரோகம்.

கோமூத்திரத்தின் வன்னமாகவும், கஷாயத்தின் வன்னமாகவும், குழம்பாகவும் ரத்தத்தைவெளிப்படுத்தும்.

சிலேஷ்ம ரத்தபித்தரோகம்.

வெளிறுகவும்தேய்த்துக்கழுவினுல்வழுவழுத்திருப்பதாகவும்இருக்கின்ற ரத்தத்தை வெளிப்படுத்தும். இப்படியே கக்குகின்ற ரத்தத்தைத் தரையில்விழுந்தவுடன்சோதித்துப்பார்க்கவேண்டும். அன்றியும்,வாதபித்தக்கூடியதொந்தரத்தபித்தரோகங்களையும்வாதபித்தகபம்கூடியசந்நிபாத ரத்தபித்தரோகத்தையும் அசாத்தியமென்றறிந்து தள்ளிவிடவேண்டும்.

அசாத்திய ரத்தபித்தரோகம்.

விழுகின்ற ரத்தமானது மிகுசிவப்பாகவும், கறுப்பாகவும், இந்திர தனுவின்வன்னமாகவும் தாம்பிரவன்னமாகவும், மஞ்சள்வன்னமாகவும், பச்சிலைரசவன்னமாகவும் காணப்பட்டாலும்: துர்க்கந்தமாறுமலும் அதிகமாகவும் விரைவாகவும் விழுந்தாலும்; ரோமத்துவாரம், செவி, வாய்,

இருதயம்கண்என்னுமிவ்விடங்களில்நின்றும்ஏககாலத்திலதிகமாகவெளிப்பட்டாலும் ; அது வஸ்திரத்திற்பட்டால் எப்படிகசக்கினுலும் எளிதில் விடாதிருந்தாலும் அசாத்தியம். அன்றியும், இந்தரோகம் விருத்தியானுல் தேகம்வெளிறல், சுரம், வாந்தி, காசம், சோபை என்னும் இக்குணங்களை யுண்டாக்கிப் பின்பு அதிசாரத்தைப்பிறப்பித்துமரணத்தைக்கொடுக்கும். இப்படிக்கு அசாத்தியம் எனச்சொன்னபோதிலும், ரத்தத்தை உள்ளில் தங்கும்படியான சிகிச்சைகளைச்செய்தால், சாத்தியம் ஆனுலுமாகும்.

அசிர்க்கரரோகலக்ஷணம்.

மாதர்கட்குக் கருப்பாசயஸ்தானத்தில் சன்னநரம்புகளில் நின்றும் உதிரமானது ஒழுகிச்சேர்ந்து அல்குல்வழியாகவெளிப்படுவதே மாதாந்த ருதுகாலமாம். அது உபவாசத்தினுலும், துக்கத்தினுலும், மிகுசையோகத்தினுலும், காங்கைவஸ்துக்களினுலும் அதிகரித்த வாதாதி திரிதோஷங்களினுல் கெடுதியையடைய, ருதுகாலந்தப்பும் ; அக்கால வித்தியாசத்தில் நின்றும் அசிர்க்கரரோகம் பிறக்கும். அதன் விவரம்:—அல்குலுக்குள்ளிருக்கும்துவாரமான துராத்திரிகாலத்தாமரைப்புஷ்பம்போல்சுருங்கி மூடிக்கொள்ளும் ; இதனுல், முன்புநரம்புகளின் மார்க்கமாகச்சிரவித்துச் சேர்ந்திருக்கும் உதிரத்துக்கு வாயுவானது கரியநிறத்தையும் துர்க்கந்தத்தையுங்கொடுத்து, இரண்டாவது ருதுகாலத்தில் அல்குல் மார்க்கமாக அதனை அகாலத்தில்உபத்திரவத்தையுண்டாக்கிவெளிப்படுத்தும்.இதுவே அசிர்க்கரரோகமாம். இதுக்குப்பிரதரரோகமென்றும் ஒருபேருண்டு.

அசிர்க்கரரோகபேதம்.

முன்புசொன்ன அசிர்க்கரரோகமானது, வாதாசிர்க்கரம், பித்தாசிர்க்கரம்,சிலேஷ்மாசிர்க்கரம்,சந்நிபாதாசிர்க்கரம் என நான்குவிதப்படும். அன்றியும், இந்தரோகத்தைப் பெரும்பாடு,பிரமேயம்,பிரமேகம்,பிரமியம் எனவும் சிலமதாந்தரத்தில் வழங்குகிறுர்கள். இப்பிணியைக்கொண்ட மாதர்கட்கு, அல்குல் மார்க்கத்தையும் அன்றி, வாயினுலும் ரத்தம் விழுமென்றறிக. அசிர்க்கு என்பது ரத்தம்.

வாதாசிர்க்கரரோகம்.

மாதர்கட்கு வயிற்றுநோவையுண்டாக்கிகறுத்தரத்தத்தை அல்குல் மார்க்கமாக வெளிப்படுத்தும். இந்தவாதத்தில் பித்தமுங் கூடினுல், அந்த ரத்தமானது கண்டவுடன் மறைந்துவிடும்.

பித்தாசிர்க்கரரோகம்.

மாதர்கட்குச் சுரத்தோடுங்கூட அல்குல்மார்க்கத்தில் நீலநிறமான ரத்தத்தை வெளிப்படுத்தும். இந்தப்பித்தத்தில் சிலேஷ்மமுங் கூடினுல்; அந்தரத்தமானது உருண்டை யுருண்டையாகவிழும்.

சிலேஷ்மாசிர்க்காரோகம்.

மாதர்கட்கு அல்குல்மார்க்கத்தில் பிரேதநாற்றத்துடன் வெண்மையாகிய ரத்தத்தை வெளிப்படுத்தும். இந்தச்சிலேஷ்மத்தில் வாதமுங்கூடினால், அந்தரத்தமானது சீழைப்போலவேவிழும்.

சந்நிபாதாசிர்க்காரோகம்.

மாதர்கட்கு அல்குல்மார்க்கத்தில், மேற்கூறியவாதபித்தசிலேஷ்மம் என்னும் மூன்று அசிர்க்கரரோகநிறங்களாகவும், மலமூத்திரநிறமும் நாற்றமும் உள்ளதாகவும் இருக்கின்ற ரத்தத்தையும், சரீரத்தில் சுரத்தையும் மூர்ச்சையையும் உண்டாக்கும். இதுவும், தொந்தமும் அசாத்தியம்.

மேற்சொல்லிவந்த அசிர்க்கரரோகங்களை, பலாசகிருதம், பலாமடக்குத்தயிலம், கட்டுவாங்கத்தயிலம் முதலியசிகிச்சைகளினால்வசப்படுத்தவும்.

மதாந்தரம்.

அஸ்திசிராவோற்பத்திலக்ஷணம்.

ரசதாதுகொதித்தலினால் ரத்தத்தின்சுபாவவன்னங்கெட்டால், இதை அஸ்திசிராவரோகமெனச்சொல்வதுகாசிபர்சம்மதம்; அல்குல்மார்க்கமாக ரத்தமானது, வெளுத்து அல்லது மிகவுஞ்சிவந்து, துர்க்கந்தத்துடன் விழுந்தால், இதைரத்தசிராவரோகமெனச்சொல்வது சில ஆயுள்வேதியர் சம்மதம்; எலும்புகளின் மத்தியிலிருக்கிற மச்சையை யுருக்கிக்கொண்டு சூலையுடன் வெளிப்பட்டால், இதை அஸ்திசிராவரோகமெனச்சொல்வது ஆத்திரேயர் சம்மதம்; இதனை எலும்புருக்கி ரோகமெனச்சொல்வது திருமூலர்முதலிய சித்தர்கள்சம்மதம். இது அசாத்தியம்.

மதாந்தர முற்றியது.

காசரோகபேதம்.

காசரோகமானது, வாதகாசம், பித்தகாசம், சிலேஷ்மகாசம், ரத்தகாசம், க்ஷயகாசம் என ஐந்துவிதப்படும். இவற்றுள், வாதகாசத்தினும் பித்தகாசம் அதிகபலன்; பித்தகாசத்தினும் சிலேஷ்மகாசம் அதிகபலன்; சிலேஷ்மகாசத்தினும்ரத்தகாசம் அதிகபலன்; ரத்தகாசத்தினும்க்ஷயகாசம் அதிகபலன் என்றறிக. இக்காசங்கள்தேகத்தை நாசம்பண்ணும்ஆதலால், இவைகட்கு உடனே வைத்தியம்பண்ணாவிடில் அசாத்தியமாம்.

காசரோகபூர்வரூபம்.

காசரோகமானது, முதல்முதல் கண்டத்துக்குட்புறத்தில் நமைச்சலுடன் முட்சொருகல்போலிருத்தலையும், அரோசகத்தையும், அதோமுகமாகச் சஞ்சரிக்காநின்றவாய்வு மேல்நோக்கி மார்பில் சேர்ந்துக்கொண்டு கண்டத்தில் இருமலையும் உண்டாக்கி, சிரசின்நரம்புகளில்நிறைந்து, பின்பு

அவயவங்களுக்கெல்லாம்நருக்கித்துவைத்ததுபோல்அதிகவேதனையையும் பிறப்பித்து : கண்களில்மின்மிப்பூச்சி பறப்பதுபோலச்செய்து : முதுகு, மார்பு,விலாப்பக்கம்,இவைகளில்நோவையுண்டாக்கி : ஓட்டைவெண்கலத் தொனியைப்போல் கண்டத்தில்தொனியைப்பிறப்பித்து, பின்பு தானும் வாயினல் உடுக்கலுபுக்கலாகப்புறப்படும். இப்படிக்கு வாயுவினல்செய்யப் படும் செய்கைகளையும் தனக்குப் பழையரூபமாகப் பெற்றிருக்கின்றது. அன்றியும், பஞ்சகாசங்களைப் பிறப்பிப்பதற்கும், அவைகளில் கண்டத் தொனியைக் கெடுப்பிப்பதற்கும் வாயுவே கர்த்தாவாம்.

க-வது வாதகாசரோகம்.

வாதாதிக்கவஸ்துகளினல் அதிகரிக்கின்ற வாதத்தைக்கொண்டு, மார்பு, கண்டம், முகம் என்னும் இவைகளைவற்றப்பண்ணி, சிரசு, விலாப் பக்கம், குண்டிக்காய், மார்பு இவைகளில்குத்தலையுண்டாக்கி, சோருதல், மனக்கலக்கம், ஈனத்தொனி, அதிகவேதனை, பொடி இருமல், வேற்றுக் குரல், ரோமங்க ளெல்லாஞ் சிலிர்த்தல் என்னும் இக்குணங்களையும் உண்டாக்கும். அன்றியும், நெஞ்சில் இளகிய கோழையைக் கெட்டிப் படுத்திக்கொஞ்சங்கொஞ்சமாக வெளிப்படுத்தும்.

உ-வது பித்தகாசரோகம்.

கண்களும் நகங்களும் மஞ்சள் நிறமாயிருத்தல், வாய்க்கசப்பு,கசந்த மஞ்சட்கோழைவீழல், ரத்தவாந்தி,பிரமை,தாகம்,கம்மியபேச்சு,நெஞ்சிற் கமறல்,புளியேப்பம்,எப்போதும் பொடி இருமல்,கண்களில் இருட்கம்மல் என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.

௩-வது சிலேஷ்மகாசரோகம்.

மார்பில்கொஞ்சம்நோவு, தலைநோவு, இறுக்கிப் பிடித்ததுபோற் குண்டிக்காயில்நோவு,தேகபாரிப்பு,நெஞ்சுக்குள் எதுவோபூசினதுபோல் அருவருப்பு, எழுதலில் நடப்பதில் அசமாதானம், நாசியில் மாருச்சலம், வாந்தி, அரோசகம், மிகவும்ரோமமுறைத்தல்,சரீரமினுமினுப்பு,வெளுப் பாகியகோழைவாந்தி என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.

௪-வது ரத்தகாசரோகம்.

யுத்தம், சேவகாவிர்த்தி, சிலம்பமுதலியசாதகங்கள் இவைகளால் மெலிந்தவர்கட்கு,சரீரத்தில்முன்புள்ள சுபாவபலமொடுங்கியவாயுவானது மார்புக்குள் சேர்ந்து, பித்தத்துடன் கலந்து பலத்திருந்து கொள்ளும்; இப்படியிருக்கிற இந்த வாயுவைக்கொண்டு கண்டத்தில் வேதனையை உண்டாக்கி, ரத்தத்துடன், மஞ்சள்வன்னமாகவும், உலர்ந்ததுபோலவும், உண்டையுண்டையாகவும் கபத்தைவாந்தியாக்கும். ஒருவேளை மார்பை விருவாக்கிச் சுத்தரத்தத்தையே வாந்தியாக்கும். ஒருவேளை ஊசிகளால்

குத்துதல்போல் மார்பில்குத்தலையுண்டாக்கி ரத்தத்தை விழப்பண்ணும். அப்போது,கீல்களில்நோவு,சுரம்,சுவாசம், தாகம், ஈனத்தொனி, நடுக்கல், நெஞ்சில் புருச்சத்தத்தைப்போல்சத்தம், பக்கநோவு என்னுமிக்குணங்களுண்டாவ தன்றியும், இந்திரியம், பசி, பலம், தேகவன்னம் இவைகள் குறைந்து,ரத்தமூத்திரமும் முதுகுநோவும் இடுப்புநோவும் உண்டாம்.

௫-வது க்ஷயகாசரோகம்.

வாதாதிக்கத்தால், சப்ததாதுக்களுமதிகரித்து,க்ஷயரோகத்துக்குப் பீநசம் சுவாசமுதலிய பதினொருரூபங்களையும் பிறப்பிப்பதற்குக் காரணமான அறுசுவை வஸ்துபேதங்களைக் கொண்டு, முதல்முதல் இருமலைப் பிறப்பித்துப் பின்பு துர்க்கந்தச் சீழாகவும்; மஞ்சள்வன்னம், பச்சிலைரசவன்னம், ரத்தவன்னம் என்னும் இவ்வன்னமாகவும்; புளிப்புவாசனையாகவும் வாயினாற்கோழையைக் கக்கப்பண்ணும். அப்போதுபக்கங்களில் அடித்தல்போல்நோவு,மார்புபிளந்துபோவதுபோலிருத்தல்,காரணமின்றி உஷ்ணவஸ்துவில் சீதளவஸ்துவில் இச்சை, அடிக்கடி அன்னத்தில் அபேக்ஷை, துர்ப்பலம், முகத்தில்தேஜசு, கண்களில்நல்லகாந்தி என்னும் இக்குணங்களுடன் க்ஷயரூபகுணங்களும் உண்டாகும். இது, க்ஷயரூபத்தோடு இருமலைப்பிறப்பிப்பதால், க்ஷயகாசரோகமெனப் பேர்பெற்றது. இந்தரோகம் மெலிந்தவர்களுக்கும் முதிர்ந்தவர்களுக்கும்வந்தால், கொல்வதே நிச்சயமென்றறிக.சரீரபலமுள்ளவர்களுக்குவந்தால், ஒருவேளைசாத்தியப்படும். ஆயினும்,முற்கூறியரத்தகாசமும், இந்தக்காசமும்மருத்துவர் திறத்தினாலும் மருந்தின்திறத்தினாலும் சாத்தியத்துக்கு வந்தாலும்வரும். மற்ற வாதகாசம், பித்தகாசம், சிலேஷ்மகாசம் இம்மூன்றும் சாத்தியம். இரண்டிரண்டாகத் தொந்தித்த தொந்தகாசங்களும் கஷ்டத்தின்மேல் சாத்தியத்துக்கு வருமென்றறிக. ஒருவேளை கிழவர்கட்கு, இருமலினாலும் இரைப்பினாலும் தேகமிளைத்தல், வாந்தி,குரல்கம்மல் முதலியரோகங்கள் பிறக்கும். அவை சப்ததாதுக்களின் கெடுதியால் பிறந்ததென்றறிந்து, அதற்குத்தகுந்த அவுஷதங்கொடுத்து வசப்படுத்தவேண்டும்.

அசாத்தியகாசரோகம்.

இருமல், இரைப்பு, சுரம், வாந்தி, தாகம்,பேதி என்னும் இக்குணங்களையுண்டாக்கும். இக்குணங்களையுடையகாசரோகி இறந்தவனே.

மேற்சொல்லிய காசரோகங்களை,ஆடாதோடைக்கிருதம்,தாளகபஸ்மம், மகாவசந்த குசுமாகரமாத்திரை, கஜகர்ன்னிகாதயிலம் முதலியசிகிச்சைகளைக்கொண்டுநிவிர்த்திசெய்யவேண்டும்.

சுவாசரோகபேதம்.

இருமல்விருத்தியினாலும், வாதாதிக்க வஸ்து பேதங்களினாலும், அசீரணபேதியினாலும், வாந்தியினாலும், விஷபாண்டு ரோகத்தினாலும்,

நாள்தோறும் அநுசரித்தசுரத்தினுலும், தானியச்சுண்ணகளினுலும், புகைகளினுலும்,காற்றினுலும், மர்மஸ்தானங்களில் அடிபட்டதினுலும், அதிக சீதளசலத்தினுலும் இளைப்பாகியசுவாசரோகம்பிறக்கும். இது, க்ஷுத்திர சுவாசரோகம், தமகசுவாசரோகம், விச்சின்னசுவாசரோகம், மகாசுவாச ரோகம், ஊர்த்துவசுவாசரோகம் என ஐந்துவிதப்படும்.

சுவாசரோகபூர்வரூபம்.

சுவாசரோகமானது, மார்பிலும் விலாப்பக்கங்களிலும் குத்தல், திணறித்திணறி மூச்சுவருதல், வயிறுப்பிசம், இரண்டு நெறியிலும்நோவு என்னும் இக்குணங்களைத் தனக்குப்பழையரூபமாகப் பெற்றிருக்கின்றது.

௧-வது க்ஷுத்திரசுவாசரோகம்.

முற்கூறியபூர்வலக்ஷணம் கண்டிருக்கும்போது வருவித்துக்கொண்ட ஆயாசத்தினுலும் அபத்தியத்தினுலும் அதிகரித்தவாயுவானது, சுபாவ குணத்தோடுமிருக்கிற பித்த கபங்களுக்குப் பலத்தைக் கொடுத்தலினுல் பிறந்து, அற்பசுவாசத்தையுண்டாக்கும். க்ஷுத்திரம் என்பது அற்பம்.

௨-வது தமகசுவாசரோகம்.

சிலேஷ்மத்தில் கூடிக்கொண்டு நரம்புகளின் துவாரங்களில் பிரதிகூலமாகப்பிரவேசித்து, சிரசையும் கண்டத்தையும் பற்றிய வாயுவைக் கொண்டு,மார்பிலும் இருபக்கவிலாவிலும்நோவையுண்டாக்கி:கண்டத்தில் குறுகுறுவென்னும் ஒருசத்தந்துடன், இருமல்,சோருதல்,அருசி,பீநசம், தாகம் என்னு மிக்குணங்களை விரைவில் அதிகரிக்கச்செய்து மரணகால சுவாசத்தைப்போலச்சகிக்கக்கூடாதசுவாசத்தையுண்டாக்கும்.அப்போது, இளைப்பினுல் சரீரமெல்லாம் அதிர்ந்துகுலுங்கல், கண்டத்தில் அடைந்த கோழை விழுந்து விட்டால் கொஞ்சஞ் சவுக்கியம், பிரயாசத்துடன் படுக்குதல்,படுத்தால்பெருமூச்சுவிடுதல், உளுக்காந்தால் அற்பசவுக்கியம், மேற்பார்வை,நெற்றியில்வியர்வையோடுநோவு,சுவாசம்நீடுதலால்அடிக்கடி வாயுலர்தல், தேகம்நடுங்கல், உஷ்ணதிரவியத்தில் இச்சை என்னும் இக்குணங்களை யுண்டாக்கும். இது, பஞ்சேந்திரியங்களுக்கும் இருள் மூடுவதுபோல் மயக்கத்தையுண்டாக்குவதால், தமகசுவாசரோகமெனப் பேர்பெற்றது. அன்றியும், சீதளமேகம், மிகுகுளிர்ச்சியானசலம், சீதள வஸ்து, கீழ்த்திசைக்காற்று, சிலேஷ்மாதிக்கவஸ்து ஆகிய இவைகளால் அதிகரிப்பதினுல், இதற்குமந்தாரசுவாசரோகமென ஒருபேருண்டு.இதனை மந்தாரகாசமெனச் சிலர்சொல்லுகிறுர்கள். இந்தரோகமானது, முன் சொன்னமட்டிலேயே யிருந்தால், ஒருவேளைசாத்தியத்துக்கு வந்தாலும் வரும். இதற்குமேல் சுரமும் மூர்ச்சையும் உண்டாகில் அசாத்தியம்.

௩-வது விச்சின்னசுவாசரோகம்.

சாதாரணமாகவராநின்றசுவாசமானது,உள்ளில்மறிபட்டுமறிபட்டுப் பெருஞ் சுவாசமாகவருதல், மர்மஸ்தானங்களாகிய பதினாலுஸ்தானங் களிலுமதிகநோவு,வியர்வை,மூர்ச்சை,மேல்வயிறுப்பிசம்,அடிவயிற்றிலும் தேகத்திலும் எரிச்சல், மலமூத்திரச்சிக்கல், கவிழ்ந்த பார்வையோடு கலங்கியகண்களில்சிவப்பு,வாயுலரல்,பிரலாபம்,தேகநிறமாறல்,அதயிரியம் ஞாபகமறதி என்னுமிக்குணங்களையுண்டாக்கும். இது, சுவாசத்தை அறு பட்டதுபோல்திணறலுடன்விடுவிப்பதால், விச்சின்னசுவாசரோகமெனப் பேர்பெற்றது. இந்தரோகிமயக்கத்துடன் சோர்ந்திருப்பா னென்றறிக.

௪-வது மகாசுவாசரோகம்.

கண்டத்தில் மேன்மேலும் களகளவென்னும் ஒருசத்தம், பெருஞ் சுவாசம்,வயிற்றில்அதிகவுப்பிசம்,மழைக்கெதிர்ப்பட்டமாட்டுத்தலைபோல் தலைகுனிதல், சாஸ்திரமுதலிய விபகாரங்களில்வழுவுதல், முகத்திலும் கண்களிலும் காந்தியின்மை, கையினால்மார்பில் அறைந்துக்கொள்ளல், மலமூத்திரச்சிக்கல்,பிறருக்குத்தெரிந்துகொள்ளக் கூடும்கூடாமையுமாகப் பேசுகின்ற வார்த்தை, நெஞ்சுவறளல், அடிக்கடிசோருதல், காதிலும் நெறியிலும் சிரசிலும்நோவு என்னும் இக்குணங்களையுண்டாக்கும். இது, பெருஞ்சுவாசத்தையுண்டாக்கலால்மகாசுவாசரோகமெனப்பேர்பெற்றது.

௫-வது ஊர்த்துவசுவாசரோகம்.

சாதாரணமாகவராநின்ற சுவாசமானது நீண்டு மேல்நோக்கி வருத லால்,தலைகுனியக்கூடாமல்நிமிரல், சிலேஷ்மநிறைவினால் முகத்துநரம்புக ளெல்லாம் உப்புதல், அதிகசுவாசவருத்தத்தால் மேற்பார்வை, மயக்கம், சுற்றிச்சுற்றிப்பார்த்து விழித்தல், மர்மஸ்தானங்களின் நோவினாலழுதல், வார்த்தைசொல்லக்கூடாமை என்னும்இக்குணங்களையுண்டாக்கும்.இது, மேல்நோக்கிக்காணுதலால், ஊர்த்துவசுவாச ரோகமெனப் பேர்பெற்றது. இதற்கு வைத்தியம்பண்ணிக்கொண்டுவரும்போது மேற்கூறியகுணங்கள் ஒவ்வொன்றாகக்குறைந்தால், சாத்தியம்; விருத்தியானால் அசாத்தியம்.

அசாத்தியசுவாசரோகம்.

காசரோகிக்கும் சுவாசரோகிக்கும், சுரம், வாந்தி, தாகம், பேதி, வீக்கம் என்னும் இக்குணங்கள்காணுமாகில், அசாத்தியம்.

மேற்சொல்லிவந்த சுவாசரோகங்களை, வமனமருந்து,சங்குப்பிரசம், தூதுளைக்கிருதம், திரிலோகரக்ஷாமணிமாத்திரை முதலியசிகிச்சைகளைக் கொண்டு நிவர்த்திசெய்யவேண்டும்.

விக்கல்ரோகபேதம்.

விக்கல்ரோகமானது, அசனோற்பவவிக்கல், க்ஷுத்திரவிக்கல், மகாவிக்கல், யமளவிக்கல், கம்பீரவிக்கல் என ஐந்துவிதப்படும். இவைகட்குப் பொதுவாக இத்மரோகமென்றும் ஒரு பேருண்டு.

க-வது அசனோற்பவவிக்கல்ரோகம்.

காரவஸ்து,மிருதீக்ஷணவஸ்து,சீரணமாகாதவஸ்து,கடினபதார்த்தம், அன்னபானாதி வித்தியாசம் ஆகிய இவைகளினால்பிறந்து : நோவில்லாமல் கண்டத்தில் அற்பத்தொனி, அற்ப இருமல் என்னும் இக்குணங்களை யுண்டாக்கும். இது, அன்னபானாதி வித்தியாசங்களால் பிறப்பதால், அசனோற்பவவிக்கல்ரோகமெனப் பேர்பெற்றது. இதுசாத்தியாசாத்தியம்.

உ-வது க்ஷுத்திரவிக்கல்ரோகம்.

ஆகாரகாலங்களில்அதிகரித்தவாயுவினால்அற்பவிக்கல்உண்டாகும். ஆனால், இந்தரோகிக்கு, பசி களை முதலியவற்றால்வருமாயாசகாலங்களில், நெஞ்சுக்குழியி லிருந்து அவ்விக்கலானது அதிகரிக்கும். அப்போது கொஞ்சம் போசனம்பண்ணினால், சற்றேசாந்தமாகும்.

௩-வது யமளவிக்கல்ரோகம்.

ஆகாரம் சீரணிக்குந்தறியில், சற்றுநேரம் பொறுத்துப்பொறுத்து இரண்டிரண்டாகப்பிறந்து : மிகுதாகம், வயிறுப்பிசம், பிரலாபம்,வாந்தி, பேதி, கண்கலங்கல், மிகுந்தகொட்டாவி என்னும் இக்குணங்களை யுண்டாக்கும்.இது,இரண்டிரண்டா யதிகவேகத்துடன் வெளிப்படுதலால், யமளவிக்கல் ரோகமெனப் பேர்பெற்றது. யமளம் என்பது இரண்டு.

ச-வது மகாவிக்கல்ரோகம்.

அதிகவிக்கலினால், இரண்டு கண்புருவமும் இரண்டு நெறிகளும் தெறித்து விழுவதுபோ லிருத்தல், சலம் வடிதலுடன் கண் கலங்கல், சர்வாங்கமுமரத்தல்,நினைப்புமாறல், அன்னமிறங்கும்வழிமறிபடுதல், கால்களில்நோவு,முதுகுவளைதல்,நெஞ்சுக்குழியுலருதல் என்னுமிக்குணங்களை யுண்டாக்கும். இது, தேகத்தில் நன்றாகப்பற்றி மகாசத்தத்துடன் அதிக பலங்கொண்டு வேகமாகப்பிறப்பதால், மகாவிக்கல் ரோகமெனப் பேர் பெற்றது. இது, விக்கல்ரோகம் ஐந்துக்குள், மிகவும் கொடிதென்றறிக.

ரு-வது கம்பீரவிக்கல்ரோகம்.

பக்குவாசய ஸ்தானத்திலாவது நாபிஸ்தானத்திலாவது பிறந்து, முன்புகூறிய மகாவிக்கல்ரோககுணங்களைப்பெற்று: அடிக்கடிகொட்டாவி தேகமுறுக்குதல், அதிகசத்தத்துடன் நீண்டுவருகின்ற விக்கல் என்னும் இக்குணங்களையுண்டாக்கும். கம்பீரம் என்பது ஆழம்.

சாத்தியாசாத்தியவிக்கல்ரோகம்.

மேற்கூறிய விக்கல்ரோகம் ஐந்துக்குள், அசனோற்பவ விக்கல் ரோகமும்க்ஷுத்திரவிக்கல்ரோகமும்சாத்தியம்; யமளவிக்கல்ரோகம்கஷ்ட சாத்தியம் ; மகாவிக்கல்ரோகமும் கம்பீரவிக்கல்ரோகமும் அசாத்தியம்.

சர்வசாதாரணவிக்கல்ரோகலக்ஷணம்.

முற்கூறிய விக்கல்ரோகங்களுக்குள்ள குணங்களையெல்லாம் பெற்று இடைவிடாமல் அடிக்கடி அலையடிப்பதுபோல், விக்கலுண்டாம். மேற்கூறிய ரோகங்களெல்லாம் இதினிடத்தி லிருப்பதினால் சர்வசாதாரண விக்கல்ரோகம் எனப் பேர்பெற்றது. இதுஅசாத்தியம். சகலரோகங்களைப் பார்க்கிலும், விக்கல்ரோகம் அதிகசீக்கிரத்தில்கொல்லும்.

மேற்சொல்லிய விக்கல்ரோகங்களை, குளவிக் கூண்டுக் கஷாயம், நண்டுவளைச்சலம், மயிலிறகின் பஸ்மம், மகா வசந்தகுசுமாகர மாத்திரை முதலிய சிகிச்சைகளினால் விலக்கவும்.

க்ஷயரோகலக்ஷணம்.

க்ஷயரோகமானது, சுரரோகம் அரசனாகவும், காமாலை ரோகம் மனைவியாகவும், பாண்டுரோகம் சேனாதிபதியாகவும், ரத்தபித்த ரோகம் புத்திரனாகவும், காசரோகமும்சுவாசரோகமும்மந்திரிகளாகவும்,வாதபித்த ரோகங்கள் காவற்காரர்களாகவும், வாந்திரோகமும் அரோசகரோகமும் கட்டியக்காரர்களாகவும்,சோபைரோகமும் அதிசாரரோகமும்சிநேகிதர்களாகவும், பீநசரோகம் பொக்கிஷத்திரவிய மாகவும், கண்டத்தொனிகள் பேரிகை முதலிய வாத்தியங்களாகவும்,மற்றரோகங்கள் பரிசனங்களாகவும் பெற்றிருப்பதா லிதனைராஜரோகமென்றேஆயுள்வேதஞ்சொல்லுகின்றது. அன்றியும், இதற்கு யக்ஷ்மரோகம், ராஜயக்ஷ்மரோகம், ரோகராஜம், கபரோகம், ஈளைரோகம் எனவும்பெயர்களாம். இது, தேகத்தை நாளுக்கு நாள் குறையப்பண்ணுங்காரணத்தால்,க்ஷயரோகமெனப் பேர்பெற்றது.

க்ஷயரோகபேதம்.

வன்மையுள்ள க்ஷயரோகமானது, வாதக்ஷயரோகம்,பித்தக்ஷயரோகம், சிலேஷ்மக்ஷயரோகம்,திரிதோஷக்ஷயரோகம் எனநான்குவிதப்படும்.

க்ஷயரோகபூர்வரூபம்.

க்ஷயரோகமானது,பீநசம்,அதிக இருமல்,வாய்நீரூறல், வாயினிப்பு, மந்தாக்கினி, தேகம்வற்றல், அதிகபோசனம், இன்பமான பதார்த்தங்களை இன்பமில்லாதுபோல் பார்க்குதல், அன்னபானதிகளில் மயிர் துரும்பு ஈ எறும்பு இவைகளிருப்பதுபோற்றோற்றல்,மார்பு அதிரல், வாந்தி, அரோசகம் எப்போதும்போல் புசித்தாலும் துர்ப்பலம், கையைத் திருப்பித்

திருப்பிப்பார்க்குதல், முன்காலில்வீக்கம், கண்கள்வெளிறல்,இரண்டு கைகளும் இளைத்ததென்றும் இளைக்கவில்லையென்றும் பரீக்ஷைபார்க்குதல், தன்தேகத்தைத்தானேபார்த்துத் திடுக்கெனப்பயப்படுதல், மாதர்களிடத்தும் மாமிசாதிகளிடத்தும் மத்தியபானங்களிடத்தும் விருப்பம், வாந்தியிலும் கோழையிலும் அசங்கிதமில்லாதிருத்தல், வஸ்திரத்தினுல்முக்காடிட்டுக்கொள்ளுதற்கே யிச்சை, நகமும் மயிரும் சீக்கிரத்தில்வளரல் ஆகிய இக்குணங்களையும்: நித்திரையில், ஒணன், பாம்பு, குரங்கு, நரி, நாய், பெரும்பக்ஷி, சிறுபக்ஷி இவைகளினுல் தனக்கு ஒருவேதனை யுண்டானதாகவும், மயிர், எலும்பு, உமி, சாம்பல், இவைமுதலியகுவியலின்மேல் தான்ஏறினதாகவும், நாடு தேசங்கள் பாழானதாகவும், ஏரிகுளங்களில்தண்ணீர்வற்றியதாகவும், நக்ஷத்திரங்களும் மலைகளும் கீழே மோதிவிழுந்ததாகவும், வீதிகளெரிந்துவிழுந்ததாகவும் காணுநின்றகனவுகளையும் தனக்குப் பழையரூபமாகப்பெற்றிருக்கின்றது. இப்பூர்வரூபங்களைப்பெற்ற க்ஷயரோகம் நாலுக்குள் பதினொருரூபங்களையுடைய ஐவகைத்தோஷங்களுண்டு. அவைகளையும் அவற்றாற்பிறக்கும் உபத்திரவத்தையும்முறையே இதனடியிற்காண்க.

௧-வது ஊர்த்துவகததோஷம்.

பித்தகபஸ்தானத்திற்கு மேலாக வாயுவைச் சஞ்சரிக்கச் செய்து, பீநசம், இருமல், இரைப்பு, தோளில்நோவு அல்லது தலைநோவு, குரற்கம்மல், அரோசகம் என்னும் ஆறு ரூபங்களையுண்டாக்கும்.

௨-வது அதோகததோஷம்.

நாபிஸ்தானத்தின்கீழ் வாயுவைச்சஞ்சரிக்கச்செய்து அடிக்கடிமலம் கழுகல், வாயுலரல் என்னும் இரண்டு ரூபங்களையுண்டாக்கும்.

௩-வது கோஷ்டகததோஷம்.

வயிற்றுக்குள் வாயுவைச் சஞ்சரிக்கச்செய்து, வாந்தியாகிய ஒரு ரூபத்தைமாத்திரம் உண்டாக்கும். கோஷ்டகதம் என்பது வயிறு.

௪-வது திரியக்கததோஷம்.

இருபக்கவிலாக்களிலும் குறுக்கே வாயுவைச் சஞ்சரிக்கச் செய்து, அவ்விடங்களில்சூலைநோய்என்னும் ஒருரூபத்தைமாத்திரம்உண்டாக்கும். திரியக்கு என்பது குறுக்கு.

௫-வது சந்திகதோஷம்.

சகல கீல்களிலும் வாயுவைச் சஞ்சரிக்கச் செய்து, சுரமாகிய ஒரு ரூபத்தைமாத்திரம் உண்டாக்கும். ஆகதோஷம் (௫) - ம், அவற்றுள் அடங்கிய பதினொரு ரூபங்களு முற்றுப்பெற்றனவாம்.

க்ஷயோபத்திரவநிதானம்.

க்ஷயரோகத்தைக்கொண்ட ரோகிகளுக்கு முற்கூறிய பதினொரு ரூபங்களும் அதிகரிக்கும்போது, கண்டத்திலும் மார்பிலும்நோவு, தேக வேதனை, கொட்டாவி, வாயால்கோழைவிழுதல்,மந்தாக்கினி வாயில்துர்க் கந்தம் வீசுதல் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

வாதக்ஷயரோகம்.

சிரசு, தோள், கண்டம் ஆகிய இவ்விடங்களில்நோவு, விலாப்பக்கங் களில் குத்தல், குரற்கம்மல், கருமை வெண்மை நிறங்கலந்த கோழை விழுதல் என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.

பித்தக்ஷயரோகம்.

கை கால் முகம் இவைகளில் எரிச்சல், ரத்தவாந்தி, பேதி, வாயில் துர்க்கந்தம்வீசுதல், மஞ்சள்கோழை அல்லது சிவந்த கோழை விழுதல் என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.

சிலேஷ்மக்ஷயரோகம்.

அரோசகம், வாந்தி, இருமல், சிரசும் தேகமும் பாரித்தல், வாயிற் சலமூறல், பீநசம், இரைப்பு, ஈனத்தொனி, மந்தாக்கினி, வெண்மை நிறமாகிய கோழைவிழுதல் என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.

திரிதோஷ க்ஷயரோகம்.

அக்கினிமந்தத்தினல், சிலேஷ்ம விருத்திகட்கேதுவான வாதாதி தோஷங்கள் அதிகரித்து, நரம்புகளின் துவாரங்களையெல்லாம்அடைத்து, சப்ததாதுக்களிலும் இருக்கின்ற உஷ்ணத்தை அற்பமாக்கி, அவைகளில் ஒன்றாயிருந்த ரசதாதுவைமாத்திரம் அவ்வவ்விடங்களிலேயே மிகவும் கொதிப்பித்து வற்றப்பண்ணும். அப்படிவற்றிய ரசதாதுவானது, மாமிச தாதுவில் பாயாமல் தனது ஸ்தானத்திலிருந்துகொண்டு மற்றையதாதுக்க ளால்பிறக்கின்ற உபத்திரவங்களையெல்லாம் பிறப்பித்து, ரத்தத்தைமேல் நோக்கப்பண்ணும். அப்போது வாதாதிமூன்று க்ஷயரோகங்களுக்குள்ள துர்க்குணங்களெல்லாம் ஏககாலத்தில் உண்டாகும். இவைநிற்க, அன்ன பானுதிகளால் உண்டாகிறரசமானது, முன்புகெடுதியையடைந்த ரசதாது வில்சேர்ந்து நற்குணத்தைச்செய்யாதோவென்றால், ஒருக்காலுஞ் செய்ய மாட்டாது. துர்க்குணத்தையேசெய்யும். அதன்விவரம்:—நித்தியமும்புசிக் கின்ற அன்னத்தைத் தகிக்கப்பண்ணுகிறதெதுவோ அது, அன்னத்தைத் தகிக்கப்பண்ணும்போதே, அந்த அன்னத்தால் உண்டாகிற ரசத்தையும் வயிற்றிலேயேதகிக்கப்பண்ணுதலால், அந்தரசமானதுமலரூபத்தையடை ந்து, மலத்தால்மறிக்கப்பட்டுத்தாது விருத்தியையும் ரத்தவிருத்தியையும்

கெடுத்து, மாமிசதாதுவுக்குப் பலத்தைக் கொடாமல் தேகத்தைச்சுட்கப் பண்ணுகிற முயற்சியிலேயே மிகவுந்துரிதமாயிருக்குமென்றறிக.

க்ஷயரோகாசாத்திய சாத்தியலக்ஷணம்.

முற்கூறியக்ஷயரோகிகட்கு, பக்கநோவு, வயிறுப்பிசம், ரத்தவாந்தி, சீழானவாந்தி, இருதோட்களும் அற்றுவிழல்போ லிருத்தல் என்னும் இக்குணங்க ளிருந்தாலும்: சீழாகவும், ரத்தம்போற் சிவப்பாகவும், கறுப்பாகவும் கோழைகண்டு, இதனுடன் சுரமும் இருமலும் உண்டாகிப், பின்பு தேககாந்தி, பலம், தொனி என்னும் இவைகள்நாளுக்குநாள் குறைவுபட்டாலும்: அதிகதிண்டி, நாளுக்குநாள் சரீரஞ்சுட்கல், பேதி, பீசத்திலும் வயிற்றிலும் வீக்கம் என்னும் இக்குணங்களுண்டானாலும்: மேற்கூறிய துர்க்குணங்களெல்லாம் அற்பமாகக்கண்டிருந்தாலும்; தேகஞ்சுட்கித்து அவுஷதஞ்சாப்பிடப்பலமில்லாதிருந்தாலும் அசாத்தியம். இவைக ளில்லாதிருந்தால் சாத்தியம். இவைநிற்க, சில ஆயுள்வேதியர், க்ஷயரோகத்தை, வாதக்ஷயம், பித்தக்ஷயம், சிலேஷ்மக்ஷயம், திரிதோஷக்ஷயம், வாதபித்தக்ஷயம், சிலேஷ்மவாதக்ஷயம், சிலேஷ்மபித்தக்ஷயம், சுட்கக்ஷயம், சூலைக்ஷயம், ராஜயக்ஷ்மக்ஷயம், விவர்ணக்ஷயம், மந்தாக்கினிக்ஷயம், வாந்திக்ஷயம், ஏப்பக்ஷயம், சோஷைக்ஷயம், மூர்ச்சைக்ஷயம், எரிச்சல்க்ஷயம், விக்கல்க்ஷயம், அரோசகக்ஷயம், பாண்டுக்ஷயம் என இருபதாகச்சொல்வர். இவற்றுள், வாதமுதலான நான்கு க்ஷயங்களும் முற்கூறிய வைகளேயாம். மற்றை (௧௬) க்ஷயங்களும் அந்நான்கின் உறுப்புகளேயாம்.

ராஜரோகம் என்னும் க்ஷயரோகங்களுக்கு, முத்துப்பஸ்மம், க்ஷயகுலாந்தகமாத்திரை, மகாராஜமிருகாங்கம் ஆதியானசிகிச்சைகளும் ஆகும்.

குரற்கம்மல்ரோகபேதம்.

குரற்கம்மல் ரோகமானது, வாதக்குரற்கம்மல், பித்தக்குரற்கம்மல், சிலேஷ்மக்குரற் கம்மல், திரிதோஷக்குரற்கம்மல், க்ஷயக்குரற் கம்மல், மேதோகுரற்கம்மல் என ஆறுவிதப்படும். இவைகளுக்கெல்லாம் பொதுவாகச் சுரஸாதரோக மென்று ஒருபேருண்டு.

வாதக்குரற்கம்மல்ரோகம்.

குரல்வளையானது, உள்ளீரம்வறண்டுசுட்கித்து ஒருவேளைமுட்செருகுதல்போல்நோதல், வழுவழுத்தபதார்த்தத்திலுமுஷ்ணபதார்த்தத்திலும் விருப்பம், நடுக்கலானதொனி என்னு மிக்குணங்களையுண்டாக்கும்.

பித்தக்குரற்கம்மல்ரோகம்.

குரல்வளையிலும்தாழ்வாய்த்தாளிலும்எரிச்சலுடன்வறட்டல், பேச்சுப்பேச அசங்கிதம், கம்மியபேச்சு என்னும் இவைகளையுண்டாக்கும்.

சிலேஷ்மக்குரற்கம்மல்ரோகம்.

குரல்வளைக்குள்கோழைபூசினதுபோலிருத்தல்,குறுகுறுவென்னும் அற்பசத்தம், கம்மல்வார்த்தை என்னுமிக்குணங்களையுண்டாக்கும்.

திரிதோஷக்குரற்கம்மல்ரோகம்.

குரல்வளையை இறுக்கிப்பிடிப்பதுபோ லிருப்பதுமன்றி வாதாதி மூன்று குரற்கம்மலுக்குள்ள குணங்களெல்லாமிருத்தல், தொனியை மறிப்பதுபோல்தோற்றல்,கீச்சுக்குரலென்னுமிக்குணங்களையுண்டாக்கும்.

க்ஷயக்குரற்கம்மல்ரோகம்.

குரல்வளையில் மிகவும்புகைகம்மிக்கொண்டதுபோலிருத்தல், குரற் கம்மல் என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.

மேதோகுரற்கம்மல்ரோகம்.

குரல்வளையில் வழுவழுப்புடன் முற்கூறிய சிலேஷ்மக்குரற்கம்மல் ரோகத்துக்குள்ள குணங்களையெல்லாம் உண்டாக்கும்.

சாத்தியாசாத்தியக் குரற்கம்மல்ரோகநிதானம்.

குரற்கம்மல்ரோகம் ஆறுக்குள்,வாதம், பித்தம்,சிலேஷ்மம், க்ஷயம் என்னும் நான்கு குரற்கம்மல் ரோகங்களும் சாத்தியம். மற்றைத் திரி தோஷக்குரற்கம்மலும், மேதோகுரற்கம்மலும் அசாத்தியம்.

இந்தக் குரற்கம்மல் ரோகங்களுக்கு, ஏலாதிச்சூரணம், ஜெயரச பஸ்மம், அரக்குத்தயிலம் முதலிய வைத்தியங்களும் ஆகும்.

அரோசகரோகபேதம்.

நாவையும் மனதையும் அனுசரித்ததிரிதோஷங்களினால் அரோசக ரோகம்பிறக்கும்.இதுவாதாரோசகம்,பித்தாரோசகம்,சிலேஷ்மாரோசகம் சந்நிபாதாரோசகம், துக்காரோசகம் என ஐந்துவிதப்படும்.

வாத அரோசகரோகம்.

வாயைத்துவர்ப்பாக்குவதுமன்றி,வாயில்வைக்கும்பதார்த்தங்களையும் வாயிலூறுஞ்சலத்தையும் துவர்ப்பாகி, ஒக்காளம் வருவதுபோற்செய்யும்.

பித்த அரோசகரோகம்.

வாயை வேப்பங்காயைப்போலக் கசப்பாக்குவது மன்றி, வாயில் வைக்கும் பதார்த்தங்களையும் வாயிலூறுஞ் சலத்தையும் கசப்பாக்கிக் கசப்பான ஒக்காளம் வருவதுபோற் செய்யும்.

சிலேஷ்ம அரோசகரோகம்.

வாயைத்தித்திப்பாக்குவதுமன்றி, வாயில்வைக்கும் பதார்த்தங்களை யும், வாயிலூறுஞ்சலத்தையும் தித்திப்பாக்கி, இளகிய கோழையுடன் இனிப்பான ஒக்காளம் வருவதுபோற் செய்யும்.

சந்நிபாத அரோசகரோகம்.

வாயையும், வாயில்வைக்கும் பதார்த்தங்களையும், வாயிலூறுஞ்சலத்தையும் நானாவிதவுரிசைகளாகவும், ஒருவேளை அவ்வுரிசைகள் ஒன்றுந்தெரியாமையாகவும், அவ்வாறே ஒக்காளம்வருவதுபோலவும் செய்யும்.

துக்க அரோசகரோகம்.

துக்கத்தினாலும், கோபத்தினாலும் அதிகரித்த வாத பித்த சிலேஷ்மங்கள் எந்தப்பிரகாரம் விகாரத்தையடைந்திருக்குமோ அவைகளுக்குத்தகுந்தபடி,கோழையாகியசலம் ஊறும் ; அப்படி ஊறியதை வாயுவானது உள்ளிலிருந்து வெளியில் தள்ளுவதாற்பிறந்து, வாயில் கோழையாகிய சலத்தைமாறாமல் ஊறும்படிசெய்யும். இதுக்குக் கபப்பிரஜேகமென்றும் ஒருபேருண்டு. இந்தரோகத்தை, மிருது திரவியத்தினாலும், உஷ்ண திரவியத்தினாலும் வசப்படுத்தவேண்டும். பிரஜேகம் என்பது சுரப்பு.

இந்த அரோசகரோகங்களுக்கு, நிம்ப அலர்த்தித்திப்பு, நவரசத்துவையல், தீபாக்கினிச்சூரணம், வில்வாதிலேகம் ஆதியானசிகிச்சைகளை நடத்துவதும் அன்றி, ரோகியைச்சந்தோஷப்படுத்தவும்.

வாந்திரோகபேதம்.

வாந்திரோகம் என்பது, வாதவாந்தி, பித்தவாந்தி, சிலேஷ்மவாந்தி திரிதோஷவாந்தி, திருஷ்டான்னவாந்தி என ஐந்துவிதப்படும்.அன்றியும், கிருமிவாந்தி என்பது ஒன்றுண்டு. இவைகட்கெல்லாம்பொதுவாகச்சர்த்திரோகமென்றும், வமனரோகமென்றும் பெயராம்.

வாந்திரோகபூர்வரூபம்.

சுபாவகுணத்துடனிருக்கும் உதானவாயு வாதபித்தசிலேஷ்மங்களை மேல்நோக்கப்பண்ணுவதால் பிறந்த வாந்திரோகமானது, வாய்நீர்ஊறல், அரோசகம்,துக்கம்,வாயிலுப்புக்கரித்தல்என்னுமிக்குணங்களைத்தனக்குப் பழையரூபமாகப் பெற்றிருக்கின்றது.

௧-வது வாத வாந்திரோகலக்ஷணம்.

நாபிஸ்தானத்திலும் அடிமுதுகிலும் அதிக நோவை யுண்டாக்கி இரண்டுவிலாப்பக்கங்களிலும் நிற்கின்றவாயுவானது,புசிக்குமாகாரத்தைக் கீழிறங்கவொட்டாமல்மேல்நோக்கச்செய்து,கொஞ்சம்கொஞ்சமாகவாயில் நுரையோடுங்கூடத் துவர்ச்சலமாக வாந்திபண்ணச்செய்யும். அப்போது, கண்டத்தில் ஒருசத்தத்துடன்வேதனை,கறுத்தசலமாகவும்நல்லசலமாகவும் வேகத்துடன் வாந்தியாகுதல், வாய்வறளல், மார்புநோவு, தலைநோவு, குரற்கம்மல், இருமல், இளைப்பு என்னும் இக்குணங்களுண்டாகும்.

௨-வது பித்த வாந்திரோகலக்ஷணம்.

உப்புநீராகவும், புகைநிறச்சலமாகவும், பச்சிலை ரசவன்னமாகவும், மஞ்சள்வன்னமாகவும், ரத்தத்தோடுபுளிப்பாகவும், காரமாகவும், சுடுகையாகவும் வாந்தியாகும். அப்போது, தாகம், தேகவெரிச்சல், காங்கை, தலைசுழலல், மூர்ச்சை என்னும் இக்குணங்களுண்டாகும்.

௩-வது சிலேஷ்ம வாந்திரோகலக்ஷணம்.

வழுவழுப்பாகவும், தடிப்பாகவும், சீதளமாகவும், கோழையாகவும் நூலைப்போல் கொடிகொடியாகவும், பூமியில்விழுந்தால் சிறுசிறு குமிழிகளைப்போல் அனந்தங்கண்கள்விழுவதாகவும், இனிப்பாகவும், உப்பாகவும் ரத்தம் பூசினதுபோலும், விசேஷமாகவும் வாந்தியாகும். அப்போது, ரோமச்சிலிர்ப்பு, முகத்திற்கொஞ்சம் அதப்பு, சோருதல், வாயில் மிகுந்த இனிப்பு, மார்புதுடித்தல், இருமல் என்னும் இக்குணங்களுண்டாகும்.

௪-வது திரிதோஷ வாந்திரோகலக்ஷணம்.

இருபக்கத்திலும் இசிவு, மார்பிலும்கண்டத்திலும் தலையிலும்நோவு, கண்பிதுங்குவதுபோலிருத்தல், கண்ணிலும் நாசியிலும் சலம்பெருகல், சர்வாங்கத்திலும் பொறுத்துப்பொறுத்துக் குபீலென்று எரிச்சலுண்டாகுதல், அதிகதாகம், பிரமை, மூர்ச்சை, தலைசுழலல், கை கால் விலவிலத்தல், நடுக்கல், தொண்டைக்குள் கொழுவைக்காய்ச்சிவைத்ததுபோல் வேதனைபிறக்குதல், உப்பாகவும் கசபபாகவும் இனிப்பாகவும்வாயில்சலமூறிவாந்தியாகுதல் என்னும் இக்குணங்கள் உண்டாகும். அன்றியும், வாதமுதலான மூன்று வாந்திரோககுணங்களும் அசாத்திய வாந்தி ரோககுணங்களும் இதில் உண்டாகும். இது சிகிச்சைகளுக்குவசப்படாது.

௫-வது திருஷ்டான்ன வாந்திரோகலக்ஷணம்.

கபடம், வஞ்சனை, கெடுநினைப்பு முதலிய துர்க்குணங்களையுள்ளவர்கள் பார்க்கும்படியாகப் புசித்தவனுக்கும்: சகல பதார்த்தங்களோடு திருப்தியாகப்புசிக்கிறவனைப்பார்த்து, நமக்கில்லையேயென்று ஏக்கத்தையடைந்தவனுக்கும்: அறுசுவைவருக்கத்தோடு குறைவில்லாமல் புசித்துவந்தவன் தான்புசித்ததைச்சொல்லக்கேட்டு, நமக்குக்கிடைக்க இல்லையே என்றுவிசனத்தைஅடைந்தவனுக்கும் வாந்திரோகங்காணும். அந்தவாந்தியில்நாற்றமும் அசுசியும்அதிதுர்க்கந்தமுமுண்டாயிருக்கும்இதற்குதிருஷ்டிதோஷம், திருஷ்டார்த்தயோகசம், கண்ணேறுவாந்தி எனவும்பெயராம். இந்தரோகத்துக்குத்தந்திரசாந்தியான எரி எண்ணெய் முதலியவைகளால் வைத்தியம் பண்ணவேண்டும். திருஷ்டம் என்பது பார்வை

கிருமி வாந்திரோகலக்ஷணம்.

வாதாதிகளினாலும் திரிதோஷத்தினாலும் கிருமிகள் உற்பத்தியாகி நெளிவதினால், வயிற்றுநோவு, தேகம்நடுக்கல், மார்பில்துடித்தலுடன்

பிருந்தநோவு என்னும் இக்குணங்களுண்டாகி வாந்தியாகும். இதில் கிருமிகளும்விழும். இதற்குக்கிருமிசம் என்றும் ஒருபேருண்டு.

அசாத்திய வாந்திரோகலக்ஷணம்.

மலமாகவும், ரத்தமாகவும், சீழாகவும், மலமூத்திர நாற்றமாகவும், ரத்தப்புள்ளிகளிருப்பதாகவும், இடைவிடாமல் விசேஷம்விசேஷமாகவும், சீக்கிரஞ்சீக்கிரமாகவும், பூமியில்விழுந்தால் அவைகளில் சல்லடைக் கண்களைப்போல் துவாரங்கள் விழுவதாகவும் வாந்தியாகி, இருமலும் இரைப்பும் உண்டாகித் திரிதோஷவாந்தியில் சொல்லிய குணங்களும் பிறந்து வைத்தியத்துக்குக் கட்டுப்படாமலும் இருந்தால், அசாத்தியம்.

இதுகளுக்கு,ஏலக்காய்த்தோலும்,விலாமிச்சம்வேரும்சேர்த்திறக்கிய கஷாயத்தில், இஞ்சிச்சாறுகூடியரசாயனம்,குங்குமப்பூக்குழம்பு, பாவனக் கடுக்காய், மகாவில்வாதிலேகியம் முதலியசிகிச்சைகளும் ஆகும்.

மார்புரோகபேதம்.

மார்புரோகமானது,வாதமார்புரோகம்,பித்தமார்புரோகம்,சிலேஷ்ம மார்புரோகம், திரிதோஷமார்புரோகம், கிருமிமார்புரோகம் என ஐந்து விதப்படும்.இவைகட்குப்பொதுவாகஇருத்ரோகமென்றும்ஒருபெயருண்டு. இதனைத்தமர்வாதம் என்பது சிலர்பக்ஷம். இருத் என்பது மார்பு, தமர் என்பது துவாரம். இது ருத்திரவாதமென வழங்கப்படுகின்றது.

௧-வது வாத மார்புரோகம்.

மார்பில் சூலத்தால் குத்துதல்போல் குத்தல், நோவு, அதிரல், உடைதல்போலிருத்தல், மரத்தல்,மார்பில்லாதுபோல்தோற்றல், உள்ளில் ஈரமில்லாதுபோ லிருத்தல் ஆகிய இக்குணங்களை யுண்டாக்குவது மன்றி, காரணமில்லாமலே அதயிரியம்,துக்கம்,பயம்,புரளல்,பேச்சில் அசங்கிதம், சரீரம்நடுங்கல்,மூச்சுப்பிடிப்பு,ஒருவேளை திணறலானமூச்சு,அற்பநித்திரை என்னும் இக்குணங்களையும் உண்டாக்கும்.

௨-வது பித்த மார்புரோகம்.

மார்புக்குள்நோவுடன் எரிச்சல், தாகம், மனதிற்பிரமை, மூர்ச்சை, சரீரம், எரிச்சல், வியர்வு, புளியேப்பம், இளைப்பு, வாந்தி, ஆமல பித்த ரோககுணங்கள், தூமா அசீரணரோககுணங்கள் என்னும் இக்குணங்களை யுண்டாக்குவது மன்றி, எந்தப் பதார்த்தத்தையாவது புசிக்கவேண்டும் என்கிற இச்சையையும் சுரரோகத்தையும் உண்டாக்கும்.

௩-வது சிலேஷ்ம மார்புரோகம்.

மார்பைக் கெட்டியாக மூச்சுப் பிடித்ததுபோல் ஸ்தம்பமாக்கிப் பிடித்தல், அவ்விடத்தில் பாராங்கல்லை வைத்ததுபோலிருத்தல், இருமல்,

மந்தாக்கினி, வாயிற்கோழைபெருகல், நித்திரை, சோம்பல், அரோசகம், சுரம் என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.

௪-வது திரிதோஷ மார்புரோகம்.

மார்பில்ஈட்டியால்குத்துதல்போல்ஒடிஒடிக்குத்துதல்,யவ்விடத்தில் பிளந்து போவதுபோலிருத்தல், எரிச்சல், கனத்தல், அமூர்ச்சை, பிரமை, தாகம், சுரம் ஆகிய இக்குணங்களைப் பிறப்பிப்பதன்றியும், வாதாதிமூன்று மார்புரோக துர்க்குணங்களையெல்லாம் ஏககாலத்தி லுண்டாக்கும். இது, மரணவேதனையைத்தருவதால், கஷ்டசாத்தியம்.

௫-வது கிருமி மார்புரோகலக்ஷணம்.

சிலேஷ்மாதிக்க வஸ்துக்களினாலும், கருணைசேம்புமுதலிய கிழங்குகளினாலும், ஆமாசயஸ்தானத்தில் பெரும் பூநாகத்தைப்போலும் நீர்ப்பாம்பைப்போலும் பெரிதாகவும் சிறிதாகவும் பூச்சிகள் உற்பத்தியாகிச் சாதாரணமாகப் பூமியிற்சஞ்சரிப்பதுபோல் உள்ளேயே குடலில் ஓட்டிப் பின்னிக்கொண்டு இருதய ஸ்தானத்துக்குமேலும் எதிர்த்தேறுவதால், மார்பில் துடித்தலுடன் அதிரல், அவ்விடத்தில்வீக்கம், அதிகநமைச்சல், ஒருவேளை மார்புதெறித்து விழுவதுபோலும் வாளா லறுபடுவதுபோலுமிருத்தல், கண்கள்கறுப்பாகத்தோற்றல், சிலவேளை இருட்டிக்கொள்ளல், வாயில் கோழைவிழுதல் என்னும் இக்குணங்கள் உண்டாகும். இந்த ரோகமானதுசுவாசம்வருகின்றமார்க்கத்தையடைத்துஅகாலமரணத்தைத் தருவதால், இதற்கு அதிகவிரைவில் கிருமிகள்விழும்படியான கசப்புள்ள விரேசன அவுஷதம் கொடுக்கவேண்டும்.

சாத்தியாசாத்திய மார்புரோகநிதானம்.

மார்புரோகம் ஐந்துக்குள், வாதமார்புரோகமும், பித்தமார்புரோகமும், சிலேஷ்மமார்புரோகமும் சாத்தியம். திரிதோஷமார்புரோகம் கஷ்டசாத்தியம். கிருமிமார்புரோகம் அசாத்தியம். உடனே தகுந்த சிகிச்சைகள் நடக்குமாகில், கஷ்டத்திலும் கஷ்டசாத்தியம்.

இந்தமார்பு ரோகங்களை, மதுநீராகாரம், சுகுமாரவிரேசனம், பன்னீர்ப்பூவாதிக்கஷாயம், மதுஸ்மிகிரசாயனம், மகாவில்வாதிலேகியம் முதலியசிகிச்சைகளைக்கொண்டு நிவிர்த்திசெய்யவும்.

மூன்றாவது ரத்தபித்தரோகபடலம் முற்றியது.

உ

சுப்பிரமணியர் துணை.

ஸ்ரீ வரக்ஷாமிர்தம்.

நான்காவது

தாகரோகபடலம்.

தாகரோகபேதம்.

வாதபித்த முயற்சியினால், தாகரோகம்பிறக்கும். இது,வாததாகம் பித்ததாகம், சிலேஷ்மதாகம், திரிதோஷதாகம், ரசக்ஷயதாகம், உபசர்க்க தாகம் என ஆறுவிதப்படும். இது,சப்ததாதுக்களும் எப்போது இளைத்து மெலியுமோ அப்போது, அதிகபலத்துடன் மேலிடுமென்றறிக.

தாகரோகபூர்வரூபம்.

தாகரோகமானது, மனதுக்குப் பிரமையுண்டாக்குதல், அதினால், அவயவங்கள்நடுக்கல், சரீரத்தில் எரிச்சலோடு காங்கை,தாகம்,சோருதல், நாவின்மூலத்திலும் கண்டத்துக்குள்ளிலும் * குலோமத்திலும் தாடையிலும்சலத்தைத்தாங்கிப்பசையோடுமிருக்கின்றநரம்புகளெல்லாம்உலரல், வாயுலரல், எவ்வளவுசலம் அருந்திலும் பூர்த்தியடையாமை, அன்னத்துவேஷம், குரற்கம்மல், நெஞ்சுக்குழியிலும் நாவிலும் உதட்டிலும் சலம் வறண்டு வறவறப்பு, பாம்புநாக்கைப்போல் அடிக்கடி நாவானது வெளிப்படல், அந்தநாக்கினால்மாறாது உதடுகளைத்தடவல், இளைப்பு, பிரலாபம், மனக்கெடுதி, மலம்நழுகல் என்னும் இக்குணங்களைத் தனக்குப் பழைய ரூபமாகப்பெற்றிருக்கின்றது.

க-வது வாததாகரோகம்.

இளைப்பு,அதயிரியம்,நெறிகளதிரல்,தலைநோவு,வாசனுபங்கம்,அரோசகம்,காதுமந்தம்,நித்திரையும்பலமும் குறைதல்,குளிர்ந்தசலம்எவ்வளவு அருந்தினும் தாகமதிகரித்தல் என்னும் இக்குணங்களை யுண்டாக்கும்.

உ-வது பித்ததாகரோகம்.

மூர்ச்சை, வாய்கசப்பு, கண்கள்சிவப்பு, மிகவும்நாவறளல், எரிச்சல், வாயிற்புகையெழல் என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.

---

* குலோமம் என்பது வலப்பக்கத்து ஸ்தனத்தின்கீழ் குடித்த சலமிறங்கிநிற்கும் இடமாம்.

௩-வது சிலேஷ்மதாகரோகம்.

நெஞ்சில் முட்சொருகல் போலிருத்தல், நித்திரை, வாயினிப்பு, வயிறுப்பிசம், தலைபாரம், தேகமரத்தல், வாந்தி, அரோசகம், சோம்பல், அசீரணரோகக்குறி என்னும் இக்குணங்களை யுண்டாக்கும். கபமானது அதிக்கிரமித்து, பசையுள்ளசலநரம்புகளில்வாயுவைச்செல்லவொட்டாமல் மறித்து, தானும்சேறுபோற்சோஷிப்பதினால், இந்தரோகம் பிறக்கும்.

௪-வது திரிதோஷதாகரோகம்.

வாதாதிதாகரோகங்களுக்குள்ளகுணங்களையெல்லா முண்டாக்கும்.

௫-வது ரசக்ஷயதாகரோகம்.

நாக்கு உலரல், மதிப்பிரமை, தேகஞ்சுட்கல், இளைப்பு, எந்தச் சத்தத்திலும் அசங்கிதம் என்னும் இக்குணங்களை யுண்டாக்கும். இது ரசதாது சீரணப்படுங்காலத்தில் பிறப்பதென்றறிக.

௬-வது உபசர்க்கதாகரோகலக்ஷணம்.

தித்திப்பு உப்பு முதலிய வஸ்துக்களைப்பிரமாணந்தப்பி அருந்துங் காலத்தும், களைத்தகாலத்தும், சோர்வு அடையுங்காலத்தும், தாபச் சுரகாலத்தும், சரீரத்தில் நெடுநாளாகப்பற்றிய ரோகங்களின் விஷம காலத்தும் தாகரோகம்பிறக்கும். இதுவே உபசர்க்கதாக ரோகமாம். இதற்குத்தந்திரசாந்திகளேமுக்கியமாம். உபசர்க்கம் என்பது சேர்க்கை.

அசாத்தியதாகரோகம்.

அறிவழிந்தகாலத்தும், நாவானதுதொழிற்படாமல் ரோகத்தால் வெளியில் நீண்டுவிட்டகாலத்தும், வாய்க்குள் உண்டான ரோகத்தால் தொண்டைக்குள்சலமிறங்காதகாலத்தும்தாகரோகம்பிறந்தால், கொல்லும்.

இதுகளுக்கு, வாலுகாஷ்டிகக்கஷாயம், அமிர்தாதிச்சூரணம், தாக கோபசமனமாத்திரை, கற்பூரக்குளிகை முதலியசிகிச்சைகளும் ஆகும்.

மதாத்தியயரோகபேதம்.

சுக்கிலம், காமச்சலம், பலம், கொழுப்பு முதலியவைகளுக்கு, மதம் என்றுபேர். இவைகளை அத்தியயம் பண்ணுவதால், இது மதாத்தியயம் எனப்பேர்பெற்றது. அத்தியயம் என்பது நாசம். இந்த ரோகமானது, வாதமதாத்தியயம், பித்தமதாத்தியயம், சிலேஷ்மமதாத்தியயம், திரிதோஷ மதாத்தியயம் என நான்குவிதப்படும். அன்றியும், தும்மிசகம், விக்ஷயம் என இரண்டுரோகங்கள் தனித்தனியே உண்டாம்.

மதாத்தியயரோகபூர்வரூபம்.

மதாத்தியயரோகமானது, மிகவும்சோருதல், நானாவிதமலம் நழுகல், இடைவிடாததாகம், உஷ்ணசுரம், சீதசுரம், அரோசகம், மார்பிலும்

சிரசிலும், தோட்களிலும், விலாப்பக்கங்களிலும், மர்மஸ்தானங்களிலும், தொடைகளிலும் அதிகநோவு, நடுக்கல்,கல்லடைத்துக்கொண்டதுபோல் மார்பில் அடைப்பு,கண்களில்இருட்கம்மல்,இருமல்,இரைப்பு, நித்திரைப் பங்கம், வியர்வை, ஒருவேளைமலபந்தம்,வீக்கம்,சித்தப்பிரமை,பிரலாபம், வாந்தி, மார்பிற்சங்கட்டம், மயக்கம், துர்ச்சொப்பனம் என்னும் இக்குணங்களைத் தனக்குப் பழையரூபமாகப் பெற்றிருக்கின்றது.

க-வது வாதமதாத்தியயரோகம்.

இரவும்பகலும் நித்திரைப்பங்கம், இரைப்பு, நடுக்கல், தலைநோவு, துர்ச்சொப்பனங்கண்டு பிரமித்தல், திடீலென்று சரீரங்குலுங்குதல், பைசாசத்தோடும்முன்பு இறந்தவர்களோடும் தான் பேசுவதாகவிருத்தல் என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.

உ-வது பித்தமதாத்தியயரோகம்.

தேகம் பச்சிலைரசவன்னமாகவும் மஞ்சள்வன்னமாகவும் தோற்றல், கன்னமும் கண்ணும் சிவப்பாகவிருத்தல்,எரிவு,சுரம்,வியர்வை,சோருதல், பேதி, தாகம், பிரமை என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.

௩-வது சிலேஷ்மமதாத்தியயரோகம்.

வாந்தி, மார்புஅதிரல், அதிகநித்திரை, சரீரத்தில் தடிப்புகளுடன் பாரிப்பு என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.

௪-வது திரிதோஷமதாத்தியயரோகம்.

இது வாதமுதலான மூன்று மதாத்தியய ரோகங்களுக்குள்ள குணங்களையெல்லாம் ஏககாலத்தில் உண்டாக்கும்.

தும்மிசக விக்ஷயரோகபூர்வரூபம்.

வழக்கமாகப்புசிக்கின்ற வஸ்துக்களைவிட்டு, நாள்தோறும் சாராயத்தையும் மாமிசத்தையும் அதிகவிருப்பமோடு மிகுதியும் குடித்துப் புசித்தவர்கட்கு,தும்மிசகமென்றும்,விக்ஷயமென்றும் இரண்டுரோகங்கள் பிறப்பனவாம். இவ்விரண்டுக்கும், இச்செய்கைகளே பழையரூபமாம்.

க-வது தும்மிசகரோகம்.

வாயினால்கோழைகோழையாகக்கக்கல்,வார்த்தைகேட்க அசங்கிதப் படுதல், நெஞ்சுலரல், அதிகநித்திரை,சோம்பல் என்னும் இக்குணங்களையுண்டாக்கும். இது, தேகத்தை சீக்கிரத்தில் நாசம் பண்ணுவதால், தும்மிசகரோகம் எனப்பேர்பெற்றது.

உ-வது விக்ஷயரோகம்.

தேகம்,சிரசு,மார்பு ஆகியஇவ்விடங்களில் அதிகநோவு, கண்டத்தை யிறுக்கிப் பிடித்ததுபோ லிருத்தல், சோருதல், இருமல், தாகம், வாந்தி,

சுரம்என்னும்இக்குணங்களையுண்டாக்கும்,இதுபலத்தையும்சரீரத்தையும் ஒடுங்கப்பண்ணும். விக்ஷயம் என்பது குறைதல்.

அசாத்தியமதாத்தியயரோகநிதானம்.

எந்தமதாத்தியயரோகத்திலேனும், அதிகசீதளத்தினல், சொல்லக்கூடாத வருத்தம்உண்டாகி, சரீரமிகவுஞ்சுட்கித்து,முகத்தில்எண்ணெய் தடவினதுபோல் துர்க்குணமும் பிறந்தால், மரணமே.

இதுகளுக்குப் பூரணச்சந்திரோதயம்,காமாங்குரரசம், திரிகடாத்தி மண்டூரம் முதலியமருந்துகளும் ; சரீரத்திற்குப் பலத்தைக் கொடுக்கின்ற எவ்வித ஒஷதி அவுஷதங்களும் ஆகும்.

மதரோகபேதம்.

மதத்தையுண்டாக்குவது மதரோகமாம். இந்த ரோகமானது,வாதமதரோகம், பித்தமதரோகம், சிலேஷ்மமதரோகம், சந்நிபாதமதரோகம், ரத்தமதரோகம், மத்தியபானமதரோகம், விஷமதரோகம் எனஏழுவிதப்படும். மதம் என்பது அகங்காரம்.

க-வது வாதமதரோகம்.

ஈனத்தொனி, இடைவிடாத வார்த்தை, ஒன்றிருக்க ஒன்றைச் செய்கின்ற கெடுதிநடத்தை, தேகத்தில் கறுத்தவன்னம் அல்லது சிவந்த வன்னமாகவிருத்தல் என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.

உ-வது பித்தமதரோகம்.

கோபம், கலகப்பிரியம், சரீரம் மஞ்சள்வன்னம் அல்லது சிவப்பு வன்னமாகப்பேதிக்குதல் என்னும் இக்குணங்களை யுண்டாக்கும்.

ங-வது சிலேஷ்மமதரோகம்.

தியானஞ் செய்பவர்போலிருத்தல், ஒன்றுக்கொன்று சம்பந்தம் இல்லாமல் அதிகவிரைவாகப் பேசுகின்றவார்த்தை, தேகம் வெளுத்தல் என்னும் இக்குணங்களை யுண்டாக்கும்.

ச-வது சந்நிபாதமதரோகம்.

வாதமுதலான மூன்று மதரோகங்களுக்குள்ளகுணங்களை எல்லாம் ஏககாலத்தில் உண்டாக்கி விருத்திசெய்யும். இது அசாத்தியம்.

ரு-வது ரத்தமதரோகம்.

தேகமும்கண்ணுமரத்தலுடன் பித்தமதரோககுணங்களையுமுண்டாக்கும்.

சு-வது மத்தியபானமதரோகம்.

சரீரத்திற்பலவிதக்கெடுதி, முகத்தில் ஒளிநீங்குதல், தொனிகெடல், எவர்களிடத்திலும் நிராசை என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.

எ-வது விஷமதரோகம்.

முற்கூறிய மதரோகங்களின் குணங்களைப்பார்க்கிலும் அதிகதுர்க்குணங்களையும் பிறப்பிப்ப தன்றியும், நடுக்கலையும் மிகு நித்திரையையும் உண்டாக்கும். இவ் வேழுமதரோகங்களும், முன்பு (௩-ம்) படலத்தில் சொல்லிய ரத்தபித்தரோகங்களின் குணங்களையெல்லாம் பெற்றிருக்கும்.

இதுகளுக்கு, சீதோஷ்ணமானவிரேசனம், கார்ப்பாசச் சூரணம், கூவிளலேகம், விலாசமிச்சுச்சந்தனத்தயிலம் முதலிய சிகிச்சைகளும் உதவும்.

மூர்ச்சாரோகபேதம்.

மூர்ச்சைரோகமானது, வாதமூர்ச்சை, பித்தமூர்ச்சை, சிலேஷ்மமூர்ச்சை, திரிதோஷமூர்ச்சை என நான்குவிதப்படும். அன்றியும், சந்நியாசிரோகம் என்பது ஒன்றுண்டு.

க-வது வாத மூர்ச்சாரோகலக்ஷணம்.

ஆகாயத்தைப் பார்த்தால், நீலவன்னம் கறுப்புவன்னம் சிவப்புவன்னம்போல் தோற்றப்பட்டு, மூர்ச்சையுண்டாகி உடனே தெளியும். பின்பு, மார்புநோவு, நடுக்கல், பிரமை என்னும் இக்குணங்களுண்டாகித் தேகம் இளைக்கும். அப்போது சரீரம்கறுத்து அல்லதுசிவந்துஇருக்கும்.

உ-வது பித்த மூர்ச்சாரோகலக்ஷணம்.

ஆகாயத்தைப் பார்த்தால், மஞ்சள் வன்னமாகவும் சிவப்பு வன்னமாகவும்தோற்றப்பட்டு,மூர்ச்சையுண்டாகி உடனேதெளியும். பின்புதேகஎரிச்சல்,காங்கை,தாகம்,வியர்வை, துண்டுதுண்டாக மலம்நழுகல் என்னுமிக்குணங்கள் உண்டாகும். அப்போது, தேகம்மஞ்சள்வன்னம் அல்லது கறுத்தவன்னமாகத்தோற்றும். அன்றியும் இரண்டு கண்களும் கலங்கிச் சிவந்தாவது மஞ்சள்நிறத்தைப் பெற்றாவது இருக்கும்.

௩-வதுசிலேஷ்மமூர்ச்சாரோகலக்ஷணம்.

ஆகாயத்தைப்பார்த்தால், மேகங்கள்கம்மினாற்போல்தோற்றப்பட்டு மூர்ச்சையுண்டாயுடனேதெளியாமல் வெகுநேரம்பொறுத்துத்தெளியும். அப்போது, மார்பதிரலும், வாயில் சலம்வடிதலுமுண்டாகி, அவயவங்களெல்லாம் அசைக்கக் கூடாமையாக நனைந்துதடித்த சருமத்தைப் போர்த்துக்கொண்டதுபோல் சரீரம் கனத்திருக்கும்.

௪-வது திரிதோஷ மூர்ச்சாரோகலக்ஷணம்.

முற்கூறிய வாதாதிமூர்ச்சாரோககுணங்களெல்லாம் பிறந்து, கோரசேட்டைதவிர்ந்த பித்தஅபஸ்மாரரோகத்தைப்போல் இந்திரியவியாபாரங்கெட்டு, மூர்ச்சையுடன் விழுந்துகிடக்குந்தன்மையுண்டாயிருக்கும். இந்தரோகத்திலும், முற்கூறிய சந்நிபாதமதரோகத்திலும், அதிகரித்த

தோஷங்களினால், தனக்குத்தானேபிறந்த துர்க்குணங்கள்சந்நியாசிரோகச் செய்கையைச் செய்வனவாம். இவைகளுக்கு அவுஷதங்களாற்பயனில்லை.

மேற்சொல்லிவந்த மூர்ச்சாரோகங்களை, திரிதோஷ பரிகாரமான வமன விரேசன ஆக்கிராண கலிக்கமருந்துகளினாலும், மகாவிஷமுஷ்டித் தயிலமுதலிய சிகிச்சைகளினாலும் பரிகரிக்கவேண்டும்.

சந்நியாசி ரோகலக்ஷணம்.

வாத பித்த சிலேஷ்மங்களானவை, பிராணஸ்தானங்களில் அதி பராக்கிரமத்தோடுசேர்ந்து அதிகரித்துச் சந்நிபாதமாகி, மனம் வாக்கு காயம் என்னும் திரிகரணங்களின் செய்கைகளை அடக்கிவிட்டு, பின்பு தாமும் அடங்கிச் சந்நியாசிரோகத்தைப் பிறப்பிப்பனவாம். அப்போது, இந்தரோகி திடீரென்று வெட்டிமுறித்த மரத்தைப்போலவே விழுவான். விழும்போது, உயிரிருந்தாலும், உயிரில்லாத சவத்தைப்போலவேகிடந்து இறந்துவிடுவான். இதுவே சந்நியாசிரோகச்செய்கையாம். ஒருவேளை இவன் பிழைப்பானென்றெண்ணும் வைத்தியர்கள் எண்ணம் எதுவாமென்றால், மனிதர்கள்சஞ்சார மில்லாமலும், பிடித்தேறுவதற்கு ஆதர வில்லாமலும் ஆழ்ந்து, முதலைகளையுடையதாயிருக்கின்ற பெரியமடுவில் விழுந்தவனை பிழைப்பானென் றெண்ணுவதுபோலாம். இந்தஉவமையின்கருத்து சேதன பிரபலத்தையும் அசாத்தியக்குறிகளையும் தெரிவித்தது.

இப்படிக்குச்சொல்லியபோதிலும், சிகிச்சாசாரத்திற் சொல்லிய பிரகாரம் சிகிச்சைசெய்தால், ஒருவேளை சாத்தியத்துக்கு வந்தாலும் வரும்.

மூலரோகபேதம்.

இது, ஆசனவளையங்களில் கிழங்குமுளைகளைப்போலும் வேர்களைப் போலும்மாமிசமுளைகளைப்பெற்றிருக்குங்காரணத்தால், மூலரோகமெனும் பெயரும்; குதகீலம் குதாங்குரம் துர்நாமம் அரசம் எனும் நான்கு பரியாயப் பேர்களும் உடைத்தாய்ப் பலவிதப் பிறப்பையும் பலவிதப் பேரையும் பெற்றிருந்தாலு முடிவிலிருவிதப்பிறப்பினுள்ளு மிருவிதப்பேரினுள்ளும் அடங்கும். இதன்விவரம், தாய் தந்தைகள்வழியாகத் தேகத்தில் கூடவே பிறப்பது ஒருவிதம்; இதற்குச் சகச மூலரோக மென்றுபேர்: கொடிய காங்கைவஸ்துகள் முதலியவையால் சுபாவதேகத்தில் பிறப்பது ஒருவிதம்; இதற்கு உத்தரசமூலரோகமென்று பேர். இவ்விரண்டில் உலர்ந்ததுபோல் சுருங்கியிருப்பது சுட்கமூல மென்றும், ரத்த முதலிய கசிவைத் தருவது ஆர்த்திர மூலமென்றும் பேர்பெறும். இவைநிற்க உத்தரஸ்தானமென்கிற வைத்திய கிரந்தம் மூலரோகத்தை வாதமூலரோகம், பித்தமூலரோகம், சிலேஷ்ம மூலரோகம், தொந்த மூலரோகம், திரிதோஷ மூலரோகம், ரத்தமூலரோகம் என ஆறுவிதமாகச் சொல்லுகின்றது.

மூலரோகபூர்வரூபம்.

மூலரோகமானது, அக்கினிமந்தம், மலபந்தம், அடித்தொடைச் சதையிலும் கணுக்கால்கண்டச்சதையிலும் அதிகநோவு,ஆயாசம்,உடம்பு நாளுக்குநாளிளைத்தல்,கண் அதைப்பு,பேதியல்லதுமலக்கட்டு,ஆசனத்தில் மிகுநோவு, அபானவாயுபறிதல் என்னும் இக்குணங்களையும்: அவ்வாயு, எந்நேரமும்நாபிக்குக்கீழ்வயிற்றில்ஒருசத்தத்தோடும்நோவையுண்டாக்கிச் சஞ்சரித்தலால், நோவுடன் கொஞ்சம்கொஞ்சம் மலம் பிரயாசையாக வெளிப்படல்,ஆசனம் குடல் இவற்றிலிரைச்சல் என்னுமிக்குணங்களையும்: பின்னும் அவ்வாயுவே மேல்நோக்கலால் இளைப்பு, ஏப்பம், சிலவேளை புளியேப்பம், சிலவேளை விசேஷ ஏப்பம், அடிக்கடி நீரிறங்கல், சொற்ப மலம் நழுகல், எந்தக்காரியத்திலும் புத்திசெல்லாமை, சிரசு முதுகு மார்பு என்னும் இவ்விடங்களில் குத்தல், சோம்பல், சரீரத்தில் மாறுவன்னம் பஞ்சேந்திரியங்களுக்கும் அயர்ச்சி, தூர்ப்பலம், கோபம், மனோதுக்கம் என்னுமிக்குணங்களையும் ; கிரகணி,தோஷம்,பாண்டு,குன்மம்,மகோதரம் என்னும் இவைகளால் உண்டாகுந் துர்க்குணங்களையும் தனக்குப் பழையரூபமாகப்பெற்றிருக்கின்றது.

க-வது சகசமூலரோகம்.

மூளையானது கடினமாகவும் யாரேனும் பார்க்கக் கூடாமையாகவும் உள்ளுக்குள்ளேமுகங்காணப்பட்டு வெண்மையாய் அதிகஉபத்திரவத்தை யுண்டாக்கும். சகசம் என்பது உடன்பிறப்பு.

உ-வது உத்தரசமூலரோகம்.

அதிகஉஷ்ணத்தால்பிறந்தசீதளம், அமூலே, கிரந்தி,சகிக்கக்கூடாத உஷ்ணம், மிகுசையோகம், கோபத்தைச் சகித்தல், அதிக உப்புவஸ்து, காரவஸ்து,தனநஷ்டம் என்னும் இவைகளினால் சுபாவதேகத்திற் பிறந்து, பலவிதமான முளைகளைக்கொண்டு உபத்திரவங்களையுண்டாக்கும்.

சுட்கமூலரோகம்.

மூளையானது உலர்ந்ததுபோல்சுருங்கிக்கொண்டு நோவையுண்டாக்கும். இது வாதசிலேஷ்மத்தினால் பிறக்குமென்றறிக.

ஆர்த்திரமூலரோகம்.

எந்நேரமும்ரத்தமுதலியகசிவையுண்டாக்கும்.இது ரத்தத்தினாலும் பித்தத்தினாலும் பிறக்குமென்றறிக. ஆர்த்திரம் என்பது கசிவு.

க-வது வாதமூலரோகலக்ஷணம்.

மூளைகள் உலர்ந்தும், வாடியும்,நெறித்தும்,பரபரப்புடன்சிவந்தும், கறுத்தும், மேடுபள்ளமாகவும், கடினமாகவும், சுறசுறத்தும், நெருங்கியும்

வளைந்தும், முனைகூர்மையாகவும், முகம்விரிந்தும், குத்தலோடு நெருப்பிட்டதுபோல்எரிச்சலாகவும் இருக்குதல். அம்முளைகள்,கோவைப்பழம், இலந்தைப்பழம், பேரீச்சங்காய், பருத்திக்காய், கடுகு, கடப்பம்பூ இவைகளின் பிரமாணங்களையும் நிறங்களையும் ஒத்திருக்கும். மேலும், இந்த ரோகிக்குச் சிரசு, விலாப்பக்கம், தோள், இடுப்பு, தொடை, இருகவுட்டி ஆகிய இவ்விடங்களில் அதிநோவு, தும்மல், ஓக்காளம், மலபந்தம், மார்பு அதிரல், அரோசகம், இருமல், இளைப்பு, விஷமாக்கினி, காதிரைச்சல், பிரமை என்னுமிக்குணங்களுண்டாவதன்றியும்; முக்கலினால் ஆசனத்தில் மிகுநோவுண்டாகி,கொஞ்சம்கொஞ்சமாக இரைச்சலோடுங்கூடஅடிக்கடி வருவதுபோல் துண்டுதுண்டாகநுரைத்துப்பிசின்போலவே மலம்விழும். விழுந்தாலும், நடுவேயிருக்கின்றமலம் மிகவுந்தீய்ந்து கெட்டிப்பட்டது போலவேயிருக்கும். இந்தமலமும், மூத்திரமும், கண்களும், முகமும், சருமமும், நகங்களும் கறுப்பாகவேதோற்றும். இந்தரோகம், நாள்படத் தேகத்தில்பற்றுமாகில், குன்மரோகத்தையும்,பிலீகரோகத்தையும்,மகோதரரோகத்தையும், யஷ்டிலாரோகத்தையும் உண்டாக்கிவிடும்.

உ-வது பித்தமூலரோகலக்ஷணம்.

முளைகள் சிவந்தநிறமாகவும், மஞ்சள்நிறமாகவும், காந்தியாகவும், வெண்மையாகவும், முனைகறுத்துமெல்லியதாகவும், கொஞ்சம் ரத்தத்துடன் துர்க்கந்தமாகவும், கொஞ்சமிருதுவாகவும், அசையப்படுவதாகவும் இருக்கும். அம்முளைகள் * யகிருதிகண்டம், அட்டைமுகம் இவைகளையொத்திருக்கும் இந்தரோகிக்கு,தாகம்;சிரணம்,சுரம்,வியர்வை,உதடுலரல், மூர்ச்சை, அரோசகம், சோருதல் என்னும் இக்குணங்களுண்டாகி, உஷ்ணத்தோடு சலமாகவும்,மஞ்சளும்சிவப்பும்கலந்தநிறமாகவும், கொதிப்பாகவும், சீதமாகவும் மலம்விழும். அன்றியும், சருமம் முகம் முதலான அவயவங்கள் கோதுமைச்சாராய், பச்சிலைரசம், இளமஞ்சள் இவைகளின் வன்னமாகத்தோற்றும்.

௩-வது சிலேஷ்மமூலரோகலக்ஷணம்.

முளைகள்பெருத்து ஆழ்ந்தவேருள்ளதாகவும், வெண்மையாகவும், உப்பலாகவும், அடிபட்டதுபோல நைந்ததாகவும். மினுமினுப்பாகவும், முறைத்ததாகவும், வட்டமாகவும், கனத்ததாகவும், அசையாமையாகவும், எண்ணெய்க்கசிவாகவும், நீங்காதவழுவழுப்புள்ளதாகவும்,அற்பநோவைத் தருவதாகவும், நமைச்சலுள்ளதாகவும், சொறிந்தால் இதவுள்ளதாகவும் இருக்கும். அம்முளைகள் மூங்கில்முளை, பலாப்பிஞ்சு, எலும்பு, திராக்ஷிப்பழம் இவைகளையொத்திருக்கும். இந்தரோகிக்கு, இரண்டுகவுட்டியிலும் உப்பல், குதஸ்தானத்திலும் அடிவயிற்றிலும் தொப்புளிலும் அறுப்பது

* யகிருதிகண்டம் என்பது கறுத்தமாமிசகண்டம்.

போல்நோவு, இருமல்,இரைப்பு,மார்புதுடித்தல்,வாய்நீரூறல்,அரோசகம், பீநசம், சோர்வு, ஒழுக்குமூத்திரம்,தலைநோவு,குளிர்ச்சுரம்,விந்துநஷ்டம், அக்கினிமந்தம், வாந்தி, அசீரணமுதலிய விகாரங்களுண்டாகி ; வசம்பு நாற்றத்தோடுசீதமும்நுரையுங்கூடியதாகஅடிக்கடிஅதிகமாகமலம்விழும். அன்றியும், தேகத்திற் சருமத்துடன் அவயவங்களெல்லாம் வெண்மை யாகவும், மினுமினுப்பாகவுமிருக்கும். இது எளிதில் வசப்படாதென்றறிக.

௪-வது தொந்தமூலரோகலக்ஷணம்.

மூளைகளில் வாதமூலகுணமும், சிலேஷ்மமூலகுணமும் உண்டா யிருக்கும். இப்படியே மற்றையதொந்தங்களையும் அறியவேண்டும்.

ரு-வது திரிதோஷமூலரோகலக்ஷணம்.

மூளைகளில்மேற்கூறியவாதம்முதலியமூன்றுமூலரோகங்களுக்குள்ள குணங்களெல்லாம் உண்டாயிருக்கும்.

சா-வது ரத்தமூலரோகலக்ஷணம்.

இந்தமுளையானது பித்தமூலமுளைகளையும், ஆலந்தளிர்முகிழையும் ஒத்திருப்பதும் அன்றி, மலத்தினுல்அடிபடுவதால், இம்முளையில் நின்றும் கெட்டிராநின்ற ரத்தமானது உஷ்ணத்தோடும் விசேஷமா யொழுகும். இந்தரோகிக்குரத்தப்போக்குஅதிகமாகையினுல்,தேகம்கொக்கைப்போல் வெளுத்துச் சகலவேதனையும் உண்டாகி, பிறகு சரீரநிறமும், பலமும், உற்சாகமும், ஒளிவும், பஞ்சேந்திரியங்களுடையபலமும் அதிசீக்கிரத்தில் கெடும். இவைநிற்க, மூலரோகம் ஆறுக்குள், நான்காவது இலக்கத்தில், வாதபித்தம், வாதசிலேஷ்மம், சிலேஷ்மபித்தம் என இரண் டிரண்டு தோஷமாக, மூன்று சேர்க்கையைப் பெற்றிருக்கும் தொந்தமூலம் ஒன்றையே சிலர் மூன்ருகநினைத்து, மூலரோகம் எட்டுவித மென்று சொல்லுகிறுர்கள்; அன்றியும், சிந்தாமணி என்னும் ரோகநிதானநூல், மேற்கூறியஆறுவிதத்துடன்பகந்தரரோகங்களையுஞ்சேர்த்து,மூலரோகம் இருபத்தொன்றென்றுசொல்லுகின்றது. இவ்விரண்டுகட்சியும், தன்வந்திரி பகவான் முதலான பூர்வாசாரிகளின் வாக்கியங்களுக்கு வேறுபாட்டைத் தருதலால்,விலக்கப்பட்டதென்றறிக.இன்னும்,மூலரோகமுளைகள்உள்ளில் மறைந்திருந்தால், உள்மூலமென்றும் : வெளிப்பட்டிருந்தால், வெளிமூல மென்றும் : செண்டுபோலிருந்தால், செண்டுமூலமென்றும் : அதில் சீழ் கசிந்தால்,சீழ்மூலமென்றும் : ரத்தங்கசிந்தால், ரத்தமூலமென்றும் : சலங் கசிந்தால்,சலமூலமென்றும் : ஆணிபோலக்கடினமாயிருந்தால், ஆணிமூல மென்றும்;கிரந்தியுடனிருந்தால், கிரந்திமூலமென்றும்: அந்தமூலரோகம் ஆறையுமே பலபல விதமாகச் சொல்லுகிறுர்கள்.

வளையமூல சாத்தியாசாத்தியம்.

அபானவாசலுக்குள், அடிவளையம், நடுவளையம், மேல்வளையம் என மூன்றுவளையங்கள் இருக்கின்றன. அவற்றுள், அடிவளையத்தில், திரிதோஷங்களால்சகசமூலமுளை ஆதியானமுளைகள்பிறந்தால்,அசாத்தியமென்றேசொல்லவேண்டும்; ஆயினும்,ஒருவேளை அக்கினிச்சூட்டினாலும், காரசாரத்தினாலும்,ஆயுதத்தினாலும் சாத்யப்பட்டாலும்படும். இரண்டாம் வளையமான நடுவளையத்தில், உபயதோஷங்களினால் பிறந்த முளைகள், சாத்தியம் ஆவதுபோலாகி, வருஷந்தோறுங் கண்டு மறைவதாயிருக்கும். இது கஷ்டசாத்தியம். மூன்றாம்வளையமாகிய மேல்வளையத்தில், ஒரு ஒரு தோஷத்தால் பிறந்தமுளைகள் அதிசீக்கிரத்தில் சுகசாத்தியமாம்.

அசாத்தியமூலரோகநிதானம்.

எந்த மூலரோகிக்கேனும், கை, கால், நாபி, ஆசனம், பீசம், முகம் என்னும் இவ்விடங்களில் வீக்கம் காணில், மரணமே.

மேற்சொல்லிய மூலரோகங்களை, சூரணலேகியம், கச்சபலேகியம், கெந்தகவடகம் முதலிய அவுஷதங்களைக்கொண்டும்,க்ஷத்திர க்ஷாராக்கினி சிகிச்சைகளைக்கொண்டும் வசப்படுத்தவேண்டும்.

உதாவர்த்தரோகலக்ஷணம்.

வாதகேகிகட்கு, பயறு, வரகு, சோளம், மூங்கில்முளை, கடலை, கார் வஸ்து, மலபந்தவஸ்து ஆகிய இவைகள் விசேஷமாகச் சேருங்காலத்தில், தனதுஸ்தானத்தில் நின்ற வாயுவானது பராக்கிரமத்துடன் அதிகரித்து, அதோகாயமான அடிவயிறுமுதல் பாதம்வரைக்குமிருக்கின்ற நரம்புகளைத் தடுத்து,முற்கூறிய அதோகாயத்தைச் சூம்பலாக்கி, குதத்தில் நோவையும் மலபந்தத்தையும் மூத்திரச் சிக்கலோடு வெகு உபத்திரவத்தையும் உண்டாக்கும். இது, குதகீலம் முதலிய பரியாய நாமங்களை யுடைய மூலரோகங்களுக்குள் மிகுதியும் உபத்திரவங்களைச் செய்வதினாலும், கொடிதாயிருப்பதினாலும் உதாவர்த்தம் எனப் பேர்பெற்றது.

உதாவர்த்தரோக அசாத்தியம்.

ரோகத்தினால் தேகம் மிகவும்மெலிந்தும், அதி உபத்திரவத்துடன் வயிறுபருத்தும், கண்கள்குழிவிழுந்தும் இருந்தால், அசாத்தியம். இவை இல்லாதிருந்தால், சாத்தியம். இதற்குமூலரோகச்சிகிச்சைகளும் உதவும்.

சருமகீலரோகபேதம்.

வியானவாயுவானது,சிலேஷ்மத்தை உள்ளிழுத்துக்கொண்டு,குதஸ்தானத்தைச் சுற்றிலும் இருக்கின்ற சருமத்தின்மேல் வசியைப்போல் உறுதியாகவும் சுறசுறப்பாகவும் சிறுசிறு ஆணிகளைப்போல் முளைகளைப்

பிறப்பிக்கும். இது, வாதசருமகீலம், பித்தசருமகீலம், சிலேஷ்மசருமகீலம் எனமூன்றுவிதப்படும்.இது,குதஸ்தானசருமத்தின்மேலாணிகளைப்போல் இருப்பதால்,சருமகீலரோகம் எனப்பேர்பெற்றது. கீலம் என்பது ஆணி.

க-வது வாத சருமகீலரோகம்.

முளைகள்பருத்துக்கெட்டியாயும் நோவையுடையனவாயு மிருக்கும்.

உ-வது பித்த சருமகீலரோகம்.

முளைகள் கறுத்தும்சிவந்து முபத்ரவத்தைத்தருவனவாயுமிருக்கும்.

ங-வது சிலேஷ்ம சருமகீலரோகம்.

முளைகள் வழுவழுத்து வெளுத்து ஊசியால் குத்துவதுபோல் குத்தலைத்தருவதுகளாயிருக்கும். இவைகட்கு அதிவிரைவில்,ரசத்தயிலம், கெந்தகச்சூரணம், ரஸபஸ்மம் முதலியசிகிச்சைகளைச் செய்யவேண்டும். செய்யாவிடில், அம்முளைகள் அபானவழியையடைத்து மலபந்தத்தையும் வயிறுபருத்தலையுஞ்செய்யும். இதனால்,பலவித உபத்திரவம் உண்டாம்.

அதிசாரரோகபேதம்.

நோயால் இளைத்தமிருகமாமிசம், கெட்டுலர்ந்தமாமிசம், வெந்தும் வேகாதபதார்த்தம்,பிண்ணாக்கு,கிழங்கு முதலியமந்தவஸ்து, மத்யபானம், காரவஸ்து, அதிதிண்டி, மூலரோகம், எண்ணெய், மிகுநடை, வயிற்றில் கிருமிநிறைவு, * பதினாலுவேகத்தை யடக்குதல், பேதியாகின்ற வஸ்து ஆகிய இவைகளால் வாயு அதிகரித்து, சப்ததாதுக்களையும் உதராக்கினி யையும் கெடுத்து, மலப்பையிற் சேர்ந்துகொண்டு கெட்டியாயிருக்கின்ற மலத்தைச்சலமாகக்கரைத்து அபானவழியால் ஒழுகப்பண்ணும். இதுவே அதிசாரரோகமாம்.இது,வாதாதிசாரம்,பித்தாதிசாரம்,சிலேஷ்மாதிசாரம், திரிதோஷாதிசாரம், பயாதிசாரம், துக்காதிசாரம் என ஆறுவிதப்படும். இந்த ஆறுஅதிசாரரோகங்களுக்கும் வாயுவேகர்த்தாவாம்.இது,மலத்தை விரைவில் சலரூபப்படுத்தி அதிகமாகப் பேதியாக்கலால், அதிசார ரோகமெனப்பேர்பெற்றது.

அதிசாரரோக பூர்வரூபம்.

அதிசாரரோகமானது, மார்பு, குதம்,வயிறு ஆகிய இவ்விடங்களில் நோதல், உடம்புஇளைத்தல், மலபந்தம்,வயிறுப்பிசம்,அசீரணம் என்னும் இக்குணங்களைத் தனக்குப் பழையரூபமாகப் பெற்றிருக்கின்றது.

க-வது வாத அதிசாரரோகலக்ஷணம்.

மலமானது,வாயுவினால்கரைந்து சலரூபமாகி அபானத்தில் பறபற வென்னும் இரைச்சலையும்நோவையும் உண்டாக்கிப்பேதியாகிறதுமன்றி,

* பதினாலுவேகத்தை தோஷாதி பேதபடலத்தில் இரண்டாவதுபக்கத்தில்காண்க.

கட்டுப்பட்டதுபோல் விகுவாகவும் கொதிப்பாகவும் நுரையே
மாகவுந்துண்டுதுண்டாகவு மலம்கழுகும்.இதனுலாசனமானது
காய்ந்ததுபோல் தோற்றுவதாயும் கத்தியால் அறுப்பதுபோல்
தருவதாயும், கொஞ்சம் சிதஞ் சுற்றிக்கொண்டதாயும் வெ
அப்போது, வாயுலரல், உரோமஞ்சிலிர்த்தல், அறிவுகெடுதல்
இக்குணங்களுண்டாகும்.அன்றியும்,வயிற்றிற்பொருமலுடன்
அடிவயிற்றில்பிடுங்கல், சரீரமுழுதும்நோவுடன் மலமிறங்கல்,
செரித்தும்செரியாமலு மாகிறபேதி, சிலவேளை இறுகலாயும்
கறுப்பாயும்துர்க்கந்தத்துடன் வெளுப்பாயும்பேதியாகுதல், பு
வாந்தி, மயக்கம், மலபந்தம் என்னும் இக்குணங்க ளுண்டென்

உ-வது பித்த அதிசாரரோகலக்ஷணம்.

மலமானது, மஞ்சள், கறுப்பு, பச்சிலைரசம், பசும்புற்றன
ஆகிய இவ்வன்னங்களைப்பெற்று, துர்க்கந்தத்துடன்வயிற்றிலு
திலும் நோவையுண்டாக்கி; அசீரணத்துடன் இளகிப்
அப்போது, தாகம், மூர்ச்சை, வியர்வை;எரிச்சல் என்னும் இ
உண்டாகும். அன்றியும், மலம் அதிகமாக வறண்டு நுரை
பேதியாகுதல், வாதாதிக்கம், தேகவாட்டத்திலும் கை கால் வி
காங்கை, தேகம்வெளிறல், தலைவலி, வாந்தி,வயிற்றுவலி,உழை
நோவுடன் விரணங்காணல் என்னும் இக்குணங்களுண்டென்

ங-வது சிலேஷ்ம அதிசாரரோகலக்ஷணம்

மலமானது, தடித்ததாகவும், எண்ணெய்கலந்த தாகவும்
கொடி கொடியாகவும், அதிக வெண்மையாகவும், மினுமி
அசீரணப் பட்டதாகவும், சிதைந்ததாகவும், பொறுத்துப்
வருவதாகவும், விடாதநோவுடன் துர்க்கந்தமாகவும் ஆசனத்
பளுவையுண்டாக்கிப் பேதியாகும். அப்போது,அதிகநித்தி
அன்னத்திவேஷம், ரோமச்சிலிர்ப்பு, மனோதுக்கம், ஆ
கீழ்வயிற்றிலும் மேல்வயிற்றிலும் கனத்தல், மருந்து சாப்
சாப்பிடாதுபோலவே ஞாபகம் எனு மிக்குணங்களுண்டாகும்
நுரைநுரையாக வயிற்றுவலியுடன் பேதியாகுதல், அடிவயி
அருசி, இருமல், சுவாசம், அஸ்திகளெல்லாம் கூசுதல், ஆச
சரீர முழுதும் நமைச்சல், கபாதிக்கம், தும்மல், தேகம்
நீரடைத்தல் என்னும் இக்குணங்களுண்டென்பாருமுளர்.

ச-வது திரிதோஷ அதிசாரரோகலக்ஷண

முற்கூறிய வாதாதிசாரரோகம்முதலிய மூன்று அதிச
எல்லாம் இதில் உண்டாயிருக்கும். அன்றியும், சலம்சாப்பி

செல்லவேண்டிய மார்க்கந்தப்பி நரம்புத்துவாரங்களில் விழுந்து அந்த நரம்புகளையழுகப்பண்ணி அபானவாயுவோடுகூடி மலப்பைக்குள்புகுந்து மூலாக்கினிக்குக் கீழேபொருந்திய அசனத்தைச் செரிக்கவொட்டாது. அப்போது, உள்ளில் எரிச்சல், வெளியிற்குளிர்ச்சி, கை கால் சில்லிடல், கண்டபேருடன் புலம்பல், எழுந்திருந்து ஓடல், ஆடல், சோபம், விக்கல், வயிற்றைச்சுருக்கியிழுத்துப்பிடிக்குதல்,ரத்தமுஞ்சீதமுங்கலந்த கழிச்சல் தேகநடுக்கல்,அநித்திரை,அறிவின்மை,நாவறளல்,சரீரத்தில்திமிர்என்னும் இக்குணங்கள் உண்டென்பாருமுளர்.

ரு-வது பய அதிசாரரோகலக்ஷணம்.

பயத்தினல் மனதுகலங்கித் தபிக்கின்றகாலத்தில், பித்தம்பிறக்கும்; அந்தபித்தத்தில் வாயுவுங்கூடிப் பலத்துக்கொண்டு மலப்பையைக் கலக்கி விட்டு, முன்சொன்ன பித்தவாத அதிசாரரோகங்களுக்குள்ள குணங்களை யெல்லாம் உண்டாக்கும். அப்போது சலம் சலமாகவும் கொதிப்பாகவும் அடிக்கடி விசேஷமாகப் பேதியாகும்.

சா-வது துக்க அதிசாரரோகலக்ஷணம்.

துக்கத்தினல்மனதுதபிக்கின்றகாலத்தில்,வாயுவானது அதிகரிக்கும் அத்துடன் பித்தமுங்கூடிக்கொண்டு, முன்புசொன்ன பயாதிசாரரோக குணங்களையெல்லாம் உண்டாக்கும்.

சாம நிராம அதிசாரரோகபேதம்.

அதிசாரரோகமானது,முன்புகூறியபடி ஆறுவிதப்பிறப்பைப்பெற் றிருந்தாலும், முடிவில் சாமாதிசாரமென்றும், நிராமாதி சாரமென்றும் இருவிதப்பிறப்பினுள் அடங்கும். இவைகளை இதனடியிற்காண்க.

க-வது சாம அதிசாரரோகலக்ஷணம்.

செரியாமல் பேதியாகுவது சாமாதிசாரமாம். இந்த ரோகத்தில், மலமானது மந்தத்துடன் துர்க்கந்தமாகப் பேதியாகுவது மன்றி, வயிற்றில் இரைச்சல், கொஞ்சமலபந்தம், இதனல் வயிற்றில்நோவு, வாய்நீ ரூறல் என்னும் இக்குணங்களையுண்டாக்கும். இதனை அசீரணபேதியென்றுஞ் சொல்வர். இது, ரத்தத்துடன்கூடிப்பேதியானல் ரத்த அதிசாரரோகம் எனப்பேர்பெறும்.　　சாமம் என்பது அசீரணம்.

ரத்த அதிசாரரோகலக்ஷணம்.

முன்பு அதிசாரபூர்வரூபத்திற்சொன்னவஸ்துக்களை அல்லாமலும், பித்தாதிக்கவஸ்துக்கள்கூடிய அன்னபானதிகளின்சேர்க்கையால், பித்த மானது அதிகரித்து, ரத்தத்தைக்கெடுத்து அபானவழியினல் ஒழுகச் செய்து, ரத்தாதிசாரரோகத்தை உண்டுபண்ணும். அப்போது, தாகம், வயிற்றுநோவு,சரீர எரிச்சல், ஆசனம்வெளிப்படுதல் என்னுமிக்குணங்க

ளுண்டாகும். இது கனத்தரோகம் ஆகையால், ரோகியைக் கபத்தில் அழுத்துவதற்குமுன்னமே அவுஷதங் கொடுக்கவேண்டும்.

உ-வது நிராம அதிசாரரோகலக்ஷணம்.

செரித்துப் பேதியாகுவது நிராமாதிசாரமாம். இந்த ரோகிக்கு, மலமானதுசெரித்து உஷ்ணத்துடன் பேதியாகும். இதனை உஷ்ணபேதி என்றும் சொல்வர். இது அதிகரித்தால் கபத்தில் அழுத்திக்கொல்லும்.

நிராமம் என்பது அபக்குவம் அல்லாதது.

குதப் பிரம்ஸரோகலக்ஷணம்.

மலபந்தத்தினல் மெத்தவும்முக்குகிறவர்களுக்கும்,அதிசாரரோகங் கண்டவர்களுக்கும், சரீரஞ் சுட்கித்து மிகவுந் துர்ப்பலமாய் இருக்கிறவர் களுக்கும்,ஆசனம்வெளிப்படும். இதுவே குதப்பிரம்ஸரோகமாம். இதனை, குதநெகிழ்ச்சிரோகம், ஆசனரோகம், ஆசனருடி, அடி எனவும்சொல்வர்.

குதம் என்பது மலத்துவாரம். பிரம்ஸம் என்பது வெளிப்படுதல்.

மதாந்தரம்.

சிந்தாமணி என்னும் சாஸ்திரம், அதிசாரத்தை, வாதாதிசாரம், பித்தாதிசாரம், சிலேஷ்மாதிசாரம், சந்நிபாதாதிசாரம், தோஷாதிசாரம், திரிதோஷாதிசாரம், சுராதிசாரம் என ஏழுவிதமாகச் சொல்லுகின்றது. இவற்றுள் வாதமுதல் நான்கு அதிசாரங்களும் முற்கூறியவைகளேயாம். அந்நான்கில் ஒன்ருகத் திரிதோஷாதிசாரம் இருப்பதினலும், சந்நிபாத மென்றும், தோஷமென்றும் அந்தத்திரிதோஷத்துக்கே அர்த்தமாகையி னலும் இவ்விரண்டையும்நீக்கி,சுராதிசாரமாத்திரமிதனடியிற்கூறப்படும்.

சுர அதிசாரரோகம்.

சுரம், மூர்ச்சை, பிரலாபம், அடித்தொடையும் கீல்களும் கடுத்தல், தாகம், கடுப்பு, சரீரங்காந்தல், நீரடைப்பு, உஷ்ணம்,இருமல்,பேதியிலும் நானுவிதமானபேதி என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

மதாந்தர முற்றியது.

சாத்திய அதிசாரரோகலக்ஷணம்.

பேதியில் பலநிறம்இல்லாமல் ஒருநிறமாகவிருத்தல்,பஞ்சேந்திரியத் தன்மை கெடாதிருத்தல், முகத்தில்தேசசு, குயிலோசைபோன்ற கண்டத் தொனி, போசனத்தில்அபேக்ஷை, தும்மல்,தினவு, பற்கள்முல்லையரும்பை ஒத்திருத்தல், வாய்சிவந்து மேல் நாக்கில் சலமூறல், சாப்பிட்டவுடன் வியர்வையுண்டாகி உலரல், உள்ளங்கை உள்ளங்கால் சிவத்தல், நகக்கண் களில் ரத்தம் இருக்குதல், நித்திரை, தூரப்பார்வைதோற்றல், சரீரம்

சுபாவமாகச்சிவந்துசவுக்கியமாக இருத்தல், நாடிசமநடையுடன்உறுதியாக நடக்குதல் என்னும் இக்குணங்களுண்டாகில், சாத்தியம்.

அசாத்திய அதிசாரரோகலக்ஷணம்.

அதிசாரரோகிகட்கு, மாமிசம், * யகிருதிகண்டம், கரி, மை, எண்ணெய், நெய், பால், தயிர், † வசாசலம், கள் என்னும் இவைகளைப்போல் பேதியானாலும் ; தயிர்ச்சலம், தலைமூளை, கரி, சீழ், திராக்ஷிப்பழக்கஷாயம், தேன் இவைகளைப்போல் பேதியானாலும் ; அதிக சிவப்பு, மிகு கறுப்பு எண்ணெய்ப்பசை, சுபாவமலம் இவைகளைப்போல் துர்க்கந்தத்துடன் அதிக வேதனையைத்தந்து பேதியானாலும் ; சப்ததாதுக்களும் குறைந்து, பலவர்னமாகவும்,கட்டுப்பட்டதாகவும்,ஒருவேளைமிகுதியாகவும்,பேரீச்சங்காய் வன்னமாகவும், அதிக வருத்தத்துடன் பேதியானாலும் ;பேதியான மலத்தில் குழிகுழியா யனந்தந்துவாரம்விழுந்தும், இழுத்தாலறுபடாமல் பிசின்போல் நீண்டும், ஈக்கள்மொய்த்தும், மயிலிறகின் நிறத்தைப்போல் பலபலநிறம்தோற்றப்பட்டாலும் : அஸ்திகளிலும் கீல்களிலும் மிகுநோவு உண்டாகி, பேதியுநில்லாம லாசனம் வெளிகண்டு, அவ்வாசனத்தின்மேல் சுரித்தலானமடிப்புகளும் உண்டாயிருந்தாலும் : குதமானது வெளியில் நீண்டு, புசித்த அன்னம் அப்படியேநித்தியமும் பேதியில்விழுந்து வெகு துர்ப்பலம் உண்டானாலும் ; தாகம், மேற்சுவாசம், சுரம், கோழை, வாந்தி, விக்கல், வியர்வை, சரீரஎரிச்சல், வயிற்றுப் பொருமல், கனபேதி என்னு மிக்குணங்களுண்டாயிருந்தாலும் அசாத்தியக் குறிகளென்றே நிதானிக்க வேண்டும். அதிக மந்த வஸ்துக்களை மிகவும் புசித்து அக்கினிமந்தப் படுவதால், மலமானதுசீரணித்தும் சீரணிக்காமலும் அன்னசீரணகாலந் தோறும்பேதிஉண்டாகும். இது, சுபாவமாகவே அதிகமலத்தைவிரைவில் தள்ளுங்காரணத்தால், அதிசாரரோகம் எனப் பேர்பெற்றது. இதற்கு, தயிர்ச்சுண்டிச் சூரணம், சப்தகபாடமாத்திரை, லோகநாத ரசம்,நாகராதி பூஷணம் முதலிய தகுந்தவைத்தியம் செய்யவேண்டும். செய்யாவிடில் இதில்நின்றும் கிரகணிரோகம் உண்டாம்.

கிரகணிரோகலக்ஷணம்.

மேற்கூறிய அதிசாரரோகத்தில், வாதாதி திரிதோஷவிகற்பத்தால், சீரண காலத்தும் அசீரண காலத்தும், சுபாவ மலமாகவும், சீதங்கலந்ததாகவும்,செரித்ததாகவும்,ஒருவேளை செரியாததாகவும், காரணமில்லாமல் கட்டுப்பட்டதாகவும், நிரோதுவாகவே அதிகரித்ததாகவும், நானாவிதநிறம்

---

* யகிருதிகண்டம் என்பது இருதயத்துக்கு வலப்புறத்தில் இருக்கும் கறுத்த மாமிசகண்டம். † வசாசலம் என்பது மாமிசத்துடன் கலந்து பசையோடும் கூடியிருக்குஞ்சலமாம்.

ஆகவும், அடிக்கடி விசேஷ மலமாகவும் பேதியாகும். இதுவே கிரகணி ரோகமாம். இது, அதிசாரரோகத்தைத் துணையாகப்பிடித்து வருதலால், கிரகணிரோகம் எனப்பேர்பெற்றது. இதனைக் கிராணி என்றுசொல்வது மல்லாமல, மலமாகப் பேதியாகில் கழிச்சலென்றும், சீதமாகப்பேதியாகில் சீதக்கழிச்சலென்றும், ரத்தமாகப்பேதியாகில் ரத்தக்கழிச்சலென்றும், சலமாகப்பேதியாகில்சலக்கழிச்சலென்றும் பலவாறுகச்சொல்லுகிறுர்கள். கிரகணி என்பது பிடித்தலையுடையது.

கிரகணிரோகபேதம்.

கிரகணிரோகமானது, வாதகிரகணிரோகம், பித்த கிரகணிரோகம், சிலேஷ்ம கிரகணிரோகம்,திரிதோஷகிரகணிரோகம் என(ச)விதப்படும்.

கிரகணிரோக பூர்வரூபம்.

அருந்தும்அன்னபானுதிகள் வெகுநேரம் பொறுத்துச்சீரணித்தல், புளியேப்பம்,வாய்நீரூறல்,முகவிகாரம்,அரோசகம்; உதடுஉலரல்,பிரமை, ஆயாசம்,வயிறுவிகுத்தலுடன் பொருமிக்கொள்ளல், வாந்தி,காதிரைச்சல், குடலிரைச்சல் என்னும் இக்குணங்களைக் கிரகணிரோகமானது தனக்குப் பழையரூபமாகப் பெற்றிருக்கின்றது.

சாமானிய கிரகணிரோக பூர்வரூபம்.

கிரகணிரோகத்தில், உடம்பு இளைத்தல், கண்டத்துக்குள் புகை கம்மியதுபோலிருத்தல், மயக்கம், சுரம், மூர்ச்சை, தலைநோவு,மலபந்தம், கை கால் வீக்கம் என்னும் இக்குணங்களுண்டானுலும் உண்டாகும்.

க-வது வாத கிரகணிரோகலக்ஷணம்.

தாடைவற்றல், கண்களில் இருட்கம்மல், காதில் கும்மென்றசத்தம், விலாப்பக்கம், தொடைக்கவுட்டி, கழுத்துப்பிடரி ஆகிய இவ்விடங்களில் நோவு,சகலவஸ்துவிலுமபேக்ஷை,தாகம்,அசனசீரணகாலத்தில்வயிற்றில் உப்பிசம் உண்டாகிச்சீரணித்தல், புசித்தபின்பு ஆயாசம், அடிக்கடிபேதி, வாயுவினுல் மார்பிலும் வயிற்றிலும்நோவு, ஆசனப்பிடுங்கல்,நாபிக்குங்கீழ் அதிகநோவு, வயிற்றில்வெகுநேரம் அதிகசங்கட்டப்படுத்தி, சலமாகவும், உலர்ந்ததாகவும், சீதங்கலந்ததாகவும், இரைச்சலோடு நுரைத்ததாகவும், இடைவிடாமல் மலமானது வெளிப்படுதல், இதனுல் ஆசனம் விரிந்து போவதுபோல் கடுத்தல், மேல்சுவாசம்,இருமல், தேகவெளுப்பு என்னும் இக்குணங்களுடாகும். அன்றியும், அற்பதீபனம், வயிற்றில் கட்டிகாணல் மலஞ்சிதறலுடன் கறுத்து வெல்லப்பாகுபோலும்,பனைவெல்லம்போலும் பேதியாகுதல் என்னும் இக்குணங்களுண்டென்பாருமுளர்.

உ-வது பித்த கிரகணிரோகலக்ஷணம்.

மலமானது கறுத்தநிறமாகவும்மஞ்சளும்சிவப்பும்கலந்தநிறமாகவும் சுத்த மஞ்சள்நிறமாகவும், சலம்சலமாகவும் வெளிப்படல், அப்போது

துர்க்கந்தமாகவும்புளிப்பாகவும்லக்காளம்வருதல்;மார்பிலும்கண்டத்திலும் எரிச்சல், ஏப்பம், வாந்தி, அரோசகம் என்னும் இக்குணங்களுண்டாகும். அன்றியும் நடுவயிறுநோதல், தூக்கம்,நரம்புகள்தளரல், உள்ளில்கடுத்தல், சாப்பிட்டமருந்து பேதியோடிறங்கல், உணர்ச்சியின்மை என்னும் இக்குணங்களுண்டென்பாருமுளர்.

௩-வது சிலேஷ்ம கிரகணிரோகலக்ஷணம்.

உண்ட அன்னபானாதிகள் வெகுநேரம் பொறுத்துச் செரித்தல், அரோசகம், வாந்தி, முகத்தில் எதுவோ தடவினதுபோல் நினைப்பு, எந்நேரமும் உமிழ்நீர்உமிழ்தல்,மார்பில் அதிரலுடன்வறட்டல், இருமல், பீநசம்,சாப்பிட்டதுபோல்வயிறுகனத்தல், ஏப்பம், ரத்தக்கெடுதி, உடம்பு கிறுகிறென்றுசுற்றல், மாதரிடத்தில்நிராசை, மலமானது சுபாவமாகவும் அதி சீதங்கலந்ததாகவும் நழுகல் என்னு மிக்குணங்களுண்டாகும். இந்த ரோகிக்குச் சரீரம் புஷ்டியாயிருந்தாலும் துர்ப்பலமே நேரிடுமென்றறிக. அன்றியும் வயிறிரைச்சல், வாயுபறிதல்,குளிர்,நடுக்கல்,அதிகாங்கையுடன் நாற்றமாயும் வெளுப்பாயும் மலம் இறங்கல், ஒருவேளை குடலைப்போலும் பாலைப்போலும் பேதியாகுதல், கை கால் தளர்ச்சியுடன் சூம்பல், அறிவின்மை, அசதி, பரிதாபம், உழலை, எரிதல், புறங்கால் வீக்கம், என்னும் இக்குணங்களுண்டென்பாரு முளர்.

௪-வது திரிதோஷ கிரகணிரோகலக்ஷணம்.

முன்சொன்னவாதகிரகணி,பித்தகிரகணி, சிலேஷ்மகிரகணி என்னு மூன்றுரோகங்களுக்குள்ள குணங்களெல்லாம் இதில் உண்டாகும்.

மதாந்தரம்.

முற்கூறிய வாதாதிநான்குகிரகணிகளையும் அல்லாமல், உஷ்ணவாயு கிரகணி, அந்தரவாயுகிரகணி, மூலவாயுகிரகணி, குன்மகிரகணி, கருப்பக் கிரகணி, ஒட்டுக்கிரகணி, சங்கரகிரகணி என்னும் ஏழுவிதம்அதிகமாகச் சித்துப்புருஷர்கள் நூல்களிற் சொல்லப்படுகின்றன.

௧-வது உஷ்ணவாயு கிரகணிரோகம்.

வயிற்றில் கனத்தலுடன்உப்பிசம்,இரைச்சல்,கைகால் அசதி,தேகங் கருகிமெலிதல், பேதி என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.

௨-வது அந்தரவாயு கிரகணிரோகம்.

புசித்தவுடன் பேதியாகுதல், இரைச்சல், அசதி, தாகம், தளர்ச்சி, விலாவில்இசிவு,சரீரவெளிறல்,விக்கல்என்னு மிக்குணங்களையுண்டாக்கும்.

௩-வது மூலவாயு கிரகணிரோகம்.

அதிஇரைச்சலாகிவயிற்றைப்புரட்டல்,அடிவயிறுபொருமல், மலம் வறளல், மந்தம், அடித்தொடையில்குத்தல், சரீரந்தளரல், குதத்திலும் கண்ணிலும் முளைபோற்காணல் என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.

௪-வது குன்ம கிரகணிரோகம்.

வயிற்றில்குத்தல்,அதிகஉறக்கம்,வியர்வை,தலைநடுக்கல்,தேகஎரிச்சல், உழலை, வயிறுபொருமி இரைந்துபேதியாகுதல், சிலவேளை ஒருபக்கத்தில் இரைச்சல் என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.

௫-வது கருப்பக் கிரகணிரோகம்.

பேதி, கடுப்பு, கை கால் வற்றுதலுடன்ஓய்ச்சல், கண்ணில் மஞ்சள் நிறம், பலவிதக்கழிச்சல்,அதிகதாகம்,சாப்பிட்டால்வாந்தியாகுதல், உழலை என்னும் இக்குணங்களையுண்டாக்கும். இக்குணங்கள் பிரசவித்த பின்பு மட்டிடும். இந்தரோகம் ஸ்திரீகளுக்குமாத்திரம் காணுமென்றறிக.

௬-வது ஒட்டுக் கிரகணிரோகம்.

படுக்கையே இதவாகத்தோற்றல், இளைப்பு, வயிற்றில் அதிகநோவு, மார்பிலும் விலாவிலும் முதுகிலும் வலித்தல், மலமானது ஒருதரமாக இறங்காமல் துட்டிடைதுட்டிடையாகவிறங்கல், தொப்புள் வளையம்போற் சுருங்குதல் என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.

௭-வது சங்கர கிரகணிரோகம்.

வயிறுபொருமல்,செரியாக்கழிச்சல், அபானத்தில்சுடுகையுடன் எந் நேரமும்நனைதல்,குறுவியர்வை, உக்கிரமானசுரம், மனக்கெடுதி, நெஞ்சிற் கபாதிக்கம், இருகண்களுஞ்சரிதல் என்னும் இக்குணங்களையுண்டாக்கும். மதாந்தரமுற்றியது

சாத்தியாசாத்திய கிரகணிரோகநிதானம்.

வாதகிரகணி, பித்தகிரகணி, உஷ்ணவாயுகிரகணி, அந்தரவாயுகிர கணி,மூலவாயுகிரகணி, கருப்பக்கிரகணி, ஒட்டுக்கிரகணி ஆகியஇவைகள் சாத்தியம். மற்றதுகள் அசாத்தியம். ஆயினும், இதுகள்சரபங்கிவில்வாதி லேகியம், மதகஜகண்டீரவமாத்திரை முதலியசிகிச்சைகளால் வசப்படும்.

அஷ்ட மகாரோகபேதம்.

வாதரோகம், கல்லடைப்புரோகம், குஷ்டரோகம், மேகரோகம், மகோதரரோகம், பகந்தரரோகம், மூலரோகம், கிரகணிரோகம் ஆகிய இவைகளாம். இவ்வெட்டுரோகமும் எளிதில் வசப்படாதென்றறிக.

அலச ரோகபேதம்.

பிரமாணத்துக்குக்குறைந்த அற்பபோசனமானது, சரீர புஷ்டியை யும் பலத்தையும் அழகையும் குறைப்பதுமல்லாமல், வாதத்தையும் அதிகரிக்கச்செய்யும். பிரமாணத்துக்கு அதிகரித்த போசனமானது சகல தோஷங்களையும் சீக்கிரத்தில் அதிகரிக்கச்செய்யும். அபக்குவமாகவும் கெடுதியாகவும் இருக்கின்ற அன்னமானது வாதபித்த சிலேஷ்மங்களை விகாரப்படுத்தும். இம்மூன்றுவிதத்தில் அபக்குவமென்ற அன்னத்தை

அடிக்கடி புசிக்கின்ற அதிக துர்ப்பலனுக்கும், மந்தாக்கினியனுக்கும், பசினுலுவேகத்தை அடக்கினவனுக்கும் ஆமாசயஸ்தானத்தில் அவ்வன்னத்தால் அதிகரித்த திரிதோஷங்கள் அவ்வன்னத்தோடு கலந்துகொள்ளும்; அப்போது, அந்த அசனகாதகனுக்கு, அந்த அன்னம் பித்தத்தை ஒடுக்கியசிலேஷ்மத்தால்மறிபட்டு,வாயுவினுலலேக்கப்பட்டு, அவ்விடத்தில் பிரடை போட்டதுபோலும் ஆப்படித்ததுபோலும் இருந்து, வாந்தியும் இல்லாமல் பேதியும் இல்லாமல் சீரணமும் இல்லாமல் ஸ்தம்பித்து, அநந்தம் சங்கடத்தோடு சூலமுதலிய உபத்திரவங்களை உண்டாக்கும். இதுவே அலசுரோகமாம் இது, ஆமாலசகம், தண்டாலசகம், விஷாலசகம் என மூன்றுவிதப்படும். இவைநிற்க, அப்படி ஸ்தம்பித்த அன்னத்தை அவ்வாதபித்தங்கள் சீக்கிரத்தில்வாயினுலேனும் அபானத்தினுலேனும் வெளிப்படுத்துமாகில்,இதற்குவிஷூசிரோகம் எனப்பேருண்டாகும். இது மிகவும்கொடிது. இவைகளை இதனடியிற்காண்க. அலசம்என்பது மந்தம்.

க-வது ஆமாலசகரோகலக்ஷணம்.

பிரமாணம்தப்பி மேன்மேலும் புசிக்கும் அசனகாதகனுக்கு, அந்த அன்னமானது வாந்தியாகாமலும் பேதியாகாமலும் சீரணிக்காமலும் ஆமமாகியசிலேஷ்மத்தில் பிசறிக்கொண்டு,மிகுவேதனையையுண்டாக்கும். இது, ஆமத்தால்பிறந்தமையால், ஆமாலசகரோகம் எனப்பேர்பெற்றது.

உ-வது தண்டாலசகரோகலக்ஷணம்.

திரிதோஷமானது, மிகவும் அதிகரித்துச் சீரணியாதிருக்கும் அன்னத்தைக்கொண்டு நரம்புகளுக்குவிகுவேற்றி, அந்த நரம்புகளையே குறுக்காகப்பாய்ச்சித் தந்திகளைச்சுற்றி இறுக்குவதுபோல் இறுக்கிச்சரீரத்தைத் தண்டத்தைப்போலவே நீட்டிவிடும். இந்தக்காரணத்தால்,இதுதண்டாலசகரோகம் எனப்பேர்பெற்றது. இது அதிசீக்கிரத்திற்கொல்லும்.

ங-வது விஷாலசகரோகலக்ஷணம்.

அபக்குவமான அன்னத்தை போசனத்தின்மேல் போசனம் பண்ணினுல்,அசீரணம்உண்டாகும்.இதில் விஷக்குணங்களைப்போல் மகாகோரங்களுண்டாயிருக்கும். இது,விஷத்தைப்போலவே கொல்லுவதால், விஷாலசக மெனப்பேர்பெற்றது. இதற்கு ஆமதோஷமென்றும்பேர்.

இவைகளுக்கு தாளிசவடகம், வச்சிரவல்லிவடகம், கண்டாதிச்சூரணம், பஞ்சதீபாக்கினிலேகியம் முதலியசிகிச்சைகளும் உதவும்.

விஷூசி ரோகபேதம்.

அலசரோகத்தை யுண்டாக்கி அடங்கியிருந்த ஆமதோஷமானது அதிகரித்து வெளிப்படுவதினுலும், அதற்கு உபபலமாகச் சூரியவெப்பம் அதிகரிப்பதாலும் விஷூசிரோகம் பிறக்கும். இது,பேதி வாந்திமுதலான

பலபல உபத்திரவங்களைக்கொண்டும் திரிதோஷ மிகுதியைக்கொண்டும் சரீரம்முற்றிலும் ஊசியாற்குத்துவதுபோல் குத்துவதால்,விஷூசிரோகம் எனப்பேர்பெற்றது. இதனை, இக்காலத்தில், வாந்தி பேதி ரோகம் எனச் சொல்லுகிறார்கள். இது வாத விஷூசிரோகம், பித்த விஷூசிரோகம், சிலேஷ்ம விஷூசிரோகம் என மூன்றுவிதப்படும். இது சீதாங்க சந்நிபாதத்தை யொத்ததால், உடனே வைத்தியஞ்செய்யவேண்டும்.

விஷூசிரோக பூர்வரூபம்.

வயிற்றில் இரைச்சல், மடைதிறந்ததுபோல் அடிக்கடிசுத்தசலமான பேதி, அப்படியே வாந்தி, திரிதோஷங்களும் சப்ததாதுக்களை விகாரப்படுத்துவதால் ரத்தக்கெடுதி, மாமிசங்கரைதல், சலத்தைத்தாங்கிக்கொண்டிருக்கும் நரம்புகளைப் பித்தமும் வாதமும் உலர்த்துவதால் தொண்டை வறளல், அதிகதாகம், பிசிபிசிப்பானவியர்வை, எரிச்சல், சிலேஷ்மாதிக்கத்தால் சர்வாங்கத்திலும் வாழைத்தண்டையொத்த சீதளம், நடுக்கல், கண்குழிவிழுதல், நெறிதளரல், சரீரநிறமாறல், ஈனத்தொனி, இவ்களில் இருக்கின்ற சிலேஷ்மப்பசைகள் கரைவதினால்தேகமுழுதும்கட்டுவிட்டுப் போவதுபோலு மூசியால்குத்தினதுபோலும்கடுக்குதல்,புரளல்,மூர்ச்சை, மயக்கம், சீதக்கட்டு ஸ்தானங்கெடுவதினால் வயிற்றுநோவு என்னும் இக்குணங்களை விஷூசிரோகமானது தனக்குப்பழையரூபமாகப்பெற்றிருக்கின்றது. இக்குணங்கள் சகலவிஷூசிரோகங்களுக்கும் உண்டென்றறிக.

க-வது வாத விஷூசிரோகம்.

வயிற்றுப்பொருமல்,பேதி,பிரமை,நடுக்கல்,தேகமரத்தல், ஊசிகளினாற் குத்துவதுபோல்குத்தல் முதலியதுர்க்குணங்களை யுண்டாக்கும். அன்றியும் வாதநாடி அதிகரித்தலினால், வயிறிரைச்சல், தேகங்கறுத்தல், விழிதிறந்தபடியே யிருத்தல், மனக்கலக்கம், சுரம், குடல் குமிறலுடன், புரட்டல் என்னும் இக்குணங்களுண்டென்பாருமுளர். இதுசாத்தியம்.

உ-வது பித்த விஷூசிரோகம்.

சுரம், பேதி, உள்ளில்எரிச்சல்,தாகம், கால்கை மரத்தல், ஊசியால் குத்துவதுபோல்குத்தல் முதலியகுணங்களை யுண்டாக்கும். அன்றியும் பித்தநாடி பகல்முழுதும் ஆக்கிரமிப்பதினால், தேகஞ்சும்பல், மூர்ச்சை, விக்கல்,பிதற்றல்,வாந்தி,மயக்கத்துடன் படுக்கைபொருந்தாமை, பிரலாபம் என்னும் இக்குணங்களுண்டென்பாருமுளர். இது கஷ்டசாத்தியம்.

௩-வது சிலேஷ்ம விஷூசிரோகம்.

வாந்தி, சலம்சலமாகப் பேதி, தேகங்கனத்தல், தாள்பிடிப்பு,உமிநீர் உமிழ்தல், ஊசிகளினாற் குத்தல்போற் குத்துதல் முதலிய குணங்களை

யுண்டாக்கும். அன்றியும் கையில் நாடிகள் விரைவில் அடங்குதல், குரக்குவலி வலித்தல், நடைகெடல், புரளல், மேல்நோக்கியபார்வை, சரீரம் வெளிறல் என்னும் இக்குணங்கள் உண்டென்பாருமுளர்.

இதுகளைப் பிரளயகாலாக்கினி உருத்திரமாத்திரை, பிரசண்டமாருதக் கருக்கு முதலிய அவுஷதங்களினால் நிவிர்த்திசெய்யவேண்டும்.

அசீரணரோகபேதம்.

அசீரணரோகமானது, வாதபித்த கபங்களினால், முறையே ஆமாசீரணம், விதக்த்தாசீரணம், விஷ்டம்பாசீரணம் என மூன்றுவிதப்படும். அன்றியும் விளம்பிகாசீரணம், ரசசேஷாசீரணம், உற்சுகாசீரணம் என மூன்று அசீரணங்களுண்டு. அவைகளையும் இதனடியிற்காண்க.

க-வது ஆமாசீரணரோகம்.

கண்களிலும்தாடைகளிலும் அதைப்பு, சாப்பிடாதகாலத்தும் சாப்பிட்டதுபோல் ஏப்பம், வாய்நீரூறல், வயிற்றில்சங்கட்டம், சரீரத்தில் வேதனையோடுகனத்தல் என்னும் இக்குணங்களையுண்டாக்கும். இதற்குச் சிலேஷ்மாசீரண ரோமென்றும் ஒருபேருண்டு.

உ-வது விதக்த்தாசீரணரோகம்.

சரீரத்திற்சுடுகை, தாகம், சோருதல், பிரமை, புளியேப்பம் என்னும் இக்குணங்களை யுண்டாக்கும். இதற்குப் பித்தாசீரண ரோகம் எனவும் ஒருபேருண்டு. விதக்த்தம் என்பது காங்கை.

ந-வது விஷ்டம்பாசீரணரோகம்.

சூலை, மலபந்தம், வயிறுப்பிசம், மந்தாக்கினி, சரீரம் இளைத்தல் என்னும் இக்குணங்களை யுண்டாக்கும். இதற்கு வாதாசீரணரோகம் எனவும் ஒருபேருண்டு. விஷ்டம்பம் என்பது ஸ்தம்பித்தல்.

க-வது விளம்பிகாசீரணரோகலக்ஷணம்.

கிணற்றில்போட்ட கற்போல வயிற்றில் அடங்கிக் கனத்து நாட்பட இருக்கும். இதுகபவாதத்தால் பிறப்பதால், இதற்குப்பூர்வஅசீரணரோக சிகிச்சைகளைச் செய்யவேண்டும். விளம்பிகம் என்பது காலதாமதம்.

உ-வது ரசசேஷாசீரணரோகலக்ஷணம்.

சுபாவ ஏப்பம், மார்பிலும் தலையிலும் பொறுக்கக்கூடாத நோவு என்னும் இக்குணங்களுண்டாகும். இது, ரசசேஷத்தால் பிறப்பதால், ரசசேஷாசீரணரோகம் எனப்பேர்பெற்றது.

ந-வது உற்சுகாசீரணரோகலக்ஷணம்.

அறுசுவையுடன் ஒருவன்புசிக்க, அதில் இச்சைப்பட்டு ஏக்கமுற்றவர்கட்கு, முன்புவழக்கமானபோசனம் அசீரணப்பட்டு வெகுநேரம்

பொறுத்தும் சீரணிக்காமல் எலும்பைப்போலவேகிடக்கும். அப்போது புளியேப்பம்,வயிற்றிலிரைச்சல், பொருமல், விகுத்தல்,நோவுடன் அநேக உபத்திரவங்களான விகாரம் என்னும் இக்குணங்களுண்டாகும். இது கஷ்டசாத்தியம். உற்சுகம் என்பது இச்சித்தல்.

சாமானியாசீரணரோகலக்ஷணம்.

மலபந்தம் அல்லதுபேதி, ஆயாசம், அபானவாயு இன்மை, வயிறு பொருமல், தேககனதி, பிரமை என்னும் இக்குணங்களெல்லாம் சகல அசீரண ரோகங்களுக்கும் பொதுவாக இருக்கும்.

மதாந்தரம்.

அசீரணத்தை தூமாசீரணம், விதூமாசீரணம், விஸ்பஷ்டம்பாசீரணம்,ரசசேஷாசீரணம் எனநான்காகச் சிலநூலில் சொல்லப்படுகின்றன.

க-வது தூமாசீரணரோகம்.

அசீரணத்தோடு சுபாவமானஏப்பம், உண்டவஸ்துக்கள் தக்காமல் அடிக்கடிவாந்தியாகுதல்,புளிஏப்பம், உதடும் நாவும்வறளல்,சரீரமுழுதும் எரிச்சல், அல்லித்தண்டையொத்த குளிர்ச்சி, ஒருவேளை கண்டத்தில் வியர்வை, சரீரம்வாடல் என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.

உ-வது விதூமாசீரணரோகம்.

அசீரணத்தோடு புளியேப்பம், புசித்த அன்னம் வாந்தியாகுதல், வயிறுப்பலோடு பேதி,ஒருவேளை இரைச்சலுடன் புளிப்பானபேதி,முகங் கறுத்தல், தேகம்வாடல், மயக்கம், முன்பின்தோன்றாமை, மிகுவேதனை, கிடைபொருந்தாமை, அதிதாகம் என்னும் இக்குணங்களை யுண்டாக்கும்.

ந-வது விஸ்பஷ்டம்பாசீரணரோகம்.

அசீரணத்தோடு சரீரமெல்லாம் மிகுநோவு, அதிசயித்தியம், கோழை, சரீரமும் கண்ணும் வெளிறல், வெளுத்தவாந்தி, பொய்ப்பசி, அடிக்கடி நுரைநுரையாகப்பேதி,இருமல்,சுவாசம்,துயரம்,தலைப்புரட்டல், வைத்தியத்துக்கு வசப்படாமை என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.

மதாந்தரமுற்றியது.

ச-வது ரசசேஷாசீரணரோகம்.

இது (அகூ) வது பக்கத்திற்கூறியதுதான்.

இந்தரோகங்களுக்கு,போசனகுடாரிச்சூரணம்,கண்டாத்திரிச்சூரணம், அசுவகந்திலேகியம், காந்தச்சிந்தூரம், முதலியசிகிச்சைகள் ஆகும்.

நான்காவது தாகரோகபடலம் முற்றியது.

உ

சுப்பிரமணியர் துணை

ஸ்ரீ வரக்ஷாமிர்தம்.

ஐந்தாவது

அஸ்மரிரோகபடலம்.

மூத்திராகாதரோகபேதம்.

பூர்வாசாரிகளால் ஏற்படுத்திய மூத்திராகாதரோகமானது, கிரிச்சரரோகம், அஸ்மரிரோகம், மூத்திரதோஷரோகம் என மூன்றுபிரிவாகி, அதன் அதன் பேதத்தால் இருபதுவிதப்படும்.

கிரிச்சரரோகபேதம்.

மேற்சொன்ன மூன்றுபிரிவில், கிரிச்சரரோகமானது, வாதகிரிச்சரரோகம், பித்தகிரிச்சரரோகம், சிலேஷ்ம கிரிச்சரரோகம், திரிதோஷ கிரிச்சரரோகம் என நான்குவிதப்படும். இது, மிகவும் வருத்தத்தின்மேல் கொஞ்சம் கொஞ்சமாக மூத்திரத்தை விழச்செய்தலால், கிரிச்சரரோகமெனப்பேர்பெற்ற. கிரிச்சரம் என்பது அற்பம்.

க-வது வாத கிரிச்சரரோகம்.

கீழ்வயிற்றிலும் தொடைக்கவுட்டியிலும் ஆண்குறியிலும் நோவையுண்டாக்கி, அடிக்கடிக் கொஞ்சம்கொஞ்சமாக நீரிறங்கச்செய்யும்.

உ-வது பித்த கிரிச்சரரோகம்.

நீர்த்துவாரத்தில் நோவையும் எரிச்சலையும் உண்டாக்கி, பின்பு மஞ்சள் சிவப்பு வன்னங்களாக நீரை இறங்கச்செய்யும்.

௩-வது சிலேஷ்ம கிரிச்சரரோகம்.

அடிவயிற்றிலும் ஆண்குறியிலும் வீக்கத்தையுண்டாக்கி, பிசினைப்போல் வழுவழுத்துக் கட்டுப்பட்டதான நீரை இறங்கச்செய்யும்.

ச-வது திரிதோஷ கிரிச்சரரோகம்.

வாத பித்த கபம் என்னும் மூன்றுகிரிச்சர ரோகங்களுக்குள்ள குணங்களையெல்லாம் ஒரேகாலத்தில் உண்டாக்கும்.

இதுகளுக்கு, நவாக்ஷாரக்குழம்பு, வெடியுப்புத்திராவகம், நீர்ப்பேதி மருந்து, மகாவசந்தகுசுமாகரமாத்திரை முதலிய சிகிச்சைகளும் ஆகும்.

அஸ்மரிரோகபேதம்.

கல்லுகளை உண்டுபண்ணுவது அஸ்மரிரோகமாம். இது வாதாஸ்மரி, பித்தாஸ்மரி, சிலேஷ்மாஸ்மரி, சுக்கிலாஸ்மரி என நான்குவிதப்படும், அன்றியும் சர்க்கராஸ்மரி என்பது ஒன்றுண்டு.

அஸ்மரிரோக பூர்வரூபம்.

கீழ்வயிறுப்பிசம், நாபியின் நாலுபக்கங்களிலும் நோவு, நீரானது ஆட்டுமூத்திர வாசனையுடன் வருத்தத்தை யுண்டாக்கி யிறங்கல், சுரம், அரோசகம் என்னும் இக்குணங்களை அஸ்மரிரோகமானது தனக்குப் பழைய ரூபமாகப் பெற்றிருக்கின்றது.

அஸ்மரிரோக சாமானிய பூர்வரூபம்.

நாபிஸ்தானநரம்புகள் அடிவயிறு சிரசு என்னும் இவ்விடங்களில் நோவு, மூத்திரம் சிதறிச் சிதறி விழுதல், சிலவேளை மறிபட்டதாகவும் தாராளமாகவும் சவுக்கியமாகவும் கலங்கலில்லாமலும் இறங்கல், அதில் கோமேதகரத்தினவன்னமாகத் தோற்றல், சிலவேளை கலங்கிவருவதால் ரத்தம் கலந்ததுபோல்காணுதல், அவ்வேளையில் ஆயாசத்துடன் அநந்த உபத்திரவங்கள் உண்டாகுதல் என்னும் இக்குணங்களெல்லாம் சகல அஸ்மரிரோகங்களுக்கும் உரியவைகளாக இருந்தாலும் இருக்கும்.

க-வது வாதாஸ்மரிரோகலக்ஷணம்.

வாயுவானது கீழ்வயிற்றுமுகத்தைச் சுற்றிக்கொண்டு மூத்திரத்தை எப்போது உலர்த்துமோ அப்போது, பயங்கரமான அஸ்மரிரோகம் உண்டாகும். அதன்விவரம்:—அவ்வாயு அடிவயிற்றிற்குடியிருந்தமையால் வெளிப்படும்நீரானது, வாதத்தையும், பித்தத்தையும், சிலேஷ்மத்தையும், சுக்கிலத்தையும் கூடினதாயிருக்கும்; அன்றியும் அதிக வருத்தத்தால் பற்கடித்தல், நடுக்கல், ஆண்குறியைக் கையால்தேய்த்தல், தொப்புளைப் பிசைதல், சதாஅழுதல், சத்திப்புடன் மலம்நழுகல், மூத்திரம் துளித் துளியாகக் கறுத்தநிறத்துடன் விழுதல், வீஞைதண்டுக்குள் முள்ளைச் சொருகினதுபோல் நோதல், தேகம் கருகிய நிறத்துடன் காங்கையாக இருத்தல் என்னும் இக்குணங்களுண்டென்பாருமுளர்.

உ-வது பித்தாஸ்மரிரோகலக்ஷணம்.

மூத்திரமானது வச்சிரத்திற்குன்றும் சாயலைப் பெற்றிருக்கும். அன்றியும் அடிவயிற்றில் இரைச்சலும் கொதித்தலும் காங்கையுமாக இருத்தலினால், ஆண்குறியின் முனையானது சேராங் கொட்டைத் தோலைப்போலிருத்தல்; நீரானது சிவப்பு, மஞ்சள், வெண்மைநிறங்களாக இறங்கல் என்னும் இக்குணங்களுண்டென்பாருமுளர்.

௩-வது சிலேஷ்மாஸ்மரிரோகலக்ஷணம்.

மூத்திரமானது வாதபித்தாஸ்மரிரோகங்களுக்குள்ள குணங்களையும் பெற்றிறங்கும். அன்றியும் கீழ்வயிற்றில் அதிகநோவு,கனத்தல்,குளிர்ச்சி, மிகுதியாகவும் வழுவழுப்பாகவும் தேன்வன்னமாகவும் வெண்மையாகவும் நீர் இறங்குதல் என்னும் இக்குணங்க ளுண்டென்பாரு முளர். இது பாலராதிசகலருக்குங்காணும். இந்தரோகம், காணுகின்றமார்க்கம் சிறிது ஆகையால், சலாகை முதலியவைகளால்வைத்தியஞ்செய்தால் வசப்படும்.

௪-வது சுக்கிலாஸ்மரிரோகலக்ஷணம்.

சையோககாலத்தில் வேகத்துடன் விழுகின்ற விந்துவை அடக்குத லாலும், இன்னும் விந்துஸ்தம்பனத்துக்காகச்சாப்பிடுகின்ற உஷ்ணவீரிய அவுஷதங்களினாலும் உண்டாகிய கனலில்நின்றும் வியாபித் தெழுந்த சூடானது,தன்ஸ்தானத்திலிருந்தசுக்கிலத்தைநழுகப்பண்ணி,நழுகினதை நாளத்தின் வழியாகக் கீழே ஒழுகவொட்டாமல் அண்டத்தினுடைய மத்யஸ்தானத்திலேயேமறிக்கும் அங்குமறிபட்டசுக்கிலத்தை, அதற்குரிய வாயுவானதுசுண்டவைத்துஉலர்த்தும்; அப்போது,இந்தரோகம்பிறக்கும். இதனால், இந்தரோகிக்கு பீசத்தில்வீக்கம், கீழ்வயிற்றில்நோவு நீரானது வருத்தத்தின்மேல் வெகுநேரம்பொறுத்து இறங்கல் என்னும் இக்குணங்க ளுண்டாகும். இது சுக்கிலம் உலரப்படுங்காலத்தில் உண்டானதாகையால் சுக்கிலாஸ்மரிரோகம் எனப்பேர்பெற்றது.

சர்க்கராஸ்மரிரோகலக்ஷணம்.

முன்சொன்னசுக்கிலாஸ்மரிரோகம் பிறக்கும்போதுலரப்பட்டிருந்த விந்துவை வாயுவானது அணுவணுவாகப்பொடித்து, மணல், சிறுபயறு, கடுகு, கடலை, சுண்டைக்காய்,இலந்தைக்காய், பேரீச்சங்காய் இவைகளின் பிரமாணங்களையொத்தகல்லுகளாகத்திரட்டி, நீரோடுசேர்த்து நாளத்தின் வழியாக வெளியில்தள்ளும். இதுவே சர்க்கராஸ்மரிரோகமாம். இந்த ரோகிக்கு வாயுவு சுபாவவழியில்நடந்தால்,மூத்திரத்தோடு முன்சொன்ன கல்லுகள்விழுந்துகொண்டேயிருக்கும் ; அப்படிநடவாமல் தப்பிநடந்தால் பக்கநோவுண்டாகி, ஒருதுளிமூத்திரங்கூட இறங்காமல்கட்டுப்பட்டுஅதிக உபத்திரவங்க ளுண்டாம். இதற்குக் கல்லடைப்புரோகமென்றும் பேர். இதுகளுக்குப் பாஷாணபேதிக் கஷாயம், மாலினிவசந்த மாத்திரை, சலமஞ்சரி, வெடியுப்புச்சுன்னம் முதலியமருந்துகளும், ஆயுதச்சிகிச் சைகளும் நன்மையைச்செய்யும். இவைநிற்க, சிலவில், இந்தரோகம் ௪ - விதமென்றும், சதையடைப்புரோகம் ௪ - விதமென்றும் சொல்லப்

படுகின்றது. அவைகளுக்கு விவரம்சொல்லாமையால் நிறுத்த
சர்க்கரா என்பது

மூத்திரதோஷபேதம்.

மூத்திரதோஷமானது, வாதவஸ்தி, வாதகுண்டலி, வ
மூத்திராதீதம், மூத்திரச்சடரம், மூத்திரோச்சங்கம், மூத்
மூத்திரசுக்லம்,மூத்திரவிட்விகாதம்,மூத்திரஉஷ்ணவாதம்,மூ
மூத்திரசாதம் எனப்பன்னிரண்டு விதப்படும். இவற்றுள்,
வாதகுண்டலி,வாதாஷ்டீலம்என்னுமிம்மூன்றுக்கும்வாயு
மூத்திராதீதம்,மூத்திரசடரம்என்னும்இவ்விரண்டிற்கும்வாத
அரசர்களாம் ; மற்றைய ஏழுக்கும் பித்தகபங்களே அரசர்க

க-வது வாதவஸ்தி மூத்திரரோகபேதம்.

வாதவஸ்தி மூத்திரரோகமானது மூத்திர சங்கவாத
மென்றும், மூத்திரபிந்து வாதவஸ்திரோகமென்றும் இருவித

மூத்திரசங்கவாதவஸ்திரோகலக்ஷணம்.

வாயுவானது,கீழ்வயிற்றுமுகத்தைநன்றாகஅடைத்து,அ
நின்றுகொள்ளுவதால், மூத்திரமானது விசேஷமாக உள்
கட்டுப்படுவதும் அன்றி, அந்தஸ்தானத்தில் நோவு, நமைச்ச
இக்குணங்களுண்டாகும். சங்கம் என்ப

மூத்திரபிந்துவாதவஸ்திரோகலக்ஷணம்.

வாயுவானது,ஒருவேளை,தன்ஸ்தானத்தைவிட்டிறங்கிக்
வட்டமாகவும் கருப்பத்தைப்போல்பருமனாகவும் உயர்வாக
அப்போது சரீரநோவு, தாகம், கொஞ்சம்புரளல், மூத்திர
விழாமல் துளித்துளியாக விழுதல் என்னும் இக்குணங்க
இது, வயிற்றில்நிறைந்தமூத்திரத்தைப்பிந்துபிந்தாகவிழுப்ப
மூத்திரபிந்துவாத வஸ்திரோகம் எனப்பேர்பெற்றது. இதை
மூத்திரம் என்றும் சொல்வார்கள். இது அசாத்தியம்.

உ-வது வாதகுண்டலிமூத்திரரோகலக்ஷண

வாயுவானது தொப்புளின் கீழ்வயிற்றில் துர்க்குணத்
வேதனையைச்செய்து பாம்பைப்போலச் சுற்றிக்கொண்டு மூ
மறிக்க, சரீரத்தில்மரத்தலுண்டாகிமூத்திரம்துளித்துளியாக
அல்லதுமலம் இறங்கியபின்புமூத்திரம்இறங்கும். இதுபாம்பை
கீழ்வயிற்றில் இருந்துகொண்டு வேதனையைச் செய்யுங் க
வாதகுண்டலி மூத்திரரோகம் எனப்பேர்பெற்றது.

௩-வது வாதாஷ்டீலமூத்திரரோகலக்ஷணம்.

வாயுவானது மலமார்க்கத்திற்கும் மூத்திரமார்க்கத்திற்கும் நடுவில் நிலைத்திருந்து கொண்டு, கீழ்வயிற்றை ஆமையோட்டைப் போலவே கெட்டியாய் அசைய வொட்டாமல் உயர்வாக வீங்கும்படி செய்யும். அக்காலத்தில்வயிற்றில்உப்பிசமும், மலமூத்திரச்சிக்கலும், அபானவாயுவு இன்மையும் உண்டாகும். அஷ்டீலம் என்பது வீக்கம்.

௪-வது மூத்திராதீதரோகலக்ஷணம்.

வாயுவானது வெகுநேரம் கட்டுப்பட்டிருக்கின்ற மூத்திரத்தை வெளிப்படுத்தாமலே யிருக்கும். ஒருவேளை கொஞ்சம் உபத்திரவத்தைக் கொடுத்து வெளிப்படுத்தும். அதீதம் என்பது காலங்கடத்தல்.

௫-வது மூத்திரசடாரரோகலக்ஷணம்.

மறிபட்டிருக்கு மூத்திரத்தால்அலைப்புண்டவாயுவானதுஎப்போது சுழித்தெழுந்திருக்குமோ அப்போது, கீழ்வயிற்றில் மூத்திரம் மிகுதியும் நிறையும்; இதனால் அதிகநோவு, வயிறுப்பிசம், அசீரணம், மலபந்தம் என்னும் இக்குணங்களுண்டாம். சடாரம் என்பது வயிறு.

௬-வது மூத்திரோச்சங்கரோகலக்ஷணம்.

சலத்துவாரத்தின் துர்க்குணங்களினாலும் வாயுவினாலும் மூத்திரம மறிபட்டு அற்பமாக இறங்கும்; இறங்கினாலும், அது கீழ்வயிற்றிலேனும், கோசத்தின்துவாரத்திலேனும், அதன்முனையிலேனும் சுரந்துதங்கிநின்று கொண்டுமெள்ளமெள்ளகசியுமிதனால்ஆண்குறியானதுநோவுள்ளதாகவும், நோயின்மையாகவும்,கனப்பதாகவும்,ஒருவேளையந்தமூத்திரம்சிதறிச்சிதறி விழுவதாகவும் இருக்கும். இது, மேற்சொன்ன இடங்களில் தங்கித்தங்கிக் கசிதலால், மூத்திரோச்சங்கரோகம் எனப் பேர்பெற்றது.

உச்சங்கம் என்பது இடம்.

௭-வது மூத்திரக்கிரந்திரோகலக்ஷணம்.

நிலைபெற்று வட்டமாக இராநின்றமூத்திரப்பையினது முகமானது பித்த சிலேஷ்மங்களினால் சுருங்கி முடிபோட்டதுபோல் ஆகிவிடும். அப்போது பலதுர்க்குணங்களும் உண்டாம். கிரந்தி என்பது முடிச்சு.

௮-வது மூத்திரச்சுக்கிலரோகலக்ஷணம்.

நீர்க்கட்டுரோகிக்கும், அதிகசையோகிக்கும், வாயுவினால்அடிபட்ட சுக்கிலமானது, தன்ஸ்தானத்தைவிட்டுநழுகி, விபூதியைக்கரைத்ததுபோல் மூத்திரத்திற்கு முந்தியேனும் பிந்தியேனும் விழும்.

௯-வது விட்விகாதமூத்திரரோகலக்ஷணம்.

சுரத்தில்மெலிந்தவனுக்கும் பலவீனனுக்கும் வாயுவினால்மலபந்தம் எப்போது உண்டாகுமோ அப்போது, மூத்திரத் துவாரமானது

மலத்தோடு சம்பந்தப்படும். இதனால் மலத்தினது துர்க்கந்த மாகவே மூத்திரம் இறங்கும். இந்தக்காரணத்தால் விட்விகாத மூத்திரரோகம் எனப்பேர்பெற்றது. விட்விகாதம் என்பது மலபந்தம்.

ம-வது உஷ்ணவாதமூத்திரரோகலக்ஷணம்.

கார தீக்ஷண போசனத்தினாலும், வாதத்தையுண்டாக்கும் வஸ்துக்களினாலும், அதிகநடையினாலும் பித்தம்பிறந்து அதிகரிக்கும். அந்தப் பித்தமானது,வாயுவினா லடிபட்டு,கீழ்வயிற்றின்சமீபத்தில்வேதனையையும் காங்கையையும் உண்டாக்கும். அப்போது, ரத்தங்கலந்தநிறமாகவும்,சுத்த ரத்தநிறமாகவும், மஞ்சள்நிறமாகவும், உஷ்ணமாகவும் அடிக்கடி வெகு வருத்தத்துடன் மூத்திரம் இறங்கும்.

மக-வது மூத்திரக்ஷயரோகலக்ஷணம்.

சுரத்தினால்மெலிந்தவனுக்கும், பலவீனனுக்கும்,பித்தமும்வாதமும் அதிகரித்துக்கீழ்வயிற்றிற்சேர்ந்துகொண்டுஅதிகவேதனையைப்பிறப்பித்து மூத்திரத்தைநாசப்படுத்தி, அவ்விடத்தில் நோவையும் எரிச்சலையும், உண்டாக்கும். க்ஷயம் என்பது நாசம்.

மஉ-வது மூத்திரசாதரோகலக்ஷணம்.

வாயுவினால் பித்தமும் சிலேஷ்மமும் அடிபட்டுக் கலங்குவதனால், மூத்திரமானது சங்கட்டத்தோடு, மஞ்சள், ரத்தம், வெண்மை என்னும் இவ்வன்னமாகவும், சிலவேளை அதிககாங்கையுடன் கோரோசன வன்ன மாகவும், சங்கபஸ்ம வன்னமாகவும், இன்னும் பலவித வன்னமாகவும் இறங்கும்அதனால்சுக்லதாதுவானது நீற்றுநானாவிதநிறமாகவெளிப்படும். சாதம் என்பது உபத்திரவம்.

அஸ்மரிரோக அசாத்தியநிதானம்.

எந்த அஸ்மரிரோகிக் கேனும் பீசங்களில் வீக்கமும், நோவும், நீர்க்கட்டும் உண்டாகில், அசாத்தியம்.

இதுகளுக்குக் கரும்புரசம், திரிகண்டகிக்கஷாயம், செம்மணத்தக் காளிக்காய்வற்றலின்தீநீர், மகாவசந்த குசுமாகர மாத்திரை முதலிய அவுஷதங்களும், ஆயுதச்சிகிச்சைகளும் உபயோகிக்கலாம்.

மேகரோகபேதம்.

மேகரோகமானது, வாதத்தினாலும் பித்தத்தினாலும் சிலேஷ்மத்தினாலும், இருபது விதப்படும். அவையாவன:—மதுமேகம், மச்சாமேகம், வசாமேகம், அஸ்திமேகம் என்னும்இந்நான்கும் வாதத்தினால்பிறக்கும் ; மஞ்சிஷ்டிமேகம், சாரமேகம், அரித்திராமேகம், நீலமேகம், ரத்தமேகம், காளமேகம் என்னும் இவ்வாறும் பித்தத்தினால்பிறக்கும் ; பிஷ்டமேகம்,

இட்சுமேகம், சாந்திரமேகம், சிக்தாமேகம், லாலாமேகம், சீதமேகம், சனைர் மேகம், சுராமேகம், சுக்கிலமேகம், சலமேகம் என்னும் இப்பத்தும் சிலேஷ்மத்தினால்பிறக்கும். இவற்றுள், தேனைப்போல் நிறத்தைப்பெற்று எறும்புகள் மொய்க்கின்ற மேகமூத்திர ரோகங்களுக்கு, உடனேயே நானாவிதமானவைத்தியம்செய்யவேண்டும். மேற்சொன்னவாதமேகமாவது சிலேஷ்மமேகமாவது, வாதபித்தகபங்கள் குறையுங்காலத்தில் பிறக்கின்றமையால், அவைகளைக் குறையவொட்டாமல் சந்தர்ப்பண விதியால் உபசரிக்கவேண்டும். பூர்வரூபங்களுடன் கூடியிராநின்ற இருபது மேகங்களுக்குள், வாதமேகங்கள் அசாத்தியம்; பித்தமேகங்கள், கஷ்டசாத்தியம்; சிலேஷ்மமேகங்களும், மேதோதாதுவைக்கெடுக்காதிருந்தால், சாத்தியம்.

மேகரோக பூர்வரூபம்.

மேகரோகமானது சரீரத்தில் வியர்வை, துர்க்கந்தம், தளர்ச்சி, கனத்தல், படுக்கையிலும்உட்காரலிலும்சுகத்திலும்நித்திரையிலும் இச்சை, மார்பு, கண், நா, காது, இவ்விடங்களில் எரிச்சல். தலைமயிரும் நகமும் விரைவில்வளரல், சீதளவஸ்துக்களில்இச்சை, கன்னமும்நெஞ்சும் உலரல், தாகம், வாயினிப்பு, கை கால் எரிச்சல், ஆண்குறிசுருங்கல், சுக்கிலநாசம். என்னும் இக்குணங்களைத் தனக்குப்பழையரூபமாகப் பெற்றிருக்கின்றது.

சாமானிய மேகரோக நிதானம்.

சகலமேகநீரும் கலங்கலாக இருந்தாலு மிருக்கும். இம்மேகங்களில் தோஷங்களும் உபத்திரவங்களும் பிறந்தகாலத்தில், அந்தந்த மூத்திர நிறங்களினால் இன்னின்ன மேகங்களென்றறியவேண்டும்.

இனி வாதத்தாற்பிறந்த வசாமேகரோகம் முதலிய நான்குவகை மேகரோகலக்ஷணங்களைச்சொல்லுவாம்.

௧-வது வசாமேகரோகலக்ஷணம்.

மூத்திரமானது கொழுப்பைக் கலந்ததுபோலும், சுத்தக்கொழுப்பைப்போலும் அடிக்கடி இறங்கும். அன்றியும் நிணவாசனையுடன் வேளைக்குக் குறுணி அளவு இறங்கும். காய்ச்சினாலும் அவ்வாசனையே வீசும் என்பாருமுளர். இது, ௮௩-வது பக்கத்தில் அசாத்தியாதிசார ரோகலக்ஷணத்தில் சொல்லிய வசா சலத்தைப்போல் இறங்கலால், வசாமேகரோகம்எனப்பேர்பெற்றது. நிறத்திலும்நாற்றத்திலும்வசம்பையொத்திருப்பதால், இதனை வசாமேகம் எனச்சொல்வது சில ஆயுள்வேதியர் சம்மதம். வசா என்பது வசம்பு.

௨-வது மச்சா மேகரோகலக்ஷணம்.

மூத்திரமானது மச்சை என்னும் மாமிசநிறமாகவும் அதுகலந்தது போலவும், மோர்கலந்ததுபோலவும் அடிக்கடி இறங்கும். அது உறைந்த

இடத்தில், பழம் பிழிந்ததுபோலும், மோரைஊற்றினதுபோலும் நிறம் தோற்றப்படும்; அன்றியும் காய்ச்சினுல் நிணவாசனையே உண்டாகும் என்பாருமுளர். மச்சை என்பது எலும்புக்குள் இருக்கும் மூளை.

௩-வது அஸ்தி மேகரோகலக்ஷணம்.

மூத்திரமானது யானைமூத்திரத்தையொத்துத் தடைப்படாமலும், ஒருவேளை தடைப்பட்டுக் கலங்கியதுமாக இறங்கும். இது, யானையின் மூத்திரம்போல் இறங்கலால், அஸ்திமேகம் எனப்பேர்பெற்றது.

௪-வது மதுமேக ரோகலக்ஷணம்.

மூத்திரமானது தடித்து ஈ எறும்பு மொய்ப்பதாய், தேனுக்குள்ள நிறம், வாசனை, ருசி, கனம் என்னும் இவைகளைப்பெற்று, காய்ச்சினுல் பாகாகுவதாய், நாபியிலும் தேகத்திலும்குடிலத்தையுண்டாக்கி இறங்கும். அன்றியும் பசுமையாயும், மஞ்சள்நிறமாயும், பீசத்திலும் கோசத்திலும் கடுத்தலுடன்அடிக்கடி இறங்குதல், அதைப்பிடித்துப்பார்த்தால் அடியில் வெண்மைபற்றுதல்,தேகம்வெளிறலுடன்கன்றுதல் என்னுமிக்குணங்கள் உண்டென்பாருமுளர். இது, தேகத்தின் மதுரத்தை யுருக்கிக்கொண்டு வருதலால், மதுமேகம் எனப்பேர்பெற்றது. இதுவே சீரணமதுமேகம், பூரணமதுமேகம் என இருவகைப்படும். இவற்றுள் சீரண மதுமேகம் என்பது, ஏழுதாதுக்களும் குறையப்படுங் காலத்திலாவது, வாதாதி தோஷங்களினுல் வாயுசஞ்சாரமார்க்கம் அடைபடுங்காலத்திலாவது வாயு அதிகரித்தலினுல்பிறந்து,வாதபித்தங்களின்குணங்களைப்பெற்றுமுற்கூறிய பூர்வரூபத்தை அடைந்து, ரோகியைச் சீக்கிரத்திற்கெடுக்கும். இது அசாத்தியம். ஒருவேளை இதுவே திரிதோஷகால விபரியாசத்தினுல் ரோகியை நெடுநாளைக்கு வைத்திருப்பதும் உண்டு; அப்படிக்கு வைத்திருப்பதால், இது பூரணமதுமேகம் எனப்பேர்பெற்றது. இது கஷ்டசாத்தியம். இவைநிற்க,மற்றைப்பத்தொன்பதுமேகரோகங்களு மவுஷதப்பிரயோக சாந்தி இல்லாமல் நெடுநாள் உடம்பில்ஊறிப் பலக்குமாயின், இம்மேகங்களைப்போலவே நீரையும்பெற்றுச் சரீரத்திற்குத் தேன் நிறத்தையுங்கொடுத்து மதுமேகம் என்கிற பெயரையும்பெறும்.

இனி பித்தத்தாற்பிறந்த சாரமேகரோகமுதலிய ஆறுவகை மேகரோகலக்ஷணங்களைச்சொல்லுவாம்.

௧-வது சார மேகரோகலக்ஷணம்.

மூத்திரமானது அதிக உப்பாகவே இறங்கும்; கையால் தொட்டுச் சோதித்துப்பார்க்கில், உப்புக்குள்ள கசிவுமுதலிய குணங்கள் உண்டா

யிருப்பதுமன்றி, இது உறைந்த ஸ்தானங்களில், உவர்மண், சுண்ணும்பு, இவைகளின் நிறமாகவும் தோற்றப்படும். சாரம் என்பது உப்பு.

உ-வது நீல மேகரோகரோகலக்ஷணம்.

மூத்திரமானதுஇந்திரநீலத்தை அரைத்துக்கரைத்தசலம்போலவே இறங்கும். இந்தக்காரணத்தினல் நீலமேகம் எனப்பேர்பெற்றது.

ங-வது காள மேகரோகலக்ஷணம்.

மூத்திரமானது கொள்ளிக்கட்டைக்கரியை அரைத்துக் கரைத்து இறுத்த சலம்போலவே இறங்கும். காளம் என்பது கறுப்பு.

சு-வது அரித்திரா மேகரோகலக்ஷணம்.

மூத்திரமானது மஞ்சளைக் கரைத்த சலம்போலவும் காரமாகவும் இறங்கும். இதில்நீர்ச்சுறுக்கும் உண்டாம். அரித்திரம் என்பது மஞ்சள்.

ரு-வது மஞ்சிஷ்டி மேகரோகலக்ஷணம்.

மூத்திரமானது, மஞ்சிஷ்டிவேரைக் காய்ச்சி வடிக்கட்டிய கஷாயத்தினதுநிறத்தையும் ஒருவித துர்க்கந்தத்தையும்பெற்று, எப்போதும் ஒழுக்காகவே இறங்கும். மஞ்சிஷ்டி என்பது சாயவேர்.

சு-வது ரத்த மேகரோகலக்ஷணம்.

மூத்திரமானதுரத்தநிறத்தையும்,லவணத்தையும்,துர்க்கந்தத்தையும் பெற்று, உஷ்ணரம்பமாய் அனலை வீசிக்கொண்டேயிறங்கும். அன்றியும் முசல்ரத்தத்தை யொத்து இரண்டு படியளவு இறங்குதல்; அதைக் காய்ச்சிச் சோதித்தால் புலால் நாற்றம் வீசுதல்: இதனல், கோசமும் பீசமும் கடுக்குதல் என்னும் இக்குணங்களுண்டென்பாருமுளர்.

இனிசிலேஷ்மத்தால்பிறந்த சலமேகரோகமுதலிய பத்துவகை மேகரோகலக்ஷணங்களைச்சொல்லுவாம்.

க-வது சல மேகரோகலக்ஷணம்.

மூத்திரமானது, சுத்தசலம்போலத் தெளிந்தும், வெளுத்தும், மிகுந்தும், குளிர்ச்சியுடன்யாதொருதுர்க்கந்தம் இல்லாமல் மினுமினுத்து கொஞ்சங் கலங்கலாகவே இறங்கும்; அன்றியும் கழுநீரைப்போல மிகு சிக்கலுடன் இறங்கல், காய்ச்சினல் சுண்ணும்பு சங்கு இவைகளைப்போல் வண்டல்படிதல்,தேகத்தில் ஒருவிதநாற்றம்வீசுதல் என்னும் இக்குணங்களுண்டென்பாருமுளர். வெண்மையால் இதனைச்சங்கமேகம் என்பர்.

உ-வது இக்ஷு மேகரோகலக்ஷணம்.

மூத்திரமானது, கரும்பை நருக்கிப்பிழிந்து உடனே வடிக்கட்டிய சாறுபோலும்,தென்னங்கள்ளைப்போலும், மிகுந்தமதுரமாகவிசேஷித்து, நுரைகளோடுங்கூட இறங்கும். இக்ஷு என்பது கரும்பு.

௩-வது சாந்திர மேகரோகலக்ஷணம்.

மூத்திரமானது, ஒவ்வொருநாள் வயிற்றில் கட்டுப்பட்டதுபோல் இருந்து, கலங்கலோடும் வழுவழுத்துக்குழம்பாகஇறங்கும். இது,ஒருநாள் வயிற்றில்தங்கி மறுநாள்இறங்கலால், சாந்திரமேகம் எனப்பேர்பெற்றது.

௪-வது சுரா மேகரோகலக்ஷணம்.

மூத்திரமானது தென்னங்கள்ளைப்போலவே இறங்கும். அப்படி இறங்குவதிலும், முதல்தெளிவாகவும், பின்பு குழம்பாகவும் இறங்கும். அன்றியும் நுரைத்தும் வெளுத்தும் வேளைக்கு நாழியளவு இறங்கல், காய்ச்சினுல் கள்ளைப்போலமணக்குதல், மாப்போல் வண்டல் படிதல், மயக்கம் என்னும்இக்குணங்களுண்டென்பாருமுளர். சுரா என்பது கள்.

௫-வது பிஷ்ட மேகரோகலக்ஷணம்.

மூத்திரமானது, பச்சரிசிமாவைக்கரைத்த தண்ணீரைப்போலவே, வெளுத்தநிறத்துடன் அதிகமாக இறங்கும். அப்போதுரோமச்சிலிர்ப்பும் உண்டாகும். பிஷ்டம் என்பது அரிசியின் மாவு.

௬-வது சுக்கில மேகரோகலக்ஷணம்.

மூத்திரமானது சுக்கிலத்தைப்போலவே வெண்மையாகவும் அதில் பஞ்சைப் பன்னிப்போட்டதுபோல் சுக்கிலம் மிதப்பதாகவும் இறங்கும். அன்றியும் இது, தாழஞ்சாற்றைப்போல் இறங்கிப் பின்பு ஈரலைப்போல் தோய்வதுந்தவிர, காய்ச்சினுல் கட்டியாகும் என்பாருமுளர்.

௭-வது சிகதா மேகரோகலக்ஷணம்.

மூத்திரமானது வெள்ளை மணல் கலந்தசலம்போல் ஒவ்வொரு முகூர்த்தத்துக்கு ஒருதரம் இறங்கும். சிகதா என்பது மணல்.

௮-வது சீத மேகரோகலக்ஷணம்.

மூத்திரமானது மிகுந்த குளிர்ச்சியுடன் மதுரம் உள்ளதாகவும் விசேஷமாகவும் இறங்கும். சீதம் என்பது குளிர்ச்சி.

௯-வது சனைர் மேகரோகலக்ஷணம்.

மூத்திரமானது பொறுத்துப் பொறுத்துக் கொஞ்சம் கொஞ்சமாக மிருதுவைப்பெற்றே இறங்கும். சனைர் என்பது காலதாமதம்.

௰-வது லாலா மேகரோகலக்ஷணம்.

மூத்திரமானது கோட்டுவாய்ச் சலத்தைப்போலவே இறங்கும். அப்படி இறங்குவதிலும் மினுமினுத்து மெல்லியநூலிழை இறங்குவது போலத் தாரையாக இறங்கும். லாலா என்பது கோட்டுவாய்ச்சலம்.

ஆ மேகரோகலக்ஷணம் இருபதும் முற்றியது.

இனி, மேகரோகங்களின் உபத்திரவத்தைச்சொல்வாம்.

வாத மேகரோக உபத்திரவநிதானம்.

எழுபத்தெட்டாவதுபக்கத்தில்சொல்லிய உதாவர்த்தரோககுணங்களெல்லாம்இதில்உண்டாவதன்றியும்,நடுக்கல்,மார்புநோவு,மனச்சஞ்சலம், குத்தல்,அரைநித்திரை,வாயுலரல், இருமல், இரைப்பு முதலியகுணங்கள் உண்டாகும். அன்றியும் பல், நா, தொண்டை, உதடு இவைகறுத்தல், படுக்கை பொருந்தாமை, புரளல், நாடிகுடிலமாயும்குணபேதமாயும் நடக்குதல், ஒருவிதமணம்வீசல் என்னும் இக்குணங்களுண்டென்பாருமுளர்.

பித்த மேகரோக உபத்திரவநிதானம்.

கீழ்வயிறு ஆண்குறி இவைகளில் வியர்வை, பீசம் சுருங்குதல், சரீரத்தில் காங்கையுடன் எரிச்சல், அதிகதாகம், புளியேப்பம், மூர்ச்சை, பேதி முதலிய குணங்கள் உண்டாகும். அன்றியும் தேகவாட்டம், சரீரத்திலும் கோசத்திலும் கவிச்சுநாற்றம்வீசுதல், சீழ், கற்றுழைச்சலம்,தேன் இவைகளைப்போலவே நீரிறங்குவதுந்தவிர, பீசத்திலும் கோசத்திலும் குத்தல், ஈரலிலும் நாபியிலும் ஒருவிதமானநோவு, ரணத்துடன்நாற்றம், சுரம் என்னும் இக்குணங்க ளுண்டென்பாருமுளர்.

சிலேஷ்ம மேகரோக உபத்திரவநிதானம்.

மந்தாக்கினி, அரோசகம், வாந்தி, மயக்கத்துடன் சோம்பலான நித்திரை,இருமல்,மூக்கடைப்புமுதலியகுணங்கள் உண்டாகும். அன்றியும் கோழையும் உமிழ்நீரும் உண்டாகுமென்பாரு முளர்.

இனி மேகரோக தசாவஸ்தைநிதானம்.

க-வது, கீழ்வயிற்றில் சங்கட்டந்தோற்றுதல் ; உ-வது, நீரிறங்கினால் ஆயாசங்காணுதல் ; ௩-வது, வாயுபிரபலப்படுதல் ; ௪-வது, திரிதோஷங் கோபிக்குதல் ; ரு-வது, சுக்கிலம்நசிக்குதல் ; ௬ - வது, அதிகதாகமும் நீரில்மேகமும் உண்டாகுதல் ; எ-வது, அரோசகமும் தேகசாட்டியமும் பிறக்குதல் ; அ-வது, கட்டிகள்எழும்புதல் ; ௯-வது,பேதிஅதிகரிக்குதல்; ௰-வது,ஞாபகமாறி உயிர்நீங்குதல் என்றறிக. இப்பத்து அவஸ்தைகளும் மேகநீருக்கு உபபலமாகஇருப்பதால்,இவைகள் உண்டாவதற்குமுன்னமே ஆவாரைப்பஞ்சாங்கத் தீநீர், சீந்தில்சருக்கரை, மேககுலாந்தகமாத்திரை, மேக கஜகண்டீரவமாத்திரை, மேக பஞ்சாமிர்தம், பஞ்சானனரசம், வேதவித்தியாரசம் முதலியசிகிச்சைகளைச் செய்யவேண்டும்.

மதாந்தரம்.

க-வது, சரீரங்கனத்தல் ; உ-வது, தேகசுகுறைந்து மழுங்குதல் ; ௩-வது,நாக்குஈரம்அற்றுவறளல்;௪-வது,தேகஎரிச்சல்; ரு-வது,மூத்திரம்

அதிகமாகுதல்; ௬-வது, படுக்கை பொருந்தாமையுடன் மூர்ச்சையும் உண்டாகுதல்; ௭-வது, சுவாசம் அதிகரிக்குதல்; ௮-வது, ரணம் பிறக்குதல்; ௯-வது, கிருமிசேருதல்; ௰-வது, க்ஷயம் கண்டு உயிர்நீங்குதல்.

மதாந்தர முற்றியது.

இனி மேகரோக அசாத்தியநிதானம்.

எந்த மேகரோகிகட்கானாலும், மிகுந்தகாற்றினாலும், அதிக சீதள வஸ்துக்களினாலும், இடைவிடாது உபசரித்தபோதிலும் சகிக்கக்கூடாத சரீர எரிச்சல், அளவுக்கடங்காத மூத்திரம், எவ்வளவு சலபானம் பண்ணினாலும் தணியாததாகம், மேன்மேலும் நாக்குவறள்ல், அரோசகம், சுரம், நுட்பமாகியஸ்தானங்களில் கட்டிகளெழும்புதல்; ஒருவேளை மிகுந்த பேதி என்னும் இக்குணங்களுண்டாகில், அசாத்தியமே.

மேகக்கட்டிகளின்பேதம்.

முன்புசொன்ன மேகரோகங்களை அவுஷதங்களால் நிவிர்த்தி செய்யாவிடில், அந்தநீரினால்மெலிந்த ரோகிகட்கு, சராவிகை, கச்சபிகை, ஜாலினி, வினதை, அலசை, மசூரிகை, சரஷபிகை, புத்திரிணி, பிதாரிகை, வித்திரதி எனப்பத்துவிதப்பிடகங்கள் உண்டாகும். இவைகட்குமுறையே தமிழ்ப்பெயர்வருமாறு:--மடக்குக்கட்டி, ஆமையோட்டுக்கட்டி, வலைக்கண் கட்டி, அதோமுகக்கட்டி, பேய்ச்சுரைக்காய்கட்டி, கடலைக்கட்டி, கடுகுக் கட்டி, புத்திராதிக்கக்கட்டி, நிலப்பூசினிக்கிழங்குக்கட்டி, வித்திரதிக்கட்டி என்பவைகளாம்.

பிடகம் என்பது கட்டி.

௧-வது மடக்குக்கட்டிலக்ஷணம்.

கீல்களிலும் மாமிசஸ்தானங்களிலும் இருந்து உண்டாகி, கறுத்து அடியகன்று முனையுயர்ந்து நடுவில் பள்ளம்விழுந்து வியர்வையுடன் நோவுள்ளதாய் மடக்குக் கவிழ்த்ததுபோலவே இருக்கும்.

௨-வது ஆமையோட்டுக்கட்டிலக்ஷணம்.

குழிகள்விழுந்தும், மினுமினுத்தும், நோவைத்தருவதும், ஒருவேளை தராததுமாய் அனேகவிதசிகிச்சைகளுக்குவசப்படாமல், ஆமையோட்டைக் கவிழ்த்து மூடினதுபோலவே இருக்கும்.

௩-வது வலைக்கண்கட்டிலக்ஷணம்.

மொத்தாகாரமாக எழும்பி மரத்தின் வேருகளைப்போல் வெகு நரம்புகள்சூழப்படுவதும், குழம்பானசலத்தைச்சொரிவதும், நாளுக்குநாள் பரவுவதும், வலையைப்போல் கண்கள்விடுவதும், சிலவேளை உபத்திரவத்தைச்செய்வதும் சிலவேளை செய்யாததுமாக இருக்கும்.

ச-வது அதோமுகக்கட்டிலக்ஷணம்.

வயிற்றிலேனும்இடுப்பிலேனும் கரியநிறத்துடன்பருமனுக்எழும்பி, அதிக வுபத்திரவத்தையும் வியர்வையையும் தருவதாயிருக்கும். இது, ரோகியைக்கொஞ்சமேனும் நிமிரவொட்டாமற் குனியப்பண்ணுகின்ற காரணத்தால், அதோமுகக்கட்டி எனப்பேர்பெற்றது.

ரு-வது பேய்ச்சுரைக்காய் கட்டிலக்ஷணம்.

முதல்முதல் எவ்விடத்தில் இது பிறக்கின்றதோ அவ்விடத்துச் சருமத்தின்மேல் நெருப்பால்சுட்டதுபோல் எரிச்சலை உண்டாக்கிஎழும்பி, பின்பு கறுப்பு சிவப்பு நிறங்களையடைந்தகொப்புளங்களாகச்சரீரமெங்கும் வியாபித்து, பார்வைக்குப் பேய்ச்சுரைப் பிஞ்சைப்போலவே இருக்கும். இதனுல் அதிகபேதி, தாகம், சோருதல், சுரம்,மிகுந்தநோவுடன்வேதனை என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

சு-வது கடலைக்கட்டிலக்ஷணம்.

சிறுகடலைப் பிரமாணத்தையும் அதன் ரூபத்தையும்பெற்று, சரீர முழுதும் கொப்புளம் கொப்புளமாகஎழும்பி, உபத்திரவத்தைச்செய்யும்.

எ-வது கடுகுக்கட்டிலக்ஷணம்.

சரீரமுழுதும் நெருக்கமாகக் கடுகுப்பிரமாணத்தை யொத்துச் சீக்கிரத்திலுண்டாகி, உடனேயுடைந்து, அதிக உபத்திரவத்தைத்தரும்.

அ-வது புத்திராதிக்கக்கட்டிலக்ஷணம்.

விஸ்தரித்து வரிசைவரிசையாக ஏற்பட்டு, பருத்தும் சிறுத்தும் ஒன்றையொன்றைச்சுற்றி அனேக கொப்புளங்கள் சூழ்வதாகப் பிறந்து, அதிஎரிச்சலையும் மிகுசங்கட்டத்தையுந்தரும். இது, ஒன்றின்பின் ஒன்று பிறந்துகூட்டமாக இருப்பதால், புத்திராதிக்கக்கட்டிஎனப்பேர்பெற்றது.

கூ-வது நிலப்பூசினிக்கிழங்குக்கட்டிலக்ஷணம்.

நிலப்பூசினிக்கிழங்கைப்போல்வட்டமாகத் தடித்துஅனந்தவிதமான உபத்திரவங்களை விசேஷமாகத்தரும்.

௰-வது வித்திரதிக்கட்டிலக்ஷணம்.

இதை, இப்படலத்தில், ௱சு-வது பக்கத்தில் தைத்தியமேகத்திற்குப் பின்பு சொல்லப்படும்.

சாத்தியாசாத்தியமேகக்கட்டிகளின் நிதானம்.

மேற்கூறிய கட்டிகளுக்குள், மடக்குக்கட்டி, ஆமையோட்டுக்கட்டி, வலைக்கண்கட்டி இம்மூன்றும் ரசதாதுமுதல் மாமிச தாதுவரைக்கும் ஒட்டிப்பிறப்பதால் சாத்தியம். புத்திராதிக்கக்கட்டி, நிலப்பூசினிக்கிழங்குக் கட்டி இவ்விரண்டும் மேதோதாதுவைப்பற்றிப்பிறப்பதால் கஷ்டசாத்யம். மற்றையகட்டிகள் பித்தத்தால்பிறந்து மேதோதாதுவை ஒட்டியும்

ஒட்டாமலும் இருப்பதால், கஷ்டத்திலும் கஷ்டசாத்தியம். ஆயினும், மேகநீரால் மெலிந்தரோகிக்கு, மார்பு, அடிமுதுகு, முலை, தோள், குதம், சிரசு மையம்,கில்,கால் கைவிரல்கள்,தற்சனிவிரல், அக்குள், புருவமையம், கழுத்து, இருதயம், நடுத்தொப்புள், உதடு, அண்டம், முழங்கால், கண்டச்சதை, தொடைச்சதை, கடிஸ்தானம் என்னும் இவ்விடங்களில் எவ்விதக்கட்டிகள் பிறந்தாலும் அசாத்தியமென்றே நிதானிக்கவும். ஒருவேளைமேற்சொல்லிய இடங்களைத்தப்பிப்பிறக்கில், சாத்தியம்ஆகும்.

இதுகளை, க்ஷத்திர க்ஷார ரணச்சிகிச்சைகளைக்கொண்டும்,பாதரசு, உபரச, லோக வருக்க அவுஷதங்களைக்கொண்டும்,வசப்படுத்தவேண்டும்.

சோமரோகலக்ஷணம்.

தூக்கம்,ஆயாசம்,மிகுந்தசையோகம்,இடுமருந்து முதலியவைகளால் மூத்திரம்அதிகரிப்பதும்உண்டு. அந்தமூத்திரமானது, கலங்கலுள்ளதாய்க் கீழ்வயிற்று முகத்திற் சேர்ந்துகொண்டு, தனது சுபாவ நிறத்தையும் நாற்றத்தையும் ஒழித்து அதிசாரரோகத்தைப்போல் அடிக்கடியிறங்கும். இதனால் பூரணசந்திரனைப்போல் சரீரம்வெளுத்தல், நாளுக்கு நாள் பலவீனப்படுதல், முகம், கன்னம், உதடு இம்மூன்றுஞ் சுட்கித்தல், தலைநோதல், வாயும், நாவும் வறளல், அதிகதாகம், தேகம் இளைத்தலினால் அசதி, சோம்பல், பலவிதபோசனபலகாரங்களை மிகுதியாகப்புசித்தாலும் திர்த்தி அடையாமை என்னும் இக்குணங்களுண்டாகும். இது, பூரண சந்திரனைப்போலவே தேகம்வெளுக்கவும் நாளுக்கு நாள் இளைக்கவும் செய்கின்றமையால், சோமரோகம் எனப்பேர்பெற்றது. ஒருவேளை இந்த ரோகிக்குச் சரீரம்வெளுக்காமல் சுபாவநிறம் அல்லது கருமைநிறம் உண்டாகி, முன்சொன்ன துர்க்குணங்களெல்லாம்பிறந்து அடிக்கடி மூத்திரமும் இறங்குமாயின், இது மூத்திராதிசாரரோகம், வெகுமூத்திர ரோகம் எனவும் பேர் பெறும். சோமன் என்பது சந்திரன்.

இதற்குநிலப்பனங்கிழங்கு, குருவேர், பனங்கிழங்கு, நெல்லிமுள்ளி, இவைகளாற்செய்த ரசாயனம், வாழைப்பழ ஜெயநீர், ஈந்தில் சருக்கரை, தேற்றுங்கொட்டைலேகியம் முதலியசிகிச்சைகளும் ஆகும்.

மதாந்தரம்.

சிந்தாமணிஎன்னும் சாஸ்திரத்திலும், மேகரோகத்தை இருபது வகையாகச் சொல்லப்படுகின்றது. அவையாவன:—ஆச்சியகந்திமேகம், சுத்தமேகம், வாதப்பிரமியமேகம், மாமிசசிராவிமேகம், அப்பியமேகம், பித்தப்பிரமியமேகம், சவிரணமேகம், மதுமேகம், சாந்திரமேகம், ஆர்க்க மேகம்,வசாமேகம்,உத்தமமேகம்,மச்சைமேகம், ஆதிக்கமேகம்,சுராமேகம்,

சுக்கிலமேகம், உதகமேகம், பிரசமேகம், சாரமேகம், தைத்தியமேகம் என்பவைகளாம். இவற்றுள், அ-கூ-கக-கங-கரு-ககூ-கஎ-கஅ-ககூ-என்னும் இலக்கங்களை உள்ள ஒன்பது மேகரோகங்களும் முற்கூறியவைகளே ஆம். இவைஒழிந்த பதினொருமேகங்களையும்முறையே இதனடியிற்கூறப்படும்.

க-வது ஆச்சியகந்தி மேகரோகம்.

மூத்திரமானது நெய்யையொத்துச்சிலையிற்றோய்த்துக்கொளுத்தில் எரிவதும், நாளொன்றுக்குக் குறுணி என்னும் நாலுபடி அளவாக இறங்குவதுமாக இருக்கும். இதனால் சரீரம் சுட்கிக்கும்.

உ-வது சுத்த மேகரோகம்.

மூத்திரமானது கோசலத்தைப்போல் வாசனையுள்ளதும், ஒரு நாளைக்கு நாலுபடி அளவாக இறங்குவதும், காய்ச்சிக் கொளுத்தினால் மிகுந்தபிரகாசத்துடன் எரிவதுமாக இருக்கும். இதனால் இளைப்புடன் மிகுந்த களையும், சரீரத்தில் மாறுநிறமும் உண்டாகும்.

ங-வது பிரமிய மேகரோகம்.

மூத்திரமானது கொழுப்பையொத்துக்கனத்துமாமிசநாற்றத்துடன் வேளைக்கு ஒருநாழிஎன்னும் அரைப்படி அளவாக அடிக்கடி இறங்கும். இதைக்காய்ச்சினால் தேன்மணமே வீசும்.

ச-வது மாமிசசிராவி மேகரோகம்.

மூத்திரமானது வெள்ளாட்டுக் கொழுப்பையொத்தும், காய்ச்சினால் அந்த ஆட்டினதுநெய்நிறமும், கருப்பஞ்சாற்றுக்குள்ளமணமும்உண்டாய், வேளைக்குக் குறுணி அளவாக இறங்கும்.

ரு-வது அப்பிய மேகரோகம்.

மூத்திரமானது யானையின் மதசலத்தைப்போல் அதிக வினாவாய் ஒவ்வொரு வேளைக்கு ஒருபடி அளவாக இறங்கும். காய்ச்சினால், உவர்மண்ணைப்போல் அடியில் வண்டல்படியும்.

சூ-வது பித்தப்பிரமிய மேகரோகம்.

மூத்திரமானது கற்றாழஞ்சாற்றை யொத்தநிறமும் நாற்றமும் உள்ளதாய் ஒவ்வொரு நாழிகைக்கு இரண்டுபடி அளவாக இறங்கும். காய்ச்சினால், அதிக நாற்றம் உண்டாகும்.

எ-வது சவிரண மேகரோகம்.

மூத்திரமானது சுண்ணாம்பையொத்த காரமும் துர்க்கந்தமும் உள்ளதாய் வேளைக்கு ஒருபடிஅளவாக இறங்கும். இதைக்காய்ச்சினாலும் சும்மாவைத்திருந்தாலும்அடியில்சுண்ணாம்புநீறுபோல்வண்டல்படிவதும் எறும்புமொய்ப்பதுமாக இருக்கும்.

அ-வது சாந்திர மேகரோகம்.

மூத்திரமானது பளிங்குநிறம்போலாவது தாழைவிழுதுச் சாறு போலாவது வேளைக்கு ஒருபடி அளவாகஇறங்கும். இதனால் கோசமும் பீசமும் கடுக்கும் ; காய்ச்சினால் சீழைப்போல் நாற்றம்வீசும்.

கூ-வது உத்தம மேகம்.

மூத்திரமானது காய்ச்சினாலும் நல்லசலத்தைப்போல் இருப்பதும் அன்றி, ஒவ்வொருவேளைக்குக் குறுணிஅளவாக இறங்கும்.

௰-வது ஆதிக்க மேகரோகம்.

மூத்திரமானது காய்ச்சினாலும் சும்மாவைத்திருந்தாலும் இளநீர்ச் சலம்போலவே நிறமும் அந்தவாசனையும் உள்ளதாயிருக்கும். இதனால் அதிகதாகமும் தேகவாட்டமும் உண்டாகும்.

௰௧-வது தைத்திய மேகரோகம்.

மூத்திரமானது இறச்சியைக்கழுவினசலம்போலவே நீர்த்தாரையில் நின்றும் முறுக்குண்டு வெண்மையாய் வேளைக்கு முந்நாழி அளவாக இறங்கும். அதைக்காய்ச்சினால் அக்கவுச்சுவாசனையே வீசும்.

மதாந்தரமுற்றியது.

வித்திரதிக்கட்டியின்பூர்வரூபம்.

வித்திரதிக்கட்டியானது முதல்முதல், தோல், ரத்தம், மாமிசம், மேதை, எலும்பு, சன்னநரம்பு, கபநரம்பு என்னும் இவைகளில் பஞ்சு சேருவதுபோல் கொஞ்சம் கொஞ்சமாகச்சேர்ந்து தடித்து நிலைபெற்று எழும்புகின்றவீக்கத்தையேதனக்குப்பழையரூபமாகப்பெற்றிருக்கின்றது. இது குத்தலைத்தருவதால் வித்திரதிக்கட்டி எனப்பேர்பெற்றது. இதனை விப்புருதிக்கட்டி எனவழங்குகிறார்கள். வித்திரம் என்பது குத்தல்.

வித்திரதிக்கட்டிலக்ஷணம்.

பூர்வரூபத்தில் தடித்த வீக்கமானது சரீரத்தில் வெளிப்புறத்தி லேனும் உட்புறத்திலேனும் வேரூன்றி, அதி உக்கிரமான நோவோடு வட்டவடிவாகவும் நீண்டவடிவாகவும் புடைத்துக் கட்டியாய் ஏற்பட்டுக் காணும். இது, நிலைபெற்றுக்கண்டவிடத்திலேயே இருந்தால், வித்திரதி என்றும்; நரம்பின்வழியாக ஓடிஓடித்தடித்தால், ஓடுவித்திரதி என்றும் பேர்பெறும். இது உள்வித்திரதி, வெளிவித்திரதி என இருவிதப்படும்.

வித்திரதிக்கட்டிபேதம்.

வித்திரதிக்கட்டி என்பது வாதவித்திரதி, பித்தவித்திரதி, சிலேஷ்ம வித்திரதி, திரதோஷ வித்திரதி, ரத்தவித்திரதி, க்ஷதவித்திரதி, என ஆறுவிதப்படும். அன்றியும், ஸ்தனவித்திரதி என்பது ஒன்றுண்டு, இதனை

அசாத்திய வித்திரதியைச் சொன்னவுடன் சொல்லப்படும். இவைநிற்க, முன்பு லக்ஷணவாக்கியத்தில், உட்புறத்திலேனும் வெளிப்புறத்திலேனும் பிறக்கும் என்றுசொல்லிய வித்திரதிக்கட்டி ஒன்றுதானே நாபி, வஸ்தி, யகிருதி, பிலீகம், குலோமம், இருதயம், குக்ஷி, வம்க்ஷணம், முஷ்கம், அபானம் என்னும்இப்பத்து இடங்களைப்பற்றியேமுக்கியமாகப்பிறக்கும். அப்போது அவ்அவ் இடப்பெயர்கொண்ட வித்திரதிக்கட்டிகளெனப் பெயர்பெறும். அதுகளையும் முறையே இதனடியிற்காண்க.

க-வது வாத வித்திரதிக்கட்டி.

கறுத்தும் சிவந்தும் அதிகநோவுடன் தாமதத்தின்மேல் விருத்தியடைவதும், அப்படியேபழுத்து உடைவதுமாயிருக்கும்; அப்போது இளைப்பு, இருமல், வியர்வை, பிரமை, வயிற்றுப்பொருமல், புரளல், சரீரத்தில் கொஞ்சம்வீக்கம், அழுதல் என்னும் இக்குணங்களுண்டாகும்.

உ-வது பித்த வித்திரதிக்கட்டி.

சிவந்தும் வெளுத்தும்தாம்பரநிறத்தைப்பெற்றும் எரிவந்தத்துடன் எழும்பி, சீக்கிரத்தில் விருத்தியடைவதும், அப்படியே பழுத்து உடைவதுமாக இருக்கும்; அப்போது தாகம், சோருதல், அதிசுரம், உடலெரிச்சல் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

௩-வது சிலேஷ்ம வித்திரதிக்கட்டி.

வெளுத்து அசைவற்று இருப்பதன்றியும், தினவு, வியர்வை, குளிர்ச்சிகளைப்பெற்று, தாமதத்தின்மேல் விருத்தியடைவதும், அப்படியே பழுத்து உடைவதுமாக இருக்கும்; அப்போது அசையக் கூடாமை, கொட்டாவி, அருசி, தேகம்பாரித்தல் என்னுமிக்குணங்கள் உண்டாகும்.

ச-வது திரிதோஷ வித்திரதிக்கட்டி.

முற்கூறியவாதம், பித்தம், சிலேஷ்மம் என்னும் மூன்றுவித்திரதிக் கட்டிகளுக்குள்ள குணங்களையும் மிகுஉபத்திரவத்தையும் பெற்றிருக்கும்.

ரு-வது ரத்த வித்திரதிக்கட்டி.

கறுத்தும் ஒருவேளை வெளுத்தும் சிறுசிறு கொப்புளங்களுடன் பிறக்கும்; அப்போது அதிகதாகமும் நோவும் பித்தவித்திரதிக்கட்டியில் காணுகின்றகுணங்களுமுண்டாகும். இது, புருஷர்கட்குவெளிப்புறத்திலும், மாதர்கட்கு உட்புறத்திலுங் காணும்.

சா-வது க்ஷத்ர வித்திரதிக்கட்டிலக்ஷணம்.

கத்தி முதலியஆயுதங்களால் வெட்டுக்காயம் உள்ளவனுக்கு, அபத்தியத்தாலும்அக்காயத்தால்பிறந்தஉஷ்ணத்தினாலும்அதிகரித்தவாயுவானது நரம்புகளில் அடிபட்டுக்கலங்கிக் கெட்டிருக்கின்ற ரத்தத்துடன்சேர்ந்து, அந்தரத்தத்தைத்தடித்து வீக்கங்களாகச்செய்து, பித்தத்தையுண்டாக்கி,

ஐம்பத்தொன்றாவது பக்கத்தில் சொல்லிய ரத்தபித்த ரோகத்துக்குள்ள குணங்களையும் பிறப்பிக்கும் : அப்போது பலஉபத்திரவங்களுமுண்டாகும். இது மாதர்கட்கு ஸ்தானபேதமாகக் கண்டால், உபத்திரவங்களும் கொஞ்சம்பேதப்படும். க்ஷதம் என்பது வெட்டுக்காயம்.

நாபிஸ்தான வித்திரதிக்கட்டி.

குனியநிமிரக்கூடாத உபத்திரவத்தையும் விக்கலையுமுண்டாக்கும்.

வஸ்திஸ்தான வித்திரதிக்கட்டி.

மூத்திரக்கிரிச்சர ரோகத்துக்குள்ள துர்க்குணங்களை யெல்லாம் உண்டாக்கும். வஸ்தி என்பது மூத்திரஸ்தானம்.

யகிருதிஸ்தான வித்திரதிக்கட்டி.

இரைப்பையும்மார்பையசையவொட்டாதபிடிப்பையுமுண்டாக்கும்.

பிலீகஸ்தான வித்திரதிக்கட்டி.

பெருமூச்சு, தாகம், தேககனதி என்னுமிக்குணங்களை உண்டாக்கும்.

குலோமஸ்தான வித்திரதிக்கட்டி.

தொண்டையைப் பேசவொட்டாமல் நெருக்கிப் பிடித்ததுபோல் இருத்தலை உண்டாக்கும். குலோமம் என்பது பக்கவிலாவின் சவ்வு.

இருதயஸ்தான வித்திரதிக்கட்டி.

அதிசோர்வு, தாகம், இரைப்பு, மார்பு பிளந்து போவதுபோல் இருத்தல், நோவு என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

குக்ஷிஸ்தான வித்திரதிக்கட்டி.

வயிற்றிலும் விலாப்பக்கத்திலும்தோளிலும்நோவு, வயிற்றிரைச்சல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும். குக்ஷி என்பது வயிறு.

வங்க்ஷணஸ்தான வித்திரதிக்கட்டி.

தொடைகளை மெத்தவும் பிகுவாக்கி அசைக்கக் கூடாமையாகச் செய்யும். வங்க்ஷணம் என்பது தொடைக்கவுட்டி.

* முஷ்கஸ்தான வித்திரதிக்கட்டி.

இடுப்பு, முதுகு, விலாப்பக்கம் ஆகிய இவ்விடங்களில் அதிக உபத்திரவத்தை உண்டாக்கும். முஷ்கம் என்பது பீசம்.

அபானஸ்தான வித்திரதிக்கட்டி.

ஆசனத்தில்பலவிதஉபத்திரவங்களையுண்டாக்கிஅபானவாயுவையுங் கெடுக்கும். அபானம் என்பது மலத்துவாரம்.

வித்திரதிக்கட்டியின் பக்குவநிதானம்.

நாபிக்குமேல் உட்புறத்தில் பிறக்கின்றவித்திரிதிக்கட்டிகள்பழுத்து உடைந்தால், அந்தச் சீழ், ரத்தம், சினைத்தண்ணீர் முதலியவைகள்

* வ்ருக்கா ஸ்தானவித்திரதி என்றும் பெயர். வ்ருக்க என்பது பீசம்.

வாயால்விழும் ; நாபியிலும்நாபிக்குக்கீழிடத்திலும்உட்புறத்தில்பிறக்கின்ற வித்திரதிக்கட்டிகள்பழுத்துடைந்தால்,அந்தச்சீழ் ரத்தம் முதலியவைகள் ஆசனத்தால்விழும்; திரிதோஷவித்திரதிக்கட்டி சுபாவமாக உடைந்தால், மகா ரணத்தைப்போல் விருத்திஅடைந்து அசாத்தியமாம்.

சாத்திய வித்திரதிக்கட்டி நிதானம்.

மார்பு, நாபி, கீழ்வயிறு என்னும் இடங்களில், உட்புறத்தில் பிறந்த போதிலும்வெளியில்முகங்கண்டு சீழ் ரத்தம் முதலியவைகளைவெளிப்புறமாக விழப்பண்ணுகின்ற கட்டிகள், மேல்சிகிச்சையால் சாத்தியம்.

அசாத்திய வித்திரதிக்கட்டி நிதானம்.

உட்புறத்திலேயே பிறந்து, அப்படியே முகங்கண்டு உடைந்து, அநேகவுபத்திரவத்தைக்கொடுத்து, வாயால் சீழ் ரத்தம் முதலியவைகளை விழப்பண்ணுகின்ற கட்டிகள் அசாத்தியம்.

ஆயினும் இதுகளைப் புங்கம்பால் தயிலம், சாறடைலேகியம், குக்கிலாதிச்சூரணம், சாதிலிங்கபஸ்மம் முதலிய அவுஷதங்களினாலும், * க்ஷத்திர க்ஷாராக்கினி சிகிச்சைகளினாலும் பரிகரிக்கவேண்டும்.

ஸ்தன வித்திரதிக்கட்டி.

கருப்ப ஸ்திரீகளுக்கும் பிரசவித்த ஸ்திரீகளுக்கும் மற்ற ஸ்திரீகளுக்கும்,ஸ்தனத்தில் பால்இருக்கினும் இல்லாவிடினும்,அந்தஸ்தனத்தின் சூக்ஷ்ம நரம்புகளைப்பற்றி முன்பு பூர்வரூபத்திற் கூறியவிதமாகவே தடித்துக் கெட்டிப்பட்டுக் கனத்து உண்டாகும். இது, நரம்பைப்பற்றியுண்டாகி வெளியில் ரணத்தைச்செய்வதால், வெளிவித்திரதியென்றும் சொல்லப்படும். இது, ஸ்தனநரம்புகளின்துவாரம் அற்பமாக இருக்கின்ற ருதுவாகாக் கன்னியர்க்கு, காணுதென்றறிக. இதனை மார்புச்சிலந்தி, முலைக்கிரந்தி எனவும் சொல்வர். இதற்கு எள்ளு, மருதான்றி, மஞ்சள் இவைகளின் இலைமருந்து, குமரிச்சீலை, காணும்வாழைக்கறகம், வவ்வால் சிறகுப்புகை, சிலைத்தயிலம் முதலிய சிகிச்சைகளை உடனேயேசெய்ய வேண்டும். இச்சிகிச்சை கருப்பவித்திரதிக்கட்டிகளுக்கும் ஆகும்.

குடல்விருத்தி ரோகலக்ஷணம்.

தனது சுபாவமார்க்கம் அடைபடும்படியாக அதிகரித்தெழுந்த ஒருவாயுவானது, அதோமுகமார்க்கமாக அண்டங்களுக்குள் சஞ்சரித்து அவ்விடங்களில் வீக்கத்தையும் சூலையையும்பிறப்பித்து, பின்பு நாபியின் நரம்புகளின்வழியாகச்சென்று ஆண்குறியில்அநுசரித்து, அதில்இருக்கும் நரம்புகளுக்கும் அண்டத்தில்இருக்கும்நரம்புகளுக்கும் உபத்திரவத்தைச் செய்து, குடல்விருத்தி ரோகத்தை உண்டாக்கும்.

---

* உள்வித்திரதிக்கட்டிக்கு க்ஷத்திரக்ஷாராக்கினிச்சிகிச்சைகள் மரணத்தைத்தரும்.

குடல்விருத்திரோகபேதம்.

குடல்விருத்தி ரோகமானது வாதக்குடல் விருத்தி, பித்தக்குடல் விருத்தி, சிலேஷ்மக்குடல்விருத்தி, மேதோகுடல்விருத்தி, மூத்திரக்குடல் விருத்தி, குடல் அண்டவிருத்தி, ரத்தக்குடல்விருத்தி என ஏழுவிதப்படும்.

க-வது வாதக்குடல்விருத்திரோகலக்ஷணம்.

வாயுவானது குடலில்நிறைந்துகொண்டு அதைப்பருக்கப்பண்ணுவதால், அந்தக்குடலானது வயிற்றைப்பருக்கப்பண்ணி உபத்திரவத்தையுண்டாக்கும்; அப்போது, அந்தக்குடலிருக்கும் ஸ்தானத்தைப்பிடித்துப் பார்க்கில், அதுகடினத்துடன்தடித்துச் சுடுகையைப்பெற்று நிரேதுவாகப் பச்சைப்புண்போல் நோவைத்தருவதாக இருக்கும்.

உ-வது பித்தக்குடல்விருத்திரோகலக்ஷணம்.

பித்தமானதுகுடலில்பூரித்துக்கொண்டு அதைப்பருக்கப்பண்ணும்; அப்போது, அந்தக்குடலிருக்கும் ஸ்தானத்தைப் பிடித்துப்பார்க்கில், அது அளிந்த அத்திப்பழத்தையொத்திருப்பதும் அன்றி எரிச்சலுடன்கூட கதகதப்பையுந் தருவதாக இருக்கும்.

ங-வது சிலேஷ்மக்குடல்விருத்திரோகலக்ஷணம்.

சிலேஷ்மமானது குடலில் நிறைந்துகொண்டு அதைப்பருக்கப் பண்ணும்; அப்போது, அந்தக்குடல் இருக்கும் ஸ்தானத்தைப் பிடித்துப் பார்க்கில், கனத்தும் கெட்டிப்பட்டும் குளிர்ந்தும் மினுமினுத்தும் இருப்பதன்றியும் நமைச்சலையும் கிருகுலையையும் தருவதாக இருக்கும்.

ச-வது ரத்தக்குடல்விருத்திரோகலக்ஷணம்.

ரத்தமானது குடலில்நிறைந்துகொண்டு அதைப்பருக்கப்பண்ணும்; அப்போது, அந்தக் குடல்இருக்கும் ஸ்தானத்தை நிதானித்துப்பார்க்கில், சிறு சிறு கொப்புளங்கள் இருப்பதாக யூகிகளுக்குத் தோற்றுவதும் பித்தக்குடல்விருத்திக்குள்ள குணம் உண்டாவதுமாக இருக்கும்.

ரு-வது மேதோகுடல்விருத்திரோகலக்ஷணம்.

மேதோதாதுவினால் குடலானதுபருக்கும்; அப்போது, அந்தக்குடல் இருக்கும் ஸ்தானத்தைப் பிடித்துப்பார்க்கில், சிலேஷ்மக்குடல்விருத்திக் குணங்களுடைத்தாய் அளிந்த பனம்பழத்தை யொத்திருக்கும்.

சு-வது மூத்திரக்குடல்விருத்திரோகலக்ஷணம்.

வழக்கமாகக் காலங்களில் பெய்கின்றமூத்திரத்தை அடக்கி அடக்கி அகாலத்தில் பெய்வதினால், அந்த மூத்திரமானது சிலநாளைக்குள் சாரியாகவிழாமல் உள்ளேயேமறிபட்டுப் பையிற்கட்டுண்ட நீரைப்போல் துளித் துளியாய்க் கலங்கிக் கொஞ்சம் சுறுக்குடன் வெளிப்படும்.

முன்பு வயிற்றில் தினந்தினமுந் தேங்கிய மூத்திர ஓதமானது குடலைப் பருக்கப்பண்ணும்; அப்போது, அந்தக்குடல் இருக்கும் ஸ்தானத்தைப் பிடித்துப்பார்க்கில், மிருதுவாயும் நோவுள்ளதாயு மிருக்கும். அன்றியும் மூத்திரத்துவாரத்திற்குங் கீழ், குதஸ்தானத்துக்கும் பீசஸ்தானத்துக்கும் நடுவில், ஒரு நரம்பு வளையம்போல் சுருட்டிக்கொண்டிருக்கும்.

எ-வது குடல் அண்டவிருத்திரோகலக்ஷணம்.

வாதாதிக்க வுணவுகளை அருந்துதல், அதிசீதளதடாகத்தில் தினமும் ஸ்நானஞ்செய்வதுமன்றிக் குதித்தல், பதினாலுவேகத்தை அடக்குதல், யுத்தஞ்செய்தல், மிகுசுமைஎடுத்தல், வெகுநடைநடக்குதல், மேடுபள்ள ஸ்தானத்திற்படுத்துப்புரளல், எழும்பிஎழும்பிக்குதித்தல், யானை முதலிய வாகனங்களின்மேல் ஏறி அதிகவேகமாகச்செல்லல் ஆகிய இச்செய்கைகளினால், குடலானது அசைந்து கலைந்து நலங்கும்; அப்போது அதில் நிற்கின்ற வாயுவும் அப்படியே கலங்கி முன்பு இருந்ததைப் பார்க்கிலும் இரட்டிப்பாகப்பூரித்துப்பலத்துக்கொண்டு, மேற்படிகுடலை அவ்விடத்தை விட்டு அதோமுகமாக நழுகச்செய்து, பின்பு தொடைக்கவுட்டிகளில் இறங்கி, அவ்விடங்களில் வீக்கத்தைப் பிறப்பிப்பதும் அன்றிப் பீசக் குழிக்குள் பந்துவந்து மோதுவதுபோல் மோதி, விருவிருப்பான நோவை உண்டாக்கும். அதற்குச் சிற்றண்டமெழுக்கு, பேரண்டச்சுன்னம், அப்பிரக பஸ்மம் முதலிய அவுஷதங்களால் உடனேயே சிகிச்சைசெய்யவேண்டும். செய்யாவிடில், அது அண்டத்தில் இறங்கி நிலைபெற்று உபத்திரவத்தைச் செய்துகொண்டேஇருக்கும். இதனால் அண்டம்நோவுடன்கூடிப் பருத்து மரத்திருப்பதுமன்றி, சிலவேளை துருத்திவாய்க்காற்றைப்போல் சத்தித்து ஏறுவதுமிறங்குவதுமாக இருக்கும். இவ்வாயுவு, முன்னிருந்தஸ்தானத்திற் போய்ச்சேர்ந்து, முன்பு நழுகச்செய்தகுடலை நிலையில் நிறுத்தாமையால், இது அசாத்தியம். ஆனால் கச்சுப்பட்டை முதலியவைகளை இடுப்பில் இழுத்துக்கட்டில், கொஞ்சம்சவுக்கியம்; அதுகட்டாதகாலத்தில் இவ்வாயுவு அண்டங்களை உள்ளில் இழுத்துக்கொள்ளில், அபாயம்.

குடல்விருத்திரோக சாத்தியாசாத்தியநிதானம்.

வாதக் குடல்விருத்தி ரோகலக்ஷணம் உண்டாய்ச் சுறசுறப்பாய்க் கருமை, செம்மை, வெண்மை என்னும் இவ்வன்னங்களுடன், வலைக் கண்களைப்போல் கண்களும் உண்டாயிருக்கிற குடல்விருத்திரோகங்கள் அசாத்தியம். இப்படிக்கு இல்லாத குடல்விருத்திகள் சாத்தியம்.

மதாந்தரம்.

அண்டரோகபேதம்.

தேரையர்காப்பியம் அண்டரோகத்தை, குடல் அண்டம், குமுறல் அண்டம், நீர் அண்டம், தசை அண்டம் என நான்கு விதமாகக்

சொல்லுகின்றது. இவற்றுள் நீர் அண்டத்தில் ரத்தஅண்டம் ஒருபிரிவும், தசை அண்டத்தில் வாதாதிகளால் மூன்றுபிரிவும் உண்டாயிருக்கின்றன. இதனை விரைவாதம், பீசவாதம், அண்டவாதம், வளி எனவுஞ்சொல்வர்.

க-வது குடல் அண்டரோகம்.

முன்புசொன்ன குடல்அண்டரோகத்திற்குள்ள குணங்களை எல்லாம் பெற்றிருந்தாலும், வீக்கமில்லாமல்பருத்து ஒவ்வொருவேளை மிகுந்த உபத்திரவத்தைத் தருவதா இருக்கும்.

உ-வது குமுறல் அண்டரோகம்.

கைத் துருத்தியைப்போல் பருப்பதும் அன்றி, மேலேறினும், கீழிறங்கினும், சும்மாவிருக்கினும்,சமுத்திரகோஷம்போலும்,தவளையைப் போலும் இடைவிடாதுஇரைவதும்,சிலவேளை இல்லாமையுமாகஇருக்கும். இதனால், நடக்கும்போது அவ்விடத்தில் விருத்தலும், கொஞ்சம் உஷ்ணத்தினால் வாயுவு அதிகரிக்குங்காலத்தில்வேதனையும் உண்டாகும்.இது, குமுறலைத்தருவதால், குமுறல் அண்டம் எனப்பேர்பெற்றது. இதனை ஏறண்டம் இறங்கண்டம் எனவும் சொல்வர்.

௩-வது நீர் அண்டரோகம்.

நரம்பின்வழியாகச்சுரக்கின்ற துர்நீரினால் பருத்துக் கெட்டிப்பட்டு, சிலவேளை சுரத்தையுண்டாக்குவதும் வேதனையைச்செய்வதுமாயிருக்கும். இது, ஆயுதங்களினாலும் காரங்களினாலும் சாத்தியமானாலும், முன்போல் நரம்பின்வழியில் சலத்தை இறங்கவொட்டாத சிகிச்சையைச் செய்ய வேண்டும். இவைநிற்க,ரத்தஅண்டம்என்பது இவ்வண்டத்தைப்போலவே இருக்கும்; ஆனால் பருத்தும் கறுத்தும் தடித்தும் இருக்கும். இதனால் சிலவேளை மயக்கமும்,வாந்தியும்,பேதியும்,நோவும் உண்டாகும். இதுக்கு, ஆயுதசிகிச்சைகள் சாத்தியாசாத்தியத்தைத்தரும்.

ச-வது தசைஅண்டரோகம்.

ஒரு அண்டத்திலாவது இரண்டிலுமாவது, வாயுவினால், முதல் முதல் பலாக்கொட்டையில் வரம்புகட்டுவதுபோல் வரம்பு உண்டாகும்; அவ்வரம்பில்தசையானது கொஞ்சங்கொஞ்சமாகப் பஞ்சுசேருவதுபோல் சேர்ந்து மிகுந்தஉபத்திரவத்தைச்செய்யாமல் தடித்துக்கனக்கும்.இதுக்கு உடனேயே நானாவிதச் சிகிச்சைகள் செய்யாவிடில், அவ் அண்டம் நாளுக்குநாள் துர்மாமிசத்தால் நிறையப்பட்டு கொடியெலுமிச்சங்காய், கடாரநார்த்தங்காய், இளநீர், பருங்கருணைக்கிழங்கு, ஆள்வள்ளிக்கிழங்கு, பரும் பூசினிக்காய், நீண்டுபருத்த சுரைக்காய் முதலிய பிரமாணங்களை யொத்துப்பருத்துப் பூமியில்புரளும்படியாய்த்தொங்கும். இது கறுத்துக்

கடினமாக இருந்தால், வாதத்தசை அண்டம்; மஞ்சள் நிறத்துடன் மிருதுவாக இருந்தால், பித்தத்தசை அண்டம்; வெளுத்துக் கல்லுப்போலிருந்தால், சிலேஷ்மத்தசை அண்டம் எனச்சொல்லப்படும். இதனால், சுரமுதலிய பலபல துர்க்குணங்களும் உண்டாகும். இந்தரோகிக்கு மூத்திரம் இறங்கலால், ஆண்குறியும் இருக்குமென்று நினைக்கவேண்டும். அன்றியும் இந்தரோகம் மாதர்களுக்குங் காணுவதுண்டு. அதன்விவரம்:— முன்பு குடல் அண்டவிருத்திரோகத்தைப் பிறப்பித்த வண்ணமாகவே வாயுவானது குடலில் நின்றும் கீழிறங்கி அல்குலுக்குள் பூரித்துக் கொள்ளும். இதனால், அவ் அல்குலின் இரண்டுபக்கத்துச்சதையு மிதமும் புணர்ச்சிகாலத்தில் விந்துபோய்ப் பாய்வதற்கும், காமசலம் சோணிதம் கருப்பம்முதலியவைகள் வெளிப்பட்டு வருவதற்கும், கருப்பாசயஸ்தானத்திருந்து நிதம்பத்துள் அடங்கி நீண்டுவந்திருக்கிற வங்குவாசல் என்னும் பூவும்தளர்ந்து ஆண்குறியைப்போல் நீண்டுவெளியில்தொங்குவதுமன்றி, அத்துவாரத்தில் தசை விழுதுவிட்டதுபோலும் தேங்காய்க்குள்ளிருக்கும் முளையைப்போலும்தாமரைமொக்கைப்போலும் குமிளங்காயைப்போலும் துர்மாமிசமானது பருத்து, அண்டங்களைப்போலவே தொங்குமென்றறிக. இக்கொடிய ரோகங்கள் ஆரம்பத்திலேயே கஷ்டசாத்தியமாக முடியும். இதுதப்பிதேகத்திலும்ஊறிமுதிர்ச்சியும்அடையுமாகில் சாத்தியப்படுவது அரிது. ஆயினும், திடச்சித்தம்தேகவன்மையும்உள்ளவர்கட்குகாணுமாகில், இதுகள் க்ஷூத்திர க்ஷாராக்கினி என்னும் ரணச் சிகிச்சை களினாலும் கார சார அவுஷதங் களினாலும் சாத்தியம் ஆவதும் உண்டு.

மதாந்தர முற்றியது.

குன்மரோக பூர்வரூபம்.

குன்மரோகமானது அதிக ஏப்பம், மலபந்தம், வயிறு நிறைந்தது போலிருத்தல், துர்ப்பலம், குடலிரைச்சல், வயிற்றில் அற்பக்கூச்சலோடு உப்பிசம், நோதல், அசீரணம், அசதி என்னு மிக்குணங்களைத் தனக்குப் பழையரூபமாகப் பெற்றிருக்கின்றது. குன்மம் என்பது புரளச்செய்தல்.

குன்மரோகபேதம்.

குன்மரோகமானது வாதகுன்மம், பித்தகுன்மம், சிலேஷ்மகுன்மம், வாதபித்த குன்மம், வாதசிலேஷ்ம குன்மம், பித்த சிலேஷ்ம குன்மம், திரிதோஷ குன்மம், ரத்த குன்மம் என எட்டுவிதப்படும். இவற்றுள் ரத்தகுன்மரோகமாத்திரம், மாதர்கட்கே உண்டாகுமென்றறிக. அன்றியும் சாமானிய குன்மங்களென மூன்றுவித குன்மரோகங்களுண்டு.

௧-வது வாத குன்மரோகம்.

கழுத்துநரம்புகளிலும் சிரசுநரம்புகளிலும் நோதல், சுரம், பிலி
ஸ்தானத்திலுங்குடலிலும் இரைச்சல், வயிற்றில்ஊசியாற் குத்துதல்போ
குத்தல், மலபந்தம்,தினறலானமூச்சு,தேகமரத்தலுடன் இளைத்தல்,முக
சுருக்கம், விஷமாக்கினி, வாதசஞ்சாரத்தால் சருமமும் சத்ததாதுக்களு
உலர்ந்து கறுத்தல், இவ்வித உபத்திரவமென்று சொல்லக்கூடா
தயக்கம், வயிற்றில்அதிகநோவு, சிலவேளை யில்லாமை, பலவிதசங்கட்ட
அக்குன்மஸ்தானத்தில் எறும்பு ஊருதல்போல் தோற்றல் என்னு
இக்குணங்களையுண்டாக்கி உபத்திரவத்தையேசெய்யும். அன்றியும் நடை
குறைதல், சரீரங்கடுத்தல், கனத்தல், தூக்கம், உழலை, அற்பவுண்டி
நாக்குவறளல் என்னும் இக்குணங்களை யுண்டாக்குமென்பாருமுளர்.

இக்குன்மக்கட்டி வன்மையாகையால் இதனை நாயுருவி உப்பாதி
குழம்பு, வமனமருந்து, பிரண்டையுப்பு, பூநீற்றுச்செயநீர், பஞ்சலவண
சுன்னம், சுயமக்கினிக்குமாரம், செயரசபஸ்மம், தாம்பரச்சிந்தூர முதலி
அவுஷதங்களினாலும் கருமநிவிர்த்திகளினாலும் வசப்படுத்தவேணும்.

௨-வது பித்த குன்மரோகம்.

தாகம், புளியேப்பம், மூர்ச்சை, பலநிறமானபேதி, வியர்வை, சரீ
எரிச்சல்,சுரம்,சருமமெல்லாம் மஞ்சள்நிறம், வயிற்றைக் கையாற்பிடிக்கி
பச்சைப்புண்போல் நோதல், அந்தக்குன்மஸ்தானத்தில் காங்கையுட
கொளுத்துவதுபோல் எரிச்சல் என்னும் இக்குணங்களையுண்டாக்கு
அன்றியும் முகத்தில் மஞ்சள்நிறம், வாந்தி,மனக்கெடுதி, மயக்கம்,நெஞ்சி
கோழை, சரீரகாங்கை,கை கால் ஓய்ச்சல்,வெய்யிலைக்காணில் தலைசுழல
சிவந்த மூத்திரம், மந்தம், முக்கலுடன் மலஞ்சாரல், சுவாசம் என்னு
இக்குணங்களை யுண்டாக்குமென்பாருமுளர்

இதற்கு நாரத்தம்பழ லேகியம்,மகாவில்வாதி லேகியம்,புளியாரை
கிருதம்,தேவதாரக்கட்டைச் சாம்பல்,நன்னாரிவேர்ச் சத்து,கந்தகபஸ்ம
குன்மகுடாரம் முதலிய அவுஷதங்களும் ஆகும்.

௩-வது சிலேஷ்ம குன்மரோகம்.

வயிறு அசைக்கக்கூடாமையுடன் நிறைந்ததுபோ லிருத்த
அரோசகம், சிலவேளைசுரம், சிலவேளைகுளிர், நாசியிற்சலம்வடித
சோம்பல், மார்புதுடித்தல்,இருமல்,தேகவெளுப்பு என்னுமிக்குணங்க
உண்டாக்கும். இது பிடித்துப்பார்க்கில் மற்ற குன்மக்கட்டிகளைப்போ
கைக்குத்தட்டுப்படாமல்உள்ளுக்குள்ளேகட்டியாகக்கனத்து அசைவற்று
கொஞ்சம் உபத்திரவத்தைத் தருவதாயிருக்கும். அன்றியும் வாயில்சல

ஊறல், இளைப்பு, தேகம்வற்றுதல், காந்தியீனம், துர்ப்பலம், அன்னத்திவேஷம், தலைசுழலல், நெஞ்சிற் புகைகம்மியதுபோல் தோற்றல், பயம், நடுக்கல்,சிரோபாரம் என்னும் இக்குணங்களையுண்டாக்குமென்பாருமுளர்.

இது இளநீர்க்குழம்பு, சாறணைலேகியம், முள்ளங்கியுப்பு, பனம்பூச் சுட்டசாம்பல், தாம்பரபஸ்மம் முதலிய சிகிச்சைகளால் விலகும்.

ச-வது வாதபித்த குன்மரோகம்.

வாதகுன்மரோகம், பித்தகுன்மரோகம் என்னுமிவ்விரண்டினாலும் உண்டாகின்ற துர்க்குணங்களையெல்லாம் உண்டாக்கும்.

இதற்கு முன்புசொல்லிய அவ்விரண்டுவகைக் குன்மரோகச் சிகிச்சைகளையும் கலந்து உபயோகிக்கலாம். இவ்வண்ணமாகவே மற்றைய இருவகைத் தொந்தகுன்மரோகங்கட்கும், திரிதோஷகுன்மரோகத்திற்கும் சிகிச்சை அறியவேண்டியது.

ரு-வது வாதசிலேஷ்ம குன்மரோகம்.

வாதகுன்மரோகம்,சிலேஷ்மகுன்மரோகமாகியஇவ்விரண்டினாலும் உண்டாகின்ற உபத்திரவங்களையெல்லாம் உண்டாக்கும்.

சு-வது பித்தசிலேஷ்ம குன்மரோகம்.

பித்தகுன்மரோகம்,சிலேஷ்மகுன்மரோகம் என்னுமிரண்டினாலும் உண்டாகின்ற வருத்தங்களையெல்லாம் உண்டாக்கும்.

எ-வது திரிதோஷ குன்மரோகம்.

வாதகுன்மரோகம், பித்தகுன்மரோகம், சிலேஷ்ம குன்மரோகம் என்னுமிம்மூன்றினாலும் உண்டாகின்ற உபாதிகளையெல்லாம் பிறப்பித்து அதிகநோவையும் மிகுதாகத்தையும் உண்டாக்கும். இக்கட்டி கனத்தும் உயர்ந்தும் ஆமை ஓட்டைப்போல் கெட்டிப்பட்டும் இருக்கும். அன்றியும் வயிறுப்பல்,பேதி,வாய்துவர்த்தல்,மூச்சுச்சிதைதல் என்னுமிக்குணங்களை யுண்டாக்கு மென்பாருமுளர். இது அசாத்தியம்.

அ-வது ரத்த குன்மரோகம்.

இது ரத்தவாதகுன்மரோகம், ரத்தவாதபித்தகுன்மரோகம் என இருவகைப்படும். இவற்றுள்,ரத்தவாதகுன்மரோகமென்பது மாதர்களுக்கு ருதுகாலத்திலும், முதற்பிரசவகாலத்திலும், அல்குல்ஸ்தானத்தில் மேக முதலியரோகங்கள் காணுங்காலத்திலும் பிறக்கும். அதன்விவரம்:— மாப்பண்டம்,மாங்காய்முதலிய வாதவஸ்துக்களைமேற்குறித்தகாலங்களில் மிகவும்புசித்தலினாலும்,உபவாசத்தினாலும்,தகாதகாரியங்களினாலும் வாயுவானது அதிகரித்து,மாசாந்திரரத்தத்தைஒருதுளியேனும்யோனிவழியில்

வரவொட்டாமல் உள்ளேயேமறித்து, வயிற்றைப் பருக்கப்பண்ணி, கருப்பமாதருக்குள்ள குறிகளை உண்டாக்கும்; அப்போது மார்பு அதிரல், மசக்கை, தனத்தில்கொஞ்சம்பால், ஆயாசம் முதலியகுணங்களுண்டாகும். முன்பு மறிபட்டுத் தோய்ந்து மாமிசமொத்தையைப்போல் கெட்டியாகத் திரண்டு கட்டின கெட்ட ரத்தக்கட்டி ஆகையால், இது வயிற்றில் கருப்பத்தைப்போலவே இருக்கும். இருந்தாலும், கரசரணாதி அவயவங்களை யுள்ள சிசுவைப்போலிராது. ஆயினும், அச்சிசுவைப்போலவே வயிற்றில் சூலைமுதலிய உபத்திரவங்களையுண்டாக்கி, பக்கங்களில்பாய்வதும், மிகுந்து அசைவதும், சிலவேளைகொஞ்ச மசைவதும், நாளுக்குநாள் சிசுவைப்போல் விருத்தியடையாததும், கருப்பத்தைப்போல் வயிற்றைப்பருக்கச் செய்யா ததும், குன்மத்தையே விருத்தியடையச்செய்வதும், முன்புசொன்ன ஏழுவகைக் குன்மரோகங்களுக்கு உள்ள உபாதிகளை ஓரேகாலத்தில் தருவதும், நெடுநாட்சென்று அவுஷதங்களால்விழுவதும், ஒருவேளை விழாததுமாக இருக்கும். இதற்கு, ஆயில்பட்டைக்குடிநீர், நவாக்ஷாரக் குழம்பு, கலிங்காதிலேகியம் முதலிய சிகிச்சைகள் பொருந்தும்.

ரத்த வாதபித்த குன்மரோகம்.

மாதர்களுக்கு முன்பு சொன்ன ரத்தகுன்மரோகத்தில் நின்றும் பிறந்த வாயுவின்கூட்டுறவினால் அதிகரித்த பித்தமானது ரத்தவாதபித்த குன்மரோகத்தையுண்டாக்கும். அதன்விவரம்:--இந்தரோகத்தில்பித்தமும் சேர்ந்தமையால், முன்புவாதத்தால் தங்கிய மாதாந்தருதுகாலரத்தமானது வெளிப்படும்; அப்போது அதிக உக்கிரமானநோவு, சரீரம் மரத்தல், எரிச்சல், பேதி, தாகம், சுரம், அக்கெட்ட ரத்தமிருக்கும் ஸ்தானத்தில் மிகவுஞ் சித்திரவதையான குத்தல், அல்குலில் மேகக்கசிவு, அதில் துர்க்கந்தம், அதிக நோவு, அதிர்தல், எப்போதும்வேதனை, என்னும் இக்குணங்களுண்டாகும். இதனைச் சூதகவாயுவு, மாதாந்தர குன்மம், தூரச்சூலை எனவுஞ்சொல்லுவார்கள். இவைநிற்க, முன்பு வித்திரதிக் கட்டிகளைச் சொன்ன விடத்தில் மாதர்களுக்கு உட்புறத்திலேயே பிறக்கு மென்ற ரத்த வித்திரதிக் கட்டியும் இதுவும் சீக்கிரத்தில் உடைந்தும் கரைந்தும் விழுகின்ற தன்மை ஒன்றா யிருப்பதால், இதையும் வித்திரிதிக் கட்டியென்றே சில மதாந்தரத்தில் சொல்லி யிருக்கின்றது. அப்படியானால் வித்திரதிக்கட்டியானது உடையாமல் உள்ளேயேஅடங்கியிருக்கமாட்டாது: இந்தக்குன்மக்கட்டியோவென்றால், வாதாதிக்கத்தால் ஒருவேளை கரைந்து வெளிப்படாமல் உள்ளேயே அடங்கியிருப்பதும்உண்டு; அப்படி அடங்குங்காலத்தில், வயிறு, கீழ்வயிறு, மார்பு, பிலீகஸ்தானம் ஆகிய இவ்விடங்களின் உட்புறத்தில் அதிகநோவு, வெளிப்புறத்தில் அற்பநோவு, முற்கூறியரத்தவாத குன்மத்தையுடைய

வயிற்றைப்பார்க்கிலும் அதிகமாகவயிறுபருத்தல்,சிலநாள்சென்றுசரீரநிற மாறுதல், அக்கினிமந்தம், பலவீனம், அடிக்கடி வாய்நீரூறல் என்னும் இக்குணங்களுண்டாகும். இது அசாத்தியம்.

ஆயினும் சிகிச்சாதீபிகையில்சொல்லிய முள்முருக்கம்பூக் கிருதம், வெள்ளைச்சாறடை ரசாயனம், நிம்பகலிங்காதி யெண்ணெய் முதலிய சிகிச்சைகளை முறைபிசகாதுசெய்தால், சாத்தியமும் ஆகும்.

சாமானிய வாத குன்மரோகம்.

இது நித்தியமும் தனது அதிகாரமாகிய சூரிய உதயமுதல் பத்து நாழிகைவரைக்கும் உபத்திரவத்தையுண்டாக்கிக்கொண்டே யிருக்கும்.

சாமானிய பித்த குன்மரோகம்.

இது தனக்குரிய காலமாகிய பத்து நாழிகைமுதல் இருபது நாழிகைவரைக்கும் உபாதியைச் செய்துக்கொண்டே யிருக்கும்.

சாமானிய சிலேஷ்ம குன்மரோகம்.

இது, தனது தனியரசுகாலமாகிய இருபதுநாழிகைமுதல் முப்பது நாழிகைவரைக்கும், உக்கிரமானநோவை விளைத்துக்கொண்டே யிருக்கும். இவ்வண்ணமாகவேராத்திரிகாலங்களுக்கும் அறியவேண்டியது. இதுநிற்க, மேற்சொல்லிய இரண்டுகுன்மங்களும் இதுவும், நீடித்துத்தேகத்தில் ஊறி நிலைக்குமாயின், முற்கூறிய காலப்பிரமாணங்களைத் தப்பிச் சதாகாலமும் உபத்திரவத்தை உண்டாக்குவதும் உண்டு. ஆகையால் இதுகளுக்கும் அந்த குன்மரோகச் சிகிச்சைகளைச் செய்யவேண்டும்.

அசாத்திய குன்மரோகநிதானம்.

எவ்விதக் குன்மரோகக் கட்டிகளானாலும், நாளுக்குநாள் உப்பிக் கனத்து உயர்ந்து ஆமையோட்டைப்போல் கெட்டிப்பட்டு,நரம்புகளினால் கட்டுண்டிருந்து, இத்துடன் சுரம், வாந்தி, விக்கல், வயிறுப்பிசம், அதிக நோவு, இருமல், இரைப்பு, பீநசம், மார்பு இடித்தல், பேதி, சரீரவீக்கம் என்னும் இக்குணங்களும் உண்டாயிருக்கில், அசாத்தியம்.

மதாந்தரம்.

குன்மரோக பேதம்.

குன்மரோகத்தை எட்டுவிதமாகச் சிலநூலில்சொல்லியிருந்தாலும், அவற்றுள் வாதகுன்மமுதல் சந்நிகுன்மம் ஈறாக நான்கும் முன்பு சொன்னவைகளேயாம். மற்றநான்கும் இதனடியிற் கூறப்படும்.

பாயுரு குன்மரோகம்.

உண்டபதார்த்தங்கள் செரியாமை, அன்னஞ்செல்லாமை, துருத்தி யைப்போல் வயிறுப்பல், அவயவங்கள் கடுக்குதல், சரீரம் உலரல், நடை

குறைதல்,ஓய்ச்சல்,வியர்வை,வயிற்றில் பந்துஉருளல்போல் கட்டியுருளல், அவ்வயிறு வில்லைப்போல் விருத்துக்கொள்ளல் என்னும் இக்குணங்களை யுண்டாக்கும். இது குதத்தையும், அடிவயிற்றையும் பற்றியதால், பாயுரு குன்மம் எனப்பேர்பெற்றது. பாயுரு என்பது குதம்.

எரிகுன்மரோகம்.

அடிவயிற்றில் எரிச்சல், குடல் குமட்டல்,வாய்நீரூறல்,தலைசுழலல், நோவு, வயிறுப்பல், இரைச்சல், புளியேப்பம், ரோமத் துவாரங்களில் வியர்வைபெருகல்,பேதி,சரீரம்இளைத்தல்,எரிச்சல்,அன்னஞ்செல்லாமை, இருமல் என்னும் இக்குணங்களை யுண்டாக்கும்.

சர்த்திகுன்மரோகம்.

வாந்தி, அரோசகம், ஈரலுக்குள் எரிதல், ஏக்கம், தயக்கம்,மயக்கம், வயிறுப்பல்,அற்பவலி,பலவீனம், மலபந்தம்,மந்தாக்கினி,நடைகுறைதல், சிறுநரம்புகள் உப்பல்,தேகத்தில்திமிர் என்னும் இக்குணங்களுண்டாகும்.

வலிகுன்மரோகம்.

வயிற்றில் முள்ளைச்சொருகுதல்போலிருத்தல்,உப்பிசம்,குடைச்சல், நோவு, சரீரந்திரைதலுடன் உலர்ந்துகறுத்தல், தூக்கம், அற்பவுண்டி, விலாச்சொருகல், முதுகுத்தண்டில்வலி, இடுப்புநோவு, சரீரமெங்கும் கடுக்குதல், அதிகசுரம்,பொய்ப்பசி என்னும்இக்குணங்களையுண்டாக்கும்.

மதாந்தரமுற்றியது.

இவைகளுக்கும் மேற்சொல்லிய சிகிச்சைகளே ஆம்.

ஐந்தாவது-அஸ்மரிரோகபடலம்முற்றியது.

உ

சுப்பிரமணியர் துணை.

ஜீவரக்ஷாமிர்தம்.

ஆறாவது

ஆநாகரோகபடலம்.

ஆநாகரோகலக்ஷணம்.

குதஸ்தானத்தையுடைய அபானவாயுவும், இருதயஸ்தானத்தையுடைய உதானவாயுவும், தங்களுக்குரிய தொழிலைவிட்டு இரண்டும் ஒன்றாகச்சேர்ந்துக்கொண்டுவயிற்றைவிகுத்தலுடன்இழுத்துக்கொள்ளும் அப்போது, வயிற்றில் இரைச்சல், மலச்சிக்கல், சுரம், சுவாசம் முதலிய உபத்திரவங்களுண்டாகும். இது,வயிற்றை இழுத்துப்பிடிப்பதால் ஆநாகரோகமெனப்பேர்பெற்றது. ஆநாகம் என்பது இழுத்துப்பிடித்தல்.

ஆநாகரோகபேதம்.

முன்சொன்ன ஆநாகரோகம்ஒன்றாயிருந்தாலும்அதன்விகற்பத்தால் அஷ்டிலாரோகமும், அதிலிருந்து பிரத்தியஷ்டிலாரோகமும், அதினின்று துனிரோகமும், அதில் பிரதிதுனிரோகமும் பிறக்கும். அன்றியும் சலகூர்மரோகம் என்பது ஒன்றுண்டு.

அஷ்டிலாரோகலக்ஷணம்.

முற்கூறிய ஆநாகரோகத்தை, மலக்குடாரமெழுக்கு, வெண்காரமாத்திரை,சோம்புத்தீநீர், நீர்ப்பேதி முதலிய அவுஷதப்பிரயோகங்களைக் கொண்டு நிவர்த்திசெய்யவேண்டும். செய்யாவிடில் அவ்வாயுக்களினால் வயிற்றுக்குள் திரட்சியுள்ளதாகவும், கெட்டிப்பட்டதாகவும், ஒருவீக்கம் உண்டாகும். அது பந்துபோல் எழும்புவதும் கட்டியாகத்தோற்றப்படுவதுமாயிருக்கும். அப்பேர்து, பூர்வரோககுணங்களும் அதிகரிக்கும்.

இது, பப்பிலிப்பிஞ்சு,ஆற்றுக்கலிங்கம்இவைகளின்ஊறுகாய்,லவணவாழைக்குழிநீர்,கடல்நீரால்சமைத்தபொங்கல்அன்னம்,பூநீற்றுச்செயநீர்ப்படங்கு, கம்பியுப்புப்பஸ்மம் முதலிய அவுஷதங்களால்சாத்தியமாம். இச்சிகிச்சைபிரத்தி அஷ்டிலாரோகத்திற்கும்சலகூர்மரோகத்திற்குமாகும்.

பிரத்தியஷ்டிலாரோகலக்ஷணம்.

மேற்சொன்ன ஆநாகரோக குணத்துடன் ஊர்த்துவ முகமாகவே எழும்புகின்ற கட்டியானது, குறுக்காகவளர்ந்து இருபக்கவிலாக்களிலும் குறுக்கே ஓடி ஓடிப் பாய்ந்துக்கொண்டே யிருக்கும்.

துனிரோகலக்ஷணம்.

இந்தரோகத்தில், வயிறுவிகுத்தல், வீக்கம் முதலிய குணங்கள் உண்டாயிருப்பதுமன்றி,இதில் அடங்கியவாயுவு, பக்குவாசயஸ்தானத்தில் இருந்து ஆசனம் அல்குல் என்னும் இவ்விடங்களின் சமீபவரைக்கும் சீக்கிரத்தில்அதிகவுபத்திரவத்தைஉண்டாக்கியுண்டாக்கிஅதோமுகமாகக் கீழிறங்கிக்கொண்டேயிருக்கும். துனி என்பது உபத்திரவம்.

பிரதிதுனிரோகலக்ஷணம்.

மேற்சொன்ன துனிரோகத்திற்கு வேறுபாடாக வாயுவானது குதஸ்தானத்தில் குடியாக நிலைத்திருந்துகொண்டு பக்குவாசயஸ்தான பரியந்தம் அலையடிப்பதுபோல் சீக்கிரத்தில் உபத்திரவத்தை உண்டாக்கி யுண்டாக்கி ஊர்த்துவமுகமாக மேலேறிக்கொண்டே இருக்கும். இதுவும் மேற்சொல்லிய துனிரோகமும் கனத்தமருந்துகளினால் வசப்படும்.

சலக்கூர்மரோகலக்ஷணம்.

சிலேஷ்மாதிக்கமான சீதளவஸ்துக்களினாலும், நீங்காத நிழலையுடைத்தாய் விளக்கெண்ணெய்போல் தடித்திருக்கின்ற சுனைத்தண்ணீரினாலும்,சிலேஷ்மமானதுவயிற்றில்சேர்ந்துகொண்டேவரும்.அதுவாயுவின் உபபலத்தைக்கொண்டு மீளவும் நன்றாக விருத்தியடைந்து தடித்துக் கெட்டிப்பட்டு நீண்டு ஆமையின் உருவத்தையொத்த கட்டியாகி நோவுயில்லாமலும், சிகிச்சைக்கு இடங்கொடாமலும், வலப்பக்கத்திலேனும் இடப்பக்கத்திலேனும், ஒருவேளை அசைந்து மசையாமலுமாக இருக்கும். இதனால், தொடைகளுக்குத் துர்ப்பலமும்,சரீரத்திற்கு வெளுப்பும் உண்டாகும். இது, நீரோடுங்கூடியிருப்பதால் நீராமையென்றும், ஊருவதால் ஊர் ஆமையென்றும்பேர்பெறும். இதனைக் கெண்டைக் கட்டியென்றும் வல்லைக்கட்டியென்றும் சிலமதாந்தரத்தில் சொல்லப்படுகின்றது.

சூலைரோகபேதம்.

சூலைரோகமென்பது வாதசூலைரோகம்,பித்தசூலைரோகம், சிலேஷ்மசூலைரோகம்,திரிதோஷசூலைரோகம், ஆமசூலைரோகம், சர்க்கராசூலைரோகம்,குன்மசூலைரோகம்எனஏழுவிதப்படும்.இது,சூலத்தால்குத்துவதுபோல் குத்தலான நோவைத்தருவதால், சூலைரோகம் எனப்பேர்பெற்றது.

க-வது வாதசூலைரோகலக்ஷணம்.

அதிசலபானம், தினமும் காற்றில் அலைந்து திரிதல், வருத்தமான கனவுழைப்பு,மிகுந்தசையோகம் ஆகிய இவைகளினால்வாயு அதிகரித்துச் சூலைரோகத்தைப் பிறப்பிக்கும். இதனால், இடுப்பு, தொடை, முதுகு, ஆசனம், ஆண்குறி, அல்குல், கீழ்வயிறு என்னும் இவ்விடங்களில் குத்தலுடன்வேதனையுண்டாகும்.அன்றியும் கை கால் உளைத்தல்,தடித்தல், திமிர், தாகம், அதிரல், கண் முழங்கால் விலா இவைகளில் கனத்தல், சிறுநீர் கடுத்துச் சிவந்து வீழல், சரீரம்முழுதும் வெப்பம், பளபளப்பு, குடைச்சல், நோவுஎன்னும் இக்குணங்க ளுண்டாகுமென்பாரு முளர்.

உ-வது பித்தசூலைரோகலக்ஷணம்.

காரம்,புளிப்பு,தீக்ஷணவஸ்துமுதலியவைகளினால்பித்தமதிகரித்துச் சூலைரோகத்தைப் பிறப்பிக்கும். இதனால், தேககாங்கை, சுரம், வியர்வை, குத்தல், மூர்ச்சை என்னும் இக்குணங்களுண்டாகும். அன்றியும், சரீர வாட்டத்துடன்வேதனை,கைகால்உளைப்பு,நோவு,தடித்தல்,பார்வைமந்தம், தாதுமெலிந்து நடக்குதல், சுபாவநிறமாறல், மயக்கம்,துர்ப்பலம் என்னும் இக்குணங்க ளுண்டாகு மென்பாருமுளர். இந்தரோகம், பித்தசாந்திச் சிகிச்சை சீதோஷ்ண அவுஷதம் இவைகளால் வசப்படும்.

௩-வது சிலேஷ்மசூலைரோகலக்ஷணம்.

கடலடுத்தநாட்டு மாமிசம்,கிழங்குகள்,சீழ்ப்பால்கட்டி,களி முதலிய மந்தவஸ்துக்களை மிகப்புசித்தலினாலும், சேற்றுச் சலபானத்தினாலும் சிலேஷ்மமதிகரித்துச்சூலைரோகத்தைப்பிறப்பிக்கும்.இதனால்,சரீரமரத்தல் மூர்ச்சை, எந்தவஸ்துவிலும் அசங்கிதம்,குத்தல் என்னும் இக்குணங்கள் உண்டாகும். அன்றியும், தொண்டையிலே வேதனையுடன் கபாதிக்கம், அடிவயிற்றில்நோவு, வியர்வை, நகக்கண்களில் ரத்தம்இல்லாமை, தேகம் பஞ்சைப்போல் மெலிதலுடன்வெளுத்துப்புண்போல்எரிதல்,அடிவாயில் நீரூறல் என்னும் இக்குணங்கள் உண்டாகுமென்பாருமுளர்.

௪-வது திரிதோஷசூலைரோகலக்ஷணம்.

வாதம்,பித்தம்,சிலேஷ்மம்என்னும் இம்மூன்று சூலைரோகங்களினாலும், உண்டாகின்றதுர்க்குணங்களை எல்லாம்ஏககாலத்தில் உண்டாக்கும்.

௫-வது ஆமசூலைரோகலக்ஷணம்.

அதிசலபானம், அகாலபோசனம், மலசலபந்தம், அசீரணவஸ்துக்களைப்புசித்தல் ஆகிய இவைகளினால், ஆமமாகிய அசீரணம் விர்த்தி அடைந்து சூலைரோகத்தைப்பிறப்பிக்கும். இதனால், மார்பு, விலாப்பக்கம், வயிறுமுதலியஇடங்களில் ஈட்டியால்குத்துதல்போல்குத்தல் உண்டாகும்.

சீதக்கட்டு விருத்தியினால் உண்டானதாதலால், இதனை ஆமசூலையெனினும் அமையும். அன்றியும், புளிப்பு தித்திப்பு கசப்பு இவையுள்ளவஸ்துக்களை மிகவும் புசித்தலினாலும், உபவாசத்தினாலும், ஆமாசயத்தில் சீதஞ்சேர்ந்து வயிற்றிலும் விலாப்பக்கங்களிலும்வேதனையுடன்கடுத்தலையுங்குத்தலையும் உண்டாக்குமென்பாருமுளர். ஆமம் என்பது அசீரணம்.

௬-வது சர்க்காரசூலைரோகலக்ஷணம்.

இடுப்பு, முதுகு, விலாப்பக்கம், அடித்தொப்புள், குதஸ்தானம், கீழ்வயிறென்னுமிவ்விடங்களில் குத்தலுண்டாகும். அப்போதுமூத்திரம் ரத்தத்துடன்கூடிக் கிரிச்சரரோக குணத்தைப்பெற்று நீர்த்துவாரத்தில் சுறுக்குச்சுறுக்கென்றுஊசியால்குத்துதல்போல்வேதனையைப்பிறப்பித்து, மணல்களைத் தள்ளிக்கொண்டே துளித்துளியாக இறங்கும். அன்றியும், முதுகு, விலாப்பக்கம், நெஞ்சு, அஸ்தி, நாபி, குதஸ்தானம் என்னும் இவ்விடங்களில் மாமிசம்வளர்தல், சலத்துவாரத்தில்பருக்கான்கல்லுகளைப் போல் மணல்கள்அடைத்துக்கொள்ளல், சரீரத்தில்வேதனை, மனக்கலக்கம், மயக்கம் என்னும் இக்குணங்களை யுண்டாக்குமென்பாருமுளர்.

௭-வது குன்மசூலைரோகலக்ஷணம்.

முன்பு (௱௩௪-வது) பக்கத்தில்சொன்ன குன்மங்களில் ஒன்றாகிய வாதகுன்மமானதுதேகத்தில்நெடுநாள்நிலைப்பதினால்சூலைரோகம்பிறக்கும். இதனால், மல சல பந்தம், வாந்தி, வியர்வை, தாகம், ஏப்பம், மூர்ச்சை என்னும்இக்குணங்களுண்டாகும் அன்றியும், வயிறுபொருமல், இரைச்சல், குத்தல், வாய்நீரூறல், மாமிசதாதுவெதும்பல், சரீரமுலரல், அரோசகம், என்னும் இக்குணங்களுண்டாகுமென்பாருமுளர்.

இச் சூலைரோகங்களை வெந்நீர்ஒத்திடம், சிறுமூலக்குடிநீர், சாறடை வேர்க்கற்கம், பஞ்சலவணபஸ்மம், சூலைக்குடார எண்ணெய், சூலைபூபதி, நாராயணமண்டூரம் முதலியஅவுஷதங்களால் சாத்தியஞ்செய்யவேண்டும்.

மதாந்தரம்.

சூலைரோகபேதம்.

மனக்கவலை, அதிகஓட்டம், மிகுமைதுனம், சண்டை, புகை, பசி ஆகிய இவைகளினாலும், துவர்ப்புவஸ்து, நெடுநாட்சென்றகாடி, சாரகூறிய சலம், ரசமருந்தின்வேகம்இவைகளினாலும், சூலைரோகம்பிறக்குமென்றும்; இது (௧௫) விதப்படுமென்றும் சிலமதாந்தரங்களில்சொல்லப்படுகின்றன. இவற்றுள், வாதசூலைரோகம்முதல் குன்மசூலைரோகம் ஈறாகத்திரிதோஷ சூலைரோகம் ஒழிந்த ஆறுவகையும், முற்கூறியவைகளேயாம். மற்றைய ஒன்பதுவகைச் சூலைரோகங்களையும் எடுத்துக்கூறப்படும்.

௧-வது மேகசூலைரோகம்.

கைகால்கடுப்புடன்குடைச்சல்,வியர்வை,மலபந்தம்,சிவந்தமூத்திரம் சரீரமெங்குஞ்சுட்கித்தல், சீதளம், எரிச்சல், சுரம், மந்தம், பிரமை, மயக்கம் என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.

௨-வது மூறிச்சூலைரோகம்.

ஆண் குறியிலும், கீழ் வயிற்றிலும், குதத்துக்கு மேலிலும், அடிக்குடலிலும் ஓடிஓடிக்குத்தல், தேகமெங்கும் பரவிவலித்தல், தொப்புளைச்சுழித்துச்சுழித்து இழுத்தல், தலைவலி, சுரம், கண்களில் சிவப்புடன்நீர்பெருகுதல் என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.

௩-வது உலர்த்துச்சூலைரோகம்.

பித்த உஷ்ணத்தினாலும், அக்கினியினாலும், வறட்சியினாலும், குடல்வாதத்தினாலும்,குன்மத்தினாலும் பிறந்து,சரீரத்திற்கு உட்புறத்தில் உலர்த்தலுடன் குத்தல்,வெளிப்புறத்தில் வீங்கித்தடித்தல், சர்வாங்கமும் நோதல் என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.

௪-வது நிதம்பச்சூலைரோகம்.

பிரசவித்தகாலத்தில் அழுக்கைவெளிப்படுத்தாமையால்,உள்ளேயே அடங்கிய ரத்தமும் சலமும் தேங்காய்க்குள் இருக்கும் மூளையைப்போல் அல்குலின்வாயை அடைத்துக்கொள்ளும்போது பிறந்து, அவ்விடத்தில் குத்தல், அதை அசைத்தால் நீரிறங்கல்,உள்ளில்கனத்தல், சரீரம்தளர்ந்து ஊதலுடன்வெளுத்தல் என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.

௫-வது சுறைச்சூலைரோகம்.

உதிரம்பொங்கித் தோலைப்பற்றுவதினாலும், பற்றியது நரம்பின் துவாரத்தில் தடைபட்டுத் தங்குவதினாலும் உண்டாகி, கீழ்முதுகை அநுசரித்துநின்று அவ்விடத்தில் மிகவும்வலிக்குதல், கை கால் உளைப்பு, அறிவும் தேஜசும் மழுங்குதல் என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.

௬-வது சுரசூலைரோகம்.

சுரம், வாயில்மாறுதுசலம்ஊறல்,வாந்தி,ஒருவேளை அந்தவாந்தியில் ரத்தம்விழல், இருபக்கவிலாக்களிலும்குத்தல், சரீரமுழுதும் வேதனை, உளைச்சல், வயிற்றை இழுத்துப் பிடித்தலுடன்நோதல், நெஞ்செரிவு, அசீரணம், தயக்கம் என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.

௭-வது பக்கச்சூலைரோகம்.

பக்கத்தில்குத்தல், திருகலுடன் அண்டத்தில்நோதல்,சுரம்,உடம்பு பச்சைப்புண்போலிருத்தல், கனத்தல்,திமிர்,கை கால் ஓய்ச்சல், கண்ணிற் புகைகம்மியதுபோலிருத்தல் என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.

அ-வது கருப்பச்சூலைரோகம்.

இடுமருந்து, வஞ்சனை, சூனியம், பெருங்காயச்சூடு, பிரசவித்த காலத்தில்தங்கிய அழுக்குஆகியஇவைகளினல்,கீழ்வயிற்றில் ரத்தமானது உறைந்து கருப்பத்தைப்போல் திரண்டு புரண்டுகொண்டு அடிவயிற்றில் அதிகச்சூலையையுண்டாக்கும். இதனல், அனந்தஞ்சங்கட்டம் பிறக்கும்.

கூ-வது தூரச்சூலைரோகம்.

கெடுதியானபோசனத்தினல் உண்டாகி, மாதாந்தர ருதுகாலத்தில் வாய்நீரூறல்,நெஞ்செரிவு,ஈரலைப்பற்றிப் பக்கத்திற்குத்தல்,சிரசும் வயிறும் வீங்குதல், அடிக்கடி ஏப்பம், கீழ்வயிற்றில் உதிரந்தங்கல், மலசலச்சிக்கல் என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.

சாத்தியாசாத்தியசூலைரோகநிதானம்.

சூலைரோகம் ௰௫-ல் மூறிச்சூலை,சர்க்கராசூலை,சிலேஷ்மசூலை,குன்மசூலை,ஆமசூலை,நிதம்பசூலை இவ்வாறும் அசாத்தியம், மற்றவை சாத்தியம். மதாந்தரமூற்றியது.

உத்ரரோகபேதம்.

உதரரோகமென்பது, வாதோதரரோகம், பித்தோதரரோகம், சிலேஷ்மோதரரோகம், திரிதோஷோதரரோகம், பிலீகோதரரோகம், பந்தோதரரோகம், க்ஷதோதரரோகம், சலோதரரோகம் என எண் வகைப்படும். இவற்றுள், பிலீகோதரரோகத்தில் யகுர்தோதரரோகம் ஒருபிரிவும், சலோதரரோகத்தில் சலஸ்தம்போதரரோகம் ஒருபிரிவும் உண்டு. இது, முதலில் வயிற்றைவிகாரப்படுத்திப் பின்பு சகலதுர்க்குணங்களையும் பிறப்பிப்பதால், உதரரோகம் எனப்பேர்பெற்றது. இதுக்கு மகோதரம், பெருவயிறு, துந்திரோகம் என மூன்றுநாமங்களுண்டு.
உதரம் என்பது வயிறு.

சாமானிய உதரரோகலக்ஷணம்.

கீழ்வாய்த்தாளின் அடியும் உதடும் வற்றிச்சுருங்குதல், கை கால் வயிறு இவ்விடங்களில்வீக்கம், நடை, பலம், அசனம் ஆகிய இவைகள் குறைதல்,சரீரம்உலரல்,வயிறுமாத்திரம்பருக்குதல்என்னும்இக்குணங்கள் சகல உதரரோகிகளுக்கும் உரித்தாகஇருந்தாலும் இருக்கும்.

உதரரோக பூர்வரூபம்.

வாததோஷத்தைப் பிறப்பிக்கின்ற வஸ்துக்களினல், முதல் முதல் வாயு அதிகரித்துச் சமாக்கினியைக்கெடுத்துப் புசித்த அன்னபானதிகளை வெகுநேரம் பொறுத்துத் தாகத்தைக்கொடுத்து சீரணிக்கப்பண்ணும். இதனல்,வயிற்றில்சீரணமாயிற்றென்றும் ஆகஇல்லையென்றும் அறியாமை, தேகத்தில் இன்னவித சங்கட்டமிருக்கின்றதென்றும் தெரியாமை,

நாளுக்கு நாள் தூர்ப்பலம், நெட்டுயிர்ப்பு, அற்பவேதனைஎன்னினும்
ாளல், பெருமலச்சேர்க்கையால் சிலவேளைபேதி, கால்களில் கொஞ்சம்
வீக்கம், மிருதுபதார்த்தத்துடன் அற்பபோசனஞ்செய்யினுங்கீழ்வயிற்றுச்
சந்திகளில் நோவு அதிகரித்ததுபோ லிருத்தல், அக்கீழ்வயிற்றிலும்
மேல்வயிற்றிலும் மயிலிறகின் கண்களைப்போற் புடைகள் எழும்புதல்,
வயிற்று மடிப்புகள் கெடுதல், சதா சோம்பல், இருந்த விடத்திலேயே
இருக்குதல், மலபந்தம், அக்கினிமந்தம், தாகம், வீக்கம், வயிறு உப்பிசம்
என்னும் இக்குணங்கள்கண்டு,வயிற்றுப்புரையில்சலமிறங்கஆரம்பமாகும்;
அக்குணத்தில் மேலெல்லாஞ்சிவந்து வீக்கம் இல்லாமல் கொஞ்சங்
ணத்து, மோதிரவளையங்களைப்போல் நரம்புகளால் சுற்றப்பட்டு, அதில்
ப்போது கடகடவென்னும் ஒரு தொனியுண்டாகிச் சலம் இறங்கிப்
பூரித்துக்கொண்டபின்பு,அவ்வாயுவானதுநாபிஸ்தானத்தையுங்குடலையும்
இழுத்துப்பிடித்துக்கொண்டு,மார்பு,இடுப்பு,நாபி,குதம்,தொடைக்கவுட்டி
என்னும் இவ்விடங்களில் வேதனையைப்பிறப்பித்து, உடனே தானும்
அடங்கி இருந்துகொண்டு, பின்பு வெகுநேரம்பொறுத்துச் சத்திப்புடன்
அபானத்தால் வெளிப்பட்டுக்கொண்டே இருக்கும். இதனால் மலபந்தம்
அற்பமூத்திரம், சொற்பாக்கினி, அசையக்கூடாமை, முகக்களைகுறைதல்
முதலிய குணங்கள்பிறக்கும். இவைகளே உதரரோக பூர்வரூபமாம்.

க-வது வாதோதரரோகலக்ஷணம்.

வயிறானது, காரணமில்லாமல் பருத்தும், சிலவேளை வாடியும், சில
வளை நொந்தும் நோவாமலும், மேலில்கறுத்த சன்னநரம்புகளால் சுற்றப்
பட்டும், உள்ளில் ஒரு ஆச்சரியமான சத்தம் எழும்புதலுமாக இருக்கும்;
அப்போது கை கால் வயிறு குதம் ஆகிய இவ்விடங்களில்வீக்கம், வயிறு
வா இடுப்பு முதுகு கீல்க ளிவைகளில்நோதல்,ஒருவேளை சர்வாங்கத்திலு
நாதல், வறட்டிருமல், கீழ்வயிறு கனத்தல், மலபந்தம், சருமமெல்லாம்
கறுத்தாவது சிவந்தாவதுதோற்றல் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.
இல்,வாயுவானது,சத்திப்புடன்அதிகரித்து உபத்திரவத்தைஉண்டாக்கி,
ங்குடிச் சஞ்சரிக்கும். அன்றியும் வயிறுதவிர மற்றிடம்வெளுத்து உலர்தல்,
ர்ப்பலம், அன்னத்திவேஷம், அடிவயிற்றில் இரைச்சல், உப்பிசம்,
சிரணத்தோடுபசி என்னும் இக்குணங்கள் உண்டென்பாருமுளர்.

உ-வது பித்தோதரரோகலக்ஷணம்.

வயிறானது பருத்து, புகைநிறத்தையும் பச்சிலை ரசநிறத்தையும்
ற்று, மேலில் சூட்டையும் வியர்வையும் கடினத்துவமும் அழுத்தினால்
பத்திரவமும் உண்டாகி, நரம்புகள்சிவந்தாவது மஞ்சள்நிறத்துடனாவது
ற்பட்டுவதாகஇருக்கும்; அப்போதுவயிறுதவிரமற்றைய இடமெல்லாம்

மஞ்சள்நிறம் சிவப்புநிறம் உண்டாகுதல்,அருந்தும் போசனம் விரைவில் தகிக்கப்படுதல், சுரம்,மூர்ச்சை,தாகம், பிரமை,பேதி,வாயில்காரம், உதடு சுருங்குதல்என்னும்இக்குணங்களுண்டாகும்.இதில்,பித்தமே அதிகரித்து அற்ப உபத்திரவத்தை உண்டாக்கும். அன்றியும் கண்களில் காசாம்பூ நிறம் உண்டாகுதல், மோகம், தேகத்தில்காங்கை, சருமத்தில் சுறசுறப்பு, நரம்புகள்பலநிறத்துடன் இழுத்துக்கொள்ளுதல், அன்னம்செரியாமை என்னும் இக்குணங்களுண்டென்பாருமுளர்.

௩-வது சிலேஷ்மோதரரோகலக்ஷணம்.

வயிறுனது, நாளுக்குநாள் கனத்துப் பருத்துக் கடினத்துடன் அழுத்தமாய் அசைவற்று வெளுத்த புடைகளைப்பெற்று, மினுமினுத்துக் குளிர்ச்சியையடைந்திருக்கும்; அப்போது தேகத்தில்கனத்தல், நோவு, நித்திரை அல்லது உறங்கிவிழுதல், கிடந்த இடத்திலேயே கிடப்பதற்கு நினைப்பு, வீக்கம், சருமமும் பஞ்சேந்திரியங்களும் வெளிறல்,அரோசகம், இருமல்,இரைப்புஎன்னும் இக்குணங்களுண்டாகும். அன்றியும் நடுக்கல், நித்திரையில்லாமை, நாக்கு உப்புறைத்தல், குளிர், சுரம், கோபம், வயிறு உப்பிசம், நீரும் மலமும் கடுத்தலுடன்வெளிப்படுதல், கோழை என்னும் இக்குணங்களுண்டென்பாருமுளர்.

௪-வது திரிதோஷோதரரோகலக்ஷணம்.

ஸ்திரீகள் புருஷனை வசியப்படுத்தும்பொருட்டு, வாதாதிதோஷ காரிகளானசூரணகஷாயகற்கங்கள்,இடுமருந்து,மூத்திரங்களால்செய்கின்ற அவுஷதங்கள்,விஷங்கள் ஆகிய இவைகளைக் கொடுக்கப்படுவதினால், வாத பித்த சிலேஷ்ம மாகிய இம்மூன்றுதோஷங்களும் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டு அதிகரித்து வயிற்றில் அடையும். இதனால் வயிறுனது, முன்புசொன்ன வாதம்முதலிய மூன்றுமகோதர ரோகங்களுக்குள்ள குணங்களைப்பெற்று,பார்ப்பதற்குப்பயங்கரரூபமாகஇருக்கும்; அப்போது வீக்கம், மூர்ச்சை, சுரம் முதலியதுர்க்குணங்களும், விரைவில் சீரணமும் உண்டாகும். இது, குளிர்காற்றினாலும், மழைமேகக் குளிர்ச்சியினாலும் அதிகரித்து, உபத்திரவத்தைச்செய்யும். அன்றியும் வெளுத்தகண்ணீர் பெருகுதல், கால் கை இளைத்தல், வயிற்றில்மாத்திரம்வீக்கம், தலைசுழலல், தயக்கம் என்னும் இக்குணங்களுண்டென்பாருமுளர்.

௫-வது பிலீகோதரரோகலக்ஷணம்.

பிரமாணம் இன்றிப்புசித்துப்புரளல்,யானை குதிரை ஒட்டை எருது சகடம் சிவிகைமுதலியவாகனுதிகளில்ஏறிவேகத்துடன்நடத்திஅலைவுறல், தகாதநடக்கைகளை யநுசரித்தல், குடல்குலுங்கும்படி அதிக சையோகஞ்

செய்தல், அதிசுமையெடுத்தல், ஓயாநடைநடக்குதல், நெடுந்தூரம் ஓடுதல் என்னும் இச்செய்கைகளினாலும் : நோய்கள்அதிகரித்தலினாலும் : தேகம் இளைத்தலினாலும் இருதயத்துக்கு இடப்பக்கத்தில்இருக்கும் மாமிசகண்டமாகிய பிலீகம் தனது ஸ்தானத்தைவிட்டுநழுக, அதில் இருந்துவருகின்ற ரத்தமும்,அப்பிலீகத்தைஅநுசரித்து அன்னரசாதிகளால்விர்த்தியடைந்து அஷ்டிலாரோகத்தைப்போலும் ஆமைமுதுகைப்போலும்கடினத்தையும் உயர்வையும்பெற்று, நாட்குநாளதிகரித்து வயிற்றுக்குளப்பக்கத்திலேயே நிறைந்து பருக்கும். இதனால் வயிறானது பருத்துச் சுபாவநிறத்தையொழித்துச் சிவந்தநிறத்தைப்பூண்டு மஞ்சள்புடைகள் கறுப்புப்புடைகள் உள்ளதாய்க் கெட்டிப்பட்டிருக்கும்; அப்போது தேகம்வெளிறல்,இருமல், இளைப்பு,தாகம்,வாயும்உதடும் உலரல்,வயிறுப்பல்,சுரம்,மூர்ச்சை,வாந்தி, உள்ளெரிச்சல், மேலெரிச்சல், சோருதல் முதலியகுணங்கள்உண்டாகும். இது அசாத்தியம். அன்றியும் இருபக்கத்திலும் கூர்மையாய்த் தோற்றல், மல சலங் கட்டுப்படாமை, வாயுபறிதல், தேகத்தில் அற்பவீக்கம், அசனத்தில்விருப்பம், கண்களில் ரத்தம் உண்டாயிருத்தல் என்னும் இக்குணங்களுண்டென்பாருமுளர்.

சு-வது யகுர்தோதரரோகலக்ஷணம்.

மூன்பு பிலீகோதரத்தைப் பிறப்பித்த அப்பிரமாணபோசனம் முதலிய துர்ச்செய்கைகளினால்,இருதயத்துக்குவலப்பக்கத்தில்இருக்கின்ற கறுத்தமாமிசகண்டமான யகுர்தி, தனது ஸ்தானத்தைவிட்டுநழுகி, மேற்சொல்லிய பிலீகோதரரோகத்தைப்போலவேவயிற்றுக்குள்அப்பக்கத்தில் விருத்தியடைவதினால், வயிறுபருக்கும் ; அப்போது இளைப்பு, இருமல் முதலியகுணங்கள் உண்டாகும்.

எ-வது பந்தோதரரோகலக்ஷணம்.

கண்இமைமயிர் உதிர்ந்து கலந்திருக்கிற அன்னபானாதிகளை அருந்துவதால், மலபந்தம் உண்டாகும் ; அக்காலத்தில் மூலரோகம், உதாவர்த்தரோகம், ஆநாகரோகம், குடலிலொட்டிக்கொள்ளும் அன்னம் இவைகளினால்அதிகரித்துவயிற்றைவிகாரப்படுத்துகின்றவாயுவைப்போல் ஒருவாயு அதிகரித்து, பித்தத்தையும் சிலேஷ்மத்தையும் மலத்தையும் வெளிப்படுத்தாமல், வயிற்றுக் குள்பந்தித்துக் கீழ்வயிற்றிற்கும் குதஸ்தானத்திற்குமாக வீக்கத்தையுண்டாக்கும். இதனால் கீழ்வயிறானது, பருத்துவாயுவைவெளிவிடாமல் நிறைத்துக்கொண் டசைவற்றிருப்பதும், மேலில் நரம்புகளும் புடைகளும் கறுத்தாவது சிவந்தாவது மோதிரவளையம்போல் சுற்றிக்கொண்டிருப்பதுமாகப் பருத்திருக்கும் : அல்லது

நரம்புகள்மாத்திரம் இருந்து புடைகள் இல்லாதிருந்தாலுமிருக்கும். இவைகள், மேல்வயிற்றில்கண்டால், பசுவின்வாலைப்போல் மேலில் வார் வாராய்த் தோற்றும்; அப்போது அபானம், தொடை, நாபி, மார்பு, சிரசு ஆகிய இவ்விடங்களில் நோதல், தாகம்,தும்மல், எரிச்சல்,சுரம், இருமல், இளைப்பு,மலபந்தம்,அரோசகம்,வாந்திஎன்னும் இக்குணங்களுண்டாகும்.

௮-வது க்ஷதோதரரோகலக்ஷணம்.

கூர்மையுள்ள சன்னஎலும்பு,பாணத்தின்முனை,ஊசி, உவாமுள்ளு, முள்ளு, வால்நெல்லு முதலியவைகள் கிடந்தபோஜனத்தினாலும், அதி தின்டியினாலும் குடலுக்குள்துவாரம்உண்டாகும்,அல்லது அவ்விடங்கள் நைந்திருக்கும்; அப்போது அம்மார்க்கங்களில் நின்றும் நித்தியமும் உண்ணுகின்ற போஜனம்செரித்தும் செரியாமலும்பிதுங்க,அத்துடன் அவ் அசீரணரசமும் குடலுக்கு வெளிப்புறத்திலகசியும்; இவ் அசீரணரசமே குடலுக்கு உள்ளிலும்இருக்கின்றமையால், அது, கொஞ்சம் கொஞ்சமாய் மலத்துடன்கூடப் பிரேதநாற்றத்தை வீசுவதாய்ப் பிசுபிசுத்து, சிவந்த நிறத்தையாவது மஞ்சள்நிறத்தையாவதுபெற்று, ஆசனவழியால் வெளிப் பட்டுக்கொண்டேஇருக்கும். மற்றமிகுதிரசமோவென்றால், முன்பு கசியும் என்றுகூறியவண்ணமே, கோடைக்காலச் செயநீரைப்போல் மிருதுவாகக் கசிந்து வடிந்து உள்ளேயேதங்கி, வயிற்றைமெத்தவும் பருக்கப்பண்ணும்; இதனால் கீழ்வயிறானதுபருத்துத் தண்ணீர்ப்பானையை யொத்திருக்கும்; அப்போது மேற்சுவாசம், தாகம், பிரமைஎன்னு மிக்குணங்களுண்டாகும். இதுநிற்க, அசீரணம், உஷ்ணம்,வாயு என்னும் மூன்றுதோஷங்களும் அதிகரித்து, சுபாவமாயிருக்கின்ற குடலில் துவாரம் விழச்செய்து, மேற்சொல்லிய ரோகத்தைப்பிறப்பிப்பதும் உண்டென்று தேரையர் சாஸ்திரம் சொல்லுகின்றது. இந்த க்ஷதோதரத்தைச் சிலர்சித்திரோதர மென்றும்,பரிசிராவியென்றும் சொல்லுகிறார்கள். க்ஷதம்என்பது காயம். சித்திரம் என்பது துவாரம். பரிசிராவி என்பது பெருகுதல்.

௯-வது சலோதரரோகலக்ஷணம்.

நெய்யையாவது எண்ணெய்யையாவது மிதமில்லாமல் குடித்து உடனேசீதளசலத்தைஅடிக்கடிகுடிப்பதினால்,தாகம்உண்டாகும்.இதனால் மேன்மேலும்சலபானம்பண்ணும்போது,சமாக்கினிமந்தப்பட்டு,தேகமிகவு மிளைக்கும். அப்படியிளைத்தகாலத்திலதிகரித்த வாயுவும்,சலவிர்த்தியினால் அதிகரித்த சிலேஷ்மமும், வயிற்றில் இருக்கின்ற சல நரம்புகளின் துவாரங்களையடைத்து, அவ்வயிற்றிற் றங்கிக்கொண்டு முன்பு குடித்த சலத்தையே விருத்தியாக்குவதால், வயிறானது, நாளுக்குநாள் உயர்ந்து மினு மினுத்துத் தண்ணீர்ப்பானையையொத்து அசைவற்று, தட்டினால்

சுத்திப்பதாய்மேலில்பலநிறநரம்புகளால் சுற்றப்பட்டு, பிதுங்கியநாபியைச் சுற்றிலும் சுழியைப்பெற்றுப்பருத்திருக்கும்; அப்போது சரீரம்நருக்கித் துவைத்ததுபோலிருத்தல், ஆசனத்தில் வியர்வைபோல் சலங்கசிதல், நோதல்,நடுக்கல்,தாகம்,அரோசகம்,இருமல்,இளைப்பு என்னு மிக்குணங்களுண்டாகும். இது வாதமும் சிலேஷ்மமும் வயிற்றில் சேருங்காலத்தில் பிறக்கும். அன்றியும் சர்வாங்கத்திலும் நீர்கோத்துக் கொள்ளுதலுடன் மஞ்சள்நிறம், உழலை, ஆண்குறிதளர்ச்சி, முதுகிலும் வயிற்றிலும் வீக்கம், தாதுமந்தம், ஐம்புலன்கலங்குதலாகிய இக்குணங்களுண்டென்பாருமுளர்.

சலஸ்தம்போதரரோகலக்ஷணம்.

சகலஉதரரோகங்களுக்கும்ஆரம்பத்திலேயேவனமுருக்குச்சாம்பல், கள்ளிக்கரி, சித்திரமூலமாச்சாதத்தேட்டை, தீபாக்கினிச்சூரணம், சூரணலேகியம், அப்பிரகபஸ்மம், திரிலோகச்சிந்தூர முதலிய அவுஷதங்களைக் கொண்டு தகுந்தசிகிச்சைகளைச் செய்யவேண்டும். செய்யாவிடில், வாத பித்தங்கள்,அதனதனிடத்தைவிட்டுப்பிலீகஸ்தானத்திற்சேர்ந்துகொண்டு, கீல்களுக்கும் நரம்பின் முகங்களுக்கும் வெப்பத்தைக் கொடுத்து, அவ்விடங்களில் இருக்கின்ற சிலேஷ்மப் பசையையெல்லாம் இளக்கி வியர்வைச் சலம்போல் பெருக்கிக்கொண்டேயிருக்க, அவ்வியர்வைச்சலம் வெளிநரம்புகளில் குறுக்காகப்பாய்ந்து வயிற்றுப்புளைக்குள் நிறைந்து, அவ்விடத்து ரசங்களையும் பிசினைப்போல் குழம்பாக்குவதுமன்றி, வயிற்றைப்பருக்கச்செய்யும். அப்போதுவயிறுனது கனத்து அசைவற்று வட்டவடிவைப்பெற்று, தட்டினுல்சத்தம் இல்லாமலும், ஒருவேளைமிருது வாகியும், மேலிற்புடைகளும் நரம்புகளும் இல்லாமல், நாபிமுதல் முதுகு பரியந்தம்ஏற்றமும்இறக்கமும்உண்டாயிருக்கும்.அன்றியும் முன்சொன்ன வியர்வைச்சலம் அடிக்கடி இறங்கலால், மிகவும் உயர்ந்து பருத்துச் சலம் நிறைத்த பானையையொத்து, கிருஷ்ணபக்ஷத்தைப்போல் குறைவும், சுக்லபக்ஷத்தைப்போல் விர்த்தியுமடைந்து, சலோதரரோககுணங்களையும் பெற்றிருக்கும்.இதில்,மரணகால உபத்திரவம்போல்,சகலஉபத்திரவங்களுமுண்டாகும். ஆனுல், வாதாதி மூன்றுதோஷங்களும் பிலீகஸ்தானத்தில் சேருங்காலத்தில், இந்த ரோகம் பிறக்கும்.

சாத்தியஉதரரோகநிதானம்.

சகல மகோதரரோகங்களும், பிறக்கும்பொழுதே கஷ்டசாத்தியம். ஒருவேளை, பலமுள்ளவனுக்கு, ஆரம்பத்திலாவது வயிற்றுப்புளைக்குள் சலம் நிறையுமுன்னமாவது வைத்தியம்பண்ணில், சாத்தியம்.

அசாத்தியஉதரரோகநிதானம்.

உதரரோகிகட்கு, மலமூத்திரச்சிக்கல், இரைப்பு,இருமல், வீக்கம்; புசிக்கும் அன்னம் மார்பில்அடைத்தல், சுரம், பிரமை, மூர்ச்சை, வாந்தி, சிலவேளைபேதிமுதலியகுணங்களினால் அதிகதுர்ப்பலம்,கண்கள் உப்பல், வியர்வை, எவ்விதப்பேதிக்குவாங்கினும் வயிறுபொருமல், அடிக்கடி வயிறுபருத்து விரிந்து போவதுபோ லிருத்தல், அல்குலிலும் குதஸ்தானத்திலும்அதிகநோவு என்னுமிக்குணங்களுண்டாகில்,அசாத்தியம்.

மதாந்தரம்.

வாதோதரரோகுணமும் சிலேஷ்மோதரரோகுணமும் ஒரே காலத்தில் காணில்;அதுவாதசிலேஷ்மோதரரோகமென்றும்; பித்தோதர ரோகுணமும் சிலேஷ்மோதரரோகுணமும் ஒரேகாலத்தில் காணில், அது பித்த சிலேஷ்மோதரரோகமென்றும் சித்துப்புருஷர்கள் சாஸ்திரம் சொல்லுகின்றது. இவைநிற்க, முற்கூறிய எண்வகை உதரரோகத்துடன் அவைகளால் உண்டாகின்ற சின்னங்களையும்: சுரம், பாண்டு, சோபை, குன்மம்,காமாலை,விஷமிவைகளால் வயிற்றில்வீங்குகின்ற வீக்கங்களையும்: வயிற்றுக்குள்உண்டாகின்றகட்டிபேதங்களையும்சேர்த்து,மகோதரரோகம் ௲௨ விதமென்று பூகிமுனிசாஸ்திரம் சொல்லுகின்றது. அன்றியும் கருப்பமாதர்களுக்குக் கண்டால், சூல்மகோதரரோகம்; கல்லுப்போல் இருந்தால், கல்மகோதரரோகம்; வில்லேறிட்டதுபோலிருந்தால், வில் மகோதரரோகம்; மேல்வயிறுபருத்தால், மேற்கவிகை மகோதரரோகம்; கீழ்வயிறுபருத்தால், கீழ்க்கவிகைமகோதரரோகம்; பக்கத்தில்பருத்தால், பக்கமகோதரரோகம் எனவும் முன்புசொல்லிய எண்வகை உதர ரோகங்களையே பலவாறாகச்சொல்லுகிறார்கள்.

மதாந்தர முற்றியது.

பிலீகரோகலக்ஷணம்,

மேடு பள்ளம் வாய்க்கால் முதலிய பூப்பிரதேசங்களை வேகமாகத் தாண்டல், அவுஷதத்தால்மிகுபேதியானகாலத்தில்அதிகநடைநடக்குதல், பூர்த்தியாகப்புசித்து அவ்வாறே தாகபானமுஞ்செய்து வெகு வேகமாக வோடுதல் ஆகிய இச்செய்கைகளால் உபத்திரவம் ஒன்றும் இல்லாமல் இருதயத்துக்கு இடப்பக்கத்தில் சுபாவமாக விருக்கின்ற பிலீகமானது குலுங்கும். அத்தருணத்தில் பேதிவஸ்து, மாப்பண்டம், ஈரமில்லாத அன்ன முதலியவைகளைத்தனித்தனியேபுசித்து,உடனேநெய்யை அல்லது எண்ணெய்யைஅதிகமாகக்குடித்தல்இன்னும்புசிக்கத்தகாதவஸ்துக்களைப் புசித்து உடனே மிகவுந்திரிதல், பெருந்திண்டி, போசனத்தின்மேல்

போசனம், பகல்நித்திரை, அசீரணம், பதினலுவேகங்களை அடக்குதல், ஆசனத்தின்வழியால்செலுத்திய விரேசனஅவுஷதம்வராமைஎன்னும் இச் செய்கைநேர்ந்தாலும்,சந்ததாதிசுரமுதலியரோகங்களினல்மெலிந்தாலும், முன்பு குலுங்கியபிலீகமானது, தனது ஸ்தானத்தைவிட்டுச் சரிந்து வயிற்றில் பலவிதவுபத்திரவத்தைச்செய்து, கட்டிபோல் தோற்றப்படும்.

பிலீகரோகபேதம்.

பிலீகரோகமானது வாதபிலீகரோகம், பித்தபிலீகரோகம்,சிலேஷ்ம பிலீகரோகம், திரிதோஷபிலீகரோகம் என நான்குவிதப்படும்.

க-வது வாத பிலீகரோகம்.

வாயுவானதுஎப்போதும்வயிற்றில்பூரித்துக்கொண்டேயிருப்பதால் தினந்தோறும்வயிறுப்புதல்,அவ்விடத்தில் நிலைத்தகட்டிபோல்தோற்றல், அதிகவேதனை என்னும் இக்குணங்களையும், முன்பு எஅ-வது பக்கத்தில் சொன்ன உதாவர்த்தரோககுணங்களையும் உண்டாக்கும்.

உ-வது பித்த பிலீகரோகம்.

அந்த ஒருபக்கத்து வயிறுனது மொத்தாகாரமாகத் தோற்றல், உப்பிசம், பித்தாதிக்கம், வெப்பம்,மலபந்தம் என்னும் இக்குணங்களுடன், முற்கூறிய துர்க்குணங்களையும் உண்டாக்கும்.

ங-வது சிலேஷ்ம பிலீகரோகம்.

மேற்சொன்ன குணங்களுடன், இருமல், இரைப்பு, கபாதிக்கம், இரண்டுகாலுஞ்சூம்பல்,வயிறுபொருமல், அப்பக்கத்தில் கனத்துக்காணல், மலமூத்திரச்சிக்கல் முதலியகுணங்களை யுண்டாக்கும்.

ச-வது திரிதோஷ பிலீகரோகம்.

வாதம்,பித்தம்,சிலேஷ்மம்என்னும்மூன்றுபிலீகரோகங்களுக்குள்ள குணங்களையெல்லாம் ஓரேகாலத்தில் உண்டாக்கும்.

அசாத்திய பிலீகரோகநிதானம்.

பிலீகரோகம் நாலுக்குள், வாதபிலீகம் அசாத்தியம்; மற்றப் பிலீகங்கள், பிடிக்குள் அடங்குகின்ற கட்டியாயிருக்கில், சாத்தியம்.

மேற்சொல்லிய பிலீகரோகங்களை, காய்ச்சு லவணச்சூரணம், யவாக்ஷாரக்குழம்பு, ஸ்ரீவங்கேசுரமாத்திரை, சூலைக்குடாரக் குளிகை முதலிய அவுஷதங்களினல் வசப்படுத்தவேண்டும்.

பாண்டுரோக பூர்வரூபம்.

பாண்டுரோகமானது,மார்புஅதிரல்,சரீரஞ்சுரசுரத்தல்,அரோசகம் மஞ்சள்நிறமான மூத்திரம், வியர்வை, மந்தாக்கினி, தேகம் இளைத்தல், ஆயாசம் என்னும் இக்குணங்களைத்தனக்குப் பூர்வரூபமாகப் பெற்றிருக்கின்றது. பாண்டு என்பது வெண்மை.

பாண்டுரோகபேதம்.

பாண்டுரோகமானது வாதபாண்டு, பித்தபாண்டு, சிலேஷ்மபாண்டு, திரிதோஷபாண்டு, மிர்த்திகாபுக்தபாண்டு என ஐவகைப்படும்.

க-வது வாத பாண்டுரோகம்.

உடம்பு நருக்கித்துவைத்ததுபோல் இருப்பதுடன்நோதல், நடுக்கல், நரம்பு நகம் மலம் மூத்திரம் கண் இவைகள்கறுத்தும்சிவந்தும்தோற்றுதல், தேகவீக்கம், வயிறுப்பல், முகக்களைநீங்கல், மலந்தீதல், பக்கவிலாக்களிலும் சிரசிலும்நோவு என்னும் இக்குணங்களையுண்டாக்கும். அன்றியும் குடல் புரட்டலுடன் அடிவயிற்றை வலித்தல், பசியும் தாகமும் நீங்குதல் என்னும் இக்குணங்களை யுண்டாக்குமென்பாருமுளர்.

உ-வது பித்த பாண்டுரோகம்.

நரம்பு மலம் மூத்திரம் முதலியவைகள் மஞ்சள்நிறமாயும், பச்சிலை ரசநிறமாயு மிருத்தல், சுரம், கண்களில் இருட்கம்மல், தாகம், வியர்வை, மூர்ச்சை, சீதளவஸ்துக்களில் இச்சை, துர்க்கந்தத்துடன் வாயில் காரமா யிருத்தல், மலபந்தம், புளிஏப்பம், சரீரகாங்கை என்னும் இக்குணங்களை யுண்டாக்கும். அன்றியும் சரீரமஞ்சளித்தல், அல்லதுவெளுத்தல், வாயில் முள்ளுப்போலிருத்தல், நெஞ்சுவலி, சுவாசபந்தம், கிறுகிறுப்பு, வாய்கசத்த லென்னும் இக்குணங்களை யுண்டாக்கு மென்பாருமுளர்.

௩-வது சிலேஷ்ம பாண்டுரோகம்.

நரம்பு முதலியவைகளும் வெளுத்தல், சோம்பல், வாயில் உப் புறைத்தல், ரோமச்சிலிர்ப்பு, பேசும்போது கண்டத்தில்கமறல், இருமல், வாந்தி என்னும் இக்குணங்களையுண்டாக்கும். அன்றியும் அதிகதும்மல், கோழை, மயக்கம், இடுப்புஅசதி, இந்திரியநஷ்டம், சோருதல், எரிச்சல் என்னும் இக்குணங்களை யுண்டாக்குமென்பாருமுளர்.

ச-வது திரிதோஷ பாண்டுரோகம்.

முன்சொன்ன வாதபாண்டு, பித்தபாண்டு, சிலேஷ்மபாண்டு என்னு மிம்மூன்றிலும் உண்டாகிற துர்க்குணங்களையெல்லாம் ஏககாலத்தில் உண்டாக்கும். அன்றியும் இரைப்பு, மார்புநோவு, தயக்கம், தேகம்ஊதல், அசதி என்னும் இக்குணங்களை உண்டாக்குமென்பாருமுளர்.

ரு-வது மிர்த்திகாபுக்த பாண்டுரோகலக்ஷணம்.

துவர்மண், சவுட்டுமண், தித்திப்புமண் ஆகிய இம்மூவகைமண்களை நாள்தோறும் வழக்கமாக மிகவும் தின்னுவதால், முறையே வாத பித்த கபங்கள்அதிகரித்து, பற்பலரோகங்களைவிளைக்கும். இதுநிற்க, இம்மூன்றில் தித்திப்புமண்ணானது சிலேஷ்மதோஷத்தைவிருத்தி அடையச்செய்வதும் அன்றி, அறுசுவைவருக்க உண்டியினால் உதிக்கும் அன்னரசத்தையும்

அந்த ரசத்தைத்தாங்கிப் பாதாதிகேசம்வரைக்கும் வியாபிக்கும்படியாய்ச் செலுத்தி, சரீரத்திற்கு ஆதாரத்தைச்செய்கின்ற ரசநரம்புகளையும் தனது உஷ்ணகுணத்தினால் உலர்த்திவிடும். இதுபோலவே தினந்தினமும் புசிக்கின்ற உணவையும் அக்கினிமுகத்தில் விழவொட்டாமல் மறித்து, அதிலிருக்கும் அன்னரசத்தையும்சுவறப்பண்ணும். இந்தக்காரணத்தினால் ரசதாதுநசிக்கும். இதுநசிக்கவே,மழையில்லாப்பயிர்போல,ரத்ததாதுவும் நசிக்கும்; அப்போது ஒருவிதப் பாண்டுரோகம் பிறக்கும். இதனால் நாபி, பாதம், முகம், அல்குல், ஆண்குறி என்னும் இவ்விடங்களில் வீக்கமும், துண்டுதுண்டாகக் கிருமிசேர்ந்தமலமும், ரத்தங்கலந்தகோழைவாந்தியும் உண்டாகும். இதற்கு லகுவிரேசனமும், பாவன ஜீவலோகமும் உதவும்.

மிர்த்திகைஎன்பது மண்; புக்தம் என்பது புசித்தல்.

அசாத்திய பாண்டுரோகநிதானம்.

பாண்டுரோகிகட்கு, வீக்கம், சோம்பல், தாகம், அரோசகம்,வாந்தி, விக்கல், இருமல், பேதிஎன்னும் இக்குணங்களுண்டாகி,எந்தவஸ்துவைப் பார்த்தாலும் பார்வைக்கு மஞ்சள்நிறமாகத் தோற்றுவதும் அன்றி, கண்களிலும் நகங்களிலும் மஞ்சள்நிறமும் உண்டாகில், அசாத்தியம். இக்குறிகள் ஒன்றும் இல்லாதிருந்தால், சுகசாத்தியம்.

மேற்சொல்லிய பாண்டுரோகங்களை எருமைச்சாணம், கரிசாலை லேகியம், தீரையப்பாவனச்சத்து, அயபிருங்க ராஜகல்கம், சல்சமாதி சம்பிரகற்பம், மஹா ராஜமிருகாங்கக்குளிகை, மஹா வசந்தகுசுமாகர மாத்திரை முதலிய அவுஷதங்களால் நிவிர்த்திசெய்யவேண்டும்.

மதாந்தரம்.

பாண்டுரோகபேதம்.

சிந்தாமணி என்னும் வைத்தியநூலும், வாதம்,பித்தம்,சிலேஷ்மம், திரிதோஷம், விஷம் என்னும் ஐவகைப்பாண்டுரோகம் உண்டென்றும்; அவைகள், இளகியஅதிசாரமலம் கழுகையில்,புளியும் உப்பும் அதிகமாகச் சேருவதினாலும், மிகு மதுபானத்தினாலும், பகல் நித்திரையினாலும் உண்டாகும் என்றும் சொல்லுகின்றது. இவற்றுள், வாதபாண்டுமுதல் திரிதோஷபாண்டு ஈறாகிய நான்கும், முற்கூறியவைகளாதலால், அவை ஒழிந்த விஷபாண்டு ரோகத்தைமாத்திரம் எடுத்துக்கூறப்படும்.

விஷ பாண்டுரோகம்.

தேகமும் நகமும் வெளுக்குதல், நரம்புகளில் நோவு, காங்கை, தாகம், அரோசகம், விக்கல், வாந்தி,இருமல்,அதிகசுவாசம்,வயிறிரைச்சல், அதிசாரதோஷம், மிகுசுரம், மார்புகனத்தல், தேகவீக்கம் என்னும்

இக்குணங்களையுண்டாக்கும். இது அசாத்தியம். ஆயினும் சிகிச்சாசாரத்திற் கூறிய வசந்தகுசுமாகரம் முதலிய அவுஷதங்களால் சாத்தியமும்ஆகும்.

மதாந்தரமுற்றியது.

காமாலைரோகபேதம்.

வயிறு, வயிற்றில் ஒட்டியநரம்பு, சர்வநரம்பு என்னும் இம்மூன்று இடங்களை அநுசரித்துக் காமாலைரோகம்பிறக்கும். இது, வீக்கத்தை யுண்டாக்குமாயின், கும்பகாமாலைரோகம் எனப்பேர்பெறும்.

காமாலைரோகலக்ஷணம்.

பாண்டுரோகம் பிறந்திருக்கையில், பித்தாதிக்கவஸ்துக்களை மிகவும் புசிக்கில், காமாலைரோகம் உண்டாகும். அதன்விவரம்:—வயிற்றுக்குள் ஒட்டிக்கொண் டிருக்கும் நரம்புகளை அநுசரித்த பித்தமானது, ரத்த மாமிசங்களைத் தகித்து, காமாலைரோகத்தைப் பிறப்பிக்கும். இதனால் மூத்திரம் கண் சருமம் முகம் வாய் இவைகளில் மஞ்சள்நிறத்துடன் மல நாற்றம், தவளையின் சருமம்போன்ற தேகம், இதில்காங்கை, அசீரணம், தாகம், பஞ்சேந்திரியத்தன்மைகுன்றல், பித்தாதிக்கம் என்னுமிக்குணங்கள் உண்டாகும். இக்குணங்கள் பாண்டுரோகங்களுக்கும் உரித்தாகும்.

கும்ப காமாலைரோகலக்ஷணம்.

முற்கூறியகாமாலைரோகத்துக்கு, உடனே, பசும்பால், ஆட்டுமோர், எருமைமோர், நுரைசீரகக்கண்டு, நீலிகற்கோதனம், கீழ்வாய்நெல்லித் தயிலம், மஹாவசந்தகுசுமாகரம், மேகநாதரசம், நாராயணமண்டூர முதலிய அவுஷதங்கொண்டு தகுந்த வைத்தியஞ்செய்யவேண்டும். செய்யாவிடில், அது, வீக்கத்தையுண்டாக்கி, கும்பகாமாலைரோகம் எனப்பேர்பெறும். இதனை ஊதுகாமாலைரோகம் எனச்சொல்வர். இது கஷ்டசாத்தியம். காமாலை என்பது மாதர் இச்சையை ஒழிப்பதாம்.

மதாந்தரம்.

காமாலைரோகபேதம்.

பாண்டுரோக முதிர்ச்சியில், பித்தவஸ்துக்களைப் புசிப்பதாலும், புணர்ச்சியாலும், காமாலைரோகம்பிறக்கும். இது ஊதுகாமாலை, வரட்காமாலை வாதகாமாலை, பித்தகாமாலை, சிலேஷ்மகாமாலை, வாதசிலேஷ்மகாமாலை, பித்தசிலேஷ்மகாமாலை, திரிதோஷகாமாலை, மஞ்சட்காமாலை, அழுகுகாமாலை செங்கமலக்காமாலை, கும்பகாமாலை, குன்மகாமாலை என ௰௩ விதமாம்.

௧-வது ஊதுகாமாலைரோகம்.

சரீரம் வீக்கத்துடன்கனத்தல், திமிர், எரிச்சல், உலரல், உள்ளங்கை உள்ளங்கால் கண் சரீரம் இவைகளில் வெளுப்பு, கால்கைஓய்ச்சல், நடுக்கல்,

இளைப்பு, மலபந்தம், முகத்தில்மஞ்சள்நிறம், காதுமந்தம், சிரோபாரம், கண்ணிலும் வாயிலும் சலம்வடிதல், உளைப்பு,அதிகசீதளத்தால்வெப்பம், தலைசுழலல்,தயக்கம்,மஞ்சள்மூத்திரம் என்னும் இக்குணங்களுண்டாகும்.

உ-வது வறட் காமாலைரோகம்.

கால் கை வற்றல்,அசதி,மூத்திரமானது கறுத்தாவது சுடுகையுடன் சிவந்தாவது இறங்கல், சரீரத்தில் சூலைபோற்குத்தல், அருசி, பார்வை மந்தம், தேகங்கறுத்தல் என்னும் இக்குணங்களை யுண்டாக்கும்.

௩-வது வாத காமாலைரோகம்.

வயிறுபொருமல்,வீக்கம்,மலபந்தம்,சிலவேளைதேகம்வீங்குதலுடன் இளைதல், புறங்காலும் முகமும் அதைத்தல்,எந்தவேலையிலுஞ்சோம்பல், கண்பருத்தல், தூக்கம் என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.

௪-வது பித்த காமாலைரோகம்.

மயக்கம், தயக்கம், நித்திரைப்பங்கம், சரீரசுட்கம், படுக்கையாகக் கிடக்குதல்,அசீரணம்,வாதாதிக்கம்,அதிகசுவாசம்,சோறுசோறாகப்பேதி, வயிறிரைச்சல், அசதிஎன்னும் இக்குணங்களையுண்டாக்கும்.

௫-வது சிலேஷ்ம காமாலைரோகம்.

தலையிலும் முகத்திலும் வியர்வை, சுவாசம், இருமல், தேகநடுக்கல், மார்பு கனத்தல், தாம்பூலம் தரிக்குங்காலத்தில்செருக்கல், நடைதளரல், கண் சிவக்குதல் என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.

௬-வது வாதசிலேஷ்ம காமாலைரோகம்.

அசீரணம், செருமல், முகம் நாசி கண் இவைகளில்வியர்வை, வயிறிரைச்சலுடன்பொருமல், நாவும் கண்ணும் வெளிறல், நடந்தால் மேல்மூச்சு, தேகவீக்கம், இருமல் என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.

௭-வது சிலேஷ்மபித்த காமாலைரோகம்.

வாந்தி, செருமல், தலைவலி, மனக்கெடுதி, வயிறுப்பிசம், அசீரணம், பேதி, தாகம், நெஞ்சுபுண்ணாக நோதல், மயக்கம், முகம் கால்கைகளில் வெளுப்பு, தேகம் உலரல் என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.

௮-வது தொந்த காமாலைரோகம்.

தேகத்தில்எரிச்சல், கடுத்தல், அசதி, குளிர், அடிக்கடி இருமல், தாகம், புளியேப்பம், நாவெல்லாம் அதிபுளிப்பாக இருக்குதல், பசி, அடிவயிற்றில்வீக்கம், வியர்வை என்னும் இக்குணங்களை யுண்டாக்கும்.

௯-வது மஞ்சட் காமாலைரோகம்.

முகம் கால் கை உண்ணாக்குமூத்திரமாகிய இவைகளில் மஞ்சள்நிறம், முகத்தில்மினுமினுப்பு, சரீரமுழுதும்ஊதல்,தளர்ச்சி, அன்னத்துவேஷம்,

அழுகை, சுவாசத்தில் மஞ்சள்நாற்றம் வீசுதல், தாது நஷ்டம், மலபந்தம் என்னும் இக்குணங்களை யுண்டாக்கும்.

௰-வது அழகு காமாலைரோகம்.

சரீரவாட்டம் இல்லாமல் வெப்பத்துடன் மினுமினுத்தல், கைகால் அசதி, புருவம் கண் மூத்திரம் இவைகளில் மஞ்சள்நிறம், ஆண்குறியில் எரிவு, அசீரணம், உப்பிசம் என்னும் இக்குணங்களை யுண்டாக்கும்.

௰௧-வது செங்கமலக் காமாலைரோகம்.

தாமதகுணம், தேகந்தளர்தல், சோம்பல், மூத்திரம் சிவந்தாவது மஞ்சள் நிறத்தைப்பெற்றாவது அருகிஅருகி யிறங்கல், உடலும் நகமும் வெளிறலுடன் சுட்கித்தல், சுரம், உண்ணாக்கு நாவு உமிழ்நீர் இவைகளில் மஞ்சள்நிறம் என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.

௰௨-வது கும்ப காமாலைரோகம்.

தேகம் கண்டுகண்டாகவீங்குதல்,அடிக்கடி களை,தேகமும்சிறுநீரும் மஞ்சள்நிறமா யிருத்தல், மாலைக்காலத்தில் வியர்வைகாணல், வாதம் அதிகரித்தல், கண்சிவத்தல், சரீரஞ்சோருதல், மயிலுறக்கம்போலுறக்கம், இளகியமலம் என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.

௰௩-வது குன்ம காமாலைரோகம்.

அன்னசீரணகாலத்தி லடிவயிறுவலித்தல்,வாந்தி,கண்களில்மஞ்சள் நிறம், மஞ்சள்நிறத்துடன் குழம்பியமூத்திரம், வாய்வெளிறல், மனதிற்கு ஒன்றுந்தோன்றாமை, இருமல், இரைப்பு, மயிலுறக்கம்போ லுறக்கம் படுக்கையாகக் கிடக்கையிலும்புரளல் என்னுமிக்குணங்களையுண்டாக்கும்.

சாத்தியாசாத்திய காமாலைரோகநிதானம்.

பித்தகாமாலை, மஞ்சட்காமாலை, சிலேஷ்மகாமாலை, ஊதுகாமாலை, வறட்காமாலை, வாதசிலேஷ்மகாமாலை, பித்தசிலேஷ்மகாமாலை என்னும் இவ்வேழும் சாத்தியம்; மற்ற ஆறும் அசாத்தியம்.

மதாந்தரமுற்றியது.

அலிமுக பாண்டுரோகலக்ஷணம்.

பாண்டுரோகத்தில், முதற்பிரதானமாகச் சோபையே உண்டாகிப் பின்பு வாதமும் பித்தமும் அதிகரிக்குமாகில், சரீரம் நீலநிறம் அல்லது மஞ்சள்நிறமாகும்; அப்போது பிரமை, தாகம், மாதர்மேல்வெறுப்பு, அற்பசுரம், சோம்பல், துர்ப்பலம், அக்கினிமந்தம், வயிற்றளைவு என்னும் இக்குணங்களுண்டாகும். இது, நீலநிறத்தைத்தருதலால், அலிமுகப்பாண்டு ரோகம் எனப்பேர்பெற்றது. இதனைச்சிலர் அலசமென்றுஞ்சொல்வர். இதற்குப் பூர்வரூபம் வீக்கமே ஆம். இது கஷ்டசாத்தியம். இதற்குச் சோபைரோகச்சிகிச்சையுடன் வாதாரிபித்தாரி அவுஷதங்களும் உதவும்.

சோபை ரோகபூர்வரூபம்.

நரம்புகளில் வீக்கம் ஏறுகிறததியில், வாந்தியும் தேககனதியும் உண்டாகும். இதுவே சோபைரோகத்திற்குப் பூர்வரூபமாம். இதற்கு, ஊதல், அதைப்பு, சுரப்பு என மூன்றுபரியாய நாமங்களுண்டு. இதனைச் சோகை, சோவை எனவும் வழங்குகிறார்கள். சோபை என்பது வீக்கம்.

சோபை ரோகபேதம்.

சந்நிபாதசுரம், சித்தப்பிரமை, அற்பவிஷம் முதலியசிலவிஷங்கள் தேகத்தில்ஊறுதல்,சிறையிலிருக்குத லடிபடுதல்,நெடுந்தூரம்நடக்குதல், மலவாசம், நீர்க்கரைவாசம், சாம்பல் மண் இவைகளைத் தின்னுதல், ரத்தம்முறிதல் என்னும் இச்செய்கைகளினால், சோபைரோகம் பிறக்கும். இது வாதசோபை,பித்தசோபை, சிலேஷ்மசோபை, வாதபித்தசோபை, வாத சிலேஷ்மசோபை, சிலேஷ்மபித்தசோபை, திரிதோஷசோபை, அபிகாதசோபை, விஷசோபை என ஒன்பது விதப்படும். இவ்வீக்கம், நீளநீளமாகவும் முடிச்சு முடிச்சாகவும் பருமனாகவும் சர்வாங்கத்திலும் ஒரேகாலத்தில் வியாபித்தால், நிசசோபைரோகம் எனப்பேர்பெறும். இதுவேமுதல்முதல் ஒரு அவயத்தில்பிறந்து, பின்பு மற்ற அவயவங்களில் பரவுமாகில், ஆகந்துகசோபைரோகம் எனப்பேர்பெறும்.

க-வது வாத சோபைரோகம்.

கறுத்தும், சிவந்தும், சுருங்கியும், லேபனாதி சிகிச்சைகளுக்கு அதிகரித்தும், தீக்ஷண ஒத்திடத்துக்கடங்கியும் இருப்பதன்றி, பிடித்தால் மிருந்து அசைவதும், சிலவேளை கொஞ்சம் அசைவதும், இரவில் அற்ப நோவுள்ளதும், பகலில் அதிகநோவுள்ளதும், ரோமங்களுக்கு முறப்பைத் தருவதுமாயிருக்கும். இதனால் சரீரங்குலுங்குதல், சிலவேளை நருக்கித் துவைத்ததுபோ லிருக்குதல், சருமத்தின்மேல் கடுகரைத்துப் பூசினாற் போலும் எறும்பூருவதுபோலும் தோற்றுதல், உறங்குதல்போலிருத்தல், மனோதுக்கம், சிலவேளை சந்தோஷம் என்னுமிக்குணங்கள் உண்டாகும். இவ்வீக்கம் சீக்கிரத்தில்பிறந்து சீக்கிரத்தில்நீங்கும். அன்றியும் சரீரஞ் சுட்கித்து ரத்தநரம்புகளும்வெளுக்குதல், அசீரணம், துர்ப்பலம்,நடுக்கல் சுரத்துடன்தேகம்வெளிறல், உளைச்சல், மயிர்முனைகளெல்லாம் சிவத்தல், மந்தம்என்னும் இக்குணங்களுண்டாகுமென்பாருமுளர்.

உ-வது பித்த சோபைரோகம்.

மஞ்சள் சிவப்பு நீலம் என்னும் நிறங்களைப்பெற்றுத் தொடில் அசங்கியத்தையும் குளகுளப்பையும் ரோமங்களுக்குச்சிவந்தநிறத்தையும் கொடுக்கும். இதனால் சீதளவஸ்துவிலிச்சை, சிலவேளை வியர்வைகசிதல், உன்மத்தம்,பிரமை,துர்க்கந்தப்பேதிஎன்னும் இக்குணங்கள் உண்டாகும்.

இவ்வீக்கம், ஆரம்பத்தில் நடுமுதுகில் பிறக்கும்; பிறந்ததுபோலவே சீக்கிரத்தில்சாந்தமாம். அன்றியும் இருமல், எரிச்சல், இளைப்பு, தலைவலி, துர்ப்பலம், மயக்கம், கண் புருவம் மூக்குத்தண்டு ஆகிய இவ் இடங்களில் வேறுநிறம் என்னும் இக்குணங்க ளுண்டாகுமென்பாருமுளர்.

௩-வது சிலேஷ்ம சோபைரோகம்.

வெளுத்துக்கெட்டியாய் குளிர்ச்சியுடன்மினுமினுத் துவழுவழுத்து அசைவற்றிருப்பதுமன்றி, ஆயாசத்தையும், இரவிலதி உபத்திரவத்தையும், கொடுப்பதாய், காய்ப்பிடத்தால் கொஞ்சம் வசப்படுவதும், தருப்பைப் புல்லாலறுபடுவதும், ரத்தநரம்புகளைப் பிசின்போல்செய்வதும், தினவைத் தருவதுமாக இருக்கும்; இதனால், சருமமும், ரோமமும், வெளிறல், அருசி, வாந்தி, நித்திரை, அக்கினிமந்தம் என்னும் இக்குணங்கள் உண்டாகும். இவ்வீக்கம் தேகமுற்றிலும் எளிதில் அதிகரிக்கும்; எளிதில்வசப்படாது. அன்றியும் சரீரமுழுதும் சுறசுறப்பு, நித்திரைப்பங்கம், விழியில்அனல் வீசுதல், குரல்நோதல், அதிகபேதி, தலைகிறுகிறுப்பு, ரத்தஞ்சுரத்தலுடன் வீக்கம் என்னும் இக்குணங்களுண்டாகு மென்பாருமுளர்.

௪-வது வாதபித்த சோபைரோகம்.

வாதசோபை, பித்தசோபை இவ்விரண்டினாலும் உண்டாகிற துர்க்குணங்களையெல்லாம் ஒரேகாலத்தில் உண்டாக்கும்.

௫-வது வாதசிலேஷ்ம சோபைரோகம்.

வாதசோபை, சிலேஷ்மசோபை இவ்விரண்டினாலும் உண்டாகிற குணங்கள் எவ்வளவோ அவ்வளவையும் ஒரேகாலத்தில் உண்டாக்கும்.

௬-வது சிலேஷ்மபித்த சோபைரோகம்.

சிலேஷ்மசோபை, பித்தசோபை இவ்விரண்டினாலும் பிறக்கிற உபத்திரவங்களையெல்லாம் ஒரேகாலத்தில் உண்டாக்கும்.

௭-வது திரிதோஷ சோபைரோகம்.

வாதம்முதலிய மூன்றுசோபைகளுக்குள்ள குணங்களையெல்லாம் ஒரேகாலத்தில் உண்டாக்கும். அன்றியும், ஸ்திரிகளின்மேற்கோபம், சரீரத்தில் வீக்கத்துடனுபாதி, சுரம், அதிசாரம், வயிற்றிலும்ஆசனத்திலுங் கடுப்பு, அன்னத்திவேஷம், கை கால் துவளல், நடக்கையில் பெருமூச்சு, வாய்நீரூறல் என்னும் இக்குணங்களை யுண்டாக்கு மென்பாருமுளர்.

௮-வது அபிகாத சோபைரோகம்.

ஆயுதக்காயம், அடிபடல், பனிக்காற்று, எதிர்க்காற்று, சேங்கொட்டை பூனைக்காஞ்சொறி, ரசகந்தக பாஷாணவருக்கம், முள்ளு தைத்தல் முதலியவைகளாலுண்டாகி, சரீரம்முற்றிலும் வியாபித்து, தாம்பரநிறமும் தொட்டால் காங்கையும் உடையதாய், முன்புசொன்ன பித்தசோபை ரோகத்துக்குள்ள குணங்களையும் பெற்றிருக்கும்.

கூ-வது விஷ சோபைரோகம்.

விஷசெந்துக்கள் மேலேறுதல், அவைகளின்மூத்திரம் தெறித்தல், விஷமில்லாச்செந்துக்களின் கோரதந்த நகங்கள்படுதல், மல மூத்திர சுக்கிலத்தால்நனைந்த ஆடையுடுத்தல், சேங்கொட்டைமரமுதலிய விஷ மரங்களின்காற்றுப்படுதல், மருந்திடுதல் முதலியவைகளால் உண்டாகி, குளகுளப்பதும்,அசைவதும்,விரைவில்எரிச்சலைத் தருவதுமாகஇருக்கும்.

சாத்திய சோபை ரோகநிதானம்.

உபத்திரவம் இல்லாமல் வீக்கமாத்திரம் கண்டால், சுகசாத்தியம்.

அசாத்திய சோபை ரோகநிதானம்.

சரீரமுழுதும்பூசிறைப்போல்வியாபித்தவீக்கமானதுநெடுநாளாகியும் தொலையாமல் அதிக நோவைத்தருவதா யிருந்தாலும்: புருஷர்கட்கு, முதல்முதல் பாதத்திற்கண்டு, கன வுபத்திரவத்துடன் மேலேறினாலும்: மாதர்கட்கு, ஆரம்பத்தில்முகத்திற்கண்டதோமுகமாகக்கீழிறங்கினாலும்: புருஷர்க்காவது மாதர்க்காவது வயிறு குதம் அல்குல் ஆண்குறிஎன்னும் இவ்விடங்களிற்கண்டாலும்: இவ்வீக்கத்துடன்வாந்தி,சுரம்,மேற்சுவாசம் பேதி, அக்காலதில் குதம்வெளிப்பட்டு அதில் புழுவூருதல்போலிருத்தல் என்னும் இக்குணங்கள் உண்டானாலும்: வீக்கம்கண்டு வடிந்தவுடன் பேதியும் சுரமும்கண்டு, இவைநீங்கியபின்பு வீக்கம் ஏறினாலும்: துர்ப்பலகாலத்தில் பாதத்தைக் காத்திருந்த வீக்கமானது,அப்பாதமுதல் பெருந்தொடைப்பரியந்தம் அறுந்துவிழுந்துபோவதுபோல் கடுத்தலான உபத்திரவத்தைஉண்டாக்கி, முன்காலிற்சுரந்துகொண்டாலு மசாத்தியம். அன்றியும், முகம் கை கால் என்னும் இவ்விடங்கள் சுட்கித்து வீக்கம் ஏறினாலும், அல்லது தேகம்சுட்கித்துமுன்சொன்ன அவயங்களில் வீக்கம் ஏறினாலும், ஒருமாதத்திற்குள் மரணத்தைக்கொடுக்கும்.

மேற்கூறிய சோபைரோகங்களை, நீர்ப்பேதி, அடைகஷாயம், சங்கபாயாசம், சயாபாவனமேஷமூத்திரம், பிருங்கலிகுச பாவனலோகம், குடமண்டூரம்முதலிய அவுஷதங்களைக்கொண்டு நிவர்த்திசெய்யவேண்டும்.

விசர்ப்பி ரோகலக்ஷணம்.

முன்சொன்ன விஷசோபைரோக குணந்தவிர, மற்ற எட்டுவிதச் சோபைரோககுணங்களுடன் பலநிறக்கொப்பிளங்களையும், சுரரோக குணங்களையும் அடைந்து, தேகத்திற்கு உட்புறம் வெளிப்புறங்களில் ஒவ்வொருகாலத்திலாவது, இவ் இருபுறத்திலும் ஓரேகாலத்திலாவது பிறக்கும். இதுமர்மஸ்தானங்களைப்பற்றிச்சீக்கிரத்தில்பரவுதலால்,விசர்ப்பி ரோகம் எனப் பேர்பெற்றது. மர்மஸ்தானம் என்பதற்குவிவரம் கூக-வது பக்கத்தில்காண்க. அது ஆர்த்திரேய முனிவரது சாஸ்திரத்துணிபு.

விசர்ப்பி ரோகபேதம்.

விசர்ப்பியானது வாதவிசர்ப்பி, பித்தவிசர்ப்பி, சிலேஷ்மவிசர்ப்பி, திரிதோஷவிசர்ப்பி என ஏழுவிதப்படும். அன்றியும் க்ஷதவிசர்ப்பி என்ப தொன்றுண்டு, இவைகள் வயிற்றில் ஈரமில்லாதகாலத்தில் மட்டுப்படும்.

க-வது வாத விசர்ப்பி ரோகலக்ஷணம்.

உடம்பெங்கும் ஏககாலத்தில்தளதளப்பானவீக்கம், அவ்வீக்கத்தின் மேல் கறுத்த கொப்பிளங்கள் எழும்புதல், மிகுநோவு, சரீரம் அடித்துத் துவைத்ததுபோலிருத்தல், ஆயாசம், இரைப்பு, தாகம், வாதசுரத்துக்குள்ள குறி என்னும் இக்குணங்கள் உண்டாகும். இது வாதத்தால்பிறக்கும்.

உ-வது பித்த விசர்ப்பி ரோகலக்ஷணம்.

சரீரமுழுதும்விரைவில்வீங்குதல்அவ்வீக்கத்தின்மேல்மஞ்சள்நிறம் அல்லது சிவந்தநிறமுள்ள கொப்பிளங்கள்எழும்புதல், மிகுதுயரம், பித்த சுரக்குறி என்னும் இக்குணங்கள் உண்டாகும். இதுபித்தத்தால்பிறக்கும்.

௩-வது சிலேஷ்ம விசர்ப்பி ரோகலக்ஷணம்.

தேகமுழுதும் மினுமினுப்பான வீக்கம், அவ் வீக்கத்தின்மேல் வெளுத்தகொப்பிளங்கள் எழும்புதல், தினவு, சிலேஷ்மசுரத்துக்குள்ளகுறி என்னும் இக்குணங்கள் உண்டாகும். இது சிலேஷ்மத்தால்பிறக்கும்.

௪-வது வாதபித்த விசர்ப்பி ரோகலக்ஷணம்.

சோபை, சுரம், வாந்தி, மூர்ச்சை, பேதி, தாகம், பிரமை, எலும்பு நொறுங்கினதுபோல் நோதல், அக்கினிமந்தம், அரோசகம், அபத்திய வஸ்துக்களிலிச்சை, சரீரத்தில் செந்தணலைக்கொட்டினதுபோலெரிச்சல், இவ்வெரிச்சல்பிறந்த இடங்கறுக்குதல், அவ்வெரிச்சல் இல்லாதஇடத்தில் நீலநிறம் அல்லது ரத்தநிறமாயிருத்தல், நெருப்புக் கொப்பிளம்போல் சர்வாங்கத்திலும் கொப்பிளம்எழும்புதல், வாதாதிக்கத்தால் சரீரவேதனை, அறிவும் நித்திரையும்கெடுதல், சிலவேளைமேல்சுவாசம், விக்கல், பரிசமாகிய விஷயம் இன்மையால் பாயலென்றும் தரையென்றும் தெரியாமல்புரளல் என்னும் இக்குணங்கள் உண்டாகும். நெருப்புக் கொப்பிளங்கள்போல் கொப்பிளமும் எரிச்சலும் தருதலால், இதனை அக்கினிவிசர்ப்பி என்றும் சொல்லப்படும். ஆனால் இது, மனதையும் சரீரத்தையும் பற்றியதால், ரோகிக்குக் கிலேசமும், அறிவுகுறைதலும், அநித்திரையும் அதிகரிக்கும்.

ரு-வது வாதசிலேஷ்ம விசர்ப்பி ரோகலக்ஷணம்.

சிலேஷ்மத்தால் மறிபட்டவாயுவு, அச்சிலேஷ்மத்தையே நானுவித மாகப்பேதித்து, பலவுபத்திரவத்துடன் கொப்பிளங்களை யுண்டாக்கும்; அல்லது, ரத்ததாது விருத்தியடைந்தவனதுசருமம், நரம்பு, சன்னநரம்பு,

மாமிசமென்னும்இவைகளில்தங்கிய ரத்தத்தையாவதுபேதித்துத்தடிக்கப் பண்ணி, அதை நீண்டவடிவும், வட்டவடிவும், பருத்தவடிவும், சிறுத்த கொப்பிளவடிவும், புடைபோல்தடித்தவடிவுமாகத் திரட்டிவிடும். பின்பு அவைகள் ரத்தநிறத்துடன் மேலெங்கும் மாலையைப்போல் வரிசை வரிசையாக அதிக உபத்திரவங்களைத்தரும்படியான அனேககிரந்திகளாக எழும்பும்; அப்போது சருமஞ்சிவத்தல், சுரம், இரைப்பு, இருமல், பேதி, சரீரநோவு, வாயுலரல், விக்கல், வாந்தி, உள்ளெரிச்சல், சோருதல், மாறுநிறம், மூர்ச்சை, அக்கினிமந்தம் முதலிய குணங்களுண்டாகும். கிரந்திகளையுண்டாக்கலால், இது கிரந்திவிசர்ப்பியென்றும்சொல்லப்படும்.

சு-வது சிலேஷ்ம பித்த விசர்ப்பிரோகலக்ஷணம்.

இது, சுரம், மரத்தல், நித்திரை, சோம்பல், தலைநோவு, உடம்பிளைத்தல் திமிர்முறுக்கல், பிதற்றல், அரோசகம், பிரமை, மூர்ச்சை, அக்கினிமந்தம், அஸ்திகளில்நோவு, தாகம், பஞ்சேந்திரியங்களுக்குக் கனத்தல், சீதபேதி, தேகம்கொஞ்சம் ஊதல் என்னும் இக்குணங்களைப் பிறப்பித்து, நரம்பு களிலும் வியாபித்து, பின்பு ஆமாசயஸ்தானத்தில் இருக்கும் சீதத்தை ஏகதேசத்தில்அநுசரித்து, அவ்விடத்திற்கொஞ்சம்வேதனையையெழுப்பித் தங்கிக்கொண்டு, முதல், சரீரத்தில் காங்கையைக் கொடுத்துத் தடிப்புகளை யுண்டாக்கும்; அப்போது வீக்கத்தால் பாரித்தசரீரத்தின்மேல்கறுத்தும் வெளுத்தும்மினுமினுத்தும் அழுக்குநிறத்தைப்பெற்றும்அனந்தம்கட்டிக ளுண்டாகும். அவைகள், அதிகபிரயாசையின்மேல் பழுத்துடைவதுமன்றி, மிருதுர்ப்பலத்தையும் உபத்திரவத்தையும் செய்யும். மாமிசத்தைச் சேறுபோலழுகச்செய்து, சன்னநரம்பையும் ரத்தநரம்பையும்கலக்கும்படி யையப்பண்ணி மேலில் பிரேதநாற்றத்துடன் சேற்றைப் பூசினதுபோல் நிறத்தைக்கொடுப்பதால், இதனைப் பங்கவிசர்ப்பியென்றும் சொல்லப்படும். இதுவே நுணுக்காய்க்கிரந்தியாம். பங்கம் என்பது சேறு.

எ-வது திரிதோஷ விசர்ப்பிரோகலக்ஷணம்.

இது, வாதமுதலிய மூன்றுவிசர்ப்பிகளுக்குள்ளகு ணங்களைப்பெற்று, விரைவில சப்ததாதுக்களிலும்பரவும். இதனைச்சர்வவிசர்ப்பி என்பர்.

க்ஷத விசர்ப்பிரோகலக்ஷணம்.

ஆயுதமுதலியவற்றால் காயம்பட்டவர்கட்கு அவ்வுதிரங் கெட்டுத் தடிக்கும்போது வாத்திரவியச்சேர்க்கையால் விஷமித்த வாயுவானது ரத்தத்தில்தங்கியபித்தத்தையும்கோபிக்கச்செய்து, கொள்ளுப்பிரமாணங்க ளாய்க் கருநிறம் செந்நிறம் உள்ள கொப்பிளங்களை எழுப்பும். இதனால் சரீரவீக்கம், சுரம், நோவு, தாகம்முதலிய குணங்களுண்டாகும்.

சாத்திய விசர்ப்பிரோகநிதானம்.

விசர்ப்பிவியாதி ஏழுக்குள்,வாதவிசர்ப்பிமுதலியமூன்றும்சாத்தியம். தொந்த விசர்ப்பிகள் மூன்றும், மாமிசத்தை அழுகப்பண்ணுமலும் உபத்திரவத்தைக் கொடாமலும் இருக்கில், கஷ்டசாத்தியம்.

அசாத்திய விசர்ப்பிரோகநிதானம்.

திரிதோஷவிசர்ப்பியும், க்ஷதவிசர்ப்பியும் அசாத்தியம். அன்றியும் எந்தவிசர்ப்பியாவது மர்மஸ்தானங்களிலுள்ளநரம்பு,ரத்தநரம்பு, மாமிசம் இவைகளைச் சேற்றைப்போல் குழையப்பண்ணிக் கிரந்திகளை எழுப்பி அவைகளில் நின்றும் துர்க்கந்தச்சலத்தைப் பெருக்கினுலும், சரீரநோவு, அதிசளரிச்சல்,நிறமாறல்,சுரம்,மூர்ச்சை,பிரமை,வாயுலரல்,மார்புஅதிரல், பேதி, இருமல் என்னும் இக்குணங்களைச்செய்தாலும், அசாத்தியம்.

மேற்சொல்லிய விசர்ப்பிரோகங்கள் கடுக்காய்,மஞ்சள்,ஓமப்பொட்டும் சேர்ந்த கோமூத்திரத்தேட்டைமுதலிய அவுஷதங்களால்வசப்படும்.

மசூரிகை ரோகலக்ஷணம்.

முதல்முதல்,சுரத்தோடுங்கூடச்சிறுகடலைப்பிரமாணங்களை ஒத்துச் சர்வாங்கத்திலும் முத்துகளைப்போல் கொப்பிளங்கள் எழும்பும். இதனல் வாயுலரல், சரீரநோவு, கீல்கள் தளர்வதுபோலிருத்தல், அரோசகம், ரோமச்சிலிர்ப்பு,தலைநோவு,கண்ணோவு,மூக்கடைப்புஎன்னுமிக்குணங்கள் உண்டாகும். அன்றியும் சிற்சில குறிகளினல் விசர்ப்பி லக்ஷணமும், அக்கொப்பிளங்கள் ஒன்பதுநாள் பரியந்தம் காணுகின்ற கிரமமும், அவை களில் எட்டிப்பூவாசனையும் உண்டாகும். இது,கடலைப்பிரமாணத்தையும் அவ்வுருவத்தையும்பெற்றிருப்பதால்,மசூரிகைரோகமெனப்பேர்பெற்றது இதனை வசூரிரோகமென வழங்குவதும் அன்றி, கொப்பிள பேதங்களால் பெரியம்மை, சின்னம்மை, பனையேறி, தட்டை, பயறி, ராமக்கம் எனவும் வழங்குகிறர்கள். இது பாலராதிவிருத்தர்பரியந்தம்காணும். இந்தரோகம் எலும்பைப்பற்றிப்பிறக்கும்.

மசூரிகா என்பது கடலை.

மசூரிகை ரோகபேதம்.

மசூரிகையானது,வாதமசூரிகை,பித்தமசூரிகை,சிலேஷ்மமசூரிகை, வாதபித்தமசூரிகை, வாதசிலேஷ்ம மசூரிகை, பித்தசிலேஷ்ம மசூரிகை, திரிதோஷமசூரிகை,ஆகந்துகமசூரிகை,ரத்தமசூரிகை என கூ-விதப்படும். இவற்றுள், தொந்தம் ௩-ம் தள்ளி, ௬-விதம் எனவுஞ்சொல்வர்.

க-வது வாத மசூரிகைரோகலக்ஷணம்.

உடம்பெங்கும், கருநிறமானகொப்பிளங்களுண்டாகும். அவைகளில் அடிக்கடி உபத்திரவமும் நெய்கூடுவதுமாயிருக்கும்.

உ-வது பித்த மசூரிகைரோகலக்ஷணம்.

தேகத்தில்,எரிச்சலோடுங்கூடக்கடுகுபிரமாணங்களானகொப்பிளங்களுண்டாகும். அவைகளில், உடனே நெய் கூடுவதாயிருக்கும்.

ங-வது சிலேஷ்ம மசூரிகைரோகலக்ஷணம்.

சர்வாங்கத்திலும்,கருணைக்கிழங்கு முளைகளைப்போல் தடித்தகொப்பிளங்களுண்டாகும். அவைகளில் நாட்சென்று நெய்கூடுவதாயிருக்கும். இதனைச்சிலர் அசகரோகம் எனச்சொல்லுகிறார்கள்.

ச-வது வாதபித்த மசூரிகைரோகலக்ஷணம்.

வாதம்,பித்தம்என்னும்இருவிதமசூரிகை முத்துக்களும்கலந்திருக்கும்.

ரு-வது வாதசிலேஷ்ம மசூரிகைரோகலக்ஷணம்.

வாதம்,சிலேஷ்மம்என்னும் இருவிதமசூரிகைக்குறிகளும் இதிலுண்டாம்.

சா-வது சிலேஷ்மபித்த மசூரிகைரோகலக்ஷணம்.

சிலேஷ்மம்,பித்தம்என்னும் இருவிதமசூரிகைக்கொப்பிளங்களும்காணும்.

எ-வது திரிதோஷ மசூரிகைரோகலக்ஷணம்.

வாதம்முதலியமூன்றுமசூரிகைக்கொப்பிளங்களும் இதில்உண்டாகி, அவைகளில் அந்தந்தக்குணங்களும்பிறக்கும். இது கஷ்டசாத்தியம்.

அ-வது ஆகந்துக மசூரிகைரோகலக்ஷணம்.

இது,திரிதோஷமசூரிகைக்கொப்பிளங்களைப்போலவேயிருந்தாலும் அதைப்போல் ஒரேகாலத்தில் பிறக்காமல், முதல்முதல் ஒருஅவயவத்தில் பிறந்து, உடனே சரீரமுற்றிலும் வியாபிப்பதாயிருக்கும்.

கூ-வது ரத்த மசூரிகைரோகலக்ஷணம்.

மேலெங்கும் ரத்தநிறமானகொப்பிளங்களும் எரிச்சலும் உண்டாகும். இவைகளைச்சவுமியவிரோசனங்களினாலும்,வல்லாரை,செருப்படை, கருப்பூரவல்லி,நிலவேம்பு,இவைகளின்சுரசகஷாயகல்கசூரணங்களினாலும் தயிர், வெங்காயம், இளநீர்வழுக்கை, நெற்பொரி, பேயன்பழம், பனங் கற்கண்டுமுதலியதின்பண்டங்களினாலு முபசரித்துவசப்படுத்தவேண்டும்.

மதாந்தரம்.

ஆயுள்வேதபாஷியம், பாரத்துவாசம், காசிபம்என்கிற கிரந்தங்கள் மசூரிகைரோகம் எட்டுவிதமென்று சொல்லுகின்றன. அவையாவன ;— மசூரிகை,சரஷபிகை,அசகை,கோத்திரவம், கங்கு, விஸ்போடம், அபாகி, விசர்ப்பை என்பவைகளாம்; இவைகளைப் பலவிதப் பரீக்ஷையினாலும், அநுபவத்தினாலும் லக்ஷணத்தினாலும் நிதானிக்கவேண்டும்.

க-வது மசூரிகைரோகலக்ஷணம்

உடம்பில் கடலையைப்போல் சிறுத்தும் சிவந்தும் அடுக்கடுக்காகக் கொப்பிளங்கள்எழும்பும். இதனால்,சுரமும்வீக்கமும்தினவும்உண்டாகும்.

உ-வது சரஷபிகைரோகலக்ஷணம்.

கடுகைப்போல்நிறமும் உருவமும் உள்ளகொப்பிளங்கள் எழும்பும். இதனால் உடம்பில் எரிச்சலுடன்நோவும் ரத்தமூத்திரமும் உண்டாகும். இது கஷ்டசாத்தியம்.

சரஷபிகா என்பது கடுகு.

௩-வது அசகைரோகலக்ஷணம்.

பருத்தும் தடித்தும் ரணத்தைத்தருவதாய் அனேக கொப்பிளங்களெழும்பும். இதனால்கீல்களிலும் முகத்திலும்வீக்கமும், தாகமும், பிசுபிசுப்பானசலக்கசிவும் உண்டாகும். இது சிலேஷ்மபித்தத்தால் பிறக்கும்.

௪-வது கோத்திரவரோகலக்ஷணம்.

சர்வாங்கத்திலும், வரகுபோலக்கொப்பிளங்கள் எழும்பும். இதனால் ரத்தபித்த குணங்களுண்டாகும். கோத்திரவம் என்பது வரகு.

௫-வது கங்குரோகலக்ஷணம்.

சரீரமுழுதும் சாமைஎன்னும் ஒருவகைத்தானியத்தைப்போலவே கொப்பிளங்கள் எழும்பும். கங்கு என்பது சாமை.

௬-வது விஸ்போட மசூரிகைரோகலக்ஷணம்.

பாதமுதல் சிரசுபரியந்தம் நெருப்புக் கொப்பிளத்தைப்போலவே பெரிதுபெரிதாகக் கொப்பிளங்கள் எழும்பும். இதனால் சிலேஷ்ம குணங்களும் பித்தகுணங்களும் உண்டாகும். இது எளிதில்வசப்படாது.

௭-வது அபாகி ரோகலக்ஷணம்.

சரீரத்தில், தூரந்தூரமாக உலர்ந்ததுபோலும் கருகினதுபோலும் கொப்பிளங்களெழும்பும். இவைகள்நெடுநாளாகியும்இறக்கங்கொள்ளாமலே உபத்திரவத்தைச்செய்யும். இது அசாத்தியம்.

௮-வது விசர்ப்பை மசூரிகைரோகலக்ஷணம்.

மயிலிறகின் கண்ணைப்போல் பலநிறமானகொப்பிளங்களெழும்பும். இதனால், சரீரம் ஊரல், வீக்கம், சுரம், தாகம் என்னும் இக்குணங்கள் உண்டாகும். இதில் சிலேஷ்மகுணங்களும் ரத்தகுணங்களும்பிறக்கும்.

மதாந்தர முற்றியது.

அசாத்தியமசூரிகைரோகநிதானம்.

சகலமசூரிகைரோகங்களிலும், முத்துக்களென்கின்ற கொப்பிளங்கள் சீக்கிரத்தில்பிறந்து சீக்கிரத்தில்மறைந்தாலும், முதல்முதல், சிறுகடலைப் பருப்பைப்போல்கண்டு, கண்டமட்டில்இராமல் பவழக்குண்டுகளைப்போல் பருத்து, அந்தந்தமுகங்களில் குழிகள்விழுந்தாலும், மச்சங்களைப்போல் கருகிக்கறுத்தாலும், அசாத்தியமாம்.

ஒட்டுரோகபேதம்.

முன்பு சொல்லிவந்த மசூரிகைரோகங்களாவது, நமைச்சல்முதலிய சிரங்குகளாவது, அபஸ்மாரரோகமாவது, கண்ணோயாவது, ஒருவருக்குக் கண்டிருக்கையில், அவர்களைமற்றொருவர்தொடுதலாலும், பார்த்தலாலும், நினைத்தலாலும், அந்தரோகங்கள் இவர்களையும் ஒட்டுமென் றறிக. விஷூசிரோகங்களையும் ஒட்டுரோகமெனச் சொல்லுகிறார்கள்.

ஆறுவது ஆநாகரோகபடல முற்றியது.

உ

சுப்பிரமணியர் துணை.

ஸ்ரீ வாகடாமிர்தம்.

ஏழாவது

விஸ்போடரோகபடலம்.

விஸ்போடரோகலக்ஷணம்.

பித்தவஸ்துக்களினால் அதிகரித்த பித்தமானது, தனது உஷ்ண குணத்தினால், ரத்ததாதுவை மிகவும்கொதிப்பிக்கும்; அப்போது சுரம், எரிச்சல், உதடுலரல், சரீரநோவு என்னும் இக்குணங்கள் உண்டாவதும் அன்றி, சர்வாங்கமும் மறையும்படி சிறிதும் பெரிதுமாக அநேக கொப்பிளங்கள் எழும்பும். இது, பசுமூத்திரவிரேசனம், சீந்தில்நெய் முதலிய அவுஷதங்களால் விலகும். விஸ்போடம் என்பது அதிககொப்பிளம்.

விஸ்போடரோகபேதம்.

விஸ்போடரோகம் ஒன்றாயிருந்தாலும், இதில்வாதாதிகளின் விஷமத்தால், சீதபித்தம் என ஒருவிதரோகம்பிறக்கும். இதில்தங்கிய பித்தம் ஆமத்திற்கு வேறுபாட்டைச்செய்தலால், ஆமபித்தம், ஆம்லபித்தம் என இரண்டுரோகம்பிறக்கும். அன்றியும் க்ஷுத்திரமசூரி என்பது ஒன்றுண்டு.

சீதபித்தரோகலக்ஷணம்.

வாயுவானது, பித்தத்தையும், சிலேஷ்மத்தையும், அதன் அதன் மார்க்கங்களிற் செல்லவொட்டாமல் மறிக்குங்காலத்தில், உடம்பின்மேல் அகன்று பரவுவதாயும், வளையாகாரமாயும், ரத்தநிறத்தோடுங் கூடிய புடைகள் விஸ்தாரமாயெழும்பும். அவைகளில் இடைவிடாத நமைச்சல் உண்டாகும். இதனைத் தேன்கலந்த சிற்றாமணக்குநெய், ஐயரசு பஸ்மம் முதலிய அவுஷதங்களைக்கொண்டு நிவர்த்திசெய்யவேண்டும்.

ஆமபித்தரோகலக்ஷணம்.

பித்தமாத்திரம் அதிகரித்து, ஆமத்திற்சேர்ந்து அதையுமதிகரிக்கச் செய்து பலபல உபத்திரவங்களைப் பிறப்பிக்கும்; அப்போது தேகம் கறுப்பதுமன்றிப் பலநிறமான புடைகள் எழும்புதல், வியர்வை, மூர்ச்சை, தாகம், கோழைவாந்தி, தலைநோவு, மேலில் சுரவேகம்போல் இருத்தல், வயிறு மார்பு கண்டம் ஆகிய இவ்விடங்களில் எரிச்சல், ரசதாதுவற்றுதல் என்னும் இக்குணங்களுண்டாகும். இது, முலைப்பால்நெய், சந்தனாதிக் கிருதம்முதலிய அவுஷதங்களால் நீங்கும்.

ஆம்ல பித்தரோகலக்ஷணம்.

முற்கூறியரோகத்தில் ஆமத்தை விருத்தியாக்கிய பித்தமானது, ஒருவேளை, அதைமிகவுங்குறைத்து அவ்வாறேதானும்குறைந்துஅனந்தம் உபத்திரவங்களைப் பிறப்பிக்கும். இதனால், சரீரத்தில் வளையாகாரமான புடைகளும், பலவித ரூபநிறங்களைப்பெற்ற கொப்பிளங்களும்எழும்பும்; அப்போது அவைகளில் மாருத்தினவு, புளிப்பும் காரமுமானவாந்தி, அவ்வாறே ஏப்பம்வருவதுமன்றி வாயுமப்படியேஇருத்தல்,கண்டத்திலும் மார்பிலும் எரிச்சல்,மார்புஅதிரல்,தேகம்பாரிப்புடன்சுடுகை,அரோசகம், மூர்ச்சை, சோருதல், பிதற்றல், பிரமை, இரைப்பு, இளைப்பு, துக்கம், வாய்நோவு,கண்ணில் இருட்கம்மல் என்னும் இக்குணங்கள் உண்டாகும். இதற்கு, ஜயரசபஸ்மம்முதல் ஊனுங்கொடிக் கிருதமும் ஆகும்.

க்ஷுத்திரமசூரிகைரோகலக்ஷணம்.

பித்த சிலேஷ்மங்களினால், சர்வாங்கத்திலும் எரிச்சலோடுங்கூட வேர்க்குருபோலவே சிறிது சிறிதாக அநேககொப்பிளங்கள் எழும்பும். இந்தரோகத்தில், ஆதியில்சுரமும் அந்தத்தில்பேதியும் உண்டாகும். இதற்கு மசூரிகாரோகச் சிகிச்சைகளைச் செய்யவும்.

குஷ்டரோகபூர்வரூபம்.

குஷ்டரோகமானதுசரீரம்பளபளப்பு,மாறுநிறம்,மிகுகடினத்துடன் தடித்தசருமம், அச்சருமத்தின்மேல் தொட்டவிடத்தில்தினவு, வியர்வை, சிலவேளையில்லாமை,நோவு, எரிச்சல்,ரோமச்சிலிர்ப்பு, கொஞ்சங் காயம் படினும்பெரியரணமாகுதல், அதில்சுறுத்தஉதிரம்வடிதல், பேசும்போது கண்டம்வறளல், அதிநித்திரை,மிகுந்த ரணம்என்னும் இக்குணங்களையும், சீக்கிரத்தில்பிறந்து நெடுநாட் கழித்தும் ஆறாமல் குழிகள் விழுந்து கெட்டிப்பட்டுக்குத்தலைத்தருகின்றபலபலஉபத்திரவமுள்ளரணங்களையும் தனக்குப்பழையரூபமாகப் பெற்றிருக்கின்றது. இதுக்குக் குறைநோய் என்றும், பெருவியாதியென்றும் பேர்.

குஷ்டரோகபேதம்.

வாதம், பித்தம், சிலேஷ்மம், முத்தொந்தம், திரிதோஷம் என்னும் எழுவகைச்சம்பந்தத்தால் ௰௮-குஷ்டம்பிறக்கும். அதன்விவரம்:—வாதத்தால்,கபாலகுஷ்டமும்; பித்தத்தால், அவுதும்பரகுஷ்டமும்; சிலேஷ்மத்தால்,மண்டலகுஷ்டமும்,விசர்ச்சிகாகுஷ்டமும்; வாதபித்தத்தால், ருசிய ஜிம்மிகுஷ்டமும்; சிலேஷ்மபித்தத்தால்,சருமகுஷ்டமும்,ஏககுஷ்டமும், கிடிபகுஷ்டமும்,சித்மகுஷ்டமும், அலசகுஷ்டமும்; சிலேஷ்மவாதத்தால், விபாதிகாகுஷ்டமும்; திரிதோஷத்தால், தத்துருகுஷ்டமும், சதாருகுஷ்டமும்,புண்டரீககுஷ்டமும், விஸ்போடகுஷ்டமும்,பாமாகுஷ்டமும்,

சர்மதலகுஷ்டமும், காகசகுஷ்டமும்பிறக்கும். இவற்றுள் அவுதும்பரம், மண்டலம், ருசியஜிம்மிகம், புண்டரீகம், கபாலம், காகசம் என்னும் ஆறு குஷ்டங்களையும் மஹாகுஷ்டங்கள் என ஆயுள்வேதம் கூறுகின்றது.

க-வது கபாலகுஷ்டரோகலக்ஷணம்.

இதில், ரணக்கொப்பிளங்கள், சிறிது சிறிதாகக் கபாலத்தினது காந்தியைப்பெற்றும், தடித்தும், கறுத்தும், சிவந்தும், சுறசுறத்தும், மூகங்கள்வாடியும், ஒன்றையொன்றைச்சுற்றி அநேககொப்பிளங்களெழும்பி, ரணங்கள் ஆகும். அவைகளில் விஸ்தாரம்குழிகள் விழுவதும், சினைத் தண்ணீர் ஒழுகுவதும், அதில் ரோமங்கள் முளைப்பதும்,நோவும் தினவும் பிரபலப்படுவதுமாக இருக்கும். இது, கபாலம்போல்வெளுத்தநிறத்தைப் பெற்றிருப்பதால், கபாலகுஷ்டம் எனப்பேர்பெற்றது. இது விரைவில் விருத்தி ஆகும்.

உ-வது அவதும்பரகுஷ்டரோகலக்ஷணம்.

இதில், கொப்பிளங்கள், அத்திப்பழத்தையொத்து விஸ்தரித்துச் சீக்கிரத்தில்பிறந்து நசுங்கி, குழிவிழுந்த ரணங்களாகும். அவைகளில் வெளுத்த நரம்புகள் நிறையப்படுவதும், சிவந்தரோமங்கள் முளைப்பதும், சினைத்தண்ணீரும் உதிரமும் ஒழுகுவதும், புழுக்கள்ஊறுவதும், இதனால் தினவும் நோவும் எரிச்சலும் பிரபலப்படுவதுமாக இருக்கும். அன்றியும், சரீரம் உலர்ந்துகறுத்தல்,உளைச்சல்,சருமந்திரைந்து தொங்குதல், அதிக மயக்கம்என்னு மிக்குணங்களுண்டென்பாருமுளர். இது,அத்திப்பழத்தை ஒத்ததால், அவுதும்பரகுஷ்டம் எனப்பேர்பெற்றது.

ஙு-வது மண்டல குஷ்டரோகலக்ஷணம்.

இதில்,கொப்பிளங்கள்,நிலைபெற்றும்கனத்தும்வெளுத்தும்சிவந்தும் மினுமினுத்தும், வட்டவட்டமாகத் தாமதத்தின்மேல் நாளுக்கு நாள் விருத்தியடைந்தும் துரிதமாக எழும்பி, உடைந்து ஒன்றோடொன்று சேர்ந்துகொண்டு, மண்டலாகாரமான ரணங்களாகும். அவைகளில், புழுக்கள்நெளிவதும், நமைச்சலும்நோவும் அதிகரிப்பதும், தொடில் வழுவழுப்பாகத் தோற்றுவதும், சீழ் ஒழுகுவதுமாக இருக்கும். அந்த ரணத்தைச்சுற்றிலும் மஞ்சள்நிறமான சருமம் உண்டாகும். அன்றியும் சிரசிலும்சர்வாங்கத்திலும்பச்சைவன்னமாயும்ரத்தவன்னமாயும்தோற்றல் ஒருவேளை சிரசில்மாத்திரம்வெளுப்பு, ரணங்கள்தடித்துக்கறுத்தல்,அதில் ரத்தம்வடிதல் என்னும் இக்குணங்கள் உண்டென்பாருமுளர். இது, வளையாகாரமாக இருப்பதால், மண்டலகுஷ்டம் எனப்பேர்பெற்றது.

சு-வது விசர்ச்சிகா குஷ்டரோகலக்ஷணம்.

இதில், கொப்பிளங்கள், கறுப்புநிறமாக எழும்பி, பின்பு உடைந்து ரணங்களாகும். அவைகளில், சினைத்தண்ணீ ரொழுகுவதும், அதிகவூரல்

உண்டாவதுமாகஇருக்கும். அன்றியும் எண்ணெய்யைத் தடவினதுபோல் இருத்தல், வெளிறல், எரிச்சல், வேதனை, சிவந்ததடிப்பு, சருமமெல்லாம் உரத்தலுடன்சிவத்தல்,சுறசுறப்பு,வயிற்றிசிவு, சஞ்சலம், கோபம்என்னும் இக்குணங்கள் உண்டென்பாருமுளர். இது, சொறிவதற்கே நினைப்பை யுண்டாக்கலால், விசர்ச்சிகாகுஷ்டம் எனப்பேர்பெற்றது.

ரு-வது ருசியஜிம்மிக குஷ்டரோகலக்ஷணம்.

இதில், கொப்பிளங்கள்,முள்ளுகளைப்போல் மெல்லியதாய் நீண்டும், பிசுபிசுத்தும்சுறசுறத்தும்உள்ளில்கறுத்தும்முனையிற்சிவந்தும்நெருக்கமாக எழும்பி, ரணங்களாகும். அவைகளில் புழுக்கள்நெளிதலும், நோதலும், எரிச்சலுமுண்டாம். சிலவேளை நோவுமாத்திரம் இருந்தாலும் இருக்கும். இது, கடமை என்னும் ஒரு மிருகத்தின் நாக்குப்போல் நிறம் உள்ளதால், ருசியஜிம்மிககுஷ்டம் எனப்பேர்பெற்றது. ருசியம் என்பது கடமை.

சு-வது சர்மகுஷ்டரோகலக்ஷணம்.

இதில், தோலானது, மஞ்சள்நிறமாயும் சிவந்தநிறமாயும் மீன்களின் செதிளையொத்துச் சுறசுறத்துத்தடித்து,கிள்ளினல் உபத்திரவமில்லாமலும் காயம்பட்டால்தெரியாமலும் இருக்கும்.இதனு லடிக்கடி சர்வாங்கத்திலும் வியர்வை உண்டாகும். அன்றியும் சருமம் பசுமை வெண்மை கருமை என்னும் இவ்வன்னங்களாகித் தினவுடன்தடித்தல், அதில் சீழ்வடிதல், வயிற்றிலும் கடிகஸ்தானத்திலும் சொறி உண்டாகுதல், எரிச்சலுடன் காங்கை, வயிற்றிற்கண்டிப்பு என்கிற துண்டுதுண்டாகியதடிப்புஎன்னும் இக்குணங்கள் உண்டென்பாருமுளர். இதனை, மேகப்புடையென்றும் திமிர்வாயுவென்றும் வழங்குகிறார்கள். சருமம் என்பது தோல்.

எ-வது ஏகசர்ம குஷ்டரோகலக்ஷணம்.

இதில்; சரீரத்தின்சர்மமெல்லாம் யானையின்துதிக்கைச் சருமம்போல் தடித்துக்கெட்டிப்பட்டு பிருவுடன் சுறசுறத்துப் பார்ப்பதற்கு விகாரமாயிருக்கும். இதனல் வியர்வும், கைவிரல் கால்விரல் குறுகிக்குறைதலும் உண்டாகும். அன்றியும் தேகமுழுதும் தோலுரிந்துசிவத்தல்,வறவறப்பு, சொறி, தினவு, திமிர், கால்விரல்கள்கனத்தல், சர்வாங்கத்திலும் வீக்கம் என்னும் இக்குணங்களுண்டென்பாருமுளர். இது,எல்லாச்சருமத்தையும் தடிக்கச்செய்தலால், ஏகசர்மகுஷ்டம் எனப்பேர்பெற்றது. இதனைச் சடைக்குஷ்டம், யானைக்குஷ்டம், பெருவியாதி எனவுஞ்சொல்வர்.

அ-வது கிடிபகுஷ்டரோகலக்ஷணம்.

இதில்,கொப்பிளங்கள்,சுடுகையுடன்எழும்பி,ரணங்களாகும். அவைகளில் அதிக நமைச்சலிருப்பதினல்,சொறிந்தஇடத்தில், காய்ப்பேறினது போலச் சுறசுறத்துத் தடிப்புகள் உண்டாகும். அன்றியும் சர்வாங்கமும்

பச்சைநிறம்,கனத்தல்,யானைத்தோலைப்போலிருத்தல்,அடிக்கடிநீரிறங்கல், தேகத்தில்சினைத்தண்ணீர்வடிதல்,நாற்றம்,வாதாதிக்கம்என்னுமிக்குணங்களுண்டென்பாருமுளர். இது, பன்றிமாமிசத்தோலைப்போல் இருப்பதால், கிடிபகுஷ்டம் எனப் பேர்பெற்றது. அன்றியும் மரங்களில் காயம் உண்டாகும்படி கொத்துகின்ற கிடிபப்பட்சியைப்போல் ரணத்தைப் பிறப்பிப்பதால், கிடிபகுஷ்டம் என்றுஞ் சொல்லப்படும்.

கூ-வது சித்மா குஷ்டரோகலக்ஷணம்.

இதில், மிகவும், புடைகள் பெரும்பான்மையும் ஊர்த்துவகாயமான நாபிக்குமேல் கொஞ்சம் வெளுத்தசிவப்புடன் பாலைப் பூவைப்போல் பிறக்கும். அவைகளின்மேல் மினுமினுப்பும், சொறிந்தால் சருமத்தூள் விழுவதும், அவ்விடங்களில் வழுவழுப்பதும், காங்கை யுண்டாவதுமாய் இருக்கும். அன்றியும், சுரைப்பூநிறமாகச் சரீரமுழுதும்திமிருடன்தடித்தல், மஞ்சள்நிறம், அதில்ரத்தங்கசிதல்,சகிக்கவொண்ணாததிமிர்,மறதிஎன்னும் இக்குணங்களுண்டென்பாருமுளர். சித்மா என்பது புடைகள்.

௰-வது அலச குஷ்டரோகலக்ஷணம்.

இதில், ரத்தநிறமாக ஆற்றிற்கிடக்கும் சிறுசிறு கூழாங் கல்லுகளை யொத்த கொப்பிளங்கள் விஸ்தாரம்பிறந்து உடைந்து ரணங்களாகும். அவைகளில் அதிக நமைச்சல் உண்டாயிருக்கும்.

௰க-வது விபாதிகா குஷ்டரோகலக்ஷணம்.

இதில்,சிவந்தநிறமாயும்கடினமாயும் கால்களிலும் கைகளிலும் அதிக கொப்பிளங்களுண்டாகி ரணங்களாகும். அவைகளில்,மிக்கஉபத்திரவமும் அற்பநமைச்சலு முண்டாயிருக்கும். அன்றியும் தேகத்தில்வெடித்தலுடன் சகிக்கக்கூடாத அருவருப்பு, மிகுகாங்கை, கை கால் கண் காது கண்டம் இவைகளில்வெடிப்புடன்வீக்கம்,சர்ப்பத்தையொத்த தேககாந்திஎன்னும் இக்குணங்களுண்டென்பாருமுளர். இது,பாதத்தைவெடிக்கச்செய்தலால் விபாதிகா குஷ்டம் எனப்பேர்பெற்றது.

௰உ-வது தத்துரு குஷ்டரோகலக்ஷணம்.

இதில், முதல்முதல் மண்டலாகாரமான கொப்பிளங்கள் எழும்பி, பின்பு நசுங்கி, கறுப்பு அகத்திப்பூ நிறத்தைப்பெற்ற ரணங்களாகும். அவைகள், சரீரமுற்றிலும் அறுகம்புற்கணுக்களைப்போல் தூரந்தூரமாகப் பிறந்து, அதிக நமைச்சலை யுண்டாக்கிக்கொண்டே யிருக்கும். அன்றியும் தேகத்தில் சிவந்ததடிப்பு,வெளிறல்,அதிகரோமம்முளைக்கினும் அவைகள் சுருளுதல், பித்தசிலேஷ்மாதிக்கம்,ஊதலுடன்திமிர் என்னுமிக்குணங்கள் உண்டென்பாருமுளர். தத்துரு என்பது தடிப்பு.

௰௩-வது சதாரு குஷ்டரோகலக்ஷணம்.

இதில், சிவந்தும் கறுத்தும் அடியகன்றும் அநேக கொப்பிளங்கள் எழும்பி, சர்வாங்கத்திலும் பரவப்பட்ட ரணங்களாகும். அவைகளில் எரிச்சலும்நோவும் கிருமியும் அதிகரிக்கும். இதனால் மிகுந்ததுக்கமும் உண்டாகும்; அன்றியும், ரத்தம் பீதம் வெண்மை என்னும்நிறங்களுடன் தடிப்பானரணங்கள்பிறக்கும்அவைகளில்எரிச்சலுடன்தினவு,கரடுகட்டல் சருமம் பாம்புத்தோலைப்போல் திரைந்துதொங்குதல், நாசி கண் காது கன்னம் ஆகிய இவைகளில்மிகுதடிப்பு, வாதசிலேஷ்மாதிக்கம் என்னும் இக்குணங்கள் உண்டென்பாருமுளர். இது,விருட்சங்களில் உண்டாகின்ற கணுக்களையும் யோறையையும் நிகர்த்த ரணத்தைப் பிறப்பிப்பதால், சதாருகுஷ்டம்எனப் பேர்பெற்றது.

௰௪-வது புண்டரீக குஷ்டரோகலக்ஷணம்.

இதில், கொப்பிளங்கள், மிகவுமுயர்ந்து முனையில்ரத்தநிறம், நடுவில் வெண்மைநிறம் உள்ளதாய், அரிப்பையுண்டாக்கிக்கொண்டே எழும்பி, தாமரைப்புஷ்ப நிறத்தையொத்த ரணங்களாகும். அவைகளில் நோவு, எரிச்சல்,நமைச்சல்அதிகரிப்பதும்,தாமரையிலைச்சலம்போலரத்தமானது ஒட்டாமல்நிற்பதும், குழம்பான சினைத்தண்ணீர் ஒழுகுவதும், பின்பு குபீரென்று ரத்தம் சொரிவதுமாயிருக்கும். அன்றியும் சரீரம்முகம் கால் இவைகளில் பலவன்னமான ரணம், தினவு, பன்னீர்போலச் சலம்வடிதல் என்னும் இக்குணங்க ளுண்டென்பாருமுளர். இதனைப் படர்தாமரை என்றுஞ்சொல்வர்.இது அசாத்தியம்.புண்டரீகம்,என்றதினால்,புலித்தோல் நிறத்தை ஒத்த புடைகள் உண்டாகும் என்பது சிலர் சம்மதம்.

௰௫-வது விஸ்போட குஷ்டரோகலக்ஷணம்.

இதில், கொப்பிளங்கள்,சிவந்தும்வெளுத்தும் விஸ்தரித்துஎழும்பி, ரணங்களாகும். அவைகளில் தினவும், எரிச்சலும் உண்டாகும். இதில் சருமம் மிகவுமிருதுவாக இருக்கும். அன்றியும் விஷ எரிச்சலையொத்த எரிச்சல், சருமந் தடித்தலுடன்வெளிறல், ஒருவேளைசிவத்தல், துக்கம் என்னும் இக்குணங்களுண்டென்பாருமுளர்.

௰௬-வது பாமா குஷ்டரோகலக்ஷணம்.

இதில், கொப்பிளங்கள், கறுத்தும் சிவந்தும், சிறுத்தும் பருத்தும், அடத்திஅடத்தியாக, இரண்டு முன்கைகளிலும், முழங்கால்களிலும், தொடைகளிலும் எழும்பி, ரணங்களாகும். அவைகளில் நோவும், வறவறப்பும் மிகுதினவும்,சினைத்தண்ணீர்க்கசிவும்உண்டாகும். அன்றியும் வெண்மையாய்த் தாமரைமுகிழையொத்த கொப்பிளங்கள் எழும்புதல், அவைகளில் எரிச்சல், சருமம் விரிதலுடன் வீக்கம், கால் கை குறைதல் என்னும் இக்குணங்களுண்டென்பாருமுளர். பாமா என்பது சிரங்கு.

௰௭-வது சர்மதல குஷ்டரோகலக்ஷணம்.

இதில், கொப்பிளங்கள்பிறக்கும் ஸ்தானங்களில் சிவந்தநிறமும், அதிகதினவும், தொடக்கூடாதநோவும் உண்டாகி, பின்பு கொப்பிளங்கள் எழும்பி, ரணங்களாகும். அவைகளில் குத்தலும் எரிச்சலும்உண்டாகும். அன்றியும்தேகத்தில்கீற்றுக்கீற்றாகவெடித்தல்,வேதனை,தொடக்கூடாமை அதில்ரத்தம்வடிதல், வயிற்றுவலி என்னும் இக்குணங்களுண்டென்பாருமுளர். சர்மம் என்பது தோல்; தலம் என்பது இடம்.

௰௮-வது காகச குஷ்டரோகலக்ஷணம்.

இதில், கொப்பிளங்கள், பிறக்கும்போது சிவந்தநிறத்துடன் பிறந்து, பின்பு கறுப்பாகி, கிரும்புமொக்கின் உருவத்தைப்பெற்று உடைந்து, ரணங்களாகும். அவைகளில் அதிக எரிச்சலும் நோவும் உண்டாயிருப்பதன்றியும், சமஸ்த குஷ்டகுணங்களும் பலநிறங்களும் உண்டாயிருக்கும். இது, காக்கையின்பிறப்பைப்போல் முதலில்சிவந்து பின்பு கறுப்பதால், காகசகுஷ்டம் எனப்பேர்பெற்றது.

மேற்சொல்லிவந்த குஷ்டங்களைத் தோஷாதிபேதபடலத்தில் விருத்திரத்ததாதுவிற்சொன்ன குணங்களினாலும், பூர்வரூபத்திற் சொல்லிய லக்ஷணங்களினாலும் கூர்ந்தறியவேண்டும்.

அசாத்திய குஷ்டரோகநிதானம்.

ஒவ்வொரு தோஷங்களால் பிறந்தகுஷ்டரோகங்களில், இன்னொரு தோஷஞ்சேர்ந்து தொந்தமானாலும்,மூன்றுதோஷஞ்சேர்ந்து திரிதோஷமானாலும், அசாத்தியம். அன்றியும் எவ்விதக் குஷ்டரோகிகட் கேனும் சரீரமெல்லாம் அழுகும்படியானரணங்கள்பிறந்து, அவைகளில் கிருமிகள் நிறைந்து, இரண்டு கண்களுங் கோவைப் பழம்போலச் சிவந்து, வேற்றுக்குரலும் அக்கினிமந்தமும் அதிசாரமும் தாகமும் உண்டாகில், அசாத்தியமே. இக்குணங்கள் இல்லாதிருக்கில், சாத்தியம்.

மேற்கூறிய குஷ்டங்களைச் சிவனார்வேம்புச்சூரணம், சிவனார்வேம்புத் தயிலம்,துத்திரசவுண்டை,கந்தகத்தயிலம்,திரிரசபஸ்மம்,தாம்பரபஸ்மம், குஷ்டகஜகேஜரிமாத்திரை முதலிய அவுஷதங்களைக்கொண்டு விலக்கவும்.

மதாந்தரம்.

மேற்சொல்லியகுஷ்டம்-௰௮-ல், கபாலம், ருசியஜிம்மிகம், காகசம், அலசம் என்னும் இந்நான்கு குஷ்டங்களுக்கும்வேறாக, கர்னகுஷ்டம், கிருஷ்ணகுஷ்டம்,அபரிசகுஷ்டம்என்னும்மூன்றுடன் வெண்குஷ்டத்தையும்சேர்த்து ௰௮-ஆகச்சிலமதாந்தரத்தில்கூறப்படுகின்றன. அந்நான்கில், வெண்குஷ்டம் ஒழிந்தமற்றமூன்றையும் எடுத்துக்காட்டப்படும்.

கர்னகுஷ்டரோகலக்ஷணம்.

இதில், சருமத்தில் பச்சை வன்னத்துடன் பொரிப்பொரியாக வெடிக்குதல்,திரிதோஷாதிக்கம்,தேகம்பாரித்துதிமிருடன்காக்கட்டான்பூ நிறமாகத் தோற்றுதல், தண்டிப்பு, வீக்கம், சிலேஷ்மாதிக்கம் என்னும் இக்குணங்களுண்டாயிருக்கும்.

கிருஷ்ண குஷ்டரோகலக்ஷணம்.

இதில், சர்வாங்கமும் கறுக்குதல், சருமத்தில் திமிருடன் நாற்றம் வீசுதல், நோதல், சப்ததாதுக்களும் உஷ்ணமாயிருத்தல், அரையிலும் புறங்காலிலும் கொஞ்சமாகவும் சிரசில் அதிகமாகவும் ரணங்காணுதல், புத்திசஞ்சலமுறுதல் என்னும் இக்குணங்களுண்டாயிருக்கும்.

அபரிச குஷ்டரோகலக்ஷணம்.

இதில், சர்வாங்கத்திலும் கறுத்தரத்தம்வடிதல், நோவு, தொடக்கூடாமை, வாதாதிக்கத்தால் அதிரல், உபத்திரவம், வீக்கம், வெடிப்பு என்னும் இக்குணங்களுண்டாயிருக்கும்.

மதாந்தரமுற்றியது.

வெண் குஷ்டரோகபேதம்.

தேகத்தில் விகாரமானவெளுப்பை உண்டாக்குகின்ற வெண்குஷ்டரோகமானது வாத வெண்குஷ்டரோகம், பித்த வெண்குஷ்டரோகம், சிலேஷ்மவெண்குஷ்டரோகம் என மூன்றுவிதப்படும்.

வாத வெண்குஷ்டரோகலக்ஷம்.

இது சுறசுறத்துச் சிவந்து கொஞ்சம் கருமைச்சாயலுடன் வெளுத்திருக்கும். வெளுக்காத இடங்களில் அழுக்குநிறம் உண்டாகும்.

பித்த வெண்குஷ்டரோகலக்ஷணம்.

இது செந்தாமரைப்பூவிதழ்போல் சிவந்தவெளுப்பாகப் பரவும். அவ்விடங்களில் எரிவதும் ரோமங்கள் உதிருவதுமாக இருக்கும்.

சிலேஷ்ம வெண்குஷ்டரோகலக்ஷணம்.

இது தும்பைமலரைப்போல் வெண்மையாகவெளுத்துக் கொஞ்சந் தடித்துப்பரவும். இதுபரவுமிடங்களில் நமைச்சலுண்டாகும். இக்குஷ்டங்கள், ரத்ததாதுவையும் மாமிசதாதுவையும் மேதோதாதுவையும் பற்றும்போது, கண்ணுக்கு அசங்கியமான நிறங்களையுண்டாக்கும். அன்றியும் இவைகளினால் தேகத்தில் வெடிப்பும் வீக்கமும் உண்டென்பாருமுளர்.

சாத்திய வெண்குஷ்டரோகநிதானம்.

ரோமங்களைவெளுக்கப்பண்ணுமலும், கையால் தடவில்மேடுபள்ளம் இல்லாமலும், சடைப் பின்னல்போலும், அக்கினியால் சுட்டாறிய வடுப்போலும் வெளுக்காமல் இருக்கிறவெண்குஷ்டம்சாத்தியம். அன்றியும், மூவிதவெண்குஷ்டங்களும் ஒன்றுக்கொன்று கஷ்டசாத்தியமாம்.

அசாத்ய வெண்குஷ்டரோகநிதானம்.

எந்தவெண்குஷ்டமானாலும் முற்கூறிய சாத்தியக்குறிக்கு மாறாகவிருந்தாலும், முதல்முதல், குதம், குய்யம், உள்ளங்கை, உதடு என்னும் இவ்விடங்களில்பிறந்து, கோரமாகச் சீக்கிரத்தில்பரவினாலும், அசாத்தியம்.

இதுகளுக்கு, கஜசார்த்தூலவறமாஞ்சனம், மகிஷபல்லாதகிக்கிருதம் முதலியமருந்துகளும், குஷ்டரோகச் சிகிச்சைகளும் ஆகும்.

கிருமிரோகபேதம்.

நான்கு ஸ்தானங்களைப்பற்றி, இருபதுவிதப்பூச்சிகள் உண்டாகும். அந்நான்குஸ்தானங்களாவன:-சரீரத்தின்மேலழுக்குகள்சேர்ந்தஸ்தானம்; சரீரத்திற்கு உள்ளில், சிலேஷ்மஸ்தானம், ரத்தஸ்தானம், மலஸ்தானம். இவ்விடங்களில் பிறக்கின்ற பூச்சிகளையும், இவைகளால் உண்டாகும் ரோகங்களையும், இதனடியிற்காண்க.

* பாகிய ¶ மலக்கிருமிலக்ஷணம்.

முன்சொன்ன நான்குஸ்தானங்களில், ஒருஸ்தானமாகிய சரீரத்தின் மேல்சேருகின்ற அழுக்கினால், † யூகா, ‡ லீட்சாஎன இருவிதப்பூச்சிகள் பிறக்கும். இவற்றுள், யூகாஎன்னும்பூச்சி, ரோமஸ்தானத்தில்எள்ளுப்போல் உருவமும், அந்நிறமும், மிகுந்தகால்களுமுடையதாய்ப்பிறந்துசஞ்சரிக்கும். இது கடிப்பதினால், சிறுசிறு மச்சங்களும் வேர்க்குருப்போல் அணுக் கொப்பிளங்களும் உண்டாகும். இதுநிற்க, லீட்சா என்னும்பூச்சி, அழுக்கு வஸ்திரங்களில்வெளுத்தஎள்ளினதுரூபவன்னங்களை உடையதாய்ப்பிறந்து சஞ்சரிக்கும். இதுகடிப்பதினால், சிறுதடிப்புகளும், தினவும் உண்டாகும்.

அந்தர் மலக்கிருமிலக்ஷணம்.

கபத்திலும் உதிரத்திலும்பிறக்கின்ற கிருமிகளுக்கும், மதுரான்னம், வெல்லம், பால், தயிர், மாவு, மழைத்தண்ணீர் என்னும்இவ்வஸ்துக்களைத் தின்னுவதால்பிறக்கின்ற கிருமிகளுக்கும், அந்தர்மலக்கிருமிகள்என்றுபேர். இவைகளால், குஷ்டரோகம்பிறக்கும். அந்தர் என்பது உள்.

சிலேஷ்ம மலக்கிருமிரோகலக்ஷணம்.

பின்சொல்லப்படுகிறமலக்கிருமிப்பிறப்பைப்போல், சிலேஷ்மத்தால், ஆமாசயஸ்தானத்திற்பிறந்து, விருத்தியாகிஉள்ளில்சஞ்சரிக்கின்றகிருமிகள் ஏழுவிதப்படும். அவையாவன:—பெரும்பூநாகக்கிருமி, நீர்ப்பாம்புக்கிருமி, நெல்முளைக்கிருமி, சன்னநீளக்கிருமி, அணுக்கிருமி, வெண்கிருமி, செங்கிருமி என்பவைகளாம். இவைகள் தனித்தனியே பெருங்கூட்டமாய், காலில்லா மலும்வட்டமாகச்சுற்றியநூலைப்போலும், பார்வைக்குத்தோற்றுமல் அணுப் போலும், தருப்பைப் பூவாசனையைப்பெற்று, குடலில் சுற்றிக்கொண்டு மார்புமட்டும் ஏறி அதிகவுபத்திரவங்களை யுண்டாக்கும்; அப்போது மார்புஅதிரல், வாய்நீரூறல், அசீரணம், அரோசகம், மூர்ச்சை, வாந்தி, சுரம் என்னும் இக்குணங்கள் உண்டாகும். இதுகபத்தால்பிறக்கும்.

---

* பாகியம் என்பது மேல்; ¶ மலம் என்பது அழுக்கு; † யூகா என்பது பேன்; ‡ லீட்சா என்பது சீலைப்பேன்.

ரத்தக்கிருமிரோகலக்ஷணம்.

முற்கூறிய மதுரான்னம் முதலியவஸ்துக்களினால் ஜனித்த உதிரம் ஓடுகின்ற நரம்புஸ்தானங்களில், அவ்வுதிரத்தால்பிறந்து விருத்தியாகிச் சஞ்சரிக்கின்ற கிருமிகள் ஆறுவிதப்படும். அவையாவன:—அணுக்கிருமி, வட்டக்கிருமி, மிகுசூக்ஷ்மக்கிருமி, காலில்லாக்கிருமி, செங்கிருமி, தோற்றுக்கிருமிஎன்பவைகளாம். இவைகள் தனித்தனியேபெருங்கூட்டங்களாகிச் சப்ததாதுக்களிலும் பரவிஏறி ரோமங்களை உதிரப்பண்ணுவதும் அன்றி, ரோமக்கால்களில்அத்திப்பழக்கிருமிகளைப்போல்திரிந்துகொண்டு சவுரசம்என்னும் கிருமிபேதங்களுக்குத் தாயாயுமிருக்கும். இவைகளால், ஆறுவிதக் குஷ்டங்களைப்போலவே தேகத்தில்மாறுநிறம் உண்டாகும்.

மலக்கிருமிரோகலக்ஷணம்.

அதிகமலஞ்சேரவினாலும், பச்சைத்தானியவஸ்து, இலைக்கறி, கருணை சேமைமுதலியகிழங்குகள் என்னுமிவைகளைப்புசிப்பதினாலும், பக்குவாசயஸ்தானத்தில் பிறந்து வளர்ந்து, மலாசயத்தில் சஞ்சரிக்கின்ற கிருமிகள் ஐந்துவிதப்படும். அவையாவன:—ககேருகம், மகேருகம், சவுரசம், சுலூனம், லேலிகம் என்பவைகளாம். இவைகள், தனித்தனியேபெருங்கூட்டங்களாகி மெத்தப்பருத்தும், சக்கரவடிவாயும், ரோமத்தைப்போல் மெல்லியதுகளாயும், கறுப்புநிறத்தையும் மஞ்சள்நிறத்தையும் கறுப்பும்வெள்ளையும் கலந்தநிறத்தையும்பெற்று, மலப்பையில் சஞ்சரிக்கும். இதனால் பேதி, சூலை, மலச்சிக்கல், உடம்பு இளைத்தல், தேகத்தில் சுரசுரப்புடன்வெண்மைநிறம், ரோமச்சிலிர்ப்பு, அக்கினிமந்தம், குத்தல், நமைச்சல், எரிவுஎன்னும் இக்குணங்களுண்டாகும். ஒருவேளை அக்கிருமிகள் ஆமாசயஸ்தானத்தைப் பற்றி எதிர்த்து ஏறும்போது, வாயில்நீர்ச்சுரப்பு, துர்க்கந்தமலம், இரைப்பு இவைகள்உண்டாகும். இதற்குச்சசுர்ச்சாலென்றும்பேர். சன்னக்கிருமிகளை கீரிக்கிருமி, எரிகிருமி எனவும் வழங்குகிறார்கள்.

சாமானியகிருமிரோகலக்ஷணம்.

தேகநிறமாறுதல், சுரம், வயிற்றுநோவு, மார்புஎடுப்பாகத்தோற்றுவதும்அன்றி, நோதல், அக்கினிமந்தம், அன்னத்திவேஷம், பேதி, பிரமை ஆகியஇக்குணங்கள் நிரேதுவாகச் சகலகிருமிரோகங்களிலும் உண்டாம்.

இதுகளுக்குமுருக்கம்விதைக்கற்கம், காரவல்லிவாய்விளங்கக்குடிநீர், வேப்பம்நெய், பூனைக்காலிச்சுனை முதலிய சிகிச்சைகளும் உதவும்.

ஏழாவது விஸ்போடரோகபடலம் முற்றியது.

உ
சுப்பிரமணியர் துணை.

ஸ்ரீ வைத்யாம்ருதம்.

எட்டாவது

வாதரோகபடலம்.

வாதரோகபேதம்.

பிரிதிவிமுதலாகிய பஞ்சபூதங்களில் ஒன்றாகியும், அப்பூதங்களைச் சிருஷ்டித்துக்காத்துச் சங்கரிப்பதால், பிரதானபூதமாகியும், பித்தகபங்கள் அதிகரிப்பதற்கும் சகலதோஷங்கள் பிறப்பதற்கும் மூலகாரணமாகியும் இருக்கின்றவாயுவு ஒன்றே, தேகத்தைக்காக்கும்பொருட்டு, பிராணவாயு முதலிய பஞ்சவாயுக்களாய்ப் பிரிவுற்றுநின்றது. அப்பிரிவைத் தோஷாதி பேதபடலத்தில், ௯-வது பக்கத்திற்காண்க. உண்ணுகின்ற ரசாதிவஸ்து பேதங்களினாலும், தகாதநடக்கைகளினாலும், அந்த ஐந்துவாயுக்களும் ரோகமுகமாகத்திரும்பி, பாதாக்ஷேபகவாதரோகம்முதல் பரிஸ்போட வாதரோகம் ஈறாக அ0-விதப்படுகின்றன. அவைகளின் பிறப்பையும் பெயரையும் செய்கைகளையும் இதனடியில் முறையேகாண்க.

க-வது பாதாக்ஷேபகவாதரோகம்.

இது, அதிகசீதளவஸ்துக்களைமாத்திரம் நாள்தோறும் அதிகமாகப் புசித்து, அதுக்குச்சரியாக உஷ்ணவஸ்துக்களைப்புசியாமையினால்பிறந்து, இருபாதங்களிலு மிருக்கின்றசப்ததாதுக்களையு மநுசரித்து, அப்பாதங்களை ஒன்றோடொன்று அடித்துக்கொள்ளச்செய்யும்; அப்போது எழுந்தால் தொடையில் நோவுடன் அதிகவேதனையும, நின்றாலும் நடந்தாலும் சுற்றி விழுதல்போலிருத்தலும் உண்டாகும். இதுவே உதறுவாதமாம். பாதம் என்பது கால். ஆக்ஷேபகம் என்பது தடை.

உ-வது பாதலகவாதரோகம்.

இது, அதிக சீதளஸ்தானவாசத்தினாலும், மிகுசீதளக்காற்றினாலும் பிறந்து, உள்ளங்காலிற் சேர்ந்துகொண்டு, பாதத்தைத் தூக்கும்போதும் வைக்கும்போதும்அவைகளில் களிமண்ணை அரைத்துப்பூசினதுபோலும், சேத்தைமுதலானதுகள் ஒட்டிக்கொண்டதுபோலும் தோற்றச்செய்யும்; அப்போது கால்களில் மரத்தலும் கனத்தலும் நோதலும் ஒன்றோடு

ஒன்று அடித்துக்கொள்ளுதலும் அதிகவுறக்கமும் உண்டாகும். இது நெடுநாளாகியும் நீங்காமலேயிருக்கும். இவ்வாயுவில், பித்தமாவது சிலேஷ்மமாவதுசேர்ந்தால்,சாத்தியம்.இவ்விரண்டும் ஏகமாகச்சேர்ந்தால், அசாத்தியம். லகம் என்பது பற்றுதல்.

௩-வது பாதஹரிஷவாதரோகம்.

இது,பாதத்தில்மிகவும் அநுசரித்தசீதளத்திற்குச்சூடான ஒத்திடம் போடுவதினாலும்,அக்கினியில் காய்ச்சுவதினாலும்,அவ்வுள்ளங்காலில்நின்ற சீதளத்தினால்பிறந்து அதிகரிக்கும்; அப்போதுகால்களின்ரோமமெல்லாம் சிலிர்த்தல், மரத்தல், கனத்தல்,நடுக்கல், குத்தல்,அசைத்தலில் நீட்டலில் முடக்கலில் நோவுதெரியாமை என்னும் இக்குணங்கள் உண்டாவதும் அன்றி, நடையும் மந்தப்படும். இவ்வாயுவில் தொந்ததோஷ குணங்களும் திரிதோஷகுணங்களும் உண்டாயிருக்கும்.

௪-வது அபிகாதவாதரோகம்.

இது, அதிகவழிநடக்குதல், வாகனங்களின்மேல் ஏறிக்கொண்டு வேகமாகச்செல்லல், மல்லயுத்தஞ்செய்தல், சீதளவஸ்துக்களைப் புசித்தல் என்னும் இச்செய்கைகளினால் பிறந்து, சர்வாங்கத்திலும் வியாபிக்கும்; அப்போது உடம்பில் அசதி,நோவு, பக்கஇசிவு,திமிர்முறுக்குதல்,சுழலல், சர்வாங்கமும் அடித்துத்துவைத்ததுபோலும் உள்ளில்வெட்டுவதுபோலு மிருத்தல், ஆயாசம், நீட்டலில் முடக்கலில் மிகுந்தநோவு என்னும் இக்குணங்கள் உண்டாகும். அபிகாதம் என்பது அடிபடல்.

௫-வது புச்சாவர்த்தவாதரோகம்.

இது, பாதத்திற்சீதளம் அநுசரித்திருக்கும்போது மீளவும் சீதளவஸ்துக்களைப்புசித்து உடனே நித்திரைசெய்வதினால் பிறந்து,கைகாலின் விரல்களை அநுசரிக்கும்; அப்போது விரல்களில் சிவந்தநிறமும்,நோவும், மரத்தலும் உண்டாகும். இது விர்த்தியடையில், விரல்கள்நீட்டமுடக்கக் கூடாமையாகும். புச்சம் என்பது விரல்கள்; ஆவர்த்தம் என்பது சூழல்.

௬-வது சீதகண்டுவாதரோகம்.

இது, பாதநரம்பில் மிகுசீதளஞ் சேருங்காலத்தில்பிறந்து, உள்ளங்காலில் அடிக்கடிசீதளத்துடன் நமைச்சலைப்பிறப்பிக்கும்; அப்போது பாதங்களில், கனப்பும், நோவும், குத்தலும், மிகுந்ததினவும் உண்டாகும். இதுஅதிகரிக்கில்,தேகத்தில்வீக்கமும்கனத்தலும்நித்திராயு மதிகரிக்கும், இது சாத்தியம். சீதம் என்பது குளிர்ச்சி; கண்டு என்பது தினவு.

௭-வது சுப்திவாதரோகம்.

இது, சீதளகாலத்தில் சீதளவஸ்துக்களைவிரும்பி மிகவும் புசித்தல், பகல்நித்திரை, ஆழ்ந்தபள்ளத்தில் உட்காரல் ஆகிய செய்கைகளினால்

பிறந்து, குதிக்கால், பாதம், விரல்கள், முழங்காலுக்குக்கீழ், மேல், சிறு தொடைகவுட்டிஎன்னும் இடங்களுக்குள் எந்தஇடங்களிலாவது நிலைத்து விடும்; அப்போது அதிவுறக்கமும், தேகத்தில்மரத்தலும், கனத்தலும், வீக்கமும்,நோவும்,குத்தலும் உண்டாகும். இதுஅதிகரிக்கில்,சர்வாங்கமும் நீட்டல் முடக்கலில்நடுக்கலதிகரிக்கும். இதுக்குஉடனேசிகிச்சைசெய்யில், கஷ்டசாத்தியம்; செய்யாவிடில் அசாத்தியம். சுப்தி என்பது உறக்கம்.

௯-வது பாதகண்டக வாதரோகம்.

இது,உள்ளங்காலில் சீதளம்அநுசரித்தகாலத்தில் உஷ்ணஒத்திடம் போடுவதினாலும் காய்ச்சுவதினாலும்பிறந்து, கணுக்கால்களில் தங்கிக் கால்விரல்களின் சந்துக்களிற்பரவும். இதனால், காலைத்தூக்கும்போதும் வைக்கும்போதும் முள்ளு, சிராய், ஊசிமுனை, கல்லு, நகம் இவைகளால் குத்துவதுபோல் ஒருவேதனை பிறப்பதன்றியும், நோவும் வருத்தமும் உண்டாகும். இது அசாத்தியம். கண்டகம் என்பது முள்ளு.

௰-வது களாயகஞ்ச வாதரோகம்.

இது,சீதளகாலத்தில் சீதளமாகியபூமியில்மிகச்சஞ்சரிப்பதினாலும், சதாஉட்காந்திருத்தலாலும்,மிகுநித்திரையாலும் பிறந்து,சகலகீல்களிலும் தங்கியிருக்கும்; அப்போது தேகத்தில்நோவு, வீக்கம், எழுந்திருந்தால் நடுக்கல், நொண்டியைப்போல் நொண்டுதல், கீல்கள் பலமற்றுத்தளரல், மரத்தல், கனத்தல் என்னும் இத்துர்க்குணங்கள் உண்டாகும். இது சாத்தியம். களாயம் என்பது கீல்; கஞ்சம் என்பது ஊனம்.

௰-வது சம்பூகசீரிஷ வாதரோகம்.

இது, வெகுசீதளகாலத்தில், சிலேஷ்மவஸ்துக்கள், பிண்ணாக்கு, வாயுவுள்ளவற்றல் முதலியவைகளைத் தனித்தனியேயாவது கலந்தாவது புசித்தலாலும்,அதிகநடை,பகல்நித்திரை, மிகுமைதுனயோகம் இவைகளாலும் பிறந்து,முழங்காலின்கீல்களில்தங்கிவிடும்;அப்போதுமுழங்காலில்வீக்கம், தடித்தல், மரத்தல், நோவு, குத்தல், மலபந்தம், நித்திரை என்னும் இக்குணங்களுண்டாகும். இதுவே நரித்தலைவாதமாம். இது சாத்தியம். சம்பூகம் என்பது நரி; சீரிஷம் என்பது தலை.

௰௧-வது பாதோபகாத வாதரோகம்.

இது,அதிகசீதள மந்தவஸ்துக்கள்,சிலேஷ்மவஸ்துக்கள், உட்காந்து உறங்கல், மிகுசஞ்சாரம், புல் கல் கட்டைமுதலானவைகள் காலிற்பட்ட வேதனை ஆகியஇவைகளினால்பிறந்து,தொடைகளிற்பரவித்தங்கியிருக்கும்; அப்போது நீட்டினகாலை முடக்கில் திமிர்,மரத்தல்,கனத்தல், விரல்களில் நோவு, காலில் எதுவோ பூசினதுபோலிருத்தல் என்னும் இக்குணங்கள்

உண்டாகும். இதுக்கு உடனேயே பண்டிதர்கள் பற்பல சிகிச்சைகளைச் செய்தால் சாத்தியமாம். உபகாதம் என்பது அறையுண்டல்.

௰உ-வது கிருத்திரசி வாதரோகம்.

இது, சதாகாலமும் நடையின்றிஇருத்தல், பகல்நித்திரை, பதினாலு வேகத்தைமறித்தல் ஆகிய செய்கைகளாலும், கடற்கரைமாமிசம், மாப் பண்டம், தயிர், பால், வெல்லம், கள், பிண்ணாக்கு, மதுரவஸ்து, மந்தவஸ்து, லவணவஸ்து, அதிகசீதளவஸ்து, எண்ணெய்வஸ்து, கந்தமூலபலாதி ஆகிய இவைகளை மிதமின்றிப்புசித்தலினாலும் பிறந்து, தொடைகளின் நரம்பை அநுசரித்து, பாதவிரல்முதல் அடிமுதுகுவரைக்குமிருக்கின்றநரம்புகளின் துவாரத்தில்சேர்ந்துகொள்ளும்; அப்போதுதேகத்தில் குத்தல், கனத்தல், நோவு, வேதனை என்னும் இக்குணங்களுண்டாகும். இது, கண்டவுடன் சிகிச்சைசெய்தால், சாத்தியம்; செய்யாவிடில், முற்கூறிய பாதோபகாத வாதத்தைப்போல் தொடைகளுக்கு அதிவேதனையும், கால்களுக்கு ஸ்மரணை நீங்குதலும் உண்டாகும். கிருத்திரசி என்பது தொடைநரம்பு.

௰௩-வது சோணித வாதரோகம்.

இது, உஷ்ணவஸ்துக்கள், காந்தியஅன்னம், உலர்ந்தபதார்த்தம் இவைகளைப்புசித்தலினாலும், பகல்நித்திரை, மிதுசையோகம், பதினாலு வேகத்தைமறித்தல் ஆகிய செய்கைகளினாலும், சாதாரணமாக நரம்பின் துவாரங்களில் ஓடப்பட்ட உதிரமானது மறிபடுவதினால் பிறந்து, கை கால்களின் கீல்களிலேனும், சகலகீல்களிலேனும் தங்கிவிடும்; அப்போது அவைகளில்வீக்கம், குத்தல், நோவு, தினவு, சரீரத்தில்கருமைநிறம், சீதளம், சிரசில் உபத்திரவத்துடன்பாரிப்பு என்னும் இக்குணங்கள் உண்டாகும். அன்றியும் இதுபோலவே பித்தசோணிதவாதரோகம், சிலேஷ்மசோணித வாதரோகம் என இரண்டுரோகம்பிறக்கும். இவற்றுள், பித்தத்தால் பிறந்த வீக்கமானது மிருதுவாக இருக்கும். இதனால், தேகம் இளைத்து ரத்தம்வறளும். சிலேஷ்மத்தால் பிறந்தவீக்கமானது கீல்கள் தோறும் கண்டுகண்டாகக் கட்டிக்கொண்டு வெகு உபத்திரவத்தைச்செய்யும். இதுவே உதிரவாதரோகமாம். சோணிதம் என்பது ரத்தம்.

௰௪-வது ஊருஸ்தம்ப வாதரோகம்.

இது, சீதவீரியவஸ்து, உஷ்ணவீரியவஸ்து, சலவஸ்து, வதங்கின பதார்த்தம் இவைகளைப்புசித்தலினாலும், சீரணாசீரணகாலத்தில் யானை முதலியவாகனாதி வேகம், பகல்நித்திரை, இரவில் அநித்திரை ஆகிய இவைகளினாலும், முற்கூறிய கிருத்திரசிவாதத்தைப் பிறப்பித்த வஸ்துக் களினாலும்பிறந்து, ஆமத்தைக்கிரகித்துத் தொடைகளில் வியாபித்து,

அவைகளைஸ்தம்பத்தைப்போலவேசெய்யும். அன்றியும்,ஆழ்ந்ததாமரைக் குளத்துநீரைப்போலசைவற்றுத்தொடைகளிலிருக்கும்சிலேஷ்மநீரிலும், மேதோதாதுவிலும், மற்ற இதரதோஷத்திலும் அவ்வாயுவு வியாபித்து, வெவ்வேறு பெயரைப்பெற்று உபத்திரவங்களை யுண்டாக்கும். அதன் விவரம்:—சிலேஷ்மநீரி லதுகூடுங்காலத்தில் சிலேஷ்மவாத ஊருஸ்தம்பம் எனப்பேர்பெறும்; அப்போதுதொடை மரத்தல்,கனத்தல்,நடையில்லாமை என்னும் இக்குணங்களுண்டாகும். அது பித்தகபத்தோடும், மேதோ தாதுவோடும் கூடுங்காலத்தில், அவைகளின்பேர்கொண்ட ஊருஸ்தம்ப வாதம்எனப்பேர்பெறும்; அப்போதுதொடை யில்லாதுபோல்தோற்றல், தியானிகள்போலிருத்தல், மரத்தல், கனத்தல்,நடுக்கல்,அசைதல்,குத்தல், சீதளம், பொறுத்துப்பொறுத்துக் குலுங்குதல், விகுத்தல், நமைச்சல், எரிச்சல், இழுத்தல், நடத்தல் உட்காத்தலில் கோபம், நடைகெடல், தேகம்சுட்கித்தல் என்னும் இக்குணங்கள் உண்டாகும். இவைகளுக்கு எவ்வளவு வைத்தியஞ்செய்யினும் அசாத்தியமாகவேமுடியும். இதனை ஆட்டியவாதம் என்றுஞ்சொல்வர். ஊரு என்பது தொடை.

௫௫-வது சகனவர்த்தவாதரோகம்.

இது, சிலேஷ்ம பிரதானமானதயிர், அதிசீதளசலம், மாப்பண்டம், கிழங்கு,கீரைக்கட்டை,கனிவருக்கம்,மந்தமாமிசமச்சங்கள்முதலியவைகளை மிதமின்றிப் புசித்தலினாலும், சீரணகால சையோகத்தினாலும், கன நடையினாலும்பிறந்து, இடுப்பில் வாசமாய்த்தங்கி, இரண்டு சகனத்திலும் தொடைக்குக்கீழிலும் மேலிலும் சஞ்சரித்துக்கொண்டே இருக்கும்; அப்போது தொடைகளில் குடைச்சலும், நோவும், மரத்தலும், குனியக் கூடாமல்ஸ்தம்பத்தைப்போலவேநிமிரலும்,ஊருஸ்தம்பவாத குணங்களு முண்டாகும். இது,இடுப்பில்தங்கிச்சுழன்றுவருவதால்,சகனவர்த்தவாதம் எனப் பேர் பெற்றது. சகனம் என்பது இடுப்பு.

௫௬-வது துனிவாதரோகம்.

இது, சிலேஷ்ம மந்தவஸ்துக்களினாலும், பதினாலு வேகத்தை மறித்தலாலும் பிறந்து,கீழ்வயிறு,குதம்,அல்குல்,பிட்டம் இவ்விடங்களில் வியாபித்து,வேதனைசெய்யும்; அப்போது வயிற்றில் இருந்தவுபத்திரவம், அறுத்தல்போலும் இழுத்துப்பிடித்தல்போலும் இருத்தல், மரத்தல், கனத்தல், மலமூத்திரச்சிக்கல் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

௫௭-வது பிரதிதுனிவாதரோகம்.

இது, முற்கூறிய துனிவாதத்தைப் பிறப்பித்த வஸ்துக்களினாலும், பதினாலுவேகத்தை மறித்தலினாலும் பிறந்து, முன்சொன்ன இடத்தைத்

தாண்டி மேல்நோக்கி வியாபித்து, வேதனையைச்செய்யும்; அப்போது மேற்கூறிய வாதஉபத்திரவத்தைப்பார்க்கிலு மதிஉபத்திரவமுண்டாகும்.

௰௮-வது மூடவாத ரோகம்.

இது, சீதளவஸ்துக்களினாலும் பிரமாணந்தப்பிய போஜனத்தின் மேல் போஜனஞ்செய்வதினாலும் அக்கினிமந்தத்தினாலும் பிறந்து, நாபிஸ்தானத்தில் மொத்தையாகக் கட்டியைப்போல்கட்டிக்கொண்டு வேதனையைச்செய்யும்; அப்போது மல சல பந்தம், வயிறுப்பல், நோதல், குத்தல், தேகமரத்தல், குடலையிழுத்துப் பிடித்தல்போ லிருத்தல் என்னும் இக்குணங்களுண்டாகும். இது, உள்ளேயே உபத்திரவத்தைச்செய்தலால், மூடவாதம் எனப் பேர்பெற்றது. இது கஷ்டசாத்தியம்.

௰௯-வது ஆத்மான வாதரோகம்.

இது, சீதளமலபந்தவஸ்து, சிலேஷ்மவஸ்து, புளிப்புவஸ்து, மாப்பண்டம், பனிக்காற்று இவைகளினால்பிறந்து, அடிவயிற்றில்தங்கி, வேதனையைச்செய்யும்; அப்போது குடலின்துவாரத்தில்நோவு, கொஞ்சம் மலமும் மூத்திரமும் கட்டுப்படல், வயிற்றில் கடகடவென்னும் ஒருசத்தம், வயிறுப்பல், வாதசுரக்குறிஆகிய குணங்கள் உண்டாகும். இது, வயிற்றில் சத்தத்தையும் உப்பலையுந்தருதலால், ஆத்மானவாதம் எனப்பேர்பெற்றது.

௨௰-வது பிரத்தியாத்மானவாதரோகம்.

இது, மலபந்தவஸ்து, மந்தவஸ்து, நடையில்லாதிருத்தல், எந்நேரமும் ஈரத்தில் உட்காரல்ஆகிய இவைகளினால்பிறந்து, முன்சொன்ன ஆத்மானவாதத்தைப்போலவே குடலின்துவாரத்தில்தங்கி அதிகரித்து, வயிற்றில் மேல்நோக்கிக்கொண்டே பயங்கரமான இரைச்சலையுமுபத்திரவத்தையும் இடைவிடாது சதாகாலத்திலும்செய்யும்: அல்லது ஒவ்வொரு காலத்திலாவதுசெய்யும்; அப்போதுவயிற்றி லடிக்கடிநோவு, எக்காலமும்மரத்தல், மூத்திரப்பையில் மிகுந்தநோவுடன் குத்தல், மல மூத்திரபந்தம், வாயுவு ஆமாசயஸ்தானத்துச் சிலேஷ்மத்தைக் கலைப்பதினால், வயிற்றைக்கையால் அரக்குவதுபோலிருத்தல், மேல்மூச்சு, பக்கநோவு என்னும் இக்குணங்களுண்டாகும். இது, மேல்நோக்கி வயிற்றில் இரைச்சலையுண்டாக்கலால், பிரத்தியாத்மானவாதரோகம் எனப் பேர்பெற்றது.

௨௧-வது அபதந்திரக வாதரோகம்.

இது, மந்தவஸ்து, இலைக்கறி, மாமிசம் ஆதியானபதார்த்தம், பால், எள்ளு, பிண்ணாக்கு, பயறு இவைகளை அதிகமாகப்புசித்தலினாலும், பயம், துக்கம், பகல்நித்திரை, உபவாசம் ஆகிய இச்செய்கைகளினாலும் பிறந்து, சிலேஷ்மநரம்பு, வாதநரம்பு, பித்தநரம்பு, ரத்தநரம்பு என்னும் இவ்வித

நரம்புகளின் துவாரங்களிலும் குடலிலும் தேகத்திலும் வியாபித்து, அவைகளில்நின்றும்அதோகாயத்தைஅநுசரித்து,பின்புமேல்நோக்கிமார்பு நரம்புகளிற்பரவி,அம்மார்பிலும்சிரசிலும்நெறியிலும்நோவைப்பிறப்பித்து பிறகு சர்வாங்கத்திற்கும் வேதனையைக்கொடுத்து, அவ் அங்கத்தை வில்லைப்போலவேவளைத்துவருக்தமுறநெட்டுயிர்ப்பை எழுப்புவதுமன்றி, ஊர்த்துவகாயத்திலிருந்து அதோகாயத்தைமரத்தல் அடையச்செய்தும், அதோகாயத்திலிருந்து ஊர்த்துவகாயத்தைமரத்தல் அடையச்செய்தும், மிகுந்த உபத்திரவத்தைவிளைக்கும்; அப்போது கண்விழி கீழேசரிந்தது போலிருத்தல், அல்லது மூடிக்கொள்ளுதல், புறுச்சத்தத்தைப்போல் நெஞ்சில் ஒருசத்தம் எழும்புதல், ஞாபகமரதி, விசையாகநடக்கும்போது தடுக்கிவிழுதல்,நடுக்கல்,இளைத்தல், பிரமைமுதலியகுணங்களுண்டாகும். இது, மார்பைவிட்டுக் கீழிறங்குமாயின், கஷ்டத்தின்மேல் சாத்தியம் ஆகும்: இறங்காவிடில், அசாத்தியம். இது, மாதருக்குக் கருப்பங் கரைந்த காலத்திலும் மாதாந்தர ருதுகாலத்திலும் சரீரம் நலங்கிய காலத்திலும் உற்பத்தியாகில், மிகவுங் கஷ்டசாத்தியம். இது,தேகத்தைப் பராதீனம் ஆக்கலால், அபதந்திரகவாதம் எனப்பேர்பெற்றது. இதற்கு, அபதானகவாதம் என்றும் ஒருபேருண்டு.

௨௨-வது மனோவிருத்திவாதரோகம்.

இது,அனலாதிவெய்யல்,கோபம், மனதுதபித்தல், அதிநடை, பயம், துக்கம்,குத்துப்படல்ஆகிய இவைகளினால் பிறந்து,மனோவியாபாரத்தைக் கெடுத்துக் கீழ்வயிற்றிலும் பக்கத்திலும் மூத்திரநரம்புகளிலும் சிலேஷ்ம நரம்புகளிலும், வாதநரம்புகளிலும் அநுசரித்துக்கொள்ளும்; அப்போது நினைத்தாலும் நினையாதிருந்தாலும் மலமூத்திரம்வருதல், தேகங் கட்டு விட்டதுபோலிருத்தல், மனக்கெடுதி என்னும் இக்குணங்க ளுண்டாகும். இது, மனோவியாபாரத்தைக் கெடுப்பதால், மனோவிருத்திவாதம் எனப் பேர்பெற்றது. இது ஒருவருஷத்திற்குமேல் அசாத்தியம்.

௨௩-வது ஆந்திரபித் வாதரோகம்.

இது,வாதவஸ்து, சீதளவஸ்து, மிகுசீதளமான வழுவழுத்தவஸ்து, மச்சம், மாமிசம், வெல்லம், அதிரசம்முதலியபண்டம், பிண்ணாக்கு,தயிர், காந்திய அன்னம் இவைகளை அதிகமாகப்புசித்தலினால் பிறந்து, வயிற்றில் பெருங்குடலின் துவாரத்தில்வியாபிக்கும்;அப்போதுவயிற்றில் கலக்குதல் போலும் அறுக்குதல்போலும்இருத்தல், பொறுத்துப்பொறுத்து உப்பல், நோதல், வருத்தத்தின்மேல் மலமூத்திரங் கட்டுப்படல், மிகுவார்த்தை, வாந்தி, ஏப்பம், மூர்ச்சை, பிரமைஎன்னும் இக்குணங்கள் உண்டாகும்.

இதனைக் குடல்வாதம் என்றும் சொல்வர். இது கஷ்டசாத்தியம்.

ஆந்திரம் என்பது குடல்; பித் என்பது பேதித்தல்.

உச-வது அபதானக வாதரோகம்.

இது, சீதளவஸ்து, வாசனைவஸ்து, மதுரவஸ்து, மந்தவஸ்துமுதலிய வஸ்துக்களை மேன்மேலும் புசித்தலாலும், பயம், உபவாசம், பகல்நித்திரை இவைகளினாலும் பிறந்து, சரீரத்தில் சப்ததாதுக்களிலும் நரம்புகளிலும் வியாபிக்கும்; அப்போது அடிக்கடி திடீலென்று எழுந்திருக்குதலும், பேச்சுக்குப்பேச்சு நகைக்குதலும், முற்கூறிய அபதந்திரகவாதரோக வுபத்திரவமுமுண்டாகும். இது, சகலநரம்புகளிலும்பரவுதலால் அபதானக வாதரோகம் எனப்பேர்பெற்றது. இதில் இன்னுஞ் சில துர்க்குணங்கள் உண்டானாலும், அல்லது நெடுநாட்சென்றாலும், கஷ்டசாத்தியம்.

உரு-வது நாளாவர்த்த வாதரோகம்.

இது, அதிகசீதளசலபானம், மிகுந்தநடை, பதினாலுவேகத்தை மறித்தல், வெகுசையோகம் ஆகிய இவைகளினால்பிறந்து, ஆண்குறியின் துவாரத்தினடியிலும்நடுவிலுமுனையிலுந்தங்கி, நிலைத்துவிடும்; அப்போது மூத்திரமானது, மாமிசம், மேதை, எலும்பு, மா இவைகளின் நிறங்களைப் பெற்றுக்கலங்கிய சுக்கிலம்போலும் நாளத்தின்வழியில் பொறுத்துப் பொறுத்துஒழுகிக்கொண்டேயிருக்கும். அன்றியும், இவ்வாயுவு அதிகரிக்க அதிகரிக்க, அடிநாளமுதல் முனைநாளம்வரைக்கும் நோவும் குத்தலும் உண்டாகும். நாளம் என்பது ஆண்குறியின்துவாரம்.

உசா-வது மூத்திரசர வாதரோகம்.

இது, உலர்ந்தபதார்த்தம், காந்தலன்னம், உஷ்ணவஸ்து, லவணவஸ்து, காங்கைவஸ்துமுதலியவைகளைப்பிரமாணந்தப்பித்தினந்தினமும்புசித்தல், அதிகசையோகம், மலமூத்திரவிருத்தி, மிகுந்தநடை ஆகிய இவைகளினால் பிறந்து, ஆண்குறியின் துவாரத்தில் வியாபித்து, மூத்திரத்தைக் கொஞ்சங் கொஞ்சமாகவும் அதிகம்அதிகமாகவும் இடைவிடாமல் ஒழுகச்செய்வதும் அன்றி, மூத்திரப்பைக்குள் தங்கிக்கொள்ளும்; அப்போது அவ்விடத்தில் ஒவ்வொருவேளை கனத்தல், எரிச்சல், நோவு, திமிர்என்னும் இக்குணங்கள் உண்டாகி மூத்திரம் இறங்கும். இது, மூத்திரத்தைச் சரம்போல் இறக்கலால், மூத்திரசரவாதம் எனப்பேர்பெற்றது.

உஎ-வது மேட்ரக்ஷீய வாதரோகம்.

இது, வாதவஸ்து, சீதளவஸ்து, களி இவைகளை மிகவும் புசித்தல், மிகுபோகம், பதினாலுவேகத்தைமறித்தல், பகல்நித்திரை, வேகநடை ஆகிய இவைகளினால் பிறந்து, ஆண்குறியின் வன்மையைக் குறைத்து,

அத்துவாரத்தை அநுசரித்து, அவ்விடத்தில் எரிச்சலாவது நோவாவது கனத்தலாவது உண்டாகும்படிசெய்யும். இதனால், சையோக வெறுப்பும் பீசக்கெடுதியும் பிறக்கும். இது அதிகரிக்கில், பீசகோசங்களில்வீக்கமும் அவ்வீக்கத்தினால் நீர்க்கட்டும் உண்டாகும். இது உடனே அசாத்தியம்.

மேட்டிரம் என்பது ஆண்குறி; க்ஷீயம் என்பது பலநாசம்.

௨௮-வது இருதாவிருத வாதரோகம்.

இது, லவணம், உஷ்ணம், சிலேஷ்மம், மந்தமானகிழங்கு ஆகிய இவ்வஸ்துக்கள், வரகரிசிச்சோறு முதலியவைகளை மிகவும் புசிப்பதினால் பிறந்து, இருதயத்தில்தங்கிச் சுற்றிக்கொண்டு உபத்திரவத்தைச் செய்யும்; அப்போது மார்பில்வாளால் அறுப்பதுபோலிருத்தல், தேகங்கனத்தல், நோவு, சீதளம், அரோசகம்,வாந்தி, பிரமை, வியர்வை, புரளல், எரிச்சல், இளைப்பு, கீல்களில்நோவுஎன்னும் இக்குணங்களுண்டாகும். இது,மார்பு, விலா,முதுகுஎன்னும்இவ்விடங்களில்வியாபித்துப் பின்புவெளிப்புறத்தில் வியாபிக்கும்.

இருத் என்பது மார்பு; ஆவிருதம் என்பது சூழல்.

௨௯-வது சுரோணிசூலை வாதரோகம்.

இது,வாதப்பிரதானபோஜனம்,மந்தவஸ்து,மலபந்தவஸ்து,பதினாலு வேகத்தைமறித்தல் ஆகிய இவைகளினால்பிறந்து, இடுப்பின் பக்கங்களில் தங்கிவிடும்; அப்போது அவ்விடத்தில் அதிககுத்தல், வயிற்றில் சங்கட்டத்துடன் அறுப்பதுபோலிருத்தல், பிரமை, மலமூத்திரக்கட்டு, வயிற்றிலும் பக்கத்திலும் நாபிக்குள்ளிலும் கனத்தல், வயிறுப்பல்,வாந்தி, ஏப்பம், எரிச்சல், உதடுலரல், இளைப்பு, நடுக்கல் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

சுரோணி என்பது பிட்டம்; சூலை என்பது குத்தல்.

௩௰-வது நாபிசாரு வாதரோகம்.

இது, அதிக வாதவஸ்து, வயிறுப்பிசவஸ்து, மலபந்தவஸ்து இவைசேர்ந்தபோஜனம், மிருந்தசையோகம்,பதினாலுவேகத்தைமறித்தல், அதிகநடைஆகிய இவைகளினால்பிறந்து, நாபியைஅநுசரித்து, அவ்விடத்தைப்பற்றிய வாதநரம்புகளிலும், சிலேஷ்மநரம்புகளிலும் வியாபிக்கும். இதனால் நாபிஸ்தானத்தில்குத்தல், சர்வாங்கநோவு, சைத்தியம், நடுக்கல், கனத்தல், வாந்தி, கொட்டாவி, கீழ்வயிற்றில்சூலை, வயிற்றிலும் குதச் சந்துகளிலும் ஆண்குறியிலும்நோவுஎன்னும் இக்குணங்கள் உண்டாகும். இது, தொப்புளைப்பற்றியதால், நாபிசாருவாதம் எனப் பேர்பெற்றது.

௩௧-வது அஷ்டிலா வாதரோகம்.

இது, நாபிசாருவாதத்தைப் பிறப்பிக்கும் வஸ்துக்களினால் பிறந்து, அதைப்போல் நாபிஸ்தானத்தின்கீழ்நின்று அதிகரித்து,மூத்திரப்பையின்

துவாரத்திலும் அம்மூத்திரப்பைக்குள்ளிலும் வெளியிலும்பக்கங்களிலும் கட்டிபோல் வீக்கத்தைப்பிறப்பிக்கும்; அப்போது வயிற்றில் கனத்தல், உப்பல், மலமூத்திரக்கட்டு, நோவு, அரோசகம், நானாவிதவேதனை என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

அஷ்டிலம் என்பது வீக்கம்.

௩௨-வது பிரத்தியஷ்டிலா வாதரோகம்.

இது, சிலேஷ்மவஸ்து, சீதவீரியவஸ்து, தயிர், கடலோரமாமிசோதகம், நாலிழைந்து சலம்உண்டாகியஅன்னம், அசீரணதோஷம், அதிககாற்று, பதினாலுவேகத்தை மறித்தல், சஞ்சாரம்இன்மைஆகிய இவைகளினால் முன்சொன்ன அஷ்டிலாவாதத்தைப்போலவேபிறந்து, நாபிஸ்தானத்திற்கு மேலேனும் கீழேனும் கட்டிபோல் வீக்கத்தைப்பிறப்பிக்கும்; அப்போது அவ்விடத்தல்குத்தல்முதலிய உபத்திரவங்கள் உண்டாகும். இவ்வீக்கமும் முற்கூறியவீக்கமும் நிலைபெறும் என்பது சிலர்பட்சம்.

௩௩-வது ஸ்தனருக்கு வாதரோகம்.

இது, முறுக்குப்பலகாரம், மந்தமாமிசம், சிலேஷ்மவஸ்து, சேற்றுநீர் இவைகளின் சேர்க்கையால்பிறந்து, ஸ்தனத்தின் அடியில் வியாபிக்கும்; அப்போது முலைக்கு உள்ளிலும் வெளியிலும், முலைக்கு நேர்முதுகிலும் வேதனை உண்டாவதன்றியும், முலைக்காம்பைவாளால் அறுப்பதுபோல் இருக்கும்: அல்லது அடிக்கடி வாந்தியாவது உண்டாகும்.

ஸ்தனம் என்பது முலை; ருக்கு என்பது அதிகநோவு.

௩௪-வது பக்ஷகாத வாதரோகம்.

இது: மந்தவஸ்து, மலபந்தவஸ்து, மயக்கவஸ்து, குளிர்ச்சியிடத்தில் நித்திரை, குளிர்ச்சிஆசனம், தேகத்தில் சீதளச்சேர்க்கைஆகிய இவைகளால் பிறந்து, உதிர ஓட்டங்குறைந்த பாதிச்சரீரத்தில்தங்கி, அப்படியே சப்ததாதுக்களிலும் வாதசிலேஷ்மநரம்புகளிலு மநுசரிக்கும்; அப்போது பாதிஉடம்பில் கனத்தல், நோவு, மரத்தல், வேதனை, அப்பக்கத்துக் காலும் கையும் உதவாதிருத்தல், அவைகளுக்கு அசைவில்லாமை, இளைத்தலோடு சூம்பல், பிரமை, சுபாவ அறிவின்மை, நானாவிதநோவு, பயங்கரம்என்னும் இக்குணங்கள் உண்டாகும். இது, ரத்தநரம்பையும், சன்னநரம்பையும் உலர்த்திக் கீல்களைத் தளரப்பண்ணிப் பிரபலப்படுவதால், இதற்குரத்தம் முன்பால் நரம்புகளில் ஓடும்படிக்குச் சிகிச்சை செய்யவேண்டும். இதனை பக்ஷவாதம், ஏகாங்கவாதம், அர்த்தாங்கவாதம், பாரிசவாதம், பக்கவாதம், இளம்பிள்ளைவாதம் எனவும் பலவாறாகச்சொல்வர்.

பக்ஷம் என்பது பக்கம்; காதம் என்பது அடித்தல்.

௩௫-வது உதாவர்த்த வாதரோகம்.

இது, வேகத்துடன்வருகிற மலமூத்திராதிகளையடக்கல்,மந்தவஸ்து மலபந்தவஸ்துக்களைப்புசித்தலாகிய செய்கைகளினுல்பிறந்து,கீழ்வயிற்றில் நிலைத்துவிடும்; அப்போது அடிவயிற்றில்கனத்தல், நோவு, உப்பல், மலசலக்கட்டு என்னும் இக்குணங்கள் உண்டாகும். இது அதோங்கத்தில் இருக்கின்ற நரம்புகளையும் மலமூத்திரங்களையும் மேலாக இழுத்துப் பிடித்துச்சுழலுவதால், உதாவர்த்கவாதம் எனப்பேர்பெற்றது. இதில் கண்களுங் குழிவிழுந்து முற்கூறிய குணங்களுமேலிடில், அசாத்தியம்.

௩௬-வது தண்டக வாதரோகம்.

இது,எண்ணெய்வஸ்து, மந்தவஸ்து, சீதவீரியவஸ்து, தயிர்,அதிக லவணம்,பகல்நித்திரை,பதினுலுவேகத்தை மறித்தல்ஆகிய இவைகளினுல் பிறந்து, சப்ததாதுக்களிலும் வியாபித்து அவைகளைக் கலைத்துவிட்டு, ஆமாசயஸ்தானத்தை அநுசரித்துச் சிலேஷ்மபித்தங்களைத் தன்னுடன் சேர்த்துக்கொண்டு, அவயவங்களின் செயலைமாற்றிவிடும். இதனுல்ரசாதி தாதுக்களில்மரத்தல்,சீதளம்,உள்ளெரிச்சல்,சரீரங்கனத்தல்,ஞாபகமறதி, பிரமை,சுழலல்போலிருத்தல், இளைப்பு,அதிகவேதனை, நீர்க்கட்டுஎன்னும் இக்குணங்களோடு தேகமானது தண்டத்தைப்போல்விழுந்துஅசைதலும் நீட்டல் முடக்கலும் எழுதலும் இல்லாதிருக்கும். இது, தேகத்தைத் தண்டத்தைப்போல்நீட்டிவிடுதலால்,தண்டகவாதம் எனப்பேர்பெற்றது.

௩௭-வது தனுஸ்தம்ப வாதரோகம்.

இது, சிலேஷ்ம மதுரவஸ்து, மந்தவஸ்து, சஞ்சாரம் இன்மை, சீதளச்சேர்க்கை இவைகளினுல்பிறந்து, சப்ததாதுக்களிலும் வியாபித்து, உள்ளிலேனும்வெளியிலேனும் முன்புவியாபித்ததுபோலவே அதிகரித்து, சரீரத்தை, முன்புறமாவது, பின்புறமாவது, வில்லைப்போல்வளைக்கும்; அப்போது தேகத்தில் கனத்தலும் மரத்தலும் நோவும் கண்டு, பின்பு ஒருசாமம்பொறுத்து அதிகவேதனையும் இளைப்பும் உண்டாகும். இது, சரீரத்தை வில்லைப்போல் வளைப்பதால், தனுஸ்தம்பவாதம் எனப்பேர் பெற்றது. இதனைமுன்னிசுவு, பின்னிசுவு எனவுஞ்சொல்வர்.

௩௮-வது ஆக்ஷேபக வாதரோகம்.

இது,சீதளஞ்சேர்ந்தகாலத்தில் மந்தசீதவீரியவஸ்துவைப்புசித்தல், கடினமான வில்லைவளைத்தல், யானையேற்றம் இவைகளினுல் பிறந்து, இரண்டுபிட்டம், அக்குள், தோள், உள்ளங்கை, முன்கை ஆகிய இவ்விடங்களிலிருக்கின்றவாதகபரத்தநரம்புகளில்வியாபித்து, தேகத்தை

மூன்னும் பின்னும் உதைத்துக்கொள்ளச்செய்யும்; அப்போது கையை அசைத்தாலும் ஒன்றையெடுத்தாலும் நீட்டினாலும் முடக்கினாலும் அதிகநோவு,சர்வாங்கத்திலும்வாளால் அறுத்தல்போலிருத்தல், நடுக்கல், பிரமைஎன்னும் இக்குணங்கள் உண்டாகும். இது, தேகத்தின்தொழிலைத் தடுத்தலால், ஆக்ஷேபகவாதரோகம் எனப்பேர்பெற்றது.

௩௯-வது பாகியாயாம வாதரோகம்.

இது,அதிசீதளவஸ்து,மந்தவஸ்து,சலபதார்த்தம், அசீரணபோஜனம், விரோதரசம், சஞ்சாரம்இன்மைஆகிய இவைகளினால்பிறந்து,சரீரத்துக்கு வெளிப்புறத்தில் இருக்கின்ற ரத்தநரம்பு, சன்னநரம்பு, வாதநரம்பு, சிலேஷ்மநரம் பிவைகளின்மத்தியஸ்தானத்திலும்ஆமாசயஸ்தானத்திலும் வியாபித்துக்கொண்டு, சரீரம்முற்றும்இருக்கின்ற சகல அவயவங்களுக்கும் நீட்டிமுடக்கும்போது மரத்தல், குத்தல், சீதளம், கனத்தல், உள்ளில் வாளால் அறுத்தல்போலும் திருகுவதுபோலும்இருத்தல், இடைவிடாத குடைச்சல்முதலிய துர்க்குணங்களைச்செய்யும். இதனால்,தேகமும் சிரசும் பின்புறமாகவளைதல், மார்புஉயர்தல், கழுத்துத்திருகல், முகத்திலும் பல்லிலும் நிறமாறுதல், மலமூத்திரக்கட்டு, மரதல், தாழ்வாய்பிடித்தல், நோவு,கம்மியவார்த்தை,நகைத்தல்,வியர்வை,எரிச்சல்என்னு மிக்குணங்களுண்டாகும். இவ்வாயுவு,மாதர்களுக்குப் பிரசவகாலத்திலும் பிரசவித்த தற்காலத்திலும் காணும்; கண்டால் அசாத்தியம். இது, சரீரத்தின் வெளிநரம்புகளில் சஞ்சரிப்பதால், பாகியாயாமவாதரோகம் எனப்பேர் பெற்றது. இது,அடிக்கடி வேகத்துடன்காணுமாகில்,தநுர்வாதம்என்றும் சொல்லப்படும்.

ஆயாமம் என்பது சஞ்சரித்தல்.

௪௰-வது அந்தராயாம வாதரோகம்.

இது, முற்கூறிய பாகியாயாமவாதத்தைப் பிறப்பித்தவஸ்துக்களை நாள்தோறுமதிகமாக அநுசரித்தலினால்பிறந்து,முன்போலவேசரீரத்தின் உட்புறத்து நரம்புகளில் சேர்ந்துகொள்ளும்; அப்போது உட்புறத்தில் ஒருசத்தம் எழும்புவதும்அன்றிக் குத்தல், சீதளம், மலமூத்திரபந்தம், பிரமை, வியர்வை, நிலைக்கண்படல், கொட்டாவி, பற்கடித்தல், விலா எலும்புகளில்நோவு, பேச்சையும் முதுகையும் சிரசையும் இழுத்துப் பிடித்ததுபோ லிருத்தல் என்னும் இக்குணங்கள் உண்டாகும். இது, தேகத்தின் உட்புறநரம்புகளைப் பற்றியதால், அந்தராயாமவாதம் எனப் பேர் பெற்றது. இதுவே, ஒருவேளை, சரீரத்தை வில்லைப்போல் இழுத்து இழுத்து வளைபபதும், அப்படியே சற்றுநேரம் நிமிர ஒட்டாமல் ஸ்தம்பிக்கச்செய்து பின்பு விடுவிப்பதுமாக இருக்கும். இதனால் இமை

யாட்டாதிருத்தல், தாழ்வாய்க்கட்டைபிடிப்பு, விலாஎலும்புச்சந்துக்களில் தளர்ச்சி, வாயில்கோழையுடன் நீர்சுரத்தல், வாந்தி, பகலில்சுரம்என்னும் இச்குணங்கள்உண்டாகும். இந்தக்காரணத்தால்,இது ஆகருஷணத்தம்பண வாதரோகம் எனப்பேர்பெறும்.

ஆந்தரம் என்பது உள்; ஆகருஷணம் என்பது இழுத்தல்.

௪௧-வது சந்நியாச வாதரோகம்.

இது,தேகத்தில் பகாசீதளச்சேர்க்கையினாலும் சீதளவஸ்துக்களைத் தினம்புசித்தலினாலும் சதாசீதளஸ்தானத்தில் நடப்பதினாலும் பிறந்து, சப்ததாதுக்களிலும் சகலகீல்களிலும் அநுசரித்துச் சரீரவியாபாரத்தை நீக்கிச் சர்வாங்கத்திலும் பரவும்; அப்போது அவைகளுக்கு அசையக் கூடாமை, தேகம்மரத்துக்கட்டுப்பட்டதுபோல் அசைவற்றுக்கிடக்குதல், சர்வாங்கநோவு என்னும் இக்குணங்கள் உண்டாகும். ஒருவேளை நோவு இல்லாதிருக்கில் நடுக்கலாவது உண்டாகும். இது,தேகவியாபாரத்திற்குப் பலவீனத்தைச்செய்தலால், சந்நியாசவாதரோகம் எனப்பேர்பெற்றது.

௪௨-வது அபிநியாச வாதரோகம்.

இது,சிலேஷ்மபித்தவஸ்து,புராதனம், அகாலபோஜனம், பசினாலு வேகத்தைமறித்தல்,அதிசுரவேகமாகிய இவைகளினால்பிறந்து அதிகரித்து, பித்தசிலேஷ்மங்களையும் தன்னைப்போலவே சமமாக அதிகரிக்கச்செய்து, உபத்திரவத்தைப்பிறப்பிக்கும்; அப்போதுபிராணவாயுவு மபானவாயுவும் அதி தோஷங்களோடுகூடி இருதயத்தில்நிற்கும். இதனால், மனம்வாக்குக் காயங்களின் தொழில்கள் ஒழிவதும்அன்றிச் சுரத்தின் ஆரம்பத்திலாவது அந்தத்திலாவது காதடியில்வீக்கமும் உண்டாகும்.

௪௩-வது ஆட்டிய வாதரோகம்.

இது, அதிக இனிப்புவஸ்து, எண்ணெய்வஸ்து, மச்சம், மாமிசம், மந்தரசம்,தயிர், பால் இவைகளைமிகவும்புசித்து எக்காலத்திலும்நடையும் இன்றிப் பகல்நித்திரையும் செய்வதினால் பிறந்து, சப்த தாதுக்களில் இருக்கின்ற வாதமார்க்கங்களையும் சிலேஷ்மமார்க்கங்களையும் அடைத்து, சிலேஷ்மத்தோடு கூடிக்கொண்டு உபத்திரவத்தைச்செய்யும்; அப்போது தேகத்தில்மரத்தல், கனத்தல்,நோவு,உறக்கம, இளைத்தல்,விரல்அமுழுந்தும் படியானவீக்கம், சரீரத்தைக் கட்டிப்போட்டதுபோல்இருத்தல், புரளல், மலமூத்திரச்சிக்கல்,பிரமை,தாழ்வாய்நோவுஎன்னுமிக்குணங்களுண்டாகும் இது, சிலேஷ்மத்துடன் கூடியதால், ஆட்டியவாதம் எனப்பேர்பெற்றது. இது,சிலேஷ்மத்துடன்கூடும்போது தேகத்தில்வியர்வைபிறக்காதிருக்கில், சாத்தியம்; பிறந்தால், அசாத்தியம். ஆட்டியம் என்பது கூடல்.

௪௪-வது விஸ்வபித் வாதரோகம்.

இது, தண்டாயுதத்தைச் சுழற்றல், கல்முதலியவைகளை விசையாக விட்டெறிதல், வில்வளைத்தல் முதலியசெய்கைகளினால் பிறந்து, உள்ளங்கையிலும் விரல்களிலுமிருக்கின்ற வாதசிலேஷ்மரத்தநரம்புகளை யநுசரிக்கும்; அப்போதுகைகள் அசைக்கவும்முடக்கவும்நீட்டவும் கூடாமையாகக் கட்டுப்பட்டதுபோல் இருத்தலும், தேகத்தில்மரத்தலும் உண்டாகும். விஸ்வம் என்பது சமஸ்த்தம்; பித் என்பது பேதித்தல்.

௪௫-வது சுவாலித வாதரோகம்.

இது, வாதவஸ்து, அதிசீதளசலபானம், சேற்றுநீர், உபவாசம், காந்திய அன்னம், மிகுந்தமைதுனசையோகம், கடும்வெய்யில், தபசாயாசம், சதாவேலை இவைகளினால் பிறந்து, சடராக்கினிச்சுவாலையால் அதிகரித்து வயிறுமுற்றிலும் எரிச்சலைப்பிறப்பிக்கும். இதனால், சரீர எரிச்சல், மேலில் அறியக்கூடாத காங்கை, வாயுலரல், சுழலல், பொறுத்துப் பொறுத்துக் குத்தல், பித்தாதிக்கம் என்னும் இக்குணங்களுண்டாகும். இது உடனே அசாத்தியம். சுவாலிதம் என்பது மிகுந்த எரிச்சலையுண்டாக்குவது.

௪௬-வது அவபாருக வாதரோகம்.

இது, சிலேஷ்மவஸ்து, மதுரவஸ்து, மந்தசீதளவஸ்து இவைகளைப் புசித்தலாலும், சற்றேனுஞ்சஞ்சாரம் இன்மையாலும் பனிக்காற்றுள்ள இடத்தில் சதாஸ்திரிபோகஞ் செய்தலாலும்பிறந்து, தோள்களிலிருக்கும் ரத்தநரம்பை அநுசரித்து, அவைகளை மெலியச்செய்யும்; அப்போது கைகளில் சூம்பலும் மரத்தலும் குத்தலும் உண்டாகும். இதனைச்சிலர் பாகுதோஷம் எனச்சொல்வர். இது, கைகளைச்சூம்பச் செய்தலால், அவபாருகவாதரோகம் எனப் பேர்பெற்றது. பாகு என்பது கை.

௪௭-வது அநாயாசக வாதரோகம்.

இது, வேகமானஓட்டம்,மலசலமுதலியபதினாலுவேகத்தை அடக்கிவிடுதல், சீதளவஸ்து, க்ஷயபோஜனம் இவைகளினால்பிறந்து, சகலதாதுக்களிலும் வியாபிக்கும்; அப்போது தேகத்தில் அதிகவேதனை, மரத்தல், குத்தல்,கனத்தல்,நானாவிதவருத்தம்என்னும் இக்குணங்கள் உண்டாகும். அநா என்பது பிராணன்; ஆயாசம் என்பது வருத்தம்.

௪௮-வது அவுஷ்மாபக வாதரோகம்.

இது, சீதவீரியவஸ்து,உஷ்ணவீரியவஸ்து,லவணவீரியவஸ்து,மலபந்தவஸ்து,கிழங்குவஸ்து,அகாலபோஜனம்,விரோதபோஜனம், அசீரணபோஜனம்,கோபம்,துக்கம்ஆகிய இவைகளினாலும், சடராக்கினி மிகுதியினாலும் பிறந்து, சரீரத்தின் மத்தியில்தங்கிப் பித்தத்துடன்கூடி,அந்தச்

சடராக்கினியின் உஷ்ணத்தைத்தன்னுடன் சேர்த்துக்கொண்டு உபத்திரவத்தைச்செய்து, சிரசிலும் கபாலத்திலும் சஞ்சரிக்கும்; அப்போது நடுநெற்றியிலும்மார்பிலும்எரிச்சல்,தலையிலும்முதுகிலும்நோவு,நடுக்கல், வாந்தி,வியர்வை,பிரமைஒருவேளைகண்டத்திலும்நெற்றியிலும்நெறியிலும் புருவத்திலும் விடாத வேதனை, இதனால் பொறுத்துப் பொறுத்துக் கூவுதல் என்னும் இக்குணங்கள் உண்டாகும். இது, உஷ்ணத்தை வரவழைத்துக்கொண்டமையால்,அவுஷ்மாபகவாதம்எனப்பேர்பெற்றது. இது ஒருவருஷத்துக்குள் அசாத்தியம். இதற்குமேல் சாத்தியம்.

௪௯-வது * ஊர்த்துவாம்மிசசர வாதரோகம்.

இது,முற்கூறிய அவபாருகவாதத்தைப் பிறப்பித்தவஸ்துக்களினால் பிறந்து,தோளிலிருக்கின்றசப்ததாதுக்களையுமநுசரித்துப்பாம்பைப்போல் திரியும்; அப்போதுதோளில்மரத்தல்,நோவு,கனத்தல்,வரவரத்துர்ப்பலம் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

௫௰-வது ஆயாசாவர்த்த வாதரோகம்.

இது, பிரமாணந்தப்பி உண்ணுகின்ற பித்தகப வஸ்துக்களினாலும் பலவித அன்னத்தினாலும்பிறந்து, பித்தத்தோடுகூடிச் சப்ததாதுவிலும் அநுசரித்து, ஆயாசத்தைப்பிறப்பித்துவேதனையைச்செய்யும்; அப்போது சர்வாங்கநோவும் குத்தலும் பிரமையும் உண்டாகும். இது ஆயாசத்தை உண்டாக்கிச் சுழலுவதால், ஆயாசாவர்த்தவாதம் எனப் பேர்பெற்றது.

௫௧-வது அர்த்தித வாதரோகம்.

இது, சைத்தியவஸ்துக்களைப் புசித்தல், வெகுநேரம் உரத்துப் பேசுதல்,தலைமூட்டைஎடுத்தல், மிகவும்நகைத்தல்,பயப்படல்,கழுத்தைச் சாய்த்துத்தும்மல், வளையாவில்லைவளைத்தல், திண்டு திவாக்ஷியிற்படுத் துறங்கல்,பாக்குமுதலிய கடினவஸ்துவைக் கடித்தல்ஆகிய இவைகளினால் பிறந்து, பாதிமுகத்தில் சஞ்சரிக்கும்; அப்போது அவ்விடத்தில் நோவும் குத்தலும்அதிரலும்மரத்தலும் கனத்தலும் உண்டாவதன்றியும், கண்டம், நெறி,நெற்றி,நாசி,செவி,புருவம்,சிரசுஆகியஇவ்விடங்களில்நோவு,தலையில் நடுக்கலுடன்வேதனை, கம்மலுடன் குளறியவார்த்தை, பேச்சுத்தவறுண்டு வருதல், நாவுமரத்தலுடன் உள்ளில்சுருங்கல், ஒருகண்மூடல், ஒருகண் விழித்தல், அக்கண்களில் நீர்வடிதல், முகமும் நகைப்பும் பார்வையும் கோணுதல்,தந்தங்கள்அடித்துக்கொள்ளுதல்,அற்பநகைப்பு,சிறியதும்மல், காதுகேளாமை, வாசனைபங்கம், அறிவுநீங்குதல், நித்திரை அதிகரித்தல், முதுகந்தண்டெலும்பிலும் பாதிஉடம்பிலும்நோவு,உமிழ்நீரானது விசையுடன்தூரத்தில் ஒழுங்காகவிழாமல் சமீபத்தில் ஒருக்களித்து விழுகுதல்,

---

* ஊர்த்துவம் என்பது மேல்; அம்மிசம் என்பது தோள்; சரம் என்பது ஓடல்.

பயம் என்னும் இக்குணங்கள் உண்டாகும். இது,பாதிமுகத்தை விகாரப் படுத்தலால், அர்த்திதவாதரோகம் எனப்பேர்பெற்றது. இது மூன்று மாசத்துக்குமேல் செய்கின்ற சிகிச்சைகளினுல் சாத்தியமாகும். ஒரு வருஷதுக்கு மேற்பட்டால், அசாத்தியமாகும்.

௫௨-வது அநுஸ்தம்ப வாதரோகம்.

இது, சிலேஷ்மமந்தபதார்த்தம்,கிழங்குகள்,கீரைக்கட்டை முதலிய வேர்கள்,சீதளசலம், அவ்விதக்காற்று, பகல்நித்திரை ஆகிய இவைகளினுல் பிறந்து,வாயினுடைய இரண்டுதோளின் மூலங்களிலும்காதின்அடிகளிலும் அநுசரிக்கும்; அப்போது தோள்கள்மரத்து இறுகினதுபோலிருத்தல்,நாவு உள்ளில் சுருங்கிக்கொள்ளுதல், முகத்தின்தொழில் அடங்குதல், சீதளம், இவ்வாயுவு அதிகரிக்கில் சிலேஷ்மகுணைம்மேலிடுதல் என்னு மிக்குணங்கள் உண்டாகும். அனு என்பது தாடை.

௫௩-வது உக்கிராக்கிரக வாதரோகம்.

இது,தயிர்,பால்,இலைக்கறி, துவரை, கருணைக்கிழங்கு, மச்சமாமிசம், அகாலபோஜனம்,பகல்நித்திரை,சீதளஇடத்தில்சீதளப்பாயலில்படுக்குதல், பதினுலுவேகத்தை மறித்தல், மிகுசையோகம் இவைகளினுல் பிறந்து, சிரசு, கண்டம், மார்பு, கீழ்வயிறு, திரிகஸ்தானம், மர்மஸ்தானம் ஆகிய இவ்விடங்களில் சஞ்சரிக்கும்; அப்போது தேகத்தில்நோவு, இளைத்தல், மரத்தல், கனத்தல், எரிச்சல், தலையிலும் மர்மஸ்தானங்களிலும் குத்தல், குடைச்சல், இவ்விடந்தவிர்ந்த மற்றைய இடங்களில் நோவு என்னும் இக்குணங்கள் உண்டாகும். இது, அந்தத்தில் உக்கிரத்தைச்செய்தலால், உக்கிராக்கிரக வாதரோகம் எனப்பேர்பெற்றது. இது, முன்சொன்ன துர்க்குணங்களுடன் பித்தசிலேஷ்மங்களில் தொந்தப்பட்டு அதனதன் குணங்களைப்பிறப்பித்துச் சகிக்கக்கூடாத எரிச்சலைஉண்டாக்கிக்கொண்டு நெடுநாள் நீங்காதிருக்குமாயின், அசாத்தியம். இதனைச்சிலநூலில், ஐந்து வருஷத்துக்குமேல், அசாத்தியம் எனச் சொல்லப்படுகின்றன.

௫௪-வது விஸ்மாரியக வாதரோகம்.

இது,விரோதரசம்,சீதவீரியவஸ்து,மிகுஉஷ்ணவஸ்து,பித்தவஸ்து, லவணவஸ்து, பலவிதவஸ்து, உலர்ந்தபதார்த்தம் ஆகிய இவைகளினுல் பிறந்து, சரீரத்தின்மத்தியகண்டத்தை அநுசரித்து, அவ்விடத்துச்சமான வாயுவைப் பித்தத்துடன் சேர்த்துவிட்டு, தான்மாத்திரம் நாபிக்குமேல் நின்றுகொண்டுஉபத்திரவத்தைச்செய்யும்; அப்போததிகமறதி,மார்பிலும் சிரசிலும் எரிச்சலுடன்நோவு, நெற்றி, நெறி, காது,சிரசு, முதுகு, விலா இவ்விடங்களில்மரத்தல், கனத்தல், வியர்வை, தேகம் இளைத்தல், தாகம், தலைசுழலல், இளைப்பு, புத்திதெளிவின்மை, எத்தொழிலிலும் மனது

செல்லாமை என்னும் இக்குணங்கள் உண்டாகும். இது, பசியென்றும் தாகமென்றும் இன்னவித உபத்திரவமென்றும்தெரிய ஒட்டாத மறதியை உண்டாக்கலால, விஸ்மாரியகவாதரோகம் எனப் பேர் பெற்றது.

௫௫-களாவர்த்த வாதரோகம்.

இது, அன்னபானாதிகளை அருந்துங்காலத்தில் தாள்விரியும்படியாக வாயைமிகவும் திறத்தலினாலும், சீதளவஸ்துவினாலும், அசீரணபோஜனத்தினாலும்பிறந்து, களத்தின்நரம்புகளை அநுசரிக்கும்; அப்போதுகழுத்தில் நோவு, கனத்தல், மரத்தல், அவ்விடத்துநரம்புகள் விகுத்துக்கொள்ளல், சகிக்கக்கூடாத வேதனை என்னும் இக்குணங்கள் உண்டாகும். இது, கழுத்தின் நரம்புகளில் சுழலலால், களாவர்த்தவாதம் எனப்பேர்பெற்றது.

௫௬-வது பிரமோன்மந்த வாதரோகம்.

இது, குதிரைமுதலியவாகனங்களில்ஏறுவதால்வந்தகாங்கையினாலும், பித்தவஸ்துக்களினாலும், சரீரத்தை உலர்த்துகின்றபதார்த்தங்களினாலும் பிறந்து, பித்தத்துடன் கூடிக்கொண்டு உபத்திரவத்தைச் செய்யும்; அப்போது கிழவர்களுக்குண்டாகுங் குறிகளைப்போல் கண்களில் இருட்கம்மல், மயக்கத்துடன்தடுமாறிவிழுதல், உடனேதெளிந்தெழுந்திருக்குதல், சரீர எரிச்சலென்னு மிக்குணங்கள் உண்டாகும். இது, பித்தத்துடன் கூடி நேத்திரத்துக்கு மயக்கத்தையும் நடைக்கு மந்தத்துவத்தையும் உண்டாக்கலால், பிரமோன்மந்தவாதரோகம் எனப் பேர் பெற்றது.

௫௭-வது அதிதாபக வாதரோகம்.

இது, சீதவீரியமந்தபதார்த்தம், கிழங்குவகை, தயிர், பால், மாமிசரசம், வாதவஸ்து பித்தவஸ்து, சிலேஷ்மவஸ்து, அசீரணபோஜனம், விரோத போஜனம், போஜனத்தின்மேல் போஜனம் ஆகிய இவைகளினால் சதா சீதளஸ்தானத்தில் நடப்பதினாலும், சுராந்தவிஷமகாலத்தில் நின்றும் அல்லது பித்தரோக முதிர்ச்சிகாலத்தில்நின்றும் உதிரத்தைச்சொரிகின்ற ரத்தபித்தரோகத்தில்நின்றும் பிறந்து, சர்வாங்கத்தையும் அநுசரித்துத் தபிக்கப்பண்ணும்; அப்போதுதேகத்தில்..தறல், மரத்தல், விழித்தபடியேயிருத்தல், தலைசுழலல், கடைக்கண்துடித்தல், கொட்டாவி, மிகுநித்திரை, இன்னவிதவேதனை என்றுசொல்லக்கூடாமை, ஆயாசம், தலைமரத்தல், கை யுதறல், விரல்முடங்குதல், இரைச்சலில்லாதபேதி, ஒருவேளை அதிகபேதி, மூத்திரம்பெருகுதல், வாந்தி, வயிறுப்பல், ஞாபகமறதிஎன்னு மிக்குணங்கள் உண்டாகும். இது, தேகத்தைப் பலவிதத்தினாலும் தபிக்கப்பண்ணலால், அதிதாபகவாதரோகம்எனப்பேர்பெற்றது. இதில்சொல்லியதுர்க்குணங்களெல்லாங்கண்டாலும், அல்லது சிலதுர்க்குணங்கள்மாத்திரங்கண்டாலும், கண்டமூன்றுநாளில் மரணம். அந்நாள் தப்பில், சாத்தியமாகும்.

௫௮-வது ஆசியாக்ஷேப வாதரோகம்.

இது, சிலேஷ்மமந்தபதார்த்தம், கிழங்குவகைகள், இலைக்கறி கீரைவேர், கனிவகை, பித்தவஸ்துவிலும் எண்ணெய்வஸ்து, தயிர், மச்சமாமிசம் இவைகளினால் பிறந்து, காதிலும் நாசியிலும் தாடையிலும் அநுசரித்து, வாயின் நடுவிலும் அதற்குக் கீழிலும் மேலிலும் சஞ்சரித்துக் கொண்டே இருக்கும்; அப்போது நாக்குஸ்தம்பித்தல், தழுதழுத்தவார்த்தை, பல்லைக் கடித்தல், சிரசிலும் முகத்திலும் பாதத்திலும் துடித்தல், பிரமை, கழுத்தில் நோவுடன் நரம்புகள் விருக்துக்கொள்ளுதல், ரத்தங்கக்கல், பார்வைசிதரல், மறதி, தேகம்மரத்தல், நாசியில்நோவு, பீநசம் என்னும் இக்குணங்கள் உண்டாகும். இது, அதிகரித்துச் சர்வாங்கத்திலும்நடுக்கலை உண்டாக்கில், அசாத்தியம். ஆசியம் என்பது வாய்.

௫௯-வது தொனிவிச்சின்ன வாதரோகம்.

இது, சிலேஷ்மவஸ்து, வாதவஸ்து, சீதவீரியவஸ்து, மந்தபதார்த்தம், அசீரணபோஜனம், பிண்ணாக்கு, பயம், அதிகலங்கனம் இவைகளினால் பிறந்து, அடிநாவை அநுசரித்துக் கண்டத்தில் இருக்கும் சிலேஷ்மத்தில் கூடிக்கொண்டு, கண்டத்தொனியைத் துண்டிக்கும்படி செய்யும். இது அதிகரித்தால், நாவை அசைக்கக்கூடாத குணமும் உண்டாகும்.

தொனி என்பது சத்தம்; விச்சின்னம் என்பது துண்டித்தல்.

௬௰-வது திர்க்குபிராந்தி வாதரோகம்.

இது, உலர்ந்தபதார்த்தம், லவணகாரவஸ்து, மந்த மச்சங்கள், சிலேஷ்மபித்தவஸ்து பிண்ணாக்குஆகிய இவைகளினால்பிறந்து, விழிகளின் மூலத்தில் அநுசரித்து, அவ்விடத்தில் இருக்கின்ற சிலேஷ்மத்தில் கூடிக் கொண்டு உபத்திரவத்தைச்செய்யும்; அப்போது கண்களில் நீர்க்கம்மல், கலங்கல், நோவு, பிரமை, எரிச்சல், விழிக்கும்போதுமயக்கம் என்னும் இக்குணங்களுண்டாகும். இதனை நேத்திரஉபத்திரவாதம், கண்மயக்குவாதம் எனவும் கூறுவர். திர்க்கு என்பது கண்; பிராந்தி என்பது மயக்கம்.

௬௧-வது தொனோபகாத வாதரோகம்.

இது, விரோதரசம், மலமந்தவஸ்து, மந்தவஸ்து, சீதவீரியவஸ்து, எண்ணெய்வஸ்து, அதிகலங்கனம், வேகநடை, மிகுந்தவார்த்தை, துக்கம் ஆகிய இவைகளினால்பிறந்து, பாதிவாயிலும்நாசியின்மூலத்திலுமநுசரித்து அவ்விடத்துச் சிலேஷ்மத்தில் கூடிக்கொண்டு தொனியைக்கெடுக்கும்; அப்போது கம்மியவார்த்தையும் மூச்சுத்திணறலும் உண்டாகும். இது, கீச்சுக்குரல் உள்ளவர்பேசும் வார்த்தையைப்போல் பேச்சைக் கம்மும்படிக்குச்செய்வதால், தொனோபகாதவாதம் எனப்பேர் பெற்றது.

கூஉ-வது திர்க்குஸ்தம்ப வாதரோகம்.

இது, அதிகபோஜனம், அகாலபோஜனம், பகல்நித்திரை, மந்த சீதளவஸ்து, மாப்பண்டம்,கிழங்குவகை, மச்சமாமிசம், வெகுநடைஆகிய இவைகளினுல்பிறந்து,விழிகளின் மூலத்தில்பித்தத்துடன்சேர்ந்துகொண்டதிகரிக்கும்; அப்போது நெற்றியிலும் நெறியிலும் முகத்திலும் மரத்தலுண்டாகி, பின்பு கண்ணிலும் புருவத்திலு மிமையிலும்கனத்தல், மரத்தல்,அக்கண்விழியைக் கையால் தடவிப்பார்க்கில் ஓட்டாங்கிளிஞ்சில் போல்தோற்றுதல், நீர்க்கம்முதல் என்னும் இக்குணங்கள் உண்டாகும். இது, கண்களை ஸ்தம்பிக்கச்செய்வதால், திர்க்குஸ்தம்பவாதம் எனப் பேர்பெற்றது. இதுவே நேத்திரஸ்தம்பவாதமாம்.

கூங-வது விவுர்தாசிய வாதரோகம்.

இது,சிலேஷ்மவஸ்து,சீதவீரியவஸ்து,போஜனத்தின்மேல்போஜனம், பகல்நித்திரை, மிகுந்தநடை இவைகளினுல்பிறந்து, வாயின் நரம்புகளை அநுசரித்துநிற்கும்; அப்போது வாயானது மூடாமல் திறந்தபடியே இருக்கும். விவுர்தம் என்பது திறத்தல்.

கூச-வது சம்விருதாசிய வாதரோகம்.

இது,மச்சமாமிசம்,மந்தரசம்,அகாலபோஜனம்,தயிர், அதிகலவணம், சுதாநித்திரை, வெகுநடைஆகிய இவைகளினுல்பிறந்து, விவுர்தாசிய வாதம்போல்நரம்புகளில்அநுசரித்துக்கபத்தில்கூடித்துன்பவிளைக்கும். இதனுல், மூடினவாயைத் திறக்கக்கூடாமலும் அவ்வாயில் மரத்தலும் தடித்தலும் நோவுமுண்டாகும். இது,வாயைமிகவும்மூடும்படிசெய்தலால், சம்விருதாசியவாதம் எனப் பேர்பெற்றது. சம்-மிகுதி; விருதம்-மூடல்.

கூரு-வது புருவாடோபக வாதரோகம்.

இது, மந்தவஸ்து, மலபந்தவஸ்து, சிலேஷ்மவஸ்து, கிழங்குவகை, அகாலபோஜனம், ஈரவஸ்திரத்தைத் தலையிற்கட்டிக்கொள்ளுதல்,மிகவும் சீதளஇடத்தில்சஞ்சரிக்குதல், பகல்நித்திரைஆகிய இவைகளினுல்பிறந்து, நெற்றியிலும் புருவங்களிலும் கண் இமைகளிலும் அநுசரித்துநிற்கும்; அப்போது புருவங்களில் ஓயாது துடித்தல் உண்டாகும். இது,புருவத்தை அடிக்கடித் துடிக்கும்படிசெய்தலால், புருவாடோபகவாதம் எனப் பேர்பெற்றது. ஆடோபகம் என்பது துடித்தல்.

கூசா-வது பாதிரிய வாதரோகம்.

இது, மச்ச மாமிசத்தையும் மந்தவஸ்துவையும் பிரமாணந்தப்பி மிகவும் புசித்தலினுல்பிறந்து, காதின் உள்ளிலும் அடியிலும் இருக்கின்ற சிலேஷ்மத்தோடுகூடி நாதநரம்புகளை அநுசரித்துச் சத்தமார்க்கத்தை யடைத்துச் செவிடாக்கும்; அப்போது, பெருங்கூச்சலிட்டாலும், காதில்

சத்தங்கேளாமை, சமுத்திரகோஷம்போலிரைச்சல்,சலம் வடிதல் என்னு மிக்குணங்கள் உண்டாகும். இதனைச்செவிபடுவாதம் எனச்சொல்வர்.

பாதிரியம் என்பது கடினத்துக்கும் செவிட்டுக்கும்பேர்.

கூஎ-வது கர்ன்னசூலை வாதரோகம்.

இது, அதிகசீதளதடாகத்தில் மூழ்கி மயிரையுலர்த்தாமல் முடிந்து கொள்ளல், குளிர்காற்றில் அடிபடல், உடனே சிலேஷ்ம வஸ்துக்களைப் புசித்தல் ஆகிய இவைகளினால் பிறந்து, காதுகளில் சேர்ந்துகொள்ளும்; அப்போது செவிகளின்மூலத்தில் குத்தலுடன்நோவு,சிரசு,பிடரி,நெற்றி, நெறி, கண், புருவம், நாசி, தந்தங்களின்வேர், தாடை, கண்டம்ஆகிய இவ் இடங்களில் வாளால் அறுப்பதுபோலிருத்தல், தேககனதி, குடைச்சல் என்னும் இக்குணங்கள் உண்டாகும். கர்ன்னம் என்பது காது.

கூஅ-வது அவபேதக வாதரோகம்.

இது, மதுரான்னம், போஜனத்தின்மேல் போஜனம், உலர்ந்த பதார்த்தம் பகல்நித்திரைஆகிய இவைகளினால்பிறந்து, சிலேஷ்மத்தினால் மறிபட்டுக் கண்ணிலும் புருவத்திலும் நெற்றியிலும் வியாபிக்கும்; அப்போது ஒருமத்திபானமாவது, அல்லது ஒருநாள் முழுவதுமாவது, மூன்றுநாள் இராவும்பகலுமாவது நெற்றி பிளந்துபோவதுபோல் சகிக்கக் கூடாத வேதனை உண்டாகும். அவபேதகம் என்பது பிளக்குதல்.

கூகூ-வது ஊர்த்துவமுக வாதரோகம்.

இது,மலபந்தவஸ்து,சீதளவிரோதஉண்டி,பகல்நித்திரை,சதாபடுக்கை அல்லது உட்காந்திருக்குதல், மலசலம்அடக்கல் இவைகளினால் பிறந்து, மேல்வயிற்றையும் மார்பையும்பற்றி, அபான சமான வாயுக்களுடன்கூடி விஷமரூபமாக அதிகரித்து, மிகுவேகத்துடன் மேல்எழும்பிக்கொண்டே இருக்கும்; அப்போது எலும்புகளெல்லாம் நொறுங்கியதுபோல்வேதனை, குடல் விலா கண் முகம் இவைகளில்அதிநோவு, வயிற்றில் உப்பிசம், கனத்தல்,மரத்தல், தாள்வாய்ப்பிடிப்பு,நடுக்கல், அறிவின்மை, பிரலாபம், வாயில் நுரைநுரையாக விழுதல் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

எல-வது அதோமுக வாதரோகம்.

இது, அசீரணபோஜனம், மலபந்த சீதளவஸ்து, துஷ்டவாகன வேகத்தால்குலுங்கிமெலிதல்,பதினாலுவேகத்தை யடக்கிமிதந்தப்பிவிடுதல் இவைகளினால்பிறந்து, நாபியிலிருக்கும்சமானவாயுவோடு குதத்திலிருக்கு மபான வாயுவோடும்கூடி, பின்பு பித்தத்தை அநுசரித்து எரிச்சலைப் பிரதான குணமாக வைத்துக்கொண்டு, மார்பிலும் வயிற்றிலும் கீழ் வயிற்றிலும் கவுட்டியிலும் கீழாக இறங்கிஇறங்கி வேதனையைச்செய்யும்; அப்போது ஒருபக்கத்துப் பீசத்திலாவது இரண்டிலுமாவது கனத்தலும்

ரவும் வீக்கமும் நமைச்சலும் உண்டாகும். அன்றியும் ஆண்குறியின்
பாரம் அடைபட்டுச் சுக்கிலம்மறிபடும், மூத்திரம் பிரயாசையுடன்
ரித் துளியாயிறங்கும். இவ்வாயுவு குதஸ்தானத்திலும் இறங்கலால்,
ளத்தில்சுருக்கமு மலபந்தமுமுண்டாகும். இந்தரோகம் மாதர்கட்குக்
றுங்காலத்தில், முற்கூறிய கிரமமாகவே அல்குலிற் சேர்ந்துகொண்டு,
ந்துவாரங்களைச் சுருக்கி, மலசலத்தைப் பந்தித்து மிகு வேதனையைச்
ப்யும். இது, கீழ் இறங்கலால், அதோமுகவாதம் எனப் பேர்பெற்றது.
லெல்சொன்ன துர்க்குணங்கள் வரவர அதிகரிக்கில், அசாத்தியமாம்.

௭௧-வது ஆசியக்குவாத வாதரோகம்.

இது, முற்கூறிய ஆசியாவதங்களைப் பிறப்பித்த வஸ்துக்களினுல்
ந்து, வாயிற்சேர்ந்துகொண்டு உபத்திரவத்தைச்செய்யும்; அப்போது
பில் ஒருவஸ்துவையும் போடக்கூடாமல் ரணம்போல் இருப்பதும்
ன்றி, நாவில் மேடும் பள்ளமுமாகவிருத்தல், மார்புநோவு, கண்டத்தில்
ருருருஎன்னும் ஒருசத்தம் என்னும் இக்குணங்கள் உண்டாகும். இது,
யைக் கொதிக்கும்படிசெய்தலால், ஆசியக்குவாதவாதம் எனப் பேர்
ற்றது. இதனை ஆசியபாகவாதம் என்றும்சொல்வர்.

௭௨-வது சிதிலாவர்த்த வாதரோகம்.

இது, சீதளவஸ்து, மந்தவஸ்து, வழுவழுத்தவஸ்து, மலபந்தவஸ்து,
ர்ந்தபதார்த்தம், வெகுநடை, கனவுழைப்பு ஆகிய இவைகளினுல்பிறந்து,
களிலும் வாதநரம்புகளிலும் மற்றநரம்புகளிலும் சேர்ந்துகொண்டு
தனையைச்செய்யும்; அப்போது அர்த்திதவாதகுணங்களும், ஆயாசமும்,
ருநசம்இளைப்பும், நிலைக்கண்படுதலுமுண்டாகும். இது, சகலகீல்களையும்
கலக்கப்பண்ணிச் சுற்றிக்கொண் டிருப்பதால், சிதிலாவர்த்தவாதம்
ரப்பேர்பெற்றது. இவைநிற்க, முற்கூறிய மூடவாதரோகாந்தத்தில்
ட்பலம், ஞாபகமறதி, மூர்ச்சை, அம்மூர்ச்சையால் அடிக்கடிமயங்கி
தல், விழுந்தாலும்உடனேதெளிதல், கீல்களெல்லாந் தளரல்என்னும்
குணங்களுண்டாகுமென்றும், அதற்குக்கோரவாதமெனப் பெயரொன்
ய, அதுவே இந்தச்சிதிலாவர்த்த வாதமென்றும், சூரபாணிமுதலிய
ள் வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். சிதிலம் என்பது தளரல்.

௭௩-வது சர்வாங்க வாதரோகம்.

இது, அதிசீதவீரியவஸ்து, மலபந்தவஸ்து, மந்தவுஷ்ணவஸ்து,
ராதஉண்டி, அகாலஉண்டி, துரிதமாகவருகின்ற மலசலத்தை அடக்கி
தல், அதிகநடை, இரவில் அநித்திரை, பகல்நித்திரை, லங்கனம்,
மானசுமைசுமந்து வழிநடக்குதல், நித்தியசையோகம் செய்தல்ஆகிய
வைகளினுல் பிறந்து. சர்வாங்கத்திலும் பரவி, மேலில் வேதனையைச்

செய்து,உள்ளில்கில்களைத்தளரப்பண்ணி எலும்புகளிலலையடிப்பதுபோல் அடித்துக்கொண்டேஇருக்கும்.இதனால்,ஏப்பம்,மிகுவாந்தி,வயிற்றுநோவு, பேதி,பிரமை,வாயி லனல்வீசுதல்போலிருத்தல்,விஷமாக்கினி, மூர்ச்சை, இளைப்பு,ஆயாசம்,சரீரநோவு, அசதியாகக்கிடக்குதல் என்னுமிக்குணங்களுண்டாகும். இது, சரீரம்முற்றிலும்பரவியதால், சர்வாங்கவாதம் எனப் பேர்பெற்றது. இது ஒருவருஷத்தின்மேல் அசாத்தியம்.

௭௪-வது சிரச்சால்லிய வாதரோகம்.

இது, நாலிழைந்து நொந்து சலம்பிறந்த அன்னம், மதுரவஸ்து, வழுவழுத்தவஸ்து, மந்தவஸ்து, சிலேஷ்மவஸ்து, சீதளவஸ்து ஆகிய இவைகளினால்பிறந்து, சிரசை அநுசரிக்கும்; அப்போது தலைநடுக்கலும், நெற்றி செவியின்மூலம் கண் இவைகளில்நோவும் உண்டாகும். இதனைச் சிரக்கம்பவாதம்,தலைநடுக்குவாதம்எனவும்சிலநூலில்சொல்லப்படுகின்றன. சிரசு என்பது தலை; சால்லியம் என்பது அசைதல்.

௭௫-வது கராக்ஷேபக வாதரோகம்.

இது, அதிகவாதவஸ்துக்களைமிகவும் புசித்தலினால்பிறந்து, சர்வாங்கத்திலும் வியாபித்து, பின்பு கைகளை அநுசரிக்கும்; அப்போது நிரோதுவாகவே கைகளுக்குச்சுழற்றல் உண்டாவதன்றியும், அசைதலும் நீட்டமுடக்கக் கூடாமலுமாக இருக்கும். இதனை அஸ்தகம்பவாதம் எனச் சிலநூலிற் சொல்லப்படுகின்றன. கரம் என்பது கை.

௭௬-வது அங்கசலன வாதரோகம்.

இது, வாதத்தைப் பிறப்பிக்கின்ற வஸ்துவையும், ஒன்பதாவது பக்கத்திற்கூறிய வாதகோபவஸ்துவையும் மிகவும்புசித்தலினால் சர்வாங்கிலும்பிறந்து, வாதநரம்புத்துவாரங்களிலும் கபநரம்புத்துவாரங்களிலும் வியாபித்து, உடம்பெங்கும்பரவி வேதனையைச்செய்யும்; அப்போது ஊர்த்துவாங்கத்திலாவது அதோங்கத்திலாவது நடுக்கல் உண்டாகும். இவ்வாயுவு,ஒருஅங்கத்தில் இருக்கில்,சாத்தியமாம்; இரண்டிலும்இருக்கில் அசாத்தியமாம். அங்கம் என்பது தேகம்; சலனம் என்பது அசைதல்.

௭௭-வது அந்நியேத்துக வாதரோகம்.

இது,கனஉப்புவஸ்து,காங்கைவஸ்து,உஷ்ணபதார்த்தம், சிலேஷ்மசீதளபதார்த்தம்,இலைக்கறிஆகிய இவைகளினால்பிறந்து, தோள், முதுகு, கழுத்து,சிரசு,விலாஇவ்விடங்களில் வேகமாகவியாபித்துப் பித்தத்துடன் கூடி, ஒருநாள்விட்டு மறுநாளில் மிகுவேதனையைச் செய்வதாயிருக்கும். இதனாலவ்விடங்களில் மரத்தலும்கனத்தலும்நோவும் உண்டாவதன்றியும், தாகம், வாயில் அனல்வீசுதல்போலிருத்தல், பிரமை, சுரம், மூர்ச்சை என்னு மிக்குணங்கள் உண்டாகும். இதுநாளுக்குநாள் அசாத்தியமாம்.

௭௮-வது தொனிகத்கத வாதரோகம்.

இது, அதிசீதளபதார்த்தம், மந்தமதுரபதார்த்தம், சிலேஷ்மவஸ்து, எண்ணெய்வஸ்து, விரோதரசம், கந்தமூலவருக்கம், எள்ளு, பிண்ணாக்கு ஆகிய இவைகளை விசேஷமாகப்புசிப்பதினால் பிறந்து, தொனோபகாத வாதத்தைப்போல் நாசியிலும் காதுமூலத்திலும் வியாபித்துச் சிலேஷ்மத்துடன்கூடி அதிகரிக்கும்; அப்போது நாசியால் பேசுவது போலப் பேச்சுண்டாகும். இது, தொனியை அடக்கலால், தொனிகத்கதவாதம் எனப்பேர் பெற்றது.

கத்கதம் என்பது அடக்குதல்.

௭௯-வது கம்பீர வாதரோகம்.

இது, வாயுவைப்பிறப்பிக்கும் வஸ்துக்களினால்பிறந்து, முதல்முதல் ஊர்த்துவாங்கத்திலாவது, அதோங்கத்திலாவது, சர்வாங்கத்திலுமாவது இருக்கின்றரசதாதுவைப்பற்றிஒவ்வொருதாதுக்களாகதாண்டிக்கொண்டே உள்ளில்ஆழ்ந்து, அஸ்திரதாதுவுக்கு உள்ளிருக்கும் மச்சைதாதுவை அநுசரித்துத் துன்பைவிளைக்கும்; அப்போது சர்வாங்கவேதனைமரத்தல், கை கால் முடங்குதல், வாந்தி, மூர்ச்சை என்னு மிக்குணங்க ளுண்டாகும். இது, மச்சைதாதுவரைக்கும் ஆழ்ந்திருப்பதால், கம்பீரவாதம்எனப்பேர் பெற்றது. ஒருவேளை தோலைமாத்திரம் பற்றிநின்றால், உத்தானவாதம் எனக்கூறப்படும். இது சகலவாதரோகங்களைப்பார்க்கிலுங் கொடிது.

கம்பீரம் என்பது ஆழம்; உத்தானம் என்பது ஆழமல்லாமை.

௮௰-வது பரிஸ்போட வாதரோகம்.

இது, வாதவீரியம், பித்தவீரியம்என்னும் பதார்த்தங்களைமிதமின்றி நாள்தோறும் புசிப்பதினால்பிறந்து, பித்தத்துடன்கூடிச் சரீரமுற்றிலும் பரவி, பரவியமறுநாளில் கொப்பிளங்களை உண்டாக்கும். இதனால் பாதாதிகேசம்வரைக்கும் சிறிதாகவும்நெருக்கமாகவும் மிகுகொப்பிளங்கள் உண்டாகும்.

பரிஸ்போடம் என்பது மிகுந்தகொப்பிளம்.

ஆக வாதரோகம் ௮௰-ம் முற்றுப்பெற்றன.

இவற்றுள், துனி, பிரதிதுனி, அபிநியாசம், ஆந்நியேத்துகம் ஆகிய நான்குவாதரோகப் பெயர்க்குப்பொருள், ௱௨௰, ௨௯, ௩௪ என்னும் பக்கங்களிற்கண்டுகொள்க. இப்பேதங்களையெல்லாம் ஆயுள்வேதபண்டிதர் நிதானிக்கவேண்டும். அன்றியும் பாரத்துவாசர், போஜர், கிருஷ்ணர், ஆத்திரேயர் என்னும் மகாமுனிவர்கள் அருளியசாஸ்திரங்களும், வாதரோகத்தை ௮௰-விதமாகவே சொல்லுகின்றன.

மதாந்தரம்.

சிந்தாமணிஎன்கின்றநூல், வாதரோகம் ௮௪-விதமெனக்கூறுகின்றது. இவற்றுள், சிரோரோகம், கர்ன்னரோகம், குன்மம், மேகம், சூலை, இவைகளைச்,

சார்ந்ததாகவிருக்கின்றவாதம் ௨௧. இதுகளை அவ்வவ்விடங்களிற் சொல்லி இருப்பதினாலும், மற்ற ௬௩-ல், ௫௯ முன்சொன்ன வாதரோகங்களே யாகையாலும், அவையொழிந்த நான்கும் கூறப்படும்.

௧-வது மூத்திரஉதிர வாதரோகம்.

மூத்திரவாந்தி, நெஞ்சுலர்தலுடன்நோவு, வீக்கம், நித்திரைப்பங்கம், தேகளரிச்சல், வயிற்றுநோவு, அதிகவிக்கல், இருமல், அடிவயிற்றில் கனத்தலுடன்நோவு என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௨-வது வச்சிரரூபக வாதரோகம்.

கழுத்துப்பிடரியி லதிகநோவு, விழிகள்அசைவின்மை, கொறுக்கை என்கிற ஒருவிதஆண்குறிப்புண், தலைநோவு, நடுக்கல், குதிகால்நரம்புகளில் நோவுடன்திமிர், கொட்டாவி, சோம்பல், பிரலாபம், மலசலக் குறைவு என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௩-வது அசுவ வாதரோகம்.

குதிரைக்குட்டியின் பாய்ச்சலைப்போல் தேகம்முழுதுங் குலுங்கும் படியாகப்பாய்ந்து மேல்நோக்கிஏறி அவ்வாறேகீழிறங்கி அண்டத்தை வீங்கச்செய்து, அவைகளில்தங்கிக் கோசத்தைச் சுருங்கப்பண்ணி, கோசத்திலும் அடிவயிற்றிலும் அளவிடக்கூடாதநோவை உண்டாகும்.

௪-வது பேய் வாதரோகம்.

கால் கைவிரல்கள், வயிறு, நெஞ்சுக்குழி, கண்டம், மூக்குஆகிய இடங்களில்எரிச்சல், நோவு, வீக்கம், நிமிரவும் ஒன்றைஎடுக்கவும் கூடாமையாக இருத்தல், வாயில்கசப்பு, மயக்கம்என்னு மிக்குணங்களை உண்டாகும்.

மதாந்தரமுற்றியது.

மேற்சொல்லிவந்த வாதரோகங்களை, தழுதாழைக்குளிநீர், வெந்நீர் முதலியஒத்திடம், வாதாரியடைகஷாயம், யவ்வகைச்சுரசம், விரேசனகற்கம், உஷ்ணவீரியலேபனம், அஸ்வகெந்திச்சூரணம், மதுஸ்மிகிவெங்கை, நறுக்குமூலரசாயனம், மகோஷதிக்கிருதம், வாதகுடாரிவிரேசனம், சாறணைமூலலேகியம், வாதகேசரித்தயிலம், அற்கக்ஷீராதித்தயிலம், வாதாந்தத்தயிலம், வாதநாசத்தயிலம், மெருகுள்ளியெண்ணெய், வச்சிரபீஜத்தயிலம், மயானத்தயிலம், மகாவிஷமுஷ்டித்தயிலம், வாதராக்ஷசமாத்திரை, வடவானலரசம், ரசபஸ்மம், தாம்பிரச்சிந்தூரம்முதலிய அவுஷதங்களையும், க்ஷத்திரக்ஷாராக்கினிச் சிகிச்சைகளையும் கொண்டுவசப்படுத்தவேண்டும்.

எட்டாவது வாதரோகபடலம் முற்றியது.

உ

சுப்பிரமணியர் துணை.

ஜீவரக்ஷாமிர்தம்.

ஒன்பதாவது
மகாவாதரோகபடலம்.

மகாவாதரோகபேதம்.

மகாவாதம் ௨௪-விதப்படும். அவையாவன (பாதஹரிஷவாதம்,பாதகண்டகவாதம், களாயகஞ்சவாதம், சம்பூகசீரிஷவாதம், கிருத்திரசிவாதம், ஊருஸ்தம்பவாதம், அபதந்திரகவாதம். பக்ஷகாதவாதம், தண்டகவாதம், ஆக்ஷேபகவாதம்,பாகியாயாமவாதம்,அந்தராயாமவாதம்,விஸ்வபித்வாதம், அவபாகுகவாதம், அர்த்திதவாதம், சர்வாங்கவாதம்,) அநுசிரம்சவாதம், ஜிக்குவாஸ்தம்பவாதம், விரணாயாமவாதம்,சிராக்கிரகவாதம், கஞ்சவாதம், கல்லிவாதம், பங்குவாதம், பாததாகவாதம் என்பனவாம்.

இவற்றுள்,பாதஹரிஷவாதம்முதல் சர்வாங்கவாதமீருகிய ௰௬-ம், முற்கூறியபடலத்தில் வாதரோகம் ௮௰ என்னும் தொகையுள் சேர்ந்து, ௱௫௬, ௱௫௭, ௱௫௮, ௱௬௰, ௱௬௪, ௱௬௫, ௱௬௬, ௱௬௮, ௱௬௯, ௱௭௫ என்னும்பக்கங்களில், லக்ஷணபூர்வமாகச் சொல்லப்பட்டு இந்தமகாவாத ரோகங்களைப் போலவே மகா அவுஷதங்களை நஷ்டப் படுத்தலாலும், சிகிச்சகருக்கு எளிதில்சாத்தியப்படாமையாலும், ஒருவேளைசாத்தியமான போதிலும் அந்தரோகியின் உறுப்புகளில் ஏதேனும் ஒரு உறுப்பினைப் பங்கப்படுத்தலாலும், மகாவாதரோகங்கள் எனப்பேர்பெற்றன. இந்தப் பதினாறும்ஒழிந்த மற்றஎண்வகைமகாவாதரோகங்களையும் இப்படலத்தில் முறையே எடுத்துக்கூறப்படும்.

௧-வது அநுசிரம்ச வாதரோகம்.

இது,வெகுநேரமாகநாக்கைநீட்டிவழித்தல்,உலர்ந்தபதார்த்தத்தைப் புசித்தல்,கடினவஸ்துக்களைக்கடித்தல் என்னும்இச்செய்கையினால்பிறந்து, தாடையின் பூட்டைஅநுசரித்து எந்நேரமும் வாயைத்திறந்து கொண்டு இருக்கும்படி செய்யும், அல்லது மூடிக்கொண்டு இருக்கும்படிசெய்யும்; அப்போது எந்தவஸ்துவையாவது மெல்லுதற்கும் ஒருவார்த்தை பேசுதற்கும் அதிக பிரயாசையாக இருக்கும். சிரம்சம் என்பது தளரல்.

௨-வது ஜிக்குவாஸ்தம்ப வாதரோகம்.

இது, தொனியை எழுப்புகிற நரம்பிற்சேர்ந்துகொண்டு, நாவை ஸ்தம்பிக்கும்படிசெய்யும். இதனால், புசிப்பதற்கும், சலபானஞ்செய்தற்கும் பேசுவதற்கும் கூடாமையாக இருக்கும். ஜிக்குவா என்பது நா.

௩-வது விரணாயாம வாதரோகம்.

இது, மர்மஸ்தானங்களில் உண்டாகும். விரணங்களினால் பிறந்து, பாதாதிகேசம்வரைக்கும் அநேகதுர்க்குணத்தோடுவியாபிக்கும். இதனால் தாகமும் தேகவெளுப்பும் உண்டாகும். இவ்வாயுவினால் அவயவங்களில் யாதொரு துர்க்குணங்களும் இல்லாதிருக்கில், சாத்தியமாம். இருந்தால், அசாத்தியமாம்.

விரணம் என்பது ரணம்.

௪-வது சிராக்கிரக வாதரோகம்.

இது, ரத்தத்தைஅநுசரித்து சிரசின்நரம்புகளிற்சேர்ந்துகொண்டு, அவைகளுக்குச் சூட்டையும் அவ்விடத்தில் நோவையும் நீலநிறத்தையும் உண்டாக்கும். இது அசாத்தியமாம். சிரா என்பது நரம்பு.

௫-வது கஞ்ச வாதரோகம்.

இது, வாதப்பிரதான மந்தவீரியவஸ்துக்களைத் தினந் தினமும் விஸ்தாரம் புசிப்பதினால் பிறந்து, கடிகஸ்தானத்தில் நின்றெழும்பி விரைவில்தொடைகளின்நரம்புகளை அநுசரித்துநொண்டியைப்போலவே நடக்கச்செய்யும்.

கஞ்சம் என்பது நொண்டுதல்.

௬-வது கல்லி வாதரோகம்.

கிருத்திரசிவாதத்தினாலாவது, விஸ்வபித்வாசத்தினாலாவது, சகிக்கக் கூடாத உபத்திரவம் உண்டாகும். இதுவே கல்லிவாத ரோகமாம்.

௭-வது பங்கு வாதரோகம்.

இது, இரண்டு தொடைகளின் நரம்புகளை இழுத்துக்கொண்டு, முடமாக்கி உபத்திரவத்தைச்செய்யும். பங்கு என்பது முடம்.

௮-வது பாததாக வாதரோகம்.

இது, பித்தரத்தத்திற்கூடிக்கொண்டு, பாதத்தில்வியாபித்துஎரிச்சலை யுண்டாக்கும்.

தாகம் என்பது எரிச்சல்.

மகாவாதரோகம் ௨௪-ம் முற்றுப்பெற்றன.

அசாத்திய வாதரோகம்.

எந்தவாதரோகத்திலாவது, அதிகநடுக்கல், வீக்கம், சகிக்கக்கூடாத நோவு, சருமம்முற்றிலுந்திமிர், சரீரஞ் சுட்கித்துக்குன்றுதல் என்னும் இக்குணங்கள் இருந்தால், அசாத்தியம். அன்றியும், வாதரோகம்,

அபஸ்மாரரோகம், ரத்தவாந்திரோகம், க்ஷயரோகம், குன்மரோகம், மேகரோகம்என்னும்இவ்ஆறுவகைரோகங்க ளற்பமாகக்கண்டிருந்தாலும், வரவரப்பிரபலப்பட்டு, அசாத்தியத்தைத் தருமென்றறிக.

பித்தரோக பூர்வரூபம்.

அரோசகம், அன்னத்திவேஷம், கசப்பு புளிப்பானவாந்தி, வெள்ளைக்காளம், வாய்நாற்றம், தேகத்தில்நிறக்குறைவு,குளிர்,சுரம்,தபித்தல், பதறல்,எரிச்சல்,சித்தப்பிரமை, நாவுலரல், மயக்கம், மூர்ச்சை, தலைசுழலலுடன் கனத்தல்,நோவு,கண்சிவக்குதல், சுழலல்,விழித்தபடி இருக்குதல், அதில்சலம்வடிதல்,நடுக்கல்,கொட்டாவி,விக்கல்,பல்லைக்கடித்தல்,கூவுதல், சோம்பல்,தேகம் கண் நகம் மலம் மூத்திரம்ஆகியஇவைகளில் மஞ்சள்நிறமுண்டாயிருத்தல்,துர்க்கந்தம்,அதிகஉஷ்ணத்தினால்சீதளமும்கோழையும் வியர்வையும்சிலேஷ்மமும்மேலிடுதல்,அச்சிலேஷ்மத்தால்இனித்தவாந்தி, வாயும்நாவுமமிழ்நீரும்கசப்பு புளிப்பு தித்திப்பாகஇருத்தல்,தீக்ஷணாக்கினி, அவ்வக்கினியில் நின்றும் ச◌ம்பிறப்பதால் மந்தாக்கினி, அசிரணம், மலபந்தம், வயிறுபொருமல், பேதி, இருமல், இளைப்பு, கோபம், துக்கம், பயம், ஆசியம்பேசுதல், வெறித்தபார்வை, வாயும் சுவாசமும் நாறுதல், இடுக்கிடல், கிலேசம், சருமந்திரைதல் என்னும் இக்குணங்களைப் பித்தரோகமானதுதனக்குப் பழையரூபமாகப்பெற்றிருக்கின்றது.இக்குணங்கள் சகலபித்தரோகங்களுக்கும் பொதுவாயிருக்குமென்றறிக.

பித்தரோகபேதம்.

பி ்தரோகமானது,ரத்தபித்தரோகமாதியாக மருந்திடுபித்தரோகம் ௩௰௯, ௪௰-விதப்படுகின்றது. அவைகளின்பெயரையும், செய்கைகளையும் முறையே இதனடியிற் சொல்லப்படும்.

௧-வது ரத்த பித்தரோகம்.

இது, ரத்தவாந்தி, வயிறுப்பல், வியர்வை, துர்ப்பலம், குளிர்,சுரம், சதாசீதளம்,கால்கைநேத்திரமிவ்விடங்களில்எரிச்சல்,இரைப்பு,கோழை, கொட்டாவி, விக்கல், தலைதிருப்பல், கூவுதல், மந்தாக்கினி, அரோசகம், நிறக்குறைவு, தேகம் நருக்கித்துவைத்ததுபோலிருத்தல், வயிறுநோவு, நாவுலரல், அருசி,அசீரணம்என்னும் இக்குணங்களையுண்டாக்கும். இது, உபயாங்கத்திலும் ரத்தத்தைவிழச்செய்தலால்,உடனே அசாத்தியமாம்.

௨-வது ஆம்ல பித்தரோகம்.

இது,மஞ்சளைக்கரைத்ததுபோல்புளித்தவாந்தி,சூலை,அக்கினிமந்தம், நடுக்கல், மாறுரூபம், இருமல், சோம்பல், தாகம், துர்ப்பலம், வியர்வை,

நித்திரைப்பங்கம், கீல்களில்நோவு, துக்கம், தேகத்தில் வளையமபோல் புடைகள் எழும்புதல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௩-வது ஆவரண பித்தரோகம்.

இது, தலைதிருப்பலுடன்நோவு,ஏப்பம்,வாந்தி,கோழை, சோருதல், தாகம்,மலபந்தம்,தேகம்வாட்டத்திலும்ஸ்தம்பித்தல், எரிச்சல், வியர்வை, தளர்ச்சி,நெஞ்சுவறளல்,அஜீரணம்,கசப்பும்புளிப்புமானவாந்தி, மூர்ச்சை, விக்கல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௪-வது உன்மாத பித்தரோகம்.

இது, அறிவீனம், மந்தப்புத்தி, வெட்கமும் சாதிபேதமும்விடுதல், ஒருவேளை அதிகவார்த்தை, ஏப்பம், வாந்தி, வயிறுப்பல், அக்கினிமந்தம், கூச்சல், அழுதல், துர்ப்பலம், நித்திரைப்பங்கம், அதிகதாகம், மூர்ச்சை, சோஷை, எரிச்சல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௫-வது விஸ்மிருதி பித்தரோகம்.

இது,ஞாபகமறதி, மந்தவசனம்,பிரமை,ஒக்காளம்,சூலை, மலபந்தம், பொருமல், துர்ப்பலம், வியர்வை, சீதளம்,கீல்களில்அசதி,தொடையிலும் முழங்காலிலும் நோவு, சோருதல், தாகம், தலையில்நோவுடன் பாரிப்பு, மார்புஎரிச்சல், நாவிலும் வாயிலும் கசப்பு புளிப்பு தித்திப்பா யிருத்தல், நித்திரைப்பங்கம்,வீரியநஷ்டம்,தொடையிற்குத்தல்என்னுமிக்குணங்களை உண்டாக்கும். விஸ்மிருதி என்பது மறதி.

௬-வது திக்த பித்தரோகம்.

இது, வேப்பங்காய்போல் வாய்கசத்தல், நாவுலரல், தாகம், மோகம், சுரம்,சிரசுகனத்தல்,சுழலல்,கபாலத்திலும்காதிலும்இரைச்சல்,துர்ப்பலம், அவயவங்கள் சுட்கித்தல், இருமல், நெஞ்சிற்கபம், ரூபபேதம், தேகம் ஸ்தம்பித்தல்,கோபம்,ஆலசியம்,கம்பீரமானவசனம்,கண்சுழலல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும். திக்தம் என்பது கசப்பு.

௭-வது ஆசியபாக பித்தரோகம்.

இது,வாயில்கொப்புளங்கள் எழும்பிப்பழுத் துடைதல்,துர்க்கந்தம், மார்பில் நெருப்புப்பட்டதுபோல் எரிதல்,சகலவஸ்துவிலும் அரோசகம், வியர்வை, வயிறுப்பல், மலபந்தம், பலஈனம், ஏப்பம், சுரம், சீதளம், மந்தாக்கினி, தொடைநோவு, கோபம், கொட்டாவி, விக்கல், சூலை, அற்ப போஜனம் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௮-வது ஜிம்மிக பித்தரோகம்.

இது,நாவில்எள்ளுப்போல்கொப்பிளங்கள்எழும்புதல்,இனிப்புடன் குழம்பாக வாய்நீருறல், அஜீரணம், அன்னத்திவேஷம், பலஈனம்,

தலையிலும் கண்ணிலும் உபத்திரவம்,நடுக்கல்,கபாலத்திலும் செவியிலும் இரைச்சல்,தொடையிலும்முழங்காலிலும்நோவு,வியர்வையுடன்சர்வாங்க சீதளம்என்னும் இக்குணங்களை உண்டாக்கும். இதுவே மதுரபித்தமாம்.

கூ-வது துர்க்கந்த பித்தரோகம்.

இது,ஒருவிதநாற்றமுள்ளலேகியத்தையொத்தவாந்தி,சர்வாங்கத்திலும் கொப்பிளம் எழும்புதல், நாவில்துர்க்கந்தத்துடன் வேலின் முள்ளைப்போ லிருத்தல், வியர்வை, கண்ணீர்வடிதல், மண்டையிலும்காதிலுமிரைச்சல், கண்டத்தில் நமைச்சல், திமிர்என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௰-வது தத்துரு பித்தரோகம்.

இது, சர்வாங்கத்திலும் தடித்தலுடன் நமைச்சல், நாவும் வாயும் உலரல், ரோமச்சிலிர்ப்பு, சுரம்,வியர்வை, நிறமாறல், இருமல், சோருதல், ஆலசியம், பிரமை, கோபம்என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௰க-வது சோக பித்தரோகம்.

இது, துக்கம், தலைதிருப்பல், சோஷை, உள்ளங்கால் உள்ளங்கை எரிச்சல்,சிரசிலும்காதிலும் இரைச்சல், நாவும் வாயும் சிலவேளை கசந்தும் புளித்தும்தித்தித்தும்இருப்பதுமன்றியுலரல்,தேகத்தில்தடிப்பு,சைத்தியம், வாந்தி, அசீரணம், அதிகசூலை,வயிறுப்பல்,தொடைகளில் நோவுஎன்னும் இக்குணங்களை உண்டாக்கும். சோகம் என்பது துக்கம்.

௰உ-வது மூர்ச்சைப் பித்தரோகம்.

இது, மூர்ச்சை, மார்பின்பள்ளத்திலும் நாபியிலும் நெருப்புப் பட்டதுபோலெரிதல்,துக்கம்,ஸ்தம்பித்தல்,அதிகதாகம்வியர்வை, இளைப்பு, கபாலத்திலும் காதிலும் ஒருவிதநாதம், நிறக்குறைவு, மேலில்தினை அரிசி வரகரிசிகளைப்போல் கொப்பிளம் எழும்புதல், நாவில்படலம், திமிர், நமைச்சல்,உலரலுடன் கசப்பு புளிப்பு தித்திப்பாகஇருத்தல், தேகத்திலும் அவ்வகை வாசனையேவீசுதல், நடுக்கல், சிரசிலும் வயிற்றிலும் குத்தல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௰௩-வது கண்டு பித்தரோகம்.

இது, சர்வாங்கத்திலும் திமிருடன்தினவு, தடிப்பு, சாமை அரிசிப் பிரமாணத்தையொத்த கொப்புளங்கள் எழும்புதல், சோருதல், நடுக்கல், பலவீனம், வாந்தி, அசீரணம், தலைநோவு, மார்புஎரிச்சல், சீதாதிக்கம், வியர்வை, சூலை, நித்திரைப்பங்கம், விக்கல், ஸ்தம்பித்தல்,தொடையிலும் முழந்தாளிலும் நோவுஎன்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௰௪-வது பிடக பித்தரோகம்.

இது,தேகமுழுதுந்தடித்துச் சிறுசிறுகட்டிகள் எழும்புதல், அவை களில் சுடுகையானசலம்வடிதல், மேலில்தொடில் சுறசுறப்பு; பலவீனம்

அதிகஉஷ்ணம், ஒருவேளைகுளிர்ச்சி, உள்ளங்கால் உள்ளங்கை எரிச்சல், காதடைப்பு என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௧௫-வது அனல பித்தரோகம்.

இது, சர்வாங்கத்திலும் காங்கையுடன்தடிப்பு, நித்திரைப்பங்கம், தலைவலி, ஸ்தம்பித்தல், வயிற்றிற்சூலை, நாவில்திமிருடன்படலம்எழும்புவது மன்றிக் கசப்பும் புளிப்புமாக இருத்தல், விக்கல், அவயவங்கள் இளைத்தல், எரிச்சல், சோஷை, மூர்ச்சை, தாகம், தொடையிலும் முழந்தாளிலும்நோவு என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௧௬-வது சுவேத பித்தரோகம்.

இது, சர்வாங்கத்திலும்வியர்வை, அதில்கசந்தவாசனை, நாவும் வாயும் கசத்தல், பலவீனம், ஸ்தம்பித்தல், விக்கல், சுரம், சைத்தியம், சிரோபாரம், தாகம், அக்கினிமந்தம், அரோசகம், தொடையிலும் முழங்காலிலும்நோவு, நடுக்கல்என்னுமிக்குணங்களை உண்டாக்கும். இதுவேவியர்வைப்பித்தமாம்.

சுவேதம் என்பது வியர்வை.

௧௭-வது இத்மா பித்தரோகம்.

இது, மாருதவிக்கல், சோஷை, ஏப்பம், மூர்ச்சை, வியர்வை, உள்ளங்கையிலும் உள்ளங்காலிலும் கொப்பிளம் எழும்புதல், சுறசுறப்பு, இருமல், சுவாசம், தலைநோவு, சுரம், தேகம்சில்விடலுடன்ஸ்தம்பித்தல், மதிப்பிரமை என்னும் இக்குணங்களை உண்டாக்கும். இதனை விக்கல்பித்தம் என்றுஞ் சொல்வர்.

இத்மா என்பது விக்கல்.

௧௮-வது இக்கா பித்தரோகம்.

இது, ஓயாதகொட்டாவி, சர்வாங்கத்திலும்வியர்வை, துருக்கல்போல் சுறசுறப்பு, கொப்பிளம்எழும்புதல், சீதளம், ரோமச்சிலிர்ப்பு, சுரம், சோஷை, நடுக்கல், அதிகசூலை, நடுமார்பில்எரிச்சல், சிரோபாரம், நித்திரைப்பங்கம், கண்ணீர்வடிதல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும். இதுவே, கொட்டாவிப்பித்தமாம்.

இக்கா என்பது கொட்டாவி.

௧௯-வது சூலைப் பித்தரோகம்.

இது, நாபியில்குத்தல், ஏப்பம், அதிகதாகம், துர்க்கந்தத்துடன் கசப்பான வாந்தி, ரோமச்சிலிர்ப்பு, வியர்வை, தடிப்பு, திமிர், தினவு, தலை சுழலல், நடுக்கல், குத்தல், இரைச்சல், அவயவங்கள் சுட்கித்தில், உள்ளங்கை உள்ளங்கால் எரிச்சல்என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௨௰-வது விஷ்டம்ப பித்தரோகம்.

இது, தேகங் கட்டுப்பட்டதுபோ லிருத்தல், மார்பைச்சுற்றிலும் எரிச்சல், தலைதிருப்பல், சுரம், குளிர், பலஹீனம், ஈனத்தொனி, ஞாபகமறதி,

பிரமை, அதிகமயக்கம், மூர்ச்சை, சோஷை, மிகுதாகம் என்னும் இக்குணங்களை உண்டாகும். விஷ்டம்பம் என்பது ஸ்தம்பித்தல்.

உக-வது விரண பித்தரோகம்.

இது, தேகத்தில் சிறிதும் பெரிதுமாக அதிக ரணம்பிறக்குதல், திமிர், கனத்தல், நமைச்சல், நாவு கசுத்தல், கறுத்தல், கோசஞ்சிவக்குதல், நித்திரையில்திடுக்கிட்டெழுந்திருக்குதல்,வாய்நீரூறல்,கையில்நாடியானது படபடத்துத் துடிக்குதல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

உஉ-வது ஊர்த்துவ பித்தரோகம்.

இது, அதிககோபம், சதாசண்டைசெய்தல், இரைந்துகூவுதல், ஆதாளம், பூமியிற் குழிவிழும்படியானபேதி, பிரமை, கண்சிவத்தல், அநித்திரை, சரீரந்தூலித்தல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

உங-வது சுவாச பித்தரோகம்.

இது,அதிகசுவாசம்,வயிறுகனத்தலோடுபொருமல்,தேக மிளைத்தல், அதிகமாக வாய்நீரூறல், கண்கலங்கலுடன் பார்வைமந்தம்,மார்புவலித்தல், இருமல், பசி இன்மை என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

உச-வது செம் பித்தரோகம்.

இது, தேகம்சிவத்தல், செம்பின்களிம்புநிறமாயும் சிவந்தநிறமாயும் வாந்தியாகுதல், மலம் இறுகலோடு சிவந்துநழுகல், மயக்கம், முத்து முத்தாகச் சிவந்தவியர்வைகசிதல், மிகுந்ததாகம், தலைதிருப்பல், தயக்கம், திடுக்கிடல், பயந்தெழுந்திருத்தல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

உரு-வது கரும் பித்தரோகம்.

இது,கறுத்தநிறமானவாந்தி,தயக்கம், சிரசிலும்சரீரத்திலு நடுக்கல், தலைவலி, நித்திரை, கடைக்கண்சிவந்து மினுமினுத்தல், தேகங்கனத்து வற்றுதல், அருசி, பசியின்மை என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

உசா-வது கரப்பான் பித்தரோகம்.

இது, சர்வாங்கத்திலுஞ்சொறி, உபத்திரவத்துடன் கட்டிகள் எழும்புதல், குழம்பானபேதி, வயிற்றில்இரைச்சலுடன்பொருமல்,இசிவு, கால்களில் விலவிலப்பு,இடுப்புநோவு, திமிருடன்சரீரத்தில் இடைவிடாத காந்தல், நிறக்குறைவு என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

உஎ-வது எரி பித்தரோகம்.

இது, அடித்தொடை பாதம் கண் உள்ளங்கால் உள்ளங்கை இவ்விடங்களில்எரிச்சல்,காதுமூதுகுஇவ்விடங்களில்வறவறப்பு,முழங்கை முழங்கால் இவ்விரண்டிலும் விருவிருப்பு, சீதளஸ்தானத்திலும்குளிர்ந்த காற்றிலும் விருப்பம் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௨௮-வது துடிப் பித்தரோகம்.

இது, தேகத்தில் துடித்தலுடன் வெளிறல், பசுமையானநிறம், அரோசகம், சற்றுநேரமாவது நிலையில்லாத அலேச்சல், அரிசிமீதிலும் மாதர்மீதிலும்விருப்பம்,யாருடனுவதடிக்கடிசண்டைசெய்தல்,சுறுசுறுப்பு, எந்தவஸ்துவிலும் இச்சை என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௨௯-வது விஷம பித்தரோகம்.

இது, சோர்ந்துவிழுதல், கடிந்துபேசுதல், தேகம்முற்றிலும் விஷம்போல்பரவி விஷமிக்குதல்,சரீரநோவு, வீக்கம், அன்னத்திவேஷம் என்னும் இக்குணங்களை உண்டாக்கும். இது அசாத்தியம்.

௩௰-வது மூல பித்தரோகம்.

இது, வயிற்றில் இரைச்சலுடன்பேதி, மனச்சலிப்பு, தாறுமாறுன கோபம்,மூலவளையத்தில்நின்றும்முளைதொங்குதல், அடித்தொடையிலும் மேல்தொடையிலும் நோவு, தேகத்தில் வெளிறலுடன்வீக்கம், அதிக நித்திரை, சோம்பல், கண்எரிச்சல்என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௩௧-வது களப் பித்தரோகம்.

இது, குரல்வளைகனத்தல், கசந்தவாந்தி, கழுத்துக்குள்புண்போலிருத்தல், நாவில்வழுவழுப்புடன் வறட்டல், பாதத்தில்வீக்கம், காதிரைச்சல், சிவந்தமயிர்முளைத்தல், புறஇசிவு என்னும்இக்குணங்களை உண்டாக்கும்.

௩௨-வது ஓடு பித்தரோகம்.

இது, எழுந்தெழுந்தோடுதல்,பிதற்றல், யாரையுந்தூஷித்தல்,பல்லைக் கடித்தல், கண்சிவத்தலுடன் மூடிமூடி விழித்தல், கூச்சல்,கொக்கரித்தல், கூத்தாடுதல்,குதித்தல்,அகங்காரம் என்னும்இக்குணங்களைஉண்டாக்கும்.

௩௩-வது மூடு பித்தரோகம்.

இது,ஆபரணம்பொன்முதலியவஸ்துக்களைஒருவருக்குந்தெரியாமல் கண்டவிடத்தில் மறைக்குதல், யாரையுந் தூஷணித்துப் பேசுதல், மௌனமௌனப்பு, கையினுலும்காலினுலும்வீண்செய்கைகளைச்செய்தல், அன்னத்திவேஷம் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௩௪-வது நடுக்குப் பித்தரோகம்.

இது, சிரசு நெற்றி பிடரி முதுகந்தண்டு கண்டம்தாடை ஆகியஇவ் இடங்களில்நடுக்கல், கனத்தல்,எரிச்சல், கசப்பாகியவாந்தி,பொடியிருமல், நித்திரைப்பங்கம், வாய்நீரானது மார்பில்விழும்படி வடிதல், எந்நேரமும் நாவுதுடித்தல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௩௫-வது கபால பித்தரோகம்.

இது, கபாலமும் சிரசும் அதிரலுடன் அம்புபட்ட புண்போலக் கடுக்குதல், நோவு,சர்வாங்கத்திலும் சீதளத்துடன் மஞ்சள்நிறம், முதுகந் தண்டில்நோவு, முகத்தில்வீக்கம், மூர்ச்சை, அடிக்கடி எழுந்திருக்குதல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௩௬-வது தாக பித்தரோகம்.

இது, அதிகசலபானம், அடிவயிறுதுடித்தல், சர்வாங்கத்திலும் அனல்வீசுதல்போல் இருத்தல், சீதளவஸ்துவிலும் புளிப்புவஸ்துவிலும் இச்சை, கண்டத்தில்மிகுவியர்வை,பிடரியையும்அடிநாவையும்இழுத்துக் கொள்ளுதல்போலிருத்தல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௩௭-வது திமிர்ப் பித்தரோகம்.

இது, சர்வாங்கத்திலும் திமிர், கனத்தல், கிறுகிறென்று சுழலல் வயிறுபொருமலுடன் முள்ளைச்சொருகினதுபோ லிருத்தல், உதயகாலந் தோறும்வாந்தி, மறதி, அசந்தநித்திரை,மேலில்தூசுநிறம், நடையின்மை, பிடித்தபிடிவிடாமை என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௩௮-வது வலிப் பித்தரோகம்.

இது, அடிவயிற்றில் இசிவுடன் நோவு, இரைச்சல், நாவுவறளல், சிரோபாரம், கீல்களில் நோவு, ஈரலும் குடலும் வலிக்குதல், பசுமஞ்சள் நிறம்போன்றமலம், சர்வாங்கமும் துடிப்புடன் முடங்குதல், மார்பை அடைக்குதல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௩௯-வது கிருமிப் பித்தரோகம்.

இது, மலத்தில்கிருமிவீழ்தல்,வயிறறைப்புரட்டிப்புரட்டிவலித்தல், சர்வாங்கத்திலும் தினவு, நோவு, மலமும் சலமும் வறளல், கை கால் வாழைத்தண்டைப்போல் சில்லிட்டுக் கனத்துக் கடுக்குதல், தேகத்தில் ஒருவித நாற்றம் வீசுதல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௪௰-வது மருந்திடு பித்தரோகம்.

இது,அடிக்குடலில்வியாபித்துத்தங்கிக்கொண்டு,ரோகிக்குமவுனம், மனக்கலக்கம், தேகம் ஊதல், நெஞ்சுவறளல், அசதி,வயிறுவெளுக்குதல், நித்திரை பிடியாமை, போஜனத்தில் வெறுப்பு, உழலல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

ஆக பித்தரோகம், ௪௰-ம், முற்றியது.

அசாத்திய பித்தரோக நிதானம்.

சகலபித்தரோகங்களிலும் வாதமாவதுசிலேஷ்மமாவது சேர்ந்தால், கஷ்டசாத்தியமாம். இவ் இரண்டுஞ்சேர்ந்தால், அசாத்தியமாம்.

இப்பித்தரோகங்களை அகத்தி இலைரசச் சுத்தோதகஸ்நானம், அவ் இலைக்குடிநீர், பேய்ப்புடல்கஷாயம், கார்ப்பாசச்சூரணம், நவரசரசாயனம், சம்பீரக்குழம்பு, தாமரைப்பூமணப்பாகு, பன்னீர்ச்சந்தன லேபனம், சகதேவித்தயிலம், பெருங்குமரித்தயிலம், பிருங்காமலகத்தயிலம், பத்தூரத் தயிலம், சீரகத்தயிலம், சந்தனாதித்தயிலம், மகா வில்வாதி லேகியம், ரசிதபஸ்மம், மகாவசந்தகுசுமாகரமாத்திரை முதலிய அவுஷதங்களினாலும், இன்னும் சீதோஷ்ணசாந்திகளினாலும் நிவர்த்திசெய்யவேண்டும்.

சிலேஷ்மரோக பூர்வரூபம்.

தேகங்கனத்துநருக்கித்துவைத்ததுபோல்இருத்தல், அத்தேகத்திலும் முகத்திலும் மினுமினுப்புடன் குடைச்சல், இருமல், இரைப்பு, ஆலசியம், நடுக்கல், சிரோபாரம், நெஞ்சிற்கபாதிக்கத்துடன் சத்திப்பு, குளிர்ச்சி, வியர்வை, கீல்களெல்லாங் கட்டுவிட்டுப்போவதுபோலிருத்தல், விக்கல், சுரம், குளிர், மந்தாக்கினி, வாயில்வழுவழுப்புடன் கோழைஉண்டாதல், கண்ணில் சலக்கோவை, நாசியில்சலம்பெருகல், அடைப்பு, தும்மல், மந்தம், நாற்றம், வாந்தி என்னும் இக்குணங்களைச் சிலேஷ்ம ரோகமானது தனக்குப் பழையரூபமாகப் பெற்றிருக்கின்றது. இக்குணங்கள் சகல சிலேஷ்மங்களுக்கும் பொதுவாக இருக்குமென்றறிக.

சிலேஷ்ம ரோகபேதம்.

சிலேஷ்ம ரோகமானது, வாதசிலேஷ்மரோகம் ஆதியாக இக்கர் சிலேஷ்மமரோகம் ௨௰ இருபதுவிதப்படுகின்றது. அவைகளின் பெயரையும் செய்கைகளையும் முறையே இதனடியிற்காண்க.

௧-வது வாத சிலேஷ்மரோகம்.

இது, சர்வாங்கத்திலும் நருக்கித்துவைத்ததுபோ லிருப்பதுமன்றி, வியர்வை, குளிர்ச்சி, நடுக்கல், மார்பில்குத்தல், தலைநோவு, நெஞ்சிற் கபாதிக்கத்துடன் வறளல், வயிறுப்பல், வாந்தி, கொட்டாவி, விக்கல், வாதாதிக்கத்தினால்சந்திகளில்பிடிப்பு, சுரம், தர்கம்துற்பலம்அவயவாதிகள் சுருங்குதல், தொடையிலும்முழந்தாளிலும்நோவுஎன்னும் இக்குணங்களை உண்டாக்கும். அன்றியும் கடுத்துக்கடுந்து மல சலம் இறங்குதல், சர்வாங்கத்திலும் பள்ளம்வீழ்தல், நோவு, உதடும் பல்லும் கறுக்குதல், மேகநீரையொத்த நீரிறங்கல், வெள்ளைகாணுதல், தந்தங்களில் பொறுக்கக் கூடாதகுத்தல் என்னும் இக்குணங்களை உண்டாக்குமென்பாருமுளர்.

௨-வது பித்த சிலேஷ்மரோகம்.

இது, தலைசுழலல், விக்கல், ஒருவேளை ரத்தங்கக்குதல், நாவும் வாயும் முள்ளைப்போல் உறுத்தல், மஞ்சள் கோழைவீழ்தல், கண்டத்தில்

கபங்கட்டுதல், சீதளம், பலவீனம், மேல்மூச்சுவிடுவதிலும் வேதனை, சுரம், வியர்வை, சோம்பல், தாகம், நித்திரையின்மை, ஒருவேளை உறக்கம், கண்ணீர்பெருகுதல், மார்புநோவு, வயிறுப்பல், வாந்தி, இருமல், இரைப்பு என்னு மிக்குணங்களை உண்டாக்கும். அன்றியும் மயக்கம், பித்தாதிக்கம் அன்னத்திவேஷம், வாய்நீரூறல், தேகத்தில் மஞ்சள் நிறம் என்னும் இக்குணங்களை உண்டாக்குமென்பாருமுளர்.

௩-வது ரத்த சிலேஷ்மரோகம்.

இது, தினந்தினமும் ரத்தவாந்தி, அதில் துர்க்கந்தமான கோழை வீழ்தல், பலமுங் காந்தியுங்கெடல், அவயவங்கள்சுருங்கல், சுரம், எரிச்சல், அதிகசுவாசத்தோடு வேதனை, உள்ளங்கால்உள்ளங்கை காந்தல், மார்பிலுந் தலையிலுங் குத்தல், வயிறுப்பல், வாந்தி, தேகம் மரத்தல், சிரோபாரம், காதிரைச்சல், சோஷை, மூர்ச்சை, கண்சுழற்றலுடன் மயக்கம் என்னும் இக்குணங்களை உண்டாக்கும். அன்றியும் முழங்கால் முதுகு விலா முழங்கை கணுக்கை கீல் இவ்விடங்களில் கடினமான வீக்கத்துடன் குடைச்சல், சளி, இருமல், நாக்குவறட்டலிலுந் தித்திப்பாக இருக்குதல் என்னும் இக்குணங்களை உண்டாக்குமென்பாருமுளர்.

௪-வது க்ஷயசிலேஷ்மரோகம்.

இது, நாளுக்குநாள்அவயவங்கள்கூம்பல், சுரம், எரிச்சல், கண்டத்தில் கபாதிக்கம், வயிறுப்பல், மேல்சுவாசம், ஈனத்தொனி, கொட்டாவி, விக்கல், ஸ்தம்பித்தல், சிரசிலும் செவியிலும் ஒருவித இரைச்சல், தொடையிலும் முழந்தாளிலும் நோவு, அரோசகம், அசீரணம், மலபந்தம், நிறக்குறைவு, சரீரவேதனை, பிரலாபம், சோஷை, மூர்ச்சை, சோம்பல், தாகம், நித்திரைபிடியாமை என்னும் இக்குணங்களை உண்டாக்கும். அன்றியும் நெய்யை ஒத்த சளிவிழுதல், முகத்தில் பளபளப்பு, குளிர், நாசியிற்சலம்வடிதல், தேகத்தில் பாண்டுநிறம், அதில் அற்பஉஷ்ணம், சீதங்கலந்தமலம், மஞ்சள்நிறத்துடன் மெதுவாக மூத்திரம் இறங்குதல் என்னும் இக்குணங்களை உண்டாக்குமென்பாருமுளர்.

௫-வது மூர்சைச் சிலேஷ்மரோகம்.

இது, மூர்ச்சை, அதிககோழை, சரீரஎரிச்சல், சோஷை, சுரம், சைத்தியம், தலைநோவுடன்கனத்தல், சுழலல், நடுக்கல், சுவாசவேதனை, கண்களில் உபத்திரவம், சோருதல், ஆலசியம், பிரமை, அன்னத்திவேஷம், அசீரணம், தொடையிலும் முழந்தாள் மூட்டிலும் நோவு, வயிறுப்பல், இரைச்சல், மலபந்தம் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

சு-வது சுட்க சிலேஷ்மரோகம்.

இது, சர்வாங்கமுஞ்சூம்பல், கபாதிக்கத்துடன் இருமல், மேல்மூச்சு, சுரம், பலவீனம், வேறுநிறம், அன்னத்துவேஷம், அசீரணம், வியர்வை, தாகம், மார்புநோவு, நித்திரைப்பங்கம், அதிகளரிச்சல், கழுத்துநேர்ந்து மெலிதல், கண்டத்தில் ஒருசத்தம், ஈனத்தொனி, தலைசுற்றலுடன்நோவு, மலபந்தம், வயிறுபொருமல், அக்கினிமந்தம், கண்களில்நோவுடன் குத்தல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

எ-வது சுர சிலேஷ்மரோகம்.

இது, சுரம், எரிச்சல், தாகம், கபாதிக்கத்துடன் சீதளம், வியர்வை, தேல்களில்துர்ப்பலம், ஏப்பம், கொட்டாவி, அசனக்கெடுதி, அசீரணம், இருமல், தேகவன்மைகுன்றல், குத்தல், கண்டத்தில் கோழைநிறைதல், மார்பில்சூலை, சோர்வு, ஆலசியம், பிரமை என்னும் இக்குணங்களை உண்டாக்கும். அன்றியும் தேகங்கனத்தல், வலித்தல், வயிறுளைச்சல், நாவறளல், தாகம் என்னும் இக்குணங்களை உண்டாக்குமென்பாருமுளர்.

அ-வது மூகைச் சிலேஷ்மரோகம்.

இது, கழுத்துக்குள் ஊமையைப்போல் சத்திப்பு, தினம்ஒன்றுக்கு ஒவ்வொருபடி கோழை வீழ்தல், மார்புநோவு, சுரம், வாதாதிக்கம், சீதளம், துர்ப்பலம், காந்தியீனம், நாவும் வாயும் உலர்ந்து கசப்பு புளிப்பு தித்திப்பாக இருத்தல், கொட்டாவி, ஸ்தம்பித்தல், மலபந்தம் என்னும் இக்குணங்களை உண்டாக்கும். மூகை என்பது ஊமை.

கூ-வது துக்கச் சிலேஷ்மரோகம்.

இது, துக்கம், கண்டத்தில் கோழைகட்டிக்கொண்டு சத்தித்தல், எரிச்சல், சூலை, துர்ப்பலம், சர்வாங்கமும் மெலிதல், முழங்கால்நோவு, வயிறுபொருமல், மலபந்தம், தீபனக்கெடுதி, இரண்டு தொடைகளுஞ் சூம்பலுடன் நோதல், நித்திரைப்பங்கம், சிரோபாரம், இருமல், சுவாசம், எப்போதும் கபமேபெருகுதல், வாயில் கசப்பு புளிப்பு தித்திப்பாக இருத்தல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௰-வது தொனிச் சிலேஷ்மரோகம்.

இது, ஈனத்தொனி, கபாதிக்கம், எரிச்சல், சுரம், குளிர், தலைவலி, மண்டைக்குள்ளும் காதுக்குள்ளும் இரைச்சல், சர்வாங்கத்திலும்வாட்டம், மார்புகனத்தல், வியர்வை, தொடைக்குள்ளும் முழங்தாளுக்குள்ளும் குடைச்சல், நித்திரை இன்மை என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௰க-வது கோஷ சிலேஷ்மரோகம்.

இது, கண்டத்தில் கோழை நிறைவினால் ஓட்டை வெண்கலத் தொனிபோல்சத்தமும் தினவும்பிறக்குதல், சிரோபாரம், தேகஞ்சூம்பல்,

துர்ப்பலம்,அக்கினிமந்தம்,கொட்டாவி, விக்கல்,இருமல், தேகம்சில்லிட்டு ஸ்தம்பித்தல், குளிர், வியர்வை, சகலசீல்களிலும் நோவு, தாகம், வரவரக்கண்டத்தில் அதிகசத்தம் உண்டாதல், சிரசுசுழலலுடன் நடுக்கல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும். கோஷம் என்பது சத்தம்.

௰௨-வது சுவேத சிலேஷ்மரோகம்.

இது, தேகமுற்றிலும்வியர்வை,சூம்பல்,கண்டத்தில்கபம்அடைதல், மார்புஉலர்தல், நித்திரையும் சமாக்கினியும் கெடல், மலக்கட்டு, விக்கல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும். சுவேதம் என்பது வியர்வை.

௰௩-வது மகாசிலேஷ்மரோகம்.

இது, சர்வாங்கத்திலும் வாயுவுவியாபித்தல்,சூம்பல்,அதிககோழை விழுதல், நெஞ்சுக்குழியில்களகளப்பு,சுரம்,குளிர், சிரோபாரம்,வியர்வை, சகலசீல்களிலும் நோவு, வயிறுப்பல், அக்கினிமந்தம், பித்தாதிக்கம், காசசுவாசம், தலைத்திருப்பல், அன்னத்திவேஷம், அசீரணம், துர்ப்பலம் என்னும் இக்குணங்களை உண்டாக்கும். இது அசாத்தியமாம்.

௰௪-வது பேனசிலேஷ்மரோகம்.

இது, தினந்தினமும் நுரைநுரையாக ஒருபடிஇரண்டுபடி கோழை வாந்தியாகுதல், மார்பில்எரிச்சல், குத்தல்,ஊர்த்தசுவாசம்,வேதனை,சுரம், குளிர்,வியர்வை,சீதளம்,தேகம்சூம்பல், துர்ப்பலம், காந்தியீனம், இருமல், தலைவலி, ஓக்காளம், அரோசகம், அசீரணம், மலபந்தம் என்னும் இக்குணங்களை உண்டாக்கும். பேனம் என்பது நுரை.

௰௫-வது லாலா சிலேஷ்மரோகம்.

இது, நாளொன்றுக்குச் சொள்ளுவடிதல்போலக் கோழைச்சலம் ஒருபடி அளவுவிழுதல், கண்டத்திலும் மார்பிலும் கோழைக்கட்டு, மார்பில்குத்தல்,சுவாசம்நீடல்,இருமல்,வேதனை,அக்னிநஷ்டம், மலபந்தம், சுரம், குளிர், அசீரணம், வியர்வை, சர்வாங்கசீதளம், கொட்டாவி, பலவீனம், வீக்கம், விவர்ன்னதேகம், ஏதேனும் ஒரு அவயவவூனம், தலைத்திருப்பலுடன் நடுக்கல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௰௬-வது வமன சிலேஷ்மரோகம்.

இது, மாறுதவாந்தியுடன் கோழைவடிதல், கண்டத்தில் கபம் அடைத்துக்கொள்ளல், மார்பிற்குத்தல், தேகஞ்சூம்பலிலும் எரிச்சல், ஏப்பம், விக்கல், கொட்டாவி, வாதாதிக்கம், அக்கினிமந்தம், மலபந்தம் என்னும் இக்குணங்களை உண்டாக்கும். வமனம் என்பது வாந்தி.

௰௭-வது க்ஷீண சிலேஷ்மரோகம்.

இது, பலக்குறைவு, சுரம், குளிர், சிரோபாரம், தேகம் இளைத்தல், அதிகதாகம், விக்கல், தொடைநோவு, இருமல், இரைப்பு,தலைத்திருப்பல்,

நடுக்கல், நித்திரைப்பங்கம், நாவும் வாயும் கசக்குதல், மலபந்தம், மார்பில்குத்தல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௰௮-வது சோஷ சிலேஷ்மரோகம்.

இது, பித்தமும்வாயுவும் அதிகரித்தலினால்பிறந்து, சோர்ந்துவிழல், சுரம், குளிர், வியர்வை, வீக்கம், அதிகசீதளம், சர்வமாமிசஸ்தானங்களிலும் நோவு, கொட்டாவி, தொடைகளிலும் முழந்தாள்களிலும் வேதனை என்னும் இக்குணங்களை உண்டாக்கும். சோஷம் என்பது சோர்வு.

௰௯-வது உத்கார சிலேஷ்மரோகம்.

இது, மாருதஎப்பம், அதிகவாந்தி, தலைவலி, தினந்தினமும்ஒருபடி கோழைவிழல், மலபந்தம், அக்கினிமந்தம், வயிறுகல்லைப்போல்இருத்தல், சூலை, பொருமல், அதிகஎரிச்சல், ஈனத்தொனி, தலைத்திருப்பல், கண்ணீர்பெருகல், அசீரணம், தேகவேதனை, ஆலசியம், தாகம் என்னும் இக்குணங்களை உண்டாக்கும். உத்காரம் என்பது ஏப்பம்.

௨௰-வது இக்கா சிலேஷ்மரோகம்.

இது, விக்கல், கொட்டாவி, சிரோபாரம், சர்வாங்கவேதனை, மார்பிற்குத்தல், சீதளம், ஒருவேளை இன்மை, துற்பலம், இரைப்பு, தொண்டைக்கம்மல், வயிறுகற்போல இருத்தலுடன் நோதல், கண்ணீர் வடிதல், வாயும் நாவும்புளித்தல், நெஞ்சுஉலர்தல் என்னும்இக்குணங்களை உண்டாக்கும். இக்கா என்பது விக்கல்.

ஆ சிலேஷ்மரோகம் ௨௰-ம். முற்றியது.

அசாத்திய சிலேஷ்மரோக நிதானம்.

சகல சிலேஷ்மங்களும் சுபாவத்திலேயே, நீடித்து உபத்திரவஞ் செய்யத்தக்கவைகள். இவைகளுடன்பித்தமாவதுவாதமாவதுகூடில், கஷ்டசாத்தியமும் அசாத்தியமுமாம். இச்சலரூபமாகிய சிலேஷ்மரோகங்களை, காகமாசிச்சுரசம், கிராம்பாதி ஐங்கூட்டுக்கஷாயம், ஏலாதித்துவிதச்சூரணம், சிறியநிர்க்குண்டித்தயிலம் முதலிய அவுஷதங்களைக்கொண்டும், ௫௯, ௫௮, ௬௭ என்னும் பக்கங்களில், காச சுவாச க்ஷய ரோகங்களுக்குச் சொல்லிய சிகிச்சைகளைக்கொண்டும் பரிகரிக்கவேண்டும்.

மதாந்தரம்.

சிந்தாமணி என்னுஞ் சாஸ்திரத்தில், சிலேஷ்மரோகத்தை ௨௯ விதமாகச் சொல்லப்படுகின்றது. இவற்றுள், வாதம், பித்தம், ரத்தம், க்ஷயம், சுரம்என்னுமிவ்வைந்துசிலேஷ்மங்களும்முற்கூறியவைகளேயாம். மற்ற ௰௯ சிலேஷ்ம ரோகங்களையும் முறையே இதனடியிற்காண்க.

௧-வது காச சிலேஷ்மரோகம்.

இருமல், சீதளம், தேகம்பாரிப்புடன் கனத்தல், நாடி அற்பவேகத்திலுஞ் சிலேஷ்மகதியாக நடக்குதல், வாய்வறளல், அதிகஉஷ்ணம், மூக்குத்தண்டின்அடியிற்கனத்தல், தினவு என்னும்இக்குணங்களை உண்டாக்கும்.

உ-வது சுவாச சிலேஷ்மரோகம்.

அதிகசுவாசம், நெஞ்சிற் கபாதிக்கம், இருமல், மூக்கடைப்பு, குறட்டைவிடுதல், குளிர், சுரம், மயக்கம், நெஞ்சிற்கப கிறைதல், வாயும் நாசியும்வறளல், அதிகதாகம் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௩-வது தீபன சிலேஷ்மரோகம்.

அதிகதீபனம், சர்வாங்கத்திலும் எரிச்சல், நோவு அழலை, அழுகை, நெஞ்சடைப்பு, கைகால்களிற் சீதளம், தேகங்கனத்தல், உண்ணுக்கில் பசபசப்பாகிய தினவு என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௪-வது மந்தச் சிலேஷ்மரோகம்.

மந்தம், அடிவயிறு கல்லைப்போல் இருத்தலுடன் மலசலங் கட்டுப்படுதல், வாந்தி, வியர்வை, ஒக்காளம், மேல்சுவாசம், தொண்டைக்குள்காறல், இருமல், வாய்கசத்தல், துவர்த்தல்என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

ரு-வது தொந்தச் சிலேஷ்மரோகம்.

சர்வாங்கத்திலும்அழலை, விக்கல், இருமல், சுவாசம், அதிகசுரம், அசதி, எரிச்சல், தாகம், தலைவலி, மனச்சஞ்சலம், மார்புநோவு, குளிர், ரோமச்சிலிர்ப்புஎன்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

சு-வது சந்நிபாத சிலேஷ்மரோகம்.

நாக்குக்கறுத்தலுடன்வறளல், சுரம், எரிச்சல், சர்வாங்கத்திலும்வலி, அசதி, மறதி, கன்னம் காது புருவம் நாசி சிரசு உச்சி இவைகளிற் படபடப்பாகிய துடிப்புஎன்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

எ-வது அதிசார சிலேஷ்மரோகம்.

சிவந்தபேதி, வயிற்றில்இரைச்சல், குத்தல், இரண்டுவிலாவிலும்சூலை, பொருமல், மார்பிலும் நெஞ்சிலும்நோவு, வாய்வறளல், இருமல், சுவாசம், தாகம், எரிச்சல்என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

அ-வது சல சிலேஷ்மரோகம்.

அதிகதாகம், சிக்கலாய்த் தடிப்பாய் அடிக்கடி நீரிறங்கல், அழலல், குரற்கம்மல், கோழையாகிய சிலேஷ்மம்விழுதல், பல்லுகளெல்லா மசைதல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

கூ-வது அக்கினி சிலேஷ்மரோகம்.

சர்வாங்கத்திலும்எரிச்சல், அல்லது கால் கை கண் மூக்கு இவ்விடங்களிலாவதுஎரிச்சல், இருமல், கோழை, மிகுந்ததாகம், கை கால்களில்சீதளம், அதிகதீபனம் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௰-வது முசல் சிலேஷ்மரோகம்.

சர்வாங்கத்திலும்நோவு, அசதி, துர்ப்பலம், கண்ணில் சிவப்புடன் சலம்வடிதல், சருமமுழுதும் கண்ணுதலுடன் கருகல், உணர்வின்றி மல சலம்நழுகல், சுவாசம், இருமல்என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௰௧-வது வெறிச் சிலேஷ்மரோகம்.

மீசையை முறுக்குதல், கோபித்தல், எழுந்திருந்து ஓடுதல், பல்லை இளித்துக்காட்டுதல்,பாடல்,ஆடல்,கண்சிவத்தல்,தேகத்தில் கறுத்தநிறம், உதடுவறளல்என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௰௨-வது விகார சிலேஷ்மரோகம்.

விகாரப்பார்வை, ஸ்திரிகளிடத்தில் மிகுந்த இச்சை, தேகஞ் சுட்கித்தல், சங்கீதம்பாடுதல். அதிகமோகம், துக்கம், அன்னத்திவேஷம், மயக்கம், மாறுபாடானவார்த்தை என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௰௩-வது விரண சிலேஷ்மரோகம்.

நெஞ்சில்விரணம்,சீழ்கலந்த சளிவிழுதல், கழுத்து பிடரி கன்னம் இவ்விடங்களில்வீக்கம்,சுரம்,குளிர்,எரிச்சல்,இருமல்,கூச்சல்,கண்டத்தில் புண்போலிருத்தல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௰௪-வது துர்க்கந்த சிலேஷ்மரோகம்.

இருமினால்சீழும் ரத்தமும்விழுதல், அதில் கவிச்சுமணம் வீசுதல், அன்னமும் அவுஷதமும் செல்லாமை, அடிவயிறு கால் கை இவைகளில் வீக்கம்,தாகம்,தேகசுட்கம், சுடுகைஎன்னு மிக்குணங்களை உண்டாக்கும்.

௰௫-வது நித்திய சிலேஷ்மரோகம்.

வெள்ளோக்காளம், சுரம், இருமல், தேகம் சுட்கித்தல், எரிச்சல், கிறுகிறுத்துக் கீழேவிழுதல், குறட்டைமல், வார்த்தை இன்மை என்னும் இக்குணங்களை உண்டாக்கும். நித்தியம் என்பது கெடாமை.

௰௬-வது பூத சிலேஷ்மரோகம்.

கண்களால் உருட்டியுருட்டிப் பார்க்குதல், மவுனமாக உள்ளேயே பேசுதல், நெடுமூச்சு, குறட்டைவிடுதல், கொடிகொடியாகச் சளிவிழுதல், இருமல், தேகத்தில்வெளிறலுடன்வியர்வை, நறநறெனப் பல்லைக்கடித்தல், சந்தோஷம், கோபம்என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

இதுகளும் முற்கூறிய சிலேஷ்மரோகசிகிச்சைகளால் வசப்படும்.

மதாந்தரமுற்றியது.

வாதசோணித ரோகபேதம்.

இது, வாதத்தினாலும் பித்தத்தினாலும் சிலேஷ்மத்தினாலும் தொந்தங்களினாலும் திரிதோஷத்தினாலும் ஏழுவிதப்படும்; ஆனால் இவைகள் உத்தானவாதசோணிதரோகம்,கம்பீரவாதசோணிதரோகம்என இருவிதப் பெயர்பெறும். உத்தானம் என்பது மேல்; கம்பீரம் என்பது ஆழம்.

வாதசோணிதரோக பூர்வரூபம்.

தேக மிளைத்துத்தளருதல், தொடை இடுப்பு முழங்கால் கணுக்கால் பாதம் தோள் கை கீல்ஆகிய இவ்விடங்களில் தினவு, மினு மினுப்பு, குத்தல்,அதிர்தல்,கனத்தல்,திமிர்என்னும் இக்குணங்கள், அடங்கிஅடங்கி, சண்டைஎலிகள் கடித்ததினால் பிறக்கும் விஷரோகம்போலவே, தேக முற்றிலும் கோரமாகவியாபிக்கும். இதுவே வாதசோணித பூர்வரூபமாம்.

உத்தான வாதசோணிதரோகலக்ஷணம்.

வாதசோணித ரோகத்தினால்பிறக்கின்ற நமைச்சல் குத்தல்முதலிய துர்க்குணங்கள், முதல்முதல் மாமிசதாதுவில் நின்றும் உண்டாகி, அம்மாமிசதாதுவைக்கடந்து கீழ்முகமாகஆழாமல், வெளிமுகமாகச் சரும முற்றிலும்வியாபித்துக்கொண்டேஇருக்கும்; அப்போது அச்சருமமானது கறுத்தும் சிவந்தும் தாம்பரநிறத்தைப்பெற்றும் அக்கினிச் சுவாலையின் ஆவியைப்போல் அதிகவெப்பத்தைத்தருவதுமாக இருக்கும்.

கம்பீர வாதசோணிதரோகலக்ஷணம்.

முன்பு மாமிசத்தையும் சருமத்தையும் பற்றிய நமைச்சல்முதலிய துர்க்குணங்கள் சிலநாள்பொறுத்து உள்ளில் ஆழப்பாய்ந்து சப்த தாதுக் களிலும்வியாபிக்கும்; அப்போது உத்தானவாத சோணிதரோகத்தைப் பார்க்கிலும்அதிகஉபத்திரவம்பிறக்கும். இது முதிருங்காலத்தில்,உடம்பில் பூசினதுபோல் வீக்கம்உண்டாகும். அன்றியும் வாயுவானது தொடை எலும்பு மச்சைஇவைகளில் சஞ்சரித்துக்கொண்டு பிளந்துபோவதுபோல் நோவை எழுப்பி, எதுவோ ஊருவதுபோல் தோற்றுவித்து, தேகத்தை வளைத்துச்சப்பாணியைபபோல் அல்லது நொண்டியைப்போல்செய்யும்.

க-வது வாதாதிக்க வாதசோணிதரோகலக்ஷணம்.

இது, அதிகசூலை, அதிரல், குத்தல், வீக்கம், சரீரத்தில் சுறசுறப்பு, மரத்தல், நடுக்கல், வாதநரம்புகளும் விரல்களும் கீல்களும் முடங்குதல், சர்வாங்கத்திலும் சகிக்கக்கூடாத வேதனை, சீதளவஸ்துவில் விரோதம், போஜனம் அவுஷதம் நடை இவைகளில் வெறுப்பு, உறக்கம், சருமத்தின் மேல் கறுத்தநிறம், ஒருவேளை கறுப்புஞ் சிவப்பும் கலந்தநிறம் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.சிலவேளை இக்குணங்களில்லாததுபோலும் அதிகரித்ததுபோலும் இருக்கும்.

உ-வது பித்தாதிக்க வாதசோணிதரோகலக்ஷணம்.

இது,சோருதல்,மூர்ச்சை, தாகம், மதம், சருமத்தின்மேல் எரிச்சல், வியர்வை, தொட்டாற்சகிக்கக்கூடாதநோவு, சிவந்தவீக்கம், அதிககாங்கை என்னும் இக்குணங்களை மிகவும் அதிகரிக்கச்செய்யும்.

ங-வது சிலேஷ்மாதிக்க வாதசோணிதரோகலக்ஷணம்.

இது, சரீரம்மரத்தல், கனத்தல், கொஞ்சம்நோவு, நமைச்சல், குளிர்ச்சி, உறக்கம், சருமத்தின்மேல் மினுமினுப்புஎன்னு மிக்குணங்களை விசேஷமாக அதிகவிரைவில் உண்டாக்கும்.

ச-வது தொந்தவாதிக்க வாதசோணிதரோகலக்ஷணம்.

இது, வாதபித்தாதிக்க வாதசோணிதரோகங்களுக்குள்ளகுணங்களை யெல்லாம் ஒரேகாலத்தில் பிறப்பிக்கும். இவ்வாறே மற்றை இரண்டு இரண்டாகத் தொந்திக்குந் தொந்தங்களையும் அறியவேண்டும்.

ரு-வது திரிதோஷாதிக்க வாதசோணிதரோகலக்ஷணம்.

இது, வாதாதிமூன்று சோணிதகுணங்களுடன் மோககுணம், மதாத்தியகுணம், மதரோககுணம், சொற்பனகுணமாகிய இக்குணங்களைப் பிறப்பிப்பதன்றியும், தலைநோவு, அரோசகம், இளைப்பு, தேகம்முடங்குதல், வீக்கம், கொப்பிளம்எழும்புதல், பேதி, அல்லது மலக்கட்டு என்னும் இக்குணங்களை உண்டாக்கும். இதனால், அற்புதரோகங்களும் பிறக்கும். இது, வயிற்றுநரம்பின் சந்துகளில் வாயுவு நிறைந்து ரத்தமார்க்கத்தை அடைத்துப் பித்த சிலேஷ்மங்களில் கலந்துகொண்டு அதிகவேதனையைப் பிறப்பித்து மரணத்தைக்கொடுக்கும்.

வாதசோணிதரோக அசாத்தியநிதானம்.

ஒவ்வொருதோஷத்தால்பிறந்தவாதசோணிதரோகங்கள், ஆரம்பமாக விருக்கில், சிகிச்சையினால் சாத்தியம்; தொந்தவாத சோணிதரோகங்கள் கஷ்டசாத்தியம்; திரிதோஷவாதசோணிதரோகம் அசாத்தியம்.

மேற்சொல்லியவாதசோணிதரோகங்களை, சிறுமுத்துத்தயிலவிரேசனம் விழுதியிலைக்குடிநீர், தசமூலரசாயனம், சீந்தில்சருக்கரை, சிற்றுமுட்டித் தயிலம், கருப்பூரச் சிலாசத்துப் பஸ்மம், கடைந்து நுரையெடுத்த கோமூத்திரம்முதலிய அவுஷதங்களினால் விலக்கவும்.

பஞ்சவாயுக்களின் விகுணநிதானம்.

க-வது பிராணவாயுவின் விகுணலக்ஷணம்.

காங்கைவஸ்து, அதிகநடை, மிகுந்தசையோகம், லங்கனம், வெகுதின்டி, அதிகவேலை, சதுர்த்தசவேகத்தையடக்கி விடுக்கும்போது கிரமந்தப்பி விடுக்குதல், அல்லது மறிக்குதல் ஆகிய இவைகளால் பிராணவாயுவும் அதிகரிக்கும். இதனால்கண்முதலியபஞ்சேந்திரியங்களுக்கும்உபத்திரவம், பீநசம், தாகம், இருமல், இளைப்பு, அர்த்திதவாதகுணம் முதலியரோக குணங்களும் உண்டாகும்.

விகுணம் என்பது கெடுதி.

உ-வது உதானவாயுவின் விகுணலக்ஷணம்.

தும்மல், ஏப்பம், வாந்தி, நித்திரைப்பங்கம், அதிகசுமை எடுத்தல், மிகுந்த அழுகை,நகைப்பு முதலியவைகளால் உதானவாயுவுஅதிகரிக்கும். இதனுல்,கழுத்தைவிகுவா யிழுத்துப்பிடித்ததுபோலிருத்தல், தாழ்வாய்க் கட்டையில் ரோகம், பிரமை, வாந்தி, அரோசகம், பீநசம், களரோகம் முதலிய ரோகங்களும் உண்டாகும். அதுவே, ஊர்த்துவமுகமான நரம்புகளில் வியாபிக்கில், செவிடு முதலியரோகங்களும் உண்டாகும்.

ந-வது வியானவாயுவின் விகுணலக்ஷணம்.

அதிகநடை, சதாவுட்காந்திருத்தல், விரோதபோஜனம், காங்கை வஸ்து, பயம், அதிசந்தோஷம், சையோகம், விஷமசேட்டை, விஷம் முதலியவைகளால் வியானவாயுவு அதிகரிக்கும். இதனுல், புருஷத்துவம், உற்சாகம், பலம் இவைகள் நஷ்டப்படுவதுமன்றி, பித்தசுரம், சர்வாங்க நோவுடன்வீக்கம்,குத்தல்,ரோமச்சிலிர்ப்பு,மந்தாக்கினி,குஷ்டம்,விசர்ப்பி, சந்நியாசரோகம், சரீரந்தபிக்கின்றரோகம் முதலியவைகள் உண்டாகும்.

ச-வது சமானவாயுவின் விகுணலக்ஷணம்.

அபக்குவபோஜனம், அசீரணசீதளபோஜனம், சங்கரபோஜனம், அகால நித்திரை, அகாலவிழிப்பு முதலியவைகளால் சமானவாயுவு அதிகரிக்கும். இதனுல், சூலை, குன்மம், கிரகணி முதலிய ரோகங்களும், பக்குவாசய ஸ்தானரோகங்களும் விரைவில் உண்டாகும்.

ரு-வது அபானவாயுவின் விகுணலக்ஷணம்.

உஷ்ணஅன்னம், மந்தஅன்னம், வாகனுதியால் வருகின்றமெலிவு, நடையிலும் அதிகநடை, அசைவற்றிருத்தல், வேகமாகத்திரிதல் ஆகிய இவைகளினுல் அபானவாயுவு அதிகரிக்கும். இதனுல், பக்குவாசய ஸ்தானத்திற் பிறக்கின்ற ரோகங்களுடன் மூத்திரரோகம், சுக்கிலமேகம், மூலரோகம், குதப்பிரம்சரோகம் முதலியரோகங்களும் உண்டாகும்.

வாதசாமலக்ஷணம்.

முன்சொன்ன ஐந்துவாயுக்களும்ஆமத்தோடுகூடும்போது,சோர்வு, சரீரம் மரத்தல், கனத்தல், மினுமினுத்தல், அரோசகம், மந்தம்,சீதளம், வீக்கம், அக்கினிமந்தம், காரவஸ்துக்களிலும் காங்கைவஸ்துக்களிலும் அபேக்ஷை என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

வாதநிராம லக்ஷணம்.

பஞ்சவாயுக்களும் ஆமத்தோடு கூடாதகாலத்தில், மேற்சொன்ன துர்க்குணங்களில் ஒன்றேனும் இராதென்றறிக.

ஆவிருதவாதபேதம்.

பிராணவாயுமுதலிய வாயுக்கள் ரு, பித்தம் க,சிலேஷ்மம் க,ரத்த தாதுமுதலியதாதுக்கள் சா, அன்னம் க,மூத்திரம் க,மலம் க,ஆகிய கசா-ம் தனித்தனியே ஒன்றை ஒன்று மாறிமாறி ஆவரணமாகச் சூழும்போது, அவைகளா லுண்டாகின்ற ஆவிருத பேதங்களைச்சொல்லப் புகுந்தால், அளவைக்கடங்காத தொகையில் நின்றும் பெருகும். அதுபற்றி, அப் பேதங்களில்,பித்தாவிருதம்முதல் சிலேஷ்மஅபான ஆவிருதம் வரைக்கும் உஉ-ம், பிராண உதானுவிருதம்முதல் அபானசமானுவிருதம் வரைக்கும் உ௰-ம் எடுத்துக்காட்டப்படும். இதுபோலவே மற்ற ஆவரணபேதங்களை ஆயுள்வேதபண்டிதர்கள் கூர்ந்தறியவேண்டும்.

க-வது பித்த ஆவிருதவாதலக்ஷணம்.

பித்தமானது, வாயுவைஆவரணமாகச் சூழும்போது, பாதிஉள்ளங் கால் உள்ளங்கைகளில் எரிச்சல், தாகம், சூலை, பிரமை, கண்ணில் இருட்கம்மல், கார உஷ்ண புளி லவணவஸ்துக்களால் நாவுலரல், சீதளவஸ்துக்களில் இச்சை என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

உ-வது சிலேஷ்ம ஆவிருதவாதலக்ஷணம்.

சிலேஷ்மமானது,வாயுவை ஆவரணமாகச்சூழும்போது, தேகத்தில் சீதளம், கனத்தல், சூலை, காரவஸ்துவில் விருப்பம், சந்தோஷம், மேலில் எறும்பு ஊருதல்போல் இருத்தல் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

ங-வது ரத்த ஆவிருதவாதலக்ஷணம்.

ரத்ததாதுவை வாயுவுஆவரணமாகச்சூழும்போது,தாகம்,ஆயாசம், சருமத்திலும் மாமிசத்திலும் நோவு, வீக்கம், மேலில் ரத்தநிறம், அவ்விதப்புடைகள் எழும்புதல் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

ச-வது மாமிச ஆவிருதவாதலக்ஷணம்.

மாமிசதாதுவை வாயுவு சூழும்போது, மயக்கம், தேகந்தடித்து நிறமாறுதல், கட்டிகள்எழும்புதல்,தாண்டல்போலிருத்தல்,களை,காரஉஷ்ணவஸ்துக்களில் இச்சை,இருமல் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

ரு-வது மேதோ ஆவிருதவாதலக்ஷணம்.

மேதோதாதுவை வாயுவு ஆவரணமாகச் சூழும்போது, சரீரங் குலுங்கல்,இளைத்தல்,ஸ்திரம்,மிருது,சீதளம்,அருசிஎன்னும்இக்குணங்கள் உண்டாகும். இது கஷ்டசாத்தியம். இதனை ஆட்டியவாதம் என்பர்.

சா-வது அஸ்தி ஆவிருதவாதலக்ஷணம்.

அஸ்திதாதுவை வாயுவு ஆவரணமாகச் சூழும்போது,தேகத்தைக் கையால்தொடில் அதிஉஷ்ணம், நோவு, சந்தோஷம்நீங்குதல், ஊசியால் குத்துதல்போல் குத்தல் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

௭-வது மச்சா ஆவிருதவாதலக்ஷணம்.

மச்சைதாதுவைவாயுவுஆவரணமாகச்சூழும்போது,சரீரங்குலுங்கல் கொட்டாவி, புரளல், வயிற்றில்சூலை, அச்சூலைநோவைக் கையாலமுத்திப் பிசைந்தால் அடங்குதல் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

௮-வது சுக்கில ஆவிருதவாதலக்ஷணம்.

சுக்கிலதாதுவைவாயுவு ஆவரணமாகச்சூழும்போது, சுக்கிலம் வேகமாக ஒழுகுதல், அல்லது இல்லாதிருக்குதல், இதனால் புருஷத்துவம் நீங்குதல் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

௯-வது அன்ன ஆவிருதவாதலக்ஷணம்.

அஜீரணப்பட்டு நோவைத்தருகின்ற அன்னத்தை வாயுவுஆவரணமாகச்சூழும்போது, அவ்வஜீரணசூலை கொஞ்சம் சமனமாக இருக்கும்.

௰-வது மூத்திர ஆவிருதவாதலக்ஷணம்.

மூத்திரத்தைவாயுவு ஆவரணமாகச்சூழும்போது, சாதாரணமான மூத்திரங்கட்டுப்படுவதுமன்றிக் கீழ்வயிற்றில் உப்பிசமும் உண்டாகும்.

௰௧-வது மல ஆவிருதவாதலக்ஷணம்.

மலத்தைவாயுவு ஆவரணமாகச் சூழும்போது, மலங்கட்டுப்பட்டு இறண்டுமூன்று தினத்துக்கொருதரம் வருத்தத்துடன் ஆட்டுப்புழுக்கையைப்போல்விழுதல், குதத்தில்வாளால் அறுப்பதுபோலிருத்தல், புசித்த தற்காலத்தில்தேகமெல்லாம்மினுமினுப்பு,திரைந்தமேனியுடன்கிழவனைப் போல்கிடந்தஇடத்திலேயேகிடக்குதல் என்னுமிக்குணங்கள்உண்டாகும்.

௰௨-வது சகலதாதுக்களின் ஆவிருதவாதலக்ஷணம்.

சகலதாதுக்களையும்வாயுவுஏககாலத்திலாவரணமாகச்சூழும்போது, பிட்டபாகம், கவுட்டி, முதுகு இவ்விடங்களில் நோவும், இவ்வாயுவு அதிகரிக்கில் மார்பில் ஓயாதவேதனையும் உண்டாகும்.

௰௩-வது பித்தபிராண ஆவிருதவாதலக்ஷணம்.

பித்தத்தைப் பிராணவாயுவு ஆவரணமாகச்சூழும்போது, பிரமை, மூர்ச்சை, நோவு, எரிச்சல் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

௰௪-வது பித்தஉதான ஆவிருதவாதலக்ஷணம்.

பித்தத்தை உதானவாயுவு ஆவரணமாகச் சூழும்போது, புசித்த அன்னம் வாந்தியாகுதல்,பிரமை, மூர்ச்சை, நோவு, மேலிலும் உள்ளிலும் எரிச்சல், மினுமினுப்பு இன்மை என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

௰௫-வது பித்தவியான ஆவிருதவாதலக்ஷணம்.

பித்தத்தை வியானவாயுவுசூழும்போது,சர்வாங்கஎரிச்சல்,இளைப்பு, தேகவியாபாரங்கெடல், வியர்வை, எவ்வஸ்துவிலும் அசங்கிதம், தாகம், உள்ளங்கால் உள்ளங்கைகளில்எரிச்சல்என்னு மிக்குணங்களுண்டாகும்.

ய௬-வது பித்த சமான ஆவிருதவாதலக்ஷணம்.

தேகசுபாவஉஷ்ணம்நீங்குதல், மிகுவியர்வை, சகலவஸ்துவிலும்வெறுப்பு,தாகம்,கை கால்களில்எரிச்சல் என்னும் இக்குணங்களுண்டாகும்.

ய௭-வது பித்த அபான ஆவிருதவாதலக்ஷணம்.

பித்தத்தை அபானவாயுவு ஆவரணமாகச்சூழும்போது, மலத்தில் மஞ்சள்நிறமும், யோனி, காமியம், குதம்ஆகிய இவ்விடத்தில் நோவும் எரிச்சலும் உண்டாகும். காமியம் என்பது ஆண்குறி.

ய௮-வது சிலேஷ்ம பிராண ஆவிருதவாதலக்ஷணம்.

சிலேஷ்மத்தைப் பிராணவாயுவு ஆவரணமாகச்சூழும்போது, கண்டத்தில்ஒருசத்தம்,சோம்பல்,அரோசகம்,வாந்தி,சதாஉமிழ்நீர் உமிழ்தல், தும்மல்,ஏப்பம், மூச்சுத்திணறல் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

ய௯-வது சிலேஷ்ம உதான ஆவிருதவாதலக்ஷணம்.

சிலேஷ்மத்தை உதானவாயுவு ஆவரணமாகச்சூழும்போது, தேகங்கனத்தல்,அரோசகம்,ஈனத்தொனியோடுவார்த்தைகுறைதல், துர்ப்பலம், நிறமாறுதல் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

உய-வது சிலேஷ்ம வியான ஆவிருதவாதலக்ஷணம்.

சிலேஷ்மத்தை வியானவாயுவு ஆவரணமாகச் சூழும்போது, கீல்களும் எலும்பும் வாக்கும் ஸ்தம்பித்தல், சகல அவயவங்களுங்கனத்தல், நடக்கும்போது கால்சறுக்குதல் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

உக-வது சிலேஷ்ம சமான ஆவிருதவாதலக்ஷணம்.

சிலேஷ்மத்தைச் சமானவாயுவு ஆவரணமாகச்சூழும்போது,வியர்வை நீங்குதல்,சீதளம், மந்தாக்கினி என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

உஉ-வது சிலேஷ்ம அபான ஆவிருதவாதலக்ஷணம்.

சிலேஷ்மத்தை அபானவாயுவு ஆவரணமாகச் சூழும்போது, கோழையைப்போல் மூத்திரமும் மலமும் இறங்கும்.

ஆ ஆவிருதவாதம் உஉ-ம் முற்றியது.

இனிப்பிராணன்முதலியபஞ்சவாயுக்களும் ஆவரணமாகச்சூழுகின்ற பேதம் உய-ம் இதனடியிற்சொல்லப்படும்.

க-வது பிராண உதான ஆவிருதவாதலக்ஷணம்.

பிராணவாயுவு உதானவாயுவை ஆவரணமாகச் சூழும்போது, உசுவாசம் நிசுவாசம் மறிபடல்,இதனால்வருத்தம்,பீநசம்,தலையும் மார்பும் நோதல், வாய்வறளல் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

உ-வது உதானபிராண ஆவிருதவாதலக்ஷணம்.

உதானவாயுவு பிராணவாயுவை ஆவரணமாகச் சூழும்போது, தேகநிறமும் ஒளியும்பலமும்குறையும். இப்படியே மற்றைநான்குவாயுக்க

ளின் ஆவரணபேதங்களை யறிந்துகொள்க. ஆக ஆவரணபேதம் ௪௨-ம் முற்றியது. (இப்பேதம் ௪௱௨௰-எனச்சொல்லுகிறார்கள்.)

ஆவிருதவாத உபத்திரவநிதானம்.

சகல ஆவிருதவாதங்களையும், நவிதபஞ்சமூலகஷாயம், சீந்திலாதிச் சூரணம், திப்பலிக்கஷாயம், அயிலேயலேகியம்முதலிய அவுஷதங்களைக் கொண்டு வசப்படுத்தவேண்டும். அப்படிச்செய்யாவிடில், அவைகளில் நின்றும் வித்திரிதி, பிலீகம், குன்மம், மார்புரோகம், மந்தாக்கினி என்னும் ரோகங்கள்பிறந்து, பலவித உபத்திரவங்களைச்செய்வனவாம்.

சருவஆவிருதவாத அசாத்தியநிதானம்.

எந்த ஆவிருதவாயுவினாலாவது, நீங்காதசிரோபாரம், அரோசகம், அதிகஇளைப்பு, ஞாபகமறதி, மலபந்தம், மிகுதாகம், பிரமைமுதலிய பற்பல ரோகங்கள் பிறந்தாலும், அல்லதுசப்ததாதுக்களும் தீபாக்கினியும்பலமும் நாளுக்குநாள் குறைந்தாலும், அசாத்தியமாம்.

விஷபாகரோகபேதம்.

செம்பின்களிம்பு மீன்முள்ளு நெல்வாலின்முள் முதலியவைகள் சேர்ந்தபோஜனம்அருந்தல், காந்தியஅன்னம், மழைச்சலம், காடித்தண்ணீர், நித்தியசையோகத்திலும் நோய்மாதர் சையோகம், முதல்நாளில்சமைத்த பதார்த்தம், அழுகியமாமிசம், உஷ்ணமாமிசம் என்னும் இவைகளால், வாத விஷபாகரோகம்முதல் கந்தவிஷபாகரோகம் ஈருக, எண்வகை விஷபாகரோகம் உண்டாகும். அவைகளை இதனடியிற்காண்க.

௧-வது வாத விஷபாகரோகம்.

ஒருபக்கத்தில்வீக்கம், சரீரம்வாட்டத்திலும்வெளிறல், கனதி, உறக்கம், பசியின்மை, மலசலச்சிக்கல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௨-வது பித்த விஷபாகரோகம்.

சர்வாங்கத்தினவு, வெடிப்பு, சிரங்கு, பாரிப்பு, எரிவு, சுரம், ஊரல், அசதி, அதித்தினவு, மேல்மூச்சு என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௩-வது சிலேஷ்ம விஷபாகரோகம்.

தேகமுற்றிலும்பிசுபிசுப்பு, வெளிறல், வீக்கத்துடன்வெடித்தல், வறவறப்பு, அழலல், தாபச்சுரம், குளிர், அற்பஇருமல், கோழை, கடுகை யுடன் சிறுநீரிறங்கல், மேல்மூச்சுஎன்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௪-வது தொந்தவிஷபாகரோகம்.

மூர்ச்சை, சமிகுந்ததாகம், அடிக்கடிநீரிறங்கல், விக்கல், மயக்கம், தேகம் வெளுத்துக்கண்ணுதலுடன் வீக்கம், அருசி, பேதி, பிரமை, வாய்நீரூறல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும். தொந்தம் என்பது இரண்டு

ரு-வது சந்நிபாத விஷபாகரோகம்.

சேறுபோல்பேதி,குதத்தில்விரணத்துடன் ரத்தங்கசிதல், சுவாசம், சுரம்,மயக்கம்,காந்திய கொள்ளின்மணம்போல் சரீரவாசனை, முகவீக்கம், வியர்வை, அசதி, பிதற்றல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

சு-வது அக்கினி விஷபாகரோகம்.

வாதபித்தாதிக்கம்,தேகம்இளைத்தல், வீக்கம்,கிடைபொருந்தாமை, புரளல்,கோழை,இருமல்,சர்த்தி,மூர்ச்சை, வாய்நீரூறல், வயிறளைதல், மலசலச்சிக்கல், பக்கநோவு என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

எ-வது எரிச்சல்விஷபாகரோகம்.

வாயினல் ரத்தம்வீழ்தல், எரிச்சல், கோழை, சுவாசம், மார்பில் அடைப்பு,விரணம்,அதில்மாமிசம்வளரல், குத்தல், கட்டிபோல் நெஞ்சிற் புரளல், பேதி, வீக்கம்என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

அ-வது கந்தவிஷபாகரோகம்.

உடம்பில்பிணநாற்றம்வீசுதல்,சுரம்,மயக்கம்,சோம்பல்,சர்வாங்கமுங் கனதி,மூர்ச்சை,தலைவலி,சிலேஷ்மாதிக்கம்,தாகம், அதிகவார்த்தை,குளிர், வயிற்றில்குத்தல், கிரகணி என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

சாத்தியாசாத்திய விஷபாகரோக நிதானம்.

விஷபாகரோகம் எட்டிக்குள், வாதம்,பித்தம்,சிலேஷ்மம், தொந்தம் என்னும் நான்குவிஷபாகரோகங்கள் சாத்தியமாம் ; மற்றநான்கு விஷபாக ரோகங்களும் அசாத்தியமாம்.

மதாந்தரம்.

மேற்கூறிய விஷபாகரோகங்களை, கடுக்காய் ஊறிய கோமூத்திரத் தேட்டை, மகாமண்டூரச் சிந்தூரம்முதலிய அவுஷதங்களினலும், ௱௩௩, ௱௩௬ என்னும் பக்கங்களில், பாண்டுரோகங்களுக்கும், சோபாரோகங் களுக்கும்சொல்லிய அவுஷதங்களினலும், பரிகரிக்கவேண்டும்.

மதாந்தர முற்றியது.

ஒன்பதாவது மகாவாதரோகபடலம் முற்றியது.

உ

சுப்பிரமணியர் துணை.

ஜீவரக்ஷாமிர்தம்.

பத்தாவது

அதிதூலரோகபடலம்.

அதிதூலரோகலக்ஷணம்.

தேகத்தில் சுபாவமாக இருக்கின்ற மாமிசபேதங்கள் அதிகரித்து வளரும்காரணத்தால்சரீரம்பருப்பதுமன்றி,ஸ்தனமும்வயிறும்தொடையும் பிரமாணமின்றிப் பருத்து அசைவற்றுக் கடினமாயிருக்கும். இதனால், சந்தோஷமுதலியசவுக்கியங்களும் அறிவும்குறைதல், நடந்தால் அவ்அவ் இடத்துச்சதைகளெல்லாங்குலுங்குதல், ஆயாசம், இரைப்பு, கபாதிக்கம், பொடியிருமல், மேல்சுவாசம் முதலிய துர்க்குணங்கள் உண்டாக்கும். இது சுக்கிலசோணிதங்களில் தோஷத்தை உண்டாக்கிக் கருப்பநாசத் தைச்செய்யும். தூலம் என்பது பருத்தல்.

இதனை கோமூத்திரம், நல்லெண்ணெய், தேனிற்கலந்தஅசுவகந்திச் சூரணம் முதலிய அவுஷதங்களால், வசப்படுத்தவேண்டும்.

அதிசுஷ்கரோகலக்ஷணம்.

சமாக்கினியின்சுகுணத்தால் செழித்துவளர்ந்த மாமிசங்களானவை, அவ் அக்கினிக்குறைவால் சீரணிக்குங்காரணத்தால், சரீரம் சுஷ்குவது மன்றி, நரம்புகளும், கீல்களும், கழுத்தும், வயிறும், தொடைகளும், தாடைகளும், புயங்களும் உலர்ந்துசூம்பலாகும்; அப்போது ஆயாசமும், துர்ப்பலமும், தேவாங்கு என்னும்ஒருவிதமிருகத்தையொத்த உருவமும் உண்டாகும். சுஷ்கம் என்பது இளைத்தல்.

இதற்கு, எருமைத்தயிர்,சுத்தோதகத்தூறியவெந்தயம், கிலக்குமிள் சூரணம், கூஷ்மாண்டகிருதம் முதலிய அவுஷதங்களும் நன்மையாம்.

மலட்டுரோகபேதம்.

சுக்கில சோணிதங்களில்,வாதாதிகளால் உண்டாகின்றதோஷங்களி னாலும், சன்மந்தரபாவத்தினாலும், மலட்டுரோகம் உண்டாகும். அது, ஆண்மலடு,பெண்மலடு என இருவகைப்படும்.இவற்றுள்,பெண்மலட்டில், ஆதிமலடு, காகமலடு, கதலிமலடு, கருப்பமலடு என ச பிரிவுண்டு.

ஆண்மலட்டுரோகலக்ஷணம்.

புருஷர்களின் விந்துவானது, தித்திப்பு இல்லாததும், சலத்தில்விட்டால்கரைந்துமிதப்பதும்,உயிர்ப்பற்றதும்,மூத்திரத்தில்நுரைகட்டுவதுமா யிருக்குமாயின்,அதனால்ஒருக்காலுங்கருப்பந்தரிக்கமாட்டாதென்றறிக.

இதனைப் பால் நெய் முதலிய மதுரவஸ்து, மதனகேசரிச்சூரணம், மன்மதசிந்தாமணிவடகம்,சுவர்னபூரணாதிலேகியம்,பூரணச்சந்திரோதயம் ஆதியான வீரியவிருத்தி அவுஷதங்களைக்கொண்டு போஷிக்கவும்.

பெண்மலட்டுரோகலக்ஷணம்.

ஸ்திரீகளுக்கு மாதாந்தருதுகாலத்தில் சிரவிக்கின்ற ரத்தமானது, சிவந்தும் கருத்தும் விழுந்து, தேகத்தில் வாதகுணத்தையுண்டாக்கும்; இது வாததோஷமாம். மஞ்சள்நிறமாயும்நீலநிறமாயும்விழுந்து,தேகத்தில் பித்தகுணத்தை யுண்டாக்கும்; இது பித்ததோஷமாம். சீழைப்போல் வெளுப்பாகவிழுந்து, தேகத்தில் மந்தாக்கினிமுதலிய சிலேஷ்ம குணத்தை யுண்டாக்கும்; இது சிலேஷ்மதோஷமாம். பிரேத ரத்தம் போலும்உருண்டையுருண்டையாயும்விழும்; இது வாதசிலேஷ்மதோஷமாம். சுத்தசீழ்போல்விழும்; இது ரத்தபித்தரோகதோஷமாம். கண்டு மறையும்; இது வாதபித்ததோஷமாம். மலமூத்திரநிறமாகவிழும்; இது சந்நிபாததோஷமாம். இவற்றுள், தனித்தனியான மூன்றுதோஷங்களும் தொந்ததோஷங்களும் முறையே சாத்தியமும் கஷ்டசாத்தியமுமாக இருப்பதால், சிகிச்சையினால் மலடுநீங்கிக்கருப்பம் உண்டாகும். திரிதோஷம் அசாத்தியமாகையால், எவ்விதச் சிகிச்சைகள்செய்யினும் கருப்பந்தரியாதென்றறிக. சுக்கிலத்தையும் இவ்விதமாகவே நிதானிக்கவேண்டும்.

முற்கூறிய வாதாதிமூன்று தோஷங்களுக்கும், வாத பித்த சிலேஷ்மங்களுக்குரியஅவுஷதமும்; பிரேதரத்தநிறச்சோணிதத்திற்கு,ஆவாரைப்பூ, கருங்காலிப்பூ, மாதுளம்பூ, மருதம்பூ, செம்பரத்தம்பூ இவைகளின் ரசங்கூட்டிக்காய்ச்சிய கிருதமும்; உருண்டையான சோணிதத்திற்கும், சீழ்போன்றசோணிதத்திற்கும், முருக்கஞ்செடியைச் சமூலமும் பஸ்மஞ்செய்து அந்தப்பஸ்மத்தையும் பீளைப்பூவையும் இடித்துச்சேர்த்துக் காய்ச்சிய கிருதமும்; க்ஷீணசோணிதத்திற்கு, ஈச்சம்பாளை ஆல் முதலிய பஞ்சபல்லவ ரசங்கள்கூட்டிய கிருதமும் இன்னும் வீரியவிர்த்தியைச் செய்கின்ற பற்பல அவுஷதங்களும் மலமூத்திரத்திற்கு; ஒப்பாகிய சோணிதத்திற்கு, பெருங்காயம், வெட்டிவேர் முதலியவைகளினாற்செய்த கிருதமும் நன்மையைச்செய்யும்.

௰-வது அதிதூலரோகபடலம். ௨௱௫

மதாந்தரம்.

அகஸ்தியமகாமுனிவர் அருளிச்செய்த ௫௱-ல் சொல்லியிருக்கிற மலட்டுரோகம் எழுவிதப்படுகின்றன. அவைகளின் விவரம்:— ௧-வது, புருஷன் புணரும்போது அந்தஸ்திரிக்குத் தலைநோவு காணுமாகில், கருக்குழியில் பாரம் அல்லது பாசிபற்றி விளக்கமற்றிருக்கும், ௨-வது, அந்தஸ்திரிக்கு அக்காலத்தில் சர்வாங்கத்திலும் நோவு காணுமாகில், கருக்குழியில் வாயுவுவியாபித்திருக்கும் ; ௩-வது, நெஞ்சுவலிகாணுமாகில், யோனிசுருங்கித் தசைவளர்ந்திருக்கும் ; ௪-வது, முதுகுநோவுண்டாகில் யோனியில் கிருமிநிறைந்திருக்கும்; ௫-வது, கண்டச்சதை வலிக்குமாகில், யோனியில் ரத்தங்கட்டியிருக்கும் ; ௬-வது, ஏப்பங்காணுமாகில், யோனி மதத்துக் கொழுப்படைந்திருக்கும் ; ௭-வது, விந்துசேராமல் நஷ்டப் படுமாகில், பேயினாலும், பயத்தினாலும், யோனிக்குள் விரோத வியாதி யுண்டாயிருக்கும். இதுகளே மலட்டுரோகங்களாம். இதுகளுக்கு, ஷை முனிவர்கூறிய சிகிச்சைகளைச்செய்யில், கருப்பம் உண்டாகும்.

மதாந்தரமுற்றியது.

௧-வது ஆதி மலட்டுரோக லக்ஷணம்.

வயிற்றில் மூன்றுமடிப்பும் விழுந்து இடுப்பும்பருத்துச் சரீரமும் ஸ்தூலித்தால், இவர்கள் தேவஸ்திரிகளா யிருந்தாலும், கருப்பந்தரிக்க மாட்டாது. இதனைச் சன்மமலடென்றுஞ் சொல்வர்.

௨-வது காக மலட்டுரோக லக்ஷணம்

முதல்முதல் இரண்டு பிள்ளையைப்பெற்று, பின்பு கருப்பம் இல்லாதிருப்பது காகமலடாம்.

௩-வது கதலி மலட்டுரோகலக்ஷணம்.

வாழைமரத்தில் உண்டாகும் தாறுபோல் ஒருபிள்ளையைப்பெற்று, பின்பு கருப்பம் இல்லாதிருப்பது கதலிமலடாம்.

௪-வது கருப்ப மலட்டு ரோகலக்ஷணம்.

வயிற்றிலேயே செத்துச்செத்துவிழும் பிள்ளையைச் சாதாரணமாக வருஷந்தோறும் பெறுவது கருப்பமலடாம் இவைகளுக்குக் கருமசாந்தி யுடன் நாகப்பிரதிட்டையும்செய்து,சாரீரம்என்னும் சாஸ்திரத்தில்கூறிய பிரகாரம் சிகிச்சைகளையும்செய்தால், நல்லகருப்பம் உண்டாகும்.

அழிகருப்பலக்ஷணம்.

வயிற்றில் உருவம் ஏற்படாத இளங்கருவாயிருக்கும்போது, விலா, கீழ்வயிறு,மேல்வயிறு, பிட்டம்ஆகிய இவ்விடங்களில், அதிக உக்கிரமான வேதனையும், மார்புநோவும், முகவெளுப்பும், நாபியின்கீழ்உபத்திரவமும், ஆயாசமும்,வயிற்றில் வாளால்அறுப்பதுபோல் இருத்தலும்உண்டானால், கருப்பங்கரைந்து விழுமென நிதானித்துச் சிகிச்சைசெய்யவும்.

கருப்பபேதம்.

அறிவதற்கு அருமையாகிய கருப்பமானது உபவிஷ்டக கருப்பம், நாகோதரகருப்பம், லீநாக்கியகருப்பம்என மூன்றுவிதப்படும்.

க-வது * உபவிஷ்டக கருப்பலக்ஷணம்.

சிலஸ்திரிகளுக்கு, அக்கருப்பந்தரித்து நாளுக்குநாள் விருத்தி யடையும்போது, மாதம்மாதம் ருதுகாலத்தில் வெளிப்படுவதுபோல் சோணிதம் வெளிப்பட்டுக்கொண்டே யிருக்கும்; அப்படி இருந்தாலும் அச்சிசுவுக்குக் கெடுதிஇராது: ஆனால் அது காத்திரமாயிராமல் மிகவும் இளைத்து மரப்பாவையையொத்துத் தாய்க்குந்தெரியாமல் வயிற்றுக்குள் ஒவ்வொருவேளைகொஞ்சம் அசைவதாயிருக்கும் இதனால், வயிறுபருக்க மாட்டாதென்றறிக. இதனைஉபவிஷ்டகம், தங்குபிண்டம், சுப்திபிண்டம் எனவும்சொல்வர். இது, அல்குல்வழியாகரத்தம்விழும்போதும்பிரவிருத்தி யாகிறகாலத்தும் கருப்பஸ்தானத்தில் கொஞ்சம் அதிரலை உண்டாக்கும்.

உ-வது நாகோதர கருப்பலக்ஷணம்.

துக்கம், உபவாசம், உஷ்ணதிரவிய போஜனம், அல்குலில்மாறுமல் ரத்தம்வடிதல்,வாதாதிக்கம்ஆகிய இவைகளினால், கருப்பமானது விருத்தி யடையாமல் இருப்பதுமன்றி,வயிற்றில் ஒவ்ஒருவேளை கொஞ்சம்அதிரலை உண்டாக்கும். அந்தமாதருக்குச்சிலநாள்வயிறுபருத்ததுபோ லிருந்தாலும் பின்புவாடும். நாகம் என்பது பாம்பு; உதரம் என்பது வயிறு,

மேற்கூறிய உபவிஷ்டி, நாகோதரம் என்னும் கருப்பங்களுக்கு, வாதஹரங்களானதிரவியங்கள்,நெய்,பால்,தயிர்,மாமிசரசம் இவைகளினால் திருப்திசெய்வதும்அன்றி, சினையாயிருக்கின்ற மிருகமாமிசரசத்தினாலும் திருப்திசெய்து, சரீரத்தைப்புஷ்டியாக்கி, அந்தஸ்திரியைப் பல்லக்கு முதலிய வாகனங்களிலேற்றி உடம்பு குலுங்கும்படி செய்யவும்.

ங-வது லீநாக்கியகருப்பலக்ஷணம்.

இது முற்கூறிய கருப்பத்தைப்போலவே இருந்தாலும், அசைவு மாத்திரம் இல்லாமல் மூன்றுவருஷத்துக்குமேல் பிரயாசத்தோடு சிசுவு பிறக்கும், அல்லது மறைந்தாலும்மறையும். இது, வயிற்றுக்குள் அந்தர் பூதமாக இருக்குங்காரணத்தால், லீநாக்கியகருப்பம் எனப்பேர்பெற்றது. இதனை மும்மாங்காய் எனவும் வழங்கிவருகிறார்கள்.

இக்கருப்பத்தை, ராஜாளிப்பட்சி, கோவு,மச்சம், கத்திக்கொண்டே திரிகிறமிருகம் முதலியமாமிசங்களில் அதிகநெய்கூட்டிப் பாகஞ்செய்துக் கொடுத்து, சவுக்கியஞ்செய்யவும்.

---

* உபவிஷ்டகம் என்பது பிண்டப்பிரவேசமாத்திரம் உடையதாம்.

௰-வது அதிதூலரோகபடலம். உ௱௭

கருப்பகாலத்தில் ஆகாதவஸ்துக்களைப்புசித்தலினாலும்,சிற்சிலரோகங்களினாலும், காரணம் இல்லாமல், ருதுவாவது சூலையாவது உதாவர்த்த வாயுவாவது காணுவதுண்டு. அதற்கு உடனேயே சீதோஷ்ணமான சிகிச்சைகளைச் செய்யவேண்டும். அப்படிக்குச் செய்யாவிடில், கருப்பம் சிதைவதும் அன்றித் தாய்க்கும் அபாயம்நேரிடுமென்றறிக.

கருப்பம் மரிக்கும்லக்ஷணம்.

கருப்பஸ்திரிகளுக்கு மலமூத்திரபந்தம், வளையல், ஒட்டைப்போல் தேகங்கறுக்குதல்,வாயில்அதிகதுர்க்கந்தம்வீசுதல்,கையும்காலும் மிகவுங் கறுக்குதல், தலையிலும் முகத்திலும்வீக்கம், அடிக்கடி நெட்டுயிர்ப்பு என்னும் இக்குணங்கள் உண்டாகில், சிசுமரிக்குமென்றறிக. இதனைக் கருப்பவியாப்தி என்றுஞ் சொல்வர்.

அகமரித்த கருப்பலக்ஷணம்.

தெய்வச்செயல்,திரிதோஷவிஷமம்,அபத்தியம் ஆகிய இவைகளால் வயிற்றுக்குள் சிசுவு இறக்கும். இதனால், தொப்புளைச் சுற்றிலுமாவது வயிறுமுற்றிலுமாவது தேகமுற்றிலுமாவது சீதளம், வயிறு கெட்டியாக வுப்புதல், அதிசங்கட்டம், பிண்டம் அசையாதிருத்தல், மிகுந்ததாகம், ஸ்தனம்தளரல், பிரயாசத்தின்மேல் சுவாசம்வருதல்,இளைப்பு,எந்தவஸ்துவிலும் அருவருப்பு, துர்க்கந்தத்துடன் குழம்பாகமூத்திரம் இறங்குதல், மயக்கியநித்திரையில்இறந்தவர்களைக் காணுகின்றகனவு,கண்வட்டமிட்டுச் சுழலல்,பிரசவநோவுநீங்குதல்,மிகுந்தவேதனை எந்தப்பக்கந்திரும்பினாலும் அந்தப்பக்கத்தில் பிண்டமானது கனமாகத்தோற்றல், பிரமை, தூக்கம், மரத்தல், வெந்நீர் ஆவிபிடித்தகையை வயிற்றின்மேல் வைக்கில் அதிரல் இல்லாதிருத்தல் என்னும் இக்குணங்கள் உண்டாகும்; அப்போது சிசுவுமரித்ததென்றறிந்து தாய்க்குச்சேதம் இல்லாமல் அந்தச்சிசுவைக் கைப்பழக்கத்தினாலாவது ஆயுதங்களினால்சேதித்தாவது மருந்தினாலாவது நஞ்சுக்கொடியுடன் சீக்கிரத்தில் வெளிப்படுத்தவேண்டும்.

தருணப் பிரசவலக்ஷணம்.

வயிற்றில் கருப்பநிறைந்து இன்றைக்கோ நாளைக்கோ பிரசவம் என்றிருக்குங்காலத்தில், ஆயாசம், வயிறுதளரல், கண்கள் குழிவிழுதல், பலவிதஇளைப்பு,சோகை, கீழ்வயிறுகனத்தல், அரோசகம், வாய்நீரூறல், அடிக்கடி நீரிறங்கல், தொடை வயிறு இடுப்பு முதுகு மார்பு கீழ்வயிறு இருகவுட்டி அபானம் என்னும் இவ்விடங்களில்நோவு, அல்குல்விரிதல், அவ் அல்குலில்அதிரல், வேதனை, ஒருவேளை ஊசியால் குத்துவதுபோல்

குத்தல், சலம்பெருகுதல் என்னும் இக்குணங்களும், வயிற்றிற்பெரிய நோவென்னும் மிருநோவும்,சலோதயமும்உண்டாகும். இதுவே தருணப் பிரசவமாம். இதனை ஆசன்னப் பிரசவமென்றுஞ் சொல்லப்படும்.

* மல்கலாக்கிய சூலைலக்ஷணம்.

பிரசவித்தவுடனே, அந்தஸ்திரிகளுக்கு, அழுக்கினால்,மார்பிலாவது சிரசிலாவது கீழ்வயிற்றிலாவது, சகிக்கக்கூடாத குத்தலும் நோவும் உண்டாகும். இதனைமண்குத்துநோவென்று சொல்லுகிறார்கள்.இது,திரிகடுகு, லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, ஏலம் இவைகளைச் சுத்திசெய்து வகைக்கு ஒருவராகனிடை நிறுத்துக் கழுநீரிலாவது வெல்லத்திலாவது கலந்து, இரண்டுவேளையுங்கொடுக்க நிவிர்த்தியாகும்.

அசாத்திய கருப்பலக்ஷணம்.

சிசுவெளிப்படாதிருக்குதல்,அல்குல்தடித்துக்கொண்டுகொஞ்சம் வெளியில்சரிந்ததுபோலிருக்குதல்,மல்கலசூலைகாணுதல்,ஊர்த்தசுவாசம், துர்க்கந்தஏப்பம்,தேகஞ்சில்லிடல்என்னுமிக்குணங்களுண்டாயிருந்தால், அந்தஸ்திரிகளுக்கு வைத்தியத்தாற்பயன் இல்லையென்றறிக. இதுநிற்க, வஸ்திஸ்தானத்தில் சிக்கிக்கொண்ட கருப்பத்தினால் தாயிறந்தும், வயிறு மாத்திரம் வெந்நீர் ஆவிக்கு அதிருமாகில், அவ்வயிற்றைக்கீறி உபாயமாக அச்சிசுவைமாத்திரம் எடுத்துக்கொண்டு வளர்ப்பிக்கவும்.

மூடவிஷ்டம்ப கருப்பங்களின்லக்ஷணம்.

மேடு பள்ள ஸ்தானப்படுக்கை முதலிய துர்ச்செய்கைகளினாலும் அபானவாயுவின்விகுணத்தினாலும்பிரசவகாலத்தில்தாறுமாறாகப்புரண்ட விகற்பத்தினாலும், வயிற்றிலிருக்கும் சிசுவினது சிரசும், கையும், பாதமும் ஸ்தானந்தப்பி ஸ்தானத்தில் சிக்கிக்கொள்ளும். இதனால், அப்பிண்டம் வெளிப்படாமல்இருக்கும். இதுவே மூடகருப்பமாம்.யோனிஸ்தானத்தில் ஒருகாலும்,குதஸ்தானத்தில் ஒருகாலும் மாட்டிக்கொண்டு ஸ்தம்பித்துப் பிரசவமுகங்காணாதிருக்கும். இதுவே விஷ்டம்பகருப்பமாம். இவற்றுள், எந்தக்கருப்பமாவது பிரசூதவாயுவினால் முறுக்குண்டு அடிபடும்போது தாய்க்குஅதிககருப்பவேதனைஉண்டாகி,அச்சிசுவானதுஅவ்ஆயாசத்தினால் ஸ்தம்பித்து மயங்கிக்கிடக்கும்போது அவ்வேதனை திடீலென்று நின்று விடும் : இதனால், அந்திஸ்திரிக்கு இரண்டுநாள் மூன்றுநாள் வரைக்கும் பிரசூதவேதனைகாண்பதும், சிசுவு வெளிப்படாமல் இருக்க அவ்வேதனை நின்றுபோவதும் உண்டு ; அத்தருணத்தில் உயிர்த்திருக்கின்ற சிசுவைக்

---

* மல்கலம் என்பது அழுக்கின்சேர்க்கையால்பிறக்கும் வேதனையாம்.

கைச்சாதகத்தினாலும்ஆயுதத்தினாலுமுபாயமாகவெளிப்படுத்தவேண்டும். அதைவிட்டு மரித்ததெனநினைத்து அச்சிசுவைச் சோதிப்பார்களாகில், அத்துடன்கூடத்தாய்க்கும்சேதம்வருமென்றறிக. இக்கருப்பங்கள்உள்ளில் உபத்திரவஞ்செய்வதும் ஸ்தம்பிப்பதுமாக இருக்குங்காரணத்தால், மூட விஷ்டம்ப கருப்பங்கள் எனப்பேர் பெற்றன.

பிரசவித்து மூன்றுமாதமான ஸ்திரிகளுக்கு ஆமாசயஸ்தானத்தில் ரூட்சைகாணுவதும்உண்டு. அதற்கு,வெட்டிவேர், சிந்தில்தண்டு, கொத்து மல்லிவிதை, பூனைப்புழுக்கம்வேர், பற்பாடகம், சந்தனக்கட்டை, அதிவிடையம், சிற்றாமுட்டிவேர் இவைகளை வகை ௧-க்கு பலம் வ - ஆக நிறுத்துநய்யநசுக்கி, ஒருபடிநல்லசலத்தில்சேர்த்து, அத்தொகையில் ௪-ல் ஒருபங்காகக்காய்ச்சிய கஷாயத்தை அவ்வெப்பம் தணியும்பரியந்தம் காலையிலும், மாலையிலும் கொடுக்கவும். இதற்கு இச்சாபத்தியம்.

எந்தஸ்திரிகளுக்கும் கருப்பமடைந்த மாதம்முதல் ஏழுமாதம் வரைக்கும் இளநீர்வழுக்கையின் தன்மையையொத்து வளருகின்ற இளங் கருவாகையால், அது வாதாதிகளினாலும் தகாத நடத்தைகளினாலும் ஒருவேளை கரைந்தும் கரையாமலும்விழும். அப்படிக்கு விழ ஒட்டாமல் அந்தந்த மாதங்களுக்கும் தனித்தனியே சாரீரசூத்திரம் என்னும் சாஸ்திரத்திற் சொல்லியபிரகாரம் அவுஷதங் கொடுக்கவேண்டும். அந்த ஏழுமாதத்திற்குமேல்வயிற்றில்பிண்டஞ்சிக்கிக்கொள்ளாமல் சுகப்பிரசவம் ஆகும்பொருட்டுப் பத்துமாதம்வரைக்கும் ஆமணக்கின் நெய்கூட்டிய சுகுமாரவிரேசன அவுஷதமுதலிய சிகிச்சைகளைச்செய்யவேண்டும்.

சில ஸ்திரிகளுக்குக் கருப்பஸ்தானத்தில் வாதாதிக்கத்தால் கட்டுப் பட்டிருக்கின்ற ரத்தமானது, கார சார உஷ்ணமுள்ள வஸ்துக்களினால் கரைந்து விழுவதுண்டு. அதைச்சிலர் பிண்டமென நினைத்துப் பைசாச அணாந்தினால் கரைந்து விழுந்ததென வீண் தூறுசொல்வர்.

வஷ்டிரோகலக்ஷணம்.

பிரசவித்துச்சரீரமுழுதும்பச்சைப்புண்போலிருக்கின்றஸ்திரிகளுக்கு, எந்நேரமும் உடம்பு அதிரும்படியான அதிக சையோகத்தினாலும், சதுர்த்தசவேகத்தை மறித்ததினாலும், கருப்பகால அபத்தியத்தினாலும், கருப்பஸ்தானத்திலிருக்கும் வாயுவானது அதிகரித்து,இடுப்பு, பிட்டம், திரிகஸ்தானம்,கவுட்டி, யோனி, கீழ்வயிறு, தொப்புள், முலைக்காம்புக்குங் கீழ்ப்பக்கம் ஆகிய இவ்விடங்களில் சகிக்கக்கூடாத பிரசவ நோவைப் பார்க்கிலும் அதிகநோவை யுண்டாக்கும். இதை, ரத்தகுன்மக்கட்டி, அஷ்டிலிகாவாதக்கட்டிஎனவும் சிலர்சொல்வர். இவ் இரண்டும் அல்லவே

யல்ல. இதுசையோகம்ஆதியாகவரும் உபத்திரவத்தால்பிறந்தசுத்தவாதக் கட்டிஎனவே ஐயமறச் சொல்லவேண்டும். ஏனெனில், இது பக்கங்களில் குத்தலையும் நோவையும் தபித்தலையும் உண்டாகச்செய்வதுமன்றி, தான் அநுசரித்த பக்கத்தில் மிகுந்த வேதனையைக் கொடுத்துச்சமுத்திரத் தவளையைப்போல்கருப்பமுகத்தைஅடைத்துக்கொள்ளுவதால்என்றறிக. முற்கூறியகட்டிகளே ஆயின், அதுகளுக்குச் சுதாவில் கரைந்துவிழுகின்ற தன்மைஇராது. இதுவோவென்றால், மாதாந்தருதுகாலத்தில்அதிகரித்த வாயுவின்வேகத்தால்அடிபட்டு அல்குல்வழியாகப் பட்டைகஷாயத்தைப் போலும் மாமிசம்கலந்தசலத்தைப்போலும் கரைந்துஒழுகுவதும்அன்றி, தெளிந்தும் குழம்பியும் கறுத்தும் குறைந்தும் அதிகரித்தும் உதிரமாகப் பெருகும். இச்சையால் உண்டாவதற்கு, வஷ்டிரோகம் என்றுபேராம். இதில் வாயுவு அதிகரிக்கில், துவஷ்டிரோகமாம்.

இதனை மந்திரசானியின் லேபனுக்குலிச் சாதகத்தினாலும், காரசாரத்தினாலும், வாதாரி எண்ணெகளினாலும், தேகபுஷ்டிக்காகப் பிறந்த அவுஷதமுதலிய சிகிச்சைகளினாலும் பரிகரிக்கவேண்டும்.

இனி, பாலரோக நிதானம்.

பாலரோகபேதம்.

பால்குடிக்கும் சிசுக்கள், பாலும்அன்னமும் அருந்தும் சிசுக்கள், அன்னமாத்திரம் புசிக்கும் சிசுக்கள் ஆகிய மூன்றுவிதச் சிசுக்களுக்கும் அசீரணம் என்கின்ற அலஜரோகம் உண்டாகும். இதனை,மந்தம்,மாந்தம், பால்கட்டு, புளிப்பு எனவுஞ்சொல்வர். இவைநிற்க, வாதம், பித்தம், சிலேஷ்மம்என்னும் மூவகைத்தோஷங்களால் கெடுதியையடைந்த முலைப் பாலின்வழியாகப் பால்குடிக்கும் சிசுக்களுக்குப் பால்மாந்தம் என்கின்ற க்ஷீராலஜகரோகம் பிறக்கும். அது பாலூட்டியதாய்க்கு ஒத்தபடியே வாதாதிகளால் மூவிதப்படும். இதனால் ,ஆமாசயஸ்தானத்தைப் பற்றி வாதகுண்டாலம்,பித்தகுண்டாலம்,சிலேஷ்மகுண்டாலம்,தாலுகண்டகம், கிருளிகாவிரணம், பாலசோஷம், துந்தம், குதக்கூடம், விஷமசிரா, முகதூழிகம்எனப் பத்துவிதரோகம் உண்டாகும்,

க்ஷீரபேதம்.

வாதபதார்த்தஞ்சேர்ந்தஅன்னம்,விரோதபலகாரம் முதலியவைகளைப் புசிக்குதல், பசியால்வருந்தல், சித்தப்பிரமை, பற்பலரோகம், கருப்பம் ஆகிய இவைகளையுடைய ஸ்திரிகளின் முலைப்பாலால், பரிசுத்தமாக

ய-வது அதிசூலரோகபடலம். உளாயக

இராநின்ற பாலர்களுக்கு அநேகரோகம் உண்டாகும். இவற்றுள், கருப்ப ஸ்திரிகளின் முலைப்பாலானது எவ்வளவுங்கூடாது. அதுசேர்ந்தால், அக்கருப்பவயிற்றைப்போலவே சிசுக்களுக்கும் வயிறுபருக்குமென்றறிக. இதுநிற்க, சிசுக்கள் தங்களுக்கிருக்கும் சங்கடத்தை இவ்விதமெனச்சொல்ல ஞானமில்லாமையால், அச்சங்கடத்தையும், உள்காய்ச்சலையும், சீதளத்தையும் இன்னும் பலவிதநோவையும், அவ் அழுகையினுல், மருத்துவர் அதிநுட்பத்துடன் யூகித்துநிதானிக்கவும். க்ஷீரம் என்பது பால்.

க்ஷீராலஜகரோகலக்ஷணம்.

திரிதோஷத்தால் கெடுதியை அடைந்த முலைப்பாலைக் குடிக்கும் பாலர்கட்கு, மலமானது, துர்க்கந்தத்துடன் அசீரணப்பட்டு, சுத்தசலம் போலும் கலங்கல்சலம்போலும் கட்டுப்பட்டதுபோலும் சிதறிச் சிதறி நானாவிதநிறமாகவும் பேதியாகும். அன்றியும் மூத்திரமானது மஞ்சள் வெண்மை நிறத்துடன் குழம்பாக இறங்கும். இதனுல், சுரம், அரோசகம், தாகம், வாந்தி, சுபாவஏப்பம், கொட்டாவி, சர்வாங்கநோவு, குத்தல், நடுக்கல், வயிற்றில் இரைச்சல், பிரமை, கண் நாசி வாய்என்னும் இவ்விடங்களில் துர்க்கந்தம் முதலியகுணங்கள் உண்டாகும். இது, வாதாதிமூன்று தோஷங்கள்சேர்ந்த முலைப்பாலால் பிறப்பதால், அந்தந்தப்பேதங்களை அறிந்து உசிதமான சிகிச்சைகளைத் தகுந்தபடிக்குச் செய்யவும்.

குண்டாலரோகபூர்வரூபம்.

இது, ௱௬-வது பக்கத்தில்கூறிய வித்திரிதிக்கட்டிகளைப்போலவே ஆரம்பித்து, மாமிசதாதுவைஒட்டிக்கட்டிகள்பிறக்கும். பழுக்குங்காலத்தில் அதுகளில் சிறுகலசத்தைப்போல் பள்ளம்விழும். இதுவே குண்டாலக் கட்டியின் பூர்வரூபமாம். குண்டலம் என்பது செவ்வாப்புக்கட்டி.

க-வது வாதகுண்டாலக்கட்டி.

இது கறுத்தநிறத்துடன் எழும்பும்; அப்போது அதில் குத்தலும் தேகத்தில் சுரமும் உண்டாகும். இதுவே, வாதசெவ்வாப்புக்கட்டியாம். இதுக்கு வச்சிரபூசஎண்ணெய்யும் பிரயோகஞ்செய்யலாம்.

உ-வது பித்தகுண்டாலக்கட்டி.

இது, மஞ்சள் சிவப்பு நிறங்களைஉடைத்தாய், நீங்காத எரிச்சலைக் கொடுத்துச் சீக்கிரத்தில் பழுத்துஉடையும். அப்படிஉடைந்தால், அக்கட்டிகளில்நின்றும்வெறும்ரத்தமாத்திரம்வடியும். இதுவே த்தசெவ்வாப்புக் கட்டியாம். இது பஞ்சாங்குலப்பாவனத் தயிலத்தாலும் வசப்படும்.

௩-வது சிலேஷ்மகுண்டாலக்கட்டி.

இது,கனத்தும் வெளுத்தும் நமைச்சலுடன் அசைவற்றும்புடைகளுள்ளதாய் வெகுகோரமாக எழும்பும். இதுவே, சிலேஷ்ம செவ்வாப்புக் கட்டியாம். இக்கட்டி கஷ்டசாத்தியமாம்; ஆயினும் ஆகாயத்தாமரை எண்ணெய்யினால் சாத்தியம் ஆனாலும் ஆகும்.

௪-வது தாலுகண்டகரோகம்.

இது, சிலேஷ்மதோஷம் அதிகரித்துத் தாடைகளில் இருக்கும் மாமிசத்தை அநுசரித்து அவ்விடத்திலும் தலையிலும்குழிவிழும்படிக்குச் செய்யும்போது,பிறக்கும். இதனால்,சிசுக்களுக்குமுலைப்பாலில் அசங்கியம், பிரயாசத்தின்மேல் கொஞ்சம்பாலுண்ணல், தாகம், வாயில் நமைச்சல், கண்ணோவு;கழுத்துவிகுத்தல்,வாந்தி,பச்சைநிறத்துடன்சஞ்சலமானபேதி என்னு மிக்குணங்கள் உண்டாகும். இது,தாடையில்முள்ளுறுத்தல்போல் உபத்திரவத்தை யுண்டாக்கலால், தாலுகண்டகமெனப் பேர்பெற்றது. இதனைத்தாலுபாகரோகமெனவுஞ் சிலமதாந்தரத்தில்சொல்லப்படும்.

இதனை, கருந்துளசிவேர்க்கஷாயம்,அமுதாதிக்குளிகை சுண்ணநீரா லரைத்த அயகாந்தச்சிந்தூரம் முதலியவற்றால், நிவர்த்திசெய்யவும்.

௫-வது நிசூளிகாவிரணரோகம்.

இது பித்தத்தினால் நமைச்சலுடன் கூடப்பிறக்கும்; அப்போது உடம்பெங்குஞ் சிறுசிறுகொப்பிளங்கள் எழும்பிஅடங்கும். அடங்கினது இரவிலாவது பகலிலாவது முன்பு உண்டானதுபோல் மிகுநெருக்கமாகப் பரவும். இது, சரீரமுற்றிலும் வேர்க்குருக் கொப்பிளங்களினால் சட்டை போட்டதுபோல் மறைப்பதால், நிசூளிகா விரணமெனப் பேர்பெற்றது. இது ஜெய ரசபஸ்மஞ்சேர்ந்த ஆமணக்குநெய் முதலியவற்றால்விலகும்.

நிசூளிகை என்பது சட்டை.

௬-வது பாலசோஷரோகம்.

இது, குளிர்ந்தசலம் சிலேஷ்மப் பிரதானமானபால் இவைகளைக் குடித்துப் பகலில் நித்திரையுஞ்செய்து அதின்மேல் முலைப்பாலையுங் குடிக்கின்ற சிசுக்களுக்கு, ரசதாது ஓடுகின்ற சிலேஷ்மநரம்புகளின் மார்க்கத்தை அச்சிலேஷ்மமேநிறைந்து அடைந்துக் கொள்ளும்போது, பிறக்கும். இதனால்,சரீரசுஷ்கம், முகத்திலும் கண்ணிலும் காந்திநீங்குதல், பீநசம், அரோசகம், இருமல்என்னும் இக்குணங்கள் உண்டாகும். இதனை உள்ளுருக்கி, உடலுருக்கி எனவும்சொல்லுகிறார்கள். இதற்குச் சிலேஷ்மாரிக் குடிநீரிலமும், தேகபுருஷ்டிக்கிருதமும் ஆகும்.

எ-வது துந்தரோகம்.

இது, வாயுவினுல் பிறக்கும் ; அப்போது சிசுக்களுக்கு வயிறுப்புதலும் நாபியில்நோவும் உண்டாகும். துந்தம் என்பது அசீரணவயிறு. இதனை வாதாரிக்கருக்கு முதலியவற்றுல் நிவர்த்திசெய்யவும்.

அ-வது குதக்கூடரோகம்.

இது, பாலர்கட்கு வயிற்றிற் புளித்தமலஞ்சேருவதனுலும் அதிசாரரோகத்தினுலும் பிறக்கும் ; அப்போது,குதஸ்தானத்திற்சிவந்தசிலேஷ்மமொத்தையைப்போல் சிவந்தநிறத்தையுடையவிரணமும் உள்ளில் அதிகநமைச்சலும் இதனுல் மிகுந்த உபத்திரவமும் உண்டாகும். இதனைச்சிலர் மாதுருதோஷம், ஏதுகம், பிரஷ்ட்டருக்கு, சதனம் எனவுஞ்சொல்வர். குதம் என்பது ஆசனம் ; கூடம் என்பது புற்று.

இதற்குச் சீ தோஷ்ணகாரசாரம் முதலிய சிகிச்சைகளும் உதவும்.

கூ-வது விஷமசிராரோகம்.

இது, அசீரணத்தினுல் சிசுக்களுக்கு ரத்தநரம்புகளில் எங்நேரமும் காங்கையும் அதிகநமைச்சலும் உண்டாகும்போதுபிறந்து, மிகுந்த உபத்திரவத்தைச்செய்யும் ; இதற்குக்கபாரிவிரேசனமும், சுனாவித்தாதிக் கல்கப்பூச்சுக்குளியலும் ஆகும். சிரா என்பது நரம்பு.

ய-வது முகதூஷிகரோகம்.

இது, சிலேஷ்மவாதம் அதிகரித்ததினுல்பிறந்து, சிசுக்களுக்கு வாயில் இலவமுள்ளுகளைப்போலவே முள்ளுகளையுண்டாக்கும். இதனை நாய்முள்ளு என்பர். முகம் என்பது வாய் ; தூஷிகம் என்பது விகாரம்.

இது செக்கான் கைதுவட்டும் எண்ணெய்ச் சீலையாலும் விலகும்.

தந்தோற்பவரோகம்.

இது, பஞ்சினது நூல் சரடு கயிறு முதலியவைகளைச் சிசுக்கள் விழுங்குங்காரணத்தால் பிறக்கும். இதனுல், அதிகசுரம், ஓயாதபேதி, இருமல், வாந்தி, தலைநோவு, ஒருவேளை மலபந்தம் முதலிய ரோகங்களும் உண்டாகும். தந்து என்பது நூல் ; உற்பவம் என்பது உண்டாகுதல்.

இதற்குச் சுகவிரேசனம் நன்மையைச்செய்யும்.

உல்பகரோகலக்ஷணம்.

பிரசவித்தமருமாத ருதுகாலாந்தத்திலேயேபுருஷனைச்சேர்ந்துமறு கருப்பத்தைக்கொண்ட வாலிந்திஎன்கிற ஸ்திரிகளுக்குக் கருப்பாசயத்தில் பிண்டோற்பத்திக்குக் காரணமான கருபச்சலத்தினுல், கண்டகமென்கிற சிலேஷ்மம் இருக்கின்ற பையானது விருத்தியடையும்போது, அன்னரசமானது சிசுபோஷகங்களான நாடிமார்க்கங்களில் விருத்தியடையும்.

இதனால், முன்பு பிறந்திருக்கின்ற சிசுவானது மயக்கத்துடன் கைகளை முஷ்டிபந்தமாகமூடிக்கொள்ளும். அன்றியும் மார்புநோவு, கால்கைகளைச் சொறிதல், இருமல், இளைப்பு, வாந்தி, சுரம் முதலியரோகங்களினால் இளைக்கும். இது, தாயினது கருப்பத்தால் பிறந்தமையால், சகசரோகமெனவும், அம்பூரணரோகமெனவும் சொல்லப்படும்; இது, மூலைமார்க்கச் சலத்தால் பிரவேசித்துச் சிசுவை மூடுதலால், உல்பகரோகம் எனப்பேர் பெற்றது. இதற்கு வேறுமூலைப்பால் ஊட்டுவதுந்தவிர, அப்பிரசவம் ஆகும்பரியந்தம் இச்சிசுவைப் பாதுகாக்கவேண்டும்.

உல்பகம் என்பது மறைப்பதாம்.

பாலவிசர்ப்பிரோகலக்ஷணம்.

பாலர்கட்கு விசர்ப்பிக்கொப்பிளமானது கீழ்வயிற்றிலுந்தலையிலும் வியாபிக்கில் மரணத்தைக்கொடுக்கும். அன்றியும், திரிதோஷத்தாற் பிறந்தவிசர்ப்பிக்கொப்பிளமானதுசெந்தாமரைஇதழையொத்திருப்பதால், இதனை மகாபதும விசர்ப்பி எனவுஞ்சொல்வர். இது, முதல் முதல், நரம்பின்வழியாக நெற்றியில்கனத்து மார்பிலிறங்கும். பின்பு மார்பில் இருந்துகுதஸ்தானத்திலிறங்கும் : இப்படிக்குஅதோமுகமாகஇந்தரோகம் இறங்கி இறங்கிச்சுற்றுவதால், அசாத்தியமாம். ஆயினும், ௱சஉ - வது பக்கத்தில் இவ்விதரோகத்திற்குச் சொல்லிய சிகிச்சைகளில், சுகுமார அவுஷதங்களை எடுத்துப்பிரயோகிக்கில், சாத்தியம் ஆனாலும் ஆகும்.

மிருத்திகாபக்ஷணரோகலக்ஷணம்.

தினந்தினமும் மண்ணைத்தின்னுகின்றசிசுக்களுக்கு, தேகம்வெளிறலுடன்வீக்கம், இருமல், இளைப்பு, பேதி, வயிற்றிற்கிருமிசேருதல்,வாந்தி, மூர்ச்சை, மந்தாக்கினி,மூலைப்பாலில் அசங்கியம், சரீரநோவு, பிரமைமுதலியரோகங்கள் உண்டாகும். இதற்கு, ரத்தவிருத்தி அவுஷதமு முதவும்.

* பாரிகர்க்கிகரோகலக்ஷணம்.

கருப்பஸ்திரிகளின் பாலைக்குடிக்குஞ்சிசுக்களுக்கு, இருமல்,மந்தாக்கினி, அரோசகம், வாந்தி, சோம்பல், இளைத்தல், பிரமை என்னும் இக்குணங்கள் பிறப்பதும் அன்றி, வயிறும்பருக்கும்.

இது, கபாரிச்சிகிச்சைகளால் நீங்கும்.

பாலரோகஞாபகம்.

மலபந்தம்,வாந்தி,மூலைப்பாலில் அசங்கியம்,குடல் இரைச்சல்,வயிறுபொருமலுடன்பருத்தல், சரீரங்கூன்வீழ்தல் என்னும் இக்குணங்கள் இருந்தால், அச்சிசுவுக்கு வயிற்றைப்பற்றிய ரோகமென்றறியவும்.

---

* பாரிகர்க்கிகம் என்பது சர்வாங்கத்திலும் சகிக்கக்கூடாத உபத்திரவத்தைச் செய்வதாம்.

வஸ்திகுய்யரோகஞாபகம்.

மலசல பந்தம், திடுக்கெனப்பயப்படல், வெருட்சியாக விழித்தல் என்னும் இக்குணங்கள் இருந்தால், அச்சிசுவுக்குக் கீழ்வயிற்றையும், குய்யஸ்தானத்தையும் பற்றியரோகமென நிதானிக்கவும்.

சகலரோகஞாபகம்.

சீறிச்சீறி அழுகின்ற விகாரக்கூச்சலினாலும், தேகமெலிவினாலும், ரோக சுபாவகுணங்களினாலும், இன்னும் பலவித அநுபவக்குறிகளினாலும், இன்னவிதரோகமென யூகையுடன் நிதானித்துச் சிசுக்களுக்குத் தகுந்தபடி சிகிச்சைசெய்பவரே பண்டிதர்களாம்.

மதாந்தரம்.

ஊழ்வினை, தாய்தந்தைகளின் சோணிதசுக்கிலங்களைப்பற்றியரோகம், கெடுதியை அடைந்தமுலைப்பால், அதிகதிண்டி ஆகிய இவைகளால், சிசுக்களுக்குக் கணரோகம் முதலிய பலவிதரோகம் உண்டாகும்.

* கணரோகபேதம்.

கணரோகம் எண்விதம் அவையாவன:—சூலிகணம், முக்குகணம், ஆமகணம், தேரைக்கணம், மகாகணம், கழிகணம், சுழிகணம், வறள்கணம் என்பதாம், மாதா பிதாக்களின், நாதவிந்துக்குள் அடங்கிய வாதாதி தோஷங்களில்நின்றும் உற்பத்தியாகிக் கருப்பாசயத்துச் சிசுவைப்பற்றி அச்சிசுவினது சப்ததாதுக்களும் வன்மையை யடையுங் காலத்தில் விருத்தியை அடைவதால், இதுகணரோகம் எனப்பெயர்பெற்றது.

சாமானியகணரோகலக்ஷணம்.

மார்பிலும் முலையிலும் குண்டுபோல்வீக்கம் எழும்புதல், தேகவாட்டம், வாய்நாற்றம், தலைச்சுற்றல், உள்சுரம், ஒருவேளை வெளிச்சுரம், சிலவேளை வயிற்றின்மேல் சுடுகை, மயக்கம், வறண்டமலம் என்னும் இக்குணங்கள் உண்டாகும். இக்குணங்கள் சகல கணரோகங்களுக்கும் பொதுவாயிருக்குமென்றறிக. இது ௰உ வயதுவரைக்கும் தொடரும்.

க-வது சூலிகணரோகம்.

மேல்மூச்சு, இருமல், நெஞ்சும் நாவும் நாபியும் புண்போலிருத்தல், பாலுண்ணாமை, முகநாற்றம் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

உ-வது முக்குகணரோகம்.

வயிற்றுக்கடுப்பு, நாவில்வெடிப்புடன் வெந்ததுபோலிருத்தல், வறளல், சுரம், தலைவலி, எரிச்சல், ஆசனம்வெளிப்பட்டு முக்கலுடன்ரத்தமும் சீதமும் ஒழுகுதல், தேகவாட்டத்திலும் கறுத்தநிறம், முடிசோருதல், தாகம் என்னும் இக்குணங்களை உண்டாக்கும். இதுவே மூலகணமாம்.

---

* கணம் என்பது கூட்டம்.

௩-வது ஆமக்கணரோகம்.

நெஞ்சில்துடித்தல், சிறுநீர்மஞ்சளாக இறங்குதல்,தேகத்தில்புகை கப்பினதுபோல்மாறுநிறம், ஒருவேளை சர்வாங்கத்திலும் வெதும்பல், இருமல், வயிறிரைச்சல், புகைந்துபுகைந்து மேல்மூச்சு உண்டாகுதல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௪-வது தேரைக்கணரோகம்.

வாதநாடி மற்றநாடிகளில் பின்னிக்கொண்டு நடக்குதல், புளிப்பு துவர்ப்பு வஸ்துக்களில்வெறுப்பு, அன்னத்திவேஷம், திரிதோஷாதிக்கம், நாபியில்புண்போலிருத்தல்,உட்காய்ச்சல்,தேகவாட்டம்,எரிகுன்மக்குணம், பித்தவெட்டை, தாதுநஷ்டம் என்னும் இக்குணங்களை உண்டாக்கும். இது, ௬-வயதுக்குள் நீங்காவிடில் ௧௨-வயதுவரைக்கும் இருக்கும்.

௫-வது மகாகணரோகம்.

முகம் புறங்கால் புறங்கை இவ் இடங்களில் மினுமினுப்பு, நகமும் விழியும்வெளிறல், மயக்கம், மிகுந்தவெதும்பல், உதடுபுண்போல் சிவந்திருத்தல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௬-வது கழிகணரோகம்.

சீதஞ்சீதமாயும் மலமாயும் பாலைப்போலவும் சலம் சலமாகவும் பேதியாகுதல்,உள்ளங்கை உள்ளங்கால்களில்சீதளம், ஒருவேளைக்காய்கை என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௭-வது சுழிகணரோகம்.

கண்சொருகுதல், மார்புநோவு, வயிறு ஈரல் நெஞ்சு நரம்பு இவை கள்வெந்ததுபோலிருத்தல், பால்உண்ணாமை, அலருதல், இருமல், செருமுதல், மேல்மூச்சு, கை கால்களில் சீதளம், வயிற்றுப்பொருமல், நோவு, சுரம், நாக்குவறளல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௮-வது வறள்கணரோகம்.

மேனிவறளல், நெஞ்சுதுடித்தல், புகைந்திருமல், மாறுநிறம்,விட்டுவிட்டு வயிற்றில் இரைச்சல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

இதுகளைப் பஞ்சாங்குல பாவனத்தயிலம், வலப்பக்கல்சேர்ந்த கணத்தெண்ணெய், தாரோஷ்ணம் முதலிய உபாயச் சிகிச்சைகளைக் கொண்டு நிராகரிக்கவேண்டும்.

ஆகணரோகம் ௮-ம் முற்றியது.

மாந்தரோகபேதம்.

வெல்லம், தேங்காய்,மாங்காய், சுண்டற்கறி, வழுக்கைக்கீரை,வாளைமீன்,வரால்மீன், கெட்டுலர்ந்தபள்ளை ஆட்டின் இறைச்சி, புளிப்புமோர்,

பாகற்காய், முதிர்ந்தவாழைக்காய், கிழங்குவகை, மந்தவஸ்து, எருமைப்பால், தினசையோகம், சரகுஊறியசலம், சலதோஷம், பசி, துயரம், என்னுமிவைகளை அநுசரிக்கும்ஸ்திரிகளின் முலைப்பாலைக்குடிக்கும் சிசுக்களுக்குமாந்தரோகம்உண்டாகும். அது, செரியாமாந்தம், பீர்மாந்தம், சுரமாந்தம், விஷமாந்தம், கழிமாந்தம், ஊதுமாந்தம், நீர்மாந்தம், தலைமாந்தம் என அ-விதப்படும். அன்றியும், சிங்கிமாந்தரோகம் என்பது ஒன்றுண்டு.

மாந்தரோகக்குறி.

பசியில்லாமை, சீதங்கலந்த நானாவிதநிறத்துடன் பால்போலவும் தெளிந்தசலம்போலவும் துர்க்கந்தமாகவும் பேதியாகுதல், சுரம், மயக்கம், கையும் காலும்சில்லிடல், கண்களில் வெதுப்பம், ஒருவேளைகுளிர்ச்சி, சோருதல், முகத்தில்பலநிறத்துடன் பளபளப்பு இவைமுதலியகுணங்கள் உண்டாகும். இக்குணங்கள் சகலமாந்தத்திற்கும் பொதுவாயிருக்கும்.

க-வது செரியாமாந்தரோகம்.

வயிறுஉப்பலோடு மாவைக்கரைத்ததுபோல் கண்டலும் கரைசலுமானபேதி, விக்கல், சுரம், தலைவலி, அரைக்கண்மூடியபார்வை, துர்ப்பலம், துயரம், சோருதல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

உ-வது பீர்மாந்தரோகம்.

வயிறுபொருமலுடன் பால்நிறமானபேதி, புகைந்திருமல், பால் உண்ணாமை, வாந்தி, கண்களில்குழிவிழுதல், தாகம், அதிகவெப்பம், மார்புநோவு, தலைநடுக்கல், வயற்றுவலி, சிறிச்சிறி அழுதல், பெருமூச்சு, சுரம் என்னும் இக்குணங்களை உண்டாக்கும். பீர் என்பது பால்.

ங-வது சுரமாந்தரோகம்.

சுரம், முலையை வாயில்வைத்து ஊட்டுகினும் கொஞ்சம் கொஞ்சம் உண்ணுதல், அடிக்கடி அழுகை, பொடி இருமல், மலசலக்கட்டு, பசியில்லாமை, மயக்கம் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

ச-வது விஷமாந்தரோகம்.

அரைக்குங் கிழ்ச்சீதளம், வயிறிரைச்சல், பயந்தபார்வை, தாய் கையிலுந்தங்காமை, சோருதல், மயக்கம்என்னுமிக்குணங்களை உண்டாகும்.

ரு-வது கழிமாந்தரோகம்.

நானாவிதமான கழிச்சல், வாந்தி, மயக்கம், சுவாசம், வாயும் குரலும் சில்லிட்டதுபோல் தோற்றுவதுமன்றி, வயிறு கை கால் இவ் இடங்களில் சீதளத்துடன் வியர்வை என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௬-வது ஊதுமாந்தரோகம்.

கால் கை வீக்கம், சோர்வு, சுரம், அன்னபானாதிகள் இறங்காமை, நாவில்புண்போலிருத்தல், மிகுந்தசுவாசம் எழும்புதல் என்னும் இக் குணங்களை உண்டாக்கும்.

இது, ௰௨-வயது வரைக்கும் போராடும்.

௭-வது நீர்மாந்தரோகம்.

சர்வாங்கவியர்வை, சீதளம், குளிர், முகத்தில் பளபளப்பு, தேகத்தி லாவது கை கால்களிலாவது தினவுடன் வீக்கம், தலைநோவு, மூக்கலுடன் நீரிறங்குதல், இரைந்திரைந்துவயிறுகழிதல்,வாய்நீரூறல், ஓக்காளம்,மெலி ந்தவார்த்தை, உறக்கம், நகைப்பு என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௮-வது தலைமாந்தரோகம்.

தலையிலும் கழுத்திலும் ஊதல், கைகால்களில் குளிர்ச்சி, சர்வாங்க நோவு, ஒருவேளைகுலைநோவு, இதனால் துள்ளித்துள்ளிவிழுதல், குளிர் சுரம், முகத்தில்வியர்வை, புருவவேதனை, பலவிதநிறமானபேதி, வயிறு பொருமல், வலி, விழித்தபார்வை, ஏப்பம், நாசியிற்புண்போல்நோவுடன் நீர்வடிதல், மார்புவலி, பற்கிட்டலுடன் நெறநெறென்று கடித்தல், இசிவு, கைகால்களில் இசிவு, எழுந்திருக்கக் கூடாமை, அன்னபானாதிகளில் வெறுப்பு,அசதி,கொட்டாவி,இளைப்புஎன்னுமிக்குணங்களையுண்டாக்கும்.

சிங்கிமாந்தரோகம்.

நாபியில் தீயெழும்புதல்போலும்ஈரலில் புண்போலும்இருக்குதல், திணறலானமேல்மூச்சு, சுரம், திமிர் என்னும் இக்குணங்களை உண்டாக் கும். இதனை மாந்தசுரமென்பர். அன்றியும் உள்ளில் வெப்பம் இருந்தால், கணமாந்தம்; கண்சொருகினால்,சொருகுமாந்தம்;உச்சியில்குழிவிழுந்தால், குழிமாந்தம் ; கை காலை இழுத்தால், இழுப்புமாந்தம் ; வயிறுஉப்பினால், உப்புமாந்தம் ; இரைத்தால், இரைப்புமாந்தம் ; பேதியில்லாவிட்டால், கட்டுமாந்தம் ; விலாவைத்தூக்கினால், அள்ளுமாந்தம் ; விக்கலிருந்தால், விக்கல்மாந்தம் ; வாதபித்தசிலேஷ்மங்களின் சேஷ்டைகள் அதிகரித்தால், அவைகளின் பேர்கொண்டமாந்தம் ; சந்நிபாதக்குறிகள் இருந்தால், சந்நி மாந்தம் எனவும் பலவாறாகச் சொல்லுகிறார்கள்.

இவைகளை உத்தாமணிச் சமூலக்கருக்கு, மிளகுக்கவச நாரையிலைப் பஸ்மக்கஷாயம்,காடிச்சாதப்பஸ்மக்குடிநீர், மூலவிஷம்சேர்ந்தமாத்திரை, மாந்தத்தயிலம் முதலிய உபாயச் சிகிச்சைகளைக்கொண்டு நிவர்த்தி செய்யவேண்டும்.

ஆக மாந்தரோகம் ௮-ம் சிங்கிமாந்தம் ௧-ம் முற்றியது.

௰-வது அதிதூலரோகபடலம்.

இனிச் செங்கிரந்திரோகம் முதல் கக்கிருமல்ரோகம்
ஈருகிய ஆறுவகைரோகங்களைச் சொல்லப்படும்.

க-வது செங்கிரந்திரோகம்.

முழங்கால் முழங்கைவரைக்குமாவது தேகம் முழுதுமாவது சிவந்த நிறமானவீக்கம், அவ்வீக்கம் ஓடியோடிக்கட்டுதல், வாய்தடித்தல், மலமூத்திரபந்தம், பூனைக்குரலோசையையொத்து விம்மிவிம்மி அழுதல், பிரேதம்போல்கிடக்குதல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

உ-வது கருங்கிரந்திரோகம்.

தேகம் முழுதுமாவது முழங்கால் முழங்கை வரைக்குமாவது நீலம்போல்கறுக்குதல், வெளிச்சுரம், முலையுண்ணாமை அல்லதுவலதுமுலையுண்ணாமை, நாவுவறளல், உடலிலாவது தோளிலாவது சுடுகைமலரவிழித்துவிழித்துப்பார்க்குதல், மேல்மூச்சு, மாறுகுணம், அலறல், இருமல், குரல்கம்மல், வயிற்றில்வேதனை என்னும் இக்குணங்களை உண்டாக்கும். இக்கிரந்தியும் செங்கிரந்தியும், பச்சைச் சிசுவுகளுக்கே முக்கியமாக உண்டாகும். இதுகள் கண்டவுடனேயே மூலயோககிரந்தி எண்ணெய் முதலிய அவுஷதங்களைக்கொண்டு தகுந்த சிகிச்சைகளைச் செய்யில் சாத்தியமாம். செய்யாவிடில் ஐந்துநாளில் அசாத்தியமாம்.

ங-வது பால்கரப்பான்ரோகம்.

சர்வாங்கத்திலும் பரபரப்பான ஊரல், பலநிறத்துடன் சாரைப்பாம்பின் தோலையொத்தசொறி, அதில்சிவந்த சலங்கசிதல், கண்டத்தில் விஷக்கடிரோகம்போல் வெடித்துச்சலம்வடிதல், விகாரரூபம், தாதுநஷ்டம்என்னும் இக்குணங்களை உண்டாக்கும். அன்றியும், கறுத்தால், கருங்கரப்பான்சிவந்தால், செங்கரப்பான்வரிவரியாகஇருக்கில்வரிக்கரப்பான் சொறிஎழும்பினுல்சொறிகரப்பான், தினவுண்டானுல்ஆனந்தக்கரப்பான், தலையில்காணில் மண்டைக்கரப்பான் எனவும் பலவாருகச்சொல்வர் இது இடுப்பில்படர்ந்தால், கடுவனென்கிறரோகமாம். இதற்கு உள்ளுக்குக் கரப்பான் எண்ணெயும் மேலுக்குப்பூச்சுமருந்தும் பிரயோகிப்பதுடன் பாலூட்டுவர்க்கு மிச்சிகிச்சைகளைச் செய்யவேண்டும்.

ச-வது மலவாதரோகம்.

மலபந்தம், வயிறுமுற்றிலும்நோவு, கையும் காலும் நாவும் தடித்தல், புருவத்தில் கரப்பான்படரல், பாலுண்ணாமை என்னும் இக்குணங்களை உண்டாக்கும். இது மலத்தில் வாயுவுசேர்ந்தால் பிறக்கும்.

கெற்கு. விரேசனமருந்தும், தீபாக்கினி அவுஷதமும் ஆகும்.

௫-வது தசனோற்பவரோகம்.

இது சிசுக்களுக்குப் பல்முளைக்கும்போது பிறக்கும். இதனால், மிகுந்தபேதியும், சரீரஇளைப்பும், அற்பசுரமும், மயக்கமும், தாகமும், உண்டாகும். இது சாத்தியமாம், இதற்குத் தடங்கற்பட்டிருக்கிற பல்லின் சிரசுகள் சீக்கிரத்தில் வெளிப்படும்படிக்கு நெல்லின்முளையைக் கொண்டாவது, ஈறினதுதலையில் ரோமம் அழுந்தும் கீற்றுப்போல் கொஞ்சம் கிறிவிட்டாலும் விடலாம். தசனம் என்பது பல்.

௬-வது கக்குவான் என்கிற கக்கிருமல் ரோக நிதானம்.

இது பாலின்தோஷத்தினாலும் சலதோஷத்தினாலும் வாயுவு அதிகரித்து மார்பில் இருக்கின்ற சிலேஷ்மத்தை ஒவ்வொருவேளை இளக்குந் தருணத்தில்பிறக்கும்; அப்போது மிகுசத்திப்புடன் பிரபலமானதுரித இருமல், அதில்ரத்தம்வீழல், திணறலானமூச்சு, விழிபிதுங்குவதுபோலிருத்தல், ஆயாசம்,வியர்வை,குடித்தபாலும்புசித்த அன்னமும்கக்குதல், மலமும் மூத்திரமும்நழுகுதல்என்னும் இக்குணங்கள்உண்டாகும். இது, ௪௰-நாள்வரைக்கும்பேய்பிடித்துஆட்டுவதுபோல்சிசுக்களை ஆட்டுவிக்கும்.

இது, * வியாக்கிரியாதிரசாயனம்,சிங்கமுகிபாணிதம்முதலியஅவுஷதங்களால்விலகும்.இவற்றுள், வியாக்கிரியாதிரசாயனத்தின் முறையைமாத்திரம் இங்குகூறப்படும். கண்டங்கத்திரிரசம் பலம்-௧௰, கருந்துளசிரசம் பலம்-௨௰, ஆடாதோடைரசம் பலம்-௩௰, இம்மூன்றிற்கும் சமபாகம் தேன்கூட்டிஒருசிறிய புதுசட்டியில்விட்டு, இதில்சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், லவுங்கம், லவுங்கப்பட்டை, ஏலம், சிற்றரத்தை, பேரரத்தை, அதிமதுரம், தாளிசம், ஜாதிக்காய், ஜாபத்திரி என்னும் ௰௫-வகைச்சரக்குகளையும் தனித்தனியே சுத்தித்து ரவியிலுலர்த்தி,வஸ்திரகாயப்பொடிசெய்து,வகை ௧-க்கு ௨-விராகனிடை நிறுத்துச்சேர்த்து, அப்பாத்திரத்தை அடுப்பின்மேல்வைத்து மிருதுவாகத்துழாவியெரித்து, விரலழுந்தும் பக்குவமான பாகுபதத்தில் இறக்கிப் பதனம்பண்ணிக்கொண்டு, இதைக் காலை மாலை மத்தியானம் என்னும் மூன்றுவேளையும், இவ்வாறே இரவில் மூன்றுவேளையும், ஒவ்வொரு விரலில் தோய்த்துக்கொடுத்துக்கொண்டுவரில்,கேவல்முதலிய சகலவுபத்திரவங்களும் நாளுக்குநாள் குறையப்படுவதுமன்றி, ௪௰-நாளுஞ் சென்றபின்பு பரிஷ்காரப்படும். இச்சாபத்தியம்.

இனி நாய்முள் தோஷம்முதல் தேனைத்தோஷம் ஈறாகிய
ஒன்பதுவிதத் தோஷங்களைச்சொல்லப்படும்.

---

* வியாக்கிரி என்பது கண்டங்கத்திரி, சிங்கமுகி என்பது ஆடாதோடை, பாணிதம் என்பது பாகு.

க-வது நாய்முள்தோஷம்.

இது, தாயின்பசியினாலும், துயரத்தினாலும், சிசுவின் சநநதோஷத்தினாலும் பிறக்கும். இதனால்,வாயிலும்தொண்டையிலும் முள்ளைப்போல் துர்மாமிசம் எழும்புதல், முலையுண்ணாமை, சுரம், மேல்மூச்சு, கண்ணில் சலம்வடிதல், கால்வலி,அள்ளெடுக்குதல், கபத்தால் அழக்கூடாமை, தலை நடுக்கல், கனவு, பொறிகலங்குதல் என்னுமிக்குணங்கள் உண்டாகும்.

உ-வது எச்சில்தோஷம்.

தலையெடுக்கக்கூடாதமயக்கம், சரீரவாட்டம், அதில்பலநிறத்துடன் நாறுதல், முலையுண்ணாமை, அம்பபேதி, இமையொட்டிக்கொள்ளலால் கண்களைநிமிண்டிக்கொண்டு மண்ணிற்புரண்டு அழுதல், பூதசுரம், ஒருவேளைதாயைக்கண்டு சீறியழுதல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௩-வது குளிசதோஷலக்ஷணம்.

கருப்பம்வேண்டினஸ்திரிகள் குளிசங்கட்டிக்கொள்ளும்பொழுது, அவ்விடத்தில்நேரிட்ட குழந்தைகளுக்கு, உச்சியிற்பள்ளம்,கண்ணில்குழி விழுதலுடன்சலம்வடிதல்,தேகமிளைத்தல், அதிகசுரம், நோவு,குய்யத்தில் விரணம், பேதி, அடிக்கடிதாகம், நெஞ்சுலரல், வெருட்சியாக அழுதல், கால்களில்வீக்கம், வாந்தி என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

௪-வது தூரஸ்திரிபரிசதோஷம்.

தேகம் இளைத்துப் பலநிறமாகத்தோற்றல், துர்க்கந்தம், பால்குடித்தாலும் அடிக்கடிகக்குதல், தாய்மீதில் இச்சையில்லாமை, கொஞ்சம் கொஞ்சம்பேதி, சுரம், உச்சந்தலையில் சீதளம், கண்மூடல், பீளைசாரல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும். இதுவே முட்டுத்தோஷமாம்: ஆகையால், தூரஸ்திரிகள் பிறர்குழந்தைகளைத் தொடலாகாது.

௫-வது சையோகபுருஷபரிசதோஷம்.

கண்ணிலும் உச்சியிலும் குழிவிழுதல், தேகத்தில் பச்சைநிறம், அல்லது வயிரநிறம்தோற்றல், சீறிச்சீறியழுதல், அவ்அழுகையின்சத்தம் பக்ஷிகளின் குரல் ஓசைபோல் இருக்குதல், குடித்தபாலை எடுக்குதல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும். இதனை விஷதோஷமென்பர்.

௬-வது சையோகஸ்திரிபரிசதோஷம்.

நெஞ்சுவறளல், கண்குழிவிழுதல், வெளிறல், பெருமூச்சு, பால் குடியாமை, இரவிலும் பகலிலும் அநித்திரை, வியர்வை,மயக்கம் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்: ஆதலால், சையோகஞ்செய்தவர்கள் அந்த அசுசியுடன் எந்தக்குழந்தைகளையும் தொடலாகாதென்றறிக.

எ-வது அளிதோஷம்

குடித்தபால் தங்காமை, தலையில்ரோமக்காலெல்லாம் நோவுதல், நெஞ்சில்புகையெழும்பி அடைக்குதல்போலிருத்தல், தேகத்தில் ஒருவித நாற்றம், கை கால்களில்நோவு என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

அ-வது குளித்தவள் எடுத்ததோஷம்.

சரீரவாட்டம், பால்தங்காமை, உச்சியில் குழிவிழுதல், வாந்தி, கண்ணில்நீர்க்கம்மலுடன் குழிவிழுதல், வாயுலரல் என்னுமிக்குணங்களை உண்டாக்கும். தூரஸ்திரி ஸ்நானஞ்செய்தவுடன், ஏதேனும் ஒன்றை அருந்தாமல் சிசுக்களை எடுப்பதால், இந்தத்தோஷம்பிறக்கும். மேற் சொல்லிவந்ததோஷபேதம் எட்டும், மாந்திரிகசிகிச்சைகளால், விலகும்.

கூ-வது தேரைத்தோஷம்.

காலுங்கையும் சூம்பலுடன்கட்டிப்போட்டதுபோல் கிடக்குதல், சரீரவாட்டம், வெளிறல், மாறுநிறம், குரல்நெரிதல், பால்குடியாமை என்னும் இக்குணங்களை உண்டாக்கும். இது தேரைகள் குழந்தையின்மேல் விழுந்துபீச்சுவதினாலுண்டாகும். இதற்குக்கூஷ்மாண்டகிருதமும் ஆகும்.

மதாந்தரமுற்றியது.

பாலகிரக உற்பத்திநிதானம்.

முற்காலத்தில், கயிலாசபதியால்படைக்கப்பட்ட கந்த, விசாக, மேஷ, சுவான, பிதுர் என்னும் இவ்ஐந்து புருஷகிரகங்களும்: சகுனி, பூதனை, சீதபூதனை, அதிர்ஷ்டிபூதனை, முகமண்டலிகா, ரேவதி, சுஷ்கரேவதி என்னும் இவ் ஏழு பெண்கிரகங்களும், குழந்தையாகிய சுப்பிரமணியருக்கு ஏவல்செய்துகொண்டிருந்து, பின்புஆக்கினைப்படியே அன்னதிபலி, ரத்த, கந்த, அட்சதை இவைகளை விரும்பிப் பூலோகத்திற் பிரவேசித்து, அதிதி பிக்ஷை, பிதுர்தேவதாவிரதம், தேவபூசனை, ஓமாதிகருமங்கள்முதலிய வைகளைத்தவிர்ந்து, அனுசாரமாக ஓட்டைக்கலத்தில் புசிக்கப்பட்டவர்களுடைய அசுசிமாதரின்பாலைக்குடிக்கின்ற சிசுக்கள், அசுசியான அமங்கல மாதரின் பாலைக்குடிக்கின்றசிசுக்கள் ஆகிய இச்சிசுக்களின் ஆரோக்கியம், சுகம், வயசு இவைகளில் பாதிபாதியை அபகரிக்கும்பொருட்டு சிசுக்கள் அழுங்காலத்தும், மலசலத்தால் அசங்கியமாகக் கிடக்குங்காலத்தும், நித்திரைகாலத்தும், அநித்திரைகாலத்தும், பருவகாலத்தும், வருஷசந்தி மாதசந்திகாலத்தும், கரடி, ஆந்தை, பூனை, பக்ஷிமுதலியவைகளைப்போலும், முன்பு சேனாதிபத்தியத்தைப்பெற்ற கந்தகிரகம் ஆதியான-யஉ-கிரகங்களும் அப்பாலர்களைப்பிடித்துக்கொண்டு, பலவிதரோகங்களினாலும் வருத்தும்; ஆகையால், தாயானவள் காந்தருவமாதரைப்போல்பரிசுத்தமாக இருக்கவேண்டும். அவைகளின் செய்கைகளை இதன் அடியில்காண்க.

கிரகதோஷ பூர்வரூபம்.

சிசுக்களுக்குக் கிரகதோஷஆரம்பத்தில், ஓயாதஅழுகை,ஒருவேளை ஈனசுரமான அழுகை, சுரம், விகாரரூபம், சரீரங்குலுங்கல், கொட்டாவி, புருவம்நெறித்தல்,வாயில்நுரைவிழுதல், மேல்பார்வை, உதட்டையும் பல்லையும்கடித்தல், அநித்திரை, சீறிச்சீறி அழுதல்,விகாரக்கூச்சல், நெஞ்சிற் குறுகுறுவென்னும் ஒருசத்தம், முலைப்பாலில் அசங்கியம், உடம்பைக் கீறிக்கொள்ளுதல், முலைகொடுக்கிறவளை நகத்தால்புரண்டல் என்னும் இக்குணங்கள் உண்டாகும். இதுவே பூர்வரூபமாம்.

க-வது கந்த கிரகதோஷம்.

இது, ஒருகண்ணில் நீர்க்கம்மல், அடிக்கடி தலையாட்டல், அடிபட்டதுபோல் ஒருபக்கமாகவேகிடக்குதல், கழுத்தில்வியர்வை, தலையைத் தூக்கித் தூக்கிப்பார்க்குதல், பற்கடித்தல், பாலுண்ணாமை, பயந்துபயந்து ஈனசுரமாக அழுதல், ஒருபக்கம்கோட்டுவாய்ச்சலம்வடிதல்,மேல்பார்வை, ரத்தக்கவிச்சாகவாய்நீரூறல், உளறல், இரண்டுகையும் முஷ்டிபந்தமாகப்பிடித்தல், மலபந்தம், ஒருபக்கத்துப்புருவமும் கண்ணும் தாழ்வாய்க்கட்டையும் துடித்தல், இரண்டுகண்களுஞ்சிவத்தல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும். இதுமெலியச்செய்யும், அல்லது மரிக்கச்செய்யும்.

உ-வது விசாக கிரகதோஷம்.

இது, தேகமறதி,தலைமயிரைக்கையால்பிக்குதல், தலைதொங்கவிடல், அக்காலக்கொட்டாவியால் மலமும் மூத்திரமும் நழுகல், நுரைத்த வாந்தி, ஊர்த்துவதிஷ்டி, காலும் கையும் ஆடுதல், பால்குடிப்பதுபோல் முலையைச்சப்புதல், சுரம், நித்திரைப்பங்கம்,சீழ்ரத்தம்போல் வாயில்துர்க்கந்தம் வீசுதல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௩-வது மேஷ கிரகதோஷம்.

இது, மேலில் ஆட்டுமொப்பு அடித்தல்,வயிறுப்பல்,கையும்காலும் அசைவறக்கிடக்குதல், நுரைத்தவாந்தி,தாகம்,மூர்ச்சை, முஷ்டிபந்தனம், பேதி, ஈனத்தொனி, மாறுரூபம், நெஞ்சில் ஒருசத்தம், வாந்தி, இருமல், விக்கல்,நித்திரைப்பங்கம், உதட்டைக்கடித்தல்,திமிர்முறுக்குதல்,நடுமேட்டைப்பார்த்துநகைத்தல்,இடுப்புவளைதல்,சுரம், ஒருகண்வீக்கம் என்னும் இக்குணங்களை உண்டாக்கும். மேஷம் என்பது ஆடு.

ச-வது சுவான கிரகதோஷம்.

இது, நாயைப்போல்குலைத்தல்,நடுக்கல், ரோமச்சிலிர்ப்பு,வியர்வை, கண்மூடல், அடிக்கடி எழுந்திருக்குதல், நாக்கைக்கடித்தல், நெஞ்சில்

குறுகுறுவென்னும் ஒருசத்தம், தேகத்தில் மலவாசனையுடன் எரிச்சல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும். சுவானம் என்பது நாய்.

ரு-வது பிதுர் கிரகதோஷம்.

இது, தேகத்திற்பிணநாற்றம்வீசுதல், மயிர்க்கூச்செறிதல், அடிக்கடிபயப்படல்,விடாதஅழுகை,சுரம், இருமல்,பேதி, வாந்தி, கொட்டாவி, தாகம்,கையும் காலும் உதைத்துக்கொள்ளுதல்,தேகம்மெலிதல்,மரத்தல், நிறமாறல், கண்குழிவிழுதல், இரண்டுகையும் முஷ்டிபந்தமாக மூடிக்கொள்ளுதல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

சு-வது சகுனி கிரகதோஷம்.

இது, மேலில் பக்ஷிநாற்றம்வீசுதல், கீல்கள் தளரலுடன்நோதல், பேதி, நாவு கழுத்து தாடை இவ்விடங்களில்விரணங்களுடன்கொப்பிளம் எழும்புதல், அக்கொப்பிளமும் எரிச்சலும் பகலில் அதிகரிக்குதல், இரவில் அடங்குதல், முகத்திலும் ஆசனத்திலும் எரிச்சல், பயப்படல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும். சகுனம் என்பது பக்ஷி.

எ-வது பூதனு கிரகதோஷம்.

இது, வாந்தி, நடுக்கல், சோர்வு, இரவில் அநித்திரை, விக்கல், வயிறுப்பல், மலபந்தம்,தாகம்,நீர்க்கட்டு, கீல்கள்தளரல்,ரோமச்சிலிர்ப்பு, கழுத்தில் பக்ஷிநாற்றம்வீசுதல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

அ-வது சீதபூதனு கிரகதோஷம்.

இது, நடுக்கல்,அதிகமாக அழுகுதல், ஒருக்களித்தபார்வை,தாகம், குடலிரைச்சல், பேதி, ஒருபக்கத்தில் குளிர்ச்சி, ஒருபக்கத்தில் சூடுகை, சரீரத்தின்மேல் கொழுப்பு மலம் இவைகளின் நாற்றத்தைப்போல் தேகத்தில்நாற்றம்வீசுதல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

கூ-வது அதிர்ஷ்டி பூதனு கிரகதோஷம்.

இது, அற்பபார்வை, வாந்தி, சுரம், இருமல், மலத்துக்கு மலம் பேதமாகத்தோற்றல்,தேகநிறமாறல்; அத்தேகத்தில்துர்க்கந்தக்கவிச்சுவீசுதல்,அல்லது அசங்கியநாற்றம், இளைத்தல், சொற்பநித்திரை, உதடுநோவு, திணவு, விக்கல், பயம், முலைப்பாலில் அசங்கியம், ஈனத்தொனி, நடுக்கல், நகைத்துப்பேசுவதுபோலிருந்து திடீலென்றுபேச்சுநிற்குதல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும். இது குருட்டுக் கிரகமாம்.

ய-வது முகமண்டலிகா கிரகதோஷம்.

இது, முகமும் கையும் காலும் முன்பு இருந்ததைப்பார்க்கிலும் அதிக தேசசுஉண்டாகிஇளைக்காதிருத்தல், உடம்பின்மேல் கறுத்தநரம்புகள்தோற்றல், பயம், சுரம், அரோசகம், எரிச்சல், சரீரத்தில் கோமூத்திர நாற்றம்வீசுதல், என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

யக-வது ரேவதிகிரகதோஷம்.

இது, தேகத்தில் கருமையுடன் கழுகுகளின்நாற்றம்வீசுதல், கண்டத்திலும் நாசியிலும் கண்களிலும் நோவு, பலநிறமலத்திலும் மஞ்சள்நிறமே அதிகரிக்குதல், மிகுந்த அழுகை என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

யஉ-வது சுட்கரேவதி கிரகதோஷம்.

இது, தேகமுழுதும் சூம்பி இளைத்தல், ஈனத்தொனி, நிறமாறல், ரோமமெல்லாம் முறைத்தல், பேதி, சரீரத்தின்மேல் தேன்வாசம் வீசுதல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

கிரகதோஷ அசாத்தியநிதானம்.

எந்தக் கிரகதோஷத்தினாலாவது, சிசுக்களுக்கு, வட்டம் வட்டமான கொப்பிளம் எழும்புதலும்,பேதியில்பலநிறமானமலங்களும்,நாக்குநடுவில் வெடிப்பான பள்ளங்களும், தாடையில்கறுப்பும் உண்டாகில், அசாத்தியமாம். அன்றியும், நானுவித போஜனம்பண்ணப்பட்ட பிள்ளைகளாயிருந்தாலும், அதுகளுக்குக்கண்சிவந்து, அதிகதாகமும் உண்டாகித் தேகமும் இளைக்குமாகில், சுட்கரேவதிகிரகத்தால் மரணமே. ஆயினும் இதுகளுக்கு; நல்லபாம்புத்தோல், பசுமாட்டின் கொம்பு, அதன்குளம்பு, கோஷ்டம், கறிமஞ்சள், கருஞ்சிவதைவேர், பருத்திவிதை, புஜபத்திரம், தேவதாரி விதை, சிறுகடுகு, வேப்பிலை, நறுநெய் என்னும் பன்னிரண்டுவகை சரக்கையும், சமபாகமாக நிறுத்து, நெய்தவிர மற்றவைகளை நன்றாக இடித்து பின்பு ஷை நெய்யை விட்டுப்பிசறிவைத்துக்கொண்ட தூளில், கொஞ்சம் எடுத்து, அந்தி சந்தி ஆகிய இரண்டுவேளையும் புகை போடுவதுந்தவிர, விளா, நாவல், பாலை, புரசு, சிற்றாமுட்டி என்னும் ஐவகைப் பட்டைகளையும், வகை-க-இ-பலம்-ச-ஆ நிறுத்து இடித்துப் பத்துப்படி நல்லசலத்தில் போட்டு, ச-ல் ஒன்றாகக்காய்ச்சிய வெந்நீரால் ஸ்நானம் செய்வித்து, பிரயோகசாரம் என்னும் வைத்தியசாஸ்திரத்தில், அந்தந்த மாதத்திற்காகச் சொல்லிய பலி முதலிய சிகிச்சைகளை முறைமைப்படிக்குச்செய்யில், அச்சிசுக்கள் பூரணுயுளைப்பெற்றிருக்கும்.

கிரகக்கிரகணகாரணம்.

உலகத்தில், கொலை, போகம், பலி என்னும் மூவிதத்தொழிலினால் கிரகமானது மூன்றுவிதப்படும். அதன்விவரம் : கொலையை இச்சிப்பதால், கொலை இச்சைக்கிரகமென்றும் ; போகத்தைஇச்சிப்பதால், போகஇச்சைக் கிரகமென்றும் ; பலியை இச்சிப்பதால், பலி இச்சைக்கிரகமென்றும் பெயராம். இவைகள் பாலராதி விருத்தர்பரியந்தந் தொடர்வனவாம்.

க-வது கொலை இச்சைக்கிரகம்.

இது, நாசி உயரல், நாக்கைக்கடித்துக்கொள்ளல், வெறிக்கவெறிக் கப்பார்க்குதல், ஒருவேளை தலையைத் தூக்கிப்பார்க்குதல், கண்களில்சலம் வடிதல், மாறுருபம், முகவிகாரம், தேகத்தில் மெலிவுடன் துர்க்கந்தம், மலமூத்திரத்தைப் பிசைதல், மார்பில் அடித்துக்கொள்ளுதல், எதிரில் வருவாரையும் அடித்தல், கத்திகள் தடிகள் முதலியவைகளால் எறிதல் அக்கினியில் குளத்தில் கிணத்தில் விழுதற்கே ஓடுதல் முதலியதுர்ச்செய் கைகளை உண்டாக்குவதன்றியும், தாகம், வயிற்றில் எரிச்சல், ஞாபகபங்கம், சலதாரைக்கும்பி, நாற்றம்போல்வாந்தி, நவத்துவாரங்களிலும் ரத்தம்வீழல் என்னும் இக்குணங்களையும் உண்டாக்கும். இது அசாத்தியமாம்.

உ-வது போக இச்சைக்கிரகம்.

இது, தங்கள் புருஷருடனே ஸ்திரிகள் ஏகாந்தமாக இருந்தாலும் தனித்திருந்தாலும் கூட்டமாகஇருந்தாலும்அவர்களை இழுத்துப்புணர்ச்சி செய்தல், எந்த ஸ்திரிகளுடனேயும் நயமாகப்பேசுதல், சுகந்தாதிமாலை களிலும் ஆபரணங்களிலும் அதிவிருப்பம், சந்தோஷம், ஒருவேளைகன கோபம் என்னும் இக்குணங்களை உண்டாக்கும். இது கஷ்டசாத்தியம்.

௩-வது பலி இச்சைக்கிரகம்.

இது, அதயிரியம், எந்நேரமும் முகத்தைக் கையால்துடைத்தல், உதடு உலரல், கன்னத்தில் பள்ளம்விழுதல், திகிலானபார்வை, தியானமாக இருக்குதல், இருந்த இடத்தில் இராமல் திரிதல், அன்னம்புசிக்கவேண்டு மெனக்கேழ்க்குதல், கொடுக்கும் அன்னத்தை வாங்கிஎறிதல் என்னுமிக் குணங்களை உண்டாக்கும். இது சாத்தியமாம். பலி என்பது பிக்ஷை.

பாலகிரகதோஷ மதாந்தரம்.

உலகத்தில் கிரமா அலங்காரமாகப் பாலர்களைத் தொடருகின்ற பெண்கிரகங்கள் பனிரண்டையும் இதனடியிற்காண்க.

க-வது நந்தனுகிரகம்.

இது, குழந்தை பிறந்த முதல்நாளிலாவது, முதல்மாதத்திலாவது, முதல்வருஷத்திலாவது, சிசுவை அல்லது தாயைப்பிடிக்கும் : அப்போது ஆரம்பத்தில் சுரம், தேகம் இளைத்தல், வீக்கம், நானுவிதநிறமானபேதி என்னும் இக்குணங்கள் உண்டாகும். இது அசாத்தியமாம்.

உ-வது. சுநந்தனுகிரகம்.

இது, குழந்தை பிறந்த இரண்டாம்நாளிலாவது, இரண்டாம்மாதத் திலாவது, இரண்டாம் வருஷத்திலாவது, சிசுவை அல்லது, தாயைப் பிடிக்கும் ; அப்போது சுரம், பல்லைக்கடித்தல், வயிறு உப்பல்,

அன்னத்திவேஷம், கண்மூடல், எப்போதுமழுகை, என்னுமிக்குணங்கள் உண்டாகும். இது சிசுக்களின் உடம்பைக்குலுக்கும்.

ங-வது பூதனுகிரகம்.

இது, குழந்தைபிறந்த மூன்றும் நாளிலாவது, மூன்றும்மாதத்திலாவது, மூன்றும்வருஷத்திலாது, சிசுவை அல்லது தாயைப்பிடிக்கும்; அப்போது சுரம், ரோமச்சிலிர்ப்பு, உடம்புநோவு, அன்னத்திவேஷம், கண்களை மூடிக்கொள்ளுதல் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

ச-வது முகமண்டலிகாகிரகம்.

இது, குழந்தைபிறந்த நாலாம்நாளிலாவது, நாலாம்மாதத்திலாவது, நாலாம்வருஷத்திலாவது, சிசுவைஅல்லதுதாயைப்பிடிக்கும்; அப்போது, சுரம், சரீரநோவு, தலைசுழற்றலோடு தலையிறங்கக்கூடாமை, கண்களை மூடிக்கொள்ளுதல், என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

ரு-வது பிடாலிகாகிரகம்.

இது,குழந்தைபிறந்த ஐந்தாம்நாளிலாவது,ஐந்தாம்மாதத்திலாவது, ஐந்தாம்வருஷப்திலாவது,சிசுவை அல்லதுதாயைப்பிடிக்கும்; அப்போது பூனைபோல்கத்தல், சுரம், இளைத்தல், சுவாசம், இருமல், சூலை, விக்கல் என்னும் இக்குணங்கள் உண்டாகும். பிடாலிகா என்பது பூனை.

சா-வது சகுனிகிரகம்.

இது, குழந்தைபிறந்த ஆறும்நாளிலாவது, ஆறும்மாதத்திலாவது, ஆறும்வருஷத்திலாவது,சிசுவை அல்லது தாயைப்பிடிக்கும்; அப்போது சுரமும், சரீரமெலிவும், நோவும் உண்டாகும்.

எ-வது சுஷ்கரேவதிகிரகம்.

இது, குழந்தைபிறந்த ஏழாம்நாளிலாவது, ஏழாம்மாதத்திலாவது, ஏழாம்வருஷத்திலாவது,சிசுவை அல்லது தாயைப்பிடிக்கும்; அப்போது அன்னத்திவேஷமும், கொட்டாவியும், சரீரநோவும் உண்டாகும்.

அ-வது அந்நியவோடாலிகாகிரகம்.

இது, குழந்தைபிறந்த எட்டாம்நாளிலாவது, எட்டாம்மாதத்திலாவது,எட்டாம்வருஷத்திலாவது,சிசுவை அல்லது தாயைப்பிடிக்கும்; அப்போது அன்னத்திவேஷம், அடிக்கடி நாவைநீட்டுதல், இளைத்தல்,நோவு, சதா அழுகை, கண்டமூடல் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

கூ-வது மதபேதனுகிரகம்.

இது, குழந்தைபிறந்த ஒன்பதாம் நாளிலாவது, ஒன்பதாம்மாதத்திலாவது, ஒன்பதாம்வருஷத்திலாவது,சிசுவை அல்லது தாயைப்பிடிக்கும்;

அப்போது சுரம், வாந்தி, சரீரநோவு, பேதி, வயிறுப்பல், இருமல், அன்னத்திவேஷம், காதுகுத்தல் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

ய-வது ரேவதிகிரகம்.

இது, குழந்தைபிறந்தபத்தாம்நாளிலாவது, பத்தாம்மாதத்திலாவது, பத்தாம்வருஷத்திலாவது, சிசுவை அல்லது தாயைப்பிடிக்கும்; அப்போது சுரம், வாந்தி, அன்னத்திவேஷம், இருமல், இரைப்பு, வயிறுப்பலோடு சகிக்கக்கூடாத சூலை என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

யக-வது அர்ச்சகாகிரகம்.

இது, குழந்தைபிறந்த பதினொன்றும் நாளிலாவது, பதினொன்றும் மாதத்திலாவது, பதினொன்றும்வருஷத்திலாவது, சிசுவைஅல்லது தாயைப் பிடிக்கும்; அப்போது தேகம் இளைத்தல், சுரம், சர்வாங்கத்திலும் மிகு நோவு, அன்னத்திவேஷம், விழித்தவிழி விழித்தபடியிருத்தல் என்னும் இக்குணங்கள் உண்டாகும். அர்ச்சகா என்பது நாட்பட அநுசரித்தல்.

யஉ-வது அற்புதாகிரகம்.

இது, குழந்தைபிறந்த பனிரண்டாம்நாளிலாவது, பனிரண்டாம் மாதத்திலாவது, பனிரண்டாம்வருஷத்திலாவதுசிசுவை, அல்லது தாயைப் பிடிக்கும்; அப்போது அறிவின்மை, பல்லைக்கடித்தல், அழுகை, கண்ணோவு, ரோமம் முறைத்தல், ஏதாவது தரச்சொலலி அழுதல் என்னும் இக்குணங்கள் உண்டாகும். இம் மதாந்தரம், ராவணேசுவரன் கோகர்ன ஸ்தலத்தில் தவஞ்செய்து பிரமதேவர் வரத்தினுல் உண்டாக்கிய குமார தந்திரம் என்கிற வைத்தியகிரந்தத்தில் இருக்கிற கிரகதோஷபேத நிதானங்களைச்சுருக்கிப் பராசமகாரிஷி அருளியதென்றறிக.

மதாந்தரமுற்றியது.

பக்ஷிதோஷபேதம்.

அந்திசந்தி, நடுப்பகல், பாதிராத்திரி ஆகிய காலங்களில் தெருக்கடக்கத் தெருக்களில் எடுத்துக்கொண்டு போவதினுல் சிசுக்களுக்கு, நான்குவிதப் பக்ஷிதோஷம்உண்டாகும். அவையாவன: ஆண்பக்ஷிதோஷம், பெண்பக்ஷிதோஷம், மலட்டுப்பக்ஷிதோஷம், அலிப்பக்ஷிதோஷம் என்பவைகளாம்.

பக்ஷிதோஷசமுதாயகுணம்.

சிசுவுக்கு வாந்தி, பேதி, தாகம், சுரம், அவயவங்கள் இளைத்தல், பலவீனம், பால்குடியாமை, நடுக்கல், அநித்திரை, தோள் இடுப்பு நடுநெற்றி ஆகிய இடங்களில் குழிவிழுதல் என்னும் இக்குணங்கள் உண்டாகும். அன்றியும், குடித்தபால் நெஞ்சில் எதிர்த்தல், மயக்கம், சிறிச்சிறி அழுதல்,

தலைநோவு, வயிற்றில்கடுப்புடன் காந்தல், கபாதிக்கம், உச்சியிலும் மூலை மார்பிலும் சுடுகை, நாக்குவறளல், தலை எடுத்துப்பார்க்கக்கூடாமை, கண் வெளிறல், அதில்பீளைசாரல், முகத்தில் பச்சையும் மஞ்சளுங்கலந்த நிறம்போல்தோற்றல் என்னு மிக்குணங்கள் உண்டாகும் என்பாருமுளர்.

க-வது ஆண்பக்ஷிதோஷம்.

இது, தாகம், பேதி, சரீரம் உலரல், கண்கள் குழிவிழுதல், நாக்கைநாக்கைநீட்டுதல் என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.

உ-வது பெண்பக்ஷிதோஷம்.

இது, சர்வாங்கநடுக்கல், காங்கை, தாகம், பேதி, பால்குடியாமை என்னுமிக்குணங்களையுண்டாக்கும். அன்றியும், கண்சொருகுதல், சீதபேதி, கடுப்பு, ஆசனம்பிதுங்கல், சிறியழுதல், தேகங்கறுத்தல், கண்ணோவு, விக்கல், வாய்நீரூறல் என்னுமிக்குணங்களை உண்டாகும் என்பாருமுளர்.

ங-வது மலட்டுப்பக்ஷிதோஷம்.

இது, ஆயாசத்துடன் இளைப்பு, உச்சியில்குழிவிழுதல், வாந்தி, பேதி, தாகம், தேககாங்கை என்னுமிக்குணங்களை உண்டாக்கும்.

ச-வது அலிப்பக்ஷிதோஷம்.

இது, தோள், முதுகு, கண்டம், முழங்கை ஆகிய இடங்களில், குழிவிழ்தல், வாந்தி, பேதி, தாகம் என்னுமிக்குணங்களை உண்டாக்கும்.

பக்ஷிதோஷமதாந்தரம்.

சிலநூலில், பக்ஷிதோஷத்தை, வரப்புள்தோஷம், நீர்ப்புள்தோஷம், தூங்குபுள்தோஷம், அறுமைத்துப்புள்தோஷம், காணுப்புள்தோஷம் என ஐந்துவிதமாகச்சொல்லப்படுகின்றன. அவைகளை எடுத்துக்காட்டப்படும்.

க-வது வரப்புள்தோஷம்.

இது, பாலைப்போல் தேகம்வெளிறல், கண்கலங்கல், அக்கண்களில் துளித்துளியாகச்சலம்வடிதல், தொண்டையும் நாவும் வறளல், வேப்பம் பழச்சாற்றையொத்த பேதி, தலைநடுக்கல், தேகத்தில்சுடுகை, யானை வீரிடல்போல்குரலோசை, கை கால்களில்குத்தல், விக்கிவிக்கி அழுதல், அன்னத்திவேஷம், களைத்தல் என்னுமிக்குணங்களை உண்டாக்கும்.

உ-வது நீர்ப்புள்தோஷம்.

இது, நெஞ்சுவறளல், சுவாசம், கண்குளிர்ந்துவெளிறல், முலையுண்ணுமை, சரீரம்வெளுத்து இளைத்தல் என்னுமிக்குணங்களை உண்டாக்கும்.

ங-வது தூங்குபுள்தோஷம்.

இது, உறக்கம், மயக்கம், வாந்தி, பேதி, உச்சியிற்பள்ளம், மேல்மூச்சு, தேகவாட்டம், மாறுமுகம் என்னுமிக்குணங்களை உண்டாக்கும்.

௪-வது அனுமத்துப்புள்தோஷம்.

இது, நெஞ்சிலும் உண்ணாக்கிலும் தடித்தலானவீக்கம், பால் தங்காமல் கக்குதல், அதில் கசப்பானநாற்றம்வீசுதல், தேகத்தில்நோவு, கால்கை நாசி இவைகளில் எரிச்சல் என்னுமிக்குணங்களை உண்டாக்கும்.

௫-வது காணாப்புள்தோஷம்.

இது, உச்சியிலும் கண்ணிலும் குழிவிழுதல், முலையுண்ணாமை, பச்சுப்பச்சென்று பேதியாகுதல், பறவைக்குரல் ஓசையைப்போல் சிறிச்சிறி அழுகுதல், தாகம் என்னுமிக்குணங்களை உண்டாக்கும். இதுகளை, மிருத்தியஞ்சயமந்திரம் ஓதிச் சலம் இறைத்தல், வலம்புரிக்காய்க்குளிசம் கட்டல், பூதப்புகைபோடல் முதலிய சிகிச்சைகளால் வசப்படுத்தவும்.

மதாந்தரம் முற்றியது.

தூரஸ்திரி பார்வைத்தோஷலக்ஷணம்.

எந்தஸ்திரிகளாவது, மாதாந்தரமுழுக்கு முழுகியவுடன், கருப்பத்தைவிரும்பி,மற்றொருகுழந்தையின் முகத்தில்விழித்து, அன்றிரவில் புருஷனைச்சேர்ந்து கருப்பமானால், முன்பு இவர்கள்பார்வைக்குள் அகப்பட்ட குழந்தை,அன்னம் சாப்பிடுவதாயிருந்தாலும்,அதற்குத் தேகம் நாளுக்கு நாள்நேர்ந்து இளைத்தல், வயிறுப்பல், தலைதொங்கவிடல், ஞாபகபங்கம், வாயுலரல்,தலைமயிர் உதிரல், அரைக்கண்பார்வை,காலும் கையும் சூம்பல், எழுந்திருக்கக்கூடாததுர்ப்பலம்,பேதி என்னுமிக்குணங்கள் உண்டாகும். அந்த ஸ்திரிகளுக்கு ஆண்குழந்தையைப்பார்ப்பதினால் ஆண்கருப்பமும், பெண்குழந்தையைப்பார்ப்பதினால்பெண்கருப்பமும்தரிக்கும்.அக்கருப்பம் விருத்தியடைய விருத்தியடைய, முன்பு தோஷந்தாங்கிய குழந்தைக்கு அளவிடக்கூடாதவேதனைகளும்விருத்தியடையும். இச்சிசுவுவெளிப்பட்டவுடன், அக்குழந்தையானது பிழைத்தாலும் பிழைக்கும், அல்லது இறந்தாலு மிறக்கும். இதனைச்சவலைரோகம் எனவும்சொல்வர். அன்றியும், பேதி, வாந்தி, தேகத்தில் ஒருவிதநாற்றம் வீசுதல், மயக்கம் என்னும் இக்குணங்கள் உண்டாகும் என்பாருமுளர்.

பாலகிரகதோஷமும் பக்ஷிதோஷமும் முற்றியது.

இனிப் பூதகணபேதம்.

மாந்திரிகசாஸ்திரத்தில் அடங்கிய பூதகணபேதம் ௰௮-வகைப்படும். அவையாவன:—தேவ, அசுர,காந்தருவ, யக்ஷ, சர்ப்ப,ராக்ஷச,கூஷ்மாண்ட, காம,கிரண,வேதாள, பிரமராக்ஷச, யதாகாரிஷ, அர்த்தபிதர, பைசாச, ருகு, விருத்த,சித்தமுனி என்பவைகளாம். இவைகளின்பரிவாரங்களையும்குணாதிசயங்களையும்கூறிடில், கோடிகோடிசங்கத்திற்கும் அதிக

மாகப்பெருகும். இவைநிற்க, இப்பூதகணங்கள் அந்தந்தத்தலைவர்களின் நாமத்தையும், அச்செய்கைகளையும்பெற்றுப் பயங்கரமான உருவத்தோடு மாமிசம், கொழுப்பு, ரத்தம் முதலிய ஆகாரங்களைவிரும்பி, பூலோகத்தில் பாதிராத்திரிவேளையிற் சஞ்சரித்து மனிதரை வருத்துமென்றறிக.

பூதப்பிரவேசபூர்வரூபம்.

பூதம்பிடிக்குந்தறியில், புத்தியும் அறிவும் கெடுதல், மிகுசையோக விருப்பம், லோபம், மோகம் என்னும் இக்குணங்கள் உண்டாகும். அதுபிடித்தபின்பு, தருமக்கெடுதி, ஆசாரவிரதாதிகளைக்கைவிடல், அசுசி, துன்மார்க்கம், பெரியோரைவணங்காமை, மனதின்படிநடக்குதல், புத்தியைக்கெடுத்துக்கொள்ளுதல் என்னுமிக்குணங்கள் உண்டாகும்.

பூதவேஷாந்தரலக்ஷணம்.

தேவாதிபூதங்கள், ரோகவடிவங்கொண்டு,உன்மாதிரோகங்களினால் வேதனையை யுண்டாக்கி, சுராதிரோகங்களால் திடச்சித்தம் இல்லாத மானிடர்களைப்பயப்படுத்தும், அல்லது கொல்லும். இதுகள், உயிருள்ள பிணமாகிய மனிதரைப்போலவே தருமவிரோதகாரியங்களைச்செய்வித்து, தேகத்திலசிழுவாசனையான துர்க்கந்தத்தையுண்டாக்கி வாசஞ்செய்யும்.

பூதாதிகாரியநிதானம்.

தேவபூதங்களும், அசுரபூதங்களும், அவைகளின்பரிசனங்களும் தொடருமாகில், மனதில் எந்நேரமும் பயங்கரமுண்டாகும். காந்தருவ பூதம்தேகத்தைத்தொட்டுஅசைக்கும். சர்ப்பபூதம்தேகத்தில்வாசமாகவே இருக்கும். யக்ஷபூதம் தேகவாசனையைப்பற்றிப் பின்தொடரும். ராக்ஷசபூதம் மனிதரைவாகனமாக ஏறிக்கொண்டேதிரியும். கூஷ்மாண்டம், காமம், கிரணம், வேதாளம், பிரமராக்ஷசம், யதாகாரிஷம்,அர்த்தபிதரம்,பைசாசம் ஆகிய அ-பூதங்களும் எடுத்துவிழுங்கவருவதுபோல் எதிரில் தோற்றப்படும். குரு,விருத்த,சித்தமுனி என்னும் ௬-பூதங்களும்சபிக்கும்

காணுவேசநிதானம்.

குணப்பிரதானத்தையுள்ளதேவாதிபூதங்கள்,மனிதரிடத்தில்படிகத்தில் பிரதிபலிக்கின்ற சூரியகிரணத்தைப்போலும், வீட்டுக்குள் நிழலிடத்தில்ரந்திரவழியாக இறங்கும்வெய்யிலைப்போலும், பிரவேசிக்குமென்றறிக.

பூதகிரகணகால நிதானம்.

ஒருவருக்குக்கேடுசெய்யநினைக்குங்காலம், ஊழ்வினையநுபவகாலம், சூரியசந்திரகிரகணகாலம், மாலைமயங்குங்காலம், அசுசிகாலம், சுக்கிலபக்ஷ கிருஷ்ணபக்ஷசந்திகளில் சையோககாலம், தூரஸ்திரி புணர்ச்சிகாலம்,

துன்மார்க்கக்ஷுத்திரபிரயோககாலம், வேள்வி, வேதம், சுபகாரியம், பிரமசரியவிரதம், மகாவிரத முதலியவைகளை அநுஷ்டித்துத்தவறியகாலம், மகாயுத்தகாலம், விடியச்சாமநேரத்துக்குமுன் துஷ்டகிரகமாலிகாயோகத்தில் ஸ்திரிகளோடுஊர்ப்பயணம்போகுங்காலம், அசுசிஇடத்தில்சஞ்சாரகாலம், வாந்தியிலும் ரத்தவாந்திகாலம், விந்துகலிதகாலம், மாதாந்தரமுழுக்குத் தப்பியகாலம், பாழுங்கோயில் பாழுஞ்சாவடிகளிற்சயனகாலம், ஒருவர் எச்சிலான மது மாமிசம்வெல்லம் எள்ளு முதலியவைகளைப்புசித்து எச்சிற்கையோடு இருக்குங்காலம், நிருவாணகாலம், நாலுசந்திகூடியவூர் அடுத்த வனத்திலும் மசானத்திலும் பாதிராத்திரியில் செல்லுங்காலம், தேவர்கள்குருக்கள் பிராமணசிரேஷ்டர்கள் இருடிகள் பெரியோர்கள் என்னும் இவர்களை இழிவாகப்பேசுங்காலம் ஆகிய இக்காலங்களில், முன் சொன்ன ௰அ-வகைப்பூதகணங்களும்பிடிக்கும். அதன்விவரம்:—தேவபூதங்களுமசுரபூதங்களும் அமாவாசைக்குப்பின்புவருகின்ற திரையோதசி சதுர்த்தசி பூரணைஎன்னும் இத்தினங்களில், எருதேற்றம், சூலங்கைப் பிடித்தல், சலவைச்சல்லாதரித்தல், சிவதவவேதாத்தியயனத்தைத்தவறுதல் ஆகிய இச்செய்கையுள்ளவர்களைப்பிடிக்கும். காந்தர்வபூதம் சதுர்த்தி அஷ்டமி துவாதசி சதுர்த்தசி என்னும் இத்தினங்களில், இதவஞ்சகம், சுகந்தாதி புட்பத்துடன் திவ்வியவஸ்திராதிகளைத்தரித்தல், விளையாடல், ஸ்திரிகள்கூட்டத்தோடுகேளிவிலாசம், எருதேற்றம் ஆகிய இச்செய்கையுள்ளவர்களைப்பிடிக்கும். யக்ஷபூதம், சதா நகைப்பும் அதிக அழகும் பலமும் உள்ளவர்களைப்பிடிக்கும். சர்ப்பபூதம், பஞ்சமியிலும் திரிசந்திகாலத்திலும் நீங்காதநித்திரை, அதிககோபம், சபலசித்தம் ஆகிய இச்செய்கையுள்ளவர்களையும், சங்கரசாதியரையும், மிகுந்த திரவியஸ்தரையும் பிடிக்கும். ராக்ஷசபூதம், கிருஷ்ணபக்ஷநவமியிலும் துவாதசியிலும், பொறுமைக்குணத்தர், குரூரவார்த்தையர், பூனைக்கண்ணர், பிரியமில்லாத வஸ்துக்களைப்புசிப்பவர் ஆகிய இவர்களைப்பிடிக்கும். கூஷ்மாண்டபூதம், சுக்கிலபக்ஷ அஷ்டமி பஞ்சமி சந்திரோதயகாலம், சந்தியாகாலம் என்னுமிக்காலங்களில்பலாட்டியமும்மிகுந்த அபிமானமு முள்ளவர்களைப் பிடிக்கும். காமபூதம், பாக்கியம் சவுரியம் மிகுந்தபலம் புஷ்பசுகந்தாதி சிங்காரம் அழுக்குவஸ்திரம்புனைதல் ஆகிய இச்செய்கையுள்ளவர்களையும், அதிக பாக்கியவந்தரையும் பிடிக்கும். கிரகணபூதம், சப்தமியிலும் ஏகாதசியிலும் அதிகபாபகருமிகளைப்பிடிக்கும். வேதாளபூதம் கிருஷ்ண பக்ஷதுவாதசியிலும் சந்தியாகாலத்திலும், தற்புகழ்தல், கோள்சொல்லல், குலத்தினுலும் உருவத்தினுலும் தானே சிரேஷ்டனெனத் தன்னை மதித்தல் ஆகிய இச்செய்கை யுள்ளவர்களைப் பிடிக்கும். பிரமராக்ஷசம், யதாகாரிஷம், அர்த்ததபிதரம் என்னும் இம் மூன்று பூதங்களும்,

அர்த்த ராத்திரியிலும் தருணம் நேரிட்ட காலத்திலும், வேதம், தபசு, ஆசாரம், நல்ல திடச்சித்தம், குருபூசை, பெரியோர்கள் பூசை, கிரகாதி தேவதாபூசை ஆகிய இவைகளில் நின்றும் தவறிய அசுத்த முள்ள பிராமணர்களையும், மற்றைச் சாதியாரையும், நெறிவழுவாத வேதியர் வீடு, தேவாலயம், தண்ணீர்த்துறை முதலிய இடங்களில் சையோகஞ் செய்பவரையும் பிடிக்கும். பைசாசம், குரு, விருத்த, சித்த, முனி என்னும்இவ் ஐந்துபூதங்களும்,அஷ்டமி,துதியை,திரிதியை, என்னும் இத்தினங்களில், பொன்னை அபகரிப்பவர், துர்ப்பலர்,கோளர் முதலியவர்களைப்பிடிக்கும். மற்றைச் சமானிய கிரக பூதங்கள், ராக்காலங்களில் சமயம் நேரிடும் போதெல்லாம் பிடிக்கும். துர்ச்செய்கை கூடாது.

சர்வபூத கிரகணபூர்வரூபம்.

சகல பூதங்களும், தேகம் இளைத்து நிறமாறுதல், தேசசுகுறைதல், துர்ப்பலம், ஆயாசம், கொலை செய்வதற்கே இச்சை, எவ்வஸ்துக்களிலும் அசங்கியம், மனக்கெடுதி, நித்திரா காலத்திலும் அநித்திரா காலததிலும் பயந்தவர்போல் திடுக்கிட் டெழுந்து ஓடி யாரையும் அடித்துத் திட்டி அளவிடக் கூடாத ஆர்ப்பாடம் பண்ணுதல் என்னும் இக்குணங்களைத் தங்களுக்குப் பழையரூபமாகப் பெற்றிருக்கின்றன.

க-வது தேவபூதம்.

இது, குளிர்ச்சியான சமபார்வை, பரிசுத்தம், கோபம் இல்லாமை, நாசியால் பேசுவர்போல் பேசுகின்ற வார்த்தையிலுங் கொஞ்ச வார்த்தை, சயனவைபோகம், அற்பமலமூத்திரம்சாருதல், லோபகுணம்,வெகுகாலச் சமாச்சாரத்தை யெல்லாஞ்சொல்லுதல், பிராமணர்களிடத்தும் தேவர்களிடத்தும் பக்தி, வெள்ளை வஸ்திரம், சுகந்தபுஷ்பம், நதி, மணற்குன்று, மலை, மெத்தைவீடு, பால், தயிர் ஆகியஇவைகளில்இச்சை, மிகுந்ததேசசு, அலர்ந்த செந்தாமரைப்பூவையொத்த முகவிலாசம், ஒருவேளை கண்களை மூடிக்கொள்ளுதல், எப்பொழும் சுகந்தாதிகளைத்தரித்தல், யாவருக்கும் வரங்கொடுக்கின்றதன்மை என்னுமிக்குணங்களை உண்டாக்கும்.

உ-வது அசுரபூதம்.

இது, பிராமணர்களிடத்தில்அபகாரநோக்கம்,பிரமாதிதேவர்களும் நான்தானென்றேகூறுதல், விகாரவார்த்தை, அதிகபராக்கிரமம், யாவருக்கும் பயப்படாமை, சரீரத்தில்மிகுவியர்வை, கோபம், சஞ்சலபுத்தி, அபிமானம்விடுதல், மத்தியபானத்திலும் மாமிசத்திலும் விருப்பம், தேவர்கள் பிராமணர்ஆசிரியர்ஆகிய இவர்களிடத்தில் மகாவிரோதம், பெரியோரைக்

கண்டுநகைத்தல், வாயினாலும் பல்லினாலும் நகத்தினாலும் யாவரையும் சேஷ்டைசெய்தல் என்னுமிக்குணங்களை உண்டாக்கும்.

௩-வது காந்தர்வபூதம்.

இது, மிகுந்த ஆசாரவொழுக்கம், நீங்காதசந்தோஷம், மேனியில் சுகந்தபரிமளம்வீசுதல், அற்பவார்த்தை, பூஞ்சோலையிலும் ஆற்றுமணற்குவையலிலும் சிவந்தபுஷ்பத்திலும் இச்சை, அடிக்கடிநகைப்பு, கேளிவிலாசம், சங்கீதம்பாடல் என்னுமிக்குணங்களை உண்டாக்கும்.

௪-வது யக்ஷபூதம்.

இது, குந்திக்கொண்டுறங்கல், நகைத்தல், ஆடல்,பாடல், அழுதல், யார்வந்தாலும்அவர்களுடைய துணியைப்பிடித்துப்பிடித்து இழுக்குதல், துர்ப்பாஷையாகத் திட்டுதல், பரிகாசஞ்செய்தல், கைகளையாட்டுதல், ஸ்நானம் போஜனம் பானம் ரத்தம் சந்தனம் தூபம் வஸ்திரம் மதுமாமிசம் வேட்டையாடுதல் ஆகிய இவைகளில் இச்சை, கண்சிவந்து கலங்குதல், அதில்சலம்வடிதல், மதத்தநடை, சந்தோஷம், அதிவார்த்தை, ஸ்திரிகளிடத்தில்கோலாகலம் விகாரமுகம்,அற்பகோபம்,அல்லது அதிககோபம், மிகுபலம், அறிவின்மையாக எந்தவஸ்துக்களையும் ஈதல், தானே பேசிக்கொள்ளுதல் என்னுமிக்குணங்களை உண்டாக்கும்.

௫-வது ராக்ஷசபூதம்.

இது, புருவநெறித்தல், சிவந்தகண், குரூரபார்வை, பேய்க்கூச்சல், பிரமித்து ஓடுதல், அநித்திரை, அசனவெறுப்பு, அல்லது புசிக்கையில் நகைத்தல், சலமுள்ள ஏரி மடுக்களில் திரிதல், இளைத்தல், துர்ப்பலம், ஆடல்,கண்டவர்களை அடித்தல்,அசங்கிதஉருவம்,நாணின்மை,அதயிரியம், அழுதல், மது மாமிசம் ரத்தம் சையோகம் புஷ்பகந்தவருக்கம் பலி இவைகளில் விருப்பம், குரூரன்போல் உதட்டைஉதட்டைக் கடித்தல், சற்றுநேரம்பேசாதிருத்தல் என்னுமிக்குணங்களை உண்டாக்கும்.

௬-வது கூஷ்மாண்டபூதம்.

இது, முகத்தைப் பார்ப்பதற்கேபயங்கரம்தோற்றல், அதிககோபம், தாமதவார்த்தை, அல்லது மிகுவார்த்தை,நடந்தால் இரண்டுபீசங்களும் கனத்துத்தளர்ந்துதொங்குதல் என்னுமிக்குணங்களை உண்டாக்கும்.

௭-வது காமபூதம்.

இது, தானே அடித்துக்கொள்ளல்பலவிதத்தொனியாகப்பேசுதல், கம்மியவார்த்தை,அடிக்கடிநாவைநீட்டுதல்,செபம்பண்ணுதல்,அசைவறத்திக்குகளைப்பார்க்குதல், சுசி என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

அ-வது கிரணபூதம்.

இது, ரத்தநேத்திரம்,உக்கிரபார்வை,பயங்கரவார்த்தை,அதிகதிண்டி, துன்மார்க்கச்சாவகாசம் என்னுமிக்குணங்களை உண்டாக்கும்.

சூ-வது வேதாளபூதம்.

இது, பொய்யில்லாதவார்த்தை, தேகநடுக்கல், தாடையுலரல், சுகந்தாதி வஸ்துக்களைத் தரித்தல், பூமாலைபுனைதல், அகில் முதலிய தூபவருக்கத்தில் இச்சை, நித்திரை என்னுமிக்குணங்களை உண்டாக்கும்.

ய-வது பிரமராக்ஷசபூதம்.

இது, கெடுதிச்சேஷ்டை, அதிகதிண்டி, வேதசாஸ்திரியர் தேவர் வைத்தியர் மந்திரவாதியர் தபோதனர் ஆகிய இவர்களிடத்தில் மகா விரோதம், கத்திதடிமுதலியஆயுதங்களினால்தானே அடித்துக்கொள்ளல், எவர்களையும் அவமரியாதையாக அழைக்குதல், சமயம்பார்த்து அடிக்குதலென்னுமிக்குணங்களை உண்டாக்கும்.

யக-வது அர்த்தபிதாபூதம்.

இது, கண்ணிமைகள்சரிந்து தொங்குதல், தலைமயிர்முறைத்தல், தாடையுலரல், முகக்களைநீங்குதல், தூக்கித்தமுகம், உருட்டிஉருட்டிப் பார்த்தல், அகாலநித்திரை,மந்தாக்கினி, சுபாவவார்த்தை,சொப்பனத்தில் இறந்தவர்களைக்கண்டு பேசுதல், கறுப்பாகியவஸ்து வெல்லம் பால் மாமிசம் இவைகளில்விருப்பம் என்னுமிக்குணங்களை உண்டாக்கும்.

யஉ-வது பைசாசபூதம்.

இது, மனது துன்மார்க்கத்தில்செல்லுதல், நகைத்தல், அறிவு நீங்குதல், நகத்தால்கிறிக்கொள்ளுதல், அல்லது அடித்துக்கொள்ளுதல், யாரையும் மதிப்பில்லாமல் பேசுதல், தேசசுநீங்கிச் சங்கையுள்ளவர்போல் இருக்குதல்,தெரிந்துந்தெரியாதவார்த்தை, தனதுதுக்கத்தை ஒருவரோடு சொல்லுதல்,சரீரத்தில்விகுவுடன்துர்க்கந்தம்வீசுதல், தலையிறக்கம்,குரல் கம்மல், நிதமும்பயங்கரத்தோடுகூவுதல், அசுசியானநடைநடக்குதல், எச்சில் கள்ளு மாமிசம், கீதம், நாட்டியம், பாழ்வீடு ஆகிய இவைகளில் இச்சை, கல்லு, முள்ளு, பாம்பு இவைகள் இருக்கும்வழிகளில் ஓடுதல், உட்காந்துதலைசுற்றியாடுதல் என்னுமிக்குணங்களை உண்டாக்கும்.

யங-வது சித்தர்முதலிய நான்குபூதங்களின்லக்ஷணம்.

சித்தர், முனிவர், குரவர்,விருத்தர் ஆகியஇவர்களால் சபிக்கப்பட்டவர்களுக்கு,அந்நால்வர்களின்தியானங்களும்உருவங்களும்வரும். இதனால், அவர்கள்புசிப்பதுபோல்புசித்தல், ஞானம்,விசேஷ அறிவு,மிகுவார்த்தை, சேஷ்டை,பலம்,வீரம், வீரியவிருத்தி முதலியகுணங்கள் அதிகரிப்பதும்

அன்றி, அவர்களின்செய்கைகள்எல்லாம்உண்டாகும். இந்தவாக்கியத்தில் நான்கு பூதங்களின் குணங்களடங்கி இருக்கின்றன என்றறிக. இவைநிற்க, உ௬௰ - வது பக்கத்தில், தொகுத்துக்காட்டிய ௰அ - வகைப் பூதகணங்களின் குணங்களை எடுத்துக் கிரமமாகவிரித்துச்சொல்லிவந்தஇடத்தில், சர்ப்பம், யதாகாரிஷம் என்கிற இரண்டுபூதகணங்களுக்கும் குணங்களை முதனூலிற்சொல்லாமையால், இதிலும் சொல்ல இல்லை.

பூதகண மதாந்தரம்.

சிலநூலில், பூதகணத்தை, ஈசுரபூதகணம் ஆதியாக கசுமலபூதகணம் ஈறாக ௰௬-விதம் எனக்கூறப்படுகின்றன. அவைகளையும் இதனடியில் முறையே எடுத்துக்காட்டப்படும்.

க-வது ஈசுரபூதம்.

இது, விகாரமில்லாதநேத்திரம், பித்தமுகத்தேசசு, சதா சிவசரித்திரங்களையே சொல்லிக்கொண்டிருத்தல், கம்பீரமானகண்டத்தொனி என்னுமிக்குணங்களை உண்டாக்கும். இது தோத்திரத்தால்விலகும்.

உ-வது இந்திரபூதம்.

இது, கோடை இடி இடித்தல்போல் மிகுந்த வார்த்தையை உண்டாக்குவதன்றியும் நல்லபோகங்களையும் விரும்பும்படிக்குச்செய்யும்.

௩-வது குபேரபூதம்.

இது, யார்கேட்கினும் உடனேவேண்டியபொருளைக்கொடுப்பிக்கும்.

௪-வது வருணபூதம்.

இது, சுகந்தம், கள்ளு, சாராய் ஆகிய இவைகளில் விருப்பம், ஏதேனும் ஒருகொம்புகளைவில்லாகவும் அதற்குப் புல்லுகளைநாரியாகவும் எண்ணிக் கையில்பிடித்துத்திரிதல் என்னுமிக்குணங்களை உண்டாக்கும்.

௫-வது யாகசேனபூதம்

இது, பிரமக்கியானத்தோடுபிரமநிலையைக்கூறுதல், பெரியவர்களுக்கு நல்ல வெகுமானங்கொடுக்குதல், தொனிபேதமாகச் சமஸ்கிருதவார்த்தைகளைப்பேசுதல் என்னுமிக்குணங்களை உண்டாக்கும்.

௬-வது விரூபாக்ஷபூதம்.

இது, பச்சைமாமிசம் கனிவருக்கம் அதிரசம் மாப்பண்டம் பாயாசம் ஆகியஇவைகளில் இச்சை, ரோமச்சிலிர்ப்பு, தேகம்புஷ்டியாகக் கெட்டிப்பட்டிருக்குதல் என்னுமிக்குணங்களை உண்டாக்கும்.

௭-வது வித்தியுன்மாலிபூதம்.

இது, மேகம் குமுறும்போதும், மின்னல் மின்னும்போதும், இடி இடிக்கும்போதும், மிகுந்தபயங்கரத்தை உண்டாக்கும்.

௮-வது சுகபூதம்.

இது, கால் கை முதலியஅவயவங்களெல்லாம்நடுக்குதல், அடிக்கடி ஓடல், பயப்படக்காட்டுதல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௯-வது நிஸ்ததேசபூதம்.

இது, கோபம்வந்தால் தனக்குவேண்டிய வஸ்துக்களைப்புசித்தல், வழிமறித்து ஸ்திரிகளை வெருட்டல், சாம்பலிலும் குப்பையிலும் காஷ்டத்திலும்படுக்குதல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௰-வது சாகோர்த்தபூதம்.

இது, கொம்புகளைக் கல்லுகளை எடுத்துக்கொண்டு தெருவிலும் மசானத்திலும் சுற்றிச்சுற்றித் திரிதல், புல்லு, செத்தை, இலை முதலியவைகளை வஸ்திரமாகத்திரித்தல், ஒருவேளை நிருவாணமாக இருக்குதல், யாவரிடத்திலும் மதிப்பில்லாமை, பட்டமரங்களின்மேல் ஏறிக்கொள்ளல், எள்ளுகலந்த அன்னத்திலும், மத்தியபானத்திலும், மாமிசத்திலும் மிகு விருப்பம் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௰௧-வது நகுபூதம்.

இது, நகைத்தவார்த்தை, நன்மைதீமை எண்ணாது நினைத்தபடியே நடக்குதல், மத்தியபானஞ்செய்து எந்நேரமும்பிறரைச்சண்டைமூட்டல், ஆறுரசத்திலும் இச்சை, முகவாத்தியம் பண்ணுதல், மலைக்குகை மலைச்சாரல் தடாகம் சாவடி இவ்இடங்களில்சஞ்சரித்தல்; துந்துமி பேரிகை மேகம் ஆகிய இவைகளின் சத்தத்தைக்கேட்டுச் சந்தோஷப்படுதல், குப்புறப்படுக்குதல், உட்காரலில்தலைகுனிதல், பால் தயிர்மத்தியபானம் ரத்தம் இவைகளில் அபேக்ஷை, தேகங்குலுங்குதல், எந்தவஸ்துக்களை யாவதுபல்லினாற்கடித்தல்,தானேதனித்துப்பேசுதல், அதில் எதிராளிக்கு உத்தரவுகொடுப்பதுபோல் கொடுத்தல், எப்போதும் சலத்திற்கிடக்குதல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௰௨-வது மணிவரபூதம்.

இது, அதிககோபம், மேல்பார்வை, தேகத்தின் ரோமமெல்லாஞ் சிலிர்க்குதல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௰௩-வது நிகடபூதம்.

இது, ரகசியத்தில் சங்கீதம்பாடல், ஆடல்,மவுனம், நகைத்தல், ஆட்டிலும் பாட்டிலும் இச்சை என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௰௪-வது விசாகபூதம்.

இது, அடிக்கடி நகைத்தல், பூமியைக்கையால் அளைதல், கம்பிய வார்த்தை, நிரோதுவாக அழுதல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௰௫-வது பித்தபூதம்.

இது, மல சலங்களைக் கையால் பிசைதல், நகத்தால் துரும்பைக் கிள்ளிக்கொண்டேயிருக்குதல், அசனவெறுப்பு, பயம், பித்தன்போல் சேஷ்டைசெய்தல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௰௬-வது கசுமலபூதம்.

இது, போஜனத்தைக்கண்டு நகைத்தல், கீச்சுக்குரலால் கூப்பிடுதல், திடுக்கெனப் பயப்படுதல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

ஆக பூதகணம் பதினாறுடன் மதாந்தரமும் முற்றியது.

அசாத்தியபூதநிதானம்.

எந்தப்பூதம்பிடித்திருந்தாலும், அந்தமனிதர்களுக்கு நானாவிதமாக மனதுகலங்குதல், தலைமயிரைவிரித்துக்கொண்டு திரிதல், நிருவாணமாக அலைதல் என்னு மிக்குணங்களிருந்தாலும், நெடுநாள் ஆகியும் இக்கிரக சங்கை நீங்காவிட்டாலும், அவர்கள் பின்னால் சிறுவர்கள் கும்பலாகக் கூடிக்கொண்டு கூச்சலிட்டுத்தொடர்ந்தாலும், அசாத்தியமே.

மேற்சொல்லிய பூதகணங்களை ஓட்டிவிடுதற்கு எண்ணங்கொண்ட அவுஷதவினோதன் என்கின்றமகாசிகிச்சகன், வீரபத்திரரசியம், நந்தீசர் ஆக்கிராணம், பூதகலிக்கம், ருத்திரகபாலவுண்டை, அஷ்டகாளித்தூமம், பூதநாசத் திரிகாலபயிரவத்தீபம், அகத்தீசர்குழம்பு, விஷமுஷ்டித் தயிலம் முதலிய அவுஷதப்பிரயோகங்களையும்: வேப்பிலை, வசம்பு, மைசாட்சி, மான்கொம்பு, யானைக்கொம்பு, வெண்கடுகு, மஞ்சள், மயிலிறகு என்னும் எட்டுச்சரக்குகளையும் சமமாகச்சேர்த்திடித்துத் தூபம்போடுகின்றபுகைச் சிகிச்சைகளையும்: நிலக்கடம்பு, கோஷ்டம், செருப்படை, நெட்டைப்பேய் மிரட்டி, லவுங்கப்பட்டை ஆகிய இவ் ஐவகைச் சரக்குகளையும் வகை க-இ பலம் உ-விழுக்காடு, ஒருபடி நல்லசலத்தில்சேர்த்து, எட்டில் க-ஆ காய்ச்சியகுடிநீரை, அந்திசந்தி கொடுப்பிக்கின்ற வஸ்தி சிகிச்சை களையும்: இன்னும் சிகிச்சாசாகரத்தில் கூறிய பற்பல சிகிச்சைகளுடன் மாந்திரிகச் சிகிச்சைகளையும் செய்யவேண்டும்.

பத்தாவது, அதிதூலரோகபடலம் முற்றியது.

உ

சுப்பிரமணியர் துணை.

ஜீவரக்ஷாமிர்தம்.

பதினொன்றாவது

உன்மாதரோகபடலம்.

உன்மாதரோகபேதம்.

வாதம், பித்தம், சிலேஷ்பம் ஆகியஇம்மூன்றும் அதனதன்மார்க்கந் தப்பி நடக்கும்போது மனதில் ஒருவிதமதம்பிறக்கும். அதுவே உன்மாத ரோகமாம். இது, வாதோன்மாதம், பித்தோன்மாதம், சிலேஷ்மோன்மாதம், திரிதோஷோன்மாதம், வியாத்தியோன்மாதம், விஷோன்மாதம் என ஆறுவிதப்படும். உன்மாதம் என்பது மதம்.

க-வது வாதோன்மாதரோகம்.

இது, கைகளைச்சேர்த்துத்தட்டுதல், நகைத்தல், ஆடல், ஒருவனைப் பிடிக்க எழுந்திருக்குதல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

உ-வது பித்தோன்மாதரோகம்.

இது, யாவரையும் பயப்படுத்துதல், எழுந்தெழுந்து ஓடுதல், சீதள பதார்த்தத்தில் இச்சை என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

ந-வது சிலேஷ்மோன்மாதரோகம்.

இது, அநித்திரை, யாவரையும்பயமுறுத்தல், ஸ்திரிகளிடத்தில் மிகுந்தவிருப்பம், சகலபதார்த்தங்களையும் வேண்டுமெனக் கேட்குதல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

ச-வது திரிதோஷோன்மாதரோகம்.

இது, வாதம் முதலிய மூன்று உன்மாதரோகங்களுக்குள்ள குணங் கள் எவ்வளவோ அவ்வளவையும் ஒரேகாலத்தில் உண்டாக்கும்.

ரு-வது வியாத்தியோன்மாதரோகம்.

இது, மிகுந்ததிரவியத்தைப்போக்கடித்த வியசனத்தினாலும், மனை வியை இழந்ததுக்கத்தினாலும், இன்னும் பற்பலமனோவியாதிகளினாலும் பிறந்து, அதயிரியம், அடிக்கடிவியாகுலப்படல், தேகம்வெளிறல், தெய் வமேதெய்வமே எனப்பிரலாபித்தல், காரணம் இல்லாமலேகண்ணீர்விட்டு

அழுதல், தானே ஆச்சரியப்படுதல், பெண்சாதியின்குணத்தைநினைத்து விசாரப்படுதல், மனதுசிறுத்தல், ஒருவேளை தியானிகள்போலிருந்தல், நித்திரைப்பங்கம், புரளல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௯-வது விஷோன்மாதரோகம்.

இது, இடுமருந்து முதலியவைகளால் உண்டாகி, முகங்கறுக்குதல், தேசசும்பலமும் பஞ்சேந்திரியங்களும்நசிக்குதல், திகைத்துத்திகைத்துந் திரிதல், முன்புசாப்பிட்டமருந்தினதுவிஷம்தேகத்தில் ஊறவூறக்கண்கள் சிவக்குதல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும். இது அசாத்தியமாம்.

மேற்சொல்லிய உன்மாதரோகங்களை, முலைப்பாலினாலும், செங் கரும்பு ரசத்தினாலும், முந்திரிப்பழம், கோரைக்கிழங்கு, அதிமதுரம், தண்ணீர்முட்டான்கிழங்கு, சந்தனம் இவைகளின் கஷாயத்தினாலும், கூஷ்மாண்ட கிருதத்தினாலும், முசறுமுட்டைப்பாலால் செய்கின்ற நசியம் முதலிய சிகிச்சைகளினாலும் பரிகரிக்கவேண்டும்.

அபஸ்மாரரோகபேதம்.

சிந்திப்பினாலும், துக்கத்தினாலும், பயத்தினாலும் மனதுமிகவும் பதைத்துத்தபிக்குங்காலத்தில், வாதபித்தங்கள், அதிகரித்து, மனதுக்குத் தெளிவைத்தருகின்ற நரம்புகளை யுலர்த்தி, அம்மார்க்கங்களை மேகம் கம்மியதுபோல் இருள் அடையச்செய்து, புத்தியின்தெளிவைக்கெடுத்து, சத்துவகுணத்தை நீக்கி, தகாதநடத்தையை நடப்பித்து, உன்மாத ரோகத்தைப்போலவே இந்த அபஸ்மாரரோகத்தைப்பிறப்பிக்கும். இது, வாத அபஸ்மாரம், பித்தஅபஸ்மாரம், சிலேஷ்மஅபஸ்மாரம், திரிதோஷ அபஸ்மாரம் என நான்கு விதப்படும்.

அபஸ்மாரம் என்பது புத்திக்குத்தெளிவுநீங்குதல்.

அபஸ்மாரரோகபூர்வரூபம்.

அபஸ்மாரரோகம், மார்புதுடித்தல், புத்திக்குத்தெளிவின்மையால் ஒன்றும்தோன்றாதிருத்தல், பிரமை, கண்களில் இருட்கம்மல், கிடந்த இடத்திலேயேகிடக்குதல், கண்ணிமைநோதல், விகாரப்பார்வை, காது கேளாமை, ஊமைபோலிருத்தல், சர்வாங்கவியர்வை, சொள்ளுவடியுஞ் சலத்தைச் சப்புதல், நாசியிற்சலம்வடிதல், அசீரணம், அரோசகம், மூர்ச்சை, வயிற்றில்இரைச்சல், துர்ப்பலம்,சரீரநோவு, தாகம்,அநித்திரை, ஒருவேளை அற்பநித்திரை, அந்தநித்திரையில் தான் ஆடினதுபோலும், பாடினதுபோலும், சாராயம் கள்ளு எண்ணெய் இவைகளைக் குடித்தது போலும் தோற்றல், பின்பு அவைகளில் இச்சைப்படல் என்னும் இக்குணங்களைத் தனக்குபூர்வரூபமாகப் பெற்றிருக்கின்றது.

அபஸ்மாரரோகசாமானியலக்ஷணம்.

பல்லைக்கடித்தல், நுரைநுரையாகக்கக்குதல், கைகால் உதறுதல், பார்க்குமுருவமெல்லாம்கண்ணுக்குத்தோற்றாமை,நடக்கும்போதுகால்கள் பின்னிக்கொள்ளுதல், நாக்கு கண் புருவம் ஆகிய இவைகள்விகாரப்படல் என்னும் இக்குணங்கள் உண்டாகும். இக்குணங்கள் சகல அபஸ்மார ரோகத்திற்கும் பொதுவாம். இந்தரோகத்தில் வாதசஞ்சாரம்மட்டிட்டிருக்கில், அறிவுக்குக்கொஞ்சம்தெளிவுண்டாகும். அது அதிகரிக்கில், சிலநாள்பொறுத்து முன்புசொன்ன குணங்களெல்லாம் அதிகரிக்கும்.

௧-வது வாத அபஸ்மாரரோகம்.

இது, இருதொடையும்ஒடிந்துவிழுந்துபோவதுபோலிருத்தலுடன் அதிரல், அறிவுநீங்குதல், ஞாபகமறதி,அழுகை, கண்ணைவிழித்தபடியே நித்திரைசெய்தல், நுரைநுரையாகக்கக்குதல், நடுக்கல், தலையில்அடித்துக் கொள்ளுதல், பல்லுகளை நெறநெறென்றுகடித்தல், தலைதொங்கவிடல், திமிர்முறுக்குதல், குரக்குவலிபோல் விரல்களெல்லாம் வளைதல், கண் முகம் நகம் சருமம் ஆகிய இவைகள் தேசகுநீங்கிக்கறுக்குதல், ஒருவேளை சிவக்குதல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும். இந்தரோகத்தில், சரீரமெல்லாந் துடிப்பும் தேசகுமங்குதலும் விகாரமுமுண்டாகும்.

௨-வது பித்த அபஸ்மாரரோகம்.

இது, தேகமறதி, உடனேதெளிதல், கண் சருமம் முகம் ஆகிய இவைகள் மஞ்சள்நிறமாகுதல், ஒருவேளை கண்கள்வெளுத்தல், அல்லது சினங்கொண்டவன் கண்போல்சிவத்தல், வெறித்தபார்வை, பூமியைக் கையால் அறைதல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௩-வது சிலேஷ்ம அபஸ்மாரரோகம்.

இது, சகலகாரியத்திலும்மறதி,வெகுநேரம்பொறுத்துத்தெளிதல், வெறிச்சேஷ்டை அதிகரித்தல், ஒருவேளைகுறைதல், சதாசொள்ளுச் சலம்வடிதல், கண் முகம் நகம் ஆகிய இவைகள்வெளிறல், தேகம் பழுத்ததுபோல் ஒருவித வெளுப்பு என்னுமிக்குணங்களை உண்டாக்கும்.

௪-வது திரிதோஷ அபஸ்மாரரோகம்.

இது வாதம் முதலியமூன்று அபஸ்மாரரோகங்கட்குள்ள குணங் களையெல்லாம் ஓரோகாலத்தில் உண்டாக்கும். இது அசாத்தியமாம்.

முற்கூறிய அபஸ்மாரரோகங்களை, திரிகடு,திரிபலை, பூண்டு,புங்கம் பருப்பு, எட்டிப்பழத்தசை இவைகள் ஊறிய பச்சிலை ரசநசியம் : சிங்கம், யானை, குதிரை, ஒட்டை, கீரி, பூனை என்னும் இச்செந்துக்களின் ஆண்

பிச்சுக்கருவினுல்கூட்டிய ஆக்கிராணநசியம்; மகாபூதகலிக்கம்; மலகுடாரி வமனவிரேசனம்: கருங்காக்கட்டான்பூ, பிரமியவழுக்கை, நன்னாரிவேர், சதாவரி, அகத்தி இலை இவைகளின்கஷாயம்; கூவிளைலேகியம்; ஆலகால விஷத்தயிலம்; கோட்டான், வலியன் ஆகியானபக்ஷிகளின் இறகுப்புகை முதலியஅவுஷதங்களினுலும்: க்ஷத்திரக்ஷாராக்கினிச்சிகிச்சைகளினுலும் ஆயுள்வேதியர் நிவிர்த்திசெய்யவேண்டும்.

மதாந்தரம்.

வலியின்பேதம்.

வலியானது, அமரகண்டவலி, குமரகண்டவலி, பிரமகண்டவலி, காக்கைவலி, முயல்வலி என ஐந்து விதப்படும்.

க-வது அமரகண்டவலி.

இது, வரும்போது தேகத்தில்நோவுண்டாகி மூர்ச்சைகாணுதல், கையும் காலும் அடித்துத் துவைத்ததுபோல் அசைவறக்கிடக்குதல், குடைச்சல், பல்லை இளித்துமூடல், கழுத்திலும் சிரசிலும் மிகுவியர்வை, நெஞ்சிலும் தோளிலும் முதுகிலும் உதிரத்தைப்பற்றிய உபத்திரவம் என்னும்இக்குணங்களை உண்டாக்கும். இதுவே குதிரைவலியாம்.

உ-வது குமரகண்டவலி.

இது, வாதசிலேஷ்மத்தால்பிறந்து, முன்கழுத்தையும்முகத்தையும் முறுக்கித் தோள்பக்கத்தில்வைக்குதல், தாடை உதடு செவி கண் இவைகள்கோணுதல், அப்பக்கத்தில் அதிக உபத்திரவம், சந்நிபாதகுறிகள் என்னுமிக்குணங்களை உண்டாக்கும். இது, மாதர்களுக்குக் கண்டால், கருப்பவாயுவைப்போல் வயிற்றில் உதிரத்தைப் பிதுங்கவொட்டாமல் கட்டிக்கொண்டு கருப்பாசயத்தில் அடங்கி இருந்து, சிலநாள்பொறுத்துச் சந்நிபாதம் போலவே காணும். இது திரிதோஷத்தால்பிறக்கும்.

ங-வது பிரமகண்டவலி.

இது, கை கால் நீட்டினபடியே இருந்துதுடிக்குதல், ஆகாயத்தைச் சிமிட்டாமல்பார்க்குதல், தேகத்தில் அதிக உபத்திரவம் என்னுமிக் குணங்களை உண்டாக்கும். இது சுத்தசிலேஷ்மத்தினுல்பிறக்கும். இதனைக் குரங்குவலி எனச் சிலர்சொல்லுகிறார்கள்.

ச-வது காக்கைவலி.

இது, கண்களை மலர மலர விழிக்குதல், அவ்வேளையில் மல சலம் நழுகல், இரண்டு கால்களும் முறைத்துக்கொள்ளுதல், தொண்டையும் நாவும் உலரல்,சிலேஷ்மத்தினுல் வாயிலிருந்துகோழைவிழுதல் என்னு மிக்குணங்களை உண்டாக்கும். இது வாத சிலேஷ்மத்தால் பிறக்கும்.

ரு-வது மூயபல்வலி.

இது, உடலில் வாயுவுநிறைந்த காலத்தில் எழும்புதல், வயிற்றில் நோவு, வாயால் நுரைதள்ளுதல், கை கால் கண் இவைகள் முறைக்குதல் என்னுமிக்குணங்களை உண்டாக்கும். இந்தரோகம் தண்ணீரைக் கண்டாலும், தண்ணீரைச் சிரசில்தெளித்தாலும், அல்லது அக்கினியைக் கண்டாலும், அக்கினிச் சுடுகைபட்டாலும், சனப்பெருக்கத்தைக் கண்டாலும் அடிக்கடி உண்டாகும். இது வாயுவினுல் பிறக்கும்.

மூற்கூறிய வலி ரு-ல், பிரமகண்டவலி அசாத்தியம்; மற்ற சு-ம் அர்க்ககூீராதித்தயிலம், நசியம், ஆக்கிராணம், கலிக்கம், விரேசன அவுஷதம், மந்திரம் முதலியவைகளினுல் சாத்தியமாம். இவ்வலிகளில் இன்னும் சிலகுணங்களுண்டு. அவைகளை எரு-வது பக்கத்தில்மூர்ச்சா ரோகத்தில்காண்க. இவைகளையும் அப் பேதங்களென்றே கூறப்படும்.

மதாந்தரம் முற்றியது.

இனி ஊர்த்துவாங்கரோகங்களைச் சொல்லப்படும்.

நேத்திரரோகபேதம்.

வயிற்றில் பிண்டம்வளரும்போது தாயானவள் கிருமியையாவது, கிருமிசநிக்கும்வஸ்துக்களையாவதுபுசித்தல், அல்லதுகருப்பம் அடைந்த ஏழாம்மாதத்தில் அக்கினி கீடசெந்துக்களின்மாமிசம், கண்ணுக்கு ஆகாத திரவியம் ஆகிய இவைகளை அருந்துதல், பாஷாணம் முதலியபுகைபடுதல் சிரசிலும் கண்ணிலும் அடிபடல், மிகுசுமைஎடுத்தல், பாதஞ்சுடும்படியாகக் கரேவெய்யிலில் அலைதல், அப்பியங்கஸ்நானம்தவறுதல், அல்லது, அந்தஸ்நானத்தில் எண்ணெய்ச்சிக்குவிடாமை, உள்ளங்காலில் உஷ்ண ஒத்திடம் அவ்விதலேபனம் முதலியவைகளைச்செய்தல் என்னும் இச் செய்கைகளினு லதிகரித்த வாதம் பித்தம் சிலேஷ்மம் என்னும் மூன்றும், தனித்தனியேயாவது, இரண்டிரண்டாகத் தொந்தித்தாவது, மூன்றுங் கூடிய திரிதோஷமாகஆவது, மூவிதநரம்புகளின் துவாரவழியால் சிரசில் வியாபித்துக் கண்களில்சேரும்போது, அக்கண்களில் ஆறுஸ்தானங்களைப் பற்றி கூச-வித ரோகம்பிறக்கும். அவையாவன :— இமைகளில் உச-ம், வெள்விழிச்சந்திகளில் கூ-ம், வெள்விழியில் ௰ரு-ம், கருவிழியில் ரு-ம், பாவையில் உஎ-ம், கண்கள்முற்றிலும் ௰கூ-ம் ஆம்.

வர்த்தமம் என்கிற இமையைப்பற்றியரோகபேதம்.

இமைகளில் கிருச்சிரோன்மீலனம் ஆதியாக அரிசோவர்த்தமம், ஈறாக உஎ-விதரோகம் பிறக்கின்றது. அவைகளின் பெயரையும் செய்கைகளையும் இதனடியிற்காண்க. வர்த்தமம் என்பது கண்ணிமை.

௧-வது கிருச்சிரோன்மீலனவர்த்தமரோகம்.

இது, அபத்தியவஸ்துக்களைப் புசிப்பதனால் வாயுவு அதிகரித்துக் கண்களின்இமைகளில் ஒட்டியிருக்கின்ற நரம்புகளை அநுசரிக்கும்போது, பிறக்கும். இதனால், நித்திரை தெளிந்தஉடன் கண்வேதனையுடன்விழிக்கக் கூடாமை, தூசிவிழுந்ததுபோல் உறுத்தல், மூடிக்கொள்ளுதல், பிரயாசத்தின்மேல்விழித்தல், நீர்க்கம்மல், இமைகனத்தல் என்னுமிக்குணங்கள் உண்டாக்கும். ஆனால் கண்ணைநிமிண்டில் கொஞ்சம் சாந்தப்படும்.

கிருச்சிரம் என்பது பிரயாசை; உன்மீலனம் என்பது விழித்தல்.

௨-வது அருங்நிமேஷவர்த்தமரோகம்.

இது, வாயு இமைச்சந்திகளில் நிற்கும்போது பிறந்து, இமைகளை ஓயாது ஆட்டுவித்து ஒருவேளை ஆடவும் மூடவும் திறக்கவும் செய்யும்.

அருங் என்பது நோவின்மை; நிமேஷம் என்பது இமைக்கொட்டல்.

௩-வது சிக்தாவர்த்தமரோகம்.

இது, வாயுவானது இமைச்சந்திகளிலிருக்கும்நரம்புகளைத் தடிக்கப் பண்ணும்போது பிறக்கும். இதனால், அவைகளில் காங்கையுடன் அணுவிலும் அணுத்துவமான சிறுசிறுகொப்பிளங்கள் எழும்புதலும், அந்த இமைகளுக்குள் மணல்விழுந்து உறுத்துவதுபோல் இருத்தலும், நீர்முட்டலும் உண்டாகும். சிக்தா என்பது மணல்.

௪-வது வாதாஹத வர்த்தமரோகம்.

இது, வாயுவானது கண்களைமூடும்போது பிறந்து, இமைகள் சந்தில்லாமல் ஒட்டிக்கொள்ளலுடன் அசைக்கக்கூடாமையாகஇறுக்குதல் என்னுமிக்குணங்களை உண்டாக்கும். ஹதம் என்பது அடித்தல்.

௫-வது கும்பிகாவர்த்தமரோகம்.

பித்தமானது இமைகளின் உள்நரம்புகளையும் வெளிநரம்புகளையும் அநுசரிக்கும்போது பிறக்கும். இதனால், அவைகள் பிரமாணத்திற்கு உயராமல்கெட்டியாகத்தடிக்கும், அந்தத் தடிப்பானது நிலோற்பலத்தின் வித்துக்களைப்போலவே சிறுகட்டிகளாக ஏற்பட்டு உட்புறத்திலேயே அடங்கியிருக்கும். கும்பிகம் என்பது நிலோற்பலவிதை.

௬-வது போதகிவர்த்தமரோகம்.

இது சிலேஷ்மமானது இமைநரம்புகளில் சேரும்போது பிறக்கும். இதனால், அந்நரம்புகளில் சீரகத்தைப்போலும் கடுகைப்போலும் சிறுசிறுகட்டிகள் எழும்பும். அவைகள் கெட்டிப்படும். உயர்ந்தும் வெளுத்தும் இருக்கும். போதகி என்பது சீரகம்.

எ-வது அஞ்சனநாமிகாவர்த்தமரோகம்.

இது, இமைகளின்நடுமையத்திலாவது, முனைகளிலாவது, பயறுகளின் பிரமாணமாகத் தாம்பரநிறத்துடன் உதிரத்தைக் கக்குவதானகட்டிகளை எழுப்பும். அக்கட்டிகள் தினவுடன் நோவைத்தருவதுகளும் ஸ்திரம் உள்ளதுகளுமாக இருக்கும். அஞ்சனை என்பது தீபச்சிகை.

அ-வது அற்புதவர்த்தமரோகம்.

இது, கண் இமையின் ஓரங்களில் மாமிச மொத்தையைப்போல் தடித்தலை உண்டாக்கும். அது உண்டையாகத்திரண்டு நோவில்லாமல் நீர்க்கம்மலைத்தருகின்ற கட்டிகளாகும். அவைகள் சிலதோஷங்களினால் விஷமித்துப் பருத்துக் கண்ணுக்கு வெளிப்புறத்தில் பிதுங்கித்தொங்கி அசையப்படுவதாக இருக்கும். அற்புதம் என்பது அதிகரித்தல்.

கூ-வது பிசவர்த்தமரோகம்.

இது, வாதாதிகளால் பிறந்து, இமைகளின் வெளிப்புறத்தில் கட்டிகளை எழுப்பும். அவைகள் உப்பலுடன்கனத்து உட்புறத்தில் சிறிய துவாரத்தை வைத்துக்கொண்டு நீர்க்கம்மலைத்தரும். இதனால், கண்ணில் கொஞ்சம் வக்கிரம் உண்டாகிச் சலம்வடியும்; அது தாமரைநூலைப்போல் உறைந்தும் பிசுபிசுத்தும் இருக்கும். பிசம் என்பது தாமரைவளையம்.

௰-வது கிலிஷ்டவர்த்தமரோகம்.

இது, கபத்தினால் பிறந்து, இமைச்சந்துகளில் சிவந்தவீக்கத்தை உண்டாக்கும். அவ்வீக்கம் கட்டிகளாகத்தோன்றித் தினவையும், உபத்திரவத்தையும்கொடுக்கும். கிலிஷ்டம் என்பது உபத்திரவம்.

௰க-வது அலஜிவர்த்தமரோகம்.

இது, கருவிழிக்குவெளியில் சிவந்தகட்டிகளைப் பிறப்பிக்கும். அக்கட்டிகள் கெட்டிப்பட்டு உயர்ந்து அடிக்கடி உப்புவதும் ஓயாத பீளையைத்தருவதுமாக இருக்கும். அலஜி என்பது வீக்கத்தையுடையது.

௰உ-வது கர்த்தவர்த்தமரோகம்.

இது, இமைச்சந்திகளில் உண்டாகின்ற கட்டிகள் உடையும்போது, பிறக்கும். இதனால், அவ் இடம் சேற்றைப் பூசினதுபோல் இருக்கும்.

௰ங-வது பக்ஷ்மசதாரோகம்.

இது, இமைமுனைகளிலெரிச்சலைப் பிறப்பித்து அவ் இமைமயிர்களை உதிரப்பண்ணி, அவ் இடத்தில் மஞ்சள்நிறத்தை உண்டாக்கும்.

பக்ஷ்ம என்பது இமை; சாதம் என்பது உபத்திரவம்,

௰சு-வது சகணவர்த்தமரோகம்.

இது, சிலேஷ்மத்தினால் பிறந்து, இமைச்சந்திகளில் கட்டிகளைப் பிறப்பிக்கும். அக்கட்டிக ளிலந்தக்கொட்டைப் பிரமாணமுள்ளதுகளும் ஒருவேளை அதிகரித்தும் குறைந்தும் கெட்டிப்பட்டும் வெளுத்தும் வட்ட வடிவுடன் தினவைத் தருவதுகளுமாக இருக்கும். அவைகள் பழுத்து உடையுங்காலத்தில் மிகுநோவுண்டாகும்.

சகணம் என்பது உபத்திரவக்கூட்டத்தை உடைய விரணமாம்.

௰ரு-வது பித்தோத்கிலிஷ்டரோகம்.

இது, பித்தத்தினால்பிறந்து,இமைச்சந்திகளில் எரிச்சல்,நீர்க்கம்மல், குத்தல், ரத்தம்போல் சிவக்குதல், தொடக்கூடாதநோவு என்னும் இக்குணங்களை உண்டாக்கும். உது என்பது அதிகரித்தல்.

௰சூ-வது கபகிலிஷ்டரோகம்.

இது, சிலேஷ்ம தோஷமானது இமைகளில் அதிகமாகச் சேருங் காலத்தில் பிறந்து, அவ் இடங்களில் நீர்க்கம்மல், ஒருவேளைமரத்தல், எரிச்சல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௰எ-வது ரத்தகிலிஷ்டரோகம்.

இது, ஒருகாரணமும் இல்லாமலே கண்களுக்கு மிகுந்த ரத்த நிறத்தையும் புட்பம்வாடுவதுபோல் வாட்டத்தையும் உண்டாக்கும்.

௰அ-வது திரிதோஷகிலிஷ்டரோகம்.

இது, கண்களில் திரிதோஷம் அதிகரித்துச் சேருங்காலத்தில் பிறந்து, அக்கண்களைச் சிவப்பாக்கிக் கலங்கும்படிக்குச்செய்யும்.

௰கூ-வது சியாவவர்த்தமரோகம்.

இது, திரிதோஷமானது இமைகளில் இருக்கின்ற ரத்தத்துடன் கூடும்போது பிறந்து, அவைகளில் வீக்கத்தை உண்டாக்கும். இதனால், அம்மார்க்கத்தில் கறுத்தநிறமும் நோவும் நீர்க்கம்மலும் உண்டாகிக் கொண்டே இருக்கும். சியாவம் என்பது கறுப்பு.

உ௰-வது உச்சங்கவர்த்தமரோகம்.

இது, பாலர்களின் கண் இமைக்குள் சிவப்பு கறுப்பு நிறங்களான கொப்பிளத்தைப்பிறப்பிக்கும். மீளவும் அவைகளைச்சுற்றி அந்நிறங்களை உள்ள அனந்தங்கொப்பிளங்கள் உண்டாகிக்கொண்டே இருக்கும்.

உச்சங்கம் என்பது மிகவுஞ்சேர்க்கையையுடையதாம்.

உக-வது குகூனவர்த்தமரோகம்.

இது, சிசுக்களுக்குக் கபத்தினாலும் பித்தத்தினாலும்ரத்தத்தினாலும் பிறந்து, கண்களில் வீக்கம், சிவப்பு, குத்தல், நீர்க்கம்மல், பார்ப்பதற்குப்

பிரயாசை, காது மூக்கு கண் ஆகிய இவைகளைக் கையால் தேய்த்துக் கொள்ளல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும். இந்த ரோகம் குழந்தைகளுக்குப்பல்முளைக்கும்போதுதான் காணும்.

௨௨-வது பகுளவர்த்தமரோகம்.

இது, நாளுக்குநாள் புதிது புதிதாகத் துர்மாமிசத்தைவளர்ப்பித்து இமைகளைப் பருக்கப்பண்ணும். பகுளம் என்பது அதிகம்.

௨௩-வது வர்த்துமோபரோதரோகம்.

இது, இமைகள்தடித்து வீங்கும்போது பிறக்கும். இதனால், கண் வழிமூடுதல், இமைமயிர் முறைத்து ஊசிமுனைபோல் விழிக்குள்குத்தல், அப்போது கண்கள்கலங்குதல், இதில் வாயுவும்சேருவதால் நோவோடு நீர்க்கம்முதல் என்னுமிக்குணங்கள் உண்டாகும். இத்துர்க்குணங்களால் நேத்திரபார்வை கெடும். அம் மயிர்களை வாங்கிவிடில் கொஞ்சம் அநுகூலமாக இருக்கும். உபரோதம் என்பது மூடுதல்.

௨௪-வது அரிசோவர்த்தமரோகம்.

இது, இமைச்சந்திகளில் துர்மாமிசம் வளரும்போது பிறக்கும். இதனால், கண்களில் மரத்தல், மினுமினுப்பு, எரிச்சல், அதிநோவுடன் சிவப்பு என்னும் இக்குணங்கள் உண்டாகும். அத் துர்மாமிசஸ்தானத்தில் ரத்தம்வாங்கில், அது கரையும். கரைந்தாலும் மறுபடியும் வளர ஒட்டாத சிகிச்சைசெய்யவேண்டும்.

ஆக இமைரோகம் ௨௪-ம் முற்றியது.

நேத்திரசந்திரோகபேதம்.

வெள்விழிக்கும் இமைச்சந்திக்கும் நடுவில் சலசிராவம், கபசிராவம், ரத்தசிராவம், பருவணி, பூயாலஜம், பூயசிராவம், கிருமிக்கிரந்தி, உபநாகம், அலஜி என ஒன்பது விதரோகம் பிறக்கும்.

௧-வது சலசிராவரோகம்.

இது, இமைச்சந்திமார்க்கத்தில் ஒட்டி இருக்கின்றசன்னநரம்புகளில் வாயுவியாபித்துப் பின்பு கண்களுக்குச் சலத்தைத் தாங்கிக்கொண்டு இருக்கும் நரம்புகளில்சேரும்போது பிறக்கும். இதனால், வெள்விழிக்குச் சந்திஸ்தானமாகிய கருவிழியிலிருந்து கொஞ்சம்சிவந்தநிறமுள்ள சலம் ஒழுகுதல், கண் நோவுடன் சிவத்தல், வீக்கம், நீர்க்கம்மல் என்னும் இக்குணங்களுண்டாகும். சலம் என்பது நீர்; சிராவம் என்பதுஒழுகுதல்.

௨-வது கபசிராவரோகம்.

இது, முன்சொன்ன வாயுவைப்போல் நரம்புகளில் சிலேஷ்மம் வியாபிக்கும்போது பிறக்கும். இதனால், கண்களிலிருந்துவெளுப்பாயும் பிசுபிசுத்த குழம்பாயும் விஸ்தாரமாயும் சலம் ஒழுகும்.

௩-வது ரத்த சிராவரோகம்.

இது, முற்கூறிய கபத்தைப்போல் நரம்புகளில் ரத்தமானது வியாபிக்கும்போது பிறக்கும். இதனால், கண்களில்நின்றும் சுத்த உதிரம் போலவேசிவந்தும் அதிகரித்தும் குறைந்தும் உஷ்ணசலம் ஒழுகும்.

௪-வது பருவணிரோகம்.

இது, வெள்விழிச்சந்திகளில் பயறுகளின் பிரமாணங்களை ஒத்து வெளுத்திருக்கின்றகட்டிகளைப் பிறப்பிக்கும்; அவைகள்பழுத்து உடைந்தால், ரத்தம் ஒழுகுதல், கண்களில் எரிச்சல், குத்தல் என்னுமிக்குணங்கள் உண்டாகும். இது, பருவகாலந்தோறும் மாறாது உதிரத்தை ஒழுகும்படிக்குச் செய்வதால், பருவணிரோகம் எனப் பேர்பெற்றது.

௫-வது பூயாலஜரோகம்.

இது, வெள்விழிச்சந்திகளில் நோவையும் வீக்கத்தையும்தருகின்ற வெகுசூக்ஷமமான கட்டிகளை எழுப்பும். இதனால், கண்களில் மாறாத பீளைஉற்பத்தியும் மிகுந்தவேதனையும் கருவிழி உப்புதலும் உண்டாகும்.

பூயம் என்பது பீளை; அலஜம் என்பது மந்தம்.

௬-வது பூயசிராவரோகம்.

இது, திரிதோஷங்களானவை கண்களுக்கு ரத்தத்தைப்பாய்ச்சுகிற நரம்புகளில் வியாபித்துச் சந்தி ஸ்தானக் கருவிழியைப் பற்றும்போது பிறக்கும். இதனால், அவ்விழியின் சமீபத்திலிருக்கும் சருமமும்மாமிசமும் நையப்படுவதுமன்றி, ரத்தத்தோடுகூடின பீளையும் சாரும்.

௭-வது கிருமிக்கிரந்திரோகம்.

இது,வெள்விழிச்சந்தியிலும் கருவிழிச்சந்தியிலும் கிருமிநெளிகின்ற விரணத்தைப் பிறப்பிக்கும். அதில்பீளையும் நோவும் உண்டாகும்.

௮-வது உபநாகரோகம்.

இது, கபத்தினால் வெள் விழிச்சந்தியில் தாமரைக் கொடியினது அடித்தண்டைப்போல்கட்டியையெழுப்பும். அது வெளுத்து அடியில்வெட்டிப்பட்டு முனையுயர்ந்து மிருதுஉடன் நோவில்லாமல் பருத்து நீர்க்குமிழியை ஒத்து உப்புக்கரிப்பதும், நமைச்சலோடு பிசுபிசுப்பைத்தருவதும், அசைவதுமாக இருக்கும். இதனால், வீக்கமும் வேதனையும் உண்டாகும். இது அசாத்தியமாம். உபநாகம் என்பது தாமரை அடித்தண்டு.

௯-வது அலஜிரோகம்.

இது, கருவிழிக்குள் வீக்கத்தைப் பிறப்பிக்கும். இதனால், கண்களில் வீக்கம்நோவுகுத்தல்எரிச்சல்என்னுமிக்குணங்களுண்டாகும். அன்றியும்,

கருவிழியிலாவது கடைவிழியிலாவது நமைச்சலும் இமைகளில்வெடிப்பும் பிறக்கும்.

ஆக நேத்திரசந்திரோகம் கூ-ம் முற்றியது.

சுக்கிலமண்டலரோகபேதம்.

வெள்விழிகளில், சிரோத்பாதம், சிராஹரிஷம், சிராஜாலம், சுக்திகம், சுக்கிலார்மம், பிஷ்டகம், சிராபிடகம், சோணிதார்மம், பிரஸ்த்தாரியார்மம், அதிமாமிசார்மம், பலாஜகிரதிதம், சிநாயுவார்மம், அருச்சுனம் எனப் பதின்மூன்று வித ரோகமும் பிறக்கும்.

க-வது சிரோத்பாதரோகம்.

இது, வெள்விழிமேல் வளையாகாரம்போல் சிவந்தவிரணத்தைப் பிறப்பிக்கும். இதனால், அவ் இடத்தில் வெந்ததுபோல் இருப்பதுமன்றி வீங்குதல், நீர்க்கம்மல், ரத்தநிறம், எரிச்சல், வேதனை என்னுமிக்குணங்கள் உண்டாகும். உத்பாதம் என்பது காரணம் இன்றிவருதலாம்.

உ-வது சிராஹரிஷரோகம்.

இது, முற்கூறிய சிரோத்பாத ரோகத்திற்கு வைத்தியம் பண்ணுவிடில், அந்த ரத்தவளையமானது விருத்தி அடையும்போது பிறக்கும். இதனால், நீர்க்கோவையும் எரிச்சலும் உண்டாகிப் பார்வையும்கெடும். சிரா என்பது நரம்பு ; ஹரிஷம் என்பது சிலிர்த்தல்.

ங-வது சிராஜாலரோகம்.

இது, வெள்விழிகளின்மேல் இருக்கின்ற நரம்புகளைப் பருக்கவும் சிவக்கவும் கனக்கவும் உப்பவும் செய்யும். இதனால், பற்பலவேதனைகளும் உண்டாகும். சிரா என்பது நரம்பு ; ஜாலம் என்பது கூட்டம்.

ச-வது சுக்திகரோகம்.

இது, பித்தத்தைக் கொண்டு வெள்விழிகளின்மேல் புடைகளை எழுப்பும் ; அப்போது அவைகள்மஞ்சள் கறுப்பு வெளிமான் இவைகளின் நிறமாக இருப்பதன்றியும், வாயினால் அவைகளின்மேல் ஊதில் புகை கம்மியதுபோல் முழுமையும் வெளுப்பாகத் தோற்றுவதுந்தவிர, நோவும் எரிச்சலும் இல்லாமலிருக்கும். இதனால் பேதி, சரீரநோவு, தாகம், சுரம் என்னும் இக்குணங்கள் உண்டாகும். சுக்திகம் என்பது முத்துச்சிப்பி.

ரு-வது சுக்கிலார்மரோகம்.

இது, கபத்தைக்கொண்டு வெள்விழிமேல் வெண்புடையை உண்டாக்கும். அது தாமதத்தில் விருத்தி அடைந்து மாமிசநிறத்தைப் பெற்று மிருதுவுடன்பரவி நோவின்றித் தடித்திருக்கும்.

சுக்கிலம் என்பது சிலேஷ்மம் ; அர்மம் என்பது படலம்.

௬-வது பிஷ்டரோகம்.

இது, வெள்விழிமுற்றிலும் நெருக்கமாக மாவைக்கரைத்துத் தெளித்ததுபோல்பரவும்புடையை உண்டாக்கும். பிஷ்டம்என்பது மாவு.

௭-வது சிராபிடகரோகம்

இது, வெள்விழிநரம்பின்மேல், கடுகுப்பிரமாணத்தைஒத்துக்கறுத்த நிறத்தைப்பெற்றகொப்பிளங்களைப்பிறப்பிக்கும்; அப்போது அவைகளின் மேல் கன எரிச்சலும் நிமிண்டவேண்டும் என்கிறநினைப்பும் உண்டாகும்.

௮-வது சோணிதார்மரோகம்.

இது, வெள்விழிகளின்மேல் ரத்தநிறத்தை உடைய புடையைப் பிறப்பிக்கும்; அப்போது அது வழுவழுத்தும் சதைமேல் சதைவளர்ந்ததுபோலும் பாணுகாரமாகவும் இருக்கும். சோணிதம் என்பது ரத்தம்.

௯-வது பிரஸ்தாரியார்மரோகம்.

இது, வெள்ளைவிழிகளின்மேல்படலத்தைஉண்டாக்கும்; அப்போது அது கறுப்பதும் சிவப்பதும் மிருதுவாகிய ரத்தப்பிளேயைத் தருவதும் விழிகளுக்கு ஒரு உபத்திரவமும் இல்லாமல் வெகுசீக்கிரத்தில் பரவுவதுமாக இருக்கும். பிரஸ்தாரியம் என்பது பரவுதல்.

௰-வது அதிமாமிசார்மரோகம்.

இது, வெள்விழிமேல் அதிமாமிசத்தைவளர்ப்பிக்கும். அப்போது அது உலர்ந்தரத்த உண்டையைப்போல்கறுத்தும் பருத்தும் இருக்கும்.

௰௧-வது பலாஜகிரதிதரோகம்.

இது, வெள்விழிமேல் கபமொத்தையைப்போல் சதையைவளர்ப்பிக்கும்; அப்போ தது உயர்ந்தும் மினுமினுத்தும் நீர்த்துளியை ஒத்தும் இருக்கும். பலாஜம் என்பது கபம்; கிரதிதம் என்பது மொத்தை.

௰௨-வது சிநாயுவார்மரோகம்.

இது, வாத பித்த சிலேஷ்மங்கள் ரத்தத்தோடுகூடுங் காலத்தில் பிறந்து, வெள்விழிமேல் படலத்தை உண்டாக்கும்; அப்போது அது அங்குள்ள சன்னநரம்புகளையெல்லாம் அநுசரித்துப்படர்ந்து கண்களில் வீக்கத்தை உண்டாக்கும். சிநாயு என்பது சன்னநரம்பு.

௰௩-வது அருச்சுனரோகம்.

இது, வெள்விழிமேல் கடப்பம் பூ நிறமான படலத்தைப் பிறப்பிக்கும். அப்படலமானது முசலினது ரத்தம்போல் துளித்துளியாக நோவில்லாமல் வழுவழுப்பை உடையதாயிருக்கும்.

அருச்சுனம் என்பது கடப்பம் பூ.

ஆக சுக்கிலமண்டலரோகம் ௰௩-ம் முற்றியது.

சுக்கிலமண்டலரோக சாத்தியாசாத்தியநிதானம்.

சுக்கிலமண்டலரோகம் ௰௩-ல், சிரோத்பாதம், சிராஹரிஷம், சிராஜாலம், பிஷ்டகம், பலாஜகிரதிதம்,அருச்சுனம் இவ் ௯-ம் சவ்வீராஞ்சன முதலிய அவுஷதங்களால் சாத்தியம்; மற்ற ௭-ம் சலாகைமுதலிய ஆயுதசிகிச்சைகளினுல்சாத்தியம்; இவற்றுள், நூதனமாகப்பிறந்தவுகள் மூலிகை ரசங்களினுல்சாத்தியம்; அன்றியும், அர்மம் எனச்சொல்லிய ஐந்துரோகங்களும்,வெள்விழி மாமிசம், நரம்பு, சிநாயு ஆகிய இவைகளில் வியாபித்துச்சருமத்தை உப்பச்செய்து துர்மாமிசத்தைவளர்ப்பிப்பதால், அவைகளை ஆயுதங்களால் அறுத்துவயித்தியம்செய்யவும். பார்வை தெரிந்தவுடனே ஷை சிகிச்சையைநிறுத்தி உபசரிக்கவேண்டும்

கிருஷ்ணமண்டலரோகபேதம்.

கருவிழியில், க்ஷிதசுக்கிலம், சுத்தசுக்கிலம், சிராசுக்கிலம், ஆஜிகம், யாசாத்தியஜசுக்கிலம் என ஐந்துவித ரோகம்பிறக்கும்.

௧-வது க்ஷதசுக்கிலரோகம்.

இது,கருவிழியிலாவதுபார்வையிலாவதுகாயம்படுவதனுல் விரணம் பிறக்கும்போது பிறக்கும். இதனுல், குத்தலும் எரிச்சலும் உண்டாகி, அக் கருவிழியில் கொஞ்சம்குழிவிழுவதும் அன்றி, அவ் இடம் அளிந்த நாவல்பழத்தை ஒத்திருக்கும். இந்தரோகமே கஷ்டசாத்தியம். இவ் விரணம், முதல்புரையைப் பற்றினுல், இன்னும் கஷ்டசாத்தியம்; இது, இரண்டாம் புரையைப்பற்றி நோவுடன் ஊசியால்குத்துவதுபோல் குத்தலை எழுப்பி,அவ்விழியைமிகவும்கறுக்கச்செய்யின்,கஷ்டசாத்தியத்திலும் கஷ்டசாத்தியம்; அது மூன்றும்புரையைப்பற்றினுல் சுத்தஅசாத்தியமே.

௨-வது சுத்தசுக்கிலரோகம்.

இது, சிலேஷ்மத்தினுல் கருவிழிமேல் நோவில்லாமல் வலம்புரிச் சங்கைப்போல் வெளுப்பைமாத்திரம் உண்டாக்கும். இது சாத்தியமாம்.

௩-வது சிராசுக்கிலரோகம்.

இது, சன்னநரம்புகளைப் பற்றிப்பிறந்து, கருவிழியில் ரத்தப்பிளை சாருதல், குத்தல், எரிச்சல், சிவப்பு என்னும் இக்குணங்களை உண்டாக்கும். இதனுல் காரணம் இல்லாமலே சுடுகையும் சீதளமும் குழம்பிய ரத்த ஒழுக்கும் உண்டாகும். இது அசாத்தியமாம்.

௪-வது ஆஜிகரோகம்.

இது, ரத்தத்தைக்கொண்டு,கருவிழியில்,ஆட்டினதுபுழுக்கையைப் போல் உயர்ந்தும் பளபளத்தும் இருக்கின்ற விரணக்கொப்புளத்தை

உண்டாகும். அதைச்சுற்றிலும் சிறுசிறுகொப்புளங்கள் நிறையப்படும். இதனால் அக்கண்ணில் அதிகநோவும் உதிரம்போல்சிவந்த சல ஒழுக்கும் உண்டாகும். இது, ஆட்டின்புழுக்கையைப்போல்கரடானகொப்புளங்களை எழுப்பலால், ஆஜிகரோகம் எனப்பேர்பெற்றது.

௫-வது பாகாத்தியபஜசுக்கிலரோகம்.

இது, வாத பித்த கபங்களானவை ரத்தத்தோடுகூடிக் கருவிழியை வெண்மையாக்கும்போது பிறக்கும். இதனால் அவ் இடம்மேகங்கம்மியது போல் படலங் கம்முவதுந்தவிர, மொச்சை இலையின் வெண்புரைபோல் புரைவிழுந்து பழுக்குதல், நோதல், இமையுப்புதல், கண்சிவத்தல், வீங்குதல், வேதனையதிகரித்தல் என்னு மிக்குணங்களுண்டாகும். இது முதிருங்காலத்தில், திஷ்டிக்குநாசத்தை உண்டாக்கலால், பாகாத்தியபஜ சுக்கிலரோகம் எனப்பேர்பெற்றது. இது அசாத்தியமாம்.

ஆக கிருஷ்ணமண்டலரோகம் ௫-ம் முற்றியது.

கிருஷ்ணமண்டலரோக சாத்தியாசாத்தியநிதானம்.

இதரவஸ்துகளைத் தெரிய ஒட்டாமல் திரைபோட்டதுபோல் மறைத்தல், கறுத்தல், சிவத்தல், உப்புதல், குழிவிழுதல் என்னும் இவ் ஐங்குணங்களைக் கருவிழியில் உண்டாக்குகின்ற ரோகங்கள் சாத்தியம்; இவைநிற்க, ரத்தங்கம்முதல், விரணம், மூடித்திருக்குதல், நடுவில்விஷமாய் இருக்குதல், வின்னப்படுதல் என்னும் இவ் ஐங்குணங்களை வெள்விழியிலாவது கருவிழியிலாவது உண்டாக்குகின்றரோகங்கள் அசாத்தியம்.

திமிரரோகாதிபேதம்.

பார்வையில் திமிரம், காசம், லிங்கநாசம், கம்பீரம் என்னும்நான்கு வகைப்பிரிவினால் ௨௪-வித ரோகம்பிறக்கும். அவையாவன:—திமிரத்தில் ௬-ம், காசத்தில் ௬-ம், லிங்கநாசத்தில் ௬-ம், கம்பீரத்தில் ௬-ம் ஆம். இவைகளின்பெயரையும், செய்கைகளையும் இதனடியிற்காண்க.

சாமானிய திமிரரோகலக்ஷணம்.

கண்புரைகளில் வாயு அநுசரித்துத்திமிரரோகத்தையுண்டாக்கும். அதன்விபரம்:—வாயுவானது சன்னநரம்புகளின் துவாரவழியாகக் கண்களின் ௧-வது புரையில் இறங்கிச்சஞ்சரிக்குமாயின், நன்றாகத்தெரியப் பட்ட உருவங்கள் ஒருகாரணமுமில்லாமலேமறையப்படும்; அது ௨-வது புரையைச்சேருமாயின், இல்லாதவஸ்து எதிரில் இருப்பதுபோலவும், சமீபவஸ்து தூரத்தில் இருக்கிறமெல்லிய வஸ்துவைப்போலவும், தூர வஸ்து சமீப வஸ்துவைப்போலவும், சமீப வஸ்து தூரவஸ்துவைப் போலவும் தோற்றும். அந்த வாயுவே கருவிழியைச் சாருமாயின்,

சகலவஸ்துக்களும் சக்கிராகாரமாகவே தோற்றும்; அது பார்வையை ஒட்டிநின்றால், ஒருவஸ்து இரண்டு வஸ்துவாகத்தோற்றும்; அது விழிக்கு உட்புறத்தில் நின்றால், பார்வையானது சூக்ஷ்மமாகத் தோற்றும்; அது விழிக்குக் கீழ்ப்புறத்தில்நின்றால், அண்டையில் இருக்கிறவஸ்துக்கள்தோற்றாது; அது விழிக்கு மேற்புறத்தில்நின்றால், தூரத்திலிருக்கிற வஸ்துக்கள் தோற்றாது; அது விழிக்குப் பக்கங்களில் நின்றால், பக்கங்களில் இருக்கிறவஸ்துக்கள் தோற்றாது என்றறிக. இக்குணங்கள் சகல திமிரரோகங்களுக்கும் பொதுவாக இருக்கும்; இது, பார்வைக்கு இருளைக்கொடுப்பதனால், திமிரரோகம் எனப் பேர்பெற்றது.

திமிரம் என்பது இருள்.

இனி ஆறுவகைத்திமிரரோகங்களைச் சொல்லப்படும்.

௧-வது வாததிமிரரோகம்.

இது, கண்கலங்கிச் சிவக்குதலுடன் பார்வைசிதறல், புகை கம்மியதுபோல் தெளிவின்மை, காரணம் ஒன்றும் இல்லாமலே கொசு, வலைக்கண், ரோமம், கயிறு ஆகிய இவைகளைப்போல் ஒவ்வொருவேளை தோற்றுதல்என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௨-வது பித்ததிமிரரோகம்.

இது, பார்வைக்குள் மின்னல்மின்னுதல், மின்மினிப்பூச்சியும் ஊர்க்குருவியும் பறக்குதல், கானற்சலம் ஓடுதல், மயிலிறகைப்போல் பலநிறந்தோற்றுதல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும். இதனால், எவ்வகைப் பொருள்களும் கறுப்பாகவே தோற்றும்.

௩-வது சிலேஷ்மதிமிரரோகம்.

இது, விழிகளைமினுமினுப்புடன்வெளுப்பாக்குவதுமன்றிப்பார்வை மினுமினுத்தல், வெளுத்தல், சங்கு, சந்திரன், மல்லிகைமொக்கு, வெள்ளைப்புஷ்பம் ஆகிய இவைகள் குப்பல்குப்பலாகக் கிடக்குதல்போல் தோற்றல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௪-வது தொந்ததிமிரரோகம்.

இது,பார்வையில்,வாததிமிரம்,பித்ததிமிரம்ஆகியஇவ்விரண்டினால் உண்டாகும்குணங்களையெல்லாம் ஒரேகாலத்திலுண்டாக்கும். இவ்வாறே மற்ற இரண்டு திமிரரோகங்களையும் அறியவேண்டும்.

௫-வது திரிதோஷதிமிரரோகம்.

இது, பார்வைக்குள் வாதாதி மூன்று திமிரரோகங்களுக் குள்ள குணங்களையெல்லாம் பிரகாசமாக உண்டாக்கும்.

௬-வது ரத்ததிமிரரோகம்.

இது, கண்களைச்சிவப்பாக்குவதுமன்றிப்பார்வையிலும்அவ்வண்ணமாகவேதோற்றுவிக்கும். இத்திமிரரோகத்தினால்காசரோகமும்குருடாகிய லிங்கநாசரோகமும் உண்டாகும்; ஆகையால், இதற்கு உடனேயேபண்டிதர்கள் நானாவித சிகிச்சைகளைச் செய்யவேண்டும். செய்யாவிடில் அசாத்தியமே.

ஆக திமிரரோகம் ௬-ம் முற்றியது.

சாமானியகாசரோகலக்ஷணம்.

முன்பு சொன்ன திமிரரோகத்தினது ஆதிக்கத்தால், வாயுவானது கண்களின்மூன்றாம்புரையை அநுசரித்துக் காசரோகத்தைப்பிறபிக்கும். இதனால், மேற்பார்வைதெரிதலும், கீழ்ப்பார்வைதிரைபோட்டதுபோல் மறைதலும் உண்டாகும். இந்தரோகமானது, எந்தத்தோஷத்தை அநுசரிக்குமோ அந்தத் தோஷத்தையே பார்வையும் அநுசரிக்கும். இக்குணங்களெல்லாம் சகலகாசரோகங்களுக்கும் பொதுவாக இருக்கும். இது, கருவளையல் ஓட்டின் நிறத்தைப் பெற்றிருப்பதால், காசரோகம் எனப்பேர்பெற்றது. காசம் என்பது வளையல்.

இனி ஆறு வகையாகிய காசரோகங்களைச்சொல்லப்படும்.

க-வது வாதகாசரோகம்.

இது, கண்களைச் சிவப்பாக்குவதுமன்றி, எதிரிலிருப்பவர்களுக்கு மூக்கின்மைபோலவும், சந்திரனும் தீபமும் அநேகங்களாகவும், நேரில் இருக்கிற கனத்தபொருள்களை மெல்லிய உருவாகவும் தோற்றுவிக்கும்.

உ-வது பித்தகாசரோகம்.

இது, கண்களில் வெண்கலம் நீலம் இவைகளின்காந்தியைப்போல் பிரகாசத்தை உண்டாக்குவதுமன்றி, பார்வையில் சூரியன் சந்திரன் பரிவேடம் அக்கினிச்சுவாலை இந்திரதனு ஆகிய இவைகளை, முன்பு வாதகாசரோகத்திற் சொன்னதுபோல், அநேகங்களாகத் தோற்றுவிக்கும்.

௩-வது சிலேஷ்மகாசரோகம்.

இது, பார்வைக்குள் வெளுப்பை உண்டாக்குவதுமன்றி, சூரியனைத் தீபத்தைப் பார்க்கில், அவைகள் ஒளிமழுங்கி அநேக உருவங்களாகத் தெரியும்படிக்குத் தோற்றுவிக்கும்.

௪-வது தொந்தகாசரோகம்.

இது, கண்களிலும் பார்வையிலும், வாதகாச குணத்தையும் பித்தகாசகுணத்தையும் ஒரேகாலத்தில்உண்டாக்கும். இவ்வாறேமற்றஇரண்டு தொந்தகாசரோகங்களையும் அறியவேண்டும்.

௫-வது திரிதோஷகாசரோகம்.

இது, பார்வைக்குள் வாதம் பித்தம் சிலேஷ்மம் என்னும் மூன்று காசங்களுக்குள்ள குணங்களையெல்லாம் விரைவில் உண்டாக்கும்.

௬-வது ரத்தகாசரோகம்.

இது, கண்களைச் சிவப்பு கறுப்பு நிறமாகச்செய்வதுமன்றிப்பார்வையிலும் அவ்வாறே தோற்றுவிக்கும்.

ஆக காசரோகம் ௬-ம் முற்றியது.

சாமானிய*லிங்கநாசரோகலக்ஷணம்.

முற்கூறிய காசரோகத்தைச் சீக்கிரத்தில் நிவிர்த்திசெய்யாவிடில், வாயுவானது கண்களின் நாலாம்புரையை அநுசரித்து, லிங்கநாசரோகத்தைப் பிறப்பிக்கும். இதனால், திஷ்டிமண்டலமாகியபாவைதிரை போட்டதுபோல் மறையப்படும். இது, பாவையைப் பலவாறுகக்கெடுத்துக் கொஞ்சமேனும் ஸ்தூல ரூபவஸ்துவையும் தெரியவொட்டாமல் செய்வதால், லிங்கநாசரோகம் எனப் பேர்பெற்றது.

இனி ஆறு வகையாகிய லிங்கநாசரோகங்களைச் சொல்லப்படும்.

௧-வது வாதலிங்கநாசரோகம்.

இது, முன்புசொன்ன காசரோகவிருத்தியினால் வாயுவானது கண்களின் நாலாம்புரைக்குள் சஞ்சரிக்கும் போது பிறந்து, அக் கண்களில் மிகவும் தூசிபடிந்ததுபோலும், புகைகம்மியதுபோலும்செய்வதுமன்றி, குருவி ரத்தம்போல் சிவந்தநிறத்தையும் உண்டாக்கும். இதனால் விழிகளின்நரம்புகள் முடங்கிக்கொள்ளுதலும், எதிரிலிருக்கிற வஸ்துவும் உருவமும் கொஞ்சமேனும் தெரியக்கூடாமையுமாக இருக்கும்.

௨-வது பித்தலிங்கநாசரோகம்.

இது, கண்களைக் கருவண்டைப்போல் மிகுந்த கறுப்பாக்குவதுமன்றி, எவ்வளவேனும் பார்வையைத் தெரியவொட்டாமற்செய்யும்.

௩-வது சிலேஷ்மலிங்கநாசரோகம்.

இது, விழிகளின்மேல் சங்கு மல்லிகைமொக்கு சந்திரன் வெள்ளை அல்லிப்பூ, படிகம், பல்லிமுட்டை ஆகிய இவைகளைப்போல் சதையை வளர்ப்பிக்கும்; அப்போது நிழலில் திரிவதற்கே இச்சை உண்டாகும்.

௪-வது தொந்தலிங்கநாசரோகம்.

இது, வாதலிங்கநாசம் பித்தலிங்கநாசம் ஆகிய இவ் இரண்டினால் உண்டாகின்ற குணங்களையெல்லாம் ஒரேகாலத்தில் உண்டாக்கும். இவ்வாறே மற்ற இரண்டு தொந்தங்களையும் அறியவேண்டும்.

---

* லிங்கம் என்பது கருவிழியின்நடுவிலிருக்கும்பாவை; நாசம் என்பது கெடு

ரு-வது திரிதோஷலிங்கநாசரோகம்.

இது, வாதலிங்கநாசரோகம் முதலிய மூன்று ரோககுணங்களை யெல்லாம் கண்களிலும் பார்வையிலும் நிரம்ப உண்டாக்கும்.

சா-வது ரத்தலிங்கநாசரோகம்.

இது, பாவையை ரத்தநிறம் ஆக்குவதும்தவிர அப்பாவையையும் கண்களின் ஒளியையும்கெடுக்கும்.

ஆக லிங்கநாசரோகம் சா-ம் முற்றியது.

இனி கம்பீரரோகம் முதலிய ஒன்பதுரோகங்களையுஞ் சொல்லப்படும்.

க-வது கம்பீரரோகம்.

இது, முன்புசொன்ன லிங்கநாசரோகங்களில் நின்றும் அதிகரித்த வாயுவின் விருத்தியினால் கண்களின் நரம்புகள்முடங்கிப் பார்வைக்குள் உருவி ஆழ்ந்துவிடும்போதுபிறந்து,கொஞ்சமேனும் பார்வையைத்தெரிய வொட்டாத விதத்தைச்செய்யும். கம்பீரம் என்பது ஆழம்.

உ-வது இரசுவரோகம்.

இது, பித்தத்தினால்பிறந்து, கண்களின்பாவையை மறைக்கும். மறைத்தாலும் அற்பமாகத்தெரியும். இரசுவம் என்பது அற்பம்.

ந-வது நகுலாந்தரோகம்.

இது, இரண்டுகண்களையும் கீரிப்பிள்ளைக்கண்களைப்போல் சிவப் பாக்கிப் பீளையைநிறைப்பிக்கும். இதனால், எதைப்பார்த்தாலும் பகல் காலத்தில் விந்தைவிந்தையாகத் தோற்றுவதும், இராக்காலத்தில் எவ்வள வேனும் பார்வைதோற்றாததுமாக இருக்கும். இது, கீரிப்பிள்ளைக்கண் களைப்போல் இருத்தலால், நகுலாந்தரோகம் எனப் பேர்பெற்றது.

நகுலம் என்பது கீரி ; அந்தம் என்பது குருடு.

ச-வது நத்தாந்தரோகம்.

இது,வாத பித்த கபங்களினால்பிறந்து, சூரிய அஸ்தமானகாலத்தில் திஷ்டியைமறைத்து, அச் சூரியன் உதித்தவுடன் அம்மறைப்பைவிட்டு விடும். இதனால், இரவில் பார்வைதெரியாமலும் பகலில் நன்றாகத்தெரிந் தலுமாக இருக்கும். இதனை மாலைக்கண், இராக்குருடு என்பர். இது, சுத்தி பண்ணியமிளகை வெள்ளாட்டுப் பிச்சுப்பை கொண்டமட்டுங்கொட்டி, அச்சலம் வெளிப்படாமல் வாயைத்தைத்து நிழலில் தூக்கிக்கட்டி, அம்மிளகுநன்றாக உலர்ந்தபின்பு, அதில் ஒன்றைச்சுத்தசலத்தி லுரைத்து ஒருமண்டல காலம்வரைக்கும் இரண்டுவேளையும் கண்ணிலிட்டுக்கொள்ள விலகும். நத்தம் என்பது இரவு ; அந்தம் என்பது குருடு.

ரு-வது உஷ்ணவிதக்தரோகம்.

இது, கனதீக்ஷண வெய்யிலில் அடிபட்டு உடனே மிகுசீதள சலத்தில் ஸ்நானம்செய்தலால் பிரகோபித்த திரிதோஷத்தில் நின்றும் ஒருசுவாலை எழும்பிச் சன்னநரம்புகளின்வழியாகச் சிரசில்ஏறி விழிகளைப் பற்றும்போது பிறந்து, உபத்திரவத்தைச்செய்யும். இதனால், கண்களில் எரிச்சலுடன்மயிலைபாய்தல், இமைக்குள்வெளிறல், பகலில்கலங்கிய பார்வை, இரவில் அதுவுந்தெரியாமைஎன்னுமிக்குணங்கள் உண்டாகும்.

சா-வது பித்தவிதக்தரோகம்.

இது, பித்தத்தினால் பிறந்து, கண்களில் மஞ்சள்நிறத்தை உண்டாக்கும்.

எ-வது ஆம்லவிதக்தரோகம்.

இது, மெத்தவும் புளிப்புள்ள வஸ்துக்களைப் புசித்தலினால் ரத்தத்தோடுகூடிய திரிதோஷங்களானவை கண்களின்பார்வையைச் சேரும்போதுபிறந்து, உபத்திரவத்தைச்செய்யும். இதனால், விழிகளில் வீக்கமும் நமைச்சலும் கலங்கலும் உண்டாகும்.

அ-வது தூம்பிரரோகம்.

இது, துக்கம் சுரம் தலைநோவு இவைகளால் வருந்துங்காலத்தில் பிறந்து, கண்களிற் புகைகம்மியதுபோல் கம்மலைச்செய்யும். இதனால் எந்தவஸ்துக்களும்புகைநிறமாகவேதோற்றும். தூம்பிரம் என்பது புகை.

கூ-வது அவுபசர்க்கிகரோகம்.

இது, துர்ப்பலகாலத்தில் சூரியவிம்பம் முதலிய தீக்ஷண ஒளிகளைத்தினந்தினமு முற்றுப்பார்ப்பதனால் வாத பித்த கபங்கள் கண்களில் வியாபிக்கும்போது பிறந்து, அவ்விழிகளின் ஒளியைக்குறைத்துப் பார்வை இல்லாததுபோல்செய்யும் : அல்லது வைடூரியத்திற்சொலிக்கும் நிறங்களைப்போல் தோற்றுவிக்கும். இதனால், அங்குநோவின்மை, தெரிந்துந் தெரியாதபார்வை, யார்பார்த்தாலும் விழிகளில்யாதொருதோஷங்களும் இன்மையாக மயக்குதல் என்னும் இக்குணங்கள் உண்டாகும். இது, மற்றொருஒளியினால்பிறந்து,நேத்திரஒளியைக்கெடுத்தலால்,அவுபசர்க்கிக ரோகம் எனப் பேர்பெற்றது.

ஆக கம்பீராதிரோகம் கூ-ம் முற்றியது.

பார்வைரோக சாத்தியா சாத்திய நிதானம்.

பார்வையில் பிறக்கின்றரோகம் உஎ-ல், வாததிமிரம்,பித்ததிமிரம், சிலேஷ்மதிமிரம்,தொந்ததிமிரம்,திரிதோஷதிமிரம்,ரத்ததிமிரம்,சிலேஷ்ம லிங்கநாசம், நத்தாந்தம்,உஷ்ணவிதக்தம்,பித்தவிதக்தம்,ஆம்லவிதக்தம், தூம்பிரம், அவுபசர்க்கிகம் ஆக யஉ-ம் சாத்தியம் ; காசம் சா, நகுலாந்தம் க, ஆக எ-ம் கஷ்டசாத்தியம் ; வாதலிங்கநாசம், பித்தலிங்கநாசம்,

தொந்தலிங்கநாசம், திரிதோஷலிங்கநாசம், ரத்தலிங்கநாசம், கம்பீரம், இரசுவம் ஆக எ-ம் அசாத்தியம்.

ஆ பார்வைரோகம் உஎ-ம் முற்றியது.

சர்வநேத்திரரோகபேதம்.

கண்கள்முற்றிலும், அபிஷந்தம், அதிமந்தம், சங்கரம் என்னும் மூன்றுவகைப்பிரிவினால்,யகூ-விதரோகம்பிறக்கும். அவைகளின்விபரம்:— அபிஷந்தத்தில் சு-ம், அதிமந்தத்தில் ரு-ம், சங்கரத்தில் எ-ம் ஆம்.

இனி அபிஷந்தரோகம் நான்கும் சொல்லப்படும்.

க-வது வாதாபிஷந்தரோகம்.

இது, கண்களில்உப்பல், உலர்ந்தபீளைசாருதல், அற்பநோவு,பூச்சி பறப்பதுபோல்தோற்றல், சிறுஎலும்புகளால் குத்துதல்போல்குத்தல், குளிர்ச்சியாகக் கொஞ்சஞ் சலம்வடிதலுடன் அவைகளை மூடுதற்குந் திறப்பதற்கும்பிரயாசை, நாசியில்உப்பலோடு சிறியவீக்கம், நெறி கண், புருவம் ஆகிய இடங்களில் இருக்கின்ற எலும்புகளிலும் நரம்புகளிலும் குத்தல், அவைகளில் அடித்ததுபோலிருத்தல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும். இது, உஷ்ண திரவியத்தினாலும், மதுரதிரவியத்தினாலும் உபசரிக்கில், சாந்தமாகும். அபிஷந்தம் என்பது ஒழுகுதல்.

உ-வது பித்தாபிஷந்தரோகம்.

இது, கண்களில்எரிச்சல், அருகுதலுடன் உஷ்ணசலம்வடிதல், புகைகம்மியதுபோலிருத்தல்,நீர்முட்டுதல்,கடைக்கண்கறுத்தல், சிவத்தல், எதிரில் இருக்கும்வஸ்து மஞ்சள்நிறமாகத்தோற்றல், உப்புநீரைத் தெளித்ததுபோல் கரித்தல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

ந-வது சிலேஷ்மாபிஷந்தரோகம்.

இது, கண்களில் நீர்க்கோவை, வீக்கம், தினவு, தடித்துவெளுத்து மினுமினுத்து நார்நாராகப்பீளைவடிதல், தேகசாட்டியம்,அசனவெறுப்பு, நித்திரைப்பங்கம் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

சு-வது ரத்தாபிஷந்தரோகம்.

இது, கண்கள் கோவைப்பழம்போல் சிவக்குதல், ரத்தநிறத்தை ஒத்தசலமும்பீளையும் ஒழுகுதல்,கருவிழிவெளிறல் என்னுமிக்குணங்களையுண்டாக்கும்.

ஆ அபிஷந்தரோகம் சு-ம் முற்றியது.

இனி அதிமந்தரோகம் ஐந்தும் சொல்லப்படும்.

க-வது வாதாதிமந்தரோகம்.

இது, கண் புருவம் நெறி ஆகிய இடங்களில் மத்தைக்கொண்டு மத்தித்தல்போல் இருத்தல், வாயுவினால் செவிக்குள் ஓயாத இரைச்சல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும். மந்தம் என்பது மத்து.

௨-வது பித்தாதிமந்தரோகம்.

இது, கண்களைக் கருங்காலிக்கட்டையினது நெருப்பைப்போலும் ...ய்ந்து சிவந்த இரும்புக்கட்டியைப்போலும் சிவக்கச்செய்யும்.

௩-வது சிலேஷ்பாதிமந்தரோகம்.

இது, வெள்விழி எல்லாம் சுருங்கிக்குழிவிழுதல், கருவிழிஉயர்ந்து ...ப்புதல், அதில்தூசிபடிந்ததுபோலிருத்தல், சலம்வடிதல், நாசியின் ...த்தங்கள் புடைக்குதல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௪-வது ரத்தாதிமந்தரோகம்.

இது, கண்கள்சிவத்தல்,சிலவேளைசெம்பரத்தம்பூப்போல் மிகவும் ...வத்தல், திறக்கும்போதும் தொடும்போதும்நோதல், கருவிழியானது ...த்தத்தில் மூழ்கினதுபோல்தோற்றல், நெறி தந்தம் தாடை மண்டை ...கிய இடங்களில்வேதனை என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௫-வது அதாதிமந்தரோகம்.

இது,கண்களில் விரணத்தைப்பிறப்பித்துப்பார்வையைக்கெடுக்கும். ...தற்குத் தீவிரமாகவைத்தியம்பண்ணுவிடில், அநேகவித வேதனைகளும் ...ண்டாகும்.

ஆக அதிமந்தரோகம் ௫-ம் முற்றியது.

இனிச் சங்கரரோகம் - ஏழும் - சொல்லப்படும்.

௧-வது அன்னியதோவாதரோகம்.

இது, கண் நெறி வாதநரம்பு மற்றையநரம்பு ஆகியஇந்தஇடங்களில் ...யுவுதங்கிச் சஞ்சரிக்கும்போது பிறந்து, கண்களில்சிவப்பு, வீக்கம், ...திகநோவு, நீர்க்கம்மல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும் வாயு ...னாதுதனக்கு அன்னியஸ்தானமாகிய பித்த சிலேஷ்ம நரம்புகளிலும் ...பாபித்து நேத்திரத்திற்கு உபத்திரவத்தைக் கொடுப்பதால், இது ...ன்னியதோவாதரோகம் எனப் பேர்பெற்றது.

௨-வது வாதபரியாயரோகம்.

இது, முன்புசொல்லிய அன்னியதோவாதரோக குணங்களுடன் ...கிர பார்வையையும் சதாவீக்கத்தையும் உண்டாக்கும். இந்த ...ரகம் மேற்கூறியரோகத்தைப்போல் இருந்தாலும், கொஞ்சம் பேதப் ...டுதலால், வாதபரியாயரோகம் எனப் பேர்பெற்றது.

௩-வது * சுட்காக்ஷிபாகரோகம்.

இது, வாத பித்தசேர்க்கையினுல்பிறந்து, கண்களில்சுட்கம்இடுக்கம் ...த்தல்போலிருத்தல் ஆகிய இக்குணங்களைப்பிறப்பிக்கும். இதனுல், ...ண்டல், நோதல், அதிர்தல், எரிதல், தேசசகிங்குதல், சிவக்குதல், ...யில் திறத்தலில் பிரயாசை, சீதளவஸ்துவில் இச்சையென்னும் ...க்குணங்களுண்டாகும். இந்தரோகம்முதிர்ந்தால் குத்தலதிகரிக்கும்.

---

* சுட்கம் என்பது உலருதல்; அக்ஷி என்பது நேத்திரம்; பாகம் என்பது ...ருதல்.

௪-வது சோபாக்ஷிபாகரோகம்.

இது, திரிதோஷங்களின் சேர்க்கையால்பிறந்து, கண்களில் வீக்கம், சிவப்பு,நோவு,எரிச்சல், சதாமூடல்,வெள்விழி அத்திப்பழம்போலிருத்தல், அதில்நின்றும் சுடுகையாயும் சீதளமாயும் தெளிவாயும் பிசுபிசுப்பாயும் விஸ்தாரம் சலம் ஒழுகுதல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௫-வது அற்பசோபாக்ஷிபாகரோகம்.

இது,முன்புசொன்னரோகத்தின்குணங்களையெல்லாமுண்டாக்கும். ஆனால் கண்களில் அற்ப வீக்கம் இருக்கும்.

௬-வது அக்ஷிபாகாத்தியயரோகம்.

இது, கண்கள்வீங்குதல், கலங்குதல், நீர்க்கம்முதல், பீளைவடிதல், கருவிழி வெள்விழிசிவத்தல், எரிச்சல், பார்வைகெடுதல், பொறுத்துப் பொறுத்துநோதல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௭-வது * ஆம்லோஷிதரோகம்.

இது, பித்த ரத்தம் முதலிய வாதாதிதோஷங்களானவை அசீரண வஸ்துக்களைக்கூட்டிப் புசிக்கப்பட்ட அன்னசாரங்களை வயிற்றுக்குள் புளிக்கவைத்து, அந்தநீரைக் கண்களுக்கு ஆதாரமாக இருக்கின்ற நரம்புகளின் துவாரவழியாக நேத்திரங்களிற்செலுத்தி நிறைப்பிக்கும்போது பிறக்கும். இதனால், கண்கள்கறுக்குதல், சிவக்குதல், வீங்குதல், எரிதல், மாறாதுநீரொழுகுதல், கலங்குதல், பார்வைகெடுதல் என்னு மிக்குணங்களுண்டாகும்.

ஆக சங்கரரோகம் ஏழுடன், சர்வநேத்திரரோகம்
௯௬-ம் முற்றியது.

சர்வநேத்திரரோக அசாத்தியநிதானம்.

கண்கள்முற்றிலும் பிறக்கின்ற பதினாறுரோகங்களுக்குள், அதாதிமந்தரோகமும் அக்ஷிபாகாத்தியயரோகமும் அசாத்தியமாம். அன்றியும் வாதத்தினாற்பிறந்த அதிமந்தரோகம் ஐந்துநாளிலும், சிலேஷ்மத்தினாற் பிறந்த அதிமந்தரோகம் ஏழுநாளிலும், ரத்தத்தினாற்பிறந்த அதிமந்தரோகம் மூன்றுநாளிலும், பித்தத்தினால்பிறந்த அதிமந்தரோகம் கண்டநாளிலும் பார்வையைக்கெடுக்கும். மேலும், இந்த அதிமந்தரோகங்களை எல்லாம் அசாத்தியமென்றே நிதானிக்கவேண்டும்.

அன்றியும், சிலேஷ்ம பித்த ரத்தங்களால்பிறந்த குகூநகம், பக்ஷ்மாபரோதம்,சுட்காக்ஷிபாகம்,பூயாலஜம், பிசவர்த்தமம்,போதகி, ஆம்லோ

*ஆம்லம் என்பது புளிப்பு ; உஷிதம் என்பது பழையது ; ஆம்ல உஷிதம் ஆம்லோஷிதம் எனலாயிற்று.

ஷிதம், அற்பசோபாகூதிபாகம், அபிஷந்தம், அதிமந்தம், அதாதிமந்தம், அகூதிபாகாத்தியயம் ஆகிய ௰அ ரோகங்களுக்கும் பில்லரோகம் என்று பெயர். இவைகள், வச்சிரரத்திணுகரமாத்திரை, சவ்வீராஞ்சனம்,சுவேதச் சிறுமா, நேத்திரோதகம் முதலிய அவுஷதங்களைக்கொண்டு சிகிச்சை செய்யில், சிலநாள்பொறுத்துச் சாத்தியமாம்.

தன்வந்தரிமுதலிய பெரியோர்களால் சொல்லப்பட்ட
நேத்திரரோகம் ௬௬-ம் முற்றியது.

நேத்திரரோக மதாந்தரம்.

நயனவிதி நானூறு என்கின்ற சாஸ்திரத்திலும், இன்னும் சில நூல்களிலும், கருவிழி, வெள்விழி, இமை, கடைக்கண் என்னுமிந்நான்கு ஸ்தானங்களைப்பற்றி வருகின்றரோகம் ௬௯ - எனச்சொல்லப்படுகின்றன. அவைகளின்விவரம் :—கருவிழியில், காசம், படலம், குமுதம்,விழியுந்தல், நெரிசல், வரி, குந்தம், திமிரம், சுக்கிரன் பூ என்னும் ௰-வகைப்பிரிவினுல் ௬௫-விதரோகமும் : வெள்விழியில், எழுச்சி, படாத்தி, நெரிசல், புற்று, குமிளம், வரி என்னும் ௬ - வகைப்பிரிவினுல் உ௰ - விதரோகமும் : இமைகளில், பில்லம், தடிப்பு, கழலை, நீர்ப்பாய்ச்சல், பற்பம் என்னும் ௫ வகைப்பிரிவில் ௰௬-விதரோகமும் : கடைக்கண்களில், கண்ணெடுப்பு, பூசாந்தரம், படாத்தி, நீர்க்குவை, விழிவாதம், விரணப்பரு, வித்திரதி, இமைக்குரு, குமிள், நகூத்திரவாயு, கண்ணோவு என்னும் ௰௧-வகைப் பிரிவினுல் ௰௫-விதரோகமும் உண்டாகும்.

கருவிழிரோகத்தில் முதற்பிரிவாகிய காசரோகபேதம்.

காசரோகமானது, வாதகாசம், பித்தகாசம், சிலேஷ்மகாசம், வாலகாசம், நீலகாசம், மந்தாரகாசம், விரணகாசம், கருப்பகாசம் என எட்டு விதப்படும். இவற்றுள் க - வது வாதகாசம் ; இது கண்மணியில் வண்டைப்போல் கருமைநிறத்தை உண்டாக்கி, அதில்நின்றும் சுறுத்த சலத்தை ஒழுகுவிக்கும். உ-வது பித்தகாசம் ; இது மஞ்சள்நிறமான சலம் வடியும்படிக்குச்செய்யும். ௩-வது சிலேஷ்மகாசம் : இது, சுத்தவெண்மை நிறமான சலத்தைப்பெருக்கும். ௪-வது வாலகாசம் ; இது, கருவிழியில், புகைகம்மியதுபோல்செய்யும். ௫-வது நீலகாசம் ; இது, கருவிழியில், கருவிளம்பூ நிறத்தை உண்டாக்கும். ௬-வது மந்தாரகாசம் : இது, கருவிழியில்,செம்பஞ்சு அல்லது மேகமிவைகளின்நிறத்தைப்பிறப்பிக்கும். எ-வது விரணகாசம் ; இது, கருவிழியில், முத்தைப்போல் தளதளப்பான நிறத்தை உண்டாக்கும். அ - வது கருப்பகாசம் ; இது கருவிழியில் சுத்தக்கருமைநிறத்தைக் காண்பிக்கும். இவற்றுள், பித்தகாசம், நீலகாசம், மந்தாரகாசம் ஆகிய ௩-ம், வில்வவேர்த்தயிலம், சந்தனுதித்தயிலம், சங்கு

௩௪

மாத்திரை, கையாந்தகரைக்குழம்பு முதலிய அவுஷதங்களினாலும், ஆயுதசிகிச்சைகளினாலும் நிவிர்த்தியாகும். மற்ற ஐந்தும் அசாத்தியமாம்; ஆயினும், இச்சிகிச்சைகளைச்செய்யில், சாத்தியம் ஆனாலும் ஆகும்.

ஆக காசரோகம் அ-ம் முற்றியது.

கருவிழி உ-வது பிரிவாகிய படலரோகபேதம்.

படலரோகமானது, சதைப்படலம், ரத்தப்படலம், நீர்ப்படலம், வரிப்படலம், கருநாகப்படலம், மாமிசபடலம், பசுவிழிப்படலம் என எ-விதப்படும். இவற்றுள், க - வது சதைப்படலம்; இது, கருவிழியில், குத்தலுடன்நோவை உண்டாக்கி மேலில்சிவந்தசதையை வளர்ப்பிக்கும். உ - வது ரத்தபடலம்; இது கண்மணியில், கரித்தல், குமுறல், காந்தல், கன்றுதல், பீளைசாரல், எரிதல், ரத்தங்கட்டுதல், நெறிக்குங்கீழ் புருவம் நெற்றிபிடரி உச்சி ஆகிய இடங்களில் குத்தல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும். ந - வது நீர்ப்படலம்: இது, கருவிழியின்மீது மேகம் கம்மியதுபோல் இருத்தல், கனத்தல், மிகுந்தசலம்வடிதல், கண்மயக்கம், சிரசில்குத்தலுடன் சலக்கோவை என்னு மிக்குணங்களை உண்டாக்கும். ச - வது வரிப்படலம்: இது, கருவிழியின்மீது கயிறுபோல்வரிகளும், காந்தலும், குத்தலும், அகண்டநோவுடன் உறுத்தலும், புகைச்சலும் உண்டாகச்செய்யும். ரு - வது கருநாகப்படலம்: இது, கருவிழியில், இந்திரதனுவைப்போல்பலநிறமும்குத்தலும், நோவும், உறுத்தலும்,சலப் பெருக்குமுண்டாகச்செய்யும். சு-வது மாமிசபடலம்: இது,விழிமணியின் முனையில் சதையைவளர்ப்பித்து, அதில் ஊறல், கூசுதல், இடித்தல், சலம்வடிதல் என்னும் இக்குணங்களை உண்டாக்குவதன்றியும், பிடரியில் நோவையும் உண்டாக்கும் எ-வது பசுவிழிப்படலம்: இது, கருவிழியில் பசுமை நிறமான சதையை வளர்ப்பித்து, அதில் இடித்தலானகுத்தல், தீ இருக்குமிடம்போல் காந்துதல், பார்வைமந்தம் என்னும் இக்குணங்களை உண்டாக்கும். இவற்றுள், சதைப்படலம், ரத்தபடலம், நீர்ப்படலம், வரிப்படலம் என்னும் ச - ம் சாத்தியமாம். மற்ற ந-ம் அசாத்தியமாம். இவைகள், படிகாரமாதியானமருந்து, நத்தைச்சிப்பிநெய் முதலிய அவுஷதங்களால் வசப்படும்.

ஆக படலம் எ-ம் முற்றியது.

கருவழி ந-வது பிரிவாகிய குமுதரோகபேதம்.

குமுதரோகமானது, செங்குமுதம், கருங்குமுதம், வெண்குமுதம் என ந-விதப்படும். இவற்றுள், க-வது செங்குமுதரோகம்; இது, கருவிழியில் செங்கழுநீர்ப் பூவைப்போல் சிவந்த சதையை வளர்ப்பித்து, அதில்தீயினால்சுட்டபுண்போல்எரிச்சலையும் குத்தலையு முண்டாக்கும்.

௨-வது கருங்குமுதரோகம்: இது கருவிழியில்கருங்குவளைப்பூவைப்போல் விரணத்தையெழுப்பி பார்வையில் இருள்கம்மியதுபோல்செய்யும். ௩-வது வெண்குமுதரோகம் : இது, கண்களில், பஞ்சுபோல் வெளுத்த புள்ளி வீழ்ந்துபாவுதல், குத்தல், மிகுந்துநோதல், பார்வைமழுங்கல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும். இவற்றுள், செங்குமுதம் சாத்தியம். மற்ற ௨-ம் அசாத்தியம்.

ஆக குமுதரோகம் ௩-ம் முற்றியது.

கருவிழி ௪-வது பிரிவாகிய விழியுந்தல்ரோகபேதம்.

விழியுந்தல்ரோகமானது, செஞ்சதைவிழியுந்தல், வெண்சதைவிழியுந்தல், சருவநேத்திரவிழியுந்தல் என ௩-விதப்படும். இவற்றுள், ௧-வது செஞ்சதைவிழியுந்தல் : இது, குமுதரோகத்தினாலும், மற்றும் நேத்திரரோகங்களினாலும், கருவிழியில் சிவந்தசதையைப்படரச்செய்து, அதில் உறுத்தலை உண்டாக்கும். ௨-வது வெண்சதைவிழியுந்தல் : இது வெண்மைச்சதையைப் படரச்செய்து, அதில் நோவைமாத்திரம் உண்டாக்கும். ௩-வது சருவநேத்திரவிழியுந்தல் : இது கண்முழுமையும் முற்றுங் கொள்ளும்படிக்குச் சதையைப்படரச்செய்யும். இம்மூன்றும் அசாத்தியமே.

ஆக விழியுந்தல்ரோகம் ௩-ம் முற்றியது.

கருவிழி ௫-வது பிரிவாகிய நெரிசல்ரோகபேதம்.

உஷ்ணம், வெகுநடை, அவுஷதவேகம், மிகுசுமையெடுத்தல், கண்சிவத்தல், நீர் ஒதுங்கல் என்னும் இச்செய்கைகளினால், நெரிசல்ரோகம் பிறக்கும். இது, உஷ்ணநெரிசல், சோணிதநெரிசல், நீர்நெரிசல் என ௩-விதப்படும். இவற்றுள், ௧-வது உஷ்ணநெரிசல் : இது, கருவிழியில், விருத்தமான வெளுப்பை உண்டாக்கும். ௨-வது சோணிதநெரிசல் ; இது விழிமையத்தில், ரத்தநிறத்தையும், சுணைகளையும் உண்டாக்கும். ௩-வது நீர்நெரிசல் : இது, விழிநடுவில், மாந்தளிர் நிறத்தையும் குளிர்ச்சியுடன் நீர்க்கோவையையும் உண்டாக்கும்.

ஆக நெரிசல்ரோகம் ௩-ம் முற்றியது.

கருவிழி ௬-வது பிரிவாகிய வரிரோகபேதம்.

வரிரோகமானது, நீர்வரி, இமைவரி, சோரிவரிஎன ௩-விதப்படும். இவற்றுள், ௧-வது நீர்வரி : இது, வெளுத்து நீண்டிருக்கும. ௨-வது இமைவரி : இது பிறையைப்போல் வளைந்திருக்கும். ௩-வது சோரிவரி : இது இரண்டு கடைக்கண்வரைக்கும் ரத்தநிறத்துடன் படர்ந்திருக்கும்.

ஆக வரிரோகம் மூன்றும் முற்றியது.

கருவிழி ௭-வது பிரிவாகிய குந்தரோகபேதம்.

குந்தரோகமானது, சதைக்குந்தம், ரத்தகுந்தம், மோர்க்குந்தம் என மூன்றுவிதப்படும். இவற்றுள், ரத்தகுந்தம் ௧-ம் அசாத்தியமாம். மற்ற ௨-ம் சாத்தியமாம். ஆக குந்தரோகம் ௩-ம் முற்றியது.

கருவிழி ௮-வது பிரிவாகிய திமிரரோகபேதம்.

திமிரரோகமானது, வெள்ளெழுத்து, மாலைக்கண், மந்தாரதிமிரம், வறட்சித்திமிரம், நீர்த்திமிரம், சிலேஷ்மதிமிரம், மேகதிமிரம் என ௭-விதப்படும். இவற்றுள், ௧-வது வெள்ளெழுத்து : இது, அகாலத்திலுலும் காலத்திலுலும், இருவிதப்படும். இவற்றுள், அகாலவெள்ளெழுத்து என்பது, ௫-வது பக்கத்தில்கூறிய ஆலோசகபித்தத்தினது பிரகாசம் சில பித்தவஸ்துக்களினுல் அதிகரிக்கும்போது சிறுவர்களுக்கும் உண்டாகும். இதனுல், எழுத்தாதி சிறியவஸ்துக்களும்கண்ணுக்குப்புலப்படுவதுபோல் இருந்து காரணமில்லாமலே மயங்கிமறையப்படும். காலவெள்ளெழுத்து என்பது ௩௭-வயதிற்குமேல் செல்லாநின்ற பித்ததோஷ ஒளியானது விரிகின்றபோதுபிறந்து, ஒவ்வொருவேளை கொஞ்சம் வயிற்று நோவைத் தருவதுமன்றி, கருவிழியில் அற்பப்புகை மேகம்கம்மியதுபோல்செய்து நுட்பப்பொருள்களைத் தெரியவொட்டாமல் மறைக்கும். இந்தரோகம் பாலர்முதல் விருத்தர்பரியந்தமுண்டாயிருக்கும். ஆனுல், நாற்பத்தைந்து வயதிற்குமேல் மேற்படி பித்தவொளி மட்டுப்படுங்காலத்தில், சுபாவமாகத் தோற்றும் : அல்லது மேற்படிவயதிற்குமேலும் நீங்காவிடில், இதில்வாயு வின்கூட்டுறவினுல், திமிரரோகம் ஆரம்பமாகும். ௨-வது மாலைக்கண் : இது, மாலைக்காலத்தில் பார்வைக்குள் இருளடையும்படிச் செய்வதும், உதயகாலத்தில் அவ்விருள் நீங்கும்படிக்குச் செய்வதுமாக இருக்கும். ௩-வது மந்தாரதிமிரம் : இது, கருமணியில் பஞ்சுபோல் புகையை யெழுப்பி அந்திநேரத்தில் இருளையுண்டாக்குவதும், பின்னும் ஒரு சாமத்திற்குள் தெளிவைத் தருவதுமாக இருக்கும். ௪-வது வறட்சி திமிரம் : இது, கருவிழியில் மந்தமும், நடுநரம்பில்குத்தலும், பீளையுடன் சலப்பெருக்கும் உண்டாகும்படிக்குச்செய்யும். இது, கபாலமூளையைப் பித்தம் வறட்டும்போது பிறக்கும். ௫-வது நீர்த்திமிரம் : இது, நாசி, செவி, கண் ஆகிய இவ்விடங்களில் விரணத்தை உண்டாக்குவதும் அன்றி, கருவிழிப்பக்கங்களில் குத்தலையும், நடுவில் புகைச்சலையும் உண்டாக்கும். ௬-வது சிலேஷ்மதிமிரம் : இது கருவிழியை வெளுப்பாக்கிப் பார்வைக்குள்ளும் அப்படியே தோற்றுவிக்கும். ௭-வது மேகதிமிரம் : இது கருவிழியில் மேகம்கம்மியதுபோல் இருள் அடையச்செய்யும்.

இவற்றுள், வெள்ளெழுத்து, மாலைக்கண், மந்தாரதிமிரம் என்னும் ௩-ம் சாத்தியமாம். மற்றவை அசாத்தியமாம்.

ஆக திமிரரோகம் ௭-ம் முற்றியது.

கருவிழி ௯-வது பிரிவாகிய சுக்கிரரோகபேதம்.

சுக்கிரரோகமானது, விரணசுக்கிரன், கருஞ்சுக்கிரன், விழிவிழுங்கிச்சுக்கிரன், வெண்சுக்கிரன், கனற்சுக்கின்றனவைந்துவிதப்படும். இவற்றுள், ௧-வது விரணசுக்கிரன் : இது கருமணியின்மீது, மிகுந்த விரணத்தை உண்டாக்கும். ௨-வது கருஞ்சுக்கிரன் : இது விழியைச்சுற்றிலும் உழுந்துபோல் துவாரங்களை உண்டாக்கும். ௩-வது விழிவிழுங்கிச்சுக்கிரன் : இது கருவிழியின் கீழ்ச்சந்தியில் நின்றும் வெள்ளெழுச்சி போல் படர்ந்து விழியைமறைக்கும். இதனால், அதிகவேதனையும் எரிச்சலுமுண்டாகும். ௪-வது வெண் சுக்கிரன் : இது குழந்தைகளின் கருவிழியைவிட்டுச்சுற்றிலும் அக்கினிநிறத்தை உண்டாக்கும். ௫-வது கனற்சுக்கிரன் : இது விழியில் நோவையும் உள்ளில் அனல்போல் காந்தலையும் உண்டாக்கும். இவற்றுள் விரணசுக்கிரன் ஆதியான ௩-ம் அசாத்தியமாம். மற்ற ௨-ம் சாத்தியமாம்.

ஆக சுக்கிரன் ௫-ம் முற்றியது.

கருவிழி ௰-வது பிரிவாகிய பூ ரோகபேதம்.

மசூரிகைரோகத்தினாலும், உஷ்ணரோகத்தினாலும், மிகுநீர்க்கோவையினாலும், கருவிழியில், ஆணி உந்தல் புகை என்னும் ௩-விதப் பூ உண்டாகும். இவற்றுள், புகை சாத்தியம். மற்ற ௨-ம் அசாத்தியம்.

ஆக பூ ரோகம் மூன்றுடன் கருவிழிரோகம் ௪௫-ம் முற்றியது.

வெள்விழிரோகபேதம்.

வெள்விழியில், எழுச்சி, படாத்தி, நெரிசல், புற்று, குமிழம், வரி என்னும் ௯-வகைப்பிரிவினால் ௨௰-விதரோகம் பிறக்கும்.

வெள்விழி ௧-வது பிரிவாகிய எழுச்சிரோகபேதம்.

எழுச்சிரோகமானது, வரி எழுச்சி, விரண எழுச்சி, குவைஎழுச்சி, நீர் எழுச்சி, உந்தெழுச்சி என ௫-விதப்படும். இவற்றுள், ௧-வது வரி எழுச்சிரோகம் : இது, வெள்விழியில், தேமலைப்போல் வட்டமாகத் தசையைப்பரவச்செய்யும். ௨-வது, விரண எழுச்சி : இது, வெள் விழியில், கருங்குன்றியைப்போல் மாமிசத்தைவளர்ப்பிக்கும். ௩-வது குவைஎழுச்சி : இது உழுந்தினதுபிரமாணமான சதையைப்பிறப்பிக்கும். ௪-வது நீர்எழுச்சி : இது, நீர்த்துளியைப்போல்தளதளப்பான சதையை உண்டாக்கும். ௫-வது உந்தெழுச்சி : இது, பருத்திக்காயைப்போல் துர்ம்மாமிசத்தை வளரப்பண்ணும். இவற்றுள், வரி எழுச்சி, நீர் எழுச்சி, குவை எழுச்சி ஆகிய ௩-ம் சாத்தியமாம். மற்ற ௨-ம் அசாத்தியமாம்.

ஆகஎழுச்சிரோகம் ௫-ம் முற்றியது.

வெள்விழி ௨-வதுபிரிவாகிய படாத்திரோகபேதம்.

படாத்திரோகமானது, சதைபடாத்தி, வரிப்படாத்தி, சோரிப்படாத்தி என ௩-விதப்படும். இவற்றுள், ௧-வது சதைப்படாத்தி: இது வெள்விழியில் மிருதுவானசதையைத் தடிக்கும்படிச் செய்யும். ௨-வது வரிப்படாத்தி: இது வெள்விழியில் வலைக்கண்களைப்போல் மாமிசத்தை வளர்ப்பிக்கும். ௩-வது சோரிப்படாத்தி: இது வெள்விழியில் ரத்தங்குழம்பும்படியாகிய செந்நிறச்சதையை வளர்ப்பிக்கும். இவற்றுள், வரிப்படாத்திரோகம்சாத்தியமாம். மற்ற ௨-ம் அசாத்தியமாம்.

ஆக படாத்திரோகம் ௩-ம். முற்றியது.

வெள்விழி ௩-வது பிரிவாகிய நெரிசல்ரோகபேதம்.

நெரிசல்ரோகமானது, துளிநெரிசல்,உக்குநெரிசல், விரணநெரிசல் என ௩-விதப்படும். இவற்றுள், ௧-வது துளிநெரிசல்: இது வெள்விழியில் விந்துவினது துளியைப்போல்மாமிசத்தை உண்டாக்கும். ௨-வது உக்குநெரிசல்; இது தாம்மாமிசத்தை எழுப்பும். ௩-வதுவிரணநெரிசல்: இது, விரணத்தை உண்டாக்கும். இம்மூன்றும் சாத்தியமாம்.

ஆகநெரிசல்ரோகம் ௩-ம் முற்றியது.

வெள்விழி ௪-வது பிரிவாகிய புற்றுரோகபேதம்.

புற்றுரோகமானது, சதைப்புற்று, நீர்ப்புற்று, அழற்புற்று என ௩-விதப்படும். இவற்றுள், ௧-வது சதைப்புற்று: இது வெள்விழியில் ரத்தத்தினால் சிவந்த சதையைவளர்ப்பிக்கும். ௨-வது நீர்ப்புற்று: இது வெள்விழியில் நீர்க்குமிழிபோல்சதையையெழுப்பும். ௩-வது அழற்புற்று: இது வெள்விழியில்காந்தலுடன் மிம்மையான சதையை உண்டாக்கும். இவற்றுள், அழற்புற்று அசாத்தியமாம். மற்ற ௨-ம் சாத்தியமாம்.

ஆக புற்றுரோகம் முற்றியது.

வெள்விழி ௫-வது பிரிவாகிய குமிளரோகபேதம்.

குமிளரோகமானது, மாமிசக்குமிளம், ரத்தக்குமிளம், நீர்க்குமிளம் என ௩-விதப்படும். இவற்றுள், ௧-வது சதைக்குமிளம்: இது வெள்விழியில் கறுத்தகொப்பளத்தை உண்டாக்கும். ௨-வது ரத்தக்குமிளம்: இது வெள்விழியில், செங்குன்றியைப்போல் சிவந்தகொப்பளத்தை உண்டாக்கும். ௩-வதுநீர்க்குமிளம்: இது வெள்விழியில்சங்கம்பழம்போல் கொப்பளத்தை உண்டாக்கும். இவற்றுள், மாமிசக்குமிளம் அசாத்தியம். மற்ற ௨-ம் சாத்தியம்.

ஆக குமிளரோகம் ௩-ம் முற்றியது.

வெள்விழி-௬-வது பிரிவாகிய வரிரோகபேதம்.

வரிரோகமானது, வெள்வரி, நீலவரி, ரத்தவரி என ௩-விதப்படும். இவற்றுள் ௧-வதுவெள்வரி : இது வெள்விழியில், மீனின்சிலாம்பைப்போல் வரையை உண்டாக்கும். ௨-வது நீலவரி : இது, மிகுந்த பசுமைஉள்ள துரிசினது நிறத்தைஒத்தவரையைக் காண்பிக்கும். ௩-வது ரத்தவரி : இது செந்நிறவரையைப் பிறப்பிக்கும். இவற்றுள், நீலவரி சாத்தியமாம். மற்ற ௨-ம் அசாத்தியமாம்.

ஆக வரிரோகம் மூன்றுடன் வெள்விழிரோகம் ௨௰ - ம் முற்றியது.

இமைரோகபேதம்.

இமைகளில் பில்லம்,தடிப்பு,பதுமம்,கழலை,நீர்ப்பாய்ச்சல் என்னும் ௫-வகைப் பிரிவினால் ௰௬-வித ரோகம் பிறக்கும்.

இமை ௧-வது பிரிவாகிய பில்லரோகபேதம்.

பில்லரோகமானது, நீர்ப்பில்லம், அமரபில்லம், இடர்ப்பில்லம் என ௩ - விதப்படும். இவற்றுள், ௧ - வது நீர்ப்பில்லம் : இது, இமை மூறைத்தலுடன் கனத்தல், கண்ணில்மிகுந்தசலம்வடிதல், அக்கண்ணைச் சுற்றிலும் புருவத்திலும் உச்சியிலும் திமிருடன் சில்லிட்டு நோதல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும். ௨ - வது அமரபில்லம் : இது, இமையில் ரத்தம்போல் சிவந்ததசைதடித்தல்,கீழ் இமைஒட்டிக்கொள்ளு தல், கண்ணொளி மயங்குதல், அதிகசலம்வடிதல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும். ௩ - வது இடர்ப்பில்லம் : இது, இமையின் அடியிலும் புருவமத்தியிலும் இருக்கின்ற நரம்புகளை மஞ்சள் நிறமாக்கித் தடிக்கப்பண்ணும். இவற்றுள், நீர்ப்பில்லரோகம அசாத்தியமாம், மற்ற ௨ - ம் சாத்தியமாம்.

ஆக பில்லரோகம் ௩ - ம் முற்றியது.

இமை ௨-வது பிரிவாகிய தடித்தலாதிரோகபேதம்.

தடித்தல் ரோகமானது, இமைத்தடித்தல், இளிச்சக்கண், முடமயிர் என ௩-விதப்படும். இவற்றுள், ௧ வது இமைதடிப்பு : இது, கண்ணில் பரபரப்பான தினவு, நீர்ததும்பல், இமையில் விருவிருப்புடன் திமிர், விம்மல் ஓரமெல்லாம் கனத்தல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும். ௨-வது இளிச்சக்கண் : இது, இமைவிளிம்பில்தடித்தல்,விரணம், மிகுந்த சலக்கோவை, கண்கூசுதல், இதனால் வியசனம் என்னும் இக்குணங்களை உண்டாக்கும். இதனைப் புளிச்சக்கண் ணென்றும் சொல்வர். ௩-வது முடமயிர் : இது இரண்டு இமைகளும் சரிந்து ஒட்டிக்கொண்டு நீர்ப்பெருக்கினால் அவ்விடத்தில் விரணம் பிறக்கும்போது பிறக்கும். இதனால் இமைமயிர் உள்ளில் தைத்துக்கொள்ளல், வேதனை, கருமணி வெளிறல், அதில் திமிர் என்னும் இக்குணங்க ளுண்டாகும். இவற்றுள், முடமயிர் அசாத்தியம். மற்ற ௨-ம் சாத்தியம்.

ஆக - தடித்தலாதிரோகம் ௩-ம் முற்றியது.

இமை ௩-வது பிரிவாகிய கழலைரோகபேதம்.

கழலைரோகமானது, நீர்க்கழலை, ரத்தக்கழலை, சதைக்கழலை என ௩ விதப்படும். இவற்றுள் க-வது நீர்க்கழலை: இதுஇமைக்குப்பக்கத்தில் கல்மனையாகிய ஆலாங்கட்டியைப்போல கட்டியையுண்டாக்கும். உ-வது ரத்தக்கழலை: இது முன்புசொன்ன இடத்திலேயே ரத்தநிறக்கட்டியை எழுப்பும். இவற்றுள், ரத்தக்கழலைரோகம் அசாத்தியமாம். மற்ற உ-ம் சாத்தியமாம்.

ஆக கழலை - ௩ம் முற்றியது.

இமை ௪-வது பிரிவாகிய நீர்ப்பாய்ச்சல் ரோகபேதம்.

நீர்ப்பாய்ச்சல் ரோகமானது, இமைநீர்ப்பாய்ச்சல், கற்றைக்குலைவு, புழுவெட்டு, இமைபிறச்சி என ௪-விதப்படும். இவற்றுள் க-வது இமைநீர்ப்பாய்ச்சல்: இது சிரகின்நீரை இமைரோமம் விழுகிறபடிக்குச் செய்யும். இதனால், இமைகனத்தல், மதத்தல், பிசிர், வீக்கம் என்னும் இக்குணங்கள் உண்டாகும். உ-வது கற்றைக்குலைவு: இது இமையினது ரோமம் உதிரலுடன் அந்த இடத்தில் விரணம், நீர்வடிதல், வீக்கம் நோவு, குத்தல், கண்மயக்கம், பிடுக்க பீளைசாரல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும். ௩-வது புழுவெட்டு: இது இமையின் உதிரலுடன் அந்த இமையில் விரணம், ஆணிபோல் காந்துதல், ரத்தம்வடிதல், வீக்கம், தடிப்பு என்னும் இக்குணங்களை உண்டாக்கும். ௪-வது இமைபிறச்சி: இது இமையைச்சருமம்இல்லாதது ஒச்சிலைப்போல் செய்வதன்றியும், அதில் நின்றும் சலம்பெருக்கை உண்டாக்கும். இது, வாததோஷம், மருதி, உஷ்ணவியாதி என்னும் ரோகங்களினால், உண்டாகும். இந்த ௪ - ரோகமும் சாத்தியமாம்.

ஆக நீர்ப்பாய்ச்சலாதியரோகம் ௪-ம் முற்றியது.

இமை ௫-வது பிரிவாகிய பதுமரோகபேதம்.

பதுமரோகமானது, நீர்ப்பதுமம், ரத்தபதுமம், சதைப்பதுமமென ௩-விதப்படும். இவற்றுள் க-வது நீர்ப்பதுமரோகம்: இது இமையில் தடிப்பையும், அதிக நீர்சுரப்பையும் உண்டாக்கும். உ-வது ரத்தபதுமரோகம்: இது இறைமியில்சிவந்தநிறத்தையும் ரத்தநீரையும் உண்டாக்கும். ௩-வது சதைப்பதுமரோகம்: இது இமைக்குள் துர்மாமிசத்தை வளர்ப்பிக்கும். இவற்றுள், சதைப்பதும ரோகம் அசாத்தியம். மற்ற உ - ம் சாத்தியம்.

ஆக பதுமரோகம் மூன்றுடன் இமைகளில் பிறக்கின்ற
ரோகம் ௰௩ - ம் முற்றியது.

கடைக்கண்ரோகபேதம்.

கடைக்கண்களில், கண்ணெடுப்பு, பூசாந்தரம், படாத்தி, குவை, விழிவாதம், விரணப்பரு, வித்திரதி, இமைக்குரு, குமிழ், நக்ஷத்திரவாயு, கண்ணோவு என்னும் ௰க-வகைப்பிரிவினால் ௰ருடு-விதரோகம் பிறக்கும்.

கடைக்கண் க-வது பிரிவாகிய கண்ணெடுப்புரோகம்.

இது கடைக்கண்ணில் உப்பலை உண்டாக்கிக்கொண்டே இருக்கும்.

கடைக்கண் உ-வது பிரிவாகிய பூசாந்திரரோகம்.

இது, கடைக்கண்ணில், பீளைசாரும் இடத்திற்கு எட்கடை இடம் விட்டு, பருத்திவிதையைப்போல் உப்பலை உண்டாக்கும்.

கடைக்கண் ௩-வது பிரிவாகிய படாத்திரோகபேதம்.

படாத்திரோகமானது, நீர்ப்படாத்தி, சதைப்படாத்தி, ரத்தப் படாத்தி என ௩-விதப்படும். இவற்றுள், க-வது நீர்ப்படாத்தி : இது கடைக்கண்ணில் சலந்தை ஒழுகுவிக்கும். உ-வது சதைப்படாத்தி : இது கடைக்கண்ணில் துர்ச்சதையை வளர்ப்பிக்கும். ௩-வது ரத்தப் படாத்தி : இது கடைக்கண்ணில் வெப்பத்துடன் ரத்தத்தைவடியப் பண்ணும். இவை ௩-ம் சாத்தியம்.

ஆக படாத்திரோகம் ௩-ம் முற்றியது.

கடைக்கண் ச-வது பிரிவாகிய குவைரோகபேதம்.

குவைரோகமானது, நீர்க்குவை, சதைக்குவை, ரத்தக்குவை என ௩ - விதப்படும். இவற்றுள், க-வது நீர்க்குவை ; இது கடைக்கண்ணில் சிலேஷ்மமொத்தையைப்போலவே துர்மாமிசத்தை வளர்ப்பிக்கும். உ - வது சதைக்குவை : இது கடைக்கண்ணில் கருங்குன்றியைபோல் தசையைப்புடைப்பிக்கும். ௩-வது ரத்தக்குவை ; இது கடைக்கண்ணில் ரத்தநிறத்துடன்கடினத்துவமான சதையை உண்டாக்கும். இம்மூன்றும் சாத்தியமாம்.

ஆக குவைரோகம் ௩-ம் முற்றியது.

கடைக்கண் ரு-வது பிரிவாகிய விழிவாதம்.

இது வாயுவைக்கொண்டு இமைகளை ஆட்டுவித்துக்கண்களைச்சுருக்கும்.

கடைக்கண் சு-வது பிரிவாகிய விரணப்பரு.

இது கடைக்கண்விளிம்பில்கற்கண்டுருவமுள்ளவிரணத்தையுண்டாக்கும்.

கடைக்கண் எ-வது பிரிவாகிய வித்திரதி.

இது கடைக்கண்ணில் நரம்பின்வழியாகத்தடித்தலை உண்டாக்கும்.

கடைக்கண் அ-வது பிரிவாகிய இமைக்குரு.

இது கடைவிழியில்சிறியகட்டிகளை எழுப்பும். இதனைக்கண்கட்டிஎன்பர்.

கடைக்கண் கூ-வது பிரிவாகிய குமிழுரோகம்.

இது கடைக்கண்ணில் குமிழ்போல் சவ்வைப் புடைப்பிக்கும்.

கடைக்கண் ய-வது பிரிவாகிய நக்ஷத்திரவாயு.

இது, நயனத்திலும் புருவத்திலும் குத்தலுடன் விரணத்தை எழுப்பி, நாசியில் சலப்பெருக்கை உண்டாக்கிக்கொண்டே இருக்கும்.

கடைக்கண் யக-வது பிரிவாகிய கண்ணோவு.

இது, கண்கள்முற்றிலும், சிவத்தல்,உறுத்தல், நீர்முட்டல், வெளிச்சத்தைப்பார்க்கக்கூடாமை,மாதர்மேல்விருப்புஎன்னுமிக்குணங்களை உண்டாக்கும்.

ஆக கடைக்கண்ரோகம் பதினாறுடன் நேத்திரரோகம்

கூசு-எனக்கூறிய மதாந்தரமும் முற்றியது.

விழியுந்தலுக்கு, ரக்ஷையும்: நெரிசலுக்கு, முருங்கைப்பூவாதி கிருதமும்: வரிகளுக்கு, அஞ்சனதிப்பொடியும்: சுக்கிரரோகங்கட்கு, தாரசெய்யாதி படிகாரப்பொடியும்: படாத்தி, திமிரம் இவைகட்கு, பசுவின்பாலும், இந்துப்பாதிநெய்யும், பச்சைத்தாம்பர உண்டையும்: பூ ரோகங்களுக்கு, பச்சை உண்டை யானைப்பல்லாதி மாத்திரையுடன் கடல்நுரையும்: எழுச்சிகளுக்கு, தேத்தாங்கொட்டையாதிகிருதமும்: படாத்திகட்கு, அமுதாஞ்சனப்பொடியும்: நெரிசலுக்கு, இந்துப்பும், திரிகடுகாதிநெய்யும் ஆகும். அன்றியும், மேற்கூறியநேத்திரரோகங்களுக்கெல்லாம் கிரமமாகச் சிகிச்சாசாரம் என்னும் சாஸ்திரத்தில் விவரிக்கும் அமிர்தாமலகதயிலம்,பீதரோகணித்தயிலம்,கருஞ்சிறுமா, வெண்சிறுமா, விகுசநவநீதபாவன லவுங்காஞ்சனம், கோகிலாக்ஷி மூலாஞ்சனம், நாரிகேளாஞ்சனம்,வச்சிர ரத்தினகாமாத்திரை முதலிய அவுஷதங்களையும் க்ஷத்திர க்ஷாராக்கினி சிகிச்சைகளையும் முறைமைப்படிக்குச்செய்யில், அவைகள் நிவர்த்தியாகும்.

பதினொன்றாவது உன்மாதரோகபடலம்

முற்றியது.

உ

சுப்பிரமணியர் துணை.

ஜீவரக்ஷாமிர்தம்.

பனிரண்டாவது

கர்ணரோகபடலம்.

கர்ணரோகரூபதம்.

கர்ணம் என்கிற காதுக்குள், வாதகர்ணசூலை ஆதியாக ரத்தகர்ணசூலை ஈறாக ௫-விதரோகம் பிறப்பதுமன்றி, சங்கரசாதியாக உ௰-விதரோகம் பிறக்கும். அள், கங்கம், கர்ணம், கேள்வி, சிரவணம், சிரவம், சுருதி, சுரோத்திரம், செவி, வள் ஆகிய ௰-ம் காதின்பெயராம்.

௧-வது வாதகர்ணசூலைரோகம்.

இது, பீநசம், நீர்விளையாடல், தினவினால் செவியைக் குடைந்து சொறிதல் ஆகிய இவைகளால்பிறந்து, அதிகரிக்கின்றதிரிதோஷங்களினால் செவிநரம்புகளில் வியாபித்து, அம் மார்க்கத்தில் வேதனையைச்செய்யும். இதனால், காதுகளில்குத்தல், குறும்பிக்குள்நோவு, அந்த இடத்தில் மரத்தல், குளிர்ச்சியாகிய வஸ்துக்களைப் பிழிந்தால் ஸ்பரிசஞானந் தெரியாமை, நாட்சென்றுபக்குவப்படல், நோவுநிற்கில்கொஞ்சம் சலங் கம்முதல், சத்தங்கேளாமை, உள்ளில் பூச்சிகள்பறப்பதுபோல் ஒரு விகாரமாகத்தோற்றுதல் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

௨-வது பித்தகர்ணசூலைரோகம்.

இது, காதுகளில் எரிச்சல், வீக்கம், சீதளவஸ்துவைப்பிழிந்தால் இதவு, சுடுகை, சீக்கிரத்தில் பக்குவப்படல், அதில் நின்றும் குளிர்ச்சியாகியசலம்வடிதல், அது வடியாமல் உள்ளில் கம்மியகாலத்தில் நோவு நிற்குதல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௩-வது சிலேஷ்மகர்ணசூலைரோகம்.

இது, சிரசு, தாடை, கழுத்துப்பிடரி ஆகிய இடங்களில்கனத்தல், உஷ்ணவஸ்துவில் இச்சை, காதுகளில் அற்பநோவு, நமைச்சல், வீக்கம் என்னும் இக்குணங்களை உண்டாக்கும். இது பக்குவப்பட்டு உடையுங் காலத்தில், குழம்பாயும் வெண்மையாயும் சலம்வடியும்.

ச-வது திரிதோஷகர்ணசூலரோகம்.

இது, சுரம், கொஞ்சம் உஷ்ணவஸ்துவின் இச்சை, காதுவீக்கம், அதிகநோவு, சத்தங்கேளாமை என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

ரு-வது ரத்தகர்ணசூலரோகம்.

இது, பித்தகர்ணசூலயினுடைத்திரவத்தையும், வாதகர்ணசூலைக்குரிய சிலகுணங்களையும் உண்டாக்கும். அக்கினியும், செவியாணாசவல்லு முதலியவைகளால் அடியுண்டகாலத்தில், உள்ளில் ரத்தங்கூடிச்சேர்ந்து குத்தல்பிறந்தால், அபிகாதசூலை எனப்பேர்பெறும். அதற்கும் இக்குணங்களெல்லாம் உண்டு.

ஆக கர்ணசூலரோகம் ஐந்தும் முற்றியது.

இனி கர்ணநாதரோகமுதல் கர்ணவிதிரோகம் ஈறாக இருபது விதச்சங்கரரோகங்களைச் சொல்லுகிறோம்.

க-வது கர்ணநாதரோகம்.

இது காதுகளில்சத்தத்தை உண்டாக்குகின்ற நரம்புகளில் வாயுவு சேருங்காலத்தில் பிறக்கும். இதனால், காரணம் இல்லாமலே காதுக்குள் நானாவித சத்தமான நாதங்கள் உண்டாகும்.

உ-வது பாதிர்யரோகம்.

இது, வாயுவு, சிலேஷ்மத்துடன்கூடிச் சத்தநரம்பில் வியாபிக்கும்போது பிறக்கும். இதனால், காதுக்குள் சகலசத்தத்தையும் தெரிவிக்கின்ற நாதமானது கெடுதி அடையாதிருந்தாலும், அதற்கு வெளி ஓட்டம் இல்லாமையால் அதிகக்கூச்சலிட்டு உரக்கக்கூவினாலும் காதுக்குள் பேசுவதுபோல் பிரயாசத்தின்மேல் கொஞ்சம் சத்தங்கேட்கும்.

ஙு-வது பிரதிநாகரோகம்.

இது, வாயுவினால் சிலேஷ்மம் உலர்ந்து சத்தநரம்புகளில் சுற்றிக் கொள்ளுங் காலத்தில், பிறக்கும். இதனால், காதுகளில் அதிகநோவும் சத்தக்கெடுதியும் உண்டாகும். இது சத்தத்தை மிகவும் வெளிவிடாமல் கட்டுதலால் பிரதிநாகரோகம் எனப் பேர்பெற்றது.

நாகம் என்பது கட்டுதல்.

ச-வது கர்ணகண்டூரோகம்.

இது காதுக்குள் அதிக கபத்தினால் தினவை உண்டாக்கும்.

ரு-வது கர்ணசோபைரோகம்.

இது காதுக்குள் அதிக வீக்கத்தைமாத்திரம் உண்டாக்கும்.

சா-வது கர்ணபூதிரோகம்.

இது பித்தத்தினால் கபமானது கெடுதியை அடையுங்காலத்தில் பிறக்கும். இதனால், காதுக்குள் இருக்கும்குறும்பியின் சருமத்தில்நோவு,

ஒருவேளை இன்மை, மிகுந்ததுர்க்கந்தம், வியர்வைபோல் ஓயாதுசலம் வடிதல் என்னும் இக்குணங்கள் உண்டாகும். பூதி என்பது துர்க்கந்தம்.

௭-வது கர்ணவித்திரதிரோகம்.

இது செவிக்குளுண்டாகின்ற நமைச்சலால் சில கருவியைக் கொண்டு குடைவதனல் புண்ணுகுங்காலத்தில் பிறக்கும். இதனல், முற்கூறிய வித்திரிதிக்கட்டிகளுக்குள்ள குணங்களெல்லாம் உண்டாகும்.

௮-வது * கர்ணார்சோற்புதரோகம்.

இது, காதுகளின்மூலத்தில் மூலரோக உபத்திரவம்போல் உபத்திரவமும், துர்க்கந்தமும், செவிடும் உண்டாகும்படிக்குச் செய்யும்.

௯-வது கர்ணற்புதரோகம்.

இது, காதுகளில்முன்புசொன்ன கர்ணாரசோற்புத ரோககுணங்களுடன் செவிப்பிரதேசமெல்லாம் ஏகவீக்கத்தையும் உண்டாக்கும்.

௰-வது கர்ணகிருமிரோகம்.

இது காதுகளில் திரிதோஷச்சேர்க்கையால் பிறக்கும். இதனல், கிருமிகள்ஜனித்து, அந்த இடத்துச் சீழ், ரத்தம், மாமிசம் இவைகளைப் புசித்துக்கொண்டு அதிகவூரலையும் நோவையும் உண்டாக்கும்.

௰௧-வது கர்ணகூசிகாரோகம்.

இது காதுக்குள்வாயுவு தங்குங்காலத்தில் பிறக்கும். இதனல், செவியினது உட்கருவியாகியகுறும்பி முடங்கிக்கொண்டு, மிகுந்த உபத்திரவத்தை உண்டாக்கும். கூசிகா என்பது முடங்குதல்.

௰௨-வது கர்ணபிப்பலிரோகம்.

இது மாமிசத்தைப்பற்றிப்பிறக்கும் ; அப்போது, காதுக்குள் அர் மாமிசமானது, திப்பலிக்காயைப்போல், ஒன்றுயேனும் பலவாயேனும் உண்டாகிக்கொண்டே இருக்கும். பிப்பலி என்பது திப்பலிக்காய்.

௰௩-வது கர்ணபிதாரிகாரோகம்.

இது, திரிதோஷத்தினல் காதுக்குள் சிறிய நிலப்பூசினிக் கிழங்கைப்போல் மாமிசத்தைஉண்டாக்கும். இதனல், அந்த இடத்தில் நோவு, மரத்தல், வீக்கம், கடுகுத்தயிலம்போல்சலம்வடிதல், பொறுத்துப் பொறுத்துக்குத்துதல், குறும்பிமுடங்குதல் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.இதனைச்சஷ்குலிரோகம்என்பர். சஷ்குலி என்பது முறுக்கு.

---

* கர்ணம் என்பது காது ; அர்சம் என்பது மூலம் ; அற்புதம் என்பது உள்ளில் மிகுந்தநோவுடன் கூடியவீக்கம்.

௰சு-வது கரணபாலசோஷரோகம்.

இது காதுக்குளிருக்கும்நரம்புகளில்வாயுவுதங்கிச்சஞ்சரிக்கும்போது பிறக்கும். இதனால், நெற்றியானதுமிகவும் உலர்ந்துசுட்கத்தை அடையும்.

பாலம் என்பது நெற்றி ; சோஷம் என்பது சுஷ்கம்.

௰ரு-வது கர்ணதந்திரிகாரோகம்.

இது, காதுக்குள் பிசினைப்போல் நெகிட்சியாயும், இழுத்தால் அறுமல்தந்தியைப்போல் நீளுவதாயும் இருக்கின்ற சீழைஉண்டாக்கும்.

௰கூ-வது கர்ணபரிபோடகரோகம்.

இது வாயுவினால்காதுக்குளற்பவீக்கத்தையுடையகொப்பிளத்தைப் பிறப்பிக்கும். அது நெடுநாள் அப்படியேயிருக்கும். பின்பு விருத்திஅடைய ஆரம்பித்தால் சீக்கிரத்தில் விருத்தியடையும். இதனால் அம்மார்க்கத்தில் மிகு சிவப்புநிறமும் நோவும் உண்டாகும்.

௰எ-வது கர்ணோற்பாதரோகம்.

இது ரத்த பித்தரோகத்தினாலும், மெத்தவும் கனத்த காதணிகளினாலும், காதுகளில் வேர்க்குருபோல்சிறிய கொப்பிளத்தை உண்டாக்கும். அது பழுத்து உடைகையில், வீக்கம் அத்துடன்பரும்பருங்கொப்பிளங்கள் விஸ்தாரம் எழும்புதல், அவைகளில் வியர்வையும் ரத்தமும் சுடுகையும் பிறக்குதலுடனதிகநோவு, எரிச்சல் என்னுமிக்குணங்கள் உண்டாகும்.

உற்பாதம் என்பது அதிக உபத்திரவம்.

௰அ-வது கர்ணோன்மந்தரோகம்.

இது வாதசிலேஷ்மங்களினால்பிறக்கும். இதனால், செவிமார்க்கத்தில் நிலைபெற்றவீக்கம், அதில் நோவின்மை, அதிகநமைச்சல், சீக்கிரத்தில் வசப்படாமை என்னும் இக்குணங்கள் உண்டாகும். இது, வீக்கத்தைக் கொண்டு மந்தத்தை உண்டாக்கலால், கர்ணோன்மந்தரோகம் எனப் பேர் பெற்றது. இதற்குக் கல்லிகம் என்றும் ஒருபேருண்டு.

௰கூ-வது துக்கவர்த்தனரோகம்.

இது, காதுகுத்தும்போதுகைவசமறியாமல் நரம்பின்மார்க்கங்களில் குத்துவதனால் பிறந்து, வேதனையைச் செய்யும்; அப்போது நமைச்சல், எரிவு, வீக்கம், பக்குவகாலத்தில் நோவு என்னு மிக்குணங்களுண்டாகும்.

வர்த்தனம் என்பது அதிகரித்தல்.

உ௰-வது கர்ணலிகியரோகம்.

இது சிலேஷ்மத்துடன்கூடிய ரத்தத்தினால் காதுக்குள் கிருமிகளைப் பிறப்பிக்கும். அக்கிருமிகள் சிறுசிறு கொப்பிளங்களை உண்டாக்கும்.

இதனால், காதுகளில் வெகு தினவு, வியர்வை, வேதனை, அம்மார்க்கத்தில் எந்நேரமும் ஒரு கருவியைக்கொண்டு குடைதற்கே நினைப்பு என்னும் இக்குணங்கள் உண்டாகும். விகியம் என்பது துழாவிக்குடைதல்.

கர்ணரோக அசாத்தியாசாத்தியநிதானம்.

கர்ணரோகம் ௨௫-ல், கர்ணபிப்பலி, கர்ணபிதாரிகை, கர்ணகூசிகை இம்மூன்றும் அசாத்தியம். கர்ணதந்திரிமுதல் கர்ணவிகியம் ஈறாகிய ௬-ம் கஷ்டசாத்தியம். மற்ற ௰௬-ம் சாத்தியம். இவைகளை, வேளைரசம், தும்பைரசம், உள்ளிரசம், அபினி, பெருங்காயபாவனைத்திநீர், சுக்கடைப் பஞ்சு, நாகராதித்தயிலம், லாக்ஷாதித்தயிலம், மரீசித்தயிலம் முதலிய அவுஷதங்களினாலும் ஆயுதசிகிச்சைகளினும் வசப்படுத்தவேண்டும்.

ஆக கர்ணரோகம் ௨௫-ம் முற்றியது.

நாசிகாரோகபேதம்.

நாசிகளில் வாதபீநசரோகம் ஆதியாக நாசிகார்ப்புதரோகம் ஈறாக பதினெட்டுவிதரோகம் பிறக்கும்.

நாசிகாரோகலக்ஷணம்.

பனி, அப்பனிக்காற்று, எதிர்க்காற்று, நாசியில்தூசி அடைதல், உரத்த வார்த்தை, மிகுநித்திரை, நித்திரைப்பங்கம், தினமும் சீதளசலத்தில் மூழ்குதல், கண்ணீரை அடக்குதல், மேடுபள்ள ஸ்தானத்தில் படுக்குதல், தேசபேதசலபானம் வெகுதாகபானம், அதிக ஸ்திரிசையோகம், வாந்தியை அடக்குதல் ஆகிய இச்செய்கைகளினால், வாதபித்த சிலேஷ்மங்கள் அதிகரித்து, நாசியிற்சேர்ந்து பீநசரோகத்தைப் பிறப்பிக்கும். இது விருத்தி அடைந்தால், நாசியானது சுஷ்கத்தை அடையும். அன்றியும், சகலபீநசரோகங்களில் நின்றும் பிரயாசத்தின்மேல் சுவாசம்வருதல், அதி தும்மல், நாசியால் பேசுவதுபோல் பேசுதல், மூக்கில் துர்க்கந்தம் வீசுதல், தலைநோவு என்னும் இக்குணங்கள் உண்டாகும். இதனைச் சலதோஷம், சளி, நீரேற்றம், நீர்க்கோவை எனவும் சொல்வார்கள். மேலும் இந்த ரோகத்தினால் உண்டாகின்ற கோழையானது, உமிழும்படிக்கு வெளிப்படின், முன்னீர்க்கோவை என்றும், அதுவே உண்ணாக்குவழியாக விழுங்கும்படிக்கு விழுந்தால், பின்னீர்க்கோவை என்றும்சொல்லப்படும்.

௧-வது வாதபீநசரோகம்.

இது, வாயுலரல், தும்மல், நாசிஅடைப்புடன் அவ்விடத்திலும் பல்லிலும் காதிலும் சிரசிலும் நோவு, புருவங்களில் பூச்சிஊருவதுபோல் இருத்தல், குரற்கம்மல்என்னுமிக்குணங்களை உண்டாக்கும். இக்குணங்கள் வெகுநாள்பொறுத்து முதிரும்; அப்போது நாசித்துவாரத்தின்வழியாய்க் குளிர்ந்தும் கறுத்தும் சலம் வடிவதாக இருக்கும்.

உ-வது பித்தபீநசரோகம்.

இது, தாகம், சுரம், பிரமை, நாசியிற்கொப்பிளம், அடைப்பு, அத்துவாரத்தில் நின்றும் சுடுகையுடன் மஞ்சள் நிறத்தையும் தாம்பர நிறத்தையும்பெற்றுச் சளிவிழுதல் என்னுமிக்குணங்களை உண்டாக்கும்.

ங-வது சிலேஷ்மபீநசரோகம்.

இது,இருமல், அரோசகம்,இளைப்பு,வாந்தி,தேககனதி,வாயினிப்பு, நமைச்சல்,நாசி அடைப்புடன் அத் துவாரவழியாகத்தூயவெண்மையான சளிவிழுதல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

ச-வது திரிதோஷபீநசரோகம்.

இது முற்கூறிய வாதபீநசரோகம் முதலிய மூன்று பீநசரோக குணங்களையும் ஒரேகாலத்தில் உண்டாக்கும். இக்குணங்கள் காரணம் இல்லாமலே அதிகரிப்பதும் குறைவதுமாக இருக்கும்.

ரு-வது ரத்தபீநசரோகம்.

இது, நாசிக்குள் நமைச்சலுடன் திமிர், சிவந்தசளியும் ரத்தமும் ஒழுகுதல், கண்ணிலும் காதிலும் தினவு, சருமம் கண் முதலியவைகள் சிவக்குதல், உரிசைதெரியாமை என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

சு-வது துஷ்டபீநசரோகம்.

இது, முற்கூறிய ஐவகைப்பீநசங்களையும் தகுந்த சிகிச்சைகளினால் நிவர்த்திசெய்யாது வளர்த்தியகாலத்தில் பிறந்து, அவைகளுக்குள்ள வேதனைகளைப் பார்க்கிலும் அதிகவேதனைகளையும், இந்திரியங்களுக்கு எல்லாம்மிகு அயர்ச்சியையு முண்டாக்கும்; அப்போது, அக்கினிமந்தம், சுரம்,இருமல்,இளைப்பு,மார்பிலும்பக்கங்களிலும்நோவு, வாய்வறளலுடன் துர்க்கந்தம், நாசியில் வியர்வை, அதன் உட்புறம் வறளல், வீக்கம், அம்மார்க்கத்தில் நின்றும் சீழைப்போல் வெளுத்தும் சிவந்தும் உண்டை உண்டையாகச்சளிவீழ்தல், அந்தஇடத்தில் வெளுத்தும்மினுமினுத்தும் நீண்டும் இராநின்ற சிறுசிறு கிருமிகள்பிறக்குதல் என்னும் இக்குணங்கள் உண்டாகும். இது முதிர்ந்தால், தேகம் சுளுவாக இருத்தல், இருமல், ஆயாசம், சளி மஞ்சள்நிறத்துடன் கட்டியாகவிழுதல், நாவில் உரிசையும் மூக்கில் மணமும்தெரிதல் ஆகிய இக்குணங்கள் உண்டாகும்.

எ-வது அதிதும்மல் பீநசரோகம்.

இது, தீக்ஷண ஆக்கிராணம், சுவாசத்தைநிறுத்தல்,சூரியனைச்சிமிட்டாதுபார்க்குதல், வாதவஸ்துவைப்புசித்தல் ஆகிய இவைகளினாலும், நாசித்தண்டாகிய எலும்பில் கயிறு வைக்கோல் முதலியவைகளால் அடிபடுவதினாலும், வாயுவானது. அதிகரித்து, நாசி, வாய், கண், செவி,

ஆகியஇடத்துநரம்பின்துவாரங்களை அடைக்குங்காலத்தில்பிறந்து,எங்நேரமுந்தும்மலை உண்டாக்கும். இதனைப் புரிசட்சவபீநசம் எனக் கூறுவர்.

௮-வது நாசிகாசோஷரோகம்.

இது வாயுவு அதிகரித்து நாசியில்சேருங்காலத்தில் பிறக்கும். இதனுல், நாசித்துவாரங்கள்வறளல், அத்துவாரங்களின் பக்கத்துத் தண்டுகளில் முள்ளால் குத்துவதுபோல்குத்தல், கபாதிக்கம், பிரயாசத்தின்மேல் மூச்சுவருதல் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

௯-வது நாசிகாநாகரோகம்.

இது சிலேஷ்மமானது அதிகரித்து வாயுவைவிசைகொண்டெழுப்பி நாசித்துவாரங்களை அடைப்பிக்குங்காலத்தில் பிறக்கும்; அப்போது மூக்கடைப்பும், உசுவாச நிசுவாசத் தடங்கலும் உண்டாகும்.

௰-வது கிராணபாகரோகம்.

இது பித்தத்தைக்கொண்டு நுனிமூக்குப்பக்கங்களின் உட்புறத்தை வெந்ததுபோல்செய்விக்கும். இதனுல், அச்சருமத்திலும், மாமிசத்திலும், எரிச்சலுடன் கனநோவு உண்டாகும்.

௰௧-வது நாசிகா சிராவரோகம்.

இது சிலேஷ்மத்தைக்கொண்டு நாசி வழியாகக் கலங்கலில்லாத தெளிவை உடைய சுத்தசலத்தை விஸ்தாரம் வடியப்பண்ணும்.

௰௨-வது அபீநசரோகம்.

இது சிலேஷ்மத்தைக்கொண்டு மூக்கின்நரம்புகளை அடைப்பிக்கும். இதனுல், முன்புசொன்ன பீநசங்களைப்பார்க்கிலும் அதி உபத்திரவம் பிறக்குதல்,சுவாசம்விடும்போது குருகுரு என்னும் ஒருசத்தம், நாசியில் எங்நேரமும்வியர்வை என்னுமிக்குணங்களுண்டாகும். இது பழுத்தால், நாசியில் பிசுபிசுத்துக் குழம்பியமஞ்சள்நிறமான சளிவிழும்.

௰௩-வது நாசிகாதீபிகைரோகம்.

இது, நாசியை, அக்கினிச்சுவாலையில் பட்டவஸ்துவைப்போலவும், ரத்தங் குழம்பியதுபோலவும் செய்யும். இதனுல், அந்தஇடம்சிவக்குதல், உள்ளிலும் வெளியிலும் தொடக்கூடாதவேதனை,மூச்சானது புகையைப் போல் வெப்பத்துடன்வருதல் என்னும்இக்குணங்கள் உண்டாகும்.

௰௪-வது பூதிநாசிகாரோகம்.

இது வாத பித்த கபங்களானவை தாடையின் மூலத்தைப்பற்றுங் காலத்தில்பிறக்கும். இதனுல்,நாசியிலும் வாயிலும்துர்க்கந்தமுண்டாகும்.

௰௫-வது பூயாசிரநாசிகாரோகம்.

இது திரிதோஷத்தினாலும் அபிகாதத்தினாலும்பிறக்கும். இதனால், நாசியில்நின்றும் சீழானது ரத்தநிறமாகவிழுதலும், சிரசில்நோவுடன் எரிச்சலும் உண்டாகும். பூயம் என்பது சீழ்; ஆசிரம் என்பது ரத்தம்.

௰௬-வது நாசிகாபுடகரோகம்.

இது பித்தசிலேஷ்மங்களினால்நாசித்துவாரம்அடைபடுங்காலத்தில் பிறக்கும். இதனால், சளி என்கிற சிலேஷ்மமானது மெத்தவும் வறண்டு கட்டியாகவிழுவதுமன்றி, அவ்விடத்தில் கொப்பளமு முண்டாகும்.

௰௭-வது நாசாரசரோகம்.

இது, நாசியின்மூலத்தில், அங்குரம்போல் துர்மாமிசத்தை வளர்ப்பிப்பதும்தவிர, வாத கப பீநசகுணங்களையும் உண்டாக்கும்.

௰௮-வது நாசிகார்ப்புதரோகம்.

இது,நாசியில்வீக்கத்துடன்,பித்தகபபீநசக்குறிகளையுமுண்டாக்கும்

மேற்கூறிய நாசிகாரோகங்களை, க்ஷீரதாடிமி புஷ்பபாவனகிருதம், துலவத்திரி,கோமயச்சூரணம்,சுவாசாக்கிராணம், சௌரிமெழுக்குப்புகை முதலியரந்திரசிகிச்சைகளினாலும்,இஞ்சித்தயிலம்,கொம்பரக்குத்தயிலம், நாசிகாரோகநாசத்தயிலம் முதலிய தயிலசிகிச்சைகளினாலும், க்ஷாத்திர க்ஷாராக்கினி சிகிச்சைகளினாலும், நிவிர்த்திசெய்யவேண்டும்.

ஆக நாசிரோகம் ௰௮ - ம் முற்றியது.

முகரோகபேதம்.

எட்டு ஸ்தானங்களைப்பற்றி முகத்தில் ௭௫-விதரோகம் பிறக்கும். அவையாவன:—உதட்டில் ௰௧-ம், தாடைக்குநடுவில் ௧-ம், பல்லுகளில் ௰-ம், அப்பல்லுகளின்வேரில் ௰௩-ம், நாவில் ௬-ம், தாடைகளில் ௮-ம், தொண்டையில் ௰௮-ம், முகம்முற்றிலும் ௮-ம் ஆம்.முகம் என்பது வாய்.

முகரோகநிதானம்.

மீன், எருமைமாமிசம், பன்றிமாமிசம்,சைத்தியவஸ்து,முள்ளங்கிக் கிழங்கு, உளுத்தம்பருப்பு, தயிர்,பால், காடி, லவணவஸ்து, கரும்பு ரசம், காந்திய அன்னம் இவைகளை இடைவிடாது விசேஷமாக அகாலத்தில் புசித்தலினாலும்,ஒருக்களித்துப்படுத்தல்,பல்விளக்காதிருத்தல்,சலத்தைக் கொப்பளித்துக்கொப்பளித்துவிசையாகவுமிழல்,புகைப்பிடித்தல், வாந்தி செய்தல், விடாததலைநோவு ஆகிய இவைகளினாலும், வாதபித்தங்கள் சிலேஷ்மப்பிரதானமாகி அதிகரித்து, முகத்தில் இருக்கின்ற சப்த தாதுக்களிலும்பரவி, அந்தந்த இடங்களில் ரோகங்களைப் பிறப்பிக்கும்.

ஒஷ்டரோகபேதம்.

உதட்டில், கண்டோஷ்டம் ஆதியாக, சலாற்புதோஷ்டம் ஈருக பதினொரு வித ரோகம் பிறக்கும். ஒஷ்டம் என்பது உதடு.

க-வது கண்டோஷ்டரோகம்.

இது வாயுவு உதட்டில்சேரும்போது பிறந்து, அவ் வுதடுகளில் வெடிப்பை உண்டாக்கும். இதற்கு, அந்தோஷ்டம் என்றும் ஒரு பெயர் உண்டு. கண்டம் என்பது வெடிப்பு; அந்தம் என்பது நாசம்.

உ-வது வாதோஷ்டரோகம்.

இது,உதடுகளில்,கத்தியின்வாயைப்போல்கருக்கானவெடிப்புகளும், மரத்தலும், அதிகநோதலும் உண்டாகும்படிக்குச்செய்யும்.

௩-வது பித்தோஷ்டரோகம்.

இது, உதடுகளில், அதிகதீக்ஷணத்துடன் கடுகுப்பிரமாணத்தை யொத்து மஞ்சள்நிறத்தைப்பெற்ற கொப்பிளங்களை நிறைப்பிக்கும்; அப்போது அவைகளில் நின்றும் வியர்வைக்கசிவு உண்டாகும். அக்கொப்பிளங்கள் சீக்கிரத்தில் உடைவதாக இருக்கும்.

௪-வது சிலேஷ்மோஷ்டரோகம்.

இது, உதடுகளில், அதிக சீதளத்தைக்கொண்டு சகிக்கக்கூடாத நோவையும், வீக்கத்தையும், வெளுப்பான சிறியகொப்பிளங்களையும் உண்டாக்கும். அவைகளில் நின்றும் வியர்வைநீர்பெருகும்.

௫-வது சந்நிபாதோஷ்டரோகம்.

இது, உதடுகளில் வெடிப்பு, அதிகநோவு, மரத்தல், நானுவித கொப்பிளங்கள் எழும்புதல், அதில் மாறுதுசலம்வடிதல், துர்க்கந்தம், ஒருவேளைவாடுதல் ஒருவேளை உப்புதல், வறளல் என்னு மிக்குணங்களை உண்டாக்கும். இதில், வாதாதிகளுக்குள்ள குணங்களும் இருக்கும்.

௬-வது ரத்தோஷ்டரோகம்.

இது உதடுகளில் ரத்தம்பூசினதுபோல் நிறத்தை உண்டாக்கும். இதனுல், அவ்வுதடுகள் ரத்தத்தைக் கக்குவதுபோலவே இருக்கும்.

௭-வது அற்புதோஷ்டரோகம்.

இது, உதடுகளில், சிறியபேரீச்சங்காயை ஒத்த வீக்கத்தை எழுப்புவதும்தவிர அவைகளின்மேல் சிவந்தநிறத்தையும் உண்டாக்கும்.

௮-வது மாமிசோஷ்டரோகம்.

இது, உதடுகளில், சிவந்தமாமிசநிறத்தை ஒத்த விரணத்தை உண்டாக்கும்; அப்போது, அதில்நின்றும், அந்நிறத்தைப்பெற்ற கிருமி நெளிதலும், நமைச்சலும், நோவும் உண்டாகும்.

கூ-வது மேதோஷ்டரோகம்.

இது, உதடுகளில், எண்ணெய்யைத்தடவினதுபோல்மினுமினுத்த வீக்கம், அதில் கொழுப்பைப்போல் நல்லமிருதுவு, வியர்வை, மிகும்தினவு என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

ய-வது க்ஷதோஷ்டரோகம்.

இது, உதடுகளில் காயங்கள் படுங்காலத்தில் பிறந்து, அந்த இடங்களில்கட்டிகளைப்பிறப்பித்து, அவைகளை உடையும்படிக்குச்செய்து விரணமாக்கும், அல்லது வெடிப்பை ஆவது உண்டாக்கும் ; அப்போது அவ்வெடிப்புகள்கெட்டியாகமூடிக்கொண்டுதினவைத்தருவதாகஇருக்கும்.

யக-வது சலார்ப்புதோஷ்டரோகம்.

இது உதடுகளில் வாத சிலேஷ்மங்களினால் நீர்க்குமிழியைப்போல மாமிசத்தை வளரப்பண்ணும். இதனால், சலமும் சீழும் கசிந்தாலும் கசியும்.

மேற்கூறிய ஓஷ்டரோகங்களை எல்லாம், நவநீதக்களிம்பு, சுத்தநவநீதம், கனகமிருதாரபஸ்பம் இவைகளைப்பூசுவதினாலும், சீல்நீர், ஏலாதிச்சூரணம் முதலிய சிகிச்சைகளினாலும் வசப்படுத்தவேண்டும்.

ஆக ஓஷ்டரோகம் யக - ம் முற்றியது.

க-வது கண்டாலஜிரோகம்.

இது, எந்தப்பக்கத்துத் தாடையிலாவது, நீங்காத வீக்கத்தைப் பிறப்பிக்கும். இதனால், சுரமும், தாகமும் உண்டாகும்.

தந்தரோகபேதம்.

தந்தங்களில் தந்ததாளனரோகம் ஆதியாக தந்தப்பிரஹானரோகம் ஈறாக ய-விதரோகம் பிறக்கும்.

தந்தம் என்பது பல்.

க-வது தந்ததாளனரோகம்.

இது, உண்ணுகின்றரசாதிவஸ்துக்களின்பேதத்தால், வாயினிடத்தில் சீதளவாயுவு வியாபிக்கும்போது பிறந்து, உபத்திரவத்தைச் செய்யும். இதனால், பல்லில் உஷ்ணவஸ்துக்கள்படில்இதவும், சீதளவஸ்துக்கள்படில் வேதனையும், குத்தலினால் அப்பற்கள்பிளந்துபோவதுபோல் இருத்தலும் உண்டாகும்.

தாளனம் என்பது பிளத்தல்.

உ-வது தந்தஹரிஷரோகம்.

இது, பல்லுகளில், புளிப்புவஸ்துவாவது, சீதளவஸ்துவாவது, காற்றுவதுபடில், சகிக்கக்கூடாத கூசுதல், சிலவேளை அவ்வஸ்துக்களைப் புசிக்கில், மிகுந்த உபத்திரவம், அப்பல்லுகள் அசைவதுபோல் இருத்தல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும். இது கோசலப்புகையால்நீங்கும்.

௩-வது * தந்தபேதரோகம்.

இது, பல்லுகளில், குத்தலும் நோவுமுண்டாம்படிக்குச்செய்யும். இதனால், தந்தங்கள் விழுந்துபோவது போலவே இருக்கும்.

௪-வது தந்தசலனரோகம்.

இது, வாயுவைக்கொண்டுதந்தங்களை அசையும்படிக்குச்செய்வதும் அன்றி, எவ்விதமானமிருதுவஸ்துக்களைப் புசித்தபோதினு மதிகநோவை உண்டாக்கும். சலனம் என்பது அசைதல்.

௫-வது தந்தகாாளரோகம்.

இது, ஈறுகளைத் தேயும்படிக்குச்செய்து, தந்தங்களைவெளிப் புறத்தில் சாய்த்துவிடும். காாளம் என்பது தீக்ஷணம்.

௬-வது அதிதந்தரோகம்.

இது, பல்லுகளுக்கெல்லாம் உபத்திரவத்தை உண்டாக்கி, அப் பல்லுகளின்சந்தில் ஒருசிறியபல்லேமுளைப்பிக்கும். அது,நன்றுகமுளைத்து வெளியில்வந்தால், முன்பு இருக்கும் உபத்திரவம் நீங்குவதாயும், மற்றைப்பற்களுக்கெல்லாம் வன்மை வருவதாயும் இருக்கும்.

௭-வது தந்தசருக்காரோகம்.

இது, தந்தங்களைத்துலக்கமுறவிளக்காமையால், அச் சந்துக்களில் துர்க்கந்தத்தோடு சிலேஷ்மமலத்தைச் சேர்ப்பிக்கும். அம் மலமானது, வாயுவால் உலரப்பட்டு, மணற்போல் உதிர்ந்துகொண்டே இருக்கும்.

௮-வது தந்தகபாலிகாரோகம்.

இது, பற்களின் முனைகளைத் தேயப்பண்ணுவதுந்தவிர, அவைகள் வெடித்துப் பொடிபொடியாக உதிரும்படிக்கும்செய்யும். இது, பற்களின் சிரசைக்கெடுப்பதால், தந்தகபாலிகாரோகம் எனப் பேர்பெற்றது.

௯-வது தந்தசியாவரோகம்.

இது, ரக்த பித்த ரோகத்தைக்கொண்டும், வாததோஷத்தைக் கொண்டும், சிற்சிலதந்தங்களை நீலநிறத்தைப்போலவும் கரிநிறத்தைப் போலவும் செய்விக்கும். சியாவம் என்பது கருமை நிறமாம்.

௰-வது தந்தபிரஹூனரோகம்.

இது,வாதாதிகள் அதிகரித்துத் தந்தங்களிலும் அவைகளின் வேருகளிலும்வியாபித்து, அங்குள்ளதசையைச்சுட்கித்து உலர்த்தும்போது பிறக்கும்; அப்போது அச்சந்துக்களில் அன்னரசம் அடைந்துகெடுவதால், துர்க்கந்தம்வீசுதல், சிறுசிறு கொப்பிளங்கள்எழும்புதல், காரணம் இன்றி

* தந்தம் என்பது பல்; பேதம் என்பது வேறுபாட்டையுடையதாம்.

க௱-வது மேதோஷ்டரோகம்.

இது, உதடுகளில், எண்ணெய்யைத்தடவினதுபோல்மினுமினுத்த வீக்கம், அதில் கொழுப்பைப்போல் நல்லமிருதுவு, வியர்வை, மிகுந்த தினவு என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

ய-வது க்ஷதோஷ்டரோகம்.

இது, உதடுகளில் காயங்கள் படுங்காலத்தில் பிறந்து, அந்த இடங்களில்கட்டிகளைப்பிறப்பித்து, அவைகளை உடையும்படிக்குச்செய்து விரணமாக்கும், அல்லது வெடிப்பை ஆவது உண்டாக்கும்; அப்போது அவ்வெடிப்புகள்கெட்டியாகமூடிக்கொண்டுதினவைத்தருவதாகஇருக்கும்.

யக-வது சலாற்புதோஷ்டரோகம்.

இது உதடுகளில் வாத சிலேஷ்மங்களினால் நீர்க்குமிழியைப்போல் மாமிசத்தை வளரப்பண்ணும். இதனால், சலமும் சீழும் கசிந்தாலும் கசியும்.

மேற்கூறிய ஓஷ்டரோகங்களை எல்லாம், நவநீதக்களிம்பு, சுத்தநவ நீதம், கனகமிருதாரபஸ்பம் இவைகளைப்பூசுவதினாலும், கீல்தீநீர், ஏலாதிச்சூரணம் முதலிய சிகிச்சைகளினாலும் வசப்படுத்தவேண்டும்.

ஆக ஓஷ்டரோகம் யக - ம் முற்றியது.

க-வது கண்டாலஜீரோகம்.

இது, எந்தப்பக்கத்துத் தாடையிலாவது, நீங்காத வீக்கத்தைப் பிறப்பிக்கும். இதனால், சுரமும், தாகமும் உண்டாகும்.

தந்தரோகபேதம்.

தந்தங்களில் தந்ததாளனரோகம் ஆதியாக தந்தப்பிரஹானரோகம் ஈறாக ய-விதரோகம் பிறக்கும். தந்தம் என்பது பல்.

க-வது தந்ததாளனரோகம்.

இது,உண்ணுகின்றரசாதிவஸ்துக்களின்பேதத்தால்,வாயினிடத்தில் சீதளவாயுவு வியாபிக்கும்போது பிறந்து, உபத்திரவத்தைச் செய்யும். இதனால், பல்லில் உஷ்ணவஸ்துக்கள்படில்இதவும்,சீதளவஸ்துக்கள்படில் வேதனையும், குத்தலினால் அப்பற்கள்பிளந்துபோவதுபோல் இருந்தலும் உண்டாகும். தாளனம் என்பது பிளத்தல்.

உ-வது தந்தஹரிஷரோகம்.

இது, பல்லுகளில், புளிப்புவஸ்துவாவது, சீதளவஸ்துவாவது, காற்றாவதுபடில், சகிக்கக்கூடாத கூசுதல், சிலவேளை அவ்வஸ்துக்களைப் புசிக்கில், மிகுந்த உபத்திரவம், அப்பல்லுகள் அசைவதுபோல் இருத்தல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும். இது கோசலப்புகையால்நீங்கும்.

௩-வது * தந்தபேதரோகம்.

து, பல்லுகளில், குத்தலும் நோவுமுண்டாம்படிக்குச்செய்யும். தந்தங்கள் விழுந்துபோவது போலவே இருக்கும்.

௪-வது தந்தசலனரோகம்.

து, வாயுவைக்கொண்டுதந்தங்களை அசையும்படிக்குச்செய்வதும் எவ்விதமானமிருதுவஸ்துக்களைப் புசித்தபோதினு மதிகநோவை க்கும். சலனம் என்பது அசைதல்.

௫-வது தந்தகராளரோகம்.

து, ஈறுகளைத் தேயும்படிக்குச்செய்து, தந்தங்களைவெளிப் சாய்த்துவிடும். கராளம் என்பது தீக்ஷணம்.

௬-வது அதிதந்தரோகம்.

து, பல்லுகளுக்கெல்லாம் உபத்திரவத்தை உண்டாக்கி, அப் சிசந்தில் ஒருசிறியபல்லைமுளைப்பிக்கும். அது,நன்றாகமுளைத்து வந்தால், முன்பு இருக்கும் உபத்திரவம் நீங்குவதாயும், பற்களுக்கெல்லாம் வன்மை வருவதாயும் இருக்கும்.

௭-வது தந்தசருக்கராரோகம்.

து, தந்தங்களைத்துலக்கமுறவிளக்காமையால், அச் சந்துக்களில் நதோடு சிலேஷ்மமலத்தைச் சேர்ப்பிக்கும். அம் மலமானது, ம உலரப்பட்டு, மணற்போல் உதிர்ந்துகொண்டே இருக்கும்.

௮-வது தந்தகபாலிகாரோகம்.

து, பற்களின் முனைகளைத் தேயப்பண்ணுவதுந்தவிர, அவைகள் ரப் பொடிபொடியாக உதிரும்படிக்கும்செய்யும். இது, பற்களின் கெடுப்பதால், தந்தகபாலிகாரோகம் எனப் பேர்பெற்றது.

௯-வது தந்தசியாவரோகம்.

து, ரக்த பித்த ரோகத்தைக்கொண்டும், வாததோஷத்தைக் டும், சிற்சிலதந்தங்களை நீலநிறத்தைப்போலவும் கரிநிறத்தைப் ம் செய்விக்கும். சியாவம் என்பது கருமை நிறமாம்.

௰-வது தந்தபிரஹானரோகம்.

து,வாதாதிகள் அதிகரித்துத் தந்தங்களிலும் அவைகளின் வேரு ம்வியாபித்து, அங்குள்ளதசையைச்சுட்கித்து உலர்த்தும்போது ; அப்போது அச்சந்துக்களில் அன்னரசம் அடைந்துகெடுவதால், டம்வீசுதல், சிறுசிறு கொப்பிளங்கள் எழும்புதல், காரணம் இன்றி

---

* தந்தம் என்பது பல் ; பேதம் என்பது வேறுபாட்டையுடையதாம்.

நோவு அதிகரித்தல், கிருமிகள்நெளிதல்,அக்கிருமிகள்நெளியாதகாலத்தில் நோவும் தினவும்மட்டிடல், ஈறுவீங்குதல், பல்லுகள் அசைதல் என்னும் இக்குணங்கள் உண்டாகும். இது, பல்லுகளை விழாமல் நிறுத்தி உபத்திரவத்தையும் கிருமிகளையும் பிறப்பித்து, ஈறுகளில் சீழும் ரத்தமும் வடியும்படிக்குச் செய்வதால்,கிருமிதந்தரோகம் எனவும் சொல்லப்படும்.

இவைகளை, ஓமத்திநீர்,அர்க்கக்ஷாரநாளிகாசூரணம்,கல்நார்பஸ்மம், தசனப்பொடி, செங்கல், உளுத்தமாவு முதலிய சிகிச்சைகளைக் கொண்டு விலக்கவேண்டும். பிரஹூனம் என்பது மிகவுங் குறைதல்.

ஆ தந்தரோகம் ௰-ம் முற்றியது.

தந்தமூலரோகபேதம்.

பல்லுகளின் வேரில், முற்கூறிய காரணங்களினுல், சிதாதரோகம் ஆதியாக க்ஷததந்தமூலரோகம் ஈருக ௰௩-விதரோகம் பிறக்கும்.

க-வது சிதாதரோகம்.

இது, சிலேஷ்மமும் ரத்தமும்பல்லின்வேரில்சேரும்போதுபிறந்து, அவ்வேர்வழியாகத் துர்க்கந்தரத்தத்தை ஒழுகச்செய்யும். இதனுல் அங்குள்ள மாமிசம் கரைவதன்றியும், அவ்வேர்கள் வெளுத்து வெளியில் பிரகாசமாகத்தெரியும். சிதம் என்பது வெண்மை; அதம் என்பது நாசம்.

உ-வது உபகிருசரோகம்.

இது ரத்தபித்தங்கள் பல்லின்வேரில்சேர்ந்தங்குள்ளமாமிசத்தைச் சுடுகையாக்கும்போது பிறக்கும். இதனுல், அவ்விடத்தில் நமையுடன் ரத்தம் கரக்குதல்,அந்த ரத்தம் வெளியில்வாராமல் உள்ளிலடங்கிநின்முல் ஈறுவீங்குதல், பல்லுகள் அசைதல், வாயில் துர்க்கந்தம்வீசுதல் என்னும் இக்குணங்கள் உண்டாகும். கிருசம் என்பது இளைத்தல்.

௩-வது தந்த புப்புடரோகம்.

இது, இரண்டுபல்லின்நடுவிலாவது, மூன்றுபல்லின் நடுவிலாவது, இலந்தைக்கொட்டைப் பிரமாணமாக ஈறை வளர்ப்பித்து, அதை வெந்த மாமிசம்போற்செய்து நோவைஉண்டாக்கும். புப்புடம் என்பது வீக்கம்.

ச-வது தந்த வித்திரதிரோகம்.

இது, ரத்தத்தினுலும் திரிதோஷத்தினுலும் பிறந்து,தந்தங்களின் உட்புறச்சதையிலாவதுவெளிப்புறச்சதையிலாவதுவீக்கமானகட்டிகளைப் பிறக்கும்; அப்போது அவைகள் நோவதும் எரிவதும் பழுத்து உடைவதும் சீழ் ரத்தம் ஒழுகுவதுமாக இருக்கும்.

ரு-வது தந்த சுஷீரரோகம்.

இது,ரத்தபித்தத்தினுல்பிறந்து,ஈறுகளைவீங்கப்பண்ணி,அவைகளில் சிறுசிறு துவாரங்களை உண்டாக்கும்; அப்போது அந்த இடத்தில்

நின்றும் சொள்ளுச்சலம்போல் சலம்வடிதலும், அம் மாமிசத்தில் கெடுதியும் உண்டாகும். சுஷீரம் என்பது துவாரம்.

௬-வது தந்த மகாசுஷீரரோகம்.

இது, முன்புசொல்லியகுணங்களை உண்டாக்குவதுந்தவிர, உடம்பில் சுரம், பல்லின்மாமிசம் நையுதல், அவ்விடத்தில் நின்றும் சீழும் ரத்தமும் வடிதல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௭-வது அதிமாமிசரோகம்.

இது, பல்லின் வேர்ச் சந்துக்களில், ஆணியையொத்த கட்டிகளைப் பிறப்பிக்கும். இதனால், காதினும் தாடையிலும் நோவுண்டாகும். பின்பு சுரமும் பிறக்கும். அக் கட்டிகள் உடைந்தால் மரணமே.

௮-வது தந்த விதர்ப்பரோகம்.

இது தந்தமூலச் சதையைக் கரையப்பண்ணும். இதனால், பற்கள் அசைவதும் நோவதுமாக இருக்கும். விதர்ப்பம் என்பது வித்தியாசம்.

௯-வது வாத தந்த மூலரோகம்.

இது பல்லின் வேர்களையும் அங்குள்ளரத்தங்களையும் கறுக்கப் பண்ணும். இதனால் அந்த இடத்தில்காற்றுப்படில், கூசுவதாக இருக்கும்.

௰-வது பித்த தந்த மூலரோகம்.

இது, பித்தமானது தந்தங்களின் வேரில் பிரவேசிக்கும்போது பிறந்து, அவ்வேர்களையும் அதில் உள்ள ரத்தத்தையும் மஞ்சள் நிறமாக்குவதுந்தவிர, எரிச்சலையும் உண்டாக்கும்.

௰௧-வது சிலேஷ்ம தந்தமூலரோகம்.

இது, பல்லின்வேர்களை வெளுப்பாக்கி அவ்விடத்தில் மாறாது சீழ் வடியச்செய்யும். இதனால், சிலிசிலிப்பும் உபத்திரவமும் உண்டாகும்.

௰௨-வது திரிதோஷ தந்தமூலரோகம்.

இது, வாதமுதலிய மூன்றுரோகங்களுக்குள்ள குணங்களையும், அவைகளால் பிறக்கும் உபத்திரவங்களையும் உண்டாக்கும்.

௰௩-வது க்ஷத தந்தமூலரோகம்.

இது, பல்லுகளைப்பிடுங்குதல், அல்லது அவைகள் வேறுமுகாந்தரமாக அடியுண்டுமுறியுதல் முதலியவற்றால், அவ்வேர்களறுபட்டுக் காயம் உண்டாகும்போது பிறக்கும்; அப்போது ஈறிலும் தாடையிலும், நோவுடன்வீக்கம் 'தெத்தல், நரம்பின்வழிகளில்சிலேயோடல், சுரம்முதலிய குணங்கள் உண்டாகும்.

ஆக தந்தமூலரோகம் ௰௩-ம் முற்றியது.

அசாத்திய தந்தரோகநிதானம்.

எவ்விதத் தந்தரோகத்திலாவது நீண்டிருக்கின்றவேரின்நுனிகளில்
விரணம் பிறந்தாலும், சீழ்வடிந்தாலும், இலேசடைந்தாலும், சருமமும்
மாமிசமும் அழுகிவிழுந்தாலும், அசாத்தியமாம். இக்குணங்கள் இல்லாத
ரோகம் சாத்தியமாம். இதனைத் தந்தருடி என்றுஞ்சொல்வர்.

மேற்சொல்லிய தந்தமூலரோகங்களை, கண்டங்கத்தரி விதைப்புகை
லவுங்கப்பட்டைத்தயிலம், மரக்காரை ஆகியவை சம்பந்தியவியக்குடிநீ
முதலிய சிகிச்சைகளினால் நிவர்த்திசெய்யவேண்டும்.

ஜிக்வாரோகபேதம்.

நாவில், வாதஜிக்வாகண்டகரோகம் ஆகியவை உபஜிக்வாரோக
ஈறாக ௬-விதரோகம் பிறக்கும். ஜிக்வா என்பது நாக்கு

க-வது வாதஜிக்வாகண்டகரோகம்.

இது, நாக்குமுழுவதும் வெடித்தல், அவ்வெடிப்புகளில் முள்ளுக
தைத்ததுபோல் அருகுதல், மரத்தல், பழுத்த இலையைப்போலிருத்த
என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

உ-வது பித்தஜிக்வாகண்டகரோகம்.

இது நாக்குமுற்றிலும் காங்கையைக்கொண்டு வெப்பாக்கி, ஆதி
மாமிசநிறமான சிறுசிறுகொப்பிளங்களை உண்டாக்கும்; அப்பொது நாவி
மழுங்கியமுள்ளுகள் நிறைந்ததுபோல் இருக்கும். இதனை அகத்திய
முதலிய பதினெண்ணாட்டுச் சித்தர்கள்செய்த சாஸ்திரங்களில், கந்தகா
ரோகமென்றும்; இது மூலாதாரம், நாபி, இருதயம், கண்டம், நாக்
ஆகிய இவ்வைந்துஸ்தானங்களைப்பற்றிப்பிறக்கின்றதென்றும் : அவ்வ
இடங்களைப்பற்றி, ஐந்துவிதப் பெயர்பெறுமென்றும் சொல்லப்ப
கின்றது. இது அட்சாம் என உலகத்தில் சாதாரணமாக வழங்கப்ப
கின்றது. இந்தரோகம் கந்தகாளி நெய்யினால் நிவிர்த்தியாகும்.

௩-வது சிலேஷ்மஜிக்வாகண்டகரோகம்.

இது நாவெல்லாம்இலவமுள்ளுகளைப்போல்தடித்தும் வெளுத்து
நெருங்கியும் நோவைத்தருகின்றதான கொப்பிளங்களை உண்டாக்கும்.

௪-வது ஜிக்வாலஜகரோகம்.

இது, சிலேஷ்ம பித்தங்களைக்கொண்டு, நாவின்கீழ் வீக்கத்தை
உண்டாக்கும். இதனால், நாவுமரத்துத்தடித்துஉயருவதுமன்றி, அவ்வீக்
பழுத்தால் புலால் நாற்றம்வீசுவதும் மாமிசங்கரைவதுமாக இருக்கும்.

௫-வது அதிஜிக்வாரோகம்.

இது அடிநாவின்கீழ் நுனிநாவைப்போல் தடித்த வீக்கத்தை உண்டாக்கும். இதனால், மரத்தல், விருத்தல், அந்த இடத்தில்சிறுசிறு முளைகளைப்போல்கொப்பிளம் எழும்புதல், தினவும் நோவும் அதிகரித்தல், வாயில்காங்கையான சொள்ளுச்சலம்வடிதல், புசிக்கக்கூடாமை என்னும் இக்குணங்கள் உண்டாகும். இந்த ரோகத்தினால் வார்த்தையுங்கெடும்.

௬-வது உபஜிக்வாரோகம்.

இது உண்ணாக்கில் வீக்கத்தை உண்டாக்கும்; அப்போது முன்பு சொல்லிய அதிஜிக்வா ரோககுணங்களும், இருமலும், அருருகுதலும், உண்டாகும். இதனை உண்ணாக்கென்பர்.

இவை குங்குமம், வெள்ளுள்ளித்தயிலம்முதலிய அவுஷதங்களால்தீரும்.

ஆக ஜிக்வாரோகம் ௬-ம் முற்றியது.

தாலுரோகபேதம்.

நாடைக்கு உட்புறத்தில், தாலுபிடகம், தாலுகளசுண்டி, தாலு சம்ஹதி, தாளார்ப்புதம், தாலுகச்சபம், தாலுபுப்புடம், தாலுபாகம், தாலுசோஷம் என ௮-வித ரோகம்பிறக்கும். தாலு என்பது தாடை.

௧-வது தாலுபிடகரோகம்.

இது, வாதாதிக்கத்தைக்கொண்டு, தாடைக்கு உட்புறமாமிசத்தில் சுறசுறப்பான தடிப்பையும், வெளியில்கடினத்துவமான வீக்கத்தையும் உண்டாக்கும். இதனால், வாயில்சொள்ளுச்சலம் வடிதலும், அவ்விடத்தில் கொப்பிளம் எழும்புதலும், தாளின் அடியில்நோதலும் உண்டாயிருக்கும்.

௨-வது தாலுகளசுண்டிகாரோகம்.

இது தாடையின் உட்புறமூலத்தில் உண்ணாக்கைப்போல் தடித்தலை உண்டாக்கி, புலால்வாசக்கோழையை விழப்பண்ணும். இதனால், தாடைமீதுமினுமினுப்புடன் மிருதுவானவீக்கம் எழும்பித் தொங்குதல், புசித்தஅன்னபானாதிநாசியால்விழுதல், கண்டத்தின்மார்க்கம் அடைபடல், தாகம், வாந்தி, இருமல் என்னும் இக்குணங்களுண்டாகும்.

௩-வது தாலுசம்ஹதிரோகம்.

இது தாடையினது உட்புறநடுவில் நோவில்லாமல் துர்ம்மாமிசம் வளரும்படிக்குச்செய்யும். இது, தாடையின் உட்புறத்தையெல்லாம் துர்ம்மாமிசத்தைக்கொண்டு நிறைப்பதால், தாலுசம்ஹதிரோகம் எனப் பேர்பெற்றது. சம்ஹதி என்பது சமூகம்.

௪-வது தாளார்ப்புதரோகம்.

இது தாடைக்கு உட்புறத்தில், விரிந்ததாமரைப்பூவைப்போல் வட்டவடிவான சிவந்தவீக்கத்தை உண்டாக்கும்.

ரு-வது தாலுகச்சபரோகம்.

இது சிலேஷ்மத்தைக்கொண்டு, தாடையின்நடுவில் ஆமையினது உருவத்தைப்போல் தடிப்பை உண்டாக்கும். அது நாளுக்குநாள் கபத்தினால் அதிகரிப்பதும் நோவதுமாக இருக்கும்.

சு-வது தாலுபுப்புடரோகம்.

இது தாடையின் உட்புறநடுவில், சிலேஷ்மத்தினாலும், மேதோதாதுவினாலும் இலந்தைப்பழப் பிரமாணரூபங்களை ஒத்ததாய் நோவின்மையான வீக்கத்தை உண்டாக்கி, அதனைநிலைக்கப்பண்ணும்.

எ-வது தாலுபாகரோகம்.

இது பித்தத்தைக்கொண்டு,தாடையின்உட்புறத்தை விரணமாக்கி, அதில் நின்றும் சீழும், நோவும் உண்டாகும்படிக்குச் செய்யும்.

அ-வது தாலுசோஷரோகம்.

இது வாதத்தினாலும் பித்தத்தினாலும் சுரத்தினாலும்தேகம் மிகவும் மெலிந்தகாலத்தில் பிறந்து, ஒரு தாடையையாவது இரண்டு தாடையையுமாவது உலர்த்தி, ஒடுக்குவிழுந்ததுபோல்செய்யும். இதற்குப் பாதரசமருந்து நன்மையைத்தரும்.

ஆக தாடைரோகம் அ-ம் முற்றியது.

கண்டரோகபேதம்.

கழுத்தில், கண்டவாதரோகணிரோகம் ஆதியாக நாதக்கினரோகம் ஈறாக ௰அ-வித ரோகம்பிறக்கும். கண்டம் என்பது கழுத்து.

க-வது கண்டவாத ரோகணி.

இது கழுத்திற்கு உட்புறத்தில் துர்ம்மாமிசமுளைகளைமுளைப்பித்து, அம்மார்க்கத்தைஅடைத்து, நாவை ஆடவொட்டாமற்செய்யும். இதனால், நெஞ்சும் வாயும் உலரல், கண்டத்திலும் செவியிலும்நோவு என்னும் இக்குணங்கள் உண்டாகும். ரோகணி என்பது முளைக்குதல்.

உ-வது கண்டபித்த ரோகணி.

இது கழுத்திற்கு உட்புறத்தில், மூங்கில்போத்தைப்போல் துர்ம்மாமிசத்தைப் பிறப்பிக்கும். இதனால், அந்த இடத்தில் அதிகநோவுடன் புகைகம்மியதுபோலிருத்தல், மேலில்தொடக்கூடாத உபத்திரவம், சுரம், காங்கை, தாகம், சோருதல் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

ங-வது கண்டசிலேஷ்ம ரோகணி.

இது கண்டத்திற்கு உட்புறத்தில், தடித்த துர்ம்மாமிசத்தைப் பிறப்பிக்கும். இதனால், ஆமணக்கின்நெய்யைப்போல் வாயில்மாறாது சலம்வடிதலும் தேகவெளுப்பும் உண்டாகும்.

௪-வது கண்ட ரத்த ரோகணி.

இது, கண்டத்திற்கு உட்புறத்தில் துர்ம்மாமிசத்தைப் பிறப்பித்து, அதில் கரிநெருப்பை ஒத்த கொப்பிளங்களை நிறைப்பிக்கும். இதனால், காதுக்குள்நோவும் பித்தரோகணி ரோககுணங்களும் உண்டாகும்.

௫-வது கண்ட திரிதோஷ ரோகணி.

இது, கண்டத்திற்கு உட்புறத்தில்கண்டவாதரோகணி,கண்டபித்த ரோகணி,கண்டசிலேஷ்மரோகணி என்னும் இவைகளுக்குள்ள குணங்களை யெல்லாம் உண்டாக்கும். இந்தரோகம் நாட்சென்று பழுத்துடையும்.

௬-வது கண்டசாலிக ரோகம்.

இது, சிலேஷ்ம கதியை அடைந்த வாதபித்தத்தைக் கொண்டு கழுத்திற்கு உட்புறத்தில் சாதிக்காயைப்போல் திரட்சியான வீக்கத்தை உண்டாக்கி, அதன்மேல்நெல்வாலை ஒத்த முள்ளுகளை முளைப்பித்து, கழுத்தைத்திருப்பக்கூடாமையாகச்செய்யும். சாலிகம்என்பதுநெல்முள்ளு

௭-வது கள பிருந்தரோகம்.

இது, கழுத்திலிரண்டுபக்கங்களிலும்,சமூகமாயும் வட்டவடிவாயும் உயர்ந்ததாயும் இராநின்ற துர்ம்மாமிசத்தை வளர்ப்பிக்கும். இதனால், அக் கண்டத்துவாரம் அடைபடுதல், தாகம், சுரம் என்னும் இக்குணங்கள் உண்டாகும். பிருந்தம் என்பது கூட்டம்.

௮-வது துண்டகேரிகாரோகம்.

இது,கண்டத்திற்குட்புறத்து அநுசந்திகளில்பருத்திக்காயைப்போல் கெட்டியாய் மினுமினுத்த வீக்கத்தை உண்டாக்கும். இதனால், அற்ப உபத்திரவம் உண்டாகும். துண்டகேரிகா என்பது பருத்திக்காய்.

௯-வது களஓகரோகம்.

இது கண்டத்திற்கு உள்ளிலும் வெளியிலும் பார்ப்பதற்குப் பயங்கரமானவீக்கத்தை உண்டாக்கும். இதனால், அம்மார்க்கத்தில் ஆப்பு அடித்ததுபோல் இருத்தல், சிரோபாரம், சோம்பல், சொள்ளுச்சலம் வடிதல், சுரம் என்னும் இக்குணங்கள் உண்டாகும். இதுவே, இன்னும் நீளமாக உயர்ந்து அதிகநோவில்லாமல் கழுத்தைச்சுற்றிலும் வீங்கினால், வலையரோகம் எனப் பெயர்பெறும். ஓகம் என்பதுசமூகம்.

௰-வது அலாபுகரோகம்.

இது கழுத்திற்குட்புறத்தில் திரிதோஷத்தால் புடைகள்பிறப்பது போல் அடியகன்ற சிறியசுரைப்பிஞ்சை ஒத்தமாமிசகண்டத்தை ஒன்று யேனும் பலவாயேனும்பிறப்பிக்கும். இதனால், அதிநோவும், பிரயாசை யின்மேல் சுவாசமும் உண்டாகும். அலாபுகம் என்பது சுரைக்காய்.

௧௧-வது * சதக்கினிரோகம்.

இது, கண்டத்திற்கு உட்புறத்தில்விருத்தியடைந்து, துர்ம்மாமிசத்தைக்கொண்டு, பலாமுள்ளுகளை ஒத்த முள்ளுகள் நிறையப்பட்ட பெரிய இருப்புத் தண்டத்தைப்போல் கழுத்தை வீங்கப்பண்ணும். இதனால் மிகுந்தஉபத்திரவமும் தாகமும் சுரமும் தலைநோவும்நீங்காமலே இருக்கும்.

௧௨-வது களவித்திரதிரோகம்.

இது கழுத்துமுற்றிலும் விரைவில் வீக்கத்தை உண்டாக்கும். இதனால், அதிகநோவும், பழுத்தால் துர்க்கந்தச்சீழும் உண்டாகும்.

௧௩-வது களார்ப்புதரோகம்.

இதுநாவின்முடிச்சிலும்அடிக்கழுத்திலும்,நோவில்லாதவீக்கங்களை உண்டாக்கும். அவை திரிதோஷத்தால் பழுக்காமலே இருக்கும். ஒரு வேளைபழுத்து உடைந்தால், அதில் நின்றும் குழம்பான ரத்தம் ஒழுகும்.

௧௪-வது வாத களகண்டரோகம்.

இது, வாதகபத்தினாலும் மேதோதாதுவினாலும், கழுத்திற்கும் தாடைக்கும் இடைவெளியில் வளியைப்போல் நோவில்லாத மாமிச மொத்தையைத் தொங்கப்பண்ணும். இது எந்தப் பக்கத்திலாவது பிறக்கும். இதனைப் புரைக்குழை என்பர். ¶ கண்டம் என்பது தாடை.

௧௫-வது பித்த களகண்டரோகம்.

இது கண்டத்திற்குஉள்ளிலும் தாடைக்குஉள்ளிலும் விரணமான புடைகளைப் பிறப்பிக்கும். அப்புடைகள் கருமையாயும் செம்மையாயும் படரும். இதனால்,நோவு அதிகரிப்பதும் உரிசைகெடுவதுமாக இருக்கும்.

௧௬-வது சிலேஷ்ம களகண்டரோகம்.

இது முற்கூறிய ஸ்தானங்களில் மிகுவிரணமானபுடைகளைப் பிறப்பிக்கும். ஆனால், அப்புடைகள்வெளுத்துச்சில்விட்டுநிலைத்துநமைச்சலுடன் விருத்தி அடைவதும், வாயில் இனிப்புண்டாவதுமாக இருக்கும்.

௧௭-வது மேதோ களகண்டரோகம்.

இது, மேற்சொன்ன ஸ்தானங்களில்,விரணப்புடைகளைப்பிறப்பிக்கும். அப்புடைகளோ என்றால், அதிகரிப்பதும் சாந்தியை அடைவதுமாக இருக்கும். இதனால், தேகம்ஸ்தூலித்தல், வாயால்கோழைவிழுதல், கண்டத்தில்ஒருசத்தம், ஈனத்தொனி என்னும்இக்குணங்கள்உண்டாகும்.

---

*சதக்கினி என்பது முட்கள்நிறைந்த ஒருவித இருப்புத்தண்டமாம். இதனை ஆயுத சாஸ்திரத்திற் கண்டுகொள்க.

¶ இதிலுள்ள ககரம், சமஸ்கிருதபாஷையில் ககரவருக்கத்தின் மூன்றாவது எழுத்தாம்.

௰௮-வது * சுரக்கினிரோகம்.

இது, கண்டத்திக்குள்ளிலும் தாடைக்குள்ளிலும் படருகின்ற விரணப்புடைகளைப்பிறப்பித்து, தொனியை அடக்கும். அப்புடைகளோ என்றால், அதிகரிப்பதும்சாந்தியைஅடைவதுமாயிருக்கும். இதனால், நோவுநின்று நித்திரைபிடிக்கில் பெருமூச்சுவிடுதல், கபங்கக்கல், நெஞ்சுலரல், ஈனத்தொனி என்னும் இக்குணங்கள் உண்டாகும். மேற்கூறிய கண்டரோகங்களை, ரசத்தயிலம், கந்தக ரசாயனம், பாதரசமெழுக்கு, சாதிலிங்கப்புகை முதலிய அவுஷதங்களைக்கொண்டும், விரணச் சிகிச்சைகளைக்கொண்டும் வசப்படுத்தவேண்டும்.

ஆக கண்டரோகம் ௰௮-ம் முற்றியது.

சர்வமுகரோகபேதம்.

வாய்முழுதிலும் வாத முகபாகரோகம் ஆதியாக ஊர்த்துவகுதி ரோகம் ஈறாக எண்வகை ரோகம் பிறக்கும்.

௧-வது வாத முகபாகரோகம்.

இது, வியானவாயுவைக்கொண்டு, வாய்க்குள்சிவப்பானவிரணத்தைப் பிறப்பிக்கும் ; அப்போது அவைகள் அடங்கி அடங்கி உண்டாவதும், அவ்விரணத்தால் உதடுகள்சொறசொறத்து உப்புவதும், நாவு கனத்து வெளுத்து வெடிப்பதும், இதனால் காரம் படக்கூடாமல் வாயானது முள்ளுப் பொத்துக்கொண்டதுபோல் அருகுவதுமாக இருக்கும்.

௨-வது பித்த முகபாகரோகம்.

இது, பித்தத்தைக்கொண்டு, வாய்க்குள் நெற்பானை ஆவியைப்போல் புகையை எழுப்பும். இதனால், வாயில் அடிபட்டகாயம்போல் சகிக்கக் கூடாத நோவும் நாவில் கசப்பும் ஒருவேளை உப்புக்கரிப்பும் உண்டாகும்.

௩-வது சிலேஷ்ம முகபாகரோகம்.

இது, கபத்தைக்கொண்டு, நாவில்வழுவழுப்பானவிரணத்தைப்பிறப்பிக்கும். இதனால், நாவில்தினவும் புண்ணும், வாயிலினிப்பும் உண்டாகும்.

௪-வது திரிதோஷ முகபாகரோகம்.

இது வாத பித்தம் சிலேஷ்மம் என்னும் மூன்று முகபாக ரோகங்களுக்குள்ள குணங்களையெல்லாம் வாயில் உண்டாக்கும்.

௫-வது ரத்த முகபாகரோகம்.

இது பித்த முகபாகரோகத்தை ஒத்திருக்கும். ஆனால், வாய்க்குள் ரத்தம்போல் சிவந்தநிறமாத்திரம் ஒன்று அதிகமாக உண்டாகும்.

---

* சுரம் என்பது தொனி; கினி என்பது அடித்தலையுடையது .

சு-வது பூதியாசியரோகம்.

இது நெஞ்சில் துர்க்கந்தத்தை உண்டாக்குவதும் அல்லாமல், பற்களைக் கறுக்கச்செய்து, குச்சியினால் பல்விளக்கக்கூடாத நோவையும் அருவருப்பையும் மாறாது உண்டாக்கும்.

எ-வது கண்டார்ப்புதரோகம்.

இது கண்டத்திற் பிறந்தவிரணவேகம் கபாலத்தில் அடிபடுவதால் பிறக்கும். இதனால், அங்கிருக்கும் கபமாகியகோழைச்சலம் கறுத்தாவது வெளுத்தாவது நாசிவழியாலேனும் தொண்டைவழியாலேனும் மாறாது விழுந்துகொண்டே இருக்கும். இது ரணச்சிகிச்சையாலும் தீரும்.

அ-வது ஊர்த்துவகுதரோகம்.

இது, தொப்புளின்கீழிருக்கும் அபானவாயுவானது, மூலரோகத்தினாலாவது, குன்மரோகத்தினாலாவது, சிலேஷ்மரோகத்தினாலாவது, மேல்நோக்கி எழும்போது பிறக்கும். அவ்வாயுவு மல சலாதிகளில் தோய்ந்து மேல்நோக்கலால், வாயில் துர்க்கந்தம் உண்டாகிக்கொண்டே இருக்கும். இது,வாய்க்குக் குதத்தொழிலைப்புரிவிப்பதால், ஊர்த்துவகுத ரோகம் எனப் பேர்பெற்றது.

ஆக சர்வமுகரோகம் அ-ம் முற்றியது.

முகரோக சாத்தியாசாத்தியநிதானம்.

முகரோகம் எரு-ல், ரத்தோஷ்டம், அற்புதோஷ்டம், மாமிசோஷ்டம், சலார்புதோஷ்டம், தந்தகாளம், தந்தவியாலம், தந்தசுக்ஷிரம், தந்த மகாசுக்ஷிரம், வாததந்தமூலம், பித்ததந்தமூலம், சிலேஷ்மதந்தமூலம், திரிதோஷதந்தமூலம், க்ஷததந்தமூலம், ஜிவ்வாலஜகம், உபஜிவ்வாரோகம், தாலுபிடகம், தாலுவற்புதம், தாலுகச்சபரோகம், கண்டரத்தரோகணி, களபிருந்தம், களஔகரோகம், வலையரோகம், சதக்கினி, களார்புதம், களகண்டம், சுரக்கினி, ஊர்த்துவகுதம் ஆக உஎ-விதரோகமும் கஷ்டத்தின்மேல் ஒருவருஷத்திற்குப்பின்பு சத்தியமாம். மற்றை சஅ விதரோகமும் ஆயுத முதலியவைகளினால் சரியான சிகிச்சைசெய்யில், சாத்தியமாம்.

சிரோரோகநிதானம்.

புகை,வெய்யில்,பனி, நித்தியசையோகம், அதிநித்திரை, நித்திரைபங்கம், சதாசலத்தில்நனைதல், மேற்காற்று, கண்ணீரையடக்குதல், ஓயாத அழுகை, மிகுந்தசலபானம், அப்படியே மத்தியபானம், கிருமிசேருதல், பதினாலுவேகத்தை மறித்தல், சகிக்கக்கூடாத கன உஷ்ணமுள்ள வாசனையை முகருதல், வெகுவார்த்தை ஆகிய இச்செய்கைகளினால், வாதபித்தகபங்கள் அதிகரித்து, சிரோரோகத்தை உண்டாக்கும்.

சிரோரோகபேதம்.

மேற்கூறிய காரணங்களைப்பற்றி, சிரசில், வாத சிரஸ்தாபரோகம் ஆதியாகச் சூரியாவர்த்தரோகம் ஈறாக, ௰-விதரோகம் பிறக்கும்.

௧-வது வாத சிரஸ்தாபரோகம்.

இது, வாதாதிக்கத்தினால்நெறிகளில்கடவாத்தியம் வாசிப்பதுபோல் அதிரல், கண்ணும் புருவமும்நெற்றியும் இற்றுவிழுவதுபோல்தெறித்தல், வெளிச்சத்தைப்பார்க்கக்கூடாமை,தலைசுழற்றலுடன்நோதல்காதிரைச்சல் கீல்கள்தளரல், நரம்புகள் புடைத்து உப்புதல், நாசியிற்சலம்வடிதல் என்னுமிக்குணங்களை உண்டாக்கும். இக்குணங்கள்காரணம் இல்லாமலே அதிகரிப்பதும் குறைவதுமாயிருக்கும். இது, தொக்கிடம், லேபனம், பூச்சு, பால்வேது, பொட்டணம் முதலியசிகிச்சைகளினால் சாந்தமாம். இதுவே வாதத்தலைவலியாம். ஸ்தாபம் என்பது உபத்திரவம்.

௨-வது பித்த சிரஸ்தாபரோகம்.

இது தலையில்புகைகம்மியதுபோலிருத்தல், சுரம், வியர்வை, கண்ணெரிச்சல், மூர்ச்சை முதலியகுணங்களைப் பாதிராத்திரியிலுண்டாக்கும். இதுவே பித்தத்தலைவலியாம். இதற்குக் கோசாதகித்தயிலமாகும்.

௩-வது சிலேஷ்மசிரஸ்தாபரோகம்.

இது சிரோபாரம், தூக்கல், சரீரம்முழுதுங்கடுத்தல், மூர்ச்சை, அரோசகம், வாந்தி, கண்கள் உப்பலோடுநோதல், காதுக்குள் நமைச்சல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும். இதுவே கபத்தலைவலியாம்.

௪-வது திரிதோஷ சிரஸ்தாபரோகம்.

இது, வாதம் முதலியமூன்றுசிரஸ்தாபரோககுணங்களையெல்லாம் ஒரேகாலத்தில் உண்டாக்கும். இதுவே திரிதோஷத் தலைவலியாம்.

௫-வது ரத்த சிரஸ்தாபரோகம்.

இது, பித்த சிரஸ்தாபரோக குணங்களைப்பார்க்கிலும் அதிதுர்க்குணங்களை உண்டாக்கி, வேதனையைச்செய்யும். இதுவே உதிரத்தலைவலியாம்.

௬-வது அர்த்தபேதரோகம்.

இது, ஒருபக்கத்திலுண்டாகி, வாதசிரஸ்தாபரோககுணங்களைப்போல் வேதனையைச் செய்வதுந்தவிர, ௰௫-நாளுக்கொருதரம், அல்லது மாதத்திற்கு ஒருதரம் அதிகரிப்பதும், தானே சாந்தியை அடைவதுமாயிருக்கும். இந்தரோகம் எப்பக்கத்தில் அதிகரிக்கின்றதோ அப்பக்கத்து நேத்திரம்கெடும். அல்லது அப்பக்கத்துக் காதாவது செவிடாகும். இதை ஒற்றைத்தலைநோவென்றுஞ் சொல்வர். இது, சிரசில் ஒருபக்கத்தைப்பேதிப்பதால், அர்த்தபேதம் எனப் பேர்பெற்றது. இதனை, நாணல்தயிலம், சந்தனத்தயிலம் முதலிய சிகிச்சைகளினால்விலக்கவும்,

௭-வது கிருமி சிரோரோகம்.

இது சங்கிரணபோஜனத்தினால்திரிதோஷத்தை அதிகரிக்கச்செய்து சிரசில் இருக்கும் ரத்த மாமிசத்தைக்கரைத்து, கிருமிகளைப்பிறப்பிக்கும். அக்கிருமிகள் உதிரத்தைப்பானம்பண்ணும்போது அச்சிரசில்கோரமான வேதனை உண்டாகும். இதனால், மண்டைவறளல், மரத்தல், வீக்கம், பிளந்துபோவதுபோல் இருத்தல், மிகுந்த எரிச்சல், துர்க்கந்தம், நாசியிற் சலம்வடிதல், தாடையில் சிவந்தநிறத்துடன்நமைச்சல் உண்டாகிப் பின்பு அது வெளுத்தவீக்கமாக எழும்புதல், காதிரைச்சல், சுரம், இருமல், துர்ப்பலம்,மனக்கலக்கம் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

௮-வது சிரக்கம்பரோகம்.

இது, புசிக்கின்ற ரசாதிவஸ்துக்களால், திரிதோஷங்களானவை சிரசிலிருக்கும் நரம்பு முதலியவைகளை அநுசரிக்கும்போது, பிறக்கும். இதனால், தலைநடுக்கம் உண்டாகும். இதனை மாஷமாகிய உழுந்துத்தயிலத்தினாலும், ஔஷதித்தீநீரினாலும் விலக்கலாம். கம்பம் என்பது நடுக்கல்.

௯-வது சங்கரோகம்.

இது, பித்தத்தில்கூடிய வாத சிலேஷ்மங்களினால், இரண்டு நெறிகளிலும்சிவந்தவீக்கத்தைப்பிறப்பிக்கும். அப்போது அதில்எரிச்சல், நோவு, சுரம், தாகம், சோருதல், பிரமை, பிரலாபம், முகத்தில்மஞ்சள் நிறம், வாய்கசத்தல் என்னும் இக்குணங்கள் உண்டாகும். இது, பழுத்து உடைந்தால், மூன்றுதினத்துக்குள் மரணத்தைக்கொடுக்கும். ஆனால், தீவரச்சிகிச்சையால் சாத்தியப்பட்டாலும்படும். சங்கம் என்பது நெறி.

௰-வது சூரியாவர்த்தரோகம்.

இது, வாயுவானது பித்தத்தில்கூடி, இரண்டுநெறி, கண், புருவம், நெற்றி ஆகிய இடங்களில் வியாபிக்கும்போது பிறக்கும். இதனால், சூரிய உதய காலததில் சிரசில்மிகுந்த உபத்திரவம் உண்டாகும். அது, வெய்யிலேறஏறப்பிரபலப்படுவதும்,சூரியன்சாய்ந்தால்சாந்தம் அடைவது மாக இருக்கும். இவ்வாறே, தினந்தினமும்போராடும். இவ்வண்ணம் உண்டாவது எழுநாயிறு என்றும்,இதில் சஞ்சரிக்கின்ற வாயுகபத்துடன் சேர்ந்தால், மாலைக்காலத்தில் உபத்திரவமுண்டாகி, பாதிராத்திரிக்குப் பின்பு சாந்தியை அடைவது படுநாயிறு என்றும் தேரையர் சாஸ்திரம் கூறுகின்றது. இந்தப்படுநாயிறையே சந்திராவர்த்தம் எனப் பாகிடா சாரியம் என்கிற சாஸ்திரம் சொல்லுகின்றது. இது, அசுவகந்திபலா லாக்ஷாதயிலம், அரக்குச்சந்தனாதித்தயிலம், அரக்குத்தயிலம், கருஞ் செம்பைத்தயிலம் ஆடுதொண்டைத்தயிலம், முதலியவைகளில் ஏதேனும் ஒன்றைச் சூரிய உதயமாவதற்குமுன்னம் ஸ்நானம் செய்வித்துப்

புளி இல்லாப்பத்தியம் கொடுக்கில் சந்தேகமற நிவிர்த்தி ஆகும்.

ஆக சிரரோகம், சிரஸ்தாபரோகம் எனவும் கூறிய
தலைவலிரோகம் ௰-ம் முற்றியது.

கபாலரோகபேதம்.

கபாலத்தில், உபசீரிஷம், மூர்த்தபிடகம், சிரோற்புதம், சிரோவித்திரதி, அருமஷிகை, தாருணம், இந்திரலுத்தம், கலதி, பலிதம் என ௯-விதரோகம் பிறக்கும். இவற்றுள், கலதிரோகத்தில், வாத பித்த கப திரிதோஷங்களால் ௩-பிரிவும், பலிதரோகத்தில், இவ்விதம் ௪-பிரிவும் உண்டு.

௧-வது உபசீரிஷரோகம்.

இது, கபாலவாயுவைக்கொண்டு, கருப்பஸ்திரிகளின்சிரசில்வீக்கத்தை உண்டாக்கும். அவ்வாறே வயிற்றிலிருக்கும் சிசுவுக்கும் உண்டாகும்; அப்போது சீதோஷ்ணசிகிச்சையால் தாய்க்கு உபசரிக்கில், சிசுவுக்கும் சவுக்கியமாகும். உபம் என்பது இரண்டு; சீரிஷம் என்பது தலை.

௨-வது மூர்த்தபிடகரோகம்.

இது வாதத்தினால் உச்சந்தலையில் கட்டிபோல்வீக்கத்தைஉண்டாக்கும்.

௩-வது சிரோற்புதரோகம்.

இது பித்தத்தால் கபாலத்தில் ஆச்சரியமான வீக்கத்தை உண்டாக்கும்.

௪-வது சிரோவித்திரதிரோகம்.

இது கபத்தால் கபாலத்தில்வித்திரதியைப்போல்வீக்கம் உண்டாக்கும்.

௫-வது அருமஷிகைரோகம்.

இது பித்தத்தினால்கபாலமூளைகரையும்போது பிறக்கும். இதனால், கபாலத்தின்மீது ரத்தத்தினாலாவது கபத்தினாலாவது கிருமிகளினால் ஆவது தினையைப்போலும் கடுகைப்போலும் அநேககொப்பிளங்கள் உண்டாகும். அருமஷிகை என்பது பரவுதலை உடைய விரணமாம்.

௬-வது தாருணரோகம்.

இது, சிலேஷ்ம வாதங்களினால் பிறந்து, கபாலத்தில், தினவு, மயிர் உதிரல், சொறசொறத்தல், சருமப்பொட்டுகள் உதிரல், மிகு நித்திரை முதலியகுணங்களைஉண்டாக்கும். தாருணம் என்பது பயத்தைத்தருதல்.

௭-வது இந்திரலுத்தரோகம்.

இது, பித்தமானதுரோமத்துவாரங்களில்வியாபித்து வாதத்துடன் கூடுங்காலத்தில்பிறக்கும்; இதனால், கபாலத்திலிருக்கும் ரோமமெல்லாம் உதிரும்; அத் தருணத்தில் சிலேஷ்மமானது ரத்தத்துடன் கூடும். இவ்வண்ணமாகப்பித்தமுதலியவைகள்ரோமத்துவாரங்களை அடைவதால், உதிர்ந்தரோமம் முளைக்கமாட்டாதென்றறிக. இந்திரலுத்தம் என்னும் ஒரு எரிப்பூச்சியானது பயிர்முதலிய பச்சிலைகளை எப்படி எரித்து ஒன்றுமில்லாமல்செய்துவிடுமோ, அவ்வண்ணமே இது ரோமக்கால்களைக் கெடுப்பதால், இந்திரலுத்தரோகம் எனப்பேர்பெற்றது.

அ-வது கலதிரோகம்.

இது, முற்கூறிய இந்திரலுத்த ரோக குணத்துடன் ரோமங்களை உதிரப்பண்ணுவதும் அன்றி, கபாலத்தைமூடிய சருமத்தின்மேல் வழுவழுப்பான ஒருமழுங்கலை உண்டாக்கும். இது வாதத்தால்பிறந்தால், அச்சருமமக்கினியால்சுட்டாறிய வடுப்போல் மச்சத்தைப்பெற்றிருக்கும்; பித்தத்தால் பிறந்தால்,முற்கூறியகுணத்துடன் அவ்விடத்துநரம்புகளில் நின்றும் வியர்வைச்சலம் கசியப்படும்; சிலேஷ்மத்தால்பிறந்தால், அச்சருமமானது மிகவுங்கடினமாயிருக்கும்; திரிதோஷத்தால் பிறந்தால், அச்சருமமெல்லாம் நகத்தினது நிறம்போல் தோற்றுவதும் தவிர, அதில் மாறாது எரிச்சலும் உண்டாகும். கலதி என்பது மழுங்கலாக்குவதாம்.

கூ-வது பலிதரோகலக்ஷணம்.

அதிதுக்கம், கனகோபம்,மிகுபயம்,தடிமுதலியவற்றாலடியுண்டல், சதாசிந்தனை, பலவிதவேலையான உழைப்பு, மனச்சஞ்சலம், தேககாங்கை ஆகிய இவைகளினால்உண்டானவெப்பமானது, தேகம்முற்றிலும் வியாபித்து, சிரசைப்பற்றி ஏறி, அங்குள்ள கபாலரோமங்களின்வேர்களையெல்லாம் வேகும்படிக்குச்செய்து, நரையை உண்டாக்கும்; அப்போது அம்மயிர்கள் வாதத்தால் நரைத்தால், முறைத்தலுடன் முனைபிளந்து கொஞ்சங்கருமைநிறத்தையும்நகங்களின்நிறத்தையும்பெற்று, தொட்டால் வெப்பத்தைத் தருவதாயிருக்கும். பித்தத்தால் நரைத்தால், செம்மை பீதம் என்னும் நிறங்களைப்பெற்றிருப்பதன்றியும், அந்தரோமக்கால்கள் தோறும் எரிச்சலும் உண்டாகும். சிலேஷ்மத்தால் நரைத்தால், அம்மயிர்கள்வெள்ளிக்காசைப்போல் வெளுத்தும் மினுமினுத்தும் நரை அதிகரித்தும் இருக்கும்; ஆனால், நரைக்குமிடங்களில் நமைச்சல்உண்டாகும். திரிதோஷத்தால் நரைத்தால், வாதமுதலிய மூன்றுரோகங்களுக்குள்ள குணங்களெல்லாம் இதில் உண்டாயிருக்கும். பலிதம் என்பது நரை.

ஆக கபாலரோகம் கூ-ம் முற்றியது.

அசாத்தியகபாலரோகநிதானம்.

முன்சொன்ன கபாலரோகம் ஒன்பதுக்குள், கபாலசருமம் புரையாக உதிர்ந்து அந்த இடத்தில் உபத்திரவங்கள் உண்டாயிருக்கின்ற ரோகமும், சரீரம்பழுத்ததினால் பிறந்த நரைரோகமும் அசாத்தியமே. ஆனால், இந்தரோகங்கள் காயகல்பம் என்னும் அவுஷதங்களினால் எழுபது வயதிற்கு மேற்படாதவர்களுக்குச் சாத்தியமாம். இவ்வித ரோகிகள் ரச வருக்கங்களையே விரும்புவார்கள் என்றறிக.

பன்னிரண்டாவது கர்ணரோகபடலம் முற்றியது.

உ

சுப்பிரமணியர் துணை.

ஜீவரக்ஷாமிர்தம்.

பதின்மூன்றாவது
விரணபேதபடலம்.

விரணபேதம்.

தேகத்திலுண்டாகிறவிரணமானது இருவகைப்படும். அவையாவன:—வாதம், பித்தம், சிலேஷ்மம், தொந்தம், திரிதோஷம் என்னுமிவைகளினால் பிறக்கின்றவிரணங்கள் ஒருவகை: இதற்கு நிசவிரணம் என்றுபெயர்; காயங்களினால் உண்டாகின்றது ஒருவகை: இதற்கு ஆகந்துகவிரணம் என்றும் சத்தியோவிரணம் என்றும்பெயர். இவ்விருவகைவிரணங்களின் குணங்களினால், அவைகளைத் துஷ்டவிரணம் என்றும், அதுஷ்டவிரணம் என்றுங்கூறப்படும். அதன்விவரம்:—என்றைக்கும் ஆறாதிருப்பதெதுவோ அதுவே துஷ்டவிரணமாம். சீழ், ரத்தம், சிலேத்தண்ணீர் முதலியவைகளைக்காட்டிக்கொண்டிருந்தாலும், சிலநாட்பொறுத்துச்சிகிச்சைகளினால் ஆறப்படுவது எதுவோ, அதுவே அதுஷ்டவிரணமாம். இவைகள்கூ௯-விதப்படும். அவையாவன:—துஷ்டவிரணம்௰௫; அதுஷ்டவிரணம் சகூ; சுத்த ரத்தத்தால் பிறக்கின்றவிரணம் ஒன்றுஎன்பனவாம்.

துஷ்டவிரணபேதம்.

இது ஒவ்வொருவேளை, வாய்மூடியும் திறந்தும், கெட்டிப்பட்டும் மிருதுவாயும், உலர்ந்துமூலராதும், எரிச்சலைத்தருவதும், குளிர்ச்சியைத் தருவதும், சிவப்பதும் கறுப்பதும் வெளுப்பதும், துர்க்கந்தச்சீழை வடிப்பதும், சிலவேளை, ரத்தம் சீழ் நரம்பு என்னும் இவைகளில், துர்வாசனையை வீசுவதும், வியர்வையைத் தருவதும், நெடுநாள்சென்றும் ஆறாததும், ஒருவேளைநோவு, வீக்கம், நமைச்சல் முதலியகுணங்களைப்பிறப்பிப்பதுமாக இருக்கும். இது வாத பித்தசிலேஷ்மங்களினாலும் ரத்தத்தினாலும் அந்த ரத்தத்தைச்சேர்ந்த வாதாதிகளினாலும் ௰௫-விதப்படும்.

க-வது வாத துஷ்டவிரணம்.

இது, கறுப்பு, சிவப்பு, எலும்பு, சாம்பல், புறா, கருமைவெண்மை கலத்தல் ஆகிய இந்நிறம் உள்ளதாகஇருக்கும். இதில் வருகிறசலமானது,

புன்செய்த்தானியத்தையும், மாமிசத்தையும், கழுவிய சலம்போலவும், தெளிந்த மோர்ச்சலம்போலவும் கொஞ்சங்கொஞ்சமாகவடியும். இதனுல், அவ்விடத்து மாமிசங்கரைதல், நோதல், குத்தல், வறளல், உள்ளில் சிடுசிடுப்பாகிய ஒருசத்தம் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

உ-வது பித்த துஷ்டவிரணம்.

இது, சீக்கிரத்தில் பிறந்து, மஞ்சள், கறுப்பு, கருமைசெம்மை கலத்தல், வெண்மைசெம்மைகலத்தல் ஆகிய இந்நிறங்கள் உள்ளதாக இருக்கும். இதில்வருஞ்சலம், கோமூத்திரம்போலவும், மூருக்கம்பூச்சாம்பல் கழுவிய சலம்போலவும், எண்ணெய்யைப்போலவும், சுடுகையுடன் அதிகமாகஒழுகும். ஆனு லவ்விடத்திலுப்புச்சலத்தைத்தெளித்ததுபோ லெரிச்சல், காயம்பட்டதுபோல்நோதல், அனலில்வெந்தமாமிசம்போல் சிவத்தல் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

௩-வது சிலேஷ்ம துஷ்டவிரணம்.

இது, நமைச்சலுடன்வெளுத்தும் கெட்டியாக உயர்ந்தும்உஷ்ணத் தைப்பெற்று, நரம்புகளில் சிலேயோடுவதாயும் இருக்கும். இதில் வருகிற சலமானது, வெளுத்துப்பிசினைப்போல் குழம்பாக விஸ்தாரம் வடியும்; அப்போது கொஞ்சம் குத்தலோடுங்கூடிய நோவும் உண்டாகும்.

௪-வது வாதபித்த துஷ்டவிரணம்.

இது, வாதுதுஷ்டவிரணத்திறைலும், பித்ததுஷ்டவிரணத்திறைலும் பிறக்கின்ற துர்க்குணங்களையெல்லாம் உண்டாக்கும்.

௫-வது வாதசிலேஷ்ம துஷ்டவிரணம்.

இது, வாததுஷ்டவிரணத்திறைலும், சிலேஷ்மதுஷ்ட விரணத்தி றைலும்பிறக்கின்ற குறிகளையெல்லாம் விரைவில் உண்டாக்கும்.

௬-வது சிலேஷ்மபித்த துஷ்டவிரணம்.

இது சிலேஷ்மதுஷ்டவிரணத்தாலும், பித்ததுஷ்டவிரணத்தாலும் பிறக்கின்ற குணங்களையெல்லாம் உண்டாக்கும்.

௭-வது திரிதோஷ துஷ்டவிரணம்.

இது, வாதம் பித்தம் சிலேஷ்மம் என்னும் ௩-துஷ்டவிரணங்களின் குணங்களையெல்லாம் உண்டாக்கும்.

௮-வது ரத்த துஷ்டவிரணம்.

இது, பவளத்தைப்போலவும் ரத்தத்தைப்போலவும் நிறத்தைப் பெற்றுப் பித்ததுஷ்டவிரணக்குறிகளையெல்லாம் பெற்றிருப்பதுமன்றி, குதிரைலாயத்தில் உண்டாகின்ற வாசனையையும் வீசும்.

௯-வது ரத்தவாத துஷ்டவிரணம்.

இது பவளத்தைப்போலும்கரியைப்போலும்நிறமுள்ளதாயிருக்கும். இதில் நின்றும் ரத்தம்போலும் தயிர்ச்சலம்போலும் சிலேத்தண்ணீர் ஒழுகும். இதனால், குத்தலும் வாந்தியும் உண்டாகும்.

௰-வது ரத்தபித்த துஷ்டவிரணம்.

இது உதிரநிறமாயும் மஞ்சள்நிறமாயுமிருக்கும். இவ்விரணத்தில் நின்றும் கோமூத்திரம்போலும் ரத்தம்போலும் சலம் ஒழுகும். இதனால், எரிச்சலும் விறவிறப்பும் உண்டாகும்.

௰௧-வது ரத்தசிலேஷ்ம துஷ்டவிரணம்.

இது வெளுத்தும்சிவந்துமிருக்கும். இதில்நின்றும் சீழும்ரத்தமும் ஒழுகும். இதனால், வீக்கமும் வாந்தியும் உண்டாகும்.

௰௨-வது ரத்தவாதபித்த துஷ்டவிரணம்.

இது ரத்தவாதத்திற்கும் ரத்தபித்தத்திற்குமுள்ள குறிகளுடனிருக்கும்.

௰௩-வது ரத்தவாதசிலேஷ்ம துஷ்டவிரணம்.

இது ரத்தவாதத்திற்கும் ரத்தகபத்திற்கும் உள்ளகுறிகளுடனிருக்கும்.

௰௪-வது ரத்தசிலேஷ்மபித்த துஷ்டவிரணம்.

இது ரத்தகபத்திற்கும் ரத்தபித்தத்திற்கும் உள்ளகுறிகளுடனிருக்கும்.

௰௫-வது ரத்ததிரிதோஷ துஷ்டவிரணம்.

இது ரத்தவாததுஷ்டவிரணமுதலிய மூன்றுவிரணக் குறிகளைப் பெற்றிருக்கும். இவைகளை விரணபேதநிறத்தினாலும், இன்னும் பற்பல பரீட்சையினாலும் அநிருட்பத்துடன் நிதானித்து இவைகட்குச்சாத்திய சிகிச்சைகளைச்செய்யவேண்டும்.

ஆக துஷ்டவிரணம் ௰௫-ம் முற்றியது.

அதுஷ்டவிரணபேதம்.

அதுஷ்டவிரணமானது, ரசதாது,ரத்ததாது,மாமிசதாது, மேதோதாது, அஸ்திதாது, மச்சாதாது, சுக்கிலதாதென்னும் சப்ததாதுக்களையும் பற்றி ஒவ்வொருதாதுவுக்கு எவ்வேழுவிதமாகப்பிறந்து ௪௯-விதப்படும். அவையாவன :— ரசவாததுஷ்டவிரணம், ரசபித்தாதுஷ்டவிரணம், ரசசிலேஷ்மாதுஷ்டவிரணம், ரசவாதபித்தாதுஷ்டவிரணம், ரசவாதசிலேஷ்மாதுஷ்டவிரணம்ரசசிலேஷ்மபித்தாதுஷ்டவிரணம்ரசதிரிதோஷாதுஷ்டவிரணம்என்பனவாம். இவ்வண்ணமாகவே,வாதாதிதோஷங்களினால் மற்றைய ஆறுதாதுக்களிலநின்றும் பிறக்கின்ற ௪௨-விதமான அதுஷ்டவிரணங்களையும் பண்டிதர்கள் கூர்ந்தறியவேண்டும். இவ்வகைவிரணங்களெல்லாம், *பத †வாடைக்கட்டு, அரசம்பட்டைமுதலியதுவர்ப்பட்டைக் கஷாயநீர், நாகம் வங்கம் மிருதாரசிங்கு இவைகளின்பஸ்மமோதகம்,

---

* பதம் என்பது சோறு ; † ஆடை என்பது சீலை.

றுத்தியிலேவெந்நீர் ஒத்திடம், கடுகு பெருங்காயம் முதலிய பூச்சு, விரணநாசப்புகை, இளங்காரத்திரி, பாதரசக்களிம்பு, *தேவதூபக்களிம்பு, பூரப் † படங்கு, சாதிலிங்கக்குழம்பு, சவுரிமெழுக்கு, சிலைத்தயிலம், விரண சஞ்சிவித்தயிலம், ஊமத்தலாற்றி எண்ணெய்முதலிய அவுஷதங்களினாலும் க்ஷத்திரக்ஷாராக்கினிச்சிகிச்சைகளினாலும் நிசேஷமாகநிவிர்த்தியாகும்.

சுத்த ரத்தவிரணம்.

இது கொப்பிளாகாரமாய்நடுவில் உயர்ந்து, உபத்திரவம் இல்லாமல் மிருதுவுடன் வழுவழுத்து, தொட்டால்சுடுகை உள்ளதாய், நாவினது நிறத்தையும் கரிநிறத்தையும் பெற்றிருக்கும். இதற்கு ஆயுதச்சிகிச்சை சாத்தியாசாத்தியத்தைத்தரும்.

ஆக கூ௫-விரணங்களும் முற்றியது.

விரணஸ்தானபேதம்.

சருமம், மாமிசம், பெருநரம்பு, சிறுநரம்பு, கீல், எலும்பு, வயிறு, மர்மஸ்தானம் என்னும் இவ் எட்டும் விரணஸ்தானங்களாம். இந்தஸ்தானங்களைப்பற்றி விரணம்பிறக்கில், முறையே ஒன்றுக்கொன்றுகஷ்டசாத்தியங்களாகமுடியும். இவைநிற்க, வாதம், பித்தம், சிலேஷ்மம், ரத்தம் என்னும் இவைகளால்பிறக்கின்றவிரணங்களுக்கு முறையே குத்தலும், எரிச்சலும் வீக்கமும், வாந்தியும், தொந்த திரிதோஷங்களுக்கு முற்கூறிய நான்கு தோஷகுணங்களின்மிசிரமும் உண்டாகும்.

சாத்தியவிரணநிதானம்.

சரீரபலமும், மாமிசபுஷ்டியும், ரத்தபுஷ்டியும், அக்கினிபுஷ்டியும், வாலிபமும் உள்ளவர்கட்கு விரணம்பிறந்தால் சுகசாத்தியமாம்.

கஷ்டசாத்தியவிரணநிதானம்.

தொடை, யோனி, குதம், ஆண்குறி, உதடு, முதுகு, உள்வாய், தாடை, கண், கடைக்கண், பல்லு, நாசி, பெருநரம்பு, சிறுநரம்பு, வயிறு, காது, விலா, அக்குள், தனம் என்னுமிந்த இடங்களில்வட்டமாக உயர்ந்து மூன்றுமூலை நான்குமூலை உள்ளதுகளும், நுரையுடன் கலங்கினதுகளும், கொழுப்பும் எலும்பும் தெரிவதுகளும், பகந்தர விரணத்தைப்போல் உள்முகத்தை உடையதுகளுமாகப்பிறந்த விரணங்களும், குஷ்ட விரணங்களும், விஷத்தால்பிறந்தவிரணங்களும், துஷ்டவிரணங்களும், மதுமேகவிரணங்களும், பிரயாசத்தின்மேல் கஷ்டசாத்தியமாம்.

அசாத்தியவிரணநிதானம்.

விசர்ப்பி, சுரம், அதிசாரம், காசம், சுவாசம், க்ஷீணமதுமேகம், அஸ்திசிராவரோகம் என்னும் ரோகங்கள்கண்டு, அவைகளவுஷதங்களால்

---

*தேவதூபம் என்பது குங்கிலியம்; † படங்கு என்னும்சொல் பதங்கம் என வழங்கப்படுகின்றது.

சாத்தியமாகாமல் நீடித்து, சரீரத்தைமிகவும் கிரிசிக்கச்செய்திருக்கையில் விரணம்பிறந்தாலும், விரணத்தின்மேல்விரணம்பிறந்தாலும்விரணத்தின் மேல் கனமாக அடிபட்டுமேற்றோல் உரிந்தாலும், தயிர்த்தண்ணீர்போல் சலம்வடிந்து சிறுநரம்புகள் அழுகிப் பெருநரம்புகளில் சிலேயோடினாலும், விரணத்தில் குழிகள்விழுந்து அவைகளில்கிருமிகள்சனித்துக்கொண்டே இருந்தாலும், எலும்புகள்நொறுங்கி அவைகள் கண்ணுக்குத்தோற்றித் தூர்க்கந்தம்பிறந் தின்னவிதவிரணமெனஅறியக்கூடாமையாயிருந்தாலும், கட்டுகட்டக்கூடாமலும் சிலேயெண்ணெய்க்குவிருத்தியடைதலும் சொற சொறத்தலும் அதில்ரோமங்கள் முளைத்தலும்வீக்கம் அதிகரித்தலும் உள்ளதாயிருந்தாலும், முள்ளைப்போல் நீளம்நீளமாகவெடித்துப் புரு நிறத்தையும் கடினத்தையும் சலவறளலேயும்பெற்றிருந்தாலும், கொஞ்சம் பழுக்கில் மிகுந்தவேதனை, வெகு ஆயாசம்,அந்தவிரணத்தின்மேல் சிறு சிறு முட்டைகள்போல்துர்ம்மாமிசம் எழும்புதல், நடுவில்நமைச்சல், சதா சீழ்வடிதல் என்னும் இக்குணங்கள் இருந்தாலும், அவ்விரணங்கள் அசாத்தியமே.

விரணபக்குவநிதானம்.

வாதம், பித்தம், சிலேஷ்மம், தொந்தம், திரிதோஷம் என்னும் இவைகள் ரத்தத்தோடுகூடியகாலத்திற்பிறந்த விரணங்களானவை, க்ஷத்திரக்ஷாராக்கினியாதி அவுஷதங்களால்சாத்தியமுகம் ஆகும் தருண த்தில் இருக்கும்குறிகளாவன:— விரணங்கள்சிவத்தல்,அவ்விடந்துரோம வேர்நைதல் ஓரத்தில்வரம்புகட்டி அற்பக்குழிபோல்தோற்றல்,பின்பு கறு த்தநிறம்வருதல்,நல்ல ரத்தம்வடிதல், வீக்கமும் நோவும்மட்டிடல்,சருமத் தின்மீது முன்பு உள்ள சுபாவநிறம் பிறக்குதல், விரணத்தைக்கையால் பிடித்துப்பார்த்தால் கெட்டியாகத்தோற்றல் என்னும் இவைகளாம். இக்குணங்கள் உண்டாகில், சீக்கிரத்தில் ஆறும் என்றறிக.

இனி * சத்தியோவிரணபேதம்.

கல்லு தடிமுதலியவைகளினல் அடிபடுதல் விழுதல் என்னும் இவைகளினல் சத்தியோவிரணம்பிறக்கும். அது, கிருஷ்டவிரணம் ஆதியாக விதளிதவிரணம் ஈறாக, அ-விதப்படும்.

க-வது கிருஷ்டவிரணம்.

இது, முள்ளு, கட்டைக்குச்சு, கொம்பு, தடி முதலியவைகளினல் காயம்படுவதனலும், உராயப்படுவதனலும் உண்டாகி, கொஞ்ச ரத்தக் கசிவுடன் கூடினதாய் ஆறுதிருக்கும். கிருஷ்டம் என்பது உராய்தல்.

* சத்யோ என்பதற்குப் பொருள் உடனே என்பதாம்.

௨-வது அவகர்த்தவிரணம்.

இது கிருஷ்டவிரணவிருத்தியினால்பிறக்கும். இதனால், விரணத்தில் குழிவிழும். இதுவே குழிப்புண்ணாம். அவகர்த்தம் என்பது குழி.

௩-வது விச்சின்னவிரணம்.

இது அவகர்த்தவிரணவிளைவினால்பிறக்கும். இதனால், அவ்விரணம் துண்டுதுண்டாய் அறுபட்டதுபோல் இருக்கும்.

௪-வது பிரவிளம்பிவிரணம்.

இது விச்சின்னவிரண அதிகரிப்பில்நின்றும் பிறக்கும். இதனால், எலும்புகள் வெளியில்தோற்றப்படும். இது, எலும்பை நன்றாகத்தெரியப் படுத்தலால் பிரவிளம்பி விரணம் எனப் பேர்பெற்றது.

௫-வது நிபாதிதவிரணம்.

இது பிரவிளம்பிவிரணவிபரீதத்தால்பிறக்கும்; அப்போது நடுவில் கொஞ்சம் எலும்பைத் தெரியும்படிக்குவைத்து மற்றைய இடத்தை எல்லாம்துர்ம்மாமிசம்விழுந்து மறைக்கும். நிபாதிதம் என்பது விழுதல்.

௬-வது வித்தவிரணம்.

இது, முற்கூறிய முள்முதலியவைகள்தவிர, கல் முதலியவைகளால் அடியுண்டகாலத்தில்பிறந்து,விஷமிக்கும்.வித்தம் என்பது அடியுண்டல்.

௭-வது பின்னவிரணம்.

இது, யுத்தகாலத்தில் அல்லது சுபாவகாலத்தில் ஆயுதங்களினால் பிறந்து உபத்திரவத்தைஉண்டாக்கும். பின்னம் என்பது துண்டித்தல்.

௮-வது விதளிதவிரணம்.

இது, ரத்தம் ஒழுகிக்கொண்டிருக்கின்ற விரணத்தைப்பிடித்து அழுத்தப்படுதலினாலும், கல்லுமுதலியவைகளால் அடிபடுதலினாலும் பிறந்து, உபத்திரவத்தைச்செய்யும். இதனால், எலும்புகள்நோதலும் விரணம்பருத்தலுமாக இருக்கும். இவைகளுக்கும், முற்கூறிய அதுஷ்ட விரணச்சிகிச்சைகளேயும், ஆயுதச்சிகிச்சைகளையும் செய்யவேண்டும். விதளிதம் என்பது பிளக்கப்பட்டதாம்.

ஆக சத்தியோவிரணம் ௮-ம் முற்றியது.

பகந்தரவிரணலக்ஷணம்.

யானையேற்றம், குதிரை யேற்றம், எந்நேரமுங் குந்திக்கொண்டிருக்குதல், சதாகடின ஆசனத்திலுட்காரல், மூலவியாதிக்குக் காரணமான வஸ்துவையும் இந்த வியாதிபிறப்பதற்கேதுவான வஸ்துவையும் பிரீதி இல்லாதவஸ்துவையும் புசித்தல், அநுகூலவஸ்துவைநீக்குதல் ஆகிய இச் செய்கைகளினால் வாதாதிகள் அதிகரித்து, அடிவயிற்றுக்கும் மூத்திரப்

பைக்கும் சமீபத்தில் இருக்கின்றகெட்ட உதிரமாமிசங்களை ஒட்டி, உள்ளிலாவது வெளியிலாவது ஒருஅங்குலம் இரண்டு அங்குலம் அளவையுள்ள கட்டிகளைச்சேரச்சேரவுண்டாக்கும்; அப்போதவ்விடத்தில் வியர்வையும் விரணமும்பிறக்கும். இந்தநிதானத்தை அறிந்து உடனேயே வைத்தியம் பண்ணுவிடில், இது அல்குல் கீழ்வயிறு குதம் ஆகியஇடங்களில்விரைவில் துவாரங்களை உண்டாக்கி, அத்துவாரங்களின்வழியால், காற்றும் மலமும் மூத்திரமும் சுக்கிலமும் வெளிப்படும்படிக்குச்செய்யும். இதைப் பவுத்திர ரோகம் என வழங்குகிருர்கள். பகந்தரம் என்பது பிளத்தல்.

பகந்தரவிரணபேதம்.

பகந்தரவிரணமானது வாதபகந்தரம் ஆதியாக ஆகந்துகபகந்தரம் ஈருக அ-விதப்படும். இவற்றுள், ஆகந்துகபகந்தரத்தில் அ-பிரிவுண்டு. மேலும் இப்பகந்தரங்களினுல் உண்டாகின்றகட்டியானது உடையாமல் சொஸ்தமானுல், கட்டி என்றுபெயர் பெறும்: உடைந்துவேரானது தூரத்தில்ஓடி உட்புறத்திலேயேவிஸ்தரித்து வெளிப்புறத்திலும்தோன்றி நோவும் அதிகரிக்குமாகில், பகந்தரவிரணம் எனப்பெயர்பெறும்.

க-வது வாத பகந்தரவிரணம்.

இது முற்கூறிய குதஸ்தானங்களில் கறுத்தும் சிவந்தும் பிறக்கும். இதனுல் அந்த இடத்தில் விரிந்துபோவதுபோல் இருத்தல், குத்தல், அதிர்தல், நோதல் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

உ-வது பித்த பகந்தரவிரணம்.

இது, புகைநிறத்துடன் சிவந்தும், நீண்டவுருவத்தில் மெலிந்தும், ஒட்டைக்கழுத்தைப்போல்உயர்ந்தும்,தொட்டால்சுடுகையாயும் பிறக்கும். இதனுல் தாபச்சுரமும் உண்டாகும்.

௩-வது சிலேஷ்ம பகந்தரவிரணம்.

இது நிலைபெற்றவேருடன் வெளுத்தும் கனத்தும் வழுவழுத்தும் பிறக்கும். இதனுல், அதிக நமைச்சல் உண்டாகும்.

ச-வது வாதபித்த பகந்தரவிரணம்.

இது கருமைசெம்மை கலந்த முகத்துடன்பிறக்கும். இதனுல்,அந்த இடத்தில் சீழ்வடியும்போது ஒருசத்தம் உண்டாகும்.

ரு-வது வாதசிலேஷ்ம பகந்தரவிரணம்.

இது, வெளுத்தநிறமும் கொஞ்சங்கறுத்தநிறமும் உடையதாகப் பிறந்து, கஷ்டத்தின்மேல்பழுத்து உடைவதாயிருக்கும்.

சா-வது சிலேஷ்மபித்த பகந்தரவிரணம்.

இது சிலேஷ்மபித்த பகந்தரக்குறிகளை உடையதாயிருக்கும்.

எ-வது திரிதோஷ பகந்தரவிரணம்.

இது, காலின்பெருவிரற் பிரமாணத்தையும் பற்பலநிறத்தையும் உடையதாகப் பிறந்து, அவ்விரணத்தில் எரிச்சலுடன் குத்தலையும் உண்டாக்கும்; அப்போதுசுரமும், அரோசகமும், தாகமும்,வாந்தியுங்காணும்.

இனி, எண்வகை ஆகந்துக பகந்தரவிரணங்களைச் சொல்லுவாம்.

க-வது சதபோனக பகந்தரவிரணம்.

இது முன்புசொன்ன பகந்தரக்கட்டிகள் பழுத்து உடைந்து ஒன்றோடொன்றாய்க் கலக்குங்காலத்தில்பிறக்கும்.இதனால்புற்றைப்போல் சிறுசிறுதுவாரங்களைஉள்ள விரணங்கள் விருத்தியாகும். இதில் நின்றும், துர்க்கந்தச் சீழ்ரத்தம் வடிவதுமன்றி, சிலவேளைநுரையுடன் சுத்தசலம் வடிவதாயிருக்கும். சதம் என்பது நூறு; போனகம் என்பது புற்று.

உ-வது உஷ்டரகிரீவ பகந்தரவிரணம்.

இது,பித்தத்தால்பிறந்து,மிருகண்களுடன்ஒட்டைக்கழுத்தைப்போல் நீண்டிருக்கும். உஷ்டரம் என்பது ஒட்டை; கிரீவம் என்பது கழுத்து.

௩-வது பரிசிராவி பகந்தரவிரணம்.

இது, சிலேஷ்மாதிக்கத்தால் பிறந்து, அத்துவாரங்களில் நின்றும் வெந்துநைந்துகரைந்த நொய்யவஸ்துக்களைப்போல்சீழைஒழுகச்செய்யும். பரிசிராவி என்பது ஒழுகுதல்.

௪-வது * பரிக்ஷேபி பகந்தரவிரணம்.

இது, வாதபித்தத்தினால்பிறந்து, அகழிபோலாசனத்தைச்சுற்றிலும் துவாரங்களை உண்டாக்கி, ரத்தமுதலியவைகளை ஒழுகச்செய்யும்.

ரு-வது ருசு பகந்தரவிரணம்.

இது, வாதபித்தத்தினால்பிறந்து, குத வளையங்களை ஒட்டிஒழுங்கான துவாரங்களை உண்டாக்கி, சீழை ஒழுகுவிக்கும். ருசு என்பது ஒழுங்கு.

சு-வது அரிசோ பகந்தரவிரணம்.

இது முற்கூறிய ருசுபகந்தரத்தில் வியாபித்த வாதபித்தங்கள் மிகவும் அதிகரிக்குங்காலத்தில் பிறக்கும். இதனால், ஆசனவளையத்தினது அடியில் வீக்கமும் நமைச்சலும் எரிச்சலும் உண்டாகும். அவ்வீக்கம் பழுத்து உடைந்தால், அதில்நின்றும் வருகின்ற புளித்தசலம் ஆனது நடக்கும்போதும் இருக்கும்போதும் ஒழுகிக்கொண்டேயிருக்கும். இதனை மூலபகந்தரம் எனவும் சொல்வர். அரிசோ என்பது மூலம்.

எ-வது § சம்புகாவர்த்தபகந்தரவிரணம்.

இது,திரிதோஷத்தால்பிறந்து,ஆசனஸ்தானத்தில்நத்தையோட்டுச் சுழியைப்போல்துவாரங்களை உண்டாக்கும்; அப்போது நடந்தால் அந்த விரணமானது அறுபடுவதுபோல் இருக்கும்.

---

* பரிக்ஷேபி என்பது நாலுபுறத்திலும் துவாரங்களை உண்டாக்குவதாம்.

§ சம்புகா என்பது நத்தையோடு; ஆவர்த்தம் என்பது சுழல்.

௮-வது க்ஷதச பகந்தரவிரணம்.

இது, மேற்கூறிய பகந்தரவிரணங்களை ஆயுதத்தாலாவது கயிற்றாலாவது அறுக்கையில் சன்னநரம்புகள் அறுபட்டு வெளிப்படும்போது துர்ம்மாமிசம்வளர்ந்து, முன்பு இருந்த குதஸ்தானம்போலவே விருத்தியாகுங்காலத்தில்பிறக்கும். அதன்விவரம்:—முன்பு அறுபட்டுக்காயமான மார்க்கத்தில் துர்ம்மாமிசம் குறுக்காகவளர்ந்து வெளிப்பட்டுச் சீழினால் மிகவுங் கொழுத்துக்குதறப்படும். அப்படி வளர்ந்தமாமிசத்தில் மின்றும் கிருமிகள் உண்டாகிக் கத்தியினால் கொய்ததுபோலவே ஆசன ஓரம் முற்றிலுந்தின்றுவிடும். இதனால் தினவும் எரிச்சலும்நோவுமுண்டாகும். இக்குணங்கள் சகல பகந்தரரோகங்களுக்கும் பொதுவாக விருக்கும். ஆதலால் இவ்விரணங்களைச் சத்திரஞ்செய்யும்போது உபாயத்துடன் செய்து சவுக்கியம் பண்ணவேண்டும்.

ஆக ஆகந்துகபகந்தரவிரணம் ௮-ம் முற்றியது.

சாத்தியா சாத்திய பகந்தரவிரணநிதானம்.

ஒரு ஒரு தோஷத்தால் பிறந்த பகந்தரவிரணம் ௩-ம் இரண்டு இரண்டு தோஷத்தால் பிறந்த பகந்தரவிரணம் ௩-ம், தாமதத்தின்மேல் சாத்தியமாம். திரிதோஷ பகந்தரவிரணமும், க்ஷதசபகந்தரவிரணமும் அசாத்தியமாம். ஆகந்துகபகந்தரங்களுக்குள்,எந்நேரமும்,சீழ் ரத்தத்தை வடிப்பதும்,குதவளையங்களில்முளைப்பதும்,நரம்பைப்பற்றியிருப்பதுமாகிய பகந்தரவிரணங்கள் அசாத்தியமாம். இவைக்குச் சப்தாசனரசப்படங்கு முதலியமருந்தும் ஆயுதச்சிகிச்சையும் நலஞ்செய்யும்.

கிரந்திபேதம்.

சிலேஷ்ம பிரதானங்களால் முற்கூறிய விரணஸ்தானங்களிலாவது, மற்றையஸ்தானங்களிலாவது வாதகிரந்தி ஆதியாக ரணக்கிரந்தி ஈறாக ௯-விதக்கிரந்தி பிறக்கும். கிரந்தி என்பது நரம்புகளின்முடிச்சு.

௧-வது வாத கிரந்தி.

இது, கறுத்தும்,காரணமில்லாமலேவிருத்தியடைந்தும்,அப்படியே குறைந்தும், குத்தலையும் அதிரலையும் உடையதாகப் பிறக்கும். இது பழுத்து உடைந்தால், மிகுசிவப்புள்ள சுத்தரத்தம் ஒழுகுவதும் அவ்விரணம் மிருதுவை அடைவதுமாக இருக்கும்.

௨-வது பித்த கிரந்தி.

இது மஞ்சள்நிறத்தையும் சிவப்புநிறத்தையும்பெற்றுச்சதா எரிச்சலுடன்பிறக்கும். பழுத்துடைந்தால் சுடுகையானரத்தமும் சீழும்ஒழுகும்

௩-வது சிலேஷ்ம கிரந்தி.

இது வெளுத்தும் கனத்தும் நமைச்சலுடன் அதிகநோவில்லாமல் வீக்கத்தைத்தருவதாய்ப் பிறக்கும். பழுத்து உடைந்தால், இதில்நின்றும் குழம்பான சீழ் ஒழுகிக்கொண்டே இருக்கும்.

௪-வது ரத்த கிரந்தி.

இது திரிதோஷங்களினல் ரத்ததாதுவானது கெடுதியைஅடைந்து மிகவும்பொங்கிக் கொதிக்கும்போது அதில் உண்டாகின்ற நுரைகளினல் சனித்தகிருமிகள் தமதுமூக்கினல் கிண்டுங்காலத்தில்பிறக்கும். இக்கிரந்தி மாமிசத்தையும்நரம்பையும்அநுசரித்துப்பித்தகிரந்திக்குள்ளகுறிகளுடன் உதிரத்தை வடியப்பண்ணும்.

௫-வது மாமிச கிரந்தி.

இது;மாமிசத்தைவிருத்திபண்ணுகின்றஇறைச்சிமுதலியதிண்டிகளால் பிறந்து,மினுமினுத்தும் பருத்தும் கெட்டியாய்நரம்புகளால் சுற்றப்பட்டும் இருக்கும். இதுபழுத்துடைந்தால், கபக்கிரந்திக்குணங்களைத்தரும்.

௬-வது மேதோ கிரந்தி.

இது, மேதோதாதுவை யதிகரிக்கச்செய்கின்ற ரசாதிவஸ்துக்களை விசேஷம்புசித்தலால்அதுவிருத்தியடையும்போதுவாயுவின்கோபத்தினல் மாமிசத்திலாவது சருமத்திலாவதுபிறந்து,வெளுப்பதும் வழுவழுப்பதும் மினுமினுப்பதும் குலுங்குவதுமாயிருக்கும். இது பழுத்து உடைந்தால், சீழானது பிசினைப்போல் குழம்பாகக்கறுத்தும் சிவந்தும் வெளுத்தும் ஒழுகும். இக்கிரந்தி விருத்திக்ஷீணமாயிருப்பதால் தேகம் இளைக்கும்.

௭-வது அஸ்தி கிரந்தி.

இது, எலும்புகள்நொறுங்கலாலும் அபிகாதத்தினலும் உண்டாகி, பருத்து உயருவதும் கொஞ்சம் அமுங்குவதுமாக இருக்கும்,

௮-வது நரம்புக் கிரந்தி.

இது, வெகுதூரமுள்ளவழியை ஓரேநடையாகநடந்துவந்து அந்த வேகந்தணிவதற்குமுன் மிகுசீதளசலத்தில் ஸ்நானம் செய்தலாலும், வெகு சஞ்சாரத்தினலும், வெடியுப்பிற்சனித்த அட்டுப்புச்சேர்ந்த உணவுகளினலும்,நரம்புகள்உப்பிஉட்புறத்தில்தடிக்க,இதனல் ரத்ததாது வானது ஓட்டம் இல்லாமல் தேங்கும்போது,பிறக்கும். அதன்விவரம் அப்படிக்குத்தேங்கியரத்தத்தோடு கூடியநரம்புகளை வாயுசுட்கப்பண்ணி உலர்த்திவக்கிரமாக முடங்கச்செய்து, அம்முடக்குகளில் கெட்டிப் பட்டதுகளாய் நோவில்லாத நரம்புகளை வெளியில் வரப்பண்ணும்.

௬-வது விரண கிரந்தி.

இது ஆறு ரசவருக்கங்களையும் மட்டுமிதம் இன்றி நித்தியமும் புசித்தலினால் பிறக்கும். அதன்விவரம்:—அந்தரசமானது தேகத்தில் அற்பவிரணம் உண்டாயிருந்தாலும் அதைப்பிரபலப்படுத்தும், அல்லது இல்லாதிருந்தாலும் சிலநாளைக்குள் மாமிசஸ்தானங்களில் அம் மாமிசத்தையே கண்டுகண்டாக எழுப்பும்; அப்போது வாயுவானதுரோதுவாகக் கறுத்தரத்தத்தைவெளிப்படுத்தாமலவ்விடத்திற்சேர்த்துஉலர்த்துதலால், விரணங்கள் உண்டாகும். இதனால், எரிச்சலும் தினவும் அதிகரிக்கும். இது, மிகவும்பருத்து உயர்ந்தால், அற்புதகிரந்தி எனச்சொல்லப்படும். இவைகளை மேகாந்தத்தயிலம் முதலிய அவுஷதங்களினாலும் விரணச் சிகிச்சைகளினாலும் வசப்படுத்தவேண்டும்.

ஆக கிரந்தி ௬-ம் முற்றியது.

சாத்தியா சாத்திய கிரந்திநிதானம்.

வாதம், பித்தம், சிலேஷ்மம், ரத்தம், மேதோதாது ஆகிய இந்த ஐந்தினால் உண்டாகின்றகிரந்திகள் சாத்தியமாம். பருத்துக்கெட்டிப்பட்டு அதிர்ந்துகுலுங்குகின்ற கிரந்திகளும், மர்மஸ்தானம், கண்டம், வயிறு இவ்விடங்களில் பிறக்கின்ற கிரந்திகளும் அசாத்தியமாம்.

அற்புத கிரந்திபேதம்.

அற்புதகிரந்தி என்பது முற்கூறியவாதகிரந்திமுதல் மேதோகிரந்தி ஈறான ஆறுவிதக்கிரந்திகளின் குணங்களைப்பெற்றிருக்கும். ஆனால், கனத்தலும் பருத்தலும் உயர்தலும் விசேஷமாக உண்டாகி, வாதாற்புத கிரந்தி, பித்தாற்புதகிரந்தி, சிலேஷ்மாற்புதகிரந்தி, மாமிசாற்புதகிரந்தி, மேதோற்புதகிரந்தி, ரத்தாற்புதகிரந்தி என ஆறுவிதப்பேர்பெற்றிருக்குமென்றறிக. இவைகளும் முற்சிகிச்சையால்போம்.

ஆக அற்புதகிரந்தி ௬-ம் முற்றும்.

சோணிதாற்புத கிரந்தி.

இது,வாயுவானதுநரம்புகளில்ஓடுகின்றரத்தத்தைஓடவொட்டாமல் மறித்து,அந்நரம்புகளின்கீழ்அந்த ரத்தத்தைமாமிசமொத்தையைப்போல் கெட்டியாய்க்கசியவொட்டாமல்திரட்டித்தடிக்கப்பண்ணுவதால்பிறக்கும்; அப்போது அந்தத்தடிப்பின்மீது பல்லிமுட்டைகளைப்போல் சிறுசிறு மாமிசக்கொப்பிளங்கள் உண்டாகி விருத்திஅடையும். அவைகள் பழுத்து உடைந்தால், அங்குகெடுதியை அடைந்தரத்தமே ஒழுகும் என்றறிக. இவைகளுக்கும் முற்கூறிய சிகிச்சைகள் உதவும்.

சாத்தியாசாத்திய அற்புதகிரந்திநிதானம்.

அற்புதகிரந்தி ஆறுக்குள், மாமிச அற்புதமும், ரத்த அற்புதமும் அசாத்தியமாம். மற்றை ௪-ம் சாத்தியமாம். ஒருவேளை, மேதையினாலும் கபத்தினாலும் உண்டாகிப்பருக்கின்ற அற்புதகிரந்திகளும்அசாத்தியமாம்.

பாதவன்மீகரோகபேதம்.

நெய்தல்நிலவாசம், மலசலம்ஊறியபதார்த்தம், சிலேஷ்ம பிரதான வஸ்து இவைகளைப்புசித்தலினாலும், அதிகசையோகத்தினாலும், அதோகாயமான இரண்டுதொடைகளிலிருக்கின்ற நரம்புகளில்சிலேஷ்மநீரானது நிறையப்படும். அக்காலத்தில்வாதமும்பித்தமும் பாதங்களில் வியாபித்து, அவ்விடத்தில் கொஞ்சங்கொஞ்சமாகத் துர்மாமிசத்தைச் சேர்ப்பித்து, அதைப்புற்றுப்போல்பருக்கப்பண்ணும். அம்மாமிசம்அதிகரிக்கஅதிகரிக்க அரோசகமுதலிய துர்க்குணங்கள் அடிக்கடிபிறக்கும். இதுவே பாதவன்மீகமாம். இது வாதபாதவன்மீகம், பித்தபாதவன்மீகம், சிலேஷ்மபாதவன்மீகம்எனமூன்றுவிதப்படும். இதனைச்சிலிபதரோகம்என அசுவனீயம் என்னும் சாஸ்திரம்கூறுகின்றது. உலகத்தார் யானைக்கால் எனச் சாதாரணமாகச் சொல்லுகிறார்கள். வன்மீகம் என்பது புற்று.

க-வது வாத பாதவன்மீகரோகம்.

இது ஒருபாதத்திலாவது இரண்டிலுமாவது நாளுக்குநாள் விருத்தியடைகின்ற வீக்கத்தை உண்டாக்கும்; அப்போது அதில் உள்ள துர்ம்மாமிசமானது,கறுத்துஉண்டையும் உருளையுமாய்க் கருணைக்கிழங்குமுளைகளைப்போல் எழும்பி, கெட்டிப்பட்டுச் சொறசொறத்து, மினுமினுப்பில்லாமல் சிலவேளை நோவைத்தருவதாயிருக்கும்.

உ-வது பித்தபாதவன்மீகரோகம்.

இதுதொடைநரம்புகளில்பித்தநீருங்கலந் திறங்கலால் உண்டாகும்; அப்போது அரையில்நெறிகட்டுதல், பாதத்தில் மஞ்சள்நிறமான வீக்கம், மேலில் எரிச்சல், சுரம், பிதற்றல், கண்ணில் பீதவன்னம், வாந்தி, சிலவேளைபேதி அல்லது மலக்கட்டு என்னும் இக்குணங்களுண்டாகும்.

௩-வது சிலேஷ்மபாதவன்மீகரோகம்.

இதுபாதத்தில் மினுமினுப்புடன் குளிர்ச்சியும் வெளுப்பும் உள்ள வீக்கத்தைஉண்டாக்கும். ஆனாலவ்வீக்கத்தின்மீதுபுற்றெழும்புவதுபோல் சிறிதும் பெரிதுமாகத் துர்ம்மாமிசம்வளர்ந்து முழங்காலுக்கு மேலும் உயர்ந்து நோவில்லாமல் தளதளப்பாக இருக்கும்.

சாத்தியாசாத்திய பாதவன்மீகரோகநிதானம்.

எந்தவன்மீகமாவதுநூதனமாகப்பிறந்துஒருவருஷத்திற்குமேற்பட்டு முதிராமல் அற்பமாயிருக்கில், குழித்தயிலம் முதலிய சிகிச்சைகளினால் சாத்தியமாம். பாதப்பிரமாணத்திற்குமீறி இரண்டுபக்கங்களுக்கும் அதிகமாகப்பிதுங்கி, ஆள்வள்ளிக்கிழங்கு, புற்று, தூண், யானைக்கால்முதலிய பிரமாணங்களைப்பெற்று விருத்தி அடைந்தவீக்கம் அசாத்தியமாம்.

மதாந்தரம்.

தேசபேதங்களினால்,கை,உதடு,செவி,மூக்குமுதலிய அவயவங்களில் பாதவன்மீகம்போல் வீங்குமென்றும், அவைகளும் பாதவன்மீகந்தான் என்றும் சிலர் சொல்லுகிறார்கள். திருமூலர், தரும சவுமியர்முதலிய பெரியோர்கள் செய்த சாஸ்திரம் அவைகளை அவ்வவ் விடப்பெயர்பெற்ற புற்றுக்களெனக்கூறுகின்றது. இதற்கு,க்ஷத்திரக்ஷாராக்கினிச்சிகிச்சையும், ரசாதி அவுஷதங்களும் பயன்படும்.

மதாந்தரம் முற்றியது.

கண்டமாலைரோகபேதம்.

வாதபித்தசிலேஷ்மங்களானவைமேதோதாதுவை யநுசரிப்பதனாலும், மாமிசதாது விருத்தியினாலும், கழுத்தின்நரம்புகளிலும், கண்களிலும், அக்குள்களிலும், அரைகளிலும், தேகநிறத்தைப்பெற்றுக் கெட்டிப்பட்டு மினுமினுத்து நெல்லிக்காய் இறுகத்தரிக்காய்ப் பிரமாணத்தை ஒத்துச் சிறிதும்பெரிதுமானகட்டிகளுண்டாகும். அவைகள்நாட்சென்று பழுத்து உடைந்து நடுவில்குழிவிழுந்து பலபேதங்களாய் இருக்கும். இவற்றுள் சிலது அற்பநோவுடன்உடைந்துசீழைச்சொரிவதும்,சிலதுநமைச்சலுடன் உஷ்ணத்தைத்தருவதும், சிலது கிளைத்துக்கொண்டேயிருப்பதும், சிலது நெடுநாள்சென்றுங் கரையாதுவலுப்பதுமாக இருக்கும் இந்தரோகம், கண்டத்தைச்சுற்றிலும் மாலைபோல் பிறப்பதால், கண்டமாலை எனப் பேர்பெற்றது. இதுதொடைக்கவுட்டிகளில்கண்டால், அரையாப்புக்கட்டி என்பர். இவைகட்கு லிங்கபூரப்படங்கு, வச்சிரபீசத்தயிலம் முதலிய அவுஷதங்களும், விரணச்சிகிச்சைகளும் உதவும்.

அசாத்திய கண்டமாலைரோகநிதானம்.

எந்தக் கண்டமாலைக்கட்டியாவது, அறுகின்வேரைப்போல், கிளைப் பதும், அடங்குவதுமாயிருந்து இதனால் சுரம், இருமல், வாந்தி, பீநசம், பக்கநோவு, தேகசுட்கம் என்னும் இக்குணங்கள் உண்டாகில், அசாத்திய மாகவே முடியும். இக்குணங்கள் இல்லாவிடில் சாத்தியமாம்.

நாடிவிரணபேதம்.

நரம்புகளில்பிறக்கின்றகட்டியானதுபழுத்துஉடைந்துவிஷமித்தால், அந்த நரம்பைப்பற்றி மாமிசதாதுமுதல் அஸ்திதாதுவரைக்கும் சீலை யோடும். எவ்வாறென்னில், அதுஒருநரம்பைப்பற்றினாலும்,அதற்குச்சகல நரம்புகளும் சம்பந்தப்பட்டு வலைப்பின்னலைப்போல் இருப்பதால், சீலை ஓடுதற்கும் சீழ்க்கொள்ளுதற்கும் ஒருவழியே அன்று, பலவழியும் உண் டென்றறிக. ஆதலால், இதைச் சீலையோடவொட்டாமல் உபாயத்துடன் வசப்படுத்தவேண்டும். இதுவே நாடிவிரணமாம். இது,வாதநாடிவிரணம்,

பித்தநாடி விரணம், சிலேஷ்மநாடி விரணம், திரிதோஷநாடி விரணம், அஸ்திநாடிவிரணம் என ஐந்துவிதப்படும். நாடி என்பது நரம்பு.

க-வது வாத நாடிவிரணம்.

இது, சூட்சுமமுகத்துடன் நிறபேதமாகப்பிறந்து, அதிக நோவைத் தரும். இக்கட்டியானது பழுத்து உடைந்தால், அதில் நுரைத்தசலம் வடிவதும், ராத்திரியில் கருஞ்சிவப்புரத்தம் ஒழுகுவதுமாக இருக்கும்.

உ-வது பித்த நாடிவிரணம்.

இது,சுரம், தாகம், எரிச்சல் இவைகளை உண்டாக்கிக்கொண்டே பிறக்கும். இக்கட்டிபழுத்து உடைந்தால், மஞ்சள்நிறத்துடன் சுடுகை யுள்ளதுர்க்கந்தச்சீழும் ரத்தமும் பகற்காலத்தில் ஒழுகுவதாயிருக்கும்.

ங-வது சிலேஷ்ம நாடிவிரணம்.

இதுதடித்துக் கெட்டிப்பட்டு மினுமினுப்புடன்பிறக்கும். இக்கட்டி பழுத்து உடைந்தால், எங்கேறமுஞ் சீழ்வடிவதாயிருந்தாலும், ராத்திரி காலத்தில் மிதம் இல்லாமல்வடிதலும் அதிநமைச்சலும் உண்டாகும்.

ச-வது திரிதோஷ நாடிவிரணம்.

இது வாதநாடிவிரணமுதலிய மூன்றுநாடி விரணங்களுக்குள்ள குணங்களையெல்லாம் உண்டாக்கும். இது அசாத்தியமாம்.

ரு-வது அஸ்தி நாடிவிரணம்.

இது,எலும்பின்மார்க்கத்தில்பிறந்து, அந்தஎலும்பின்நரம்புகளுக்கு உபத்திரவத்தைத் தருவதுமன்றி மிருதுவாயிருக்கும். இக்கட்டி பழுத்து உடைந்தால், இதில்நின்றும் நுரைத்துச்சுடுகையுடன் ரத்தமும் சீழும் வடியும்.இதனால்மிகுந்தவேதனையுண்டாகும்.இவ்விரணம்பிறந்தஎலும்பை அறுத்துவாங்கிச் சிகிச்சைசெய்யாவிடில் வசப்படாதென்றறிக. இதனைச் சல்லியநாடிவிரணம் என்பர்.

ஆக நாடிவிரணம் ரு-ம் முற்றிற்று.

க்ஷுத்திரவிரணரோகபேதம்.

க்ஷுத்திர விரணரோகமானது அஜகள்ளிகாரோகம் ஆதியாக கோடரோகம் ஈறாக ௯௪-விதப்படும். க்ஷுத்திரம் என்பது அற்பம்.

க-வது அஜகள்ளிகாரோகம்.

இது சிலேஷ்மவாதங்களினால் பயற்றைக் கயிற்றில்கோத்ததுபோல் நீளமாக மினுமினுப்புடன் நோவில்லாத கொப்பிளங்களை உண்டாக்கும். இந்தரோகம் குழந்தைகளுக்கே முக்கியமாகக்காணும். இது ஆட்டினது கழுத்தில்தொங்கும் அதிர்போற் படருவதால் அஜகள்ளிகா எனப் பேர் பெற்றது. அஜம் என்பது ஆடு; கள்ளிகா என்பது அதிர்.

உ-வது யவபிரக்கியாரோகம்.

இதுவாத சிலேஷ்மங்களினால் மாமிசத்தைஒட்டி வரகுப் பிரமாண மாகக் கனத்தகொப்பிளங்களை உண்டாக்கும்.

௩-வது அலசிரோகம்.

இது வட்டவடிவாய்த்தடித்தும் உயர்ந்தும் இருக்கின்ற சிறுசிறு கட்டிகளை நெருக்கமாகப் பிறப்பிக்கும். அக்கட்டிகளின் முனையானது உள்ளழுந்தி,நடுவில்பள்ளம்விழுந்து, அதில்கொஞ்சம் சீழ்வடிவதாயிருக்கும்.

௪-வது கச்சபிரோகம்.

இதுசிற்றுருவமுள்ள ஆமைமுதுகைப்போல்மழுங்கலாகஉப்புகின்ற கிரந்திகளை ௫-௬ என்னும் கணக்கிடும்படிக்கு உண்டாக்கும்.

௫-வது பனசிகாரோகம்.

இதுகாதின்மேலாவது அக்காதின்முற்றிலுமாவதுகெட்டிப்பட்டதாய் ஆம்பற்கிழங்குகளைப்போல் கட்டிகளைப்பிறப்பித்து அதிக வேதனையை உண்டாக்கும். இவ்விரணம்,பலாக்காய் முள்ளுகளைப்போல் உருவத்தைப் பெற்றிருப்பதால், பனசிகாரோகம் எனப் பேர்பெற்றது.

௬-வது * பாஷாணகர்த்தபிரோகம்.

இது கல்லுகளைப்போல் கெட்டியாய் நிலைபெற்றுவீங்கி அற்ப நோவைத்தருகின்ற கட்டிகளை உண்டாக்கும்.

௭-வது முகதூஷிகாரோகம்.

இது,வாலிபர்முகங்களில்,வெங்காயம்போலும்இலவமுள்ளைப்போலுமடிபருத்து முளை உள்ளகொப்பிளங்களை உண்டாக்கி, உபத்திரவத்தைத் தரும். இதனை முகப்பருவு என்பர். இது நகமுதலியவைகளால் விருத்தியடைந்தால் அபாயமாம். முகதூஷிகம் என்பது வெங்காயம்.

௮ வது பதுமகண்டகரோகம்.

இது சிலேஷ்மவாதங்களினல் தாமரைக்கொடியினது முட்களைப் போல்நோவில்லாத வெளுத்தசொறிகளைத் தேகமுற்றிலும்நிறைப்பிக்கும். இதனைத் தவளைச்சொறி, பெருஞ்சொறி என்பர். இது பசலைவெங்காயக் கல்க்கக்குளியலால்போம். பதுமகண்டம் என்பது தாமரைமுள்.

௯-வது விவுர்தரோகம்.

இது,வட்டவடிவாய் அத்திப்பழம்போல்வாய்திறந்தகொப்பிளங்களை எழுப்பி, சுரத்தையும் தாகத்தையும் எரிச்சலையும் உண்டாக்கும்.

௰-வது மசூரிரோகம்.

இது தேகத்திலாவது வாயிலாவது சிறுகடலையை ஒத்தகொப்பிளங்களை உண்டாக்கும். இதனல் தாகமும் சுரமும் நோவும் உண்டாகும்.

௰௧-வது விஸ்போடரோகம்.

இது முற்கூறிய மசூரிரோகத்தைப்பார்க்கிலு மதிகவிரணத்தையும் நோவையும் வெகுசங்கட்டத்தையும் உண்டாக்கும்.

---

* பாஷாணம்என்பது கல் ; கர்த்தபி என்பது வெண்காக்கட்டான்காய்.

௰௨-வது வித்தாரோகம்.

இது வாதபித்தங்களினால் தாமரைக்காய்போல் உருவமும் நிறமும் முளைகளும்உள்ள புடைகளைஉண்டாக்கும். அதிவேதனையோடுங் கூடிய விரணத்திற்கு வித்தா எனப் பெயராம்.

௰௩-வது கர்த்தபிரோகம்.

இதுமண்டலாகாரமாய்வெண்காக்கட்டான்காயினது உருவத்துடன் சிவந்தகொப்பிளங்களை விஸ்தாரம் உண்டாக்கும்.

௰௪-வது கட்சியாரோகம்.

இது வாதத்தை அல்லது பித்தத்தைக்கொண்டு அக்குளுக்கு உள்ளிலாவது அதைச்சுற்றிலுமாவது நெற்பொரியைப்போல் மெல்லிய கொப்பிளங்களை நெருக்கமாகநிறையப்பண்ணும். கட்சி என்பது அக்குள்.

௰௫-வது கண்டரோகலக்ஷணம்.

முற்கூறிய கட்சியாரோகத்தினது பக்கத்தில்கட்டிகள் உண்டாகி வெளுத்துப்பருத்தால் கண்டரோகம். கண்டம் என்பது இடம்.

௰௬-வது ராஜிகாரோகம்.

இது வெய்யிலாதி இறுக்கத்தால்வருகின்ற வியர்வையைக்கொண்டு சரீரநிறம்போலவேசிறுத்தும்பருத்தும்அணுக்களை ஒத்தும்வட்டவடிவாய் நெருங்கிய வேர்க்குருவை உண்டாக்கும். இதில் நமைச்சல் விசேஷமாய் இருக்கும். இதுவே வேர்க்குருவாம். ராஜிகா என்பது கடுகு.

௰௭-வது ஜாலகர்த்தபிரோகம்.

இது, பித்தப் பிரதானமான வாத சிலேஷ்மங்களினால், விசர்ப்பி ரோகத்தைப்போல் கறுப்புசிவப்பான கொப்பிளங்களை தாமதத்தின் மேல் பிறப்பிக்கும். அவைகள் சீக்கிரத்தில் பழுத்துஉடைந்து வலைக்கண்போல் இருப்பதன்றியும், சுரத்தையும் உண்டாக்கும். ஜாலம் என்பது வலை.

௰௮-வது அக்கினிரோகணிரோகம்.

இது சுரத்தினால் மெலிந்தவர்களுக்குப் பித்தப்பிரதானமான வாத சிலேஷ்மங்களினால் அக்குளுக்குள் மாமிசகண்டத்தைப்போல் கட்டிகளை உண்டாக்கும். அவைகள்கட்டைநெருப்புப்போலிருந்துகொண்டுஉபத்திர வத்தைச்செய்து, ௫, ௭, ௰௫ என்னும் நாட்களில் தப்பாது மரணத்தைக் கொடுக்கும். அந்நாள் தப்பில் சாத்தியமாம்.

௰௯-வது பரிகல்லிரோகம்.

இது வாதபித்த சிலேஷ்மங்களின் குறிகளுடன் வளையாகாரமான கட்டிகளை நெஞ்செலும்புகளைச் சுற்றிலும் உண்டாக்கும்.

௨௰-வது பிதாரிகாரோகம்.

இது அக்குளுக்குள்ளாவது அரைகளுக்குள்ளாவது நிலப்பூசினிக் கிழங்குபோல் பருத்துக்கெட்டிப்பட்ட கட்டிகளை உண்டாக்கும்.

௨௧-வது சர்க்கராரோகம்.

இது, அஸ்திநரம்பு, மாமிசநரம்பு, மற்றைநரம்புஆகிய இவைகளில் அநுசரித்த மேதோதாதுவினாலும், வாதசிலேஷ்மத்தினாலும், சரீரம் முற்றிலும்சுக்கான்கல்லுகளைப்போல் கிரந்திகளைஉண்டாக்கும். அவைகள் பழுத்து உடைந்தால், தேன் நெய் கொழுப்புஎன்னும் இவைகளைப்போல் சீழ்வடியும். சிலவேளை அது வாதாதிக்கத்தால் மணலைப்போலும் உமியைப்போலும் உண்டை உண்டையாக விழுந்தாலும் விழும்.

௨௨-வது சருக்கரார்ப்புதரோகம்.

இது முற்கூறிய கட்டிகளைப் பார்க்கிலும் பருத்தகட்டிகளை உண்டாக்கும். இதில்நின்றும் துர்க்கந்தரத்தத்துடன் பலநிறச்சீழ்வடியும்.

௨௩-வது வன்மீகரோகம்.

இது, பாதம்,கை,கால்,இரண்டு எலும்புகள்சேர்ந்தஸ்தானம்,ஆகிய இடங்களில்,புற்றினதுமுகங்களைப்போல்சிறுமுகங்களை உடையகிரந்திகளை எழுப்பும். இதனால், நோவும் தினவும் வியர்வையும் அதிகப்படும்.

௨௪-வது கதரரோகம்.

இது, பருக்காங்கல்லுகளின்மேல் நடக்குதலாலும், முள்ளுகள் தைத்துஒடிதலாலும்,பாதத்தில்அரத்தைப்போலுமிருக்கின்றமுடிச்சுகளை உண்டாக்கும். இதனை ஆணி என்பர். கதரம் என்பது அரம்.

௨௫-வது ருத்தகுதரோகம்.

இது, நாள்தோறும்மலத்தை அடக்கிஅடக்கி விடுதலால் அபான வாயுவுகுதத்தைநன்றாக அநுசரித்து,அத்துவாரவளையத்தின் அடியையும் நுனியையும் சுருங்கச்செய்யுங்காலத்தில்பிறக்கும். அந்தச்சுருக்கத்தினால், மலமானது பிரயாசையின்மேல் வெளிப்படும். இப்படிக்கு வெளிப்படுந் தோறும் ஆசனத்தில் வெடிப்புஉண்டாகிப் பச்சைப்புண்போல் உபாதி நேரிட்டுக்கொண்டே இருக்கும். ருத்தம் என்பது தடுக்கப்பட்டதாம்.

௨௬-வது சில்வரோகம்.

இது,பித்தப்பிரதானமான வாதசிலேஷ்மங்களினால், நகக்கண்களைச் சுற்றிலுமிருக்கிறமாமிசத்தில்நோவோடுங்கூடியவீக்கத்தை உண்டாக்கும். இதனால், எரிச்சல், சுரம், முதலிய துர்க்குணங்கள்பிறக்கும். இதுபோல் ஒவ்வொரு நகங்களில் கட்டிஎழும்பி உபத்திரவஞ் செய்யும். இதனை, நகச்சுற்று, விரற்சுற்று, உகிர்ச்சுற்று என்பர். இது, வேதனையைச்செய்து நகத்தின் வேரைக்கெடுத்து அந்நகம் விழுவதற்குமுன்னமே மறுநகத்தை முளைப்பித்தால், உபநகரோகம், அகூதரோகம் எனப்பேர் பெறும். சில்வம் என்பது உபத்திரவத்தை உண்டாக்குதலாம்.

௨௭-வது குநகரோகம்.

இது,நகத்தில்பலமான அடிபடுவதனால்பிறந்து,அதில்கரிநிறத்தையும் சொறசொறப்பையும் உண்டாக்கும். கு என்பது கெடுதி.

௨௮-வது அலசவிரணரோகம்.

இது, சாதாரணகாலத்திலும், மாரிக்காலத்திலும், கெடுதிமண்ணையாவது, அவ்விதச்சலத்தையாவது, அழுகியசேற்றையாவது எந்நேரமும் மிதித்தலினாலும், மிதித்தவுடன் சுத்திசெய்யாமையினாலும் பிறந்து, பாதங்களின் ஓரங்களிலும் உள்ளங்காலிலும்விரற்சந்துகளிலும் தினவுடன் கூடியவெளுத்த புண்களைஉண்டாக்கும். அதில்நின்றும் புளித்தசலம் வடிந்துகொண்டே இருக்கும். இதனை, விரற்புண், சேற்றுப்புண், என்பர். இது கடுக்காயினாலும் வெந்த புளியங்காய்த்தசையினாலும்போம்.

௨௯-வது * திலகரோகம்.

இது,காலின்விரல்சந்துகளில் திலகம்போல் சிவந்தகொப்பிளங்களைப் பிறப்பிக்கும். அவைகள் நசுங்கினால் விரணமாகும்.

௩௰-வது மசரோகம்.

இது,கரியநிறமும்மரத்தலும்உடையதாய்,நோவில்லாமல்கொஞ்சம் உயர்ந்திராநின்ற காய்ப்புகளை எழுப்பும். இதனை மறுவென்பர்.

௩௧-வது ஜதுமணிரோகம்.

இது, முற்கூறிய ரோகத்தைப்பார்க்கிலும் உயர்ந்து, ஆரம்பத்தில் சிவந்து, பின்பு வெளுத்து, கறுப்புநிறத்தையும் எட்பிரமாணத்தையும் அரக்குமணியின் உருவத்தையும்ஒத்து,சருமத்தில் ஆணிஅடித்ததுபோல் மறுவுகளை உண்டாக்கும். ஜதுமணி என்பது அரக்குமணி.

௩௨-வது லாஞ்சனரோகம்.

இது பிறக்கும்போது கறுப்புச்சிவப்புப்புள்ளியுடன் வட்டவடிவாயிருக்கின்றமச்சங்களை உண்டாக்கும். லாஞ்சனம் என்பது புள்ளி.

௩௩-வது வியங்கரோகம்.

இது, துக்கத்தினாலும் கோபத்தினாலும் வாதமும் பித்தமும் அதிகரிக்கையில்பிறந்து, முகத்தில் கறுத்துச் சிறுத்து வட்டமாயிராநின்ற மச்சங்களைஉண்டாக்கும்.இது,மற்றை இடங்களில்பிறந்தால்,நீலிகாரோகம் எனப்பெயர்பெறும். இவ்விரண்டிடங்களிலும் வாயுவினால் பிறக்கின்ற மச்சங்கள் சொறசொறப்பாகவிருக்கும். பித்தத்தால் பிறந்தால், பிறக்கும்போதுசிவந்து, வளரும்போது கறுத்திருக்கும்.சிலேஷ்மத்தால்பிறந்தால், வெளுத்துத் தினவைத் தருவதாயிருக்கும். ரத்தத்தால் பிறந்தால், அடிச்சுற்றிலும் நுனியிலும் ரத்தநிறம் உண்டாகிச் சுடுகையாய் விரு விருப்பைத்தருவதாயிருக்கும். வியங்கம் என்பது மச்சம்.

---

* திலகம் என்பது பவளம்போல் மிகுந்தசிவப்புநிறம் உள்ள ஒருவித மரம்.

௩௪-வது பிரசுப்திரோகம்.

இது, வாயுவினுல் அடிபட்டசிலேஷ்மம் சருமத்தில் சேர்ந்து உலர்த்தும்போதுபிறந்து, அங்குவெண்மைநிறத்தையும் செம்மைநிறத்தையு முண்டாக்கி, பரிசஞானத்தைக்கெடுத்து, தினவுடன்திமிரை உண்டாக்கும். இதனை, மேகப்புடை என்றும், திமிர்வாதம் என்றும் கூறுவர்.

௩௭-வது உத்கோடரோகம்.

இது, வாந்திக்குக்கொடுக்கில்வாந்தி ஆகாமல் அந்த அவுஷதம்உள்ளில் தங்குவதனுல்கபபித்தங்கள் அதிகரிக்கும்போதுபிறந்து, வளையாகாரமாய்ச் சிவந்த நிறத்தையும் நமைச்சலையும் உள்ள அநேகவிதப் புடைகளை உண்டாக்கும். இதனைத் தேமல் என்பர். கோடம் என்பது மண்டலம்.

௩௯-வது கோடரோகம்.

இது, உத்கோடரோகத்திலுள்ள நமைச்சல்முதலிய குணங்களைப் பெற்று, விசேஷமாகப்படருகின்ற பலவிதத் தேமல்களை உண்டாக்கும். இவைகளுக்கு, நாறுசங்கிலைக்குடித்தயிலம், காகமாசித்தயிலம், பூவரசுக் கல்க்கம், வெள்ளைச்சந்தனப்பூச்சு, உஷத்கால ஸ்நானம்முதலிய உபாயச் சிகிச்சைகளைச் செய்யவேண்டும்.

ஆக க்ஷுத்திரரோகம் ௩௯-ம் முற்றியது.

பாதபேதரோகம்.

இது, வெகுதூரசஞ்சாரத்தினுலும்அதிகஉஷ்ணத்தினுலும்பாதத்தில் இருக்கின்றசிலேஷ்மமானது நாச மடையும்போதுபிறந்து, வாதபித்தத்தை அதிகரிக்கச்செய்து, குதிகால், உள்ளங்கால், முதலிய இடங்களிலும், அவ் வோரங்களிலும், கீற்றுக்கீற்றுனவெடிப்புகளைப்பிறப்பித்து, அவ்வெடிப்பின் வழியால் ரத்தம்முதலியவைகளைக் கசியப்பண்ணும்; அப்போதுநடந்தால் காலில்வருத்தம் உண்டாகும். இது, செந்தாமரைப்பூ ரசத்தையும் பசுவின்பாலையும் அரை அரைப்படி அளவாகச்சேர்த்துக் கொதிப்பித்து அந்தஆவியைத்தினந்தோறும் நாற்பதுநாள்வரைக்கும்பாதத்தில்பிடிக்கில், விலகும். பேதம் என்பது பிளக்குதல்.

குய்யரோகநிதானம்.

வாதபித்தசிலேஷ்மகுணங்களினுலும், வெகுபுருஷசஞ்சாரத்தினுலும், விரணுதிமேகங்களினுலும் கெடுதியை அடைந்து சுட்கித்தஅல்குல், வெகு புருஷசையோக அல்குல், புருஷவிருப்பம் இல்லாதஅல்குல், பிரசவித்துப் புண்ணுயிருக்கின்ற அல்குல், மாதாந்த ரத்த அல்குல் ஆகிய இவ்வல்குலை உடையஸ்திரிகளையும், நீசஸ்திரிகளையும், குதிரை முதலியவைகளையும், மிகுந்தசுவாசம்எழும்பும்படிக்கு நித்தியமும் சையோகஞ்செய்வதினுலும், பின்புசுத்திசெய்யாமையினுலும், போகித்தபின்பும்உடனேபோகிப்பதற்காக

வீணுதண்டில் தீக்ஷணலேபனம் பண்ணிக்கொள்ளல், அம்மாதரைக் கொண்டு ஆண்குறியைப் பிசைந்து நகங்களினுல் கிள்ளவும் வாயினுல் சும்பித்துப் பற்களால் மெதுவுறக்கடித்து நாவினுல் நெருடவும்சொல்லல், மயிற்குச்சினுல் அக்குள் பாய்ச்சச்செய்தல், முன்பு தான் அநுபோகித்த ஸ்திரிசுகத்தை நினைத்துக்கொள்ளல், பழத்தைக்கிளியானது மூக்கினுல் கொத்துவதுபோல் அல்குலில் ஆண்குறியால்குத்துதல், அவ்வேளையில் மூத்திரத்தை அடக்குதல்என்னுமிச்செய்கைகளைக்கொண்டுவலுவந்தமாகச் செய்கின்ற புணர்ச்சியினுலும் வாதபித்த சிலேஷ்மங்கள் அதிகரித்து, ஆண்குறியில்நின்று அவ்விடத்தில் உபதம்ஸரோகம் ஆதியாக திலகாலக ரோகம் ஈருக உ௬ ரோகங்களைப்பிறப்பிக்கும். இவற்றுள் உபதம்ஸரோகமானது வாதாதிகளினுலும் ரத்தத்தினுலும் ஐந்துவிதப்படும். இது, அல்குல்மார்க்கமாக ஆண்குறியைத் தொடருவதால், குய்யரோகம் எனப் பேர்பெற்றது. குய்யம் என்பது அல்குல்.

இனி, ஐந்துவித உபதம்ஸரோகங்களைச் சொல்லுவாம்.

க-வது வாத உபதம்ஸரோகம்.

இது, ஆண்குறியின்துவாரத்தை அடைத்துஉலர்த்தல், அவ்விடத்தில் மரத்தல், பலவிதநோவு, சருமத்தின்மீது குருக்குருவாக எழும்புதல் என்னும்இக்குணங்களை உண்டாக்கும். இது, விஷக்கடியால்உண்டாகின்ற துர்க்குணங்களைப்போல் சகல துர்க்குணங்களையும் உண்டாக்கலால், தம்ஸரோகம் எனப் பேர்பெற்றது. தம்ஸம் என்பது கடி.

உ-வது பித்த உபதம்ஸரோகம்.

இது, முற்கூறிய உபதம்ஸரோககுணத்துடன், ஆண்குறியில்சிவந்த வீக்கத்தை உண்டாக்கும். இதனுல், சுரமும் பிறக்கும்.

௩-வது சிலேஷ்ம உபதம்ஸரோகம்.

இது ஆண்குறியைத்தடித்துக்கனத்துமினுமினுத்துவீங்கச்செய்யும். இதனுல், சீதளமும் அவ்விடத்தில் தினவும் உண்டாகும்.

௪-வது திரிதோஷ உபதம்ஸரோகம்.

இது ஆண்குறியில்வாதமுதலிய மூன்றுஉபதம்ஸரோககுணங்களை உண்டாக்கும். இதனுல், இரண்டு அண்டங்களும் வீங்கும்.

௫-வது ரத்த உபதம்ஸரோகம்.

இது ஆண்குறியைக்கறுப்பாக்கிஎந்நேரமும்சுரத்தைஉண்டாக்கும்.

சாத்தியாசாத்திய உபதம்ஸரோகநிதானம்.

உபதம்ஸம்௫-ல், வாதமுதலியமூன்றுஉபதம்ஸரோகமும்சாத்தியம், ரத்த உபதம்ஸரோகம் கஷ்டசாத்தியம், திரிதோஷ உபதம்ஸரோகம்

அசாத்தியம். ஆயினும் குபேராக்ஷிஎண்ணெய்யால் சாத்தியமானாலும் ஆகும் ஆக ஐவகைப்பட்ட உபதம்ஸரோகம் முற்றிற்று.

௨-வது அரிசோரோகம்.

இது வாதபித்தகபங்கள் ரத்தமாமிசங்களை அநுசரிக்கும்போது பிறக்கும்; அப்போது ஆண்குறியின் உள்ளிலாவது வெளியிலாவது நமைச்சல், அவ்விடங்களில் மூலரோகமுளைகளைப்போலும் சிறு சிறு காளான் முளைகளைப்போலும் மாமிசம் எழும்புதல், அவைகளில் மிகவும் வியர்வைகசிதல். ரத்தம்வடிதல் என்னும் இக்குணங்கள் உண்டாகும். இதற்கு உடனே வைத்தியஞ்செய்யாவிடில், இது சுக்கிலத்தைக்கெடுக்கும். ஸ்திரிகளுக்கோ வென்றால், சோணிதத்தைக் கெடுக்கும்.

௩-வது சரஷபிகாரோகம்.

இது சிலேஷ்மரத்தத்தினால் ஆண்குறியின் உள்ளிலாவது வெளியிலாவது கடுகைப்போல் அநேககொப்புளங்களை உண்டாக்கும்.

௪-வது அவமந்தரோகம்.

இது ஆண்குறியில் நீளவடிவா யநேககொப்புளங்களை உண்டாக்கும்; அப்போது அவைகளின் நடுவில் வீறல் உண்டாகிச் சீழ்ரத்தம் ஒழுகுவதும் அன்றி, வேதனையும் ரோமச்சிலிர்ப்பும் உண்டாகும். இது, சகல உபத்திரவங்களுடன் கலந்து வெளிப்படுதலால், அவமந்தரோகம் எனப் பேர்பெற்றது. அவமந்தம் என்பது கலத்தல்.

௫-வது கும்பிகாரோகம்.

இது, பித்தத்தினாலாவது, ரத்தத்தினாலாவது, ஆண்குறியில் இலந்தைக் கொட்டையைப்போல் மாமிசக்கட்டியை உண்டாக்கும்.

௬-வது அலசிரோகம்.

இது, ஆண்குறியில் நின்றும் மேகத்தை விழச்செய்து, விரணத்தை உண்டாக்கும். அலசி என்பது மேகவிரணமாம்.

௭-வது உத்தபாரோகம்.

இது ஆண்குறியில் ரத்தபித்தத்தினால் சிறிதும் பெரிதுமான விரணங்களை எரிச்சலுடன் பிறப்பிக்கும். உத்தபா என்பது மிகுந்த எரிச்சல்.

௮-வது பிடகரோகம்.

இது, ஆண்குறியில் உழுந்து பயறு பிரமாணம் கொப்புளங்களைப் பிறப்பித்து, அவைகளைச்சுற்றிலும் விஸ்தாரமாகச் சிறுசிறுகொப்புளங்கள் உண்டாகும்படிக்குச் செய்யும்.

௯-வது புஷ்கரிகாரோகம்.

இது, ஆண்குறியில் தாமரைக்காயைப்போல் தழும்பை எழுப்பி, அதில் கொப்பிளங்களை உண்டாக்கும். புஷ்கரிகா என்பது தாமரைக்காய்.

௰-வது சம்வியூடரோகம்.

இது ஆண்குறியின்மீது புள்ளாங்குழலைப்பிடிக்கும் விரல்களைப் போல் குறுக்காகத் தடித்தவிரணத்தை உண்டாக்கும். இது, கைவிரலைப் போல்சேர்ந்திருக்குங்காரணத்தால்,சம்வியூடரோகம் எனப்பேர்பெற்றது.

சம்வியூடம் என்பது சேர்ந்திருக்குதலாம்.

௰௧-வது மிருதிதவிரணம்.

இது, ஆண்குறியில், கையால்பிசைந்த வாழைப்பழத்தைப்போல் குழைந்த விரணத்தைப்பிறப்பிக்கும். மிருதிதம் என்பது அளிதல்.

௰௨-வது அஷ்டீலிகாரோகம்.

இது ஆண்குறியில் விரணத்தைப்பிறப்பிக்கும். அது குழிவிழுந்து கல்லைப்போல் கெட்டியாயிருக்கும். அஷ்டீலிகம் என்பது கல்லு.

௰௩-வது அவிபாடிதரோகம்.

இது, வாதபித்த சிலேஷ்மங்களினால் ஆண்குறியினது சருமத்தை யெல்லாம் மிகவும்தடிக்கச்செய்து, பின்பு அத்தடிப்பைப்பிளக்கும்.

அவி என்பது அதிகம்; பாடிதம் என்பது பிளத்தல்.

௰௪-வது * நிருத்தமணிரோகம்.

இது, வாயுவினால் ஆண்குறியின் முனைச்சருமத்தைநையப்பண்ணி, அதை அம்மலரில் ஒட்டிக்கொள்ளச்செய்யும். இதனால், அத்துவாரம் அடைபட்டாலும் வேதனை இல்லாமல் சன்னமாக மூத்திரம் இறங்கும். ஆனால், மலரைவிட்டு அச்சருமத்தை மலர்த்தக்கூடாமையா யிருக்கும். இது, அம் மலர்மேல் மூடியசருமத்தை மலர்த்த ஒட்டாமல் தடுப்பதால், நிருத்தமணிரோகம்எனப்பேர்பெற்றது. இது,க்ஷத்திரசிகிச்சையினாலும், ரணத்தயிலம்முதலிய அவுஷதங்களினாலும் நிவிர்த்தியாகும்.

௰௫-வது கிரதிதரோகம்.

இது கபத்தினால் கோசச்சுற்றில் முள்ளைநிரைத்ததுபோல் சிறுசிறு கொப்பிளங்களை நெருங்க உண்டாக்கும். கிரதிதம் என்பது நெருக்கம்.

௰௫-வது பரிச ஆனிரோகம்.

இது, ஆண்குறியின்மலரில் சிவந்தநிறத்தை உண்டாக்கி, தொடக் கூடாத உபத்திரவத்தைப் பிறப்பிக்கும். இதனால், சுக்கிலம் வெளிப்பட மாட்டாது. பரிசம் என்பது தீண்டல்; ஆனி என்பது நாசம்.

---

* நிருத்தம் என்பது தடுத்தல்; மணி என்பது ஆண்குறியின்மலர்.

௰எ-வது சதபோனகரோகம்.

இது ஆண்குறிமுற்றிலும் சிறுசிறுதுவாரங்களை உண்டாக்கும், இதனால், மூத்திரம் வரும்போதெல்லாம் எரிச்சல் அதிகரிக்கும்.

௰அ-வது தொக்குப்பாகரோகம்,

இது, பித்த ரத்தத்தினால், ஆண்குறியின் சருமத்தைப் பழுத்து நையும்படிக்குச்செய்யும். இதனால், சுரமும் வேதனையும் உண்டாகும்.

௰௯-வது மாமிசபாகரோகம்.

இது, ஆண்குறியின் முனைமலரை நையப்பண்ணி, பற்பல வேதனையை மேன்மேலும் பெருக உண்டாக்கும்.

௨௰-வது ரத்தாற்புதரோகம்.

இது ஆண்குறிமுற்றிலும்ரத்தத்தினால்கருமைசெம்மைநிறம் உள்ள கொப்பிளங்களைப்பிறப்பிக்கும். இதனால், அனந்தம்வேதனைஉண்டாகும்.

௨௧-வது மாமிசாற்புதரோகம்.

இது ஆண்குறி மலரில் மாமிசநிறமுள்ள கட்டிகளை உண்டாக்கும்

௨௨-வது வித்திரதிரோகம்.

இது, திரிதோஷத்தினால், ஆண்குறியின் நரம்புகளில் வீக்கத்தை எழுப்பும். அது, கட்டியாகி நாலுபக்கங்களிலும் பரவி, விரணமாகும். இதனால், சகிக்கக்கூடாத குத்தல் உண்டாகும்.

௨௩-வது திலகாலகரோகம்.

இது, திரிதோஷத்தினால், ஆண்குறிமுற்றிலும், எள்ளு மிளகுப் பிரமாணங்களாய்க்கறுத்தநிறத்துடன்மாமிசத்தை மறுப்போலத்திரட்டித் தொங்கும்படிக்குச்செய்யும். அது உடைந்து விரணமாகும். இது, ஆரம்பத்தில் எள்ளைப்போல் உண்டாகிப் பின்பு பழுத்து உடைவதால், திலகாலகரோகம் எனப்பேர்பெற்றது.

ஆக குய்யரோகம் ௨௩-ம் முற்றியது.

சாத்தியாசாத்தியகுய்யரோகநிதானம்.

குய்யரோகம் ௨௩-ல்,உபதம்ஸம் ௧-தவிர,மற்றை ௨௨-ல்,மாமிசாற்புதம், மாமிசபாகம், வித்திரதி, திலகாலகம், இந்நான்கும் அசாத்தியமாம். மேற்கூறியகுய்யரோகங்களை, அக்கினிபுஷ்டி அவுஷதங்களாலும், மேகாரி எண்ணெய்களாலும், விரணச்சிகிச்சைகளாலும், வசப்படுத்தவேண்டும்.

மதாந்தரம்.

பிரமேகோற்பத்திலக்ஷணம்.

சதா ஸ்திரிபோகம், மோகத்துடன்பட்டினியாயிருத்தல், தம்பனச்சூடு, காரம்,உப்பு,துவர்ப்புஇவைகளை அதிகமாகப்புசித்தல், மனக்கிலேசம்

என்னும் இச்செய்கைகளினால் பிரமேகம் பிறந்து, முதல் முதல் முதுகந் தண்டெலும்புகளை வரிசையாகப்பற்றி, அதற்பின் நாபியைச்சுற்றிக் கொண்டு, குய்யஸ்தானமாகிய மூலாதாரத்தைஅண்டி, மிகுந்தநோவோடு நரம்பையும் எலும்பையும் சூழ்ந்துசோணிதத்தில்கலந்து, அடிவயிற்றில் இசிவை உண்டாக்கி வேதனையைக் கொடுக்கும்.

பிரமேகரோகபேதம்.

பிரமேகரோகமானது, வாதப்பிரமேகரோகம் ஆதியாக விரணப் பிரமேகரோகம் ஈறாக உக-விதப்படும்.

க-வது வாதப் பிரமேகரோகம்.

இது,கோமூத்திரம்போல் நீரிறங்கல்,கோசத்தின்அடியில்வலித்தல், வெளுத்துக் கட்டியாகச்சீழ்வடிதல், பீசத்தில் கனத்தலுடன்நோவு, அடிவயிற்றின்பக்கத்தில் பரபரத்தவேதனை, கனகனப்பு,வயிற்றில் இசிவு, சரீரவாட்டம் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

உ-வது பித்தப் பிரமேகரோகம்.

இது, சரீரத்தில் மிகவும்வாட்டம், தயக்கம், சகல கீல்களிலும் கால் களிலும்நோவு,தேகத்தில்கருமைநிறம்,எரிச்சல்,குதத்திலும்குய்யத்திலும் கடுப்பு, மஞ்சள்நிறமான சீழ்வடிதல், அருசி, கை கால் ஒய்ச்சல், கோசத்தில் விம்மலோடுநோவு என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

ங-வது சிலேஷ்மப் பிரமேகரோகம்.

இது, கோசத்தில்நோவுடன்கடுப்பு, அடிக்கடி வெண்மையாக நீரிறங்கல், தேகத்தில் பழுத்தவன்னம், உஷ்ணம், வாய் கண் நகம் இவைகளில் ரத்தம் இல்லாமை என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

ச-வது வாதபித்தப் பிரமேகரோகம்.

இது,சர்வாங்கத்திலும்நோவு,கோசத்தில்சலாகைசொருகினதுபோல் இருத்தல், அதில் நின்றும் மாவைக்கரைத்ததுபோல் சுறுக்குடன் நீரிறங்கள், வயிற்றில் கட்டி எழும்புவதுபோல் இருத்தல், மலமிறுகல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

ரு-வது பித்தசிலேஷ்மப் பிரமேகரோகம்.

இது, வாய்க்கசத்தல், அடிவயிற்றில்பொருமலுடன் இசிவு, கோசம் சுருங்குதல், மஞ்சளாயும்வெண்மையாயும் நீரிறங்கல், கீல்நோவு, பகல் நித்திரை,பசி இன்மை,சரீரம்ஊதல் என்னுமிக்குணங்களை உண்டாக்கும்.

சு-வது தொந்தப் பிரமேகரோகம்.

இது, சரீரத்தில்தினவு, புழுக்கள்ஊருதல்போலூருதல்,அடிவயிறு சுரத்தல், கோசத்தில் கருமைநிறம், அடிக்கடிகடுத்துநீரிறங்கல், அதைப்

பிடித்துப்பார்க்கில் அடியில்பலநிறமாகத்தோய்ந்திருத்தல், கவிசிநோய் காணல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௭-வது கட்டிப்பிரமேக ரோகம்.

இது, சரீரமுழுதும்சகிக்கக்கூடாதநோவுடன்கட்டிகள் எழும்புதல், கோசத்தில் சொறியுடன்தினவு, பருக்கைப்போல் சீழ்வடிதல், பீசத்தில் நீர்கசிதல், தேகவாட்டம் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௮-வது சலப் பிரமேகரோகம்.

இது, சர்வாங்கவேதனை, வாய்கசத்தல், வாந்தி, மயக்கம், மூத்திரக் கசிவிலும் வெளுத்தநீரிறங்குதல், அடிவயிற்றில்பிடுங்கல், மலத்தில்சீதம் விழுதல், அரையாப்புக்கட்டி என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௯-வது தந்திப் பிரமேகரோகம்.

இது, அடிவயிற்றில் புண்போல்நோதல், வீறுதண்டினது அடியில் விருவிருப்பு, விம்மல், நீர் இறங்கியவுடன்தந்திபோல் மேகந்தொங்குதல், வெள்ளைகாணல், இதனுல் அடிக்கடி சிலைநனைதல், கை கால் எரிவு என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௰-வது ரத்தப் பிரமேகரோகம்.

இது, தயக்கம், தலைதிருப்பல், சரீரம்பஞ்சைப்போல் மெதுவுறல், முயல் ரத்தமெனச்சிவந்துசுறுக்குடன் அடிக்கடிவேதனையைத் தருவதாய் நீர் இறங்கல், பேய்போல் அலைதல் என்னுமிக்குணங்களை உண்டாக்கும்.

௰௧-வது சீழ்ப் பிரமேகரோகம்.

இது, கோசத்தினதுநாளத்தில் கடுப்புடன் சீழைப்போல் வெள்ளை காணல்,அரையாப்பு,பகந்தரம்,நாபியில்விரணம்,கணுக்காலில் குடைச்சல், அடிக்கடி நீரிறங்குதல், அதிகுளிரோடுசுரம், மயக்கம், வேதனை, சர்வாங்கநோவு என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௰௨-வது ஒழுக்குப் பிரமேகரோகம்.

இது, கோசத்தினது துவாரவழியில்நின்றும், சீழ்ரத்தம்சலம்ஆகிய இவைகளைப்போல் மேகம்ஒழுகுதல், சரீரமுழுதுங்கருமையுள்ள மூளைக் கட்டிகள் எழும்பல், கனத்தவிரணம், குடைச்சல், எரிச்சல், வெகு நோவோடுபுரளல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௰௩-வது அரித்திராப்பிரமேகரோகம்.

இது, மஞ்சள்நிறமான வெள்ளைகாணல், சூடாகநீரிறங்கல், அந்த இடத்தில் நெருப்பைக்கொளுத்தினதுபோல் எரிச்சலுடன்கூடிய கடுப்பு, விருவிருப்பு,அதிக உஷ்ணம்,முகத்தில்மஞ்சள்நிறம், நாவில்கசப்பு, மனது திடுக்கிடல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௰௪-வது மூத்திரக்கிரிச்சரப் பிரமேகரோகம்.

இது, குத்தலுடன் மஞ்சள்நிறமானநீர் இறங்கல், துர்ப்பலம், நீர்க்கட்டு, நித்திரைப்பங்கம், அன்னத்திவேஷம், மனோசஞ்சலம், சர்வாங்கத்திலும் உளைச்சல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௰௫-வது காப்பான் பிரமேகரோகம்.

இது, வயிற்றில் உளைச்சல், சீதம்விழல், நீரானது உஷ்ணமாகவும் கடுப்பாகவும் இறங்குதல், ஒருவேளை அத்துவாரத்தைப்புண்ணாக்கிச் சுண்ணாம்புக் கல்லைக் கரைத்தசலம்போல் குத்தலுடன் இறங்கல், அழலையாய் வாட்டத்துடன் கை கால் ஓய்தல், உடம்பெல்லாம் நெருங்கிய பெருஞ் சொறி என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௰௬-வது கல்லுப் பிரமேகரோகம்.

இது, கோசத்தில்கள்ளைப்போல்மேகநீர்கசிதல், தேகத்தில்கற்றாழை நாற்றம்வீசுதல், வயிற்றில்கல்லைப்போல் மூத்திரம் சிக்கிக்கொண்டு விம்மி விருவிருப்புடன் நாபியைப்பற்றி உப்பிசமாகி பசியை அடக்கிக் கனத்தல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௰௭-வது தந்துப் பிரமேகரோகம்.

இது, கோசத்தில்நோவுடன்சிலந்திநூலைப்போல்மேகம்தொங்குதல், வெளுத்த உதிரங்காணல், அக்கோசம் விம்மும்போது வலித்தல், மடிப்பில்கிருமிசேருதல், விலாவில்குத்தல், மூத்திரந் துளித் துளியாக வீழ்தல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௰௮-வது நீச்சுப்பிரமேகரோகம்.

இது, கள்ளை ஒத்த நீர் இறங்குதல், வெளுத்த சீழ்வடிதல், கோசம் விம்மும்போதுநோவு,குத்தல், விருவிருப்பு, நரம்புசுருங்குதல், அடிவயிற்றிற் சூலை, குளிர் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௰௯-வது மலினப் பிரமேகரோகம்.

இது, குய்யஸ்தானம், குதஸ்தானம் ஆகிய இவ்விடத்து அடிநரம்புகளில்குத்தலுடன் அடிக்கடிநோவு,காந்தியீனம், மயக்கம், நாவு கைத்தல், புறங்காலிற்றிமிர், வெள்ளைகாணுதல், அவ்வீறு தண்டின் முனையில் தூர்ம்மாமிசம் சுருண்டிருத்தல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௨௰-வது மதுப் பிரமேகரோகம்.

இது, ஆண்குறியில்நோவுடன்தேன்போல் நீரிறங்குதல்,அந்தநீரில் எறும்புமொய்க்குதல். நாளத்திற்குள்விரணம், உடம்பில் ஒருவிதநாற்றம், அருசி, நாக்குவறளல், மயக்கம் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௨௧-வது விரணப் பிரமேகரோகம்.

இது, சர்வாங்கத்திலும்மிகுந்தநோவுடன்விரணம், ஆண்குறிகனத்தல்; அதில்நின்றும் சீழும் ரத்தமும் அதிகரித்தல், அக்கணுவில் கறுகட்ட நோதல், கடுத்தல் விருவிருத்தல், சரீரம்வெதும்பல் என்னுமிக்குணங்களை உண்டாக்கும். இவைகள், விளாம்பிசின்சூரணம், பிரமதண்டினதுபால், வெண்குங்கிலியநவநீதம், ஷை தயிலம், மேகாந்தப் பெருந்தயிலம், மேகநாதக்குளிகை, கருவங்கச்சிந்தூரம், வெள்ளிப்பஸ்மம் முதலிய அவுஷதங்களால்தீரும்.

ஆக பிரமேகரோகம் ௨௧-ம், மதாந்தரமும் முற்றியது.

யோனிரோகலக்ஷணம்.

சரீரத்திற்குப்பொருந்தாத வஸ்துக்களுடன் கலப்பானபோஜனம். மேடுபள்ள ஸ்தானத்தில்படுக்குதல், வெகுபுருஷசஞ்சாரம், மாதாந்தருது தோஷம், ஆண்குறித்தோஷம், அனலாதிவெப்பம், தகாதநடத்தை, தேவதா பிரயோகம் ஆகிய இச்செய்கைகளை உடைய ஸ்திரிகளுக்கு வாதயோனி ரோகம் முதல் சந்நிபாதயோனிரோகம் ஈறாக ௨௰-விதரோகம்பிறக்கும்.

௧-வது வாத யோனிரோகம்.

இது வாயுவானது அல்குலில்நிறையுங்காலத்தில்பிறக்கும். இதனால், அவ்விடத்தில் கிருமிநெளிவதுபோல் இருத்தல், அச் சருமஞ்சொற சொறத்தல், அம் மார்க்கத்தில் கறுத்தும் சிவந்தும் நுரைத்தும் சுடுகை யுடன்கொஞ்சம் ரத்தம்வடிதல், இரண்டுகவுட்டியிலும்நோதல், அடிவயிறு கனத்தல் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

௨-வது பித்தயோனிரோகம்.

இது பித்ததோஷமானது அல்குலில் பரவுங்காலத்தில் பிறக்கும். இதனால், அவ்வழியால் மஞ்சள் கறுப்பு நிறத்துடன் சுடுகையாய்ப் பிண நாற்றங்கமழ்கின்ற உதிரம்வடிதல், தாகம், சுரம், சரீரத்தில் அக்கினிச் சுவாலைவீசுதல், துர்க்கந்தம்பிறக்குதல்என்னும் இக்குணங்களுண்டாகும்.

௩-வது சிலேஷ்ம யோனிரோகம்.

இது, சிலேஷ்மமானது அல்குலில்தங்குங்காலத்தில் பிறந்து, அவ் விடத்தில், சீதளம், தினவு, வேதனையின்றி வெளுத்த ரத்தம் ஒழுகுதல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

௪-வது உதாவர்த்த யோனிரோகம்.

இது, அல்குல்ஸ்தானத்தில்மிகுந்த உபத்திரவத்தையும், அம்மார்க் கத்தில் நுரைத்த ரத்த ஒழுக்கையும் உண்டாக்கும்.

௫-வது உபபுலுத யோனிரோகம்.

இது, அல்குல்ஸ்தானத்தைவெண்மையாக்கி, அச் சருமத்தைநையப் பண்ணும். இதனால், அவ்விடம்சுட்கித்துப்பஞ்சடித்த களம்போல் திரைந் திருக்கும். உபபுலுதம் என்பது உபத்திரவத்தை உண்டாக்குதலாம்.

௬-வது ரத்த யோனிரோகம்.

இது, நிதம்ப ஸ்தானத்தில் சகிக்கக்கூடாத உபத்திரவத்தையும், மிகுந்த ரத்த ஒழுக்கையும் உண்டாக்கும்.

௭-வது சாதக்கினி யோனிரோகம்.

இது, அல்குல்வாயில் வெடி எழும்பிய பீரங்கிவாயின்சுடுகையைப் போல் சுடுகையை உண்டாக்குவதுமன்றி, அவ்விடத்து உதிரத்தையும் கொதிப்பிக்கும். இதனால், வயிற்றில் ஏழுமாதத்திற்கு உட்பட்ட சிசுவாயிருந்தாலும் அது மரித்து விழுந்துவிடும். இதற்குத் தாமரைப்பூ ரசாயனமும், பூரணசந்திரோதயமாத்திரையும் நன்மையைச் செய்யும்.

௮-வது அந்தர்முகி யோனிரோகம்.

இது, எந்த ஸ்திரிகளாவது, வயிறுநிரம்பப்புசித்து, உடனே மேடுபள்ளஸ்தானத்தில்படுத்து, கடினசையோகத்திற்கு இடங்கொடுக்குங் காலத்தில், பிறக்கும். அதன்விவரம் :— அம் மாதருக்கு வாயுவு அதிகரித்துஅந்தர்முகமாகஎழும்பி, யோனிஸ்தானத்தில் உபத்திரவத்தையும், அதைவிரிக்கக்கூடாமையையும், பூ ஒதுங்குவதால், அங்குள்ள எலும்பு மாமிசாதிகளில்வேதனையையும், அடிவயிற்றிற்சூலையையும் உண்டாக்கும்.

௯-வது சுட்க யோனிரோகம்.

இது மாதாந்தருதுகாலத்தில் புணர்ச்சியைவிரும்பியமாதர்கட்குப் பிறக்கும். அதனவிவரம் :—சுபாவமாக விழுகின்ற ரத்தமானது சையோகத்தினால் உள்ளுக்குள்ளே மறிபட்டு, மலமூத்திரச்சிக்கலை நாள்தோறும் பிறப்பித்துக்கொண்டே இருந்து, அதற்பின்கடிதடத்தில் சூம்பலும் உபத்திரவமும் உண்டாகும்படிக்குச்செய்யும்.

௰-வது வாமினி யோனிரோகம்.

இது, வாயுவைக்கொண்டுபிரசவித்த ஆறுநாளிலாவது ஏழுநாளிலாவது, கருப்பாசயத்தில் இருக்கின்ற கோழைக்கபத்தை ஒழுகச்செய்யும். இதனால்,உபாதிஇருந்தாலுமிருக்கும்.இது,வாந்திஎடுப்பதுபோல் அல்குலினின்றும்கோழைவிழுவதால், வாமினியோனிரோகம்எனப்பேர்பெற்றது.

௰௧-வது லோகிதசுட்க யோனிரோகம்.

இது வாத பித்தகபங்களினால் யோனிக்குள்இருக்கும் உதிரமானது உலரப்படுங்காலத்தில்பிறக்கும். இதனால், அந்த இடத்தில் சிவந்தநிறமும் சுட்கமும் எரிச்சலும் உண்டாகும். லோகிதம் என்பது சிவப்பு.

௰௨-வது பரிப்புலுத யோனிரோகம்.

இது சையோககாலத்தில் தும்மலையும் ஏப்பத்தையும்அடக்குவதால் பிறக்கும். இதனால், யோனிஸ்தானம் உப்பல்,அதைத் தொடக்கூடாத வேதனை,கறுப்பும் மஞ்சளுங்கலந்த நிறமானரத்தம் ஒழுகுதல், நோவோடு

கனப்பு,ஒருவேளைபேதி, அரோசகம், கவுட்டியிலும்பிட்டத்திலும்குத்தல், சுரம் என்னும் இக்குணங்கள் உண்டாகும். புலுதம் என்பது வடிதல்.

௰௩-வது மகா யோனிரோகம்.

இது வாயுவானது யோனிஸ்தானத்திலும் வயிற்றிலும் கருப்ப ஸ்தானத்திலும் சஞ்சரித்துப்பூரிக்கும்போது பிறக்கும். இதனால், அல்குலானது நாளுக்கு நாள் தர்ம்மாமிசத்தினால் மேன்மேலும் வளர்ந்து விசாலமாகப்பருப்பது மன்றி, சிலவேளை மிகுந்தநோவையும் தரும்.

௰௪-வது ஷண்ட யோனிரோகம்.

இது கருப்பகாலப் புணர்ச்சியால் பிறக்கும். அதன்விவரம் :— புருஷனுடைய விந்துவின்சுடுகையினால், அல்குல்ஸ்தானம்வெந்தமாமிசம் போலாகுவதுமன்றி, சிலநாட்சென்று இரண்டுஸ்தனமும் ஒட்டிஉலர்ந்து விடும் ; பின்பு இந்த ஸ்திரியானவள் புருஷனைச் சொப்பனத்திலும் விரும்பாள். இது, ஸ்திரி உருவத்தைமாற்றி நபோஜகத்தன்மையைத்தருதலால் ஷண்டயோனிரோகம்எனப்பேர்பெற்றது.ஷண்டம் என்பது நபோஜகம்.

௰௫-வது அதிசரண யோனிரோகம்.

இது பருத்த ஆண்குறியையுடைய புருஷசையோகமிகுதியினால் பிறக்கும். இதனால், அல்குலில்வீக்கமும் கனஉபத்திரவமும்உண்டாகும். அதி என்பது அதிகம் ; சரணம் என்பது சஞ்சரித்தல்.

௰௬-வது சூசிமுக யோனிரோகம்.

இது, வாதாதிக்கவஸ்துக்களை மிதமின்றி நித்தியமும் புசித்து உடனுடனே புணருவதால், வாயுவு கருப்பாசயஸ்தானத்தில் நிலைக்கப்படுங் காலத்தில், பிறக்கும். அதன்விவரம்:—அவ்வாயுவினால் மாமிசந்தூலித்து, அல்குலின் துவாரத்தை ஊசிநுழையுந் துவாரம்போலாக்கி, சையோகத்திற்கு இடம் இல்லாமல்செய்துவிடும். ஒருவேளை வலுவில்யத்தனித்தால், அதிக உபாதியும் ரத்தப்பிரவாகமும் உண்டாகும். இதற்குத் தக்கையிட்டுத்துவாரத்தைப் பருக்கப்பண்ணுவதும், வாதாரிக் கிருதங்களை உள்ளுக்குச்செலுத்துவதுந்தான் சிகிச்சை. சூசி என்பது ஊசி.

௰௭-வது பராக்சரண யோனிரோகம்.

இது, ருதுவாகாக் கன்னியர்கள் புருஷனைப்புணருவதால், கருப்பாசயஸ்தானத்தில் சேருகின்ற இளம் உதிரமானது கெடுதியையடையுங் காலத்தில்,பிறக்கும் ; அப்போது அல்குல்ஸ்தானம்அவ்வுதிரத்தால்கலங்கி நிறமாறுவதுமன்றி, நடுமுதுகில் குத்தலும், கவுட்டி தொடை என்னும் இடங்களில்நோவும் உண்டாகும். இதனால், பலரோகசம்பவம்நீடித்து வருத்தும். பராக்கு என்பது ருதுகாலத்திற்கு முன்பரம்.

௰அ-வது கண்டூல யோனிரோகம்.

இது, மிகுந்தசையோகத்தினால் அல்குல் ஸ்தானத்தி லிருக்கின்ற உதிரங்கெடுதியை அடைந்து, அதில் கிருமிகள்சனிக்கும்போதுபிறக்கும். இதனால், அங்கு அதிகநமைச்சலும், அந்த நமைச்சலினால் எப்போதும் சையோகத்தில் மிகுந்த விருப்பமும் இதவும் உண்டாகும். இது, வெள்ளைப் பூண்டு, ஓட்டறை, துமட்டிக்காய், வாய்விளங்கம், கண்டங்கத்தரிப்பழம் என்னும் ஐந்துசரக்கையும் சமமாகமெதுவுறஅரைத்து ஏழுநாள்லேபனம் பண்ணிக் குளிக்க, சந்தேகமற விலகும்.

௰கூ-வது கர்ன்னிகாயோனிரோகம்.

இது அகால சையோகத்தால் வாயுவு அதிகரித்து ரத்தத்தைக் கெடுக்கும்போதுபிறக்கும். இதனால், அல்குலின்துவாரத்திலவ்வாயுவினால் திரண்ட உதிரமானது துர்மாமிச நிறத்தையொத்துத் தாமரைக் காயைப் போலும் விழுது விட்டதுபோலும் தொங்கும். இதனைச்சிலர் தசை அண்டம் என்பர். கர்ன்னிகா என்பது தாமரைக்காய்.

உ௰-வது விப்புலுத யோனிரோகம்.

இது, அதிமோகங்கொண்டு நினைத்தபோதெல்லாம் பலவகைப் பந்தத்துடன் புருஷனைப்புணர்வதுமன்றி, அப்புருஷனை இடைவிடாது தன் பார்வைக்குள் வைத்திருக்கும் காரணத்தால் பிறக்கும். இதனால், அல்குல் ஸ்தானமுற்றுங் கலங்குவதும், அதில் மாறாது மதசலம்வடிவதும், தேகம் நாளுக்குநாள் துர்ப்பலப்படுவதுமாக இருக்கும்.

உக-வது சந்நிபாத யோனிரோகம்.

இது, அல்குல் ஸ்தானத்திலும், கருப்பஸ்தானத்திலும், திரிதோஷத்தைச் சஞ்சரிக்கச்செய்து, அவிடங்களில் அனந்தரோகங்களையும் மகாவிரணங்களையும் பிறப்பிக்கும். இந்தரோகத்தை அநுபவிக்கின்ற மாதர்கட்கு, ரத்தசிராவம், மூலம், ரத்தகுன்மம், அதிதூலம் என்னும் இந்நான்குரோகங்களும் ஒருமித்தாவதுதனித்தாவதுஉண்டாகாதிருக்கில், அரோகதிட காத்திரமும், நல்லகருப்பமும் உண்டாகும். மேற்கூறிய யோனிரோகங்கள், அரக்குக்கஷாயம், பாவனபஞ்சாங்குலத்தயிலம், நிம்ப ஏரண்டகல்க்கம் முதலிய அவுஷதங்களால், சாத்தியமாகும்.

ஆக யோனிரோகம் உ௰-ம் சம்பூரணம்.

பதின்மூன்றாவது விரணபேதபடலம் முற்றியது.

உ

சுப்பிரமணியர் துணை.

ஜீவரக்ஷாமிர்தம்.

பதினான்காவது

விஷாதிபேதபடலம்.

விஷபேதம்.

உலகத்தில், விஷமானது, கிருத்திரமவிஷம், அகிருத்திரமவிஷம் என இருவகைபபடும். இவற்றுள், கிருத்திரமவிஷத்தை முதலிற்கூறுவாம்.

கிருத்திரமவிஷம்.

நாபி முதலிய விஷப்பூண்டுகளையாவது, பாம்பு முதலிய செந்துக்களின்விஷங்களையாவது, மற்றொருவஸ்துவிற்கலந்து கொடுக்கின், கிருத்திரமவிஷமாம். இதற்கு, இடுமருந்தென்றும், கரமென்றும் பெயர்.

கரம் என்கிற இடுமருந்தின்வகை.

ஸ்திரிகள்புருஷர்களையும், புருஷர்கள்ஸ்திரிகளையும், தொழிலாளிகள் தங்கள் யசமான்களையும், வசியப்படுத்தும்பொருட்டு, அன்னமுதலிய உண்ணும் பண்டங்களிலாவது, நீர்முதலிய பானஞ்செய்யும் பொருள்களிலாவது, தாம்பூலாதிகளிலாவது சேர்த்துக்கொடுக்கப்படுகிற பற்பல செந்துக்களின்கபாலபஸ்மம், அற்பவீரியவிஷம், மல மூத்திர அவுஷதம், பச்சிலை மூலி என்னும் இவைகளாம்.

கரபக்ஷணலக்ஷணம்.

மூற்கூறியமருந்தை அன்னபானாதிகளில் ஒருவர்கொடுக்க, அதை இன்னதென்றுதெரியாமல் புசித்தவருக்கு, முகம்வெளிறல், சரீரமிளைத்தல், மந்தாக்கினி, இருமல், இரைப்பு, வாதாதிக்கம், மகோதரம், குண்டிக்காயாகிய யகுர்தபிலீகத்தில் நோவு, துர்ப்பலம், ஈனத்தொனி, மனோதுக்கம், வயிறுப்பல், நித்திரையில்பிரமை, சீரணவாதம், நாசி யழுங்கல், கண்குழி விழுதல், தன்னுடம்பு தனக்குத்தானே பலநிறமாகத்தோற்றல் என்னும் இக்குணங்க ளுண்டாவதன்றியும், நரி, பூனை, கீரிப்பிள்ளை, பாம்பு, குரங்கு, நீரில்லாக்குளம், எரிந்துகருகியமரம் என்னும் இவைகளைக்காணுகின்ற கனவும் உண்டாகும். இக்குணங்கள் ஆரம்பிக்கும்போதே விஷாரிச் சிகிச்சையும் ஆரம்பித்தால், சாத்தியமாம். நீடித்தால், அசாத்தியமாம்.

விஷான்னலக்ஷணம்.

விஷங்கலந்த அன்னத்தை உற்றுப்பார்க்கில், சோருதல், மூர்ச்சை, வாய்நீர்சுரக்குதல் முதலிய துர்க்குணம் உண்டாவதன்றியும், அந்த அன்னத்தின் வாசனையும் உருவமும் வேறுவிகாரமாகிச் சுபாவநிறம்நீங்கி, ஒவ்வொரு அன்னம் பிளப்புகளுள்ளதாகவும், சில அன்னம் ஒன்றோ டொன்றுசேர்ந்து உண்டைஉண்டையாகவும்,பார்வைக்குநிலவைப்போல் தளதளப்பானதாகவும், புசித்தால் பழையதின்வாசனையைத்தருவதாகவும், வெகுநேரஞ்சென்று சீரணத்தையடைவதாகவும் இருக்கும்.

விஷவியஞ்சனலக்ஷணம்.

விஷங்கலந்த கறிபதார்த்தங்களை உற்றுப்பார்த்தால், உலர்ந்தது போலவும், கறுத்தகஷாயவன்னமாகவும், சுபாவருசிநீங்கி வேறுவிகாரருசி உள்ளதாகவும் இருக்கும். அன்றியும், அக்கறிகளின்மீது, அற்பநுரையும், சீமந்தரேகையும், நீர்க்குமிழிபோல் சிறியகுமிழியும் எழும்பும்.

விஷம்வைப்பவனுக்கு உண்டாகின்ற லக்ஷணம்.

விஷம்வைக்கிற காதகனுக்கு, வாயுலரல்,சுற்றும்பிற்றும்பார்க்குதல், வியர்வையோடு நடுக்கல், தேகமரத்தல், பயம், நடக்கும்போது கால் தத்தளித்தல், கொட்டாவி என்னும் இக்குணங்கள் உண்டாயிருக்கும்.

விஷான்னபரீக்ஷை.

விஷங்கலந்த அன்னத்தை அக்கினியிலிட்டால், சுவாலைஎழும்புத லுடன், மயில்கண்டத்தின் நிறத்தையொத்தபுகையும், அதில் துர்க்கந்த வாசனையும் உண்டாகும். அதை ஈ மொய்த்தால், இறக்கும்; காகம் கிட்டில், ஈனத்தொனியொடுகத்தும்; கிளி, பூவை,பார்த்தால்,கூச்சலிடும்; அன்னப்பக்ஷிக்குக்கால்தத்தளிக்கும்; வலியான்குருவி களைத்து விழும்; சகோரப்பக்ஷிகண்டால், கண்ணுல்சலத்தைவடிக்கும்; கிரவுஞ்சபக்ஷி நோக்கில், பித்துக்கொள்ளும்; புரு, குயில், சக்கரவாகப்புள், நீர்க்காகம்; முதலிய பட்சிகளுக்கு உயிர்நீங்கும்; பூனை பயப்பட்டோடும்; குரங்குகண்டால், மலபாதை பண்ணிக்கொள்ளும்; மயில்பார்த்தால், உடனேதிருஷ்டியை இழந்து மயங்கும். இப்பரீக்ஷைகளினுல், அன்னத்தில் விஷங்கலந்ததென்றறிக.

விஷான்னசீரணலக்ஷணம்.

விஷங்கலந்தஅன்னம் வயிற்றில்சீரணித்தால்,அப்போதுநமைச்சல், தேகம்எரிச்சல், அக்கினியிலும் புகையிலும் சிக்கினதுபோல் வருத்தம், சுரம், இளைப்பு, கொப்பிளம்எழும்புதல், நித்திரை,விரைவில் நகம்வளரல், ரோமம் உதிரல், வீக்கம், வியர்வை என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

ஆசியகத கரான்னலக்ஷணம்.

விஷங்கலந்த அன்னத்தை வாயிற்போட்டுமிழ்ந்தவருக்கு, உடனே ரயில் சொள்ளுவடிதல், உதட்டிலும் நாவிலும் திமிர், விருவிருப்பு, ந்தங்களிற் சிலுசிலென்கிற ஒருவிதநோவு, அறுசுவையும் ருசிமாறுதல், ர்ச்சை, தாள்பிடிப்பு என்னும், இக்குணங்கள் உண்டாகும்.

ஆமாசயகத கரான்னலக்ஷணம்.

மேற்கூறிய அன்னத்தைப்புசித்து, அவ்விஷமானது ஆமாசய தானத்தில் ஊறினால், தேகத்தில்புடைகள் எழும்புதல், வியர்வை, ர்ச்சை, வயிறுப்பல், மதம், பிரமை, ரோமச்சிலிர்ப்பு, வாந்தி, தாகம், ண்ணோவு, மார்புநோவு என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

பக்குவாசயகத கரான்னலக்ஷணம்.

விஷ அன்னம் வாதஸ்தானத்தில் ஊறினால், பற்பலவாந்தி, அதி த்திரம், அதிசாரம், சோம்பல், சரீரம் இளைத்தல், வயிறுவெளிறல், ர்ப்பலம் என்னுமிக்குணங்கள் உண்டாகும்.

கிருத்திரமவிஷம் முற்றியது.

அகிருத்திரமவிஷலக்ஷணம்.

அகிருத்திரமவிஷம் என்பது, தாபரவிஷம், சங்கமவிஷம் என ருவகைப்படும். இவற்றுள், தாபரவிஷத்தை முதலிற் கூறுவாம்.

தாபரவிஷபேதம்.

விருக்ஷம், பூண்டு, செடி, கொடி, புல் ஆகிய இவற்றின், கிழங்கு, வர், பட்டை, பால், பிசின், இலை, புஷ்பம், காய், கனி முதலியவைகளிலும், ஷாணம் என்னும் தாதுக்களிலும் இருக்கின்றவிஷம் தாபரவிஷமாம்.

விஷக்கிழங்கின்பேதம்.

சங்கோசகம், * கரவீரம், ‡ இலாங்கலிகம், தைலகம், கர்க்கடகம், சபுஷ்பம், கேதுபுஷ்பம், ரோமஹரிஷம், ஸ்திரிங்கி முதலிய ழங்குகளுக்குக்கந்தவிஷம்எனப்பேராம்இவைகளைத்தின்றால்,உயிரானது ங்கியேவிடும்; ஒருவேளைநிலைத்தால், தேகத்தில் சுரம், விக்கல், ாள்பிடிப்பு, பல்கூசுதல், இரைப்பு, இருமல், மூர்ச்சை, அரோசகம், தாண்டைஅடைப்பு என்னுமிக்குணங்களுண்டாகும். ஆனால்,இக்கிழங்கு ளின் சம்பந்தப்பட்டபுஷ்பபலாதிகளுக்குமிவ்விஷமுண்டாயிருந்தாலும், வைகள், இக்கிழங்கு வேர்களைப்போல் சீக்கிரத்தில் கொல்லாமல், நாள்தடித்துக் காலாந்தரத்தில் கொல்லுமென்றறிக.

விஷவேரின்பேதம்.

¶ தேனகம், சந்திரகம், குஞ்சனம், ஹாரிகம், † கோரண்டகம், தார்க்கரகம், சுகந்திரம் முதலியவேர்களுக்கு, மூலவிஷம் எனப்பேராம். இவ்

* கரவீரம் என்பது அலரி; ‡ இலாங்கலிகம் என்பது கலப்பைக்கிழங்கு.
¶ தேனகம் என்பது பராமரம்; † கோரண்டகம் என்பது மருதோன்றி; § சுகந்திரம் ன்பது பெருங்காயமர மூலம்.

விஷத்தினல், சோருதல், பிதற்றல், புரளல், பிரமை என்னுமிக்குணங்களுண்டாகும்.

விஷப்பாலின்பேதம்.

1 காலவம், 2 புஷ்கரம், 3 ஹாலாஹலம், 4 கர்த்தமம், 5 காலகூடம், சரஷபமுதலிய பால்களுக்கு, க்ஷீரவிஷமெனப்பேராம். இவ்விஷத்தினல், நுரைத்தவாந்தியும், நாவுதடித்துக்கனத்தலும், மலபந்தமும் உண்டாகும்.

விஷப்பிசினின்பேதம்.

6 கரஹாடகம், நாராசகம், 7 கற்கந்து, 8 காஞ்சத்துவயம் முதலிய பிசின்களுக்கு, தொக்சாரநிரியாசவிஷமெனப்பேராம். இவ்விஷத்தினல், அரோசகம்,கோழை,வாந்தி,நாவுதடித்தல்,வாயில் துர்க்கந்தம், வயிறுப்பலுடன்வேதனை என்னும்இக்குணங்களுண்டாகும்.

விஷ இலையின்பேதம்.

பதரம், கரம்பம் 9 விஷபத்திரம், 10 காஞ்சம்முதலியஇலைகளுக்குப் பத்திர விஷமெனப்பேராம். இவ்விஷத்தினல்,கொட்டாவியும், புரளலும், பிரமையும்உண்டாகும்.

விஷபுஷ்பத்தின்பேதம்.

மஹாகரம்பகம், 11 கரஞ்சம், 12 சில்லசம், 13 ரேணுகம்முதலிய புஷ்பங்களுக்குப்புஷ்பவிஷமெனப்பேராம்இவ்விஷத்தினல்,வயிறுப்புதல், வாந்தி, சோருதல், மூர்ச்சை என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

விஷக்கனியின்பேதம்.

14 மூலகமுஸ்தகம், 15 முஷ்கம், வைராடகம், சணபகம், 16 மர்க்கவிகம், ஷாலகம், 17 சத்துவலாஹகம் முதலிய விஷக் கனிகளுக்குப் பலவிஷம்எனப்பேராம். இவ்விஷத்தினல், அன்னத்திவேஷமும்,தாகமும், இரண்டு பீசங்களில் வீக்கமும் உண்டாகும்.

விஷதாதுவின்பேதம்.

தேநாமம், பஸ்மம், திலகம், ரத்தம் முதலியதாதுக்களுக்குத் தாது விஷம் எனப்பேராம். இவ்விஷத்தினல், இரண்டுதாடைகளின் உட்புறங்களில் அனல்வீசுதலும், மூர்ச்சையும், மார்புநோவும் உண்டாகும்.

---

1 காலவம் என்பது வெள்ளைலொத்தி ; 2 புஷ்கரகம் என்பது வெண்டாமரை ; 3 ஹாலாஹலம் என்பது நாபி; 4 கர்த்தமம் என்பதுசேராங்கொட்டை; 5 காலகூடம் என்பது எட்டி.

6 கரஹாடகம் என்பது மருவு ; 7 கற்கந்து என்பது தொடரிப்பட்டை ; 8 காஞ்சத்துவயம் என்பது ஆயில்பட்டை பிசின்.

9 விஷபத்திரம் என்பது எட்டியிலை ; 10 கரஞ்சம் என்பது பெருமரம்.

11 கரஞ்சம் என்பது புங்கின்பூ ; 12 சில்லசம் என்பது தொட்டாற்சுருங்கி ; 13 ரேணுகம் என்பது காட்டு மிளகு.

14 மூலகமுஸ்தகம் என்பதுகோரை ; மூலகம் என்பதுகருப்பூரவழுதலைப்பழம்; 15 முஷ்கம் என்பது விஷசெருந்தி ; 16 மர்க்கவிகம் என்பதுகாயுருவி ; 17 சத்துவலாஹகம் என்பது மலை வன்னிமரம்.

வாத காலவிஷநிதானம்.

முற்கூறிய கந்தமூலாதிவிஷங்களை வாதகாலத்தில் தின்றால், அவர்களுக்கு, மார்புநோவு, நரம்புவிகுத்தல், எலும்புகளிலும் கீல்களிலும் நோவு, நடுக்கல், புரளல், தேகங்கறுக்குதல், ரோமச்சிலிர்ப்பு, வாயில் புளிப்பு என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

பித்த காலவிஷநிதானம்.

மேற்கூறிய விஷவஸ்துக்களைப் பித்தகாலத்தில் தின்றவருக்கு, சரீர வீக்கம், மாமிசம்வறளல், மார்பு எரிதல், வாயில்காரம், அக்கினிபோல் சுவாசம் வருதல், அறிவுநீங்குதல் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

சிலேஷ்ம காலவிஷநிதானம்.

அவ்விஷங்களைச் சிலேஷ்மகாலத்தில் தின்றால், அவர்களுக்குச் சரீரம்பாரித்துச்சில்லிடல், மார்பு அதிரல், வாயில் இனிப்புடன்நொப்பும் நுரையும்வீழல், அரோசகம், வாந்திஎன்னும் இக்குணங்கள் உண்டாகும்.

ஸ்தான பேதவிஷநிதானம்.

முற்கூறியவிஷங்கள் தேகத்தில் சிலேஷ்மஸ்தானத்தைப் பற்றினால், யாதொரு பிரயத்தனங்களும் இல்லாமலே உபாயச்சிகிச்சையால் சாத்தியமாம்; அவைபித்தஸ்தானத்தைப்பற்றினால், உண்ணாளக்கருவிச் சாதனமுதலிய சகலபிரயத்தனத்தைக் கொண்டும் சாத்தியமாம்; வாத ஸ்தானத்தைப் பற்றினால், எவ்வளவு பிரயத்தனஞ் செய்யினும் கஷ்டத்திலும் கஷ்டசாத்தியமாகவேமுடியும், அல்லது அசாத்தியமே.

தாவரவிஷத்தின் சப்தவேகநிதானம்.

இந்தத் தாவரவிஷத்திற்கு ஏழுவேகம் உண்டு. அவையாவன:— ௧-வது, நாவில்கறுப்புடன்மரத்தலும், வாந்தியும், பிரமையும், ஆயாசமும் பிறக்குதல்; ௨-வது, நடுக்கலும்,வியர்வையும்,தாகமும், தொண்டைக்குள் வேதனையும்,மார்புநோவும்,தாடைஉலரலும்உண்டாகுதல். இக்குணங்கள் ஆமஸ்தானத்தில் விஷம்வியாபிக்கையில்பிறக்கும்; ௩-வது, கண்களில் கருமைநிறம் மஞ்சள்நிறம் தோற்றி வயிற்றில் குத்தலும் நோவும் இரைச்சலும் பொருமலும் அதிகரித்து விக்கல்காணுதல்; ௪-வது, தலை நோவும் நுரைத்தவமனமும், மாறுமுகமும், தோற்றுதல்; ௫-வது, திரிதோஷம் அதிகரித்துவாதஸ்தானத்தில் வேதனையைப்பிறப்பிப்பதால் சகலகீல்களிலும் உபத்திரவம்பெருகுதல்; ௬-வது, தோள் இடுப்பு, முதுகு ஆகிய இடங்களில்நோவுண்டாகி ஞாபகம்நீங்குதல்; ௭-வது, அவ்விஷம்சுக்கிலதாதுவைப்பற்றி ஏறுதல் என்பனவாம். இந்த ஏழில், ஐந்துவேகம்வரைக்கும் சாத்தியம், மற்ற ௨-ம் அசாத்தியம்.

தாவரவிஷ அசாத்தியநிதானம்.

தாவரவிஷங்களைத் தின்றவர்க்காவது, சர்ப்பக்கடி உண்டவர்க்காவது, விஷத்தில்தோய்த்திருக்கின்ற அம்புமுதலிய ஆயுதங்களின்காயம்பெற்றவர்க்காவது, சகலசிகிச்சைகள்செய்தும் அவ்விஷம் இறங்காதிருக்கையில், உதடுகறுத்தல், பல்லுகள் அசைதல், முடிசோருதல், கண்சிவக்குதல், உடம்பும்நாசியும் சில்லிடல், உசுவாசநிசுவாசம்குளிர்ந்துவருதல், கீல்கள் தளரல், தலைமயிரின்முனைபிளக்குதல், ரோமஞ்சிலிர்த்தல், நாவுமரத்தல், பேதிகாணுதல், நவத்துவாரங்களிலும் ரத்தங்கம்முதல், அறிவுநீங்குதல் என்னும் இக்குணங்கள்மேலிட்டால், அசாத்தியம். ஆயினும் முற்கூறிய கிருத்திரமவிஷங்களை, நஞ்சறுத்தான்பூண்டுச்சுரசமும், அத்தயிலமும், மாட்டுப் பூசினிப்பழமும் முறிக்கும். அன்றியும், நாபியைத்தின்றவர்க்கு, வெண்காரம், பன்றிவிஷ்டை, புத்திரஜீவிவிதை, சிறுகீரைவேர், இவைகளைநெய்யிலரைத்துக்கொடுக்கில், விஷம்முறியும். ஊமத்தங்காயைத்தின்றவர்க்கு, வாந்திக்குக்கொடுத்துப் பின்பு அழிஞ்சில்வேர்ப் பட்டையை எலுமிச்சம்பழச்சாற்றில் அரைத்துக்கொடுக்கவும், இவ்வண்ணமாகவேசிகிச்சாதீபிகை என்னும்சாஸ்திரத்தில்கூறியசிகிச்சைகளை வழுவாமல்செய்யில், சகலதாவரவிஷங்களும் முறியும்.

மதாந்தர தாவரவிஷபேதம்.

பலாபம், வத்சநாபம், முஸ்தகம், புட்கரம், கிரவுஞ்சம், சடம், மற்கடம், ஆரித்திரம், காலகூடம், இந்திரவச்சிரம், ஏகவீரம், ஹாரிகம், காலபம், ஸ்திரிங்கி, கற்கடகஸ்திரிங்கி, மேஷஸ்திரிங்கி, ஆலாஹலம், வியஞ்சனம், புண்டரீகம், சங்கோசம், மதுபாகம், ரோகிணம், சுரணம் என்னும் இப்பெயர்களை உடைய தாவரவிஷங்கள் மனிதர்மீதுபடுமாயின், மரணத்தைக் கொடுக்கும். ஒருவேளை தெய்வமுயற்சியினாலும் மணிமந்திர அவுஷதாதிகளினாலும் தப்பிப்பிழைத்தவர்கட்கு, இருமல், இரைப்பு, சூலை, நடுக்கல், வாந்தி, தாகம், மூர்ச்சை என்னுமிக்குணங்களுண்டாகும். இது, சுவாசம், ஸ்பரிசம், வாய், நா, பல், எலும்பு, நரம்பு, நகம், மலம், மூத்திரம், சுக்கிலம் ரத்தம், ரசம், மாமிசம், மேதை, மச்சை ஆகிய ௰௬ ஸ்தானங்களைப்பற்றி வியாபிக்கும்.

மதாந்தரமும் தாவரவிஷநிதானமும் முற்றியது.

சங்கமவிஷபேதம்.

சர்ப்பசாதிவிஷங்களுக்கும், கீடம், தேள், சிலந்தி, நாய், நரி முதலியவற்றால் வருகிறவிஷங்களுக்கும், சங்கமவிஷங்களெனப்பெயராம். இவற்றுள், சர்ப்பசாதிவிஷங்களைமாத்திரம் இப்படலத்தில் கூறப்படும்.

சர்ப்பசாதிபேதம்.

சர்ப்பம் என்பது திவ்யசாதிசர்ப்பம், பௌமசாதிசர்ப்பம் என இருவகைப்படும். இவற்றுள், திவ்யசாதியை முதலிற் சொல்லுவாம்.

திவ்யசர்ப்பபேதம்.

அண்டகோடிகளுக்குள் இராகின்றசர்ப்பங்களில், தலைமையும் உத்தம சாதியும் கடவுட்பாம்புமாகிச் சிறப்புற்று அஷ்டதிக்குகளில் வாசஞ்செய் வதே திவ்யசாதிசர்ப்பமாம். அது, வாசுகி, அனந்தன், தக்கன், சங்கபாலன், குளிகன், பதுமன், மகாபதுமன், கார்க்கோடன் என எண்வகைப்படும்.

க-வது வாசுகி.

இது, படத்திலும் முதுகிலும் கருங்குவளைப் பூவைப்போல் புள்ளிகளைத்தாங்கி, வந்தனைக்கு வசப்பட்டு, மணி மந்திர அவுஷதங்களைக் கடந்து, சினப்பார்வையாலுலகத்தையெல்லாம்நீறுக்கும்பராக்கிரமத்தைப் பெற்று, கிழக்குத்திக்கில் வாசமாயிருக்கும்.

உ-வது அனந்தன்.

இது, படத்தில் வெண்டாமரைப்பூவைப்போல்புள்ளிகளைத்தாங்கி, மூச்சினால் உலகைப்பஸ்மம்பண்ணுந்திறத்தைப்பெற்று, தியானங்களுக்கு யோக்கியமுள்ளதாய், தென்கிழக்குத்திக்கில் வாசமாயிருக்கும்.

௩-வது தக்கன்.

இது, படத்தில் துவசத்தின்வடிவான புள்ளிகளைத்தாங்கி, கோபம்வரில் திரிலோகத்தையும் எரிக்கின்ற வல்லபத்தைப்பெற்று, தோத்திரத்திற்கு உட்பட்டு, தெற்குத் திக்கில்வாசமாயிருக்கும்.

ச-வது சங்கபாலன்.

இது, படத்தில் திரிசூலத்தைப்போலும் பிறையைப்போலும் புள்ளிகளைப்பெற்று, சுவாசத்தைக்கொண்டு உலகத்தைத் தகிப்பதாய், தென்மேற்குத் திக்கில் வாசமாயிருக்கும்.

ரு-வது குளிகன்.

இது, படத்தில்சங்கத்தையொத்த புள்ளிகளைப்பெற்று, சீற்றம்வரிற் கடைக்கண்பார்வையால் பெரும்புவனங்களை யெல்லாம் எரிப்பதாய், தியானவந்தனைக்கு வசப்பட்டு, மேற்குத்திக்கில் வாசமாயிருக்கும்.

சு-வது பதுமன்.

இது, பட்டத்திலும் முதுகிலும்பஞ்சகோணப் புள்ளிகளைப்பெற்று, குரோதம்வரில்உசுவாசநிசுவாசங்களாலகிலாண்டநிலைகளைப்புகைப்பதாய், உபசாரத்திற்குட்பட்டு, வடமேற்குத்திக்கில் வாசமாயிருக்கும்.

எ-வது மகாபதுமன்.

இது, படத்திலும் முதுகிலும் ராஜவர்த்தனக்கல்லையொத்த புள்ளிகளைப்பெற்று, * கறுவத்தால் கண்சிவக்கில் அகிலகோடிகளை அழிப்பதாய், நமஸ்காரத்திற்குட்பட்டு வடக்குத்திக்கில் வாசமாயிருக்கும்.

அ-வது கார்க்கோடன்.

இது, படத்திலும் முதுகிலும் மூன்றுகண்களைப்போல்புள்ளிகளைப் பெற்று, ¶ வெறுத்தல் வரில் சர்வசங்காரகாலம்போல் ஈரேழுலகும் நாசஞ்செய்வதாய், வடகிழக்குத்திக்கில் வாசமாயிருக்கும். இக் கடவுட் பாம்பாகிய அஷ்டமாநாகங்களும், மேற்சொன்ன குறிகளுடன் அக்கினி உருவத்தை அடைந்து, மரணபவங்களைநீங்கி, தாமே பிரகாசிப்பதுகளும் மற்றொன்றைப் பிரகாசிக்கச்செய்வதுகளுமாகி, பூபாரத்தைத்தாங்குஞ் சக்தியைப் பெற்றிருக்கும். இவைகள் ஒருவேளை ஈசுராக்கினையால் யாரையாவது தீண்டில், அவ்விஷத்திற்கு, ஆயுள்வேதத்தில் எவ்வளவும் அவுஷதம்இல்லை என்றறிக.

ஆக திவ்வியசர்ப்பநிதானம் அ-ம் முற்றியது.

பௌமசர்ப்பசாதிபேதம்.

பௌமசர்ப்பம் என்பது தருவீகரம், மண்டலி, ராஜமந்தம், நிர்விஷம், வைகரஞ்சம் என ஐவகைச்சாதியை உடைத்தாய் முறையே, உசா, ௩சா, ௰௩, ௪, ௩ என்னும் அ௨-பேதங்களைப் பெற்றிருக்கின்றது. ஆயினும், தருவீகரம், மண்டலி, ராஜமந்தம் எனக்கூறிய மூவகைச் சர்ப்பங்களுக்குள் பிறக்கிற சங்கரசர்ப்பசாதிபேதங்களுக்குக் கணக்கில்லை என்றறிக. இங்ஙனம்கூறியஐவகைச்சர்ப்பசாதிகளுக்கும்பௌம சர்ப்பங்களெனப்பெயராம். பூமிசம்பந்தம் பௌமம்.

தருவீகாசர்ப்பம்.

இது, மிகுந்த வேகநடையைப்பொருந்தி, படத்திலும் சர்வாங்கத்திலும், வண்டிக்கண், கலப்பை, குடை, துவசம், அங்குசம் என்னும் உருவங்களையொத்தபுள்ளிகளைப்பெற்றிருக்கும். இதன்விஷமானது,கொஞ்சம் உஷ்ணத்துடன்புளிக்கும். இது தலைக்கேறினல், முகம், கண், நகம், சருமம், மூத்திரம் ஆகிய இவைகள் கறுக்குதல், சிரசில் பாரிப்புடன் நோவு,தலைசுழலல்,தேக கனதி, வயிற்றிற்சூலை, எரிச்சல்,பொருமல், முதுகில்குத்தல், எலும்பு நரம்பு இடுப்பு இவ்விடங்களில்வேதனை, தாளிறுகல், இருமல், இளைப்பு, கொட்டாவி, நித்திரைப்பங்கம், அரோசகம், மலமூத்திரக்கட்டு, நெஞ்சிற்களகளவென்னும் ஒருசத்தம்,விக்கல், பேசக்கூடாமையான ஈனத்தொனி, ஏப்பம், வாயில் நொப்பும் நுரையும் விழுதல், அறிவு நீங்குதல் என்னும் இக்குணங்களுடன், வாதசுபாவக்குறியெல்லாம்

---

*கறுவத்தால் என்பது சினத்தால். ¶ வெறுத்தல் என்பது கோபம்.

உண்டாகும்.இதற்கு, ஏழுவேகம்உண்டு. அவையாவன:—க-வது,வாயில் ரத்தங்கம்மி முகமும் நேத்திராதி இந்திரியங்களுங் கறுத்து, சரீரத்தில் பூச்சியூருதல்போல் இருக்குதல்; உ-வது, சர்வாங்கமும்வீங்குதல்; ௩-வது, சிரசுகனத்துக் கண்சிவந்து பல்லுகளில் நோவுண்டாகுதல்; ௪-வது, நுரைநுரையானவாந்தியும் எலும்பின்சந்திகளில் நோவும் பிறக்குதல்; ௫-வது, சகலகீல்களிலும் உபத்திரவம் உண்டாகி விக்கலும் தாகமும் அதிகரிக்குதல்; ௬-வது, மார்பு அடைப்புடன் தேகம்பாரித்து, மூர்ச்சைகண்டு பேதியாகுதல்; ௭-வது, முதுகு தோள் இடுப்பு ஆகிய இடங்களில் வேதனை உண்டாகி, அவயவங்களில் கொதிப்பேறி, சுக்கிலம் நாசம் அடைகுதல் என்பனவாம். இந்த ஏழுவேகத்துள் ஐந்து வரைக்கும் சிகிச்சைசெய்யலாம்; அதற்குமேல், அவுஷதம்நாசமாம். இது, கரண்டியைப்போல் படமுள்ளதாகையால், தருவீகரசர்ப்பம் எனப்பேர்பெற்றது.இது,நொச்சில், கருந்துளசி,தும்பை,கஞ்சாங்கோரை, பருத்தி, சிறுதேக்கு, கொட்டாங்கரந்தை என்னும் ஏழுசரக்கையும் சிறு நீரில் ஊறவைத்து நசியங்கட்டத்தீரும்; அல்லது குப்பைமேனி, சுக்கு, மிளகு, வேளை, வெள்ளுள்ளி என்னும் ஐந்துசரக்கையும் சிறுநீர்விட்டு நருக்கிப்பிழிந்து நசியஞ்செய்ய, விஷம் இறங்கும்.சீந்தில் கிழங்கையாவது, கோவைக்கிழங்கையாவது, சிவிச்சிவி ஒரு ஆழாக்குரசம் உள்ளில்தங்கும் படிக்குத்தின்னச்சொல்ல, விஷம்மீளும்.

மண்டலிசர்ப்பம்.

இது, மந்தநடையை உடைத்தாய்ச்சிரசில் அநேகபேதவன்னமாய், மண்டலாகார உருவங்களையொத்த புள்ளிகளைப் பெற்றிருக்கும். இதன்விஷமானது மஞ்சள்நிறத்துடன் காரமாக உறைக்கும். இது தலைக் கேறினல், கடிவாயில் சுடுகையாயிருத்தலோடு வீங்குதல், கண்களில் மஞ்சள்நிறம் அல்லதுசிவந்தநிறந் தோற்றல், சரீரமெங்கும்வேதனையுடன் குத்துதல்,எரிதல்,நோதல், முகம்மினுமினுத்து மஞ்சளைப்போலிருத்தல், அவ்வாறே சகலவஸ்துக்களுங் காணப்படுதல், தலைநோதல், எயிறு கறுத்தல்,வாயுலரல்,சுரம், தாகம், நரம்புகளுப்புதல், நாசியிலும் வாயிலும் அக்கினிச் சுவாலைபோல் சுவாசம் வருகுதல், பாதாதிகேசம் வரைக்கும் புகைசூழ்ந்ததுபோல் இருத்தல், மூர்ச்சை,சீதளத்தில்விருப்பம் என்னும் இக்குணங்களுடன், பித்தசுபாவக்குறிஎல்லாம்உண்டாகும். இதற்கு, ஏழு வேகம்உண்டு. அவையாவன:—க-வது, குளிர்ச்சியானரத்தம்வடிந்துவாயும் கண்ணுங்கறுத்துத் தேகத்தில்பூச்சியூருதல்போல் இருக்குதல்; உ-வது, தாகமும் வீக்கமும் காணுதல்; ௩-வது, பல்லுகள்கறுக்குதல்; ௪-வது,

சர்வாங்கத்திலும் எரிச்சல் எழும்புதல் ; ௫-வது, சப்ததாதுக்களுக்கும் துர்ப்பலம் உண்டாகுதல் ; ௬-வது, வாழைத்தண்டைப்போல் தேகஞ் சில்லிடல் ; ௭-வது, தன்னைமறக்குதல் என்பனவாம். சுருட்டை, பனையன், விரியன் முதலியபாம்புகளுக்கு, மண்டலிசர்ப்பம் எனப்பெயராம். இவ்விஷங்கள் எல்லாம், புங்கம்வேர், விளாம்வேர், கிருஷ்ணசூரிகைவேர் இம்மூன்றையும் சமமாகநிறுத்து, முருக்கம்பட்டை ரசத்தினல் அரைத்து கடிவாயில் நன்ருக லேபனம்பண்ணி, உள்ளுக்குப் பாகவிலைரசம் கொடுக்க, இறங்கும். வாகைப்பூவைப்பாலில்பிசைந்துவடிக்கட்டிக்குடிக்கில் திரணமண்டலிவிஷந்தீரும். திரணமண்டலி என்பது புல்விரியன்.

ராஜமந்தசர்ப்பம்.

இது, அதிகமந்தநடையையுடைத்தாய், சிரசிலும் உடலின்மேலிலும் கீழிலும் பக்கங்களிலும் மினுமினுத்து, சித்திரவன்னங்களை ஒத்த புள்ளிகளைப்பெற்றிருக்கும். இதன்விஷமானது குளிர்ச்சியுடன் தித்திக்கும். இது தலைக்கேறினல், கடிவாயில் குளிர்ச்சியோடு வீங்குதல், சோம்பல், முகமும் நகமும் வெளுக்குதல், சரீரநமைச்சல், பாரிப்பு, மரத்தல், கேசாதிபாதம்வரைக்கும் மினுமினுத்துச் சில்லிடுதல், சிரசும் கண்ணும் நாசிமுனையும் குளிர்ச்சியாகுதல், சிரோபாரம், சுரம், வாய் இனிப்பு, அரோசகம், வாந்தி, இருமல், மேற்சுவாசம், தாகம், பொறுத்துப்பொறுத்துப் பெருமூச்சுவருகுதல், நெஞ்சிற் களகளவென்னும் ஒரு சத்தத்துடன் தினவு, அடிக்கடி அலறல், ரோமச்சிலிர்ப்பு, வாயில்நொப்பும் நுரையும் தள்ளுதல், மார்புதுடித்தல், மனச்சங்கட்டம், மயங்கியநித்திரை என்னும் இக்குணங்களுடன் சிலேஷ்ம சுபாவக்குறி எல்லாம் உண்டாகும். இதற்கு ஏழுவேகம் உண்டு. அவையாவன :— ௧-வது, ரத்தமானது வெண்மையாய்முறிந்து தேகமும் கண்ணும் வெளுக்குதல் ; ௨-வது, சர்வாங்கமும் வீங்குதல் ; ௩-வது, கண்ணிலும் மூக்கிலும் வாயிலும் சலம்வடிதல் ; ௪-வது, சிரோபாரமும் தாள்பிடிப்பும் உண்டாகுதல் ; ௫-வது, பேசக்கூடாதவருத்தமும் குளிர்சுரமும் காணுதல் ; ௬-வது, தேகங்கனத்துச் சில்லிடுதல் ; ௭-வது, அவயவங்களெல்லாங் கொதித்து மூர்ச்சைஉண்டாகித்தன்னைமறக்குதல்என்பனவாம். மலைப்பாம்பு, தாசரிப் பாம்பு, சட்டுவிரியன் முதலியவைகளுக்கு ராஜமந்தம் எனப்பெயராம். இவைகட்கு காட்டுக்கருணை, பழுபாகல், சீந்தில், கோவை என்னும் கிழங்குவகை ௪, சுண்டை, கிளிமூக்கு, வெட்டிவேர், செந்தொட்டி, நீலி, மரக்காரை, வெற்றிலை, பேய்ப்பீர்க்கு, பாலை, ஊமத்தை, செப்புநெருஞ்சில், வெண்சாரணை என்னும் வேர்வகை ௰௨-ம் ஆகிய இப்பதினறுவகையையும் தனித்தனியே வஸ்திரகாயப்பொடிசெய்து, சமமாகநிறுத்துக் கலந்து

வைத்துக்கொண்டு,இதில் அரைப்படியும் அரிசி அரைப்படியும் சேர்த்துப் பொங்கி உண்ணக்கொடுக்கில், விஷம் ஏருது ; ஏறியவிஷமும் இரங்கும்.

* கௌதேரசர்ப்பபேதம்.

கௌதேரசர்ப்பமானது ௯௨-விதப்படும். இவைகளின் விஷங்கள் தருவீகரசர்ப்பவிஷங்களைப்போலவே இருக்கும். ஆனால், இவைகளில் நின்றும்பிறக்கின்ற சங்கரசாதிகள் அனந்தமென்றறிக. இதனைச்சாரைப் பாம்பென்பர்.

நிர்விஷசர்ப்பபேதம்.

நிர்விஷசர்ப்பமானது, திவ்யகம், சாலகம், பாதகம், விருக்ஷசாயி, கலசி, புட்கரம், க்ஷீரி, வாகினி, சாரவாகி, வருஷாப்புவிகம், சோதிரதம், சுட்கம், கோத்திரம், பலாககம், கசபக்ஷம், பிலவோற்பேதம் என ௰௯-விதப்படும். நிர்விஷம் என்பது விஷம் இல்லாத சர்ப்பமாம்.

நிர்விஷலக்ஷணம்.

விஷம் இல்லாச் சர்ப்பங்கள்கடித்தால், அக்கடிவாயில் ஆமை முதுகைப்போல்தடித்து அச்சருமங்கறுத்து அற்பசோம்பலுண்டாகும்.

வைகராஞ்சசர்ப்பம்.

இது மூவிதப்பேதங்களை உடையதாயிருந்தாலும்,இவற்றின்விஷம் அதிகவேகத்தைப்பெற்றிருக்கும். இதற்கும் தருவீகரச் சிகிச்சை உதவும்.

சர்ப்பசூசிகாலக்ஷணம்.

முற்கூறிய சர்ப்பங்கள், சித்திரைமாதம் புணர்ச்சியில் இச்சை உண்டாகி, ஆனிமாதத்தில் ஆணும் பெண்ணும் இடைவிடாது திரிந்து, ஆடிமாதத்தில் கூடி இழைந்து சூலுண்டாகி, கார்த்திகைமாதத்தில் ௱, உ௱, ௪௱ முட்டைகளிடும். இவற்றுள், சிற்சிலமுட்டைகள் பெருங்காற்றினுலும் அதிகவெய்யிலினுலும்கெடுதியை அடையும் ; மற்ற முட்டைகள் தனக்குத்தானே விரிந்துடைய, அவைகளில்நின்றும் சிறுசிறுகுட்டிகள் வெளிப்பட்டிலவும். இக்குட்டிகளுக்குக் கீழ்வாய் வரிசையில், காட்டு வாகைப்பூக் கேசரப்பிரமாணங்களையொத்து மஞ்சள்நிறமான ஏழுகோரைப்பல்லும், மேல்வாய்வரிசையில்ரத்தநிறம் கரிநிறமான ஏழுகோரைப் பல்லும் முளைக்கும். இவற்றுள், பகலில்விஷம் இருப்பது ௪, ராத்திரியில் விஷம்இருப்பது ௩ ; இவ்விஷம் ௪,௩ என்னும்துளிக்கணக்காகவிழும். இக் கோரைப்பல்லுகள் வருஷத்துக்கொருதரம் விழுந்துமுளைக்கும். இவ்வித விஷசர்ப்பசாதி ௪௰-விதமும்,விஷம்இல்லாதசர்ப்பசாதி ௪௪-விதமுமாம். இவற்றுள், பிரம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர என்னும் ௪-சாதி சர்ப்பங்களும்;ஆண்,பெண், அலி என்னும் ௩-குறிகளையுள்ளசர்ப்பங்களும்;மலடு

* கௌதேரம் என்பது உடம்பின்நிறமான சர்ப்பங்களாம்.

என்னும் நோய்க்குறிபெற்றசர்ப்பமும் ; பால்ய யௌவன விருத்தாப்பியம் என்னும் முப்பருவங்களை உடைய சர்ப்பங்களும் உண்டு. இவைகளுக்கு ஆயுசு ௲௮௱, ௫௱, ௩௱, ௨௱, ௱, ௨௯ என்னும் வருஷங்களாம். சிலசாதிகளுக்கு, ஆயுசு ௫, ௨௰, ௫௰, ௫௫ என்னும்வருஷங்களாம். இச்சர்ப்பசாதிக்குள்பிறக்காமல், பசுவின்நாசியில் ஜனித்துவருகின்றசர்ப்பம் ஒருவிதம் உண்டென்றறிக. ஆனால்சூரியவெப்பம் மிகுந்த தேசத்திலிருக்கின்றசர்ப்பங்களுக்கெல்லாம் விஷம் அதிகமாம்.

மதாந்தரம்.

சர்ப்பசூதிகாலக்ஷணம்.

முற்கூறிய சர்ப்பங்கள், ஆனிமாதத்தில்புணர்ந்து, ஆடி ஆவணிமாதங்களில் வயிறுளைந்து, கார்த்திகை மாதத்தில், பூ பொன் எருக்கம்பூ வெண்மை ஆகிய நிறங்களாக, ௨௪௮-முட்டையிட்டு, ஏழுநாள் அடயங்காக்குமென்றும், அம் முட்டைகளில், ஆண்முட்டைகள் முகிழ்விரியாத எருக்கம்பூமொக்கைப்போலும், பெண் முட்டைகள்வாகைப்பூஅரும்பைப் போலும் இரண்டுபேதமாயிருக்குமென்றும், அதையீன்ற தாயானது, ஏழுநாட்குள் ௨௨௮-முட்டைகளைப் புசிக்குமென்றும், ௪-முட்டைகள் அழியுமென்றும், மற்ற ௰௯-முட்டைகள்பொரிந்து குட்டிகளாகத்திரியுமென்றும், அக்குட்டிகளுக்கு மயிர்போல ௨௪-கால்களிருக்குமென்றும், இதுகள்பிறந்த ௨௮-வது நாளில்சூரியனைநோக்கிப் படம்விரித்து ஆடி விஷம்பெற்றுக்கொண்டு தனித்தனியே பிரியுமென்றும், ௯௰-வது நாளில் தோலுரிக்குமென்றும், ௯-வது மாதத்தில், பல்லும், நஞ்சும், வாலும் பிரகாசமாய்த்தோற்றுமென்றும், இதுகள் ஒருவனைக்கடிக்கும்போது கடியுண்டவனுக்கு இறப்பு உண்டோ இல்லையோவென்று சந்தேகிக்குமென்றும், இவைகளுக்கு கண்களே காதாக இருக்குமென்றும், வாய்க் கீழ்வரிசையில், காளி காளராத்திரி என இரண்டுபல்லும், மேல்வரிசையில், எமன் எமதூதன் என இரண்டுபல்லும் உண்டென்றும் இவ்விஷங்கள்மணிமந்திர அவுஷதாதிகளுக்கு அஞ்சும் என்றும் சித்தர் ஆரூட விருத்தப்பா என்னும்சாஸ்திரம் கூறுகின்றது.

௧-வது பிரமசர்ப்பம்.

இது, மேற்புறத்தில் வெளுப்பு கறுப்பு சிவப்பு கபிலம் என்னும் நிறங்களையும், படத்திற் சங்கத்தின்வடிவான புள்ளிகளையும், அதிகச்சீறலுடன்கோபத்தையும்தாமரைப்பூகுருவேர் வெட்டிவேர்காட்டுவாகைப்பூ குங்கிலியம் நாபி ஆகிய இவைகளின்மணங்களையும்பெற்று, ஆலயங்களில் சஞ்சரிக்கும். இது படம்விரித்து ஆடும்போது, ஆகாயத்தைப் பார்த்துநின்றாடும். காற்றையும் பூமணத்தையும் புசிப்பாகக்கொள்ளும்.

இதற்கு வயசு கூஅ என்றறிக. அன்றியும், இது ரத்தநிறத்தைப் பெற்று, சனிவாரத்தினிரவிலும் ஆதிவாரத்திலும் இரைஎடுக்குமென்றும், உதயமுதல் பத்துநாழிகைவரைக்கும் வெளியில் திரியுமென்றும், கடிக்கும்போது முன்பக்கத்திலும் வலப்பக்கத்திலும் கடிக்குமென்றும், அக்கடியினால் வாதமே அதிகரிக்குமென்றும் சித்தர் ஆரூடம் என்னும் சாஸ்திரம் சொல்லுகின்றது.

உ-வது க்ஷத்திரியசர்ப்பம்.

இது, மேற்புறத்தில், பொன்பேரீச்சம்பழம், கிராக்ஷிப்பழம், நாவல் பழம் என்னும் நிறங்களையும், படத்தில், சந்திரன், சங்கு, சக்கரம், கலப்பை ஆகிய இவைகளையொத்த புள்ளிகளையும், மிகுந்த பகையுடன் கோபத்தையும், சிவந்தநேத்திரத்தையும், சாதிப்பூ, சண்பகப்பூ, தாழம்பூ, புன்னைப்பூ அருகக்கட்டை என்னும் இவைகளின் மணத்தையும் பெற்று, விருக்ஷப் பொந்துக்களில் வாசஞ்செய்யும். இது, படம்விரித்து ஆடும்போது, சம பார்வையுடன் ஆடும். அறுகின்கிழங்கையும், வண்டையும் உணவாகக் கொள்ளும். இதற்கு வயசு அ௱ என்றறிக. அன்றியும், இது சனிவாரப் பகலிலும் சோமவாரத்திலும் எலியை இரையாகக்கொள்ளுமென்றும், பகல் உதயம்பத்துநாழிகைமுதல் இருபதுநாழிகைவரைக்கும் வெளியில் திரியுமென்றும், இடப்பக்கத்திலும் வலப்பக்கத்திலும் கடிக்குமென்றும், அக் கடியினால் பித்தமே அதிகரிக்குமென்றும், சிலநூல்கூறுகின்றன.

௩-வது வைசியசர்ப்பம்.

இது, மேற்புறத்தில், வச்சிரம்கோமேதகம்புரு இவைகளின் சாயலையும், உடல்முற்றிலும், சிவப்பு, வெளுப்பு, மஞ்சள், புகை இவைகளின் நிறஞ்சேர்ந்த விருத்தாகாரமும் வில்லுருவமும் ஒத்த புள்ளிகளையும், பாதிரிப்பூ, பால், நெய், வெள்ளாடு, செம்மறியாடு இவைகளின் மணத்தையும் பெற்று, மனைகளில் வாசஞ்செய்யும். இது, படம்விரித்து ஆடும்போது, ச திசையையும்பார்த்துநின்றாடும். ஓந்தியையும்எலியையும் உணவாகக்கொள்ளும். இதற்கு, வயசு ௬௱ என்றறிக. அன்றியும், இது, சுக்கிரவாரத்திலும் மங்களவாரத்திலும்தவளையை இரையாகக்கொள்ளுமென்றும், உதயாதி இருபதுநாழிகைமுதல் ௩௰ நாழிகை வரைக்கும் வெளியில்திரியுமென்றும், இடப்புறத்திலும் பின்புறத்திலும் கடிக்குமென்றும், அக்கடியினால்கபமே அதிகரிக்குமென்றும், விஷநூல்சொல்லுகின்றது.

ச-வது சூத்திரசர்ப்பம்.

இது, கரி கோதுமை நிறங்களையும், உடலமெல்லாம் புள்ளடி போன்று சிறுத்து நீண்டபுள்ளிகளையும், யானை காட்டெருமை அழுகிய

சேறு ரத்தம் இலுப்பைப்பூ இவைகளின் மணத்தையும்பெற்று, புற்றுக்களில்வாசஞ்செய்யும். இது படம்விரித்து ஆடும்போது பூமியைப் பார்த்துக் கவிழ்ந்து நின்று ஆடும். தவளை மீன் இவைகளை உணவாகக் கொள்ளும் இதற்கு,வயசு உா என்றறிக. அன்றியும்,இதுமந்தவாரத்திலும் குருவாரத்திலும் எலிமுதலிய சகலத்தையும் இரையாகக்கொள்ளு மென்றும், வைசியசர்ப்பத்தைப்போலவேகடிக்குமென்றும், அந்தக்கடியி னுல்தொந்தகபம் அதிகரிக்குமென்றும் சில நூலில் சொல்லப்படுகின்றன. இந் நான்குசாதி சர்ப்பங்கள்தவிர மற்றைச்சங்கரசாதி சர்ப்பங்கள் கடிப்பதற்குப் பக்கபேதமும் ஸ்தானபேதமும் இல்லையென்றறிக.

ஆண்சர்ப்பம்.

இது அகலமுள்ளபடத்தையும் அதிகதிடத்தையும்மிகுந்தசீறலையும் பெற்றிருக்கும். இவ்விஷம் தலைக்கேறினால், மேல்நோக்கியபார்வை, வலதுகால் பூமியில் பாவாதிருக்குதல், ஊர்த்துவகாயத்தில் மிகுந்தபல ஈனம் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

பெண்சர்ப்பம்.

இது குறுகியபடத்தையும் அற்பச்சீறலையும் பெற்றிருக்கும். இவ்விஷத்தினால், கீழ்ப்பார்வையும்,இடதுகால் பூமியிற்பாவாதிருத்தலும், அதோகாயத்திற்பலஈனமும் உண்டாகும்.

அலிச்சர்ப்பம்.

இது, மிருதுவுடன் நீண்ட உருவத்தையும்,வெளுத்தபடத்தையும், மந்தநடையையும், குறைந்த தொனியையும், அற்ப கோபத்தையும் உடையதாயிருக்கும். இவ்விஷத்தினால்,ஈனத்தொனி,பேதி,நடுக்கல்,பயம், சுரம், புணர்ச்சியில் இச்சை, சரீரம்காற்றில்பறப்பதுபோல் இருத்தல் என்னும் இக்குணங்கள் உண்டாகும். இச் சர்ப்பம்பிறந்த ௩-தினத்தில் விருத்தி அடைவதும், திவ்யசர்ப்பத்தால் அடிபடுவதுமாயிருக்கும்.

மலட்டுச்சர்ப்பவிஷம்.

இது, சீக்கிரத்தில் அனந்தம்வேதனையைப் பிறப்பித்தாலும், முக்கியமாக வியர்வையை விஸ்தாரம் ஒழுகச்செய்யும்.

பால்யசர்ப்பஆண்விஷம்.

இது, இடதுகண்ணைக் கோவைப்பழம்போல் சிவக்கச்செய்யும். பெண்சர்ப்பக்குட்டிவிஷத்திற்கு இக்குணம்கொஞ்சம்பேதித்திருக்கும்.

யௌவனசர்ப்பஆண்விஷம்.

இது வலப்பாகத்தில் கடிக்கும். இவ்விஷத்தால், அப்பக்கத்துக் கண் ரத்தம்போல்சிவக்கும். பெண்சர்ப்பம் இடப் பக்கத்தில்கடிக்கும். இவ்விஷத்தினால், தடிப்புத்தடிப்பாகச் சிலரோகங்கள் பிறக்கும்.

விருத்தசர்ப்பவிஷம்.

இது கடிவாயில்வீக்கம் அற்பநோய் பிதற்றல் இவைகளைத்தரும்.

கருப்பச்சர்ப்பவிஷம்.

இது, சிரசு, உதடு, வயிறு, தொடை ஆகிய இடங்களில் நோதல், நாவுகறுத்தல்,உண்ணுக்குவளருதல் என்னுமிக்குணங்களை உண்டாக்கும்.

சூதிகாசர்ப்பவிஷம்.

இது, வயிறு உளைதல், வாயில்ரத்தங்கம்முதல், மார்பில் அடைப்பு, கண்ணில் நோவுடன்சிவத்தல், சர்வாங்கமும் ஊசியால் குத்துவதுபோல் மிகுந்தகுத்தல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும். முட்டையிட்ட சர்ப்பத்திற்குச் சூதிகாசர்ப்பம் எனப்பெயராம்.

கோநசசர்ப்பம்.

இது, அதிவெய்யலினாலும் அலைச்சலினாலும் அடிபட்ட பசுக்களின் நாசிக்குள்சனித்து, ஊர்த்துவபார்வையுடன் அற்ப உருவமும் நீண்ட நாவும் சிரசினால்கத்துங்தொனியும் உடையதாய்வெளிப்பட்டுத்திரியும். பசுவின்நாசியால்பிறப்பதால், கோநசசர்ப்பமெனப் பேர்பெற்றது.

வழிச்சர்ப்பவிஷம்.

இது எப்போதும் கடிப்பதற்கே வழிக்கட்டிக்கொண் டிருக்கும். இப் பாம்புகடித்தால், மரணக்குறிகளெல்லாம் சீக்கிரத்தில் உண்டாகும். இந்தவிஷம் மணி மந்திர அவுஷதத்தினால் நீங்குமென்றறிக.

சங்கைவிஷலக்ஷணம்.

சர்ப்பத்தைச்சடுதியில்கண்டு, வாய்குளறி நடுங்கி மூர்ச்சித்து விழுந்தாலும்,பழுதையெனக்கையால்தொட்டுப் பின்பு பாம்புஎனக்கண்டு திகில் அடைந்தாலும், தனக்குப்பக்கத்தில் சர்ப்பங்குதிக்கக்கண்டு பயந்து சோபம் அடைந்தாலும், கயிறுமுதலியவைகளைப் பாம்பென்றுமேலில் ஒருவன்போடப்பதறி வியர்த்துவிழுந்தாலும், அவர்களுக்கு வாதம் அதி கரிக்கும். இதனால், பொறிகலங்கி நாவறளல், மூர்ச்சை, சரீரம்நரிக்கித் துவைத்ததுபோலிருத்தல், இளைப்பு,தாகம்,சுரம்,பேதி,வாந்தி, சோருதல் என்னும் இக்குணங்களுண்டாகும். இது தந்திரச் சிகிச்சையால்தீரும்.

மித்தைவிஷநிதானம்.

எந்தச்சர்ப்பமாவது, ஒருவனை வாயால் கவ்விப்பிடித்த ததியில், பக்கத்தில்நின்ற ஒருவன் அது பாம்பல்ல பாம்பல்லவென்று உறுதியாகச் சொல்லுவானாகில், விஷம் ஏறுதென்றறிக. மித்தை என்பது பொய்.

மகாவிஷசர்ப்பநிதானம்.

மயானம், சாவடி, பாழான யக்கியசாலை, பாழும்வீடு, கோயில், நாற் சந்திகூடிய இடம், தண்ணீர்வரப்பு, பாழுங்தோட்டம், பாலைவிருக்ஷம்,

வேப்பமரம், மரப்போறை, கான்யாறு, மலைக்குகை என்னும் இவ் விடங்களில் இருக்குஞ்சர்ப்பங்களும் ; படத்தில், குடை, சடை, திரிசூலம், கும்பம், மச்சரேகை ஆகிய குறிகளையுடைய சர்ப்பங்களும் ; சிவந்த நேத்திரமும், சிவந்தமுகமும் உள்ளசர்ப்பங்களும் மகாவிஷசர்ப்பங்களாம். இவைகள் கடிக்கில், விஷம் ஏறுதற்கு ஒருகிரமமும், அதைத்திருப்புதற்கு ஒரு அவுஷதமும், அத்தேகி இறப்பதற்கு ஒருகெடுவும் இல்லவே இல்லை. ஆயினும், நமஸ்காரம் பூசை செபம் சாந்திமந்திரம் அவுஷதம் ஆகிய இவைகள் ஒரேகாலத்தில் நேரிட்டு விஷந்தீர்ந்தாலும், அவர்களுக்கு மாறுருவமாவது அங்கத்தில்யாதேனும் ஒரு ஊனமாவது உண்டாகும். எளிதில் இறங்காமையால் மஹாவிஷம் எனப்பெயராம்.

அற்பவிஷசர்ப்பநிதானம்.

பசி,தாகம்,வியாதி,கிரி,சீதளம், அக்கினி,காற்று,தோலுரிதல், விஷங் கக்குதல் ஆகிய இவைகளால் அடிபட்டசர்ப்பங்களுக்கும் ; சலம்நிறைந்த தடாகம்,தருப்பையுள்ளவனம்,முள்ளுப்புதை, மந்திரவாதிகள் இருக்கின்ற ஊர், பரதேசம், இவ்விடங்களிலுள்ள சர்ப்பங்களுக்கும் ; வன்னசன சர்ப்பங்களுக்கும் அற்பவிஷமென்றறிக. இவ்விஷம் எளிதில்நீங்கும்.

சர்ப்பங்கடிப்பதற்குக்காரணம்.

ஆகாரநிமித்தம் பயம், கோபம், வைராக்கியம், சாபம், ஏவல், சன்மப்பகை, தெய்வகதி, காலகதி, சுபாவகுரூரம், கோளாயில்விஷமிருந்தி, தன்னைமிதித்தல் ஆகிய இச் செய்கைகளினால் சர்ப்பங்கடிக்கும்.

விஷக்கடி நிதானம்.

கடிவாயைப்பற்றி விஷம் ஏறினல், அவ்விடத்தில்நோவும், தினவும், வீக்கமும், எரிச்சலும் உண்டாகும். இக்குணங்களில் ஒன்றேனும் இல்லாதிருக்கில், விஷம் ஏற இல்லையென்றே நிதானிக்கவும்.

விஷபரீக்ஷைநிதானம்.

சர்ப்பங்கடித்தவுடன், கசப்பு வஸ்துக்களைத்தின்றால் அச் சுவை மாறுபடுதல், விரல்களில் நகங்களில் கிள்ளினாலும், தலைமயிரைப்பற்றி இழுத்தாலும் நோவுதெரியாமை, காதைமூடில் தொனி இல்லாதிருத்தல், சோம சூரிய அக்கினியும் விளக்கும் நேத்திரத்திற்குத் தோற்றாமை என்னும் இக்குணங்களிருந்தால், விஷந்தலைக்கேறித்தென்றே நிதானித்து உடனே சகல சிகிச்சைகளையும் நடாத்தவேண்டும்.

பல்லின்விஷநிதானம்.

விஷப்பைபடாமல் பல்லுமாத்திரம் தேகத்தில் படுமாகில், கோட்டுவாய்ச்சலம்போல் வாயில்நின்றும் சலம்வடியும், விஷமே ஏறினல்,

னொப்பும் நுரையும்விழும். இவ்விஷமானது கொஞ்சம்வியாபித்தாலும், அது ரத்ததாது முற்றிலும் விரைவில்பரவும். இதனால், ஞாபகமறதியும், இரைப்பும், சரீரத்தில் கருவளையலை ஒத்த நிறமும் உண்டாகும்.

விஷப்பல் அழுந்தும்நிதானம்.

சர்ப்பங்கடித்து ஒருபல் அழுந்தினால், விஷம் இல்லை; மற்ற மூன்று பற்களும் அழுந்தினால், விஷம் உண்டு. அவற்றுள், இரண்டுபல்லழுந்தினால், அவ்விஷம் மந்திரத்தினால் சாத்தியமாம்; நான்கு பல்லும் அழுந்தினால், அசாத்தியமாம். அன்றியும், ஒரு தந்தமாவது அழுந்தி, அவ்விடத்தில் இருகியதுபோல் சக்கராகாரமாகத் தோற்றப்பட்டு, அதில்நின்றும் ரத்தம் வடிந்தாலும், அந்த இடம் ஆமை ஓட்டைப்போல் கடித்துவீங்கினாலும், அசாத்தியமே. ஆயினும் மணிமந்திர அவுஷதவலியும், தெய்வவலியும், விதிவலியும் திடமாக இருக்கில், கஷ்டத்தின்மேல் சாத்தியமாம்.

மதாந்தரம்.

விஷப்பல்லின்லக்ஷணம்.

சர்ப்பங்களுக்கு, காளி, காளராத்திரி, எமன், எமதூதன் எனநான்கு பல்லுகள்முளைத்திருக்கும். இவற்றுள், ௧-வது, காளி என்னும்பற்பட்டால் அவ்விடத்தில் புள்ளடிபோல்காயமுண்டாகி, அதில்நின்றும் பனிநீர்போற் சலம்வடியும்; அப்போதுவிஷமானது தோலைப்பற்றிஏறும்: இதனைக்கால் கடி என்றறிந்து தியானத்தால் உபசரிக்க, விஷந்திரும்பும். அதனுடன், ௨-வது, காளராத்திரிஎன்னும்பல்லும்பட்டால், அவ்விடத்தில்முக்கோணம் போல் காயம் உண்டாகி, அதில்நின்றும் மஞ்சள்நிறமான சலம்வடியும்; அப்போது விஷமானது மாமிசத்தைப்பற்றி ஏறும்; இதனை அரைக்கடி என்றறிந்து மணிமந்திரத்தாலுபசரிக்க, விஷந்திரும்பும். அவ்விரண்டுடன், ௩-வது, எமன் என்னும் பல்லும்பட்டால், அங்குதொரட்டிபோல்காயம் உண்டாகி, அதில்நின்றும் செந்நீர்வடியும்; அப்போது விஷமானது எலும்பைப்பற்றிஏறும்: இதனைமுக்கால்கடிஎன்றறிந்து, மூலிகை, கலிக்கம், நசியம், ஆக்கிராணம் முதலியவைகளால் உபசரிக்க, விஷந்திரும்பும். அம்மூன்றுடன், ௪-வது, எமதூதன் என்னும்பல்லும்பட்டால், அவ்விடத்தில் வில்லைப்போலும் பிறையைப்போலும் காயம் உண்டாகி, அதில்நின்றும் கழுநீரை ஒத்த சலம்வடியும்; அப்போது விஷமானது மூளையைப்பற்றி ஏறும்: இதனை முழுக்கடி என்றறிந்து, மணி மந்திர அவுஷதாதியாலும் தெய்வவலியாலும் உபசரிக்க, விஷந்திரும்பும்.

மதாந்தரம் முற்றியது.

தாடைப்பல்லின்லக்ஷணம்.

சிலசர்ப்பங்களுக்குத் தாடைக்குள் முள்ளைப்போல் ஒவ்வொரு கோரைப்பற்களிருக்கும். அதுபட்டுவிஷம்ஏறினால், உடனே அபாயமாம்.

கடி நிறநிதானம்.

சர்ப்பக்கடிபட்ட இடத்தில், கறுப்புநிறமாகவும், கனிந்தநாவல்பழ நிறமாகவும் இருந்தால், அவ்விஷம் மிகவும் கொடிதென்றறிக.

மதாந்தரம்.

கடி மணநிதானம்.

சர்ப்பங்கடித்துப் பல்லழுந்திய இடத்தில் மோந்தால், தாழைமலர் மணம் வீசினுல், நல்லபாம்பு; பாதிரிப்பூமணம்வீசினுல், வழலைப்பாம்பு; புளியம்பூமணம் வீசினுல், விரியன்பாம்பு; மல்லிகைப்பூமணம் வீசினுல், மண்டலிப்பாம்பு; மிளகு சுக்கு இவைகளின்மணம்வீசினுல், சிறியபாம்பு என நிதானிக்கவும். இம்மணங்கள் ஒன்றும்வீசாமல் சர்ப்பத்திற்குப் பகையான மணம்வீசினுல், சர்ப்பக்கடி அல்லவென்றறிந்து, கீடவிஷ சிகிச்சைகளை உடனே சந்தேகமறச் செய்யவேண்டும்.

மதாந்தரம் முற்றியது.

தீக்கடி ஸ்தானநிதானம்.

எந்தச்சர்ப்பமாவது, புருவமையம், பஞ்சேந்திரியம், தலை, நெற்றி, நெறி, தாடை, உதடு, தாழ்வாய்க்கட்டை, நெஞ்சு, தோள், உள்ளங்கை, அக்குள், தனம், மார்பு, அடிமார்பு, தொப்புள், வயிறு, ஆண்குறி, குதம், உள்ளங்கால், கில் என்னும் இவ்விடங்களில் கடிக்கில், மரணமே.

ஸ்தான விஷ சர்ப்பநிதானம்.

பாழுங்கோயில், பாழும்வீடு, பாழூர், ஆலமரம், அரசமரம், புன்னை மரம், புளியமரம், முருங்கைமரம், சந்தைகூடும் இடத்துமரம், மூங்கிற் புதரு, நந்தவனம், நாணல்படுக்கை, பிரப்பம்புதை, மயானம், ஏரிக்கரை, நதிக்கரை, சுனைக்கரை, நீரில்லாத தாமரைக்குளம், முகத்துவாரம், ஐயனர் கோயில், பிடாரியார்கோயில், துர்க்கைகோயில், யாகசாலை, தேரடி, புது மனை, புற்று, ஆற்றின்திட்டு, நாற்சந்திவீதி, முச்சந்திகூடியவீதி என்னும் இவ்விடங்களில் இருக்கின்ற எந்தச்சாதி சர்ப்பமாவது அந்திசந்தி வேளையில் கடிக்குமாயின், அவ்விஷம் அசாத்தியமே.

ஸ்தான திதி காலதோஷநிதானம்.

எந்தச் சர்ப்பமாவது, அனந்தம்பேர்கூடுகின்ற பொதுவிருக்ஷம், மயானம் என்னும் இவ்விடங்களிலும், பருவம், அமாவாசை, பஞ்சமி, பிரதமை, அஷ்டமி, நவமி ஆகிய இத் திதிகளிலும், சூரியோதயகாலம், மாலைமயங்குங்காலம், அயர்ந்துநித்திரைசெய்கின்றகாலம், பாதிராத்திரி காலம் ஆகிய இக்காலங்களிலும் கடிக்கில், மரணமே.

நக்ஷத்திர தோஷநிதானம்.

சர்ப்பமானது, பரணி, கார்த்திகை, ஆயிலியம், விசாகம், பூரம், பூரட்டாதி, பூராடம், சதயம் ஆகியஇந்தநக்ஷத்திரங்களோடுங் கூடியபருவ

காலத்திலும், நிருதிமூலையிலும், * அசுரமுகூர்த்தத்திலும் கடிக்கில், அசாத்தியமாம். அன்றியும், மகம்,திருவோணம், மூலம், சித்திரை, சோதி ஆகிய நக்ஷத்திரங்களிலும், சன்மநாள், அநுசன்மநாள், திரிசன்மநாள் இதுகள்சேர்ந்த அவிட்டநக்ஷத்திரத்திலும்,நவமியிலும்,வீட்டிறப்புகளில் இருந்துகடிக்கில், அசாத்தியம் எனச்சிலநூலில் சொல்லப்படுகின்றது.

அசாத்திய விஷக்குறிநிதானம்.

ஏறினவிஷம் மந்திர தியான அவுஷதங்களில் திரும்பாதிருக்கையில், நகம் உதடு உள்ளங்கை கரியைப்போல் கறுக்குமாயின், அசாத்தியமே. மேலும் எந்தச்சர்ப்பவிஷத்தினுலாவது, தலையில் இருக்கின்றரோமம் உதிரல்.மூர்ச்சை, மேற்சுவாசம், விக்கல், இருமல்,வாந்தி, மார்புகனத்தல், நடுக்கல், விகாரவேதனை, முடிசோருதல், கண்சிவக்குதல், தொண்டை அடைப்பு, நாவல்பழம்போல் பற்கறுத்தல், ஆமை யோட்டைப்போல் முதுகு உயருதல், நவத்துவாரத்திலும் ரத்தம் ஒழுகுதல் என்னும் இக்குணங்கள் உண்டாயின், அசாத்தியமாம். அன்றியும்,கடிபட்ட இடத்தில் வீக்கமுண்டாகிரத்தங்கம்மல்,நாசிமெலிந்துசிறுத்துஅழுந்திச்சில்லிடுதல், முதுகும் ஆண்குறியும் கோணுதல்,முகம்சில்லிட்டுக் கறுத்துக் கோணுதலுடன்ரோமமுஞ்சில்லிடுதல்,கீல்கள்தளரல்,காலும் கையும்கறுக்குதல், வாயில் நுரைவிழுதல், தேகம்நோவோடு நருக்கித் துவைத்ததுபோல் இருக்குதல், மலம்நழுகல் என்னும் இக்குணங்கள் உண்டென்பாருமுளர்.

சாமானிய சர்ப்பவிஷக்குறி.

சர்ப்பக் கடியுண்டவனுக்கு, மலமூத்திரம்நழுகுதல், மார்பில் கனத்தலுடன்குத்தல், ரோமச்சிலிர்ப்பு, வாந்தி, தாகம்,நாசியால்பேசுதல், கீல்களில்நோவு, கண்சிவத்தல் அல்லதுகறுத்தல் என்னும் இக்குணங்கள் உண்டானுலும், சந்திர சூரிய நக்ஷத்திராதி கிரகங்கள் கண்ணுக்குத் தோற்ருவிட்டாலும், கண்ணுடி நெய் தயிலாதிகளில் முகந்தெரியாவிட்டாலும், அசாத்தியம். ஆனுல், இப்போது சொல்லியகுறிகளெல்லாம் சகலசர்ப்ப விஷத்திற்கும் பொதுவாயிருக்குமென்றறிக.

சர்ப்பங்களின்தத்து.

சர்ப்பங்கள் பிறந்த உ-வது மாதத்தில்தோல் உரிக்கும்போதும், சு-வது மாதத்தில் பல்விஷம் குதிக்கும்போதும், அவைகளுக்குத் தத்தென்றறிக.

கடித்த சர்ப்பச்செய்கைக்குறி.

எந்தச்சர்ப்பமாவது, கடித்தவுடன், படத்தைவிரித்து ஆடினுலும், தரையிற்புரண்டாலும், கடித்த இடத்தில் ஆடிப்பின்பு அசைவற்றுக் கிடந்தாலும், கடி உண்டவனுக்கு விஷம் மீளாதென்றறிக.

---

* அசுரமுகூர்த்தம் என்பது சந்தியானகாலமாம்.

மதாந்தரம்.

* கருநாகவிஷம்.

இது, அவுஷதாதிகளால் இறங்கினாலும், இரண்டுகாதுகளையும் பாதிரியவாதத்தைப்போல் செவிடாக்கும். இந்தவிஷம், நிலப்பனைக் கிழங்கும், உப்பிலாங்கொடிவேரும் அரைத்து, சிறு எலுமிச்சங்காய்ப் பிரமாணம்முகூர்த்தத்திற்கொருதரமாக அ-தரம் விழுங்கில், முறியும்.

சிறுநாகம்.

இது, தருப்பை அகலம் உள்ளபடத்தையும், பருத்த ஈர்க்கை ஒத்த உடலையும்பெற்று, தாழைமலர்க்குள் வாசமாயிருக்கும். இவ்விஷத்திற்கு, மகாவிஷ சிகிச்சைவேண்டும். இதனை, பூநாகம், புல்நாகம் என்பர்.

விரியன் பேதம்.

விரியன் என்பது, பெருவிரியன், ரத்தவிரியன், செவ்விரியன், நீர் விரியன், பொறிவிரியன், புல்விரியன் என ஆறுவிதப்படும். இவைகள் பத்திரகாளியின் ஆடையில் இருந்துபிறந்ததாகச் சிலர்சொல்லுகிறார்கள்.

பருவிரியன்விஷம்.

இது, மயக்கம், தயக்கம், உறக்கம், வெப்பம் என்னும் இவைகளை உண்டாக்கும். ஆனால்கடிவாயில் ரத்தமும்வீக்கமும் எரிச்சலும்பிறக்கும்.

ரத்தவிரியன்விஷம்.

இது, வயிற்றில் வியாபித்தால், அவ்வயிற்றில்வலியை உண்டாக்கி உண்டாக்கிக்கொல்லும் ; அப்போதுகடித்தவாயில் உதிரமும் மேலில் தடிப்பும்பிறக்கும். இதுதவிர மற்றை நான்குவித விரியன்விஷத்தினால், கடிவாயில்மாமிசமிகுதியும், தடிப்பும், தேகஎரிச்சலும்,வலியும்,சோர்வும், நித்திரைமயக்கமும் உண்டாகுமென்றறிக. இவைகளுக்கு, மகிழம் பருப்பு, வசம்பு, உள்ளி, மிளகு, சுக்கு, கள்ளிப்பால், வேப்பெண்ணெய், இலுப்பைப்பிண்ணாக்கு, ரசம், வெண்காரம், மரக்காரைப்பழம், பூவன் பழம், இப்பனிரண்டும் வகைக்கு விராகனிடை க-ம், வெற்றிலை ௰௪-ம் ஒன்றாய்ப்போட்டரைத்து, சீலையில்தடவிக் காயவைத்துக்கொண்டு, சிறு நீரில்நனைத்து நாசியிற்பிழிய, சகலவிரியன் விஷங்களுந்தீரும்.

வழலைச்சர்ப்பவிஷம்.

இது,கடித்த இடத்தில்ரத்தமும்,வாயில் அனற்றலும்உண்டாக்கும். இதற்குச்சிகிச்சை : ஏலம், மிளகு, வக்கணத்திவேர் இம்மூன்றுஞ்சமன் கூட்டிக் கற்பூரவள்ளிச் சாறுவிட்டரைத்து உலர்த்திய மாத்திரையைத் தண்ணீரில் உரைத்துக் கடியுண்டவன் கண்ணில் கலிக்கமிட,விஷந்தீரும்.

கருவழலைச்சர்ப்பவிஷம்.

இது, சரீரத்திற்காங்கையோடு அதிகவியர்வையும், உள்ளங்கால் உள்ளங்கையில் சிவப்பும், கோழையால்மார்பில் அடைப்பும் பிறக்கும்

---

* இதுவே கிருஷ்ண சர்ப்பமாம்.

படிக்குச்செய்யும். இதனால், அனந்தம்வேதனையும் உண்டாகும். இது, நீலஞ்சோதியும்,கடகரோகணியும்,கோழிமுட்டைவெண்கருவும்,சமமாகக் கூட்டி அரைத்துப் பசும்பாலிற்கலந்து உள்ளுக்குக்கொடுக்க, தீரும்.

மூர்க்கன்.

இது கடித்தஇடத்திலும் முதுகிலும் வேதனைபிறப்பதுந்தவிர, அவ் விஷத்தினால், வாயும் கழுத்தும் முறுக்கிக்கொள்ளுதல், குரல்நெரிதல், தேகம்பதறல், தலைசுழலல் என்னும் இக்குணங்கள் உண்டாகும். இவ் விஷம்,காடியைத்தெளித்துவன்னிஇலையைஇடித்துஅரை ஆழாக்குச்சாறு பிழிந்து உள்ளுக்குங்கொடுத்து, மேலுக்கும் அத் துவாலையிட, தீரும். இதற்குக்கொம்பேறிமூர்க்கன்,சாரைமூர்க்கன்,பனையேறி எனப்பெயராம். இது, தன்னால் கடியுண்டவன் சுடுகாட்டில்தகிக்கப்படுகின்றனை என்று உயர்ந்தமரக்கொம்பில்ஏறிப் பார்க்குமென்றும், அவ்வுளவுதெரிந்தவர்கள் உடனே வைக்கோல்சுமைமுதலியவைகளை அச் சுடுகாட்டிலிட்டுப்புகைக் கக்கண்டு அவன் இறந்தானென்றிறங்கிவிடுமென்றும், அதற்பின் சிகிச்சை செய்யில் விஷந்திரும்புமென்றும் சொல்லுவது உலகவழக்காம்.

மயக்குச்சர்ப்பம்.

இது கண்ணில் விஷத்தையுடையது. இப்பார்வைசற்றுநேரம் படினும்உடனே அவர்களுக்கு மயக்கமும்கண்களில்சுழற்சியுமுண்டாகும்.

முறுக்குச்சர்ப்பம்.

இது, சரீரமெல்லாம் திருகுக்கள்ளியைப்போல் முறுக்கிக்கொள்ளு தலையும், முறத்தால் தெள்ளுவதுபோல் பதறலையும் உண்டாக்கும்.

சாரைப்பாம்பு.

இது, நீண்ட உடலையும் வேகநடையையும்பெற்று, மனுஷரை வாலால்அடிப்பதும்அன்றி, பாதமுதல்மார்புவரைக்கும்சுற்றி இடுப்பையும் ஒடிக்கும். இதில், வெண்சாரை, கருஞ்சாரை, செஞ்சாரை, மஞ்சள்சாரை என நான்குபேதம் உண்டு. அவைகளும் இவ்வாறேசெய்யும். இவை களைப்பார்த்த எருமைமாடுகளுக்கு மாலைக்கண் உண்டாகும் என்பர்.

புடையன்.

இது,நீண்டஉருவத்தையும் அழுக்குநிறத்தையும் பெற்று, வாலின் முனையால்குத்தித் தேகத்தில் புடைகளை விஸ்தாரம் உண்டாக்கும்.

மண்ணுளிப்பாம்பு.

இது, தம்பாக்கு, வெள்ளி, ரத்தம் ஆகிய இவைகளின் நிறத்தைப் பெற்று,நீண்ட பயற்றங்காய்ப் பிரமாணமுள்ளதாயிருக்கும். செவியில் நுழையில், அபாயமாம். இவ்விஷத்தினால், பருவகாலந்தோறும் சிறுசிறு தடிப்பும் நமைச்சலும் உண்டாகும். இதனைச்சிறுபாம்புக்கடி என்பர். இத்தடிப்பு, எண்ணெய்விட்டுக்கலந்தகூழை ஏழுநாள் சாப்பிடத்தீரும்.

காலியாங்குட்டி.

இது ஒருசாணிரண்டுசாண் நீளத்துடன் தேசசு குறைந்திருக்கும் ஆனால், கடிக்க அறியாது கடிக்கில், பெருஞ்சிகிச்சைவேண்டும்.

கண்குத்திப்பாம்பு.

இது, பசியநிறத்துடன் நீண்டஉருவத்தைப்பெற்று, விருக்ஷங்களில் வாசம் பண்ணுவதும், நேரிட்டவர் கண்களைக் குத்துவதுமா யிருக்கும். இதுவே பச்சைப்பாம்பாம்.

வெண்ணாந்தைப்பாம்பு.

இது, பருத்தசெக்கு,பனைமரம், தூண் முதலியபிரமாணங்களையும், உடலெல்லாம் வழுவழுப்பையும் உள்ளதாய், வாலும்தலையும் ஒரே மொத்தமாய் மேலில்வெளுத்த வரிகளைப்பெற்று, கோழி, ஆடு, மாடு முதலியவைகளைவிழுங்குவதாயிருக்கும்.சிலர் யானையைவிழுங்குமென்றும் சொல்லுகிறார்கள். இது, மலைப்பாம்பு,தாசரிப்பாம்புஎனச்சொல்லப்படும்.

சர்ப்பவிஷவேகபேதம்.

சகல சர்ப்பவிஷத்திற்கும், வாயுவேகம், தேயுவேகம், வருணவேகம் என மூன்று வித வேகமும், இவற்றுள் உட்பிரிவும் உண்டு.

க-வது வாயுவிஷவேக நிதானம்.

வாயுவைப்பற்றிவிஷம் ஏறும்போது எட்டுவிதவேகம் உண்டாகும். அவையாவன:—க-வது, மூர்ச்சையும் மிகுந்தவியர்வையும்உண்டாகுதல்; உ-வது, சரீரம்வெதும்புதல்;௩-வது,கண்சொருகுதல் ; ச-வது,செவியை அடைக்குதல் ; ரு-வது, நெஞ்சில்கபங்கட்டுதல் ; சு-வது,அறிவுமாறுதல் ; எ-வது, மேல்மூச்சுவாங்குதல் ; அ-வது, உயிர்நீங்குதல் என்பனவாம். ஆனால்,இவ்வேகம் பிறக்குமுன்,விஷமானது, கடிவாயில் ருய-மாத்திரைக் காலம் நின்று, பின்பு தேகமெங்கும் வியாபித்துச் சிரசில் ஏறும்.

உ-வது தேயுவிஷவேக நிதானம்.

தேயு என்னும் பித்தத்தைப்பற்றிவிஷம் ஏறும்போது ய-விதவேக முண்டாகும். அவையாவன:—க-வது, முகங்கறுத்துக் கண்சிவக்குதல் ; உ-வது, ரோமங்களின்முனைபிளந்துசிறுநீர்கறுத்திறங்கிமுகம்வெளுத்தல்; ௩-வது, வேதனையுடன் சரீரம்நீண்டு சிந்தைமயங்கி வாய்குளறுதல் ; ச-வது, சோபம்பிறந்து குடலில் எரிச்சல்கண்டு தேசசுமாறி நாசியால் சலம்வடிகுதல் ; ரு-வது, தேகமும் கண்ணும் விடவிடத்து ஆடுதல் ; சு-வது, அங்கம்பதைத்து இளைத்து நாசியால் சலம்பெருகி மொழிமாறிப் பல்லைக்கடிக்குதல் ; எ-வது ம், அ-வது ம், கபங்கட்டிச்சுவாசம் எழும்பி ஊர்த்துவதிஷ்டியாகப்பார்க்குதல் ; கூ-வது, உயிர் அடங்கி இருக்குதல் ; ய-வது, உடலைவிட்டு ஆவிநீங்குதல் என்பனவாம். இவ் வேகம்பிறக்கும் முன்விஷமானது கடிவாயில் எருய-மாத்திரைநின்று பின்பு ஏறும்.

௩-வது வருண விஷவேகநிதானம்.

வருணன்என்னும்சிலேஷ்மத்தைப்பற்றி விஷம்ஏறும்போது பத்து விதவேகம் உண்டாகும். அவையாவன:—க-வது, தேகஞ்சிவந்து ரோமஞ்சிலிர்க்குதல் ; உ-வது, வாயுலர்ந்து தேகங்கறுத்து வெதும்புதல் ; ௩-வது, தேகத்திற்குட்புறத்தில் உளைக்குதல் ; ௪-வது, கபம்அதிகரித்து மனங்கலங்கித்தத்தளிக்குதல் ; ௫-வது,தலைநடுக்கலும் அறிவழிதலும்பிறக்குதல்; ௬-வது,கண்கள்மலரவிழித்து மேல்நோக்குதல் ; ௭-வது, அவயவம் முறைக்குதல்; ௮-வது,சரீரவியாபாரம்அடங்குதல் ; ௯-வது,சுக்கிலம்நசிக்குதல்; ௰-வது,உயிர்நீங்குதல் என்பனவாம், இவ்வேகம் பிறப்பதற்குமுன் விஷமானது கடிவாயில் ௱௫௰-மாத்திரைநின்று பின்பு ஏறும்.

உயிர்நிலைவிழிக்குறி.

விஷத்தினால் உயிர்அடங்கியகாலத்தில், கண்கள்மேல்நோக்கி நிலைக்கண்பட்டிருக்கில், உயிரானது ஊர்த்துவகாயமானமேற்புறத்தில் அடங்கியிருக்கும் ; கீழ்நோக்கியிருக்கில், உயிர்கீழடங்கியிருக்கும் ; பக்கங்களில் நோக்கியிருக்கில், உயிர்பக்கங்களில் அடங்கியிருக்கும் ; விழித்தபடியே சமபார்வையாக இருக்கில், உடலைவிட்டு உயிர்நீங்கியே இருக்குமென்றறிக.

உயிர்ப்பரீக்ஷைநிதானம்.

விஷத்தால் இறந்தவனது தேகத்தில் பிரம்புகொண்டு அடிக்கில் தடித்தாலும், அல்லதுவெதும்பலோடுசிவந்தாலும் : சவத்தைக்குளத்திற்போடில், அழுந்தினாலும் : சுத்தசலத்தை மேலேசொரியில், குளிர்கண்டு ரோமஞ்சிலிர்த்தாலும் : கைவிரல்கால்விரல்களில் நெட்டம்முறிந்தாலும்: தலைமயிரைப்பற்றியிழுக்கில், சொற்பவலியுடன் அருக்களிப்பு இருந்தாலும் ; குடோரிஇடில்,அதன்வழியாகச்சிவந்தரத்தம் ஒழுகினாலும்;தாதுக்களில் ஒன்றுவதுசொற்பநடையாகநடந்தாலும் உயிர்அடங்கிஇருக்கின்றதெனநிதானித்துப் பலவிதச்சிகிச்சைகளையும் விரைவில்செய்யில் அவன் பிழைப்பான் ; ஆதலால் விஷத்தால் உயிர் அடங்கியசவத்தை ௯௰-நாழிகைவரைக்கும் தகனம் செய்யக்கூடாதென்பது நூல்வழக்காம்.

சர்ப்பவருக்கச் சத்துருவகை.

சர்ப்பங்களுக்கு, இருதலைமணியன், செந்நாய், மயில், கோழி, எருத்தின்குளம்பு, மின்னல், இடி,கீரி, கரடி,பன்றி,செம்போத்து,கருடன், முதலை, ஆந்தை, கூகை, மான், புதுவெள்ளம், புகைமூடிய அனல் முதலியவைகளும், மனிதரும் சத்துருக்களாம்.

மதாந்தரம் முற்றியது.

விஷவிருத்திலக்ஷணம்.

சர்ப்பக்கடியினால் அற்பவிஷம் ஏறியிருந்தாலும், அது, பசி,தாகம், துக்கம்,பயம், கோபம், மிகுந்தநகைப்பு, அக்கினித்தொழிலில்இருக்குதல், சூடுகையான நிலத்தில்படுக்குதல், கீழ்க்காற்றில்திரிதல்,இரட்டை அலரிப்

பூவைமுகருதல், சரீரசுட்கம், பேதி, அசீரணம், துர்ப்பலம், பித்தவாயு முதலியரோகத்தினால் மெலிதல், யானை, மேகம், எலி, மேளம் முதலிய தொனிகளை யுற்றுக்கேழ்க்குதல் என்னும் இவைகளினால் மகாவிஷமாகும்.

விஷத்திற்கு ஆகும்பத்தியம்.

விஷங்கடித்தவர்களுக்கு, பழகிய அரிசி, சாமையரிசி, தினையரிசி, பயறு, கறுப்புப்பயறு, துவரை, சிறுகீரை, பாலைக்கீரை, இலந்தைக்கொழுந்து, புளியாரை, சிறுகத்தாரிக்காய், மாதுளங்காய், நெல்லிக்காய், விளாம் பழம், நாவற்பழம், இந்துப்பு முதலிய வஸ்துக்களும், காரம் இல்லாத அன்னபானாதிகளும் ஆகு மென்றறிக.

விஷத்திற்கு ஆகாப்பத்தியம்.

விஷந்தீண்டப்பெற்றவர்கட்கு, பகல்நித்திரை, சையோகம், கோபம், அதிகநடை, தீக்ஷணவெயில், ஸ்நானம் முதலிய இச்செய்கைகளும், கள்ளு, எள்ளு, கொள்ளு, சைத்தியபண்டம், காரமாகிய அன்னபானாதிகள் என்னும் இவ் வஸ்துக்களும் ஆகா தென்றறிக.

ஆரூடநிதானம்.

பாம்புக்கடிஉண்டவன்இடத்தில்இருந்துவந்த தூதுவன், ஊர்த்துவ முகதிஷ்டியாயாவது அதோமுகதிஷ்டியாயாவது பார்த்துக்கொண்டு, இன்னானை விஷந்தீண்டித்தென்று சொல்லி அழைப்பானாகில், அவ்விஷம் மீளாதென்று விஷச்சிகிச்சகன் நிதானிக்கவேண்டும்.

இதுவுமது.

தூதுவன்சொன்ன சொல்லில் இருக்கும் அக்ஷரங்களை இரட்டித்து அத்தொகையை மூன்றுபேருக்குக்கொடுக்கில், மிகுதியில்லாவிடில் அவ் விஷம்மீளாதென்றும், ஒன்று இரண்டுமிகுதியானால்மீளுமென்றும் அறிக.

இதுவுமது.

வைத்தியன் யாகஞ்செய்யுங்காலம், நித்திரைசெய்யுங்காலம், எண்ணெய் இட்டுக்கொள்ளுங்காலம், மூலிகை முதலியவைகளைக் கத்தியால்நறுக்குகின்றகாலம், மனச்சஞ்சலமாக இருக்குங்காலம் ஆகிய இக்காலங்களில் தூதுவன்வந்துசொன்னால், அவ்விஷம்மீளாதென்றறிக. இவ்விதமாகச்சொல்லுகின்றதூதுலக்ஷணம்விஸ்தாரம்உண்டு. அவைகளைச் சாரீரம் என்னும் சாஸ்திரத்தில், ௬-வது அத்தியாயத்தில் காண்க.

இப்படலத்தில் ஆதியந்தமாகச் சொல்லியசர்ப்பங்களையும், அவ்வவ் விஷகுணங்களையும் அறிந்து நிதானித்து, அவைகட்கு மணி மந்திர அவுஷதாதிகளினாலும், தெய்வவலியாலும், வைத்தியஞ்செய்கிற பண்டிதனைக்காணில், கருடனைக்கண்டதுபோல்சர்ப்பங்கள் பயப்படும் என்றறிக.

பதினான்காவது விஷாதிபேதபடலம் முற்றியது.

உ

சுப்பிரமணியர் துணை.

ஜீவரக்ஷாமிர்தம்.

பதினைந்தாவது * கீடாதிபேதபடலம்.

கீடாதிபேதம்.

உலகத்தில், கீடம் என்பது, காலபேதங்களினாலும், தேசபேதங்களினாலும், உருவபேதங்களினாலும், குணபேதங்களினாலும், அனந்தங்கோடிவகையாயிருந்தாலும், அவைகள், வாயுகீடம், அக்கினிகீடம், சோமகீடம், சங்கீரணகீடம், என ச-வகைக்குள் அடங்கி, சூஎ-விதப்படும். அவையாவன :— வாயுகீடம் ௰அ, அக்கினிகீடம் உச, சோமகீடம் ௰௩, சங்கீரணகீடம் ௰உ என்பனவாம். இந்த சூஎ-ம் சுத்தகீடங்களாம். தொந்தகீடங்களுக்களவில்லை ; இவற்றுள், மகாவிஷகீடம் ச-வகைப்படும்.

க-வது வாயுகீடம்.

இது ௰அ-பேதப்படும். அவையாவன :— குன்னசம்,துண்டிகேரம், சிருங்கிசாம், குகுந்தகம், உச்சிலிங்கம், அபிலாபம், சுவேதகம், மயூரகம், அபிசாரு, உலூகம், விருத்தம், சாரிபம், வைதளம், சராலம், கூர்மம், பருஷம், சித்திரசீரிஷம், துவிராசிகம் என்பனவாம். இவைகள் வாதப்பிரகோபமாயிருக்கும். இவ்விஷத்தினால் அவ்விடத்தில் அதிகநோவும் சரீரம்முழுதும் குத்துப்பட்டதுபோல் வேதனையும் உண்டாகும்.

உ-வது அக்கினிகீடம்.

இது உச - பேதப்படும். அவையாவன :— கௌடின்னியம், கண்டபவம், லாதரி, பத்திரவிருக்ஷிகம், சிநாதுகம், பிர்ம்மணிகம், விடபப்பிரமணம், பாகியகி,பிச்சிலம்,கும்பி, வர்ச்சகீடம், அருமேதகம், பிண்டபம், பதுமகீடம், மகரம், சதபாதி, பஞ்சாவம்,பாந்தமச்சம், சூக்ஷ்மதுண்டம், அதிகர்த்தபி, கீடக்கிரமம், சராஷி, சிதபி, சிலேஷ்மகம் என்பனவாம். இவைகள் பித்தப்பிரகோபமாயிருக்கும். இவ் விஷத்தினால், கடிவாயில் ரத்தங்கம்மி, இலுப்பைப்பூ பேரீச்சங்காய் இவைகளைப்போல்கொப்பளம் எழும்புதலும், எரிச்சலும், பேதியும் உண்டாகும்.

---

* கீடம் என்பது புழு ; இப்படலம் இது முதலிய செந்துக்களின் விஷபேதங்களைக் கூறுவதாம்.

௩-வது சோமகீடம்.

இது ௰௩-பேதப்படும். அவையாவன :—விஸ்வம்பரம், பஞ்சசுக்கிலம், பஞ்சமக்குரோதம், சௌண்டிகம், சையகம், துலாகம், படம், கிடிகை, சடி, சூசீமுகம், கிருஷ்ணகோதம், அதப்பரம், காஷாயவாசி என்பனவாம். இவைகள் சிலேஷ்மப்பிரகோபமாயிருக்கும். இவ் விஷத்தினால், கடிவாயில் அத்திப்பழம்போற் கொப்பிளமும், அதில் அற்பநோவும் உண்டாகும்.

௪-வது சங்கீரணகீடம்.

இது ௰௨-பேதப்படும். அவையாவன :—துங்கீநசம், கலகஸ்தம், பகம், பாஹடகம், கோஷ்டகாகி, கிருமிகரம், மண்டலபுஷ்பகம், காளநாபம், சரஷபகம், மத்குளி, சம்பளி, அக்கினிகீடம் என்பனவாம். இவைகள் திரிதோஷ பிரகோபமாயிருப்பதுந்தவிர, பிராணநாசத்தையும் செய்யும். இவ் விஷத்தினால், வாதகீடம் ஆதியாகச் சோமகீடம் ஈறாகச் சொல்லிய மூன்றுவித கீடங்களுக்குள்ள விஷகுணங்களும், கொப்பிளங்களும், வேதனைகளும்மிசிரமாகவொரேகாலத்தில்பிறந்து, அவ்விடத்தில்வீங்குவதும் நமைச்சலோடு துர்க்கந்த ரத்தம் ஒழுகுவதுமாயிருக்கும், அன்றியும், சிரசும் கண்களும் கனத்தல், மூர்ச்சை, பிரமை, இளைப்பு, இருமல், சுரம், அரோசகம், அதிகவேதனை என்னும் இக்குணங்களும் உண்டாகும். இவைகளைச் சாமானிய கீடவிஷங்களென்றறிக.

மஹாவிஷ கீடோற்பத்தி.

சர்ப்பங்களின் மல மூத்திரத்திலும், சுக்கிலத்திலும், முட்டைகள் உடைந்துநனைந்தஇடத்திலும், அச்சர்ப்பங்கள் இறந்து அழிந்த உடலிலும் பிறக்கின்ற கீடம் ௪-பேதமாம். இவைகள், வாதாதிமூன்றுதோஷ சனனங்களாகவும் திரிதோஷ சனனங்களாகவும் இருக்கும்.

கீடதந்தலக்ஷணம்.

இரண்டு விஷப்பற்களை உள்ள கீடங்கள்கடிக்கில், கடிவாயில் மலைக் கோங்குப்பூப்போல் மஞ்சள்நிறமாகவும், மூன்று விஷப்பற்களை உள்ள கீடங்கள்கடிக்கில், நானாவிதநிறங்களாகவும் தோற்றும்.

அஷ்டகீடபேதம்.

ஓந்திமுதல் சிலந்திவரைக்கும் எண்வகைக் கீடங்களாம்; இவைகளின்பேதம் ௬௮-விதப்படும். அவையாவன :—ஓணான் ௪, தவளை ௮, அடவி ௩௬, வீட்டுப்பல்லி ௫, காட்டுமசகம் ௪, மக்ஷிகா ௬, மலைப் பிபீலிகா ௬, சிலந்தி ௨௮, என்பனவாம். இவற்றுள் சிலந்திப்பூச்சிகள் ஒவ்வொன்றிற்கும் உருவமும் விஷகுணமும் பேதிப்பதால், இவைகளைத் தனித்தனியே எடுத்துக்காட்டப்படும். மற்றை எழுவகைக்கீடங்களுக்குள் ஒவ்வொருவகைக்கு உருவம்பலவாகியும் விஷகுணம் ஒன்றாயிருப்பதால்,

அவ் ஏழுவகைக்கீடங்களுக்கும் ஏழுவகைவிஷகுணமே கூறப்படும். இவ் எண்வகைக்கீடங்களும் முற்கூறிய கீடவகை நான்கினுள் அடங்கும்.

௧-வது ஓணான்.

இது கடிக்கில், அங்கு பிறையைப்போல் காயம் உண்டாகும்; அப்போதுவீக்கம்,நமைச்சல்,குத்தல்,நோவு,சோருதல், மலத்தில்பலநிறம் என்னும் இக்குணங்கள் உண்டாகும். இவ்விஷம், மூங்கில் குருத்து ரசம் காலாழாக்கில், மிளகுச்சூரணம் பலம் ௮-சேர்த்து, ௫-நாள் ௨-வேளையும் சாப்பிடதீரும். இது பச்சை ஓணானுக்கும் தவளைக்கும் உதவும்.

௨-வது தவளை.

இது கடிக்கில், அதிகசோம்பலான நித்திரையும், மூர்ச்சையும், கறுத்துப்பரவுகின்றசொறியுமுண்டாகும்.இவ்விஷம், ஓட்டறை, லவணம், உத்தாமணிவேர் இம் மூன்றையும் சமமாக நிறுத்துச் சிறுநீரால் அரைத்துக் குழம்பாகவைத்துக்கொண்டு, கடிவாயிலும் தேகமுற்றிலும் ௮-நாள் லேபனம்பண்ணத் தீரும். லேபனம் என்பது பூசித்தேய்த்தல்.

௩-வது அடவி ஈ.

இது கடிக்கில், அதிகநித்திரையும் மிகுமூர்ச்சையும் உண்டாகும்.

௪-வது வீட்டுப்பல்லி.

இது கடிக்கில், நோவு, வியர்வை, வீக்கம், எரிச்சல்,மார்புவேதனை, பொடிச்சிரங்கு எழும்புதல் என்னும் இக்குணங்கள் உண்டாகும். இவ்விஷம், குதிரைச்செவி மருந்தின்வேர், பெருங்கரந்தைவேர் இவ் விரண்டும் வகைக்கு பலம் ௨-ஆகச் சேர்த்து, அதைப் பாகலிலைச்சாறும் பசும்பாலும் சமமாகக்கலந்துவிட்டு அரைத்து, தடிப்பாக வைத்துக் கொண்டு, கடிவாயில்லேபனம்பண்ணி உடம்பெங்குந்துவாலையிடத்தீரும். இவ்விஷம் கொடிதென்றும், அதிவிரைவில் மகாவிஷ சிகிச்சைகளைச் செய்யவேண்டுமென்றும், இல்லாவிடில் ஒருவருஷத்துக்குள் மரணம் உண்டாகுமென்றும் சிலமதாந்தர சம்மதம்.

௫-வது காட்டு மசகம்.

இது கடிக்கில், அவ்விடத்தில், நமைச்சலும், அற்பவீக்கமும், வேதனையும் உண்டாகும். இது அசாத்தியம்: ஆயினும் நீலி இலைக் கல்கத்தாலும்அவ்வேரின்கஷாயத்தாலும்போம். மசகம் என்பது கொசு.

௬-வது மக்ஷிகா.

இதுகடித்தாலும்கொட்டினாலும்,அவ்விடத்தில்,வீக்கம்,நமைச்சல், எரிச்சல் முதலிய குணங்கள் உடனே உண்டாகி அடங்கி பின்பு தடித்து உபத்திரவம் உண்டாவதும் தவிர, அத்தடிப்பில் மாறுதுசிலைத் தண்ணீரும் வடியும். மக்ஷிகா என்பது குளவிமுதலியவண்டுகளாம்.

௭-வது மலைப்பிபீலிகா.

இது கடிக்கில், அவ்விடத்தில்நீர்த்துளியைப்போல்தடித்தல், அதிக நோவு,நெருப்பால்சுட்டதுபோல் எரிச்சல்,நமைச்சல், தேகத்தில் அழலை என்னும் இக்குணங்கள் உண்டாகும். பிபீலிகா என்பது எறும்பு

அ-வது சிலந்திப்பூச்சியின்பேதம்.

சிலந்திப்பூச்சி உஅ-பேதப்படும். அதன்விவரம் :— வாதத்தில் எ, பித்தத்தில் எ, சிலேஷ்மத்தில் எ, சங்கிரணத்தில் எ, ஆக இருபத்தெட்டாம. அன்றியும், பிரத்தியேகச் சிலந்தி என்பது ஒன்றுண்டு.

வாதச்சிலந்திப்பூச்சிகளின் பொதுக்குணம்.

இவைகள் வெளுப்புசிவப்புநிறத்தையும்,ஆசனத்தில்சித்திரங்களான மெல்லிய நூலையும் உள்ளதுகளாயிருக்கும் : இவ்விஷங்களால், இருமல் முதலிய வாதரோக குணங்களெல்லாம் உண்டாகும்.

க-வது பீதச்சிலந்திவிஷம்.

இது தலைநோவும் அரோசகமும் சுரமும் உண்டாக்கும்.

உ-வது குமுதச்சிலந்திவிஷம்.

இது பட்ட இடத்தில் கொப்பிளங்கள் எழும்பி, அதில் நின்றும் மாறாதுசீழ்வடிவதும் எரிச்சல்பிறப்பதுமாக இருக்கும். இதனால், இரைப்பும் நெஞ்சடைப்பும் உண்டாகும்.

௩-வது மூலவிஷச்சிலந்தி.

இது அதி கொப்பிளங்களையும் அக்கினிக் குணத்தையும் உண்டாக்கும்.

௪-வது ரத்தச்சிலந்திவிஷம்.

இது பட்ட இடத்தில், சிவந்து தடித்து அதைச்சுற்றிலும் சிறிய கொப்பிளங்கள் எழும்பி, அதில்நின்றும் ஓயாது ரத்தமும் சீழும் வடிந்துகொண்டே இருக்கும். இதனால், இரைப்பும்பேதியும் உண்டாகும்.

௫-வது சித்திரச்சிலந்திவிஷம்.

இது பட்ட இடத்தில், சிவந்த கொப்பிளங்கள் எழும்பி, அவைகள் பழுத்து உடைந்தபின்பு அங்கு கறுத்தவிரணமாகி, அதில்நின்றும் நுரைபோல்சீழ்வடிவதாயிருக்கும். இதனால், தலையிலும்கீல்களிலும்நோவு, சுரம், இரைப்பு, வீக்கம் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

௬-வது சந்தானிகச்சிலந்திவிஷம்.

இது பட்ட இடத்தில்,சகிக்கக்கூடாதகுத்தலும்விரணமும் உண்டாகும்

எ-வது மேஜகச்சிலந்தி.

இது நீலநிறம் உள்ளது ; இவ்விஷத்தினால் அந்நிறக் கொப்பிளங்கள் எழும்பும்.

ஆக வாதச்சிலந்தி எ-ம் முற்றியது.

பித்தச்சிலந்திப்பூச்சிகளின் பொதுக்குணம்.

இவைகள்,கருமை பொன்மை கலந்தநிறத்துடன்,முகத்தில் அனலையும், ஆசனத்தில் தாமரைநூலைப்போல்நூலையும் உள்ளதுகளாயிருக்கும். இவ்விஷங்களால் முக்கியமாகப் பித்தரோககுணங்கள் உண்டாகும்.

க-வது கபிலாசிலந்தி.

இது கண்களினால்பார்க்கில், தேகமுற்றும் சிவந்த தடிப்பும், வாய்நீர் ஊறலும், மயிர்க்கால்களில்எரிச்சலும், தலைப்பாரமுமுண்டாகும்.

உ-வது அக்கினிமுகச்சிலந்தி.

இது அதிகநோவையும் நெருப்பாற்சுட்ட கொப்பிளங்கள்போல் கொப்பிளங்களையும் பிறப்பிக்கும். இதனால், தாகம், எரிச்சல், நடுக்கல், மூர்ச்சை, ரத்தம்வடிதல் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

௩-வது பீதச்சிலந்திவிஷம்.

இது பட்ட இடத்தில், கட்டைநெருப்பாற்சுட்டது போலிருத்தல், மூர்ச்சை, வாந்தி, சிரோவேதனை, சுரம், அரோசகம், சூலை, மலமும் மூத்திரமும் மஞ்சளித்தல் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

௪-வது பதுமச்சிலந்திவிஷம்.

இது பட்ட இடத்தில், தாமரைப்பூவைப்போல் வட்டவடிவான கொப்பிளம் உண்டாவதும், மறைவதும், பின்பு எழும்புவதும், அதில் மாறாது சலம்வடிவதும், நோதலுமாயிருக்கும்.

௫-வது மூத்திரச்சிலந்திவிஷம்.

இது பட்ட இடத்தில், கறுப்பு சிவப்பு நிறமான கொப்பிளம் எழும்பித் துர்க்கந்தவிரணம்பிறக்கும். இதனால், இருமல், இளைப்பு,சுரம், வாந்தி, தாகம், மூர்ச்சை, பிரமை என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

௬-வது சுவேதச்சிலந்திவிஷம்.

இது பட்ட இடத்தில், விசர்ப்பிரோகக் கொப்பிளம்போல் கொப்பிளம் எழும்புவதன்றியும், அதில் மாறாது சலம்வடிதல், தாகம், மூர்ச்சை, சுரம், நோவு என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

எ-வது கறுப்புச்சிலந்திவிஷம்.

இது பட்ட இடத்தில், கறுத்தவீக்கம் உண்டாகிவிரணம்பிறக்கும்; அதில், துர்க்கந்தத்துடன் நிறபேதமான ரத்தமும் சீழும் மாறாது வடிந்துகொண்டே இருக்கும்.

ஆக பித்தச்சிலந்தி எ-ம் முற்றியது.

சிலேஷ்மச்சிலந்திப்பூச்சிகளின்பொதுக்குணம்.

இவைகள், வெண்மைநிறத்தையும், குடலில் நீலநிறத்தையும், ஆசனத்தில் சிவந்தநூலையும் உள்ளதுகளாயிருக்கும்; இவ் விஷங்களால், சிலேஷ்மரோக குணங்களெல்லாம் உண்டாகும்.

க-வது பாண்டுச்சிலந்திவிஷம்.

இது பட்ட இடத்தில், வீக்கத்துடன் கனத்தவிரணம் பிறக்கும். இதனால், சுரமும் ரோமச்சிலிர்ப்பும் சிரோபாரமும் உண்டாகும்.

உ-வது ரத்தபாண்டுச்சிலந்திவிஷம்.

இது பட்ட இடத்தில், வெளுத்துத் தடித்து விரணமாகி ரத்தம்வடியும்.

௩-வது வண்டுச்சிலந்திவிஷம்.

இது பட்ட இடத்தில், வண்டைப்போல் கறுத்தகொப்பிளம் உண்டாகி, அதைச்சுற்றிலும் எரிச்சலைத்தருகின்ற சிறு சிறு கொப்பிளம் பிறக்கும்; அன்றியும் தேகமெல்லாம் கறுத்த மச்சங்களும் எழும்பும்.

௪-வது பிங்கச்சிலந்திவிஷம்.

இது பட்ட இடத்தில், கொப்பிளம்எழும்பி, அதில்நின்றும் ரத்தம் ஒழுகும். இதனால், சுரம், நோவு, வீக்கம், அதிக எரிச்சல், தாகம் என்னும் இக்குணங்கள் உண்டாகும். பிங்கம் என்பது மஞ்சள்நிறம்.

௫-வது திரிமண்டலச்சிலந்திவிஷம்.

இது பட்ட இடத்தில், கறுத்தவிரணம் உண்டாகி, அதில் நின்றும் ரத்தம் வடியும். இதனால், அரோசகம், கண்ணெரிச்சல், உடம்பிலும் முகத்திலும் மச்சங்கள் எழும்புதல் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

௬-வது துர்க்கந்தச்சிலந்திவிஷம்.

இது பட்ட இடத்தில், பேய்ச்சுரைப்பிஞ்சைப்போல் கட்டி எழும்பி, அதைச்சுற்றிலும் நெருங்கிய சிறு சிறு கொப்பிளம் எழும்பும். இதனால், விசர்ப்பிகுணமும் வியர்வையும் துர்க்கந்தமும் எரிச்சலும் பிறக்கும்.

௭-வது சித்திரமண்டலச்சிலந்திவிஷம்.

இது பட்ட இடத்தில், விசர்ப்பிபோல் விரணம் உண்டாகி, அதைச் சுற்றிக்கொப்பிளங்கள் எழும்பும்.

ஆகசிலேஷ்மச்சிலந்தி ௭-ம் முற்றியது.

சங்கீரணச்சிலந்திப்பூச்சிகளின் பொதுக்குணம்.

இவைகள் ஆசனத்தில் பலநிறநூலையும் நெருப்பாற்சுட்டதுபோல் எரிவையும் திரிதோஷகுணங்களையும் உள்ளதுகளாயிருக்கும். இவ் விஷங்கள் சாத்தியமும் கஷ்டசாத்தியமும் அசாத்தியமும் ஆகும்.

௧-வது காகச்சிலந்திவிஷம்.

இது பட்ட இடத்தில், வெளுத்தும் சிவந்தும் பூனைப்புடுக்கன் காயினதுவிதைப்போல் கொப்பிளம் எழும்பும். இதனால், அதிகவேதனை, விக்கல், இளைப்பு, மிகுந்ததாகம், மூர்ச்சை, நித்திரைப்பங்கம், சதாமார்பு நோவு என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

உ-வது அக்கினிபதச்சிலந்தி.

இது கால்கள்தோறும் விஷம் உள்ளது; அக்கால்கள் தேகத்தில் படில், பட்ட இடமெல்லாம் கொப்பிளங்கள் உண்டாகும்.

௩-வது * லாஜவர்ன்னச்சிலந்திவிஷம்.

இது பட்ட இடத்தில். தூர்க்கந்தவிரணம்பிறந்து, அதில்சுப்பலாக் குத்துவதுபோல்குத்தலும் ரத்தமும்பெருகும். இதனால், சீதசுரம், தாகம், மூர்ச்சை, பேதி என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

௪-வது வைதேகிச்சிலந்திவிஷம்.

இது பட்ட இடத்தில் நெருப்பினால்சுட்டதுபோல் இருக்கும். இதனால், அதிகவேதனையும் சுரமும்மோகமும்மார்புநோவும் உண்டாகும்.

௫-வது ஜாலமாலினிச்சிலந்திவிஷம்.

இது பட்ட இடத்தில் விரணம்பிறந்து, அதன்மேல் மச்சமும், வீக்கமும் எழும்பும். இதனால், நோவு, தாகம், பிரமை, இளைப்பு, தேகம் மரத்தல், மோகம், பேதி என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

௬-வது மாலாகுணச்சிலந்திவிஷம்.

இது தேகமுழுதும் மச்சங்களைப்போல் கறுத்த தடிப்புகளை எழுப்பும். இதனால், உள்ளில் எரிச்சல், மேலில்குளிர்ச்சி, வயிறுப்பல், மூத்திரக்கிரிச்சரம், மூர்ச்சை, பேதி, சுரம், தலைநோவு, கண்ணோவு, இளைப்பு, தாகம், வீக்கம் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

௭-வது சுவர்ச்சச்சிலந்தி.

இது வர்ன்னபேதமாயிருக்கும். இவ்விஷத்தினால், பலநிறக் கொப்பளம் பிறக்கும்.

ஆக சங்கீரணச்சிலந்தி ௭-ம் முற்றியது.

பிரத்தியேகச்சிலந்திலக்ஷணம்.

இது புணருங்காலத்தில், அச்சுக்கிலத்துளி எத்தனைதெறிக்கின்றதோ அத்தனை கொப்பளங்கள் விரைவில் உண்டாகும்.

சிலந்திகடிக்கும் ஸ்தானநிதானம்

கபிலாசிலந்திமூக்கில், அக்கினிமுகச்சிலந்திசந்திஸ்தானநரம்புகளில் பீதச்சிலந்தி தாடைகளில், பதுமச்சிலந்திஇடதுகண்ணில், தூர்க்கந்தச்சிலந்தி வலதுகண்ணில், மூலவிஷச்சிலந்தி சுவேதச்சிலந்தி மூத்திரச்சிலந்தி கறுப்புச்சிலந்தி ஆகியநான்கும் வலதுபுஜத்தில், பாண்டுச்சிலந்தி காதில், ரத்தபாண்டுச்சிலந்தி இடதுவிலாவில், வண்டுச்சிலந்தி வலதுவிலாவில், பிங்கச்சிலந்திவயிற்றில், திரிமண்டலச்சிலந்திமுதுகில், பீதச்சிலந்திகையில், குமுதச்சிலந்தி நாபியில், சித்திரமண்டலச்சிலந்தி இடதுதோளில் சிரசில், ரத்தச்சிலந்தி காதில், சித்திரச்சிலந்திநெற்றியில், சந்தானிகச்சிலந்தி உதட்டில், மேஜகச்சிலந்தி சிரசில் உள்ளங்கையில், அக்கினிபதச்சிலந்திகண்டத்தில், காகச்சிலந்திமார்பில், லாஜாவர்னச்சிலந்திதனத்தில், வைதேகிச்

---

* லாஜம் என்பது பொரி.

சிலந்தி தோளில், சாலமாலினிச்சிலந்திகடைக்கண்ணில், மலாகுணச்சிலந்தி மார்பின்பள்ளத்தில், சுவர்ச்சச்சிலந்தி காதுக்குப்பின்புறத்தில் கடிக்கும்.

கடிகாலநிதானம்.

சிலந்திப்பூச்சி சுக்கிலபக்ஷதிதிகளில் சாயங்காலவேளையிற்கடிக்கும். இவ் விஷங்களினால், கடித்தவாயில், வெளுப்பு, கறுப்பு, சிவப்பு, மஞ்சள் என்னும் நிறமாகவும், பலவிதநிறமாகவும் இருப்பதன்றியும், அவ் விடத்தில்மிருதுவாக உயர்ந்துதடித்து அத் தடிப்பைச்சுற்றிலும் சிறுசிறு கொப்பிளம் உண்டாகும். அக் கொப்பிளச்சலம்பட்ட இடமெல்லாங் கொப்பிளிக்கும். இதனால், விசர்ப்பரோகத்திலும் சோபைரோகத்திலும் உண்டாகின்ற வருத்தமும் சுரமும் வியர்வையும் உண்டாகும்.

சிலந்தியின்சப்தவேக விஷநிதானம்.

மேற்கூறிய விஷமானது, தேகத்தில்வியாபித்த க-வது நாளில், அவ் விடத்தில் நிறம்தோற்றாமல் கொஞ்சம்தினவு உண்டாகுதல்; உ-வது நாளில், இயற்கைவன்னத்துடன்தடித்து, தினவோடுங்கூடியசிறியகட்டிகள் எழும்புதல்; ௩-வது நாளில், அகல்கவிழ்த்ததுபோல்தடித்துச் சிவந்து, அவ்விடத்தில் உள்ளரோமங்கள் சிலிர்ப்பதுமன்றி, அந்தமயிர்க்கால்களில் ரத்தம்கம்மிச் சுர முண்டாகுதல்; ௪-வது நாளில், அங்கு, வீக்கம், எரிச்சல், இளைப்பு, பிரமை இவை உண்டாகுதல்; ரு-வது நாளில், விஷதுர்க் குணங்களெல்லாம் அதிகரிக்குதல்; சு-வது நாளில் அவ்விஷம் மர்ம ஸ்தானங்களில் வியாபிக்குதல்; எ-வது நாளில், உயிர்க்கு அபாயம்வருகு தல் என்றறிக. ஆதலால், அவ்விஷங்களின்உத்தம, மத்திம, அதமாதமங் களின் பலாபலங்களைஅறிந்து, தகுந்தபடிமந்திர அவுஷதாதிகளினால்சிகிச் சைசெய்யில், உக-நாளில் சுகுணம் உண்டாகும். ஒருநாள் இரண்டுநாள் கடிவாயில் எரிவுண்டாகி அடங்கிப் பின்புகொப்பிளம் எழும்பும் என்பர்.

சர்வ சிலந்திகளின்சாமானிய விஷலக்ஷணம்.

சிலந்திப்பூச்சிகளின் விஷம் ஏறினால், அவ்விடத்தில் எழும்புகின்ற விரணங்களில், சிலது கொப்பிளங்களாயும், சிலது மண்டலாகாரமாயும், சிலது சுவேதநிறமாயும், சிலதுசிவந்தநிறமாயும், சிலதுமஞ்சள்நிறமாயும், சிலது நீலநிறமாயும், சிலது மிருதுவாயும், சிலது கடினமாயும் இருக்கும். எட்டுக்கால்பூச்சியும் இச் சிலந்திப் பூச்சிகளின் பேதமே ஆம்.

சிலந்தியின் அஷ்டவிஷபேதம்.

சிலந்திப்பூச்சிகளின், சுவாசம், பல்லு, மலம், மூத்திரம், சுக்கிலம், வாய், வாய்நீர், ஸ்பரிசம் என்னும் எட்டுஸ்தானங்களில் நின்றும் விஷங்கள் பிறக்கும். அவைகள் மனிதர்மீதுபடில், சகலதுர்க்குணங்களுமுண்டாகும்.

௧-வது சிலந்தியின் சுவாசம்.

இது சுரத்தையும் மிகுந்த தாகத்தையும் உண்டாக்கும்.

௨-வது சிலந்தியின் பல்.

இது அழுந்திய இடத்தில் பிறக்கின்ற விரணம் நிறபேதமும் கடினமும் ஸ்திரமும் உள்ளதாயிருக்கும். இதனால், சரீரத்தில் வீக்கம், எரிச்சல், வேதனை, வியர்வை, தாகம் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

௩-வது சிலந்தியின் மலம்.

இது பட்ட இடத்தில், இலுப்பைப்பழம்போல் வெளுத்தவிரணம் பிறந்து, அதில் துர்க்கந்தமும், எரிவும், பசபச என்கிறதினவும்உண்டாகும்.

௪-வது சிலந்தியின் மூத்திரம்.

இது பட்ட இடத்தில், நடுவில் கறுத்தும், உயர்ந்தும், சுற்றிலும் வாடியும் புஷ்பம்போல்மலர்ந்தும் இருக்கின்ற விரணம்பிறக்கும். அதில், துர்க்கந்தமும் எரிச்சலும் மாறாது உண்டாகும்.

௫-வது சிலந்தியின் சுக்கிலம்.

இது பட்ட இடத்தில், கடினமான கொப்பிளமும் நோவும் உண்டாகும்.

௬-வது சிலந்தியின் வாய்.

இது பட்ட இடத்தில், முருக்கம்பூவைப்போல் நிறம் உள்ள விரணம்பிறந்து, அதில் குத்தலும் ஊரலும் உண்டாகும்.

௭-வது சிலந்தியின் வாய்நீர்.

இது பட்ட இடத்தில், புங்கின்பூவைப்போல் நிறம்உள்ளவிரணம் பிறக்கும். அவ்விரணத்தின்பக்கங்களிற்பூச்சியூருவதுபோல்பரபரத்தலும், ஊசியால்குத்துவதுபோல்குத்தலும், எரிச்சலும் உண்டாகும்.

௮-வது சிலந்தியின் ஸ்பரிசம்.

இது தேகத்தில்பட்டாலும், இப்பரிசத்தைப்பெற்ற வஸ்திரம் பட்டாலும், முற்கூறியகுணங்களெல்லாம் விரைவில் உண்டாகும்.

ஆக அஷ்டவிஷபேதத்துடன் சிலந்திப்பூச்சிகளின்
விஷநிதானமும் முற்றியது.

மேற்கூறிய சகல சிலந்திவிஷங்களும், சங்கம்வேர்ப்பட்டை, மிளகு, இவ்விரண்டையும் வகைக்கு பலம் ௨-௨ வீதமாகநிறுத்து, மயனம்போல் அரைத்துப் பசுவினது நெய்யில்குழைத்து, ௨௧-நாள் இரண்டுவேளையும் சாப்பிட்டு இச்சாப்பத்தியம்காக்கில், தீரும்; அல்லது, நரிப்பல்லைத் தூளாக்கி, அதில் கற்றாழைரசத்தைவிட்டுநன்றாகஅரைத்து கடிவாயிலும் தேகமுற்றிலும் ௨௧-நாள் மூன்றுகாலமும் லேபனம்பண்ணத்தீரும்; அல்லது, அவுரியினது சமூலமும் பலம் ௧-ஆக நிறுத்து, அதில் நல்ல

சலம் ௨-படிவிட்டு, வ-ஆழாக்குக்கஷாயமாகக்காய்ச்சி, ௭ நாள் இரண்டு வேளையும் சாப்பிடத்தீரும். இவ்வாறே மூன்றுமுறை கொடுக்கவேண்டும். அல்லது, சிறுசின்னி இலை ரசம் வ-ஆழாக்கு அளவாக இரண்டுநேரமும், ௭-நாள் ௩-முறைசாப்பிட்டு உப்பில்லாப்பத்தியம் இருக்கிலும், விலகும்.

மீன் விஷம்.

சிலமீன் கடிக்கில், நோவும் எரிச்சலும் உண்டாகும். அன்றியும், நீர்வண்டு, சுழல்வண்டு, பாசிவண்டு, எரிவண்டு முதலிய சில்விஷம் உள்ளவைகள்கடிக்கில், அவ்விடத்தில் வீக்கம், நமைச்சல், நோவு, நுரைத்தபேதி, சரீரத்தில்தடிப்பு என்னும் இக்குணங்கள் உண்டாகும். இவ்விஷம், பச்சைநன்னாரிவேரை மேல்தோலும் உள்நரம்பும் போக்கிக் கொட்டைப்பாக்குப்பிரமாணம் அரைத்துக்கற்றாழைச்சோற்றில்கலந்து, ௪௰-நாள் அந்திசந்தி அருந்தத்தீரும். இதற்கு இச்சாபத்தியம்.

நாட்டுமரவட்டை.

இது கடிக்கில், வியர்வை, நோவு, சரீரம்தடித்தல், வீக்கம், கறுப்பகத்திப்பூநிறம்போல் பொடிச்சிரங்குகள் எழும்புதல், பிரமை என்னுமிக்குணங்கள் உண்டாகும். இவ்விஷம், திரிகடுகு, அல்லதுகாட்டுவாகைப் *பஞ்சாங்கம் இவற்றுள், யாதேனும் ஒன்றை வெந்நீரிலரைத்துப்பிழிந்து வடிக்கட்டி, நசியமும் லேபனமும்செய்து உள்ளுக்குங்கொடுக்கில், முறியும். இது மற்றை அட்டைகட்கும் உதவும். இதற்குச்சதபதி என்றும் பெயர்.

விருக்ஷிகோற்பத்தி.

சர்ப்பங்கள் செத்தழிந்த இடத்திலும், சாணம் கோணிப்பட்டை முதலியவை மக்கின இடத்திலும், மயானத்தின்சாம்பலிலும் பிறக்கும். இதுகள் முறையே வெளுத்தும் கறுத்தும் சிவந்தும் இருக்கும். இவற்றின் விஷம் ஏறினால், நாவுதடித்தல், தேகமரத்தல், அதிகநோவு, நாசியால் ரத்தம்விழுதல், சர்வாங்கத்திலும்வியர்வை, மூர்ச்சை, வாயுலரல் என்னும் இக்குணங்கள் உண்டாகும். இது, மந்திரவலி, அவுஷதவலி, தெய்வவலி, இம்மூன்றும் ஒத்துக்கொள்ளில் இறங்கும். விருக்ஷிகம் என்பது தேள்.

சாதாரண தேளின்பேதம்.

தேளானது, உச்சிலிங்கத்தேள், வாதத்தேள், பித்தத்தேள், சிலேஷ்மத்தேள் என ௪-விதப்படும். அன்றியும், நண்டுவாய்க்காலி ஒன்றுண்டு.

௧-வது உச்சிலிங்கத்தேள்.

இது பகற்காலத்தில்கொட்டும். இவ்விஷத்தினால், அவ்விடத்தில் வீக்கம், நரம்புகளில்மிகுவேதனை, ரோமச்சிலிர்ப்பு, அதிகசீதளம் என்னும் இக்குணங்கள் உண்டாகும். இது மந்திரத்தால் வசப்படும்.

---

* பஞ்சாங்கம் என்பது வேர், மேல்பட்டை, இலை, பூ, காய், ஆகிய ஐந்துமாம்.

உ-வது வாதத்தேள்.

இது, மார்புநோவு, மேல்சுவாசம், எலும்பு நரம்பு கீல் இவைகளில் நோவு, தேகங்கறுத்தல், கூச்சல், புரளல் முதலியகுணங்களை உண்டாக்கும்.

௩-வது பித்தத்தேள்.

இது, அறிவுநீங்குதல், சுடுகையானமேல்மூச்சு, வாயானது காரமாயிருக்குதல், முகத்தில் எண்ணெய்தடவினதுபோல் பளபளப்பு, மாமிசங்கரைதல், சோஷை என்னும் இக்குணங்களை உண்டாக்கும். அன்றியும் அவ்விடத்தில்வியர்வை, கவுட்டியில்நெறிகட்டுதல், எரிச்சல், கடுத்தல், மறுநாள்வரைக்கும் நோதல் என்னுமிக்குணங்களுண்டென்பாருமுளர்.

ச-வது சிலேஷ்மத்தேள்.

இது, வாந்தி, அரோசகம், மார்பு அதிரல், வாயில்சலம்வடிதல், பீநசம், சரீரமுற்றிலும்வாழைத்தண்டை ஒத்தசீதளம், வாயினிப்பு, என்னும் இக்குணங்களை உண்டாக்கும். இவ்விஷங்கள் கோழிமலம் உலர்ந்ததை நெருப்பில் இட்டுக் கடிவாயில்புகைபிடிக்க இறங்கும்; அல்லது, கருநாபியைத் தண்ணீரில் உரைத்துக் கொட்டினவாயில் போடத்தீரும்; அல்லது பூனைக்காஞ்சொறிச்சாறும், முருக்கிலைச்சாறும், முருங்கை இலைச்சாறும், கொட்டுவாயில்வேதுபிடிக்கக்குளிரும்; அல்லது, வெண்குன்றிவேரை, வெந்நீரில் அரைத்துப்பிழிந்துவடிக்கட்டிப் பஞ்சில்ஊட்டிக் கொண்டு, இடதுபக்கம்கொட்டினால் வலதுமூக்கிலும், வலதுபக்கம் கொட்டினால் இடது மூக்கிலும் நசியம் பண்ணத்தீரும்.

நண்டுவாய்க்காலி.

இதுகொட்டினால், வியர்வையும்நெறிகட்டுதலும், வீக்கமும், கடுப்பும், குடைச்சலும், எரிச்சலும், குமுறலும், வாயில்நுரையும் உண்டாகும். இந்தவிஷம், எட்டிவேர்ப்பட்டையைப் பெரும்நெல்லிக்காய்ப்பிரமாணம் அரைத்து அரை ஆழாக்கு வெந்நீரில்கரைத்து உள்ளுக்குக் கொடுப்பித்து கொட்டினவாயில் கத்தரிக்காயைச் சுட்டுக்கட்டில் தீரும்.

மூஷிகபேதம்.

மூஷிகம் என்பது யஅ-வகைப்படும். அவையாவன :— லாலஜம், சபளம், புண்டரம், ஹரிதம், சிகுரம், அசிதம், கஷாயதந்தம், குநகம், கோகிலம், கபிலம், கிருஷ்ணம், அருணம், சபலம், சுவேதம், கபோதம், உந்துரு, பலினி, ரசாலம் என்பனவாம். அன்றியும், சுசுந்தரி என்பது, ஒன்றுண்டு : இதுவே மூஞ்சூறு. மூஷிகம் என்பது எலி.

க-வது லாலஜஎலி.

மிகுந்த அலைச்சலை உடையதாயிருக்கும், இது கடிக்கில், வாந்தி மூர்ச்சை, வாய்நீர் ஊறல் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

உ-வது சபளஎலி.

பலநிறத்தைப் பெற்றிருக்கும். இது கடிக்கில், திரிதோஷ குணத்துடன் வாந்தி, மிகுந்தமூர்ச்சை, அதிகதாகம் என்னும் இக்குணங்கள் உண்டாகும். சபளம் என்பது பலநிறமாம்.

௩-வது புண்டரஎலி.

பேய்க்கரும்பின் நிறத்தைப்பெற்றிருக்கும். இது கடிக்கில், சரீரம் வெளிறலும், அக் கரும்புவர்ன்னமுள்ள விரணமும் உண்டாகும்.

௪-வது ஹரிதஎலி.

மஞ்சள்நிறத்தைப் பெற்றிருக்கும். இது கடிக்கில், அக்கினிமந்தமும் கொட்டாவியும் மயிர்க்கூச்செறிதலும் உண்டாகும்.

௫-வது சிகுரஎலி

தேகமுற்றிலும் முளைத்த ரோமங்களைப் பெற்றிருக்கும். இது கடிக்கில் தலைநோவு, வீக்கம், வாந்தி, பிரமை, தேகமுற்றிலும் மச்சம் என்னும் இக்குணங்கள் உண்டாகும். சிகுரம் என்பது ரோமம்.

௬-வது அசிதஎலி.

உதட்டில், கரியநிறத்தைப்பெற்றிருக்கும். இது கடிக்கில், சரீரங் கறுத்தலும் மூர்ச்சையும் வாந்தியும் மார்புநோவும் உண்டாகும்.

௭-வது கஷாயதந்தஎலி.

சிவந்தபற்களைப் பெற்றிருக்கும். இது கடிக்கில், சதா உறக்கமும் மார்புவறளலும் மலபந்தமும் உண்டாகும். இதனைத் தூங்கெலி என்பர்.

௮-வது குநகஎலி.

மரக்கால்போல் உடலைப்பெற்றிருக்கும். இது கடிக்கில், சிவந்த மச்சங்களுடன் நோவுண்டாகும். குநகம் என்பது மரக்கால்.

௯-வது கோகிலஎலி.

குயில்போல்புள்ளிகளைப்பெற்றிருக்கும். இது கடிக்கில், கிரந்தியும், உக்கிரமானசுரமும் தாகமும் உண்டாகும். கோகிலம் என்பது குயில்.

௰-வது கபிலஎலி.

கபிலநிறம் உள்ளது. இது கடிக்கில், கண்டுகண்டாக எழும்பிவிரணமாகும். இதனால், சுரம்,பிரமை,வாந்தி,என்னு மிக்குணங்கள்உண்டாகும்.

௰௧-வது கிருஷ்ணஎலி.

கரியநிறத்தைப்பெற்றிருக்கும். இதுகடிக்கில், தினந்தோறும் ரத்த வாந்தியும் மழைக்காலத்தில் அதிக ரத்தம் வீழ்தலும் உண்டாகும்.

௰௨-வது முதல் ௰௭-வது வரையில் அருணாதி எலிபேதம்.

அருணம், சபலம்,சுவேதம்,கபோதம்,உந்துரு,பலினி, ஆக ௬-வித எலிகளுங்கடிக்கில், திரிதோஷம் அதிகரித்துச் சந்நிபாத குணங்கள்

அதிகரித்தலுடன் கடித்தஇடத்தில் ரத்தம்வடிதல்,கிரந்திகள் எழும்புதல், காதின்கீழ் கட்டிகள் பிறக்குதல் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

௫௬-வது ரசாலஎலி.

நாமக்கரும்பு நிறமாயிருக்கும். இது கடிக்கில், நெஞ்சு மரத்தலும் சொல்லக்கூடாதவேதனையும் உண்டாகும். சகல எலி விஷங்களும் தேகத்தில்அடங்கியிருந்து, மழைமேகம் எழும்புகிற காலத்திலதிகரிக்கும். பெருச்சாளிக்கும் இவ்விஷம் உண்டு. ரசாலம் என்பது நாமக்கரும்பு.

சுசுந்தரி.

இது கடிக்கில், சரீரம் இளைத்தலும் பேதியும் வாய்பேசக்கூடாமையும் உண்டாகும். இதற்கு, நீலிக்குடிநீர் ஆகும்.

எலிச்சுக்கிலவிஷநிதானம்.

எலிகள் புணருங்காலத்தில் அச்சுக்கிலம்யார்மீதாவதுசிதறுமாகில், அந்த இடத்தில், கிரந்தி, வீக்கம், மச்சங்கள் எழும்புதல், பிரமை, அரோசகம், குளிர்காய்ச்சல், கீல்நோவு, நடுக்கல், ரோமச்சிலிர்ப்பு, மூர்ச்சை, சிலேஷ்மாதிக்கம், வாந்தி, தாகம்முதலியகுணங்களுண்டாகும்.

அசாத்திய எலிவிஷலக்ஷணம்.

எந்த எலியினாலாவது, மூர்ச்சை, தேகவீக்கம், மாறுருவம், வியர்வை, காதுமந்தம், சுரம், தலைநோவு, வாய்நீர் ஊறல், ரத்தவாந்தி என்னும் இக்குணங்கள் உண்டாகில், அசாத்தியமே.

எலிவிஷம் முற்றியது.

மேற்கூறிய எலிவிஷங்களுக்குச் சிகிச்சைகள்.

இருமல், இரைப்பு, கோழை, வாந்தி முதலிய துர்க்குணங்களைப் பிறப்பிக்கின்ற எலிவிஷம், அழிஞ்சில்வேர்ப்பட்டையைப் புன்னைக்காய் வீதம் வெந்நீரில் அரைத்து, ௮-நாள், ௨-வேளையுங்கொடுக்கில், தீரும். குறட்டை எலி, சண்டைஎலி இவைகளின்விஷம், இலந்தைக்காய் அளவு பனைவெல்லத்தில் ௮-துளிஎருக்கம்பால்விட்டுமத்தித்து,௭-நாள்சாப்பிடத் தீரும். எயிற்றில் ரத்தப்பாய்ச்சலையும் பல்லுகளில் குடைச்சலையும் தருகின்ற எலிவிஷம், அவுரிவேரை நெல்லிக்காயளவு ௨-ஆழாக்குப்பசும் பாலிலரைத்துக்கரைத்து, ௮-நாள் உள்ளுக்குக்கொடுத்து, அந்த இலையை அரைத்துக்கடிவாயில் துவாலையிடத்தீரும்.இன்னும்நீலக்காக்கணம்வேரைச் சிறியகொட்டைப்பாக்குப் பிரமாணமாக அரைத்துக் காலையில்மாத்திரம் ௭-நாள், அல்லது ௫-நாள் சாப்பிடத்தீரும், இவைகட்கு உப்பில்லாப் பத்தியமாம்.

பேய்நாய்.

இது கடித்தால், அவ்விடத்தில் விரணம்பிறக்கும். இதனால், தாது நஷ்டம், வாய்நீர்ஊறல், கண்மயக்கம், காதுமந்தம், தேசசுநீங்குதல், தாள்

பிடிப்பு, சிரோபாரம், தூங்கும்போது அவ்விரணத்தினின்றும்கறுத்த ரத்தம் வடிதல், மார்புநோவு, சுரம், தேகம் மரத்தல், தாகம், மூர்ச்சை என்னுமிக்குணங்கள் உண்டாகும். இதற்குக்கற்றாழைமடலும் லவணமும் சமமாகஇடித்துக் கடிவாயில் ௩-தினம் கட்டுவதுந்தவிர பேயத்திவேர், ஆலம்பட்டை, வேப்பிலை ௩-ம் வகை க-ஐ பலம்·ம ஆக கூட்டி இடித்து ஒருபடிகழுநீரில்போட்டுக் கொதிப்பித்துக் குழம்பாயிறக்கி ஏழுநாள் மேலில்பூசி, விஷமருந்தால் விரேசனமும் செய்விக்க, தீரும்.

சகலமிருகசெந்துக்களின்விஷநிதானம்.

குதிரை, புலி, கரடி, காட்டுப்பன்றி, கோணாய், நரி, பூனை, மாயப்பூனை, குரங்கு, கீரி, முதலை முதலியசெந்துக்கள்கடிக்கில், அந்தக்கோரைத்தந்தங்களில் இருக்கின்றவிஷத்தினால், தினவு, உருவபேதம், நோவு, நித்திரையில் வியர்வை ஒழுகுதல், சுரம், பிரமை, தாகம், வீக்கம், கிரந்தி, மூர்ச்சை, கடிவாயில்மச்சமும்அதன்மேல்கொப்பிளமும் எழும்பிப்புடையும் அநேக ரோகமும் பிறக்குதல் என்னுமிக்குணங்களுண்டாகும். இவைகட்கு, உடனே ரச கந்தக பாஷாணவருக்கம்சேர்ந்தவிஷமருந்துகளைக்கடிவாயில் வைத்துக்கட்டி, அந்த இடத்தில் ரோமங்கள் முளைக்க ஒட்டாத விரணஞ் செய்வித்து அதைக்காலாதீதத்தில் ஆற்றுவதுந்தவிர அந்தஅவுஷதங்களை உள்ளுக்குங்கொடுப்பிக்கில், ஷை விஷம் சாத்தியமாம். இவ்வளவுபெரிய சிகிச்சைகளைச்செய்வானேன் என்றால், அவ்விஷங்கள் அற்பமேனும் தேகத்தில்தங்கி ஊறுமாயின் பின்பு சகலதுர்க்குணங்களும் பிறக்கும். ஆதலால் செய்யவேண்டும். இது தப்பி காலாதீதச் சிகிச்சைசெய்யில், விஷமும் முதிர்ந்து அந்தந்த செந்துக்களின் நடை குரல் பார்வை சேஷ்டை முதலியகுணங்களும்பிறக்கும் அப்போது அசாத்தியமாம்.

தந்த நக விஷநிதானம்.

பசுமுதலிய மாடுகளுக்கும், மனிதர்களுக்கும், பல், நகம், இவைகளில்விஷம்உண்டு, அவைகள்பட்டுவிரணம்பிறந்தால், அதில்வீக்கத்துடன் ரத்தம்வடியும். இதனால், சுரம் உண்டாகும். இது சாத்தியமாம்.

சகலவிஷ உபத்திரவநிதானம்.

சகலவிஷங்களுக்கும், சுரம், இருமல், இளைப்பு, வாந்தி, விக்கல். மூர்ச்சை, தாகம், சரீரத்தில் கடினத்துவம், வயிற்றுப்பிசம், அடிவயிறும் தலையும் நோதல், வீக்கம், துர்க்கந்தரத்தம்வடிகின்றவிரணம், வாதாதிக்கம் என்னும் ௰௪-துர்க்குணங்கள்பிறக்கும். இதுவே விஷ உபத்திரவமாம். இக்குணங்கள் உண்டாவதற்குமுன்னமே தகுந்தசிகிச்சைகளைச்செய்யில், சாத்தியமாம். நீடிக்கில் கஷ்ட சாத்தியமாம்.

தூஷிவிஷநிதானம்.

முற்கூறிய எவ்வகைவிஷமாவது, தானேக்ஷீணகதியானாலும், விஷஹரமானசிகிச்சையால் அதமானாலும், வெய்யில், காட்டுத்தீ, காற்று முதலியவைகளினால் சோஷித்தாலும்,சுபாவமாகவேசோஷித்தாலும்,அவ்வுடற்குள் அழுகப்பட்டிருந்தாலும், அவ்விஷங்களுக்குத் தூஷிவிஷம் எனப்பெயர். இவைகள் அற்பமாயிருந்தாலும், மனிதர்தேகத்தில்பாய்ந்தவுடனே சிகிச்சைசெய்யவேண்டும் ; செய்யாவிடில் ஒருவருஷபரியந்தம் உடம்பினுள் அடங்கியிருந்து பின்பு கபத்தைப்பற்றி ஏறும். இதனால்,பலநிறமானமலம், வாயினால் ரத்தம்வீழ்தல், தாகம், அரோசகம், வாந்தி, மூர்ச்சை, ஈனத்தொனி,சோருதல் என்னும் இக்குணங்கள் உண்டாகும் ; அதற்பின் அது ஆமாசயஸ்தானத்தைப்பற்றி ஏறும் ; இதனால், சிலேஷ்மவாதரோகங்கள்பிறக்கும்; அதற்பின் அதுபக்குவாசயஸ்தானத்தைப்பற்றிக் கலக்கும் ; அப்போது வாதரோககுணங்களெல்லாம் பிறப்பதுமன்றித் தலைமயிர்கள் உதிரும் : அதற்பின் அது சப்ததாதுக்களிலும்பற்றிப்பரவும் அப்போது அனந்தவிகாரங்களுண்டாகும். ஆதலால், அற்பவிஷத்திற்கும் மகாவிஷசிகிச்சைகளைச்செய்யவேண்டும். தூஷி என்பது அற்பமாம்.

மதாந்தரம்.

கறட்டு ஓணான், தேள்,நண்டுவாய்க்காலி,பூரம்,சிலந்தி, புலிமுகப்பூச்சி, செய்யான், பொறிவண்டு இவைகள், விரியன் என்னும் பாம்பினதுமுதுகு வெடிக்க, அதன்வழியாகப்பிறக்குமென்று சில மதாந்தரம் கூறுகின்றது.

சீதமண்டலி.

இது கடித்தால், குடல்குளிர்தலும் அரட்டலும், மிகுந்தவியர்வை பெருகி ஓடுதலும் உண்டாகும். இதற்கு, ரச கந்தகமாதி உண்டை ஆகும்.

ரத்தமண்டலி.

இது கடித்தால், மயிர்க்கால்கள்தோறும் ரத்தம் ஒழுகும். இதற்கு, யானைவணங்கி இலையைமாத்திரம் பெரிய எலுமிச்சங்காய்ப் பிரமாணம் அரைத்து ஆழாக்குநல்லசலத்தில் கரைத்துக்கொடுக்கில், நலமாம்.

பூரம்.

இது கடித்தால், அது ஊருவதுபோல்தினவும் அவ்வுருவத்தைப் போல் தடிப்பும் உண்டாகும். இது குப்பைமேனிச்சாற்றால்போம்.

செய்யான்.

இது கடித்தால், அவ்விடத்தில்வீக்கமும் தேளைப்போல் மறுநாள் வரைக்கும் கடுப்பும் உண்டாகும். இதற்குத்தேள்விஷச்சிகிச்சை உதவும்.

செஞ்சோரா.

இது கடிக்கில், மேலில்சிவந்தபுள்ளிகளான தடிப்புகள் உண்டாகும். இவ்விஷம் உத்தாமணி இலைரசத்தில் சுண்ணங்குழைத்துப்பூசத்தீரும்.

கருஞ்சேரா.

இது கடித்தால், தேகத்தில் கறுப்புக்கறுப்பான தடிப்புகள் உண்டாகும். இதற்கும் மேற்கூறிய சிகிச்சைகள் ஆகும்.

அறுபுள்ளிவண்டு.

இது கடித்தால், சர்வாங்கத்திலும் சிலநாட்சென்றபின்பு வட்டம் வட்டமான தடிப்புகள் உண்டாகும்.

செவ்வட்டை.

இது கடித்தால், அவ்விடத்தில் சிவந்துதடித்து மரத்திருக்கும்.

அரணை.

இது கடித்தால், சரீரமுழுதும்நடுக்கல், வாயால்நுரைவீழ்தல், நாவுதடித்தல் என்னும் இக்குணங்கள் உண்டாகும். இதற்கு ஓணான் விஷத்திற்குச் சொல்லிய சிகிச்சைகள் உதவும்.

சரகுண்ணி.

இது கடித்தால், வீக்கம் எழும்பும். காட்டுண்ணிக்கு இக்குணத் துடன் கடுப்பும் உண்டாயிருக்கும். இதற்குக்குப்பைமேனிரசம்ஆகும்.

எலிபேதம்.

கத்தரிமணியன், செம்மூக்கன், வரளி, குறட்டை, கருங்காலன், தலையன், விடவெலி, செற்றலைமுட்டி, செவ்வெலி, வீங்கெலி, தூங்கெலி, உலைப்பெலி, புடையெலி, இறைப்பெலி, செங்கண்ணன், புள்ளக்காடன், குறுங்காலன், நச்செலி ஆக ௰அ வகையாம்.

மதாந்தரம் முற்றியது.

வாதம், பித்தம், சிலேஷ்மம், மலம், சலம், ரசதாது, ரத்ததாது, மாமிசதாது, மேதோதாது, அஸ்திதாது, மச்சைதாது, சுக்கிலசோணித தாது என்கிற இந்த ௰உ-ம் சாடராக்கினியின் குணோதயத்தால், உணவு களில்நின்றும் பிரிகின்ற அன்னரசத்தால்போஷிக்கப்பட்டுப் பலத்தையும், காந்தியையும், நிரந்தரமாகக் கொடுத்துக்கொண்டு தேகத்திற்குஆதாரமாக இருக்கின்றன. ஆயினும், மேற்கூறிய சப்ததாதுக்களில், புருஷர்கட்கு சுக்கிலமென்றும், மாதர்கட்குச் சோணிதமென்றும் சொல்லப்படுகிற இவ்விரண்டும் முறையேசிவமென்றும், சத்தியென்றும், பெயர்பெற்றுக் கருப்ப உற்பத்திக்கும் ஆயுள்விருத்திக்கும் முக்கியமாக இருக்கின்றன. இதுகள் அகாலபோஜனம், உஷ்ணபதார்த்த பக்ஷணம், பயம், துக்கம், வியாகுலம், சிந்தித்தல், மிகுசந்தோஷம், அதிகோபம், மாரண ஓமம், கருமலோபம், அதிதூலரோகம், அதிசாரரோகம், க்ஷீணரத்ததாது, விஷ பேதங்களால்வரும்பற்பலரோகம், காலத்திலும் அகாலத்திலும் காமநூல் விதிப்படி அநேகபந்தங்களுடன் செய்கின்றசையோகம், மர்ம்மஸ்தானக்

கெடுதி என்னுமிவைகளினாலும், விர்த்தாப்பியத்தினாலும் நஷ்டப்படும். இவ்விதம் நஷ்டமுற்ற சுக்கிலசோணிதத்தை உடையவர்கள் பலவித அசாத்தியரோகங்களை அநுபவிப்பதுமன்றி, சம்போகத்திற்கு இளைத்து ஊர்க்குருவியைப்போல்புணருவதும், வாயினால்பேசி இச்சைதீருவதும், பலத்திற்காக வாசீகரணம்பண்ணுவதுமாக இருந்து, சந்தானவிருத்தி இல்லாமல் அற்பஆயுளுடையவர்களாவார்கள். ஒருவேளைசந்தானவிருத்தி இருந்தாலும் அதற்கு அற்பபலனும் ரோகவிருத்தியும் ஆயுள்குறைவும் உண்டாயிருக்கும். ஆகையால், பால்முதலியமதுரவஸ்துக்களைக்கொண்டு சுக்கிலத்தையும், எண்ணெய்முதலிய பித்த வஸ்துக்களைக் கொண்டு சோணிதத்தையும் போஷிக்கவேண்டும். இதற்கு, நந்தீசர், தன்வந்தரி பகவான், அசுவனிதேவர், ஆத்திரேயர், காசிபர், பாரத்துவாசர், பாகடாசாரியர் முதலியபெரியோர்கள்செய்த சிகிச்சாசாரம் என்னும் சாஸ்திரங்களில் அவுஷதங்கள் அநேகவிதங்களாக விதித்திருக்கின்றன. அவற்றுள், சுருக்கமுள்ள இரண்டுவகை அவுஷதமுறைகளைமாத்திரம் கைபாகத்துடன் இங்ஙனம்கூறப்படும்.

அவையாவன :—

௧-வது கதலீபலலேகியம்.

நன்றாகமுதிர்ந்து பழுத்த ரசதாளிவாழைப்பழரசம் படி ௬, தேங்காய்ப்பால் படி ௧, பசும்பால் படி ௧, முருங்கைப்பூரசம் படி ௧, செவ்விளநீர் படி ௧, இந்த ௫-ம் ஒருபாத்திரத்தில்விட்டு, இதில் ௫௰-பலம் வெள்ளைச்சருக்கரையைக் கொட்டிக்கரைத்து வடிகட்டிப் பாகுசெய்து, அந்தப்பாகில், சுக்கு, மிளகு, திப்பலி, ஏலம், லவங்கம், லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, சிறுநாகப்பூ, அதிமதுரம், கர்க்கடகசிங்கி, சீரகம், ஓமம், வாய்விளங்கம், திராக்ஷிப்பழம், கர்ச்சூர்க்காய், கொத்துமல்லி, வெட்டிவேர், கோஷ்டம், தேற்றான்விதை, ஆவாரைவிதை, பூனைக்காலிவிதை, முருங்கைவிதை, சாதிக்காய், நெருஞ்சில்பழம், இருள்கிழங்கு, அமுக்கிராங்கிழங்கு, சீந்தில்சருக்கரை, ஆலம்விழுதின்கொழுந்து, சந்தனம் இந்த ௨௬ - சரக்குகளையும் புனிதப்படுத்தி, வெய்யிலிலுலர்த்தித் தனித்தனியே இடித்து வஸ்திரகாயஞ்செய்து, வகை ௧-இ பலம் ௧-ஆக நிறுத்துப் பசும்பாலில் பிட்டிட்டுச்சுத்திசெய்து, அந்த ஈரம்புலர்த்திய சூரணகல்கத்தில், பச்சைக்கருப்பூரம், குங்குமப்பூ இவ் விரண்டும் பொடி செய்து வகை ௧-இ பலம் ௧-ம் காந்தபஸ்மம், வங்கபஸ்மம், அப்பிரக பஸ்மம் இம் மூன்றும்வகைக்கு பலம் ௧-ம் சேர்த்துக் கலந்துவைத்துக் கொண்டு, ஷை பாகில் சிறுகச்சிறுகத்தூவித் துழாவிக் கிளறி, பாகும் சூரணமும் ஒன்றுபடுந்தறுவாயில், தேன் படி ௨-விட்டு நன்றாகத்துழாவிய பின்பு, பசுவின்நெய் படி ௨-விட்டுக் கைஓயாமல் கலக்கும்படித் துழாவிக்

கூழ்ப்பதத்தில் இறக்கி இளஞ்சுடுகையுடன் பீங்கான்சாடியில் வழித்து வைத்து வாய்மூடி வஸ்திரபந்தனஞ்செய்து, விதிப்படி அரைமண்டலம் தானியப்புடம் வைத்தெடுத்து, அவரவர்கள் வழிபடுகடவுளையும், ஆயுள் வேதத்திற்கு ஏற்புடைக்கடவுளாகிய தன்வந்தரிபகவானையும் பூசித்து, இயன்றமாத்திரம் அன்னதானம்முதலிய தானங்கள்செய்து, சுபதினத்தில் அந்தலேகியத்தில் வெருகடிப்பிரமாணம் எடுத்து, காலை மாலை இரண்டு வேளையும் ஒருமண்டலகாலம் அமிர்தம்போல எண்ணிச்சாப்பிடவும்.

இதற்கு, துவரம்பருப்பு, பச்சைப்பயறு, பசுநெய், பசும்பால், தேன், கற்கண்டு, சருக்கரை, அவரைப்பிஞ்சு, முருங்கைப்பிஞ்சு ஷை பூ, வாழையிளங்காய் முதலிய இச்சாபத்தியமாம். இந்த அவுஷதம், மந்தாக்கினி, பாண்டு, குன்மம், க்ஷயம், பிரமேகம், அதிதூலம், அதி சுஷ்கம்,அஸ்திசிராவம்,குடல்விருத்தி, உதரரோகம் ஆதியானரோகங்களை நிவர்த்திசெய்வதுந்தவிர, ஞாபகசுத்தி, சுக்கிலபரிசுத்தமுதலிய அநேக சுகுணங்களைத்தரும்.

உ-வது கல்யாணகிருதம்.

அரசு, அத்தி, பழமுண்ணிப்பாலை, குளப்பாலை, புளிமாதுளை, ஆவாரை, சிறுகாஞ்சொறி, பெரும்வழுதுணம், சிறுகளா, தொட்டாற் சுருங்கி, மஞ்சிஷ்டி, ஆற்றுத்தும்மட்டி, வள்ளைக்கொடி, முசுமுசுக்கை, நறுந்தாளி, நன்னாரி,பெருநன்னாரி, தரா, பம்பந்தரா, வெள்ளைச்சாறடை, கற்றாழை இவ்வேர்வகை உக : தண்ணீர்விட்டான்கிழங்கு, தாமரைக் கிழங்கு,கருநெய்தல்கிழங்கு, கோரைக்கிழங்கு,மஞ்சள், மரமஞ்சள், ஆலம் விழுதின்கொழுந்து,ஆவின்புல்லூரித்தழை,கடுக்காய்,நெல்லிக்காய்,தான்றி க்காய், சாதிக்காய், லவங்கம், லவங்கப்பட்டை, ஏலம், சிறுநாகப்பூ, சிறு சண்பகப்பூ, இலுப்பைப்பூ,சடாமாஞ்சில், வாய்விளங்கம், யானைத்திப்பலி, சிறுகச்சோரம்,கிரந்திதகரம், அதிவிடையம், ஓமம், சதகுப்பி, சரளதேவ தாரம், புத்திரஜீவிவிதை, வெள்ளிலோத்திரப்பிசின், திராக்ஷிப்பழம் இச் சரக்குகள் ௩௰ - ஆக ருக - சரக்குகளையும் புனிதப்படுத்தி வெவ்வேறாக வெய்யிலில் உலர்த்தி, ஒவ்வொருசரக்கிலும் கொஞ்சம்கொஞ்சமாக எடுத்து இடித்துவஸ்திரகாயஞ்செய்து,வகை க-ஐ பலம் ௫ ஆக நிறுத்து ஒன்றுபடக்கலந்துபசும்பாலில் விதிப்படி சுத்திசெய்துவைத்துக்கொண்டு, மற்றைச்சரக்குகளை வகை க - ஐ பலம் க-ஆக நிறுத்துத் தறிக்கத்தக்கது களைப்பொடியாகத்தறித்து, எல்லாம் ஒருமிக்க நைய இடித்து ஒரு புதிய பாத்திரத்தில்கொட்டி, ஆற்றுச்சலம் படி அ-விட்டு கஉ-படியாகச் சுருக்கிய கஷாயத்தைவடிக்கட்டிப்பழகியபாத்திரத்தில் ஊற்றி,இதில், கல் யாணப்பூசனிக்காய், இருள்கிழங்கு, தண்ணீர்விட்டான்கிழங்கு, கரும்பு, ரசதாளிவாழைப்பழம், நெல்லிப்பழம், முசுமுசுக்கை,பிரமி இலை, பொன்

ஞங்காணி, கொத்தான்கொடி, இளநீர்தெளித்து இடித்தபச்சைப்பயறு, இப்பதினொருவகை ரசமும்,செவ்விளநீரும் வகை க-இ-க்கு படி கவ, பசும் பால் படி ௩, பசுநெய் படி உ, இவைகளைச்சேர்த்து அடுப்பேற்றிச் சிறு தீயாகஎரித்துச் சலபாகம் பாதிசுண்டுந்தருயில், முன்பு சுத்தித்த கல்க சூரணத்தைச் சிறுகச்சிறுகத்தூவி இடைவிடாமல்துழாவிக்காய்ச்சி இள மெழுக்குப்பதத்தில்நெய்யைவடித்துச்சிறியசுடுகையுடன்ஒருபீங்கான்சாடி யில்விட்டுச் சில்லிட்டு வஸ்திரபந்தனஞ்செய்து, ஆறுநாள் தானியப்புடம் வைத்தெடுத்து, உதயகாலத்தில் கால் பலம் அளவாக இரண்டுமண்டலம் அல்லது ஒருமண்டலம் சாப்பிடவேண்டும். இந்தக் கிருதம், வாத பித்தாமயம், உன்மாதம், சித்தவிப்பிரமம், கிரிச்சரம், அஸ்மரி, மேகம், கிருமிரோகம், யோனிச்சூலை, மலட்டுரோகம் இவைமுதலிய பிணிகளை நீக்குவதுந்தவிர, தேகத்தில் நல்ல அழகையும், பலத்தையும், சோணித பரிசுத்தியையும்தரும் ஆதலால்,இவ்வண்ணம் சுக்கில சோணிதங்களைப் போஷித்துக் காலம் அறிந்து போசனமும் புணர்ச்சியும் செய்து, ஆயுள் வேதவிதிப்படி வழுவாதுநடப்பவர்கள், அரோகதிடகாத்திரமும், பூரணா யுளும், சந்தானசௌபாக்கியமும், அறம் பொருள் இன்பம் வீடு என்கிற ச-புருஷார்த்தங்களும் பெற்று, மங்களகரமாக வாழ்வார்கள்.

பதினைந்தாவது கீடாதிபேதபடலம் சம்பூரணம்.

மதாந்தரம்.

உளமாந்தைரோக நிதானம்.

க்ஷயரோகத்தின் பிரிவாகிய இந்த ரோகம் முதல் முதல் அக்கினி மந்தம் உள்ளபோது போஜனம் செய்தல், இரவில் விழித்தல், பகலில் வுறங்கல், புலாலையே மிகுதியாகப் போசித்தல், அதிசையோகம், இரைக்கும்படி யோடுதல் இதுகளால் உளமாந்தைரோகமுண்டாகும்.

உளமாந்தை ரோகபேதம்.

இது வாத உளமாந்தை, பித்தஉளமாந்தை, சிலேஷ்ம உளமாந்தை, தொந்த உளமாந்தை என நான்கு விதப்படும்.

க-வது வாத உளமாந்தை.

இது நெஞ்சு, பழுவெலும்பு, பக்கம், இவை விம்மல், நினைவழிதல், தொனியோடு நொந்து இருமல், சுவல்ப சுரம், உள்ளில் கட்டிகள் உண்டாய்ப் பழுத்து உடைந்து சீழ்முதலிய வாயால் விழுதல், கை, கால் எரிவு என்னு மிக்குணங்களை உண்டாக்கும்.

௨-வது பித்த உளமாந்தை.

இது மிக திரண்டு கீழ்வயிற்றில் கட்டிகளுடன் மிகப் பொருமி புண்போல் நொந்து சர்வாங்கமும் உளைச்சலோடு தலைவலி, சுரம், இருமல், இளைப்பு, மிடறு விரணமாதல், மயக்கம், புரட்டல், வாயால் சீழ்விழுதல் என்னுமிக்குணங்களை உண்டாக்கும்.

௩-வது சிலேஷ்ம உளமாந்தை.

இது உடல் உருகித் தேகமெல்லாம் புண்போல் நோதல், வாயால் சீழ் விழுதல், மனக்கலக்கம், வாந்தி, மயக்கம், சிலேஷ்மாதிக்கம், நடுக்கல், பிழிந்ததைப்போல் தேகவசதி, பஞ்சுபோல் தேகம் வெளிறல், என்னுமிக்குணங்களை உண்டாக்கும்.

௪-வது தொந்த உளமாந்தை.

இது தலைவலி, சுரம், இருமல், கோழை, அசதி, மிகு உறக்கம், துர்வாசனையுடன் வாயால் சீழ் விழுதல், சர்வாங்கமும் தினவு, அசனம் இறங்கவொட்டாமை என்னுமிக்குணங்களை உண்டாக்கும்.

உளமாந்தைரோக சாத்தியாசாத்தியம்.

பித்த உளமாந்தை, பலவித சிகிச்சைகளினால் சாத்தியம் : வாத உளமாந்தையும் சிலேஷ்ம உளமாந்தையும் அவுஷதங்களினால் வசப் படாமலதிகரிக்கின்ற உளமாந்தையும் அசாத்தியம் ; தொந்த உளமாந்தை அசாத்தியா சாத்தியம். இவைகளுக்கு க்ஷயரோக சிகிச்சைகளுடன் பற் பல சிகிச்சைகளும் நன்மையைத் தரும்.

குடற்கரிரோகம்.

இதுவாய்வு அதிகரித்து குடல்களில் தங்கி முதுகு, நெஞ்சு, விலா முதலான விடங்களிலோடிப் புடைத்து திரண்டு வலித்தல், அப்போது உடல் அயர்தல், மலங்கருகல், பக்க இசிவு, மயக்கம், சுரம், புலம்பல், வாய்நீர் வடிதல், அன்னம் செல்லாமை, தேகம் மெலிதல், வாயால் வெண்ணுரைவருதல் என்னுமிக்குணங்களை உண்டாக்கும். இதன் விவரங்கள் கிடைக்காமையால் இம்மட்டு நிறுத்தப்பட்டது.

மதாந்தர முற்றியது.

ஜீவரக்ஷாமிர்தம்
முற்றியது.

சுப்பிரமணியர்துணை.

MADRAS :—PRINTED AT THE MONONMANIVILASAM PRESS, 1894.

உ

சுப்பிரமணியர் துணை.

ரோகவருக்க அகராதி.

ரோகங்களின்பெயர்கள்.	பக்கம்.	ரோகங்களின்பெயர்கள்.	பக்கம்.
அ		அசாத்தியபிலீகரோகம்	௱௩௧
அகஸ்தியர்மதாந்தரமலட்டு ரோகபேதம் -	௨௱௫	அசாத்தியபூதநிதானம் -	௨௩௮
அகமரித்தகருப்பலக்ஷணம்	௨௱௭	அசாத்தியமசூரிகைரோகம்	௱௪௪
அகிருத்திரமவிஷம் -	௩௨௭	அசாத்தியமதாத்தியரோகம்	௭௨
அக்கினிகீடம் -	௩௪௬	அசாத்தியமூலரோகம் -	௭௮
அக்கினிச்சிலேஷ்மம் -	௩௬௩	அசாத்தியரத்தபித்தரோகம்-	௫௨
அக்கினிபதச்சிலந்தி -	௩௫௪	அசாத்தியவாதரோகம் -	௱௮௰
அக்கினிமந்தச்சுரம் -	௪௭	அசாத்தியவாந்திரோகம் -	௯௭
அக்கினிமுகச்சிலந்தி -	௩௫௩	அசாத்தியவிசர்ப்பிரோகம்	௱௪௨
அக்கினிரோகணிரோகம்	௩௱௰	அசாத்தியவித்திரதிக்கட்டி -	௱௬
அக்கினிவிஷபாகரோகம்	௨௱௨	அசாத்தியவிரணம் -	௨௬௮
அங்கசலனவாதம் -	௱௭௯	அசாத்தியவிஷக்குறி -	௩௪௩
அசகைரோகம் -	௱௪௪	அசாத்தியவெண்குஷ்டம்-	௱௫௨
அசஞேற்பவவிக்கல் -	௫௬	அசிதளலி -	௩௯௰
அஜகள்ளிகாரோகம் -	௩௱௮	அசிர்க்கரரோகபேதம் -	௫௩
அசாத்தியஅதிசாரரோகம்	௮௩	அசிர்க்கரரோகலக்ஷணம் -	௫௩
அசாத்தியஉதரரோகம் -	௱௩௰	அசீரணரோகபேதம் -	௮௬
அசாத்தியஎலிவிஷம் -	௩௯௧	அசீரணரோகமதாந்தரம் -	௬௰
அசாத்தியகண்டமாலை -	௩௱௭	அசுரபூதம் -	௨௩௩
அசாத்தியகபாலரோகம் -	௨௬௪	அசுவவாதம் -	௱௭௮
அசாத்தியகருப்பலக்ஷணம்	௨௱௮	அஞ்சனநாமிகாவர்த்தமரோகம் -	௨௪௫
அசாத்தியகாசரோகம் -	௫௯	அடவி ஈ -	௩௫௧
அசாத்தியகுஷ்டரோகம்	௱௫௧	அண்டரோகமதாந்தரம் -	௱௰௧
அசாத்தியகுன்மரோகம்	௱௰௭	அதாதிமந்தரோகம் -	௨௫௬
அசாத்தியசிலேஷ்மரோகம்	௱௬௨	அதிசரணயோனிரோகம் -	௩௨௩
அசாத்தியசுரரோகம் -	௪௧	அதிசாரசிலேஷ்மம் -	௱௬௩
அசாத்தியசுரலக்ஷணம் -	௩௮	அதிசாரரோகமதாந்தரம் -	௮௨
அசாத்தியசுவாசரோகம் -	௫௮	அதிசாரரோகபூர்வரூபம் -	௭௬
அசாத்தியசோபைரோகம்	௱௩௬	அதிசாரரோகபேதம் -	௭௬
அசாத்தியதந்தரோகம் -	௨௮௪	அதிஜிக்வாரோகம் -	௨௮௫
அசாத்தியதாகரோகம் -	௭௰	அதிசுஷ்கரோகம் -	௨௱௩
அசாத்தியபாண்டுரோகம்	௱௩௩	அதிதந்தரோகம் -	௨௮௧
அசாத்தியபித்தரோகம் -	௱௮௭	அதிதாபகவாதம் -	௱௭௧

ரோகங்களின்பெயர்கள்.	பக்கம்.
அதிதும்மல்பீநசம் -	௨௭௬
அதிதூலரோகபடலம் -	௨௱௩
அதிதூலரோகம் -	௨௱௩
அதிமாமிசரோகம் -	௨௮௩
அதிமாமிசார்மரோகம் -	௨௫௰
அதிர்ஷ்டிபூதனுகிரகம் -	௨௨௪
அதுர்ஷ்டவிரணபேதம் -	௨௯௭
அதைப்புரோகம் -	௱௩௭
அதோகததோஷம் -	௬௧
அதோமுகக்கட்டி -	௱௩
அதோமுகரத்தபித்தரோகம் -	௫௨
அதோமுகவாதம் -	௱௭௪
அநாயாசகவாதம் -	௱௬௮
அநித்திரைச்சுரம் -	௪௮
அநுசிரம்சவாதம் -	௱௭௯
அந்தகசந்நிபாதசுரம் -	௨௮
அந்தகசந்நிபாதம் -	௨௫
அந்தரவாயுகிரகணி -	௮௫
அந்தராயாமவாதம் -	௱௬௯
அந்தர்மலக்கிருமி -	௱௫௩
அந்தர்முகியோனிரோகம் -	௩௨௨
அந்தோஷ்டரோகம்	௨௭௯
அந்நியதோவாதம் -	௨௫௯
அந்நியவோடாலிகாகிரகம் -	௨௨௭
அந்நியேத்துகசுரலக்ஷணம் -	௩௪
அந்நியேத்துகவாதம் -	௱௭௬
அபதந்திரகவாதம் -	௱௬௰
அபதானகவாதம் -	௱௬௨
அபத்தியதோஷம் -	௩௰
அபரிசகுஷ்டரோகம்	௱௫௨
அபஸ்மாரரோகசாமானியம்	௨௪௧
அபஸ்மாரரோகபூர்வரூபம்	௨௪௰
அபஸ்மாரரோகபேதம்	௨௪௰
அபாகிரோகம் -	௱௪௪
அபானவாயு -	௪
அபானவாயுவின்குண லக்ஷணம் -	௱௯௭
அபானஸ்தானவித்ரதிக்கட்டி -	௱௮
அபிகாதசுரம் -	௩௧
அபிகாதசோபை -	௱௩௮
அபிகாதவாதம் -	௱௫௬
அபிசாரசுரம் -	௩௨
அபிநியாசசந்நிபாதசுரம் -	௨௯
அபிநியாசசந்நிபாதம் -	௨௬
அபிநியாசவாதம் -	௱௬௭
அபிஷங்கசுரம் -	௩௨
அபீநசரோகம் -	௨௭௭
அப்பியமேகம் -	௱௫
அமரகண்டவலி -	௨௪௨
அமரபில்லம் -	௨௬௭
அம்புபூரணரோகம் -	௨௱௰௪
அரணை - -	௩௬௪
அரிசோபகந்தரம் -	௩௱௨
அரிசோரோகம் -	௩௱௰௫
அரிசோவர்த்தமம் -	௨௪௭
அரித்திராசுரம் -	௪௬
அரித்திராப்பிரமேகம் -	௩௱௰௯
அரித்திராமேகம் -	௯௯
அருந்நிமேஷவர்த்தமம் -	௨௪௪
அருச்சுனரோகம் -	௨௫௰
அருணைஎலி -	௩௬௰
அருணுதிஎலிபேதம் -	௩௬௰
அரூம்ஷிகைரோகம் -	௨௯௩
அரோசகரோகபேதம் -	௬௪
அர்ச்சகாகிரகம் -	௨௨௮
அர்த்தபிதரபூதம் -	௨௩௫
அர்த்தபேதரோகம் -	௨௯௧
அர்த்தாங்கவாதம் -	௱௯௪
அர்த்திதவாதம் -	௱௯௯
அலசகுஷ்டம் -	௱௪௯
அலசரோகபேதம் -	௮௬
அலசவிரணம் -	௩௱௰௨
அலசிரோகம் -	௩௱௯
அலசிரோகவிரணம் -	௩௱௰௫
அலஜிரோகம் -	௨௪௮
அலஜிவர்த்தமரோகம் -	௨௪௫
அலாபுகரோகம் -	௨௮௭
அலிச்சர்ப்பம் -	௩௩௮
அலிப்பக்ஷிதோஷம் -	௨௨௯
அலிமுகப்பாண்டு -	௱௩௬

ரோகங்களின்பெயர்கள்.	பக்கம்.
அவகர்த்தவிரணம்	௩௱
அவதும்பரகுஷ்டம்	௱௪௭
அவபாகுகவாதம்	௱௬௮
அவபேதகவாதம்	௱௭௪
அவமந்தரோகம்	௩௱௰௫
அவலம்பகசிலேஷ்மம்	௫
அவிபாடிதரோகம்	௩௱௰௬
அவுபசர்க்கிகரோகம்	௨௫௭
அவுஷதகந்தசுரம்	௩௨
அவுஷ்மாபகவாதம்	௱௬௮
அஸ்தகம்பவாதம்	௱௭௬
அஸ்திஆவிருதவாதம்	௱௯௮
அஸ்திகிரந்தி	௩௱௪
அஸ்திசிராவோற்பத்தி	௫௪
அஸ்திதாதுகதசுரம்	௪௰
அஸ்திநாடிவிரணம்	௩௱௮
அஸ்திமேகரோகம்	௯௮
அஸ்மரிரோகஅசாத்தியநிதா	௯௬
அஸ்மரிரோகசாமானியபூர்வரூபம்	௯௨
அஸ்மரிரோகபடலம்	௯௧
அஸ்மரிரோகபூர்வரூபம்	௯௨
அஸ்மரிரோகபேதம்	௯௨
அஷ்டகிடபேதம்	௩௫௰
அஷ்டமகாரோகம்	௮௬
அஷ்டிலாரோகம்	௱௰௯
அஷ்டிலாவாதம்	௱௬௩
அஷ்டீலிகாரோகம்	௩௱௰௬
அழுகுகாமாலை	௱௩௬
அழற்புற்று	௨௬௬
அழிகருப்பலக்ஷணம்	௨௱௫
அளிதோஷம்	௨௨௨
அள்ளுமாந்தம்	௨௱௰௮
அக்ஷதரோகம்	௩௱௰௧
அக்ஷரரோகம்	௨௮௪
அக்ஷிபாகாத்தியரோகம்	௨௬௰
அறுபுள்ளிவண்டு	௩௬௪
அற்பசோபாக்ஷிபாகரோகம்	௨௯௰
அற்பவிஷசர்ப்பநிதானம்	௩௪௰
அற்புதகிரந்திபேதம்	௩௱௫

ரோகங்களின்பெயர்கள்.	பக்கம்.
அற்புதவர்த்தமரோகம்	௨௪௫
அற்புதாகிரகம்	௨௨௮
அற்புதோஷ்ட்டரோகம்	௨௭௯
அனந்தன்	௩௩௧
அனலபித்தம்	௪
அனலபித்தரோகம்	௱௮௪
அனுமத்துப்புள்தோஷம்	௨௩௰
அனுஸ்தம்பவாதம்	௱௭௰
அன்னஆவிருதவாதம்	௱௯௯
ஆ	
ஆகந்துகசுரம்	௩௧
ஆகந்துகமசூரிகை	௱௪௩
ஆகந்துகவிரணம்	௨௯௫
ஆகருஷணஸ்தம்பனவாதம்	௱௯௭
ஆசன்னப்பிரசவம்	௨௱௮
ஆசிகரோகம்	௨௫௧
ஆசியகதகாரன்னலக்ஷணம்	௩௨௭
ஆசியக்குவாதவாதம்	௱௭௫
ஆசியபாகபித்தம்	௱௮௨
ஆசியபாகவாதம்	௱௭௫
ஆசியாக்ஷேபகவாதம்	௱௭௨
ஆச்சியகந்திமேகம்	௱௫
ஆட்டியவாதம்	௱௬௭
ஆணி	௨௬௫
ஆணிரோகம்	௩௱௰௧
ஆண்சர்ப்பம்	௩௩௮
ஆண்பக்ஷிதோஷம்	௨௨௯
ஆண்மலட்டுரோகம்	௨௱௪
ஆதபசுரம்	௪௭
ஆதிக்கமேகம்	௱௬
ஆதிமலடு	௨௱௫
ஆத்திரமூலம்	௭௫
ஆத்மானவாதம்	௱௬௰
ஆநந்தகரப்பான்	௨௱௰௯
ஆநாகசுரம்	௫௰
ஆநாகரோகபடலம்	௱௰௯
ஆநாகரோகபேதம்	௱௰௯
ஆநாகரோகலக்ஷணம்	௱௰௯
ஆந்திரபித்வாதம்	௱௯௧
ஆமக்கணரோகம்	௨௱௰௬

ரோகங்களின்பெயர்கள்.	பக்கம்.
ஆமசூலரோகம் -	௱௨௧
ஆமதோஷம் -	௮௭
ஆமபித்தரோகலக்ஷணம்	௱௪௫
ஆமாசயகதகாரண்னலக்ஷண	௩௨௭
ஆமாஜீரணரோகம்	௮௯
ஆமாலசகரோகம் -	௮௭
ஆமையோட்டுக்கட்டி -	௱௨
ஆம்லபித்தரோகம் -	௱௮௧
ஆம்லபித்தரோகலக்ஷணம்	௱௪௬
ஆம்லவிதத்தரோகம் -	௨௫௭
ஆம்லோஷிதரோகம் -	௨௬௰
ஆயாசாவர்த்தவாதம் -	௱௬௯
ஆருடநிதானம் -	௩௪௮
ஆலோசகபித்தம் -	௫
ஆவிருதவாதஉபத்திரவம் -	௨௱௧
ஆவிருதவாதபேதம்	௱௯௮
ஆக்ஷேபகவாதம்	௱௬௫
இ	
இக்காசிலேஷ்மம் -	௱௯௨
இக்காபித்தம் - -	௱௮௪
இடர்ப்பில்லம் -	௨௬௭
இத்மாபித்தம் -	௱௮௪
இந்திரபூதம் - -	௨௩௬
இந்திரலுப்தம் -	௨௬௩
இமைத்தடிப்பு	௨௯௭
இமைநீர்ப்பாய்ச்சல்	௨௬௮
இமை-௩-வது-பிரிவாகிய கழலைரோகபேதம்.	௨௬௮
இமை௨-வது-தரிவாகிய தடித்தலாதிரோகபேதம்.	௨௬௭
இமை-௪வது-பிரிவாகியநீர்ப்பாய்ச்சல்ரோகபேதம்.	௨௬௮
இமை-௫-வது-பிரிவாகிய பதுமரோகபேதம்.	௨௬௮
இமை-௧-வது-பிரிவாகிய பில்லரோகபேதம்.	௨௬௭
இமையிறச்சி -	௨௬௮
இமையைப்பற்றியரோக பேதம்	௨௪௩
இமைரோகபேதம் -	௨௬௭
இமைவரிரோகம் -	௨௬௩
இரசுவரோகம் -	௨௫௬
இருதாவிருதவாதம் -	௱௬௩
இரைப்புமாந்தம் -	௨௱௰௮
இழுப்புமாந்தம் -	௨௱௰௮
இளம்பிள்ளைவாதம் -	௱௬௪
இளிச்சக்கண் -	௨௬௭
இக்ஷுமேகரோகலக்ஷணம்	௯௯
இறங்குஅண்டம் -	௱௰௨
இறுதயஸ்தானவித்திரதி	௱௮
ஈ	
ஈசுரபூதம் -	௨௩௬
ஈனத்தொனிச்சுரம்	௪௭
உ	
உகிர்ச்சுற்று -	௩௱௰௧
உக்கிராக்கிரகவாதம்	௱௭௰
உச்சங்கவர்த்தமரோகம்	௨௪௬
உச்சிலிங்கத்தேள் -	௩௫௮
உடலுருக்கிரோகம்	௨௱௰௮
உட்சுரம் -	௩௬
உதட்டுரோகம்	௨௭௯
உதயசுரம் -	௪௬
உதரரோகபூர்வரூபம் -	௱௨௪
உதரரோகபேதம் -	௱௨௪
உதரரோகமதாந்தரம் -	௱௩௰
உதராக்கினிபேதம் -	௰௪
உதறுவாதம் - -	௱௫௫
உதாவர்த்தயோனிரோகம்	௩௨௧
உதாவர்த்தரோகஅசாத்தியம்	௭௮
உதாவர்த்தரோகம் -	௭௮
உதாவர்த்தவாதம்	௱௬௫
உதானபிராணஆவிருதவாதம்	௨௱
உதானவாயு -	௩
உதானவாயுவின் விகுண லக்ஷணம்.	௱௯௭
உதிரதலைவலி	௨௯௧
உதிரவாதம்	௱௫௮
உத்காரசிலேஷ்மம் -	௱௯௨
உத்கோடரோகம் -	௩௱௰௩
உத்தமமேகம் - -	௱௬

ரோகங்களின்பெயர்கள்.	பக்கம்.
உத்தரசமூலரோகம்	௭௫
உத்தானவாதசோணிதம்	௱௯௫
உத்தானவாதம்	௱௭௭
உந்தல்	௨௬௫
உந்துநெரிசல்	௨௬௬
உந்துருளலி	௩௬௰
உந்தெழுச்சி	௨௬௫
உபகிருசரோகம்	௨௮௨
உபசர்க்கதாகரோகம்	௭௰
உபசிரிஷரோகம்	௨௯௩
உபஜிக்வாரோகம்	௨௮௫
உபநகரோகம்	௩௱௰௧
உபநாகரோகம்	௨௪௮
உபப்லுதயோனிரோகம்	௩௨௧
உபயமுகரத்தபித்தரோகம்	௫௨
உபவிஷ்டககருப்பம்	௨௱௬
உப்புமாந்தம்	௨௱௰௮
உயிர்நிலைவிழிக்குறி	௩௪௭
உயிர்ப்பரீக்ஷைநிதானம்	௩௪௭
உலர்த்துச்சூலைரோகம்	௱௨௩
உல்பகரோகம்	௨௱௰௩
உஷ்டரகிரீவபகந்தரவிரணம்	௩௱௨
உஷ்ணநெரிசல்	௨௬௩
உஷ்ணவாதமூத்திரரோகம்	௯௬
உஷ்ணவாயுகிரகணி	௮௫
உஷ்ணவிதக்கரோகம்	௨௫௭
உள்ளுருக்கி	௨௱௰௨
உற்சுகாஜீரணம்	௮௯
உன்மாதபித்தம்	௱௮௨
உன்மாதரோகபடலம்	௨௩௯
உன்மாதரோகபேதம்	௨௩௯
ஊ	
ஊதல்ரோகம்	௱௩௭
ஊதுகாமாலைரோகம்	௱௩௪
ஊதுமாந்தம்	௨௱௰௮
ஊராமைரோகம்	௱௨௰
ஊருஸ்தம்பவாதம்	௱௫௮
ஊர்த்துவகததோஷம்	௬௧
ஊர்த்துவகுதரோகம்	௨௯௰
ஊர்த்துவசுவாசரோகம்	௫௮
ஊர்த்துவபித்தரோகம்	௱௮௫
ஊர்த்துவமுக ரத்தபித்தம்	௫௨
ஊர்த்துவமுகவாதரோகம்	௱௭௪
ஊர்த்துவாங்கரோகம்	௨௪௩
ஊர்த்துவாம்மிசசரவாதம்	௱௬௯
எ	
எச்சில்தோஷம்	௨௨௧
எரிகுன்மரோகம்	௱௰௮
எரிச்சல்விஷபாகம்	௨௱௨
எரிபித்தம்	௱௮௫
எலிச்சுக்கிலவிஷநிதானம்	௩௬௧
எலிபேதம்	௩௫௯
எலும்புருக்கிரோகம்	௫௪
எழுநாயிறு	௨௯௨
எறும்பு	௩௫௧
ஏ	
ஏகசர்மகுஷ்டரோகம்	௱௪௮
ஏகாங்கவாதம்	௱௯௪
ஏதுகம்	௨௱௰௩
ஏப்பச்சுரம்	௪௮
ஏறுஅண்டம்	௱௰௨
ஒ	
ஒட்டுக்கிரகணி	௮௬
ஒட்டுரோகபேதம்	௱௪௪
ஒழுக்குப்பிரமேகம்	௩௱௰௯
ஒற்றைத்தலைவலி	௨௯௧
ஓ	
ஓடுபித்தம்	௱௮௬
ஓணான்	௩௫௧
ஓஷ்டரோகபேதம்	௨௭௯
க	
கக்கிருமல்நிதானம்	௨௨௰
கக்குவான்	௨௨௰
கங்குரோகலக்ஷணம்	௱௪௪
கசுமலபூதம்	௨௩௮
கச்சபிரோகம்	௩௱௯
கஞ்சவாதம்	௱௮௰
கடலைக்கட்டி	௱௩
கடிகாலநிதானம்	௩௫௬
கடித்தசர்ப்பச்செய்கைகுறி	௩௪௩

ரோகங்களின்பெயர்கள்.	பக்கம்.
கடிநிறநிதானம் -	௩௪௨
கடுகுக்கட்டி -	௱௩
கடுவன் - -	௨௱௰௯
கடைக்கண்-௧-வது-பிரிவாகியகண்ணெடுப்பு	௨௬௯
கடைக்கண்-௨-வதுபிரிவாகிய பூசாந்திர ரோகம்	௨௬௯
கடைக்கண்-௩-வது-பிரிவாகியபடாத்திரோகம்	௨௬௯
கடைக்கண்-௪-வது-பிரிவாகிய குவைரோகம்	௨௬௯
கடைக்கண்-௫-வது-பிரிவாகிய விழிவாதம்	௨௬௯
கடைக்கண்-௬-வது-பிரிவாகிய விரணப்பரு	௨௬௯
கடைக்கண்-௭-வது-பிரிவாகிய வித்திரதி	௨௬௯
கடைக்கண்-௮-வது-பிரிவாகிய இமைக்குரு	௨௬௯
கடைக்கண்-௯-வது-பிரிவாகியகுமிழரோக	௨௭௰
கடைக்கண்-௰-வது-பிரிவாகிய நக்ஷத்திரவாயு	௨௭௰
கடைக்கண்-௰௧-வது-பிரிவாகிய கண்ணோவு	௨௭௰
கடைக்கண்ரோகபேதம் -	௨௬௯
கட்சியாரோகம் -	௩௱௰
கட்டிப்பிரமேகம் -	௩௱௰௯
கட்டுமாந்தம் -	௨௱௰௮
கணமாந்தம் -	௨௱௰௮
கணரோகபேதம் -	௨௱௰௫
கண்குத்திப்பாம்பு	௩௪௬
கண்டகுப்சசந்நிபாதசுரம்	௨௩
கண்டகுப்சசந்நிபாதம் -	௨௭
கண்டசாலிகரோகம் -	௨௮௭
கண்டசிலேஷ்மரோகணி	௨௮௬
கண்டதிரிதோஷரோகணி	௨௮௭
கண்டபித்தரோகணி -	௨௮௬
கண்டமாலைரோகபேதம்	௩௱௭
கண்டரத்தரோகணி -	௨௮௭

ரோகங்களின்பெயர்கள்.	பக்கம்.
கண்டரோகபேதம் -	௨௮௬
கண்டரோகலக்ஷணம் -	௩௱௰
கண்டவாதரோகணி -	௨௮௬
கண்டாலஜிரோகம் -	௨௮௰
கண்டாற்புதரோகம் -	௨௯௰
கண்டுபித்தம் - -	௱௮௨
கன்னேலயோனிரோகம்	௩௨௪
கண்டோஷ்டரோகம் -	௨௭௯
கண்ணேறுவாந்தி -	௬௬
கண்மயக்குவாதம் -	௱௭௨
கதரரோகம் -	௩௱௰௧
கதலிமலடு - -	௨௱௫
கதலீபலலேகியம் -	௩௯௫
கந்தகிரகதோஷம் -	௨௨௩
கந்ததாளிரோகம் -	௨௮௪
கந்தவிஷம் -	௩௨௭
கந்தவிஷபாகம் -	௨௱௨
கபகிலிஷ்டரோகம் -	௨௪௬
கபசிராவரோகம் -	௨௪௭
கபத்தலைவலி -	௨௯௧
கபாலகுஷ்டரோகம் -	௱௪௭
கபாலபித்தம் - -	௱௮௭
கபாலரோகம் -	௨௯௩
கபிலஎலி -	௩௬௰
கபிலாசிலந்தி -	௩௫௩
கபோதகஎலி - -	௩௬௰
கம்பச்சுரம் - -	௫௰
கம்பீரரோகம் -	௨௫௬
கம்பீரவாதம் -	௱௭௭
கம்பீரவாதசோணிதரோகம்	௱௯௫
கம்பீரவிக்கல்ரோகம்	௫௯
கரபக்ஷணலக்ஷணம் -	௩௨௫
கரப்பான்பித்தம் -	௱௮௫
கரப்பான்பிரமேகம் -	௩௱௨௰
கரம்என்கிறஇடுமருந்தின் வகை	௩௨௫
கராக்ஷேபகவாதம் -	௱௭௬
கருங்கரப்பான் -	௨௱௰௯
கருங்கிரந்தி -	௨௱௰௯
கருங்குமுதரோகம் -	௨௬௨

ரோகங்களின் பெயர்கள்.	பக்கம்.
கருஞ்சாரை	௩௪௫
கருஞ்சுக்கிரன்	௨௬௫
கருஞ்சேரா	௩௬௪
கருநாகப்படலம்	௨௬௨
கருப்பகாசம்	௨௬௧
கருப்பகிரகணி	௮௬
கருப்பசந்நி	௨௬
கருப்பசர்ப்பவிஷம்	௩௩௯
கருப்பசிலேஷ்மம்	௨௱௫
கருப்பச்சூலைரோகம்	௱௨௪
கருப்பபேதம்	௨௱௬
கருப்பமரிக்கும்லக்ஷணம்	௨௱௭
கருப்பமலட்டுரோகம்	௨௱௫
கரும்பித்தம்	௱௮௫
கருவழலைச்சர்ப்பவிஷம்	௩௪௪
கருவிழிரோகத்தில்-க-வது பிரிவாகியகாசபேதம்	௨௬௧
கருவிழி-உ-வது பிரிவாகியபடலரோகபேதம்	௨௬௨
கருவிழி-௩-வது-பிரிவாகியகுமுதரோகபேதம்	௨௬௨
கருவிழி-௪-வது-பிரிவாகிய விழியுந்தல்ரோகபேத	௨௬௩
கருவிழி-௫-வது-பிரிவாகிய நெரிசல்ரோகபேதம்	௨௬௩
கருவிழி-௬-வது-பிரிவாகியவரிரோகபேதம்	௨௬௩
கருவிழி-௭-வது-பிரிவாகிய குந்தரோகபேதம்	௨௬௩
கருவிழி-௮-வது-பிரிவாகிய திமிரரோகபேதம்	௨௯௪
கருவிழி-௯-வது-பிரிவாகிய சுக்கிரரோகபேதம்	௨௯௫
கருவிழி-௰-வது-பிரிவாகியபூரோகபேதம்	௨௯௫
கர்ணகண்டுரோகம்	௨௭௨
கர்ணகிருமிரோகம்	௨௭௩
கர்ணகூசிகாரோகம்	௨௭௩
கர்ணசோபைரோகம்	௨௭௨
கர்ணதந்திரிகாரோகம்	௨௭௪

ரோகங்களின் பெயர்கள்.	பக்கம்.
கர்ணநாதரோகம்	௨௭௨
கர்ணபரிபோடகரோகம்	௨௭௪
கர்ணபாலசோஷரோகம்	௨௭௪
கர்ணபிதாரிகாரோகம்	௨௭௩
கர்ணபிப்பலிரோகம்	௨௭௩
கர்ணபூதிரோகம்	௨௭௨
கர்ணரோகஅசாத்தியசாத்திய நிதானம்	௨௭௫
கர்ணரோகபடலம்	௨௭௧
கர்ணரோகபேதம்	௨௭௧
கர்ணவிகியரோகம்	௨௭௪
கர்ணவித்திரதிரோகம்	௨௭௩
கர்ணாரசோற்புதரோகம்	௨௭௩
கர்ணாற்புதரோகம்	௨௭௩
கர்ணோற்பாதரோகம்	௨௭௪
கர்ணோன்மந்தரோகம்	௨௭௪
கர்த்தபிரோகம்	௩௱௰
கர்த்தவர்த்தமரோகம்	௨௪௫
கர்னகுஷ்டரோகம்	௱௫௧
கர்னசூலைவாதம்	௱௭௪
கர்ன்னிகசந்நிபாதசுரம்	௨௫
கர்ன்னிகசந்நிபாதம்	௨௭
கலதிரோகம்	௨௯௪
கலியாணகிருதம்	௩௬௯
கல்லடைப்புரோகம்	௬௩
கல்லிவாதம்	௱௮௰
கல்லுப்பிரமேகம்	௩௨௰
கஷாயதந்தளவி	௩௯௰
கஷ்டசாத்தியவிரணநிதான	௨௯௮
கழிகணரோகம்	௨௱௰௬
கழிமாந்தம்	௩௱௰௭
களலகரோகம்	௨௮௭
களபிருந்தரோகம்	௨௮௭
களப்பித்தம்	௱௮௬
களவித்திரதிரோகம்	௨௮௮
களாயகஞ்சவாதம்	௱௫௭
களாவர்த்தவாதம்	௱௭௧
களாற்புதரோகம்	௨௮௮
கறுப்புச்சிலந்தி	௩௫௩
கறைச்சூலைரோகம்	௱௨௩

ரோகங்களின்பெயர்கள்.	பக்கம்.
கனற்சுக்கிரன்	௨௬௫
கா	
காகசகுஷ்டம்	௱௫௧
காகச்சிலந்தி	௩௫௪
காகமலட்டுரோகலக்ஷணம்	௨௱௫
காக்கைவலி	௨௪௨
காசசிலேஷ்மம்	௱௯௨
காசச்சுரம்	௪௮
காசரோகபூர்வரூபம்	௫௪
காசரோகபேதம்	௫௪
காட்டுக்கொசு	௩௫௧
காட்டுமசகம்	௩௫௧
காணுப்புள்தோஷம்	௨௩௰
காணுவேசநிதானம்	௨௩௧
காந்தர்வசுரம்	௪௫
காந்தர்வபூதம்	௨௩௪
காமச்சுரம்	௩௩
காமபூதம்	௨௩௪
காமாலைரோகபேதம்	௱௩௪
காமாலைரோகலக்ஷணம்	௱௩௪
கார்க்கோடன்	௩௩௨
காலபலம்	௰௫
காலியாங்குட்டி	௩௪௬
கால்வெடிப்பு	௩௱௰௩
காளமேகரோகம்	௯௯
கி	
கிடிபகுஷ்டரோகம்	௱௪௮
கிரகக்கிரகணகாரணம்	௨௨௫
கிரகதோஷஅசாத்தியநிதான	௨௨௫
கிரகதோஷபூர்வரூபம்	௨௨௩
கிரகணிரோகபூர்வரூபம்	௮௪
கிரகணிரோகபேதம்	௮௪
கிரகணிரோகமதாந்தரம்	௮௫
கிரகணிரோலக்ஷணம்	௮௩
கிரணபூதம்	௨௩௫
கிரதிதரோகம்	௩௱௰௬
கிரந்திபேதம்	௩௱௩
கிராணபாகரோகம்	௨௭௭
கிரிச்சரரோகபேதம்	௯௧
கிருச்சிரோன்மீலனவர்த்தம	௨௪௪
கிருத்திரசிவாதம்	௱௫௮
கிருத்திரமவிஷம்	௩௨௫
கிருமிக்கிரந்திரோகம்	௨௪௫
கிருமிசிரோரோகம்	௨௯௨
கிருமிச்சுரம்	௪௬
கிருமிப்பித்தம்	௱௮௭
கிருமிமார்புரோகம்	௬௮
கிருமிரோகபேதம்	௱௫௩
கிருமிவாந்திரோகம்	௬௬
கிருஷ்டவிரணம்	௨௯௯
கிருஷ்ணஎலி	௩௬௰
கிருஷ்ணகுஷ்டரோகம்	௱௫௨
கிருஷ்ணசர்ப்பம்	௩௪௪
கிருஷ்ணமண்டலரோகசாத்தியாசாத்தியநிதானம்	௨௫௨
கிருஷ்ணமண்டலரோகபேத	௨௫௧
கிலிஷ்டவர்த்தமரோகம்	௨௪௫
கிலேதகசிலேஷ்மம்	௬
கிஷ்ணஜிம்மகதோஷம்	௩௧
கீ	
கீடதந்தலக்ஷணம்	௩௫௰
கீடாதிபேதபடலம்	௩௪௯
கீடாதிபேதம்	௩௪௯
கு	
குகூனவர்த்தமரோகம்	௨௪௬
குடல்அண்டரோகம்	௱௰௨
குடல்அண்டவிருத்திரோகம்	௱௰௧
குடல்வாதம்	௱௬௨
குடல்விருத்திரோகசாத்தியாசாத்தியநிதானம்	௱௰௧
குடல்விருத்திரோகபேதம்	௱௰
குடல்விருத்திரோகலக்ஷணம்	௱௯
குண்டாலரோகபூர்வரூபம்	௨௱௰௧
குதக்கூடரோகம்	௨௱௰௩
குதப்பிரம்சரோகம்	௮௨
குதிரைவலி	௨௪௨
குநகஎலி	௩௬௰
குந்தரோகம்	௩௱௰௨
குபேரபூதம்	௨௩௬
கும்பகாமாலை	௱௩௬

ரோகங்களின்பெயர்கள்.	பக்கம்.
கும்பகாமாலைரோகலக்ஷணம்	௱௩௪
கும்பிகாரோகம்	௩௧௫
கும்பிகாவர்த்தமரோகம்	௨௪௪
குமரகண்டவலி	௨௪௨
குமுதச்சிலந்தி	௩௫௨
குமுறல்அண்டரோகம்	௱௰௨
குய்யரோகநிதானம்	௩௧௩
குய்யரோகமதாந்தரம்	௩௧௭
குரங்குவலி	௨௪௨
குரற்கம்மல்ரோகபேதம்	௬௩
குலோமஸ்தானவித்திரதி	௱௮
குவையெழுச்சிரோகம்	௨௯௫
குஷ்டரோகபூர்வரூபம்	௱௪௬
குஷ்டரோகபேதம்	௱௪௬
குழிப்புண்	௩௱
குழிமாந்தம்	௨௧௮
குளவி	௩௫௧
குளிகன்	௩௩௧
குளிசதோஷம்	௨௨௧
குளித்தவளெடுக்கதோஷம்	௨௨௨
குக்ஷிஸ்தானவித்திரதி	௱௮
குன்மகாமாலைரோகம்	௱௩௬
குன்மக்கிரகணி	௮௬
குன்மசூலை	௱௨௨
குன்மரோகபூர்வரூபம்	௧௧௩
குன்மரோகபேதம்	௧௧௩
கூ	
கூஷ்மாண்டபூதம்	௨௩௪
கெ	
கெண்டைக்கட்டி	௱௨௰
கொ	
கொட்டாவிச்சுரம்	௪௮
கொட்டாவிப்பித்தம்	௱௮௪
கொம்பேறிமூர்க்கன்	௩௪௫
கொலைஇச்சைக்கிரகம்	௨௨௬
கோ	
கோகிலஎலி	௩௯௰
கோடரோகம்	௩௧௩
கோத்திரவரோகலக்ஷணம்	௱௪௪
கோநசசர்ப்பம்	௩௩௯
கோபச்சுரம்	௩௩
கோரவாதம்	௱௭௫
கோஷசிலேஷ்மம்	௱௯௰
கோஷ்டகததோஷம்	௬௧
கௌ	
கௌதேரசர்ப்பபேதம்	௩௩௫
ச	
சகசபலம்	௰௫
சகசமூலரோகம்	௭௫
சகசரோகம்	௨௧௪
சகனவர்த்தமரோகம்	௨௪௬
சகலதாதுக்களின்ஆவிருதவாதலக்ஷணம்	௱௯௯
சகலமிருகசெந்துக்களின்விஷநிதானம்	௩௬௨
சகலரோகஞாபகம்	௨௧௫
சகலவிஷஉபத்திரவம்	௩௬௨
சகனுவர்த்தவாதம்	௱௫௯
சகுனிக்கிரகதோஷம்	௨௨௪
சகுனிக்கிரகம்	௨௨௭
சங்கபாலன்	௩௩௧
சங்கமதோஷம்	௩௰
சங்கமவிஷபேதம்	௩௩௰
சங்கரகிரகணிரோகம்	௮௯
சங்கரோகம்	௨௯௨
சங்கிரணகீடம்	௩௫௰
சங்கிரணச்சிலந்திப்பூச்சியின் பொதுக்குணம்	௩௫௪
சங்கைவிஷலக்ஷணம்	௩௩௯
சதக்கினிரோகம்	௨௮௮
சததசுரலக்ஷணம்	௩௪
சதபோனகபகந்தரவிரணம்	௩௱௨
சதபோனகரோகம்	௩௧௭
சதனம்	௨௧௩
சதாருகுஷ்டம்	௱௫௰
சதைக்கழலை	௨௬௮
சதைக்குந்தம்	௨௬௩
சதைக்குவை	௨௬௯
சதைப்படலம்	௨௬௨

ரோகங்களின்பெயர்கள்.	பக்கம்.
சதைப்படாத்தி -	௨௬௬
சதைப்படாத்திரோகம் -	௨௬௯
சதைப்பதுமம் -	௨௬௮
சதைப்புற்று - -	௨௬௬
சத்தியோவிரணபேதம் -	௨௯௯
சத்தியோவிரணம் -	௨௯௫
சநையர்மேகம் - -	௱
சந்ததசுரலக்ஷணம் -	௩௪
சந்தாதிசுரபேதம் -	௩௪
சந்தானிகச்சிலந்திவிஷம்	௩௫௨
சந்திகசந்நிபாதசுரம் -	௨௩
சந்திகசந்நிபாதம் -	௨௭
சந்திகசிலேஷ்மம் -	௬
சந்திகதோஷம் - -	௬௧
சந்திரவர்த்தரோகம் -	௨௯௨
சந்நிபாதஅரோசகம் -	௬௫
சந்நிபாதகோபகாலம் -	௰
சந்நிபாதசிலேஷ்மம் -	௱௯௩
சந்நிபதாசிர்க்கரரோகம் -	௫௪
சந்நிபாதசுரங்களின்ஆயுள்	௨௬
சந்நிபாதசுரசாத்தியாசாத்திய	௨௬
சந்நிபாதசுரபேதம் -	௨௨
சந்நிபாதசுரம் - -	௨௧
சந்நிபாதமதரோகம் -	௭௨
சந்நிபாதயோனிரோகம்	௩௨௪
சந்நிபாதலக்ஷணம் -	௰
சந்நிபாதவிஷபாகம் -	௨௱௨
சந்நிபாதோஷ்டரோகம் -	௨௭௯
சந்நிமாந்தம் - -	௨௧௮
சந்நியாசவாதம் -	௱௬௭
சந்நியாசிரோகம் -	௭௪
சப்ததாதுக்களின்சுபாவச் செய்கை	௰௧
சப்ததோஷபேதம் -	௩௰
சபலஎலி - -	௩௬௰
சபளஎலி - -	௩௬௰
சமாக்கினி - -	௰௪
சமானவாயு - -	௪
சமானவாயுவின்விகுணம்	௱௯௭
சம்புகாவர்த்தபகந்தரவிரணம்	௩௱௨
சம்பூகசீரிஷவாதம் -	௱௫௭
சம்வியூடரோகம் -	௩௧௬
சம்விருதாசியவாதம் -	௱௭௩
சரகுண்ணி - -	௩௬௪
சரஷபிகாரோகம் -	௩௧௫
சரஷபிகைரோகம் -	௱௪௩
சருக்கராற்புதரோகம் -	௩௧௧
சருமகீலரோகம் -	௭௮
சருமதாதுகதசுரம் -	௪௧
சருவஆவிருதவாதஅசாத்திய	௨௱௧
சருவநேத்திரஅசாத்தியம்	௨௬௰
சருவநேத்திரரோகபேதம்	௨௫௮
சருவநேத்திரவிழியுந்தல்	௨௬௩
சருவமுகரோகபேதம்	௨௮௯
சர்க்கராசூலைரோகம் -	௱௨௨
சர்க்கராஸ்மரிரோகம் -	௯௩
சர்க்கராரோகம் -	௩௧௧
சர்த்திகுன்மரோகம் -	௧௧௮
சர்ப்பங்கடிப்பதற்குக்காரண	௩௪௰
சர்ப்பங்களின்தத்து -	௩௪௩
சர்ப்பசாதிபேதம் -	௩௩௧
சர்ப்பசூசிகாலக்ஷணம் -	௩௩௫
சர்ப்பவருக்கச்சத்துருவகை	௩௪௭
சர்ப்பவிஷவேகபேதம் -	௩௪௬
சர்மகுஷ்டரோகம் -	௱௪௮
சர்மதலகுஷ்டம் -	௱௫௧
சர்வசாதாரணவிக்கல் -	௬௰
சர்வசிலந்திகளின்சாமானியவிஷம்	௩௫௬
சர்வபூதகிரகணபூர்வரூபம்	௨௩௩
சர்வாங்கவாதம் -	௱௭௫
சலக்கழிச்சல் - -	௮௪
சலக்கூர்மரோகம் -	௱௨௰
சலசிராவரோகம் - -	௨௪௭
சலசிலேஷ்மம் -	௱௯௩
சலதோஷம் - -	௨௭௫
சலப்பிரமேகம் -	௩௯
சலமேகரோகம் -	௯௯

ரோகங்களின்பெயர்கள்.	பக்கம்.
சலஸ்தம்போதரரோகம்	௱௨௯
சலாற்புதோஷ்டம்	௨௮௰
சலோதரரோகம்	௱௨௮
சல்லியநாடிவிரணம்	௩௱௮
சவலைரோகம்	௨௩௰
சவிரணமேகம்	௱௫
சளி	௨௱௭௫
சன்மமலடு	௨௱௫
சா	
சாகோர்த்தபூதம்	௨௩௭
சாணூரமூர்க்கன்	௩௪௫
சாதகபித்தம்	௫
சாதக்கினியோனிரோகம்	௩௨௨
சாதாரணத்தேளின்பேதம்	௩௫௮
சாதுர்த்திகசுரலக்ஷணம்	௩௫
சாதுர்த்திகவிபரீதசுரம்	௩௫
சாத்தியஅதிசாரம்	௮௨
சாத்தியஉதரரோகம்	௱௨௯
சாத்தியசுரம்	௪௩
சாத்தியசுரலக்ஷணம்	௩௭
சாத்தியசோபை	௱௩௯
சாத்தியவிசர்ப்பிரோகம்	௱௪௨
சாத்தியவித்திரதிக்கட்டி	௱௯
சாத்தியவிரணம்	௨௯௮
சாத்தியவெண்குஷ்டம்	௱௫௨
சாத்தியாசாத்தியற்புதக்கிரந்தி	௩௱௫
சாத்தியாசாத்தியஉபதம்சம்	௩௧௪
சாத்தியாசாத்தியகாமாலை	௱௩௬
சாத்தியாசாத்தியகிரகணி	௮௬
சாத்தியாசாத்தியகிரந்தி	௩௱௫
சாத்தியாசாத்தியகுய்யரோகம்	௩௧௭
சாத்தியாசாத்தியகுரற்கம்மல்	௬௪
சாத்தியாசாத்தியசூலை	௱௨௪
சாத்தியாசாத்தியபகந்தரம்	௩௱௩
சாத்தியாசாத்தியபாதவன்மீகரோகம்	௩௱௬
சாத்தியாசாத்தியமார்புரோகம்	௯௮
சாத்தியாசாத்தியமேகக்கட்டிகளின்ஸ்தானம்	௱௩
சாத்தியாசாத்தியவிக்கல்	௯௰
சாத்தியாசாத்தியவிஷபாகம்	௨௱௨
சாந்திரமேகம்	௱௬
சாந்திரமேகரோகம்	௱
சாபச்சுரம்	௩௨
சாமஅதிசாரம்	௮௧
சாமச்சுரம்	௩௮
சாமநிராமஅதிசாரபேதம்	௮௧
சாமானியஉதரரோகம்	௱௨௪
சாமானியகணரோகம்	௨௧௫
சாமானியகாசரோகம்	௨௫௪
சாமானியகிரகணிரோகபூர்வரூபம்	௮௪
சாமானியகிருமிரோகம்	௱௫௪
சாமானியகீடம்	௩௫௰
சாமானியசர்ப்பவிஷக்குறி	௩௪௩
சாமானியசிலேஷ்மகுன்மம்	௱௰௭
சாமானியதிமிரரோகம்	௨௫௨
சாமானியபித்தகுன்மம்	௱௰௭
சாமானியமேகரோகம்	௯௭
சாமானியலிங்கநாசரோகம்	௨௫௫
சாமானியவாதகுன்மம்	௱௰௭
சாமானியாஜீரணரோகம்	௯௰
சாரமேகரோகம்	௯௮
சாரீரசுரம்	௩௬
சாரீராதிசுரபேதம்	௩௬
சாரைப்பாம்பு	௩௪௫
சார்வகாலசுரம்	௫௰
ஜாலகர்த்தபிரோகம்	௩௱௰
ஜாலமாலினிச்சிலந்தி	௩௫௫
சி	
சித்தாமேகம்	௱
சித்தாவர்த்தமரோகம்	௨௪௪
சிகுரளவி	௩௯௰
சிங்கிமாந்தம்	௨௪௮
சிதாதரோகம்	௨௮௨
சிதிலாவர்த்தவாதம்	௱௭௫
சித்தர்முதலியநான்குபூதங்களின்லக்ஷணம்	௨௩௫
சித்தவிப்பிரமசந்நிபாதசுரம்	௨௫
சித்தவிப்பிரமசந்நிபாதம்	௨௭

ரோகங்களின் பெயர்கள்.	பக்கம்.
சித்திரச்சிலந்தி -	௩௫௨
சித்திரமண்டலச்சிலந்தி -	௩௫௪
சித்மாகுஷ்டம் - -	௱௪௯
சிநாயுவார்மரோகம் -	௨௫௰
சியாவவர்த்தமரோகம் -	௨௪௬
சிரக்கம்பரோகம் -	௨௯௨
சிரக்கம்பவாதம் - -	௱௭௬
கிரச்சாலியவாதம் -	௱௭௬
சிராக்கிரகவாதம் -	௱௮௰
சிராசுக்கிலரோகம் -	௨௫௧
சிரஜாலரோகம் -	௨௪௯
சிராபிடகரோகம் -	௨௫௰
சிராஹரிஷரோகம் -	௨௪௯
சிரோத்பாதரோகம் -	௨௪௯
சிரோரோகநிதானம்	௨௯௰
சிரோரோகபேதம் -	௨௯௧
சிரோவித்திரதிரோகம்	௨௯௩
சிரோற்புதரோகம் -	௨௯௩
சிலந்திகடிக்கும்ஸ்தானம்	௩௫௫
சிலந்திப்பூச்சியின்பேதம்	௩௫௨
சிலந்தியின்அஷ்டவிஷவேகம்	௩௫௬
சிலந்தியின்சப்தவேகவிஷம்	௩௫௯
சிலந்தியின்சுக்கிலம் -	௩௫௭
சிலந்தியின்சுவாசம் -	௩௫௭
சிலந்தியின்பல் -	௩௫௭
சிலந்தியின்மலம் -	௩௫௭
சிலந்தியின்மூத்திரம் -	௩௫௭
சிலந்தியின்வாய் -	௩௫௭
சிலந்தியின்வாய்நீர் -	௩௫௭
சிலந்தியின்ஸ்பரிசம் -	௩௫௮
சிலிபதரோகம் -	௩௱௬
சிலேஷ்மஅபஸ்மாரரோகம்	௨௪௧
சிலேஷ்மஅபானஆவிருதவாதம்	௨௱
சிலேஷ்மஅரோசகம் -	௬௪
சிலேஷ்மஆவிருதவாதம்	௱௯௮
சிலேஷ்மஉதானஆவிருதவாதம்	௨௱
சிலேஷ்மஉபதம்சரோகம்	௩௧௪
சிலேஷ்மகர்ணசூலை -	௨௭௧
சிலேஷ்மகளகண்டரோகம்	௨௮௮
சிலேஷ்மகாசம் -	௨௬௧
சிலேஷ்மகாசரோகம் -	௫௫
சிலேஷ்மகாசவிழிரோகம்	௨௫௪
சிலேஷ்மகாமாலைரோகம்	௱௩௫
சிலேஷ்மகாலவிஷநிதானம்	௩௨௯
சிலேஷ்மகிரகணிரோகம்	௮௫
சிலேஷ்மகிரந்திரோகம் -	௩௱௪
சிலேஷ்மகிரிச்சரரோகம்	௯௧
சிலேஷ்மகுடல்விருத்தி -	௱௰
சிலேஷ்மகுண்டாலக்கட்டி	௨௧௨
சிலேஷ்மகுரற்கம்மல் -	௬௪
சிலேஷ்மகுன்மரோகம் -	௱௰௪
சிலேஷ்மகோபகாலம் -	௯
சிலேஷ்மசமான ஆவிருதவாதம்	௨௱
சிலேஷ்மசருமகீலம் -	௭௯
சிலேஷ்மசிரஸ்தாபரோகம்	௨௯௧
சிலேஷ்மச்சிலந்திகளின்பொதுக்குணம்	௩௫௩
சிலேஷ்மசீரணலக்ஷணம்	௰௧
சிலேஷ்மசுபாவகுணம் -	௨
சிலேஷ்மசுரம் -	௨௰
சிலேஷ்மசூலை - -	௱௨௧
சிலேஷ்மசெவ்வாப்புக்கட்டி	௨௧௨
சிலேஷ்மசோபை	௱௩௮
சிலேஷ்மஜிக்வாகண்டகம்	௨௮௪
சிலேஷ்மத்தசைஅண்டம்	௱௰௩
சிலேஷ்மதந்தமூலரோகம்	௨௮௭
சிலேஷ்மதாகரோகம் -	௭௰
சிலேஷ்மதிமிரம்	௨௫௩
சிலேஷ்மதிமிரரோகம்	௨௬௪
சிலேஷ்மதுஷ்டவிரணம்	௨௯௬
சிலேஷ்மதேகிலக்ஷணம்	௮
சிலேஷ்மத்தாற்பிறந்தசலமேகமுதலியபத்துவகை	௯௯
சிலேஷ்மத்தேள் -	௩௫௯
சிலேஷ்மத்தொழில் -	௩
சிலேஷ்மநாடிவிரணம் -	௩௱௮
சிலேஷ்மபகந்தரவிரணம் -	௩௱௧

ரோகங்களின்பெயர்கள்.	பக்கம்.
ஸிலேஷ்மபாண்டுரோகம் -	௱௩௨
ஸிலேஷ்மபாதவன்மீகம் -	௩௱௬
ஸிலேஷ்மபித்தகாமாலை -	௱௩௫
ஸிலேஷ்மபித்தசுரம் -	௨௧
ஸிலேஷ்மபித்தசோபை -	௱௩௮
ஸிலேஷ்மபித்ததுஷ்டவிரண	௨௯௬
ஸிலேஷ்மபித்தபகந்தரவிரணம்	௩௱௧
ஸிலேஷ்மபித்தமசூரிகை -	௱௪௩
ஸிலேஷ்மபித்தவிசர்ப்பி -	௱௪௧
ஸிலேஷ்மபிரமேகம் -	௩௧௮
ஸிலேஷ்மபிராணஆவிருதவாதம்	௨௱
ஸிலேஷ்மபிலீகரோகம் -	௱௩௧
ஸிலேஷ்மபீநசரோகம் -	௨௭௬
ஸிலேஷ்மபேதம் - -	௫
ஸிலேஷ்மமசூரிகை -	௱௪௩
ஸிலேஷ்மமதரோகம் -	௭௨
ஸிலேஷ்மமதாத்தியரோகம்	௭௧
ஸிலேஷ்மமலக்கிருமி -	௱௫௩
ஸிலேஷ்மமாந்தம் -	௨௧௮
ஸிலேஷ்மமார்புரோகம் -	௬௭
ஸிலேஷ்மமுகபாகரோகம்	௨௮௯
ஸிலேஷ்மமூர்ச்சாரோகம் -	௭௩
ஸிலேஷ்மமூலரோகம் - -	௭௬
ஸிலேஷ்மமேகரோகஉபத்திரவ	௱௧
ஸிலேஷ்மயோனிரோகம் -	௩௨௧
ஸிலேஷ்மரத்தபித்தரோகம்	௫௨
ஸிலேஷ்மரூபம் - -	௧
ஸிலேஷ்மரோகபூர்வரூபம்	௱௮௮
ஸிலேஷ்மரோகபேதம் -	௱௮௮
ஸிலேஷ்மரோகிலக்ஷணம் -	௰௬
ஸிலேஷ்மலிங்கநாசரோகம்	௨௫௫
ஸிலேஷ்மவாதஊருஸ்தம்ப	௱௫௯
ஸிலேஷ்மவாந்திரோகம் -	௬௬
ஸிலேஷ்மவிசர்ப்பிரோகம்	௱௪௰
ஸிலேஷ்மவித்திரதிரோகம் -	௱௭
ஸிலேஷ்மவியானஆவிருதவாத	௨௱
ஸிலேஷ்மவிருத்திலக்ஷணம் -	௰௧
ஸிலேஷ்மவிஷபாகரோகம்	௨௱௧
ஸிலேஷ்மவிஷூசி -	௮௮
ஸிலேஷ்மவெண்குஷ்டம் -	௱௫௨
ஸிலேஷ்மஸ்தானம் - -	௨
ஸிலேஷ்மக்ஷயரோகம் -	௬௨
ஸிலேஷ்மாசிர்க்கரரோகம் -	௫௪
ஸிலேஷ்மாதிக்கவாதசோணி	௱௯௬
ஸிலேஷ்மாதிசாரரோகம் -	௮௰
ஸிலேஷ்மாதிமர்தரோகம் -	௨௫௯
ஸிலேஷ்மாபிஷ்யதரோகம்	௨௫௮
ஸிலேஷ்மாஸ்மரிரோகம் -	௯௩
ஸிலேஷ்மாற்புதகிரந்தி -	௩௱௫
ஸிலேஷ்மோதரரோகம் -	௱௨௬
ஸிலேஷ்மோஷ்டரோகம் -	௨௭௯
ஸிலேஷ்மோன்மாதரோகம்	௨௩௯
ஸில்வரோகம் - -	௩௧௧
ஸிறுநாகம் - -	௩௪௪
ஸிறுபாம்புக்கடி -	௩௪௫
ஸீ	
ஸீதகண்டவாதம் -	௱௫௬
ஸீதக்கழிச்சல் - -	௮௪
ஸீதசுரம் - - -	௪௫
ஸீதபித்தரோகம் - -	௱௪௫
ஸீதபூதனுகிரகதோஷம் -	௨௨௪
ஸீதபூர்வகசந்நிபாதசுரம் -	௨௯
ஸீதமண்டலி - -	௩௬௩
ஸீதமேகரோகம் - -	௱
ஸீதாங்கசந்நிபாதசுரம் -	௨௫
ஸீதாங்கசந்நிபாதம் -	௨௮
ஸீரணசுக்கிலதாதுவின்லக்ஷண	௰௪
ஸீரணநேத்திரமலலக்ஷணம்	௰௪
ஸீரணமச்சாதாதுவின்லக்ஷண	௰௪
ஸீரணமதுமேகம் - -	௯௮
ஸீரணமலலக்ஷணம் -	௰௪
ஸீரணமாமிசதாதுவின்லக்ஷண	௰௩
ஸீரணமூத்திரலக்ஷணம் -	௰௪
ஸீரணமேதோதாதுவின்லக்ஷ	௰௩
ஸீரணரசதாதுவின்லக்ஷணம்	௰௩
ஸீரணரத்ததாதுவின்லக்ஷணம்	௰௩
ஸீரணவியர்வைலக்ஷணம் -	௰௪
ஸீரணஸ்திதாதுவின்லக்ஷணம்	௰௩
ஸீழ்ப்பிரமேகம் -	௩௧௯

ரோகங்களின்பெயர்கள்.	பக்கம்.
சு	
சுகசந்நிபாதம்	௩௰
சுகபூதம்	௨௩௭
சுக்கிலஆவிருதவாதலக்ஷணை	௱௯௯
சுக்கிலதாதுகதசுரம்	௪௧
சுக்கிலமண்டலரோக சாத்தியாசாத்தியம்	௨௫௧
சுக்கிலமண்டலரோகபேதம்	௨௪௯
சுக்கிலமேகரோகம்	௱
சுக்கிலார்மரோகம்	௨௪௯
சுக்கிலாஸ்மரிரோகம்	௯௩
சுக்திகரோகம்	௨௪௯
சுசுந்தரி	௩௬௧
சுட்கசிலேஷ்மம்	௱௯௰
சுட்கசுரம்	௪௯
சுட்கமூலம்	௭௫
சுட்கயோனிரோகம்	௩௨௨
சுட்கரேவதிகிரகதோஷம்	௨௨௫
சுட்கரேவதிகிரகம்	௨௨௭
சுட்காக்ஷிபாகரோகம்	௨௫௭
சுத்தசுக்கிலரோகம்	௨௫௧
சுத்தமேகம்	௱௫
சுத்தரத்தவிரணம்	௨௯௮
சுநந்தனுகிரகம்	௨௨௬
சுப்திபிண்டம்	௨௱௬
சுப்திவாதம்	௱௫௬
சுரஅதிசாரம்	௮௨
சுரக்கினிரோகம்	௨௮௯
சுரசிலேஷ்மம்	௱௯௰
சுரசூலைரோகம்	௱௨௩
சுரத்தின்தசாவஸ்தை	௪௩
சுரபேதம்	௰௭
சுரப்பிறப்பின்லக்ஷணம்	௰௮
சுரப்புரோகம்	௱௩௭
சுரப்பூர்வரூபம்	௰௮
சுரமாந்தம்	௨௧௭
சுரரோகபடலம்	௰௭
சுராமேகரோகம்	௱
சுரோணிசூலைவாதம்	௱௬௩
சுவர்க்கச்சிலந்திவிஷம்	௩௫௫
சுவாசரோகபூர்வரூபம்	௫௭
சுவாசரோகபேதம்	௫௬
சுவாசசிலேஷ்மம்	௱௯௩
சுவாசபித்தம்	௱௮௫
சுவாலிதவாதம	௱௬௮
சுவானகிரகதோஷம்	௨௨௩
சுவேதசிலேஷ்மம்	௱௯௧
சுவேதபித்தம்	௱௮௪
சுழிகணைரோகம்	௨௧௬
சுற்றுக்குலைவு	௨௬௮
சூ	
சூசிமுகயோனிரோகம்	௩௨௩
சூதகசந்நி	௨௬
சூதிகாசர்ப்பவிஷம்	௩௩௯
சூத்திரசர்ப்பம்	௩௩௭
சூரியாவர்த்தரோகம்	௨௯௨
சூலிகணைரோகம்	௨௧௫
சூலைப்பித்தம்	௱௮௪
சூலைரோகபேதம்	௱௨௰
செ	
செங்கமலக்காமாலை	௱௩௬
செங்கரப்பான்	௨௧௯
செங்கிரந்தி	௨௧௯
செங்குமுதரோகம்	௨௬௨
செஞ்சதைவிழியுந்தல்	௨௬௩
செஞ்சாரைப்பாம்பு	௩௪௫
செஞ்சேரா	௩௬௩
செம்பித்தம்	௱௮௫
செய்யான்	௩௬௩
செரியாமாந்தம்	௨௧௭
செவிபடுவாதம்	௱௭௪
செவ்வட்டை	௩௬௪
செவ்வாப்புக்கட்டி	௨௧௧
சே	
சேற்றுப்புண்	௩௧௨
சை	
சையோகபுருஷபரிசதோஷம்	௨௨௧
சையோகஸ்திரிபரிசதோஷம்	௨௨௧

ரோகங்களின்பெயர்கள்.	பக்கம்.
சொ	
சொருகுமாந்தம்	௨௧௮
சொறிக்கரப்பான்	௨௧௯
சோ	
சோகபித்தம்	௱௮௩
சோணிதநெரிசல்	௨௬௩
சோணிதரோகலக்ஷணம்	௱௯௬
சோணிதவாதம்	௱௫௮
சோணிதார்மரோகம்	௨௫௰
சோணிதாற்புதகிரந்தி	௩௱௫
சோபாக்ஷிபாகரோகம்	௨௯௰
சோபைச்சுரம்	௫௰
சோபைரோகபூாவரூபம்	௱௩௭
சோபைரோகபேதம்	௱௩௭
சோமகிடம்	௩௫௰
சோமரோகலக்ஷணம்	௱௪
சோரிப்படாத்தி	௨௬௬
சோரிவரி	௨௬௩
சோஷசிலேஷ்மம்	௱௯௨
சோஷைச்சுரம்	௪௭
சௌ	
சௌமியசுரம்	௩௬
ஜ	
ஜதுமணிரோகம்	௩௧௨
ஜி	
ஜிக்வாரோகபேதம்	௨௮௪
ஜிக்வாலசகரோகம்	௨௮௪
ஜிக்வாஸ்தம்பவாதம்	௱௮௰
ஜிம்மகசந்நிபாதசுரம்	௨௪
ஜிம்மகசந்நிபாதம்	௨௭
ஜிம்மகபித்தம்	௱௮௨
த	
தக்கன்	௩௩௧
தங்குபிண்டம்	௨௱௯
தசனோற்பவரோகம்	௨௨௰
தசை அண்டரோகம்	௱௰௨
தண்டகவாதம்	௱௬௫
தண்டாலசகரோகம்	௮௭
தத்துருகுஷ்டரோகம்	௱௪௯
தத்துருபித்தம்	௱௮௩
தந்தஹரிஷரோகம்	௨௮௰
தந்தகபாலிகாரோகம்	௨௮௧
தந்தகராளரோகம்	௨௮௧
தந்தசருக்கராரோகம்	௨௮௧
தந்தசலனரோகம்	௨௮௧
தந்தசியாவரோகம்	௨௮௧
தந்தசுஷீரரோகம்	௨௮௨
தந்ததாளனரோகம்	௨௮௰
தந்தநகவிஷநிதானம்	௩௬௨
தந்தபிரஹூனரோகம்	௨௮௧
தந்தபுப்புடரோகம்	௨௮௨
தந்தபேதரோகம்	௨௮௧
தந்தமகாசுஷீரரோகம்	௨௮௩
தந்தமூலரோகபேதம்	௨௮௨
தந்தரூடிரோகம்	௨௮௪
தந்தரோகபேதம்	௨௮௰
தந்தவிதர்ப்பரோகம்	௨௮௩
தந்தவித்திரதிரோகம்	௨௮௨
தந்திப்பிரமேகம்	௩௧௯
தந்துப்பிரமேகம்	௩௨௰
தந்தோற்பவரோகம்	௨௧௩
தமகசுவாசரோகம்	௫௭
தருணப்பிரசவலக்ஷணம்	௨௱௭
தருப்பகசிலேஷ்மம்	௯
தருவீகரசர்ப்பம்	௩௩௨
தலைநடுக்குவாதம்	௱௭௬
தலைமாந்தம்	௨௧௮
தவளை	௩௫௧
தவளைச்சொறி	௩௱௯
தழுதாழை	௩௬௪
தனுர்வாதம்	௱௬௬
தனுஸ்தம்பவாதம்	௱௬௫
தா	
தாகபித்தம்	௱௮௭
தாகபூர்வகசந்நிபாதம்	௨௯
தாகரோகபடலம்	௯௯
தாகரோகபூர்வரூபம்	௬௯
தாகரோகபேதம்	௬௯
தாகாதிசந்நிபாதசுரோற்பத்தி	௨௯

ரோகங்களின்பெயர்கள்.	பக்கம்.
தாடைப்பல்லின்லக்ஷணம்	௩௪௧
தாதுவிஷம் - -	௩௨௮
தாதுவின்பேதம் - -	௰௧
தாந்திரிகசந்நிபாதசுரம் -	௨௪
தாந்திரிகசந்நிபாதம் -	௨௭
தாந்திரிகசுரம் - -	௪௫
தாபச்சுரம் - -	௪௭
தாருணரோகம் - -	௨௯௩
தாலுகண்டகரோகம் -	௨௧௨
தாலுபாகரோகம் -	௨௧௨
தாவரவிஷஅசாத்தியம் -	௩௩௰
தாவரவிஷத்தின்சப்தவேகம்	௩௨௯
தாவரவிஷபேதம் -	௩௨௭
தாளார்ப்புதரோகம் -	௨௮௫
தாளுகச்சபரோகம் -	௨௮௯
தாளுகளசுண்டிகாரோகம்	௨௮௫
தாளுசம்ஹதிரோகம் -	௨௮௫
தாளுசோஷரோகம் -	௨௮௬
தாளுபாகரோகம் -	௨௮௯
தாளுபிடகரோகம் -	௨௮௫
தாளுபுப்புடரோகம் -	௨௮௬
தாளுரோகபேதம் -	௨௮௫
தி	
திக்தபித்தம் - -	௱௮௨
திமிரரோகாதிபேதம் -	௨௫௨
திமிர்ப்பித்தம் - -	௱௮௭
திமிர்வாதம் - -	௩௧௩
திரிகாலசுரம் - -	௫௰
திரிதோஷஅபஸ்மாரரோகம்	௨௪௧
திரிதோஷஉபதம்சரோகம்	௩௧௪
திரிதோஷகர்ணசூலை -	௨௭௨
திரிதோஷகாசரோகம் -	௨௫௫
திரிதோஷகிரகணி -	௮௫
திரிதோஷகிரிச்சரரோகம் -	௯௧
திரிதோஷகிலிஷ்டரோகம்	௨௪௬
திரிதோஷகுரற்கம்மல் ..	௬௪
திரிதோஷகுன்மரோகம் -	௱௰௫
திரிதோஷசிரஸ்தாபரோகம்	௨௯௧
திரிதோஷசூலைரோகம் -	௱௨௧
திரிதோஷசோபை -	௱௩௮

ரோகங்களின்பெயர்கள்.	பக்கம்.
திரிதோஷகந்தமூலரோகம்	௨௮௩
திரிதோஷதாகரோகம் -	௭௰
திரிதோஷதிமிரரோகம் -	௨௫௩
திரிதோஷதுஷ்டவிரணம்	௨௯௬
திரிதோஷத்தலைவலி -	௨௯௧
திரிதோஷநாடிவிரணம் -	௩௱௮
திரிதோஷபகந்தரம் -	௩௱௨
திரிதோஷபாண்டுரோகம்	௱௩௨
திரிதோஷபிலீகரோகம் -	௱௩௧
திரிதோஷபீநசரோகம் -	௨௭௬
திரிதோஷமசூரிகாரோகம்	௱௪௩
திரிதோஷமதாத்தியரோகம்	௭௧
திரிதோஷமாந்தம் -	௨௧௮
திரிதோஷமார்புரோகம்	௬௮
திரிதோஷமுகபாகரோகம்	௨௮௯
திரிதோஷமூர்ச்சாரோகம்	௭௩
திரிதோஷமூலரோகம் -	௭௭
திரிதோஷலிங்கநாசரோகம்	௨௫௬
திரிதோஷவாந்திரோகம் -	௬௬
திரிதோஷவிசர்ப்பிரோகம்	௱௪௧
திரிதோஷவித்திரதிரோகம்	௱௭
திரிதோஷக்ஷயரோகம் ..	௬௨
திரிதோஷாதிக்கவாதசோணி	௱௯௬
திரிதோஷாதிசாரம் -	௮௰
திரிதோஷோதரரோகம் -	௱௨௬
திரிதோஷோன்மாதம் -	௨௩௯
திரிமண்டலச்சிலந்தி -	௩௫௪
திரியக்கததோஷம் -	௬௧
திரியாகிகசுரம் - -	௩௪
திருஷ்டான்னவாந்திரோகம்	௬௬
திர்க்குபிராந்திவாதம் -	௱௭௨
திர்க்குஸ்தம்பவாதம் -	௱௭௩
திலகரோகம் -	௩௧௨
திலகாலகரோகம் -	௩௧௭
திவ்வியசர்ப்பபேதம் -	௩௩௧
தீ	
தீக்கடிஸ்தானம் .. -	௩௪௨
தீபனச்சிலேஷ்மம் -	௱௯௩
தீக்ஷணசுரம் - -	௩௬
தீக்ஷணாக்கினி -	௰௫

ரோகங்களின்பெயர்கள்.	பக்கம்.
து	
துக்கஅதிசாரம்	௮௧
துக்கஅரோசகம்	௬௫
துக்கசிலேஷ்மம்	௱௯௰
துக்கசுரம்	௩௩
துக்கவர்த்தனரோகம்	௨௭௪
துடிப்பித்தம்	௱௮௬
துண்டகேரிகாரோகம்	௨௮௭
துந்தரோகம்	௨௧௩
துந்திரோகம்	௱௨௪
தும்பிசகரோகம்	௭௧
தும்பிசகவிக்ஷயரோகம்	௭௧
துர்க்கந்தசிலேஷ்மம்	௱௯௪
துர்க்கந்தச்சிலந்திவிஷம்	௩௫௪
துர்க்கந்தபித்தம்	௱௮௩
துவியாகிகசுரம்	௩௪
துஷ்டபீநசரோகம்	௨௭௬
துஷ்டவிரணபேதம்	௨௯௫
துளிநெரிசல்	௨௬௬
துளிரோகம்	௱௨௰
துளிவாதம்	௱௫௯
தூ	
தூங்குபுள்தோஷம்	௨௨௯
தூமாஜீரணரோகம்	௯௰
தூம்பிரரோகம்	௨௫௭
தூரச்சூலைரோகம்	௱௨௪
தூரஸ்திரிபரிசதோஷம்	௨௨௧
தூரஸ்திரிபார்வைத்தோஷம்	௨௩௰
தூஷிவிஷநிதானம்	௩௬௩
தெ	
தெய்வப்பிரகோபசுரம்	௪௫
தே	
தேகபலபேதம்	௰௫
தேமல்	௩௧௩
தேயுவிஷவேகம்	௩௪௬
தேரைக்கணரோகம்	௨௧௬
தேரைத்தோஷம்	௨௨௨
தேவபூதம்	௨௩௩
தேள்உற்பத்தி	௩௫௮

ரோகங்களின்பெயர்கள்.	பக்கம்.
தை	
தைத்தியமேகரோகம்	௱௬
தொ	
தொக்குபாகரோகம்	௩௨௭
தொக்சாரகிரியாசவிஷம்	௩௨௮
தொநோபகாதவாதம்	௱௭௨
தொந்தகாசரோகம்	௨௫௪
தொந்தகாமாலைரோகம்	௱௩௫
தொந்தசிலேஷ்மம்	௱௯௩
தொந்ததிமிரரோகம்	௨௫௩
தொந்தப்பிரமேகரோகம்	௩௧௮
தொந்தமூலரோகம்	௭௭
தொந்தரோகிலக்ஷணமதாந்த	௰௬
தொந்தலிங்கநாசரோகம்	௨௫௫
தொந்தவாதிக்கவாதசோணி	௱௯௬
தொந்தவிஷபாகம்	௨௱௧
தொனிகத்ததவாதம்	௱௭௭
தொனிச்சிலேஷ்மம்	௱௯௰
தொனிவிச்சின்னவாதம்	௱௭௨
தோ	
தோஷாதிபேதபடலம்	௧
ந	
நகச்சுற்று	௩௧௧
நகுபூதம்	௨௩௭
நகுலாந்தரோகம்	௨௫௬
நடுக்குப்பித்தம்	௱௮௬
நண்டுவாய்க்காலி	௩௫௯
நத்தாந்தரோகம்	௨௫௬
நந்தனுகிரகம்	௨௨௬
நரம்புக்கிரந்தி	௩௱௪
நரித்தலைவாதம்	௱௫௭
நக்ஷத்திரதோஷம்	௩௪௨
நா	
நாகோதரகருப்பம்	௨௱௬
நாசாரசரோகம்	௨௭௮
நாசிகாசிராவரோகம்	௨௭௭
நாசிகாசோஷரோகம்	௨௭௭
நாசிகாதீபிகைரோகம்	௨௭௭
நாசிகாநாகரோகம்	௨௭௭
நாசிகாபுடகரோகம்	௨௭௮

ரோகங்களின்பெயர்கள்.	பக்கம்.
நாசிகாரோகபேதம்	௨௭௫
நாசிகாரோகலக்ஷணம்	௨௭௫
நாசிகார்ப்புதரோகம்	௨௭௮
நாடிவிரணபேதம்	௩௱௭
நாட்டுமரவட்டை	௩௫௮
நாபிசாருவாதம்	௱௬௩
நாபிஸ்தானவித்திரதி	௱௮
நாய்முள்தோஷம்	௨௨௧
நாய்முள்ரோகம்	௨௧௩
நாவொட்டிக்காய்ச்சல்	௩௬௪
நாளாவர்த்தவாதம்	௱௬௨
நி	
நிகடபூதம்	௨௩௭
நிஜவிரணம்	௨௯௫
நிசிசுரம்	௪௭
நிசூளிகாவிரணம்	௨௧௨
நிதம்பச்சூலைரோகம்	௱௨௩
நித்தியசிலேஷ்மம்	௱௯௪
நிபாதிதவிரணம்	௩௱
நிராமஅதிசாரம்	௮௨
நிராமச்சுரம்	௩௮
நிருத்தமணிரோகம்	௩௧௬
நிர்விஷசர்ப்பபேதம்	௩௩௫
நிர்விஷலக்ஷணம்	௩௩௫
நிலப்பூசினிக்கிழங்குக்கட்டி	௱௩
நிஸ்தேசபூதம்	௨௩௭
நீ	
நீச்சுப்பிரமேகம்	௩௨௰
நீர்அண்டம்	௱௰௨
நீர்ஆமை	௱௨௰
நீர்எழுச்சி	௨௬௫
நீர்ஏற்றம்	௨௭௫
நீர்க்கழலை	௨௬௮
நீர்க்குமிளம்	௨௬௬
நீர்க்குவை	௨௬௯
நீர்க்கோவை	௨௭௫
நீர்த்திமிரம்	௨௬௪
நீர்நெரிசல்	௨௬௩
நீர்ப்படலம்	௨௬௨
நீர்ப்படாத்தி	௨௬௯
நீர்ப்பதுமம்	௨௬௮
நீர்ப்பில்லம்	௨௬௭
நீர்ப்புள்தோஷம்	௨௨௯
நீர்ப்புற்று	௨௬௬
நீர்மாந்தம்	௨௧௮
நீர்வரி	௨௬௩
நீலகாசம்	௨௬௧
நீலமேகரோகலக்ஷணம்	௯௯
நீலவரி	௨௬௭
நீலிகாரோகலக்ஷணம்	௩௧௨
நு	
நுணைக்காய்க்கிரந்தி	௱௪௧
நே	
நேத்திரஉபத்திரவவாதம்	௱௭௨
நேத்திரசந்திரோகபேதம்	௨௪௭
நேத்திரரோகபேதம்	௨௪௩
நேத்திரரோகமதாந்தரம்	௨௬௧
நேத்திரஸ்தம்பவாதம்	௱௭௩
ப	
பகந்தரவிரணபேதம்	௩௱௧
பகந்தரவிரணம	௩௱
பகுளவர்த்தமரோகம்	௨௪௭
பக்கச்சூலைரோகம்	௱௨௩
பக்கவாதம்	௱௬௪
பக்குவாசயகதகரான்னம்	௩௨௭
பங்கவிசர்ப்பி	௱௪௧
பங்குவாதம்	௱௮௰
பசுவிழிப்படலம்	௨௬௨
பச்சைப்பாம்பு	௩௪௬
பஞ்சவாயுக்களின்விகுணம்	௱௯௬
பஞ்சவாயுமதாந்தரம்	௪
படுநாயிறு	௨௯௨
பதினாலுவேகங்கள்	௨
பதுமகண்டகரோகம்	௩௭௯
பதுமச்சிலந்தி	௩௫௩
பதுமன்	௩௩௧
பத்திரவிஷம்	௩௨௮
பந்தோதரரோகம்	௱௨௭
பயச்சுரம்	௩௩
பயாதிசாரம்	௮௧

ரோகங்களின்பெயர்கள்.	பக்கம்.
பராக்சரணயோனிரோகம்	ஙஉங
பரிகல்லிரோகம்	ஙாய
பரிசஹானிரோகம்	ஙகக
பரிசிராவிபகந்தரவிரணம்	ஙாஉ
பரிப்புலுதயோனிரோகம்	ஙஉஉ
பரிஸ்போடவாதம்	ாஎஎ
பரிக்ஷேபிபகந்தரவிரணம்	ஙாஉ
பருவணிரோகம்	உசஅ
பலவிஷம்	ஙஉஅ
பலாஜகிரதிகரோகம்	உருய
பலிஇச்சைக்கிரகம்	உஉகூ
பலிதரோகலக்ஷணம்	உகூச
பலினிளலி	ஙகூய
பல்லின்விஷநிதானம்	ஙசய
பவுத்திரரோகம்	ஙாக
பக்ஷகாதவாதம்	ாகூச
பக்ஷவாதம்	ாகூச
பக்ஷாந்திரசுரம்	சகூ
பக்ஷிதோஷசமுதாயகுணம்	உஉஅ
பக்ஷிதோஷபேதம்	உஉஅ
பக்ஷிதோஷமதாந்தரம்	உஉகூ
பக்ஷ்மசாதரோகம்	உசரு
பனசிகாரோகம்	ஙாகூ
பனையேறி	ஙசரு
பா	
பாகாத்தியசுக்கிலரோகம்	உருஉ
பாகியமலக்கிருமிரோகம்	ாருங
பாகியாயாமவாதம்	ாகூகூ
பாண்டுச்சிலந்தி	ஙருங
பாண்டுரோகபூர்வரூபம்	ாஙக
பாண்டுரோகபேதம்	ாஙஉ
பாதகண்டகவாதம்	ாஙஎ
பாததாகவாதம்	ாஅய
பாதபேதரோகம்	ஙகங
பாதலகவாதம்	ாருரு
பாதவன்மீகரோகம்	ஙாகூ
பாதஹரிஷவாதம்	ாருகூ
பாதாக்ஷேபகவாதம்	ாருரு
பாதிரியரோகம்	உஎஉ
பாதிரியவாதம்	ாஎங
பாதோபகாதவாதம்	ாஙஎ
பாமாகுஷ்டரோகலக்ஷணம்	ாருய
பாயுருகுன்மரோகம்	ாயஎ
பாரிகர்க்கிகரோகலக்ஷணம்	உகச
பாரிசவாதம்	ாகூச
பார்வைரோகசாத்தியாசாத்	உருஎ
பாலகிரகஉற்பத்திநிதானம்	உஉஉ
பாலகிரகதோஷமதாந்தரம்	உஉகூ
பாலசோஷரோகம்	உகஉ
பாலரோகஞாபகம்	உகச
பாலரோகநிதானம்	உாய
பாலரோகபேதம்	உாய
பாலவிசர்ப்பிரோகலக்ஷணம்	உகச
பால்கரப்பான்	உககூ
பால்யசர்ப்பஆண்விஷம்	ஙஙஅ
பாஷாணகர்த்தபிரோகம்	ஙாகூ
பி	
பிங்கச்சிலந்தி	ஙருச
பிசவர்த்தமரோகம்	உசரு
பிடகசுரம்	சகூ
பிடகபித்தம்	ாஅங
பிடகரோகம்	ஙகரு
பிடாலிகாகிரகம்	உஉஎ
பிதாரிகாரோகம்	ஙாய
பிதுர்கிரகதோஷம்	உஉச
பித்தஅபஸ்மாரரோகம்	உசக
பித்தஅபானஆவிருதவாதம்	உா
பித்தஅரோசகம்	கூச
பித்தஆவிருதவாதலக்ஷணம்	ாகூஅ
பித்தஉதானஆவிருதவாதம்	ாகூகூ
பித்தஉபதம்சரோகம்	ஙகச
பித்தகர்ணசூலை	உஎக
பித்தகளகண்டரோகம்	உஅஅ
பித்தகாசநேத்திரரோகம்	உருச
பித்தகாசமதாந்தரம்	ஙகூக
பித்தகாசரோகம்	ருரு
பித்தகாமாலைரோகம்	ாஙரு
பித்தகாலவிஷநிதானம்	ஙஉகூ
பித்தகிரகணி	அச
பித்தகிரந்தி	ஙாங

ரோகங்களின் பெயர்கள்.	பக்கம்.
பித்தகிரிச்சரம் -	௯௧
பித்தகுடல்விருத்திரோகம்	௱௰
பித்தகுண்டாலக்கட்டி -	௨௧௧
பித்தகுரற்கம்மல்ரோகம் -	௬௩
பித்தகுன்மரோகம் -	௱௰௪
பித்தகோபகாலம் -	௯
பித்தசமானஆவிருத்வாதம்	௨௱
பித்தசருமகீலம் -	௭௯
பித்தசிரஸ்தாபரோகம் -	௨௯௧
பித்தசிலந்திப்பூச்சிகளின் பொதுக்குணம் -	௩௫௨
பித்தசிலேஷ்மகுன்மம் -	௱௰௫
பித்தசிலேஷ்மப்பிரமேகம்	௩௧௮
பித்தசிலேஷ்மம் -	௱௮௮
பித்தசிரணலக்ஷணம் -	௰௧
பித்தசுபாவகுணம் -	௨
பித்தசுரம் - -	௨௰
பித்தசூலைரோகம் -	௱௨௧
பித்தசெவ்வாப்புக்கட்டி -	௨௧௧
பித்தசோபைரோகம் -	௱௩௭
பித்தஜிக்வாகண்டகரோகம்	௨௮௪
பித்ததந்தமூலரோகம் -	௨௮௩
பித்ததாகரோகம் -	௬௯
பித்ததிமிரரோகம் -	௨௫௩
பித்ததுஷ்டவிரணம் -	௨௯௯
பித்ததேகிலக்ஷணம் -	௭
பித்தத்தசைஅண்டம் -	௱௰௩
பித்தத்தலைவலி -	௨௯௧
பித்தத்தாற்பிறந்தசாரமேக முதலியஆறுவகைமேகம்	௯௮
பித்தத்தேள் -	௩௫௯
பித்தத்தொழில் -	௩
பித்தநாடிவிரணம் -	௩௱௮
பித்தபகந்தரவிரணம்	௩௱௧
பித்தபாண்டுரோகம் -	௱௩௨
பித்தபாதவன்மீகம்	௩௱௬
பித்தபிராணஆவிருத்வாதம்	௱௯௯
பித்தபீலிகரோகம் -	௱௩௧
பித்தபீநசரோகம் -	௨௭௬
பித்தபூதம் -	௨௩௮
பித்தபேதம் -	௪
பித்தப்பிரமியமேகம் -	௱௫
பித்தப்பிரமேகரோகம் -	௩௧௮
பித்தமசூரிகை - -	௱௪௨
பித்தமதரோகம் -	௭௨
பித்தமதாத்தியயரோகம்	௭௧
பித்தமாந்தம் -	௨௧௮
பித்தமார்புரோகம் -	௬௭
பித்தமுகபாகரோகம் -	௨௮௯
பித்தமூர்ச்சாரோகம் -	௭௩
பித்தமூலரோகம் -	௭௬
பித்தமேகரோகஉபத்திரவம்	௱௧
பித்தயோனிரோகம்	௩௨௧
பித்த ரத்தபித்தரோகம் -	௫௨
பித்தரூபலக்ஷணம் -	௧
பித்தரோகபூர்வரூபம் -	௱௮௧
பித்தரோகபேதம் -	௱௮௧
பித்தரோகிலக்ஷணமதாந்தரம்	௰௬
பித்தலிங்கநாசரோகம்	௨௫௫
பித்தவாதஊருஸ்தம்பம்	௱௫௯
பித்தவாங்கிரோகம் -	௬௬
பித்தவிசர்ப்பிரோகலக்ஷணம்	௱௪௰
பித்தவிதக்தரோகம் -	௨௫௭
பித்தவித்திரதிக்கட்டி -	௱௭
பித்தவியானஆவிருதவாதம்	௱௯௯
பித்தவிருத்திலக்ஷணம் -	௰௧
பித்தவிஷபாகம் -	௨௱௧
பித்தவிஷூசிரோகம்	௮௮
பித்தவெண்குஷ்டம்	௱௫௨
பித்தஸ்தானம் -	௧
பித்தக்ஷயரோகம் -	௬௨
பித்தாசிர்க்கரரோகம -	௫௩
பித்தாதிக்கவாதசோணிதம்	௱௯௫
பித்தாதிசாரம் -	௮௱
பித்தாதிமந்தரோகம்	௨௫௯
பித்தாபிஷந்தரோகம் -	௨௫௮
பித்தாஸ்மரிரோகம் -	௯௨
பித்தாற்புதகிரந்தி -	௩௱௫
பித்தோதரரோகம் -	௱௨௫
பித்தோத்கிலிஷ்டரோகம்	௨௪௬

ரோகங்களின்பெயர்கள்.		பக்கம்.
பித்தோஷ்டரோகம்	-	௨௭௯
பித்தோன்மாதரோகம்	-	௨௩௯
பிரசவசந்நி	- -	௨௬
பிரசுப்திரோகம்	-	௩௧௩
பிரதிதூனிரோகம்	-	௱௨௰
பிரதிதூனிவாதம்	-	௱௫௯
பிரதிநாகரோகம்	..	௨௭௨
பிரத்தியஷ்டிலாரோகம்	-	௱ · ௰
பிரத்தியஷ்டிலாவாதம்	-	௱௬௪
பிரத்தியாத்மானவாதம்	-	௱௬௰
பிரத்தியேகச்சிலந்தி	-	௩.௫௫
பிரமகண்டவலி	-	௨௪௨
பிரமசர்ப்பம்	- -	௩௩௪
பிரமராக்ஷசபூதம்	-	௨௩௫
பிரமியமேகம்	- -	௱௫
பிரமேகரோகபேதம்	-	௩௧௮
பிரமேகோற்பத்திலக்ஷணம்		௩௧௭
பிரமோன்மந்தவாதம்	-	௱௭௧
பிரலாபசந்நிபாதசுரம்	-	௨௪
பிரலாபசந்நிபாதம்	-	௨௮
பிரலாபசுரம்	- -	௪௫
பிரவிளம்பிவிரணம்	-	௩௱
பிரஸ்தாரியார்மரோகம்		௨௫௰
பிரஷ்டருக்கு	-	௨௧௩
பிராகிருதசுரலக்ஷணம்	-	௩௭
பிராசகபித்தம்	-	௫
பிராணஉதானஆவிருதவாதம்		௨௱
பிராணவாயு	- -	௩
பிராணவாயுவின்விகுணம்		௱௯௬
பிலீகரோகபேதம்	-	௱௩௧
பிலீகரோகலக்ஷணம்	-	௱௩௰
பிலீகஸ்தானவித்திரதி	-	௱௮
பிலீகோதரரோகம்	-	௱௨௬
பிஷ்டமேகரோகம்	-	௱
பிஷ்டரோகம்	-	௨௫௰
பின்னவிரணம	-	௩௱
பின்னிசிவுவாதம்	-	௱௬௫
பின்னீர்க்கோவை	-	௨௭௫
பீ		
பீதச்சிலந்தி	-	௩௫௩
பீதச்சிலந்திவிஷம்	-	௩௫௨
பீதஜிம்மகதோஷம்	-	௩௧
பீர்மாந்தம்	- -	௨௧௭
பு		
புகை	- -	௨௬௫
புக்னநேத்திரசந்நிபாதசுரம்		௨௪
புக்னநேத்திரசந்நிபாதம்		௨௮
புச்சாவர்த்தவாதம்	-	௱௫௬
புடையன்	- -	௩௪௫
புண்டரவலி	-	௩௬௰
புண்டரீககுஷ்டரோகலக்ஷ		௱௩௰
புத்திராதிக்கக்கட்டி	-	௱௩
புராணசுரம்	- -	௪௯
புரிசட்சவபிநேசம்	-	௨௭௭
புருவாடோபகவாதம்	-	௱௭௨
புரைக்குழை		௨௮௮
புல்நாகம்	- -	௩௪௪
புழுவெட்டு	- -	௨௬௮
புஷ்கரிகாரோகம்	-	௩௧௬
புஷ்பவிஷம்	..	௩௨௮
புளிச்சக்கண்	-	௨௬௭
பூ		
பூதகணபேதம்	-	௨௩௰
பூதகணமதாந்தரம்	-	௨௩௬
பூதகிரகணகாலநிதானம்	-	௨௩௧
பூதசிலேஷ்மம்	-	௱௯௪
பூதப்பிரவேசபூர்வரூபம்	-	௨௩௧
பூதவேஷாந்தரலக்ஷணம்		௨௩௧
பூதஞகிரகதோஷம்	-	௨௨௪
பூதஞகிரகம்	-	௨௨௭
பூதாதிகாரியநிதானம்	-	௨௩௧
பூதாவேசசுரம்	-	௩௨
பூநிநாசிகாரோகம்	-	௨௭௭
பூத்தியாசியரோகம்	-	௨௯௰
பூநாகம்	- -	௩௪௪
பூயசிராவரோகம்	-	௨௪௮
பூயாசிரநாசிகாரோகம்	-	௨௭௮
பூயாலஜரோகம்	-	௨௪௮
பூரணமதுமேகம்	-	௯௮
பூரம்		௩௯௩

ரோகங்களின் பெயர்கள்.	பக்கம்.
பெ	
பெண்சாப்பம்	[illegible]
பெண்பகுதிதோஷம்	[illegible]
பெண்மலட்டு ரோகவகைகள்	[illegible]
பெருஞ்சாலிக்கிரகம்	[illegible]
பெருஞ்சொறி	[illegible]
பெருவயிறு	[illegible]
பெருவிரியன்	[illegible]
பே	
பேய்ச்சொறிக்கப்பட்ட	[illegible]
பேய்மைதுனம்	[illegible]
பேனிப்பேவதகம்	[illegible]
பேன்-பிளவுபேன்	[illegible]
பை	
பைசாசபூதம்	[illegible]
போ	
போகனுக்கனக்கிரகம்	[illegible]
போடகரம்	[illegible]
போதுவேவதகம்	[illegible]
போதமின்றித்தனரோகம்	[illegible]
பௌ	
பௌமசம்பவாதிபேதம்	[illegible]
ம	
மகரவலரோகம்	[illegible]
மகாபிலேவதகம்	[illegible]
மகாகபாலரோகம்	[illegible]
மகாபதுமவிசர்ப்பி	[illegible]
மகாபதுமன்	[illegible]
மகாமேகவிரோகம்	[illegible]
மகாவாதரோகபடலம்	[illegible]
மகாவாதரோகபேதம்	[illegible]
மகாவிக்கல்	[illegible]
மகாவிஷவிடபுழுதி	[illegible]
மகாவிஷசர்ப்பம்	[illegible]
மகோதரரோகம்	[illegible]
மசரோகம்	[illegible]
மசூரிகைரோகபேதம்	[illegible]
மசூரிகைரோகம்	[illegible]
மசூரிகைரோகலக்ஷணம்	[illegible]
[illegible]ரோகம்	[illegible]
மச்சகரு[illegible]தம்	[illegible]
[illegible]	[illegible]
மச்சவிஷரோகம்	[illegible]
மஞ்சள்காமாலை	[illegible]
மஞ்சள்காமாலை	[illegible]
மஞ்சள்நீர்க்கோவை	[illegible]
மடக்குக்கட்டு	[illegible]
மணிமூலபூதம்	[illegible]
மண்குத்துரோகம்	[illegible]
மண்டையடைப்புரோகம்	[illegible]
மண்டைவிப்புருதி	[illegible]
மண்டைக்கரப்பான்	[illegible]
மண்ணுண்ணிப்பாண்டு	[illegible]
மதமோகரோகம்	[illegible]
மதரோகபேதம்	[illegible]
மதாத்தியரோகப்பிரமேகம்	[illegible]
மதாத்தியரோகபேதம்	[illegible]
மதாத்திய ஆசுவதம்	[illegible]
மதாத்தியாவிபேதம்	[illegible]
மதாத்தியமனோதாபம்	[illegible]
மதாத்தியரோகம்	[illegible]
மதாத்தியசூலசுவதம்	[illegible]
மதாத்தியமனோவிகாரரோகம்	[illegible]
மதாத்தியமூடம்	[illegible]
மதாத்தியமூர்ச்சைரோகம்	[illegible]
மதாத்தியமூடரோகம்	[illegible]
மதாத்தியசக்தியோகம்	[illegible]
மதாத்தியசப்பைகுளிர்வை	[illegible]
மதாத்தியவேதனைரோகம்	[illegible]
மதாத்தியகுலைரோகம்	[illegible]
மதாத்தியவாதசித்திபேதம்	[illegible]
மதாத்தியபாலவிரோகபேதம்	[illegible]
மதாத்தியமாதமைப்பேசம்	[illegible]
மதாத்தியபாலவிரகதோஷம்	[illegible]
மதாத்தியமூர்ச்சைரோகம்	[illegible]
மதாத்தியமேகரோகதுர்வாசனை	[illegible]
மதாத்தியவலியின்பேதம்	[illegible]
மதாத்தியவாதபித்தமிலே ஷ்மதோஷம்	[illegible]

ரோகங்களின்பெயர்கள்.	பக்கம்.
மதாந்தரவாதரோகம்	௱௭௭
மதாந்தரவாதரோகிலக்ஷணம்	௰௫
மதாந்தரவிஷப்பல்லின் லக்ஷணம்	௩௪௧
மதுப்பிரமேகம்	௩௨௰
மதுமேகரோகம்	௯௮
மதுராபித்தம்	௱௮௩
மத்தியபானமதரோகம்	௭௨
மத்தியானசுரம்	௪௬
மந்தச்சிலேஷ்மம்	௱௯௩
மந்தாக்கினி	௰௫
மந்தாரகாசம்	௨௬௧
மந்தாரதிமிரம்	௨௬௪
மயக்குச்சர்ப்பம்	௩௪௫
மருந்திடுபித்தம்	௱௮௭
மலஆவிருதவாதம்	௱௯௯
மலக்கழிச்சல்	௮௪
மலக்கிருமிரோகம்	௱௫௪
மலசுபாவச்செய்கை	௰௨
மலட்டுச்சர்ப்பம்	௩௩௮
மலட்டுப்பக்ஷிதோஷம்	௨௨௯
மலட்டுரோகபேதம்	௨௱௩
மலவாதரோகம்	௨௧௯
மலினப்பிரமேகம்	௩௨௰
மலைப்பிடிகை	௩௫௧
மல்கலாக்கியசூலை	௨௱௮
மறு	௩௧௨
மறைவிருத்திவாதம்	௱௬௧
மக்ஷிகா	௩௫௧
மா	
மாதச்சுரம்	௪௯
மாதுருதோஷம்	௨௧௩
மாந்தரோகக்குறி	௨௧௭
மாந்தரோகபேதம்	௨௧௬
மாமிசஆவிருதவாதம்	௱௯௮
மாமிசக்கிரந்தி	௩௱௪
மாமிசக்குமிளம்	௨௬௬
மாமிசசிராவிமேகம்	௱௫
மாமிசதாதுகதசுரம்	௪௰
மாமிசபடலம்	௨௬௨
மாமிசபாகரோகம்	௩௧௭
மாமிசாற்புதரோகம்	௩௧௭
மாமிசோஷ்டரோகம்	௨௭௯
மாமிசோற்புதகிரந்தி	௩௱௫
மார்புரோகபேதம்	௬௭
மாலாகுணச்சிலந்தி	௩௫௫
மாலைக்கண்	௨௬௪
மாலைச்சுரம்	௪௬
மானவலிகசுரம்	௩௬
மி	
மித்தைவிஷநிதானம்	௩௩௯
மிருதிதவிரணம்	௩௧௬
மிருத்திகாபக்ஷணரோகம்	௨௧௪
மிருத்திகாபுக்தபாண்டு	௱௩௨
மீ	
மீன்விஷம்	௩௫௮
மு	
முகதூஷிகரோகம்	௨௧௩
முகதூஷிகாரோகம்	௩௱௯
முகப்பருவு	௩௱௯
முகமண்டலிகாகிரகதோஷம்	௨௨௪
முகமண்டலிகாகிரகம்	௨௭௭
முகரோகசாத்தியாசாத்தியம்	௨௯௰
முகரோகநிதானம்	௨௭௮
முகரோகபேதம்	௨௭௮
முக்குகணரோகம்	௨௧௫
முசல்சிலேஷ்மம்	௱௯௪
முச்சியமானசுரம்	௩௯
முடமயிர்	௨௬௭
முஷ்கஸ்தானவித்திரதி	௱௮
முட்டுத்தோஷம்	௨௨௧
மும்மாங்காய்	௨௱௬
முயல்வலி	௨௪௩
முறிச்சூலைரோகம்	௱௨௩
முறுக்குச்சர்ப்பம்	௩௪௫
முன்னிசுவுவாதம்	௱௬௫
முன்னீர்க்கோவை	௨௭௫
மூ	
மூளைக்கிலேஷ்மம்	௱௯௰
மூஞ்சூறு	௩௬௧

ரோகங்களின் பெயர்கள்.	பக்கம்.
மூடவாதம் - -	௱௬௰
மூடவிஷ்டம்பகருப்பங்கள்	௨௱௮
மூடபித்தம் - -	௱௮௯
மூத்திரஆவிருதவாதம் -	௱௯௯
மூத்திரஉதிரவாதம் -	௱௭௮
மூத்திரகிரந்திரோகம் -	௯௫
மூத்திரகிரிச்சரப்பிரமேகம்	௩௨௱
மூத்திரக்குடல்விருத்தி -	௱௰
மூத்திரசங்கவாதவஸ்தி -	௯௪
மூத்திரசடரரோகம் - -	௯௫
மூத்திரசரவாதம் - -	௱௬௨
மூத்திரசாதரோகம் -	௯௬
மூத்திரசுபாவச்செய்கை -	௰௨
மூத்திரச்சிலந்தி -	௩௫௩
மூத்திரசுக்கிலரோகம் -	௯௫
மூத்திரதோஷபேதம் -	௯௪
மூத்திரபிந்துவாதவஸ்தி -	௯௪
மூத்திரக்ஷயரோகம் -	௯௬
மூத்திராகாதரோகபேதம்	௯௧
மூத்திராதீதரோகம் -	௯௫
மூத்திரோச்சங்கரோகம் -	௯௫
மூர்க்கன் - -	௩௪௫
மூர்ச்சாரோகம் -	௭௩
மூர்ச்சைச்சிலேஷ்மம் -	௱௮௯
மூர்ச்சைச்சுரம் -	௪௫
மூர்ச்சைபித்தம் - -	௱௮௩
மூர்த்தபிடகரோகம் -	௨௯௩
மூலபகந்தரவிரணம் -	௩௱௨
மூலபித்தம் -	௱௮௬
மூலரோகபூர்வரூபம் -	௭௫
மூலரோகபேதம் -	௭௪
மூலரோகமதாந்தரம் -	௭௭
மூலவாயுகிரகணி -	௮௫
மூலவிஷச்சிலந்தி -	௩௫௨
மூலவிஷம் - -	௩௨௭
மூஷிகபேதம் -	௩௫௯
மே	
மேகக்கட்டிகளின்பேதம் -	௱௨
மேகச்சூலைரோகம் -	௱௨௩
மேகதிமிரம் -	௨௬௪
மேகப்புடை -	௩௧௩
மேகரோகஅசாத்தியம் -	௱௨
மேகரோகங்களின்உபத்திரவம்	௱௧
மேகரோகதசாவஸ்தை -	௱௧
மேகரோகபூர்வரூபம் -	௯௭
மேகரோகபேதம் -	௯௬
மேகரோகமதாந்தரம் -	௱௪
மேஜகச்சிலந்தி -	௩௫௨
மேட்ரக்ஷீயவாதம் -	௱௬௨
மேதோஆவிருதவாதம் -	௱௯௮
மேதோகளகண்டரோகம்	௨௮௮
மேதோகிரந்தி -	௩௱௪
மேதோகுடல்விருத்தி -	௱௰
மேதோகுரற்கம்மல் -	௬௪
மேதோதாதுகதசுரம் -	௪௰
மேதோவாதஊருஸ்தம்பம்	௱௫௯
மேதோஷ்டரோகம் -	௨௮௰
மேதோற்புதகிரந்தி -	௩௱௫
மேஷகிரகதோஷம் -	௨௨௩
மோ	
மோர்க்குந்தம் -	௨௬௩
ய	
யகுர்திஸ்தானவித்திரதி -	௱௮
யகுர்தோதரரோகம் -	௱௨௭
யமளவிக்கல்ரோகம் -	௫௯
யவப்பிரக்கியாரோகம் -	௩௱௮
யக்ஷபூதம் - -	௨௩௪
யா	
யாகசேனபூதம் -	௨௩௬
யானைக்கால் - -	௩௱௬
யு	
யுத்திகிருதபலம் -	௰௫
யோ	
யோனித்தசைஆண்டம் -	௱௰௩
யோனிரோகலக்ஷணம் -	௩௨௧
யௌ	
யௌவனசர்ப்பஆண்விஷம்	௩௩௮
ர	
ரக்தஜிம்மகதோஷம் -	௩௧

ரோகங்களின் பெயர்கள்.	பக்கம்.
ரக்திஷ்டவிசந்நிபாதசுரம் -	௨௫
ரக்திஷ்டவிசந்நிபாதம் -	௨௮
ரசசேஷாஜீரணமதாந்தரம்	௯௰
ரசசேஷாஜீரணம் -	௮௯
ரசதாதுகதசுரம் - -	௩௯
ரசக்ஷயதாகரோகம் - -	௭௰
ரசாலளலி - -	௩௬௧
ரஞ்சகபித்தம் - -	௫
ரத்தஆவிருதவாதலக்ஷணம்	௱௯௮
ரத்தஉபதம்சரோகம் -	௩௱௰௪
ரத்தகர்ணசூலை - -	௨௭௨
ரத்தகாசநேத்திரரோகம்	௨௫௫
ரத்தகாசரோகம் - -	௫௫
ரத்தகிரந்தி - -	௩௱௪
ரத்தகிலிஷ்டம் - -	௨௪௬
ரத்தகுடல்விருத்தி -	௱௰
ரத்தகுந்தம் - -	௨௬௩
ரத்தகுன்மம் - -	௱௰௫
ரத்தக்கழலை - -	௨௬௮
ரத்தக்கழிச்சல் - -	௮௪
ரத்தக்கிருமிரோகலக்ஷணம்	௱௫௪
ரத்தக்குமிளம் - -	௨௬௬
ரத்தக்குவை - -	௨௬௯
ரத்தசிரஸ்தாபரோகம் -	௨௯௧
ரத்தசிராவம் - -	௫௪
ரத்தசிராவரோகம் -	௨௪௮
ரத்தசிலேஷ்மதுஷ்டவிரண	௨௯௭
ரத்தசிலேஷ்மபித்ததுஷ்ட விரணம்	௨௯௭
ரத்தசிலேஷ்மம் -	௱௮௯
ரத்தச்சிலந்தி - -	௩௫௨
ரத்ததாதுகதசுரம் - -	௩௯
ரத்ததிமிரரோகம் - -	௨௫௪
ரத்ததிரிதோஷதுஷ்ட விரணம்	௨௯௭
ரத்ததுஷ்டவிரணம் -	௨௯௬
ரத்தபடலம் - -	௨௬௨
ரத்தபதுமம் - -	௨௬௮
ரத்தபாண்டுச்சிலந்திவிஷம்	௩௫௪
ரத்தபித்ததுஷ்டவிரணம்	௨௯௭
ரத்தபித்தரோகபடலம் -	௫௧
ரத்தபித்தரோகபூர்வரூபம் -	௫௧
ரத்தபித்தரோகபேதம் -	௫௧
ரத்தபித்தரோகம் -	௱௮௧
ரத்தபீநசரோகம் -	௨௭௬
ரத்தப்படாத்தி - -	௨௬௯
ரத்தப்பிரமேகம் -	௩௱௰௯
ரத்தமசூரிகை -	௱௪௩
ரத்தமண்டலி - -	௩௬௩
ரத்தமதரோகம் -	௭௨
ரத்தமுகபாகரோகம் -	௨௮௯
ரத்தமூலம் - -	௭௭
ரத்தமேகரோகம் - -	௯௯
ரத்தயோனிரோகம் -	௩௨௨
ரத்தலிங்கநாசரோகம் -	௨௫௬
ரத்தவரி - - -	௨௬௭
ரத்தவாதகுன்மம் -	௱௰௫
ரத்தவாதசிலேஷ்மதுஷ்ட விரணம்	௨௯௭
ரத்தவாததுஷ்டவிரணம்	௨௯௭
ரத்தவாதபித்தகுன்மம் -	௱௰௬
ரத்தவாதபித்ததுஷ்ட விரணம்	௨௯௭
ரத்தவித்திரதிக்கட்டி -	௱௭
ரத்தவிரியன்விஷம் -	௩௪௪
ரத்தாதிசாரம் - -	௮௧
ரத்தாதிமந்தரோகம் -	௨௫௯
ரத்தாபிஷந்தரோகம் -	௨௫௮
ரத்தாற்புதகிரந்தி -	௩௱௫
ரத்தாற்புதரோகம் -	௩௱௰௭
ரத்தோஷ்டரோகம் -	௨௭௯
ரா	
ராஜமந்தசர்ப்பம் -	௩௩௪
ராஜிகாரோகம் - -	௩௱௰
ராக்ஷசபூதம் - -	௨௩௪
ரு	
ருசியஜிம்மகுஷ்டரோகம்	௱௪௮
ருசுபகந்தரவிரணம் -	௩௱௨
ருத்தகுதரோகம் -	௩௱௰௧
ருத்தாகசந்நிபாதசுரம் -	௨௪

ரோகங்களின்பெயர்கள்.	பக்கம்.
ருத்தாகசந்நிபாதம் -	௨௮
ரே	
ரேவதிகிரகதோஷம் -	௨௨௫
ரேவதிகிரகம் -	௨௨௮
லா	
லாசவர்ன்னச்சிலந்தி -	௩௫௫
லாஞ்சனரோகம் -	௩௱௰௨
லாலாசிலேஷ்மம் - -	௱௯௧
லாலாமேகம் - -	௱
லீ	
லீநாக்கியகருப்பம் -	௨௱௬
லோ	
லோகிதசுட்கயோனிரோகம்	௩௨௨
வ	
வசாமேகரோகம் -	௬௭
வச்சிரரூபகவாதம் -	௱௭௬
வண்டு - -	௩௫௧
வண்டுச்சிலந்திவிஷம் -	௩௫௪
வமனசிலேஷ்மம் -	௱௯௧
வம்க்ஷணஸ்தானவித்திரதி	௱௮
வரப்புள்தோஷம் -	௨௨௯
வரிஎழுச்சிரோகம் -	௨௬௫
வரிக்கரப்பான் -	௨௱௰௯
வரிப்படலம் -	௨௬௨
வரிப்படாத்தி - -	௨௬௬
வருணபூதம் -	௨௩௬
வருணவிஷவேகநிதானம்	௩௪௭
வருஷசுரம் - -	௪௯
வர்த்தமரோகம் -	௨௪௩
வர்த்துமோபரோதரோகம்	௨௪௭
வலிகுன்மரோகம் -	௱௰௮
வலிப்பித்தம் -	௱௮௭
வலைக்கண்கட்டி -	௱௨
வல்லைக்கட்டி - -	௱௨௰
வழலைச்சர்ப்பவிஷம் -	௩௪௪
வழிச்சர்ப்பவிஷம் -	௩௩௯
வஸ்திகுய்யரோகஞாபகம்	௨௱௰௫
வஸ்திஸ்தானவித்திரதி -	௱௮
வஷ்டிரோகலக்ஷணம் -	௨௱௯

ரோகங்களின்பெயர்கள்.	பக்கம்.
வளையமூலசாத்தியாசாத்தியம்	௭௮
வறட்கணரோகம் -	௨௱௰௬
வறட்காமாலைரோகம் -	௱௩௫
வறட்சித்திமிரம் -	௨௬௪
வன்மீகரோகம் -	௩௱௰௧
வா	
வாசுகி - - -	௩௩௧
வாத அபஸ்மாரம் -	௨௪௧
வாதஅரோசகம் - -	௬௪
வாதஉபதம்சம் - -	௩௱௰௪
வாதகளகண்டரோகம் -	௨௮௮
வாதகாசநேத்திரரோகம் -	௨௫௪
வாதகாசம் -	௨௬௧
வாதகாசரோகம் - -	௫௫
வாதகாமாலை - -	௱௩௫
வாதகாலவிஷநிதானம் -	௩௨௯
வாதகிரகணி - - - -	௮௪
வாதகிரந்தி - -	௩௱௩
வாதகிரிச்சரரோகம் -	௯௧
வாதகுடல்விருத்திரோகம் -	௱௰
வாதகுண்டலிமூத்திரரோகம்	௯௪
வாதகுண்டாலக்கட்டி -	௨௱௰௧
வாதகுரற்கம்மல் - -	௬௩
வாதகுன்மரோகம் -	௱௰௪
வாதகோபகாலம் - -	௯
வாதசருமகீலம் -	௭௯
வாதசாமலக்ஷணம் -	௱௯௭
வாதசிரஸ்தாபம் -	௨௯௧
வாதசிலேஷ்மகாமாலை -	௱௩௫
வாதசிலேஷ்மகுன்மம் -	௱௰௫
வாதசிலேஷ்மசுரம் -	௨௧
வாதசிலேஷ்மசோபை -	௱௩௮
வாதசிலேஷ்மதுஷ்டவிரணம்	௨௯௬
வாதசிலேஷ்மபகந்தரவிரணம்	௩௱௧
வாதசிலேஷ்மமசூரிகை -	௱௪௩
வாதசிலேஷ்மம் -	௱௮௮
வாதசிலேஷ்மவிசர்ப்பி -	௱௪௰
வாதசுபாவகுணம் - -	௨
வாதசுரம் - -	௰௯
வாதசூலைரோகம் -	௱௨௧

ரோகங்களின்பெயர்கள்.	பக்கம்.
வாதசெவ்வாய்புக்கட்டி -	௨௱௰௧
வாதசோணித அசாத்தியம்	௱௯௬
வாதசோணிதபூர்வரூபம்	௱௯௫
வாதசோணிதரோகபேதம்	௱௯௪
வாதசோபைரோகம் -	௱௩௭
வாதச்சிலந்திப்பூச்சிகளின் பொதுக்குணம்	௩௫௨
வாதஜிக்வாகண்டகரோகம்	௨௮௪
வாதஜீரணலக்ஷணம் -	௰௧
வாததந்தமூலரோகம் -	௨௮௩
வாததாகரோகம் -	௬௯
வாததிமிரரோகம் -	௨௫௩
வாததுஷ்டவிரணம் -	௨௯௫
வாததேகிலக்ஷணம் -	௭
வாதநாடிவிரணம் -	௩௱௮
வாதநிராமலக்ஷணம் -	௱௯௭
வாதபகந்தரவிரணம் -	௩௱௧
வாதபரியாயரோகம் -	௨௫௯
வாதபாதவன்மீகம் -	௩௱௬
வாதபாண்டுரோகம் -	௱௩௨
வாதபித்தகுன்மரோகம் -	௱௰௫
வாதபித்தசுரம் -	- ௨௰
வாதபித்தசோபை -	௱௩௮
வாதபித்ததுஷ்டவிரணம் -	௨௯௬
வாதபித்தபகந்தரவிரணம்	௩௱௧
வாதபித்தபிரமேகம் -	௩௱௰௮
வாதபித்தமசூரிகை -	௱௪௩
வாதபித்தவிசர்ப்பி -	௱௪௰
வாதபிலீகரோகம் -	௱௩௧
வாதபீநசரோகம் -	௨௭௫
வாதப்பிரமேகரோகம் -	௩௱௰௮
வாதமசூரிகைரோகம் -	௱௪௨
வாதமதரோகம் -	௭௨
வாதமதாத்தியரோகம் -	௭௧
வாதமாந்தம் - -	௨௱௰௮
வாதமார்புரோகம் -	௬௭
வாதமூர்ச்சாரோகம் -	௭௩
வாதமூலத்தால்வருநோய்கள்	௭௫
வாதமூலரோகம் - -	௭௫
வாதமேகரோகஉபத்திரவம்	௱௧
வாதயோனிரோகம் -	௩௨௧
வாதரத்தபித்தரோகம் -	௫௨
வாதரூபலக்ஷணம் - - -	௧
வாதரோகபடலம் -	௱௫௫
வாதரோகபேதம் - -	௱௫௫
வாதலிங்கநாசரோகம் -	௨௫௫
வாதவஸ்திமூத்திரபேதம் -	௯௪
வாதவாந்திரோகம் - -	௬௫
வாதவிசர்ப்பிரோகம் - -	௱௪௰
வாதவித்திரதிக்கட்டி - -	௱௭
வாதவிருத்திலக்ஷணம் - -	௰
வாதவிஷபாகரோகம் - -	௨௱௧
வாதவிஷூசிரோகம் -	௮௮
வாதவெண்குஷ்டம் - -	௱௫௨
வாதஸ்தானம் - - -	௧
வாதக்ஷயரோகம் - - -	௬௨
வாதத்தசைஅண்டம் - -	௱௰௩
வாதத்தலைவலி - - -	௨௯௧
வாதத்தால்பிறந்தவசாமேக முதலியநான்குவகைமேகம்	௯௭
வாதத்தேள் - - - -	௩௫௯
வாதத்தொழில் - - - -	௨
வாதாசிர்க்கரரோகம் - -	௫௩
வாதாதிக்கவாதசோணிதம்	௱௯௫
வாதாதிசாரம் - -	௭௯
வாதாதிமந்தரோகம் -	௨௫௮
வாதாபிஷந்தரோகம் -	௨௫௮
வாதாஸ்மரிரோகம் - - -	௯௨
வாதாஷ்டீலமூத்திரரோகம் -	௯௫
வாதாஹதவர்த்தமரோகம்	௨௪௪
வாதாற்புதகிரந்தி -	௩௱௫
வாதோதரரோகம் -	௱௨௫
வாதோஷ்டரோகம் - -	௨௭௯
வாதோன்மாதரோகம் -	௨௩௯
வாந்திச்சுரம் - - - -	௪௮
வாந்திபேதிரோகம் - -	௮௮
வாந்திரோகபூர்வரூபம் -	௬௫
வாந்திரோகபேதம் -	௬௫
வாமினியோனிரோகம் -	௩௨௨
வாயுகிட்டம் - - - -	௩௪௯

ரோகங்களின்பெயர்கள்.	பக்கம்.
வாயுவிஷவேகநிதானம்	௩௪௬
வாயுவின்பேதம்	௩
வாலகாசம்	௨௬௧
வி	
விகாரசிலேஷ்மம்	௱௯௪
விக்கல்சுரம்	௪௮
விக்கல்பித்தம்	௱௮௪
விக்கல்மாந்தம்	௨௱௰௮
விக்கல்ரோகபேதம்	௫௯
விக்தாரோகம்	௩௱௰
விசர்ச்சிகாகுஷ்டம்	௱௪௭
விசர்ப்பிரோகபேதம்	௱௪௰
விசர்ப்பிரோகலக்ஷணம்	௱௩௯
விசர்ப்பைமசூரிகை	௱௪௪
விசாககிரகதோஷம்	௨௨௩
விசாகபூதம்	௨௩௮
விச்சின்னசுவாசரோகம்	௫௮
விச்சின்னவிரணம்	௩௱
விட்டசுரலக்ஷணம்	௪௪
விட்விகாதமூத்திரரோகம்	௯௫
விதக்தாஜீரணரோகம்	௮௯
விதளிதவிரணம்	௩௱
விதாமாஜீரணரோகம்	௯௰
வித்தவிரணம்	௩௱
வித்தியுன்மாலிபூதம்	௨௩௬
வித்திரதிக்கட்டிபேதம்	௱௬
வித்திரதிக்கட்டியின்பக்குவம்	௱௮
வித்திரதிக்கட்டியின்பூர்வரூபம்	௱௬
வித்திரதிக்கட்டிலக்ஷணம்	௱௬
வித்திரதிரோகம்	௩௱௰௭
விபாதிகாகுஷ்டம்	௱௪௯
விப்புலுதயோனிரோகம்	௩௨௪
வியங்கரோகம்	௩௱௰௨
வியர்வைச்சுரம்	௪௬
வியர்வைப்பித்தம்	௱௮௪
வியர்வையின்சுபாவச்செய்கை	௰௨
வியாத்தியோன்மாதம்	௨௩௯
வியானவாயு	௩
வியானவாயுவின்விகுணம்	௱௯௭
விரணஎழுச்சி	௨௬௫
விரணகாசம்	௨௬௧
விரணகிரந்தி	௩௱௫
விரணசந்நி	௨௬
விரணசிலேஷ்மம்	௱௯௪
விரணசுக்கிரன்	௨௬௫
விரணசுரம்	௪௭
விரணநெரிசல்	௨௬௬
விரணபக்குவநிதானம்	௨௯௯
விரணபித்தம்	௱௮௫
விரணபேதபடலம்	௨௯௫
விரணபேதம்	௨௯௫
விரணப்பிரமேகம்	௩௨௧
விரணஸ்தானபேதம்	௨௯௮
விரணுயாமவாதம்	௱௮௰
விரற்சுற்று	௩௱௰௧
விரற்புண்	௩௱௰௨
விரியன்பேதம்	௩௪௪
விருத்தசர்ப்பவிஷம்	௩௩௯
விருத்திஅஸ்திதாது	௰௨
விருத்திசுக்கிலதாது	௰௩
விருத்திநேத்திரமலலக்ஷணம்	௰௩
விருத்திமச்சாதாது	௰௨
விருத்திமலலக்ஷணம்	௰௩
விருத்திமாமிசதாது	௰௨
விருத்திமூத்திரலக்ஷணம்	௰௩
விருத்திமேதோதாது	௰௨
விருத்திரசதாதுவின்லக்ஷணம்	௰௨
விருத்திரத்ததாது	௰௨
விருத்திவியர்வைலக்ஷணம்	௰௩
விருக்ஷிகோற்பத்தி	௩௫௮
விரூபாக்ஷபூதம்	௨௩௬
விவர்தரோகம்	௩௱௯
விவர்தாசியவாதம்	௱௭௩
விழிவிழுங்கிச்சுக்கிரன்	௨௬௫
விஷஇலையின்பேதம்	௩௨௮
விஷக்கடிநிதானம்	௩௪௰
விஷக்கனியின்பேதம்	௩௨௮
விஷக்கிழங்கின்பேதம்	௩௨௭
விஷசுரம்	௩௩
விஷசோபை	௱௩௯

ரோகங்களின்பெயர்கள்.	பக்கம்.
விஷதாதுவின்பேதம் -	௩௨௮
விஷதோஷம் -	௨௨௧
விஷத்திற்குஆகாப்பத்தியம்	௩௪௮
விஷத்திற்குஆகும்பத்தியம்	௩௪௮
விஷபரீக்ஷநிதானம் -	௩௪௰
விஷபாகரோகபேதம் -	௨௱௧
விஷபாண்டுரோகம் -	௱௩௩
விஷபுஷ்பத்தின்பேதம் -	௩௨௮
விஷபேதம் -	௩௨௫
விஷப்பல்லழுந்துநிதானம்	௩௪௧
விஷப்பாலின்பேதம் -	௩௨௮
விஷப்பிசின்பேதம் -	௩௨௮
விஷமசிராரோகம் -	௨௱௰௩
விஷமசீததோஷம் -	௩௧
விஷமசுரம் - -	௩௯
விஷமதரோகம் - -	௭௩
விஷமதோஷம் - -	௩௰
விஷமபித்தம் - -	௱௮௬
விஷமாக்கினி - -	௰௫
விஷமாந்தம் - -	௨௱௰௭
விஷம்வைப்பவனுக்கு உண்டாகும்லக்ஷணம்	௩௨௬
வி வியஞ்சனலக்ஷணம் -	௩௨௬
விஷவிருத்திலக்ஷணம் -	௩௪௭
விஷவேரின்பேதம் -	௩௨௭
விஷாதிபேதபடலம் -	௩௨௫
விஷாலசகரோகம் -	௮௭
விஷான்னஜீரணலக்ஷணம்	௩௨௬
விஷான்னபரீக்ஷ -	௩௨௬
விஷான்னலக்ஷணம் -	௩௨௬
விஷூசிரோகபூர்வரூபம் -	௮௮
விஷூசிரோகபேதம் -	௮௭
விஷோன்மாதம் -	௨௪௰
விஷ்டம்பபித்தம் -	௱௮௪
விஸ்பஷ்டம்பாஜீரணரோகம்	௯௰
விஸ்போடகுஷ்டம் -	௱௫௰
விஸ்போடபேதம் - -	௱௪௫
விஸ்போடமசூரிகை -	௱௪௪
விஸ்போடரோகபடலம் -	௱௪௫
விஸ்போடரோகம் -	௩௱௯
விஸ்போடரோகலக்ஷணம் -	௱௪௫
விஸ்மாரியகவாதம் -	௱௭௰
விஸ்மிருதிபித்தம் -	௱௮௨
விஸ்வபித்வாதம் -	௱௬௮
விளம்பிகாஜீரணரோகம் -	௮௯
விக்ஷயரோகம் - -	௭௧
வீ	
வீட்டுப்பல்லி -	௩௫௧
வெ	
வெண்குமுதரோகம் -	௨௬௨
வெண்குஷ்டம் -	௱௫௨
வெண்சதைவிழியுந்தல் -	௨௬௩
வெண்சாரை - -	௩௪௫
வெண்சுக்கிரன் -	௨௯௫
வெண்ணுந்தைப்பாம்பு -	௩௪௬
வெளிச்சுரம் - -	௩௭
வெள்வரி - -	௨௬௭
வெள்விழி-௧-வது பிரிவாகியஎழுச்சிரோகபேதம்	௨௬௫
வெள்விழி-௨-வது-பிரிவாகியபடாத்திரோகபேத	௨௬௬
வெள்விழி-௩-வது - பிரிவாகியநெரிசல்ரோகபே	௨௬௬
வெள்விழி-௪-வதுபிரிவாகியபுற்றுரோகபேதம்	௨௬௬
வெள்விழி-௫-வதுபிரிவாகியகுமிளரோகபேதம்	௨௬௬
வெள்விழி-௬-வது - பிரிவாகியவரிரோகபேதம்	௨௯௭
வெள்விழிரோகபேதம் -	௨௬௫
வெள்ளெழுத்து -	௨௬௪
வெறிச்சிலேஷ்மம் -	௱௯௪
வே	
வேதாளபூதம் - -	௨௩௫
வேர்க்குரு - -	௩௱௰
வை	
வைகரஞ்சசர்ப்பம் ..	௩௩௫
வைகிருதசுரலக்ஷணம் -	௩௭
வைசியசர்ப்பம் - -	௩௩௭

ரோகங்களின்பெயர்கள்.	பக்கம்.	ரோகங்களின்பெயர்கள்.	பக்கம்.
வைதேகிச்சிலேத்திவிஷம் -	௩௫௫	[illegible]	[illegible]
ஔ		[illegible]	[illegible]
ஔஷதகளவி - -	௩௩௰	[illegible]	௩௩௭
ஷை		[illegible]	[illegible]
ஷண்டயோனிரோகம் -	௩௨௩	[illegible]	[illegible]
ஸ்		[illegible]	[illegible]
ஸ்தனாருக்ருவாதம்	[illegible]	[illegible]	[illegible]
ஸ்தனவித்திரதிக்கட்டி.	[illegible]	[illegible]	[illegible]
ஸ்தானாதிதியாலதோஷம் -	[illegible]	[illegible]	[illegible]
ஸ்தானபேதவிஷநிதானம் -	[illegible]	[illegible]	[illegible]
ஸ்தானவிஷசர்ப்பநிதானம்	[illegible]	[illegible]	[illegible]
ஸ்வேதகளவி -	௩௩௰	க்ஷ	
ஸ்வேதச்சிலேத்திவிஷம் -	௩௫௩	[illegible]	[illegible]
க்ஷ		[illegible]	[illegible]
க்ஷதசபகந்தாவிரணம் -	[illegible]	[illegible]	[illegible]
க்ஷதசுக்கிலரோகம் -	[illegible]	[illegible]	[illegible]
க்ஷதக்கஜலரோகம் -	[illegible]	[illegible]	[illegible]
க்ஷதவிசர்ப்பரோகம் -	[illegible]	[illegible]	[illegible]
க்ஷதவித்திரதிக்கட்டி -	[illegible]	[illegible]	[illegible]

முதற்பதிப்பின்

ரோகவருக்க அகராதி முற்றியது.

இரண்டாம்பதிப்பின்

ரோக வருக்க அகராதி.

ரோகங்களின்பெயர்கள்.	பக்கம்.	ரோகங்களின்பெயர்கள்.	பக்கம்.
மநாத்தாம்.		சிலேஷ்மஉன்மாந்தை -	௧௧அ
உன்மாந்ததரோகநிதானம் -	௧௧௭	தொந்தஉன்மாந்தை -	௧௧அ
உன்மாந்ததரோகபேதம் -	௧௧௭	உன்மாந்தரோக சாத்யா சாத்தியம்	௧௧அ
வாத உன்மாந்தை -	௧௧௭	டாகினிரோகம் -	௧௧அ
பித்த உன்மாந்தை -	௧௧அ		

இரண்டாம்பதிப்பின்

ரோக வருக்க அகராதி முற்றியது.